தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041—மார்கழி 29

2011 ஜனவரி 13, வியாழக்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்றம்—தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9—30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துகளைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை, உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 1, 2 மற்றும் 3 இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன.)@

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள்

அமைச்சர்கள் விடைகளுடன் (பட்டியல்கள் 4, 5, 6, 7 மற்றும் 8) இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன)@@

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

@ 167 முதல் 380 வரையிலான பக்கங்களில் இணைப்பு I—ஆகச் சேர்க்கப்பட்டுள்ளது.

@@ 381 முதல் 1829 வரையிலான பக்கங்களில் இணைப்பு II—ஆகச் சேர்க்கப்பட்டுள்ளது.

2. தகவல் கோரல்

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினம் அருகே இலங்கைக் கடற்படையினரால் மீனவர் சுட்டுக் கொலை

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், முதலில் உட்காருங்கள். (குறுக்கிடுகள்) Speaker இங்கேதான் இருக்கிறார், உட்காருங்கள். (குறுக்கிடுகள்) யாராவது ஒருவர் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், சொல்லுங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைக் கடற்படை கடந்த நான்கரை ஆண்டுகளில் கொடூரமான முறையில்—முன்பெல்லாம் ஓரிரு சம்பவங்கள் நடக்கும். ஆனால், இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில், கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள், கொடுமையான அளவிற்கு அவமானப்படுத்தப்பட்டு, சுடப்பட்டு, பிரேதமாகத் திரும்பி வருகின்ற நிலை. நேற்றையதினம்கூட ஜெகதாப்பட்டினத்தைச் சார்ந்த மீனவர்கள் கடலிலே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, பாண்டியன் என்கின்ற அந்த மீனவன் நடுக் கடலிலே இலங்கைக் கடற்படையால் சுடப்பட்டு, பிரேதமாகக் கரைக்கு வரக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, வழக்கம்போல முதலமைச்சர் அவர்கள் ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதை எடுக்கப் போகிறேன். (குறுக்கீடு)

2011 ஜனவரி 13]

திரு. டி. ஜெயக்குமார்: இல்லை, நான் பேசி முடித்துவிடுகிறேன். அவ்வளவுதான். திரும்ப இன்னும் ஒருமுறை chance கொடுக்கவில்லையென்றால் ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யார், யார் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்ற பட்டியலைச் சொல்லிவிடுகிறேன். அதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் திரு. வேல்முருகன் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்கிறேன், கேளுங்கள். யார், யார் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிவிட்டு, கட்சிக்கு ஒருவர் என்கின்ற முறையில் பேச அழைக்கிறேன். அது சரியாக இருக்கும். உட்காருங்கள்.

நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியை அடுத்த சின்னங்குடியைச் சேர்ந்த மீனவர் திரு. பாண்டியன் என்பவர் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதைப் பற்றி அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. எம்.வி.ஆர். வீரகபிலன், திரு. ரெ. நெடுஞ்செழியன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சி. ஞானசேகரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. வே. மாரிமுத்து, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. எஸ். இராசசேகரன், திரு. தி. இராமசாமி, திரு. கே. உலகநாதன், திரு. சு. குணசேகரன், திரு. வை. சிவபுண்ணியம், திருமதி பி. பத்மாவதி ஆகியோரும், ம.தி.மு.க. சார்பில் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ், திரு. ரா. வரதராஜன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. தி. வேல்முருகன் ஆகியோரும் விதி 56—ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். அதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரலாம். முதலில் யார் பேசுகிறார்கள்? (குறுக்கீடு) முதலில் உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நல்ல mood-இல் இருக்கிறீர்கள். கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடந்த நான்கரை ஆண்டுகளில் இலங்கைக் கடற்படையினுடைய துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளாகியும்,

நடுக் கடலில் அவமானப்படுத்தப்படுவதும், நடுக் கடலில் மீனவர்கள் பிடித்த மீன்கள் கடலிலே தூக்கியெறியப்படுவதும், கொள்ளையடிக்கப்படுவதும், ஒரு சோமாலியக் கொள்ளையர்களைப்போல இலங்கைக் கடற்படையினுடைய அட்டூழியம் எவராலும் தாங்க முடியாத அளவிற்கு, விண்ணைத் தொடுகின்ற அளவிற்கு அதைவிட எல்லையில்லை என்கிற அளவிற்கு அவர்களுடைய அட்டூழியம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகின்றது. அதனை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம். மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னுடைய கண்டனத்தை, கடுமையான அளவிற்குத் தெரிவித்தும், அதே நேரத்தில் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் போன்றவற்றை அறிவித்தும்கூட, இந்த அரசு உடனடியாகப் போர்க்கால அடிப்படையில் அதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கையை எடுத்து, மீனவர்களுடைய வாழ்க்கைக்கும், பாதுகாப்புக்கும், அவர்களுடைய உடைமைக்கும் உத்தரவாதத்தை அளித்ததா என்றால், இல்லை; தொடர்ந்து கண்ணீர் சிந்தக்கூடிய அளவிற்கும், வேதனைப்படக்கூடிய அளவிற்கும்தான் இந்த அரசினுடைய செயல்பாடுகள் இருக்கின்றனவேயொழிய வேறல்ல. நேற்றையதினம்கூட, இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல கடற்படையினுடைய அட்டூழியம் தாங்க முடியாத அளவிற்கு இருந்தது. இலங்கைக் கடற்படை, நடுக் கடலிலே பாண்டியன் என்கின்ற அந்த மீனவனைக் கொடூரமாகச் சுட்டு, மீன் பிடிக்கச் சென்ற அந்தப் பாண்டியன் கடற்கரைக்கு வரும்போது பிரேதமாக வருகின்ற ஒரு நிலை நடந்து E.C.R.-ல் முழு அளவுக்கு மீனவர்கள் போராட்டம் செய்து, சாலை மறியல் செய்து, போக்குவரத்தெல்லாம் ஸ்தம்பித்திருந்தது. இந்த அரசு என்னதான் உறுதியான நடவடிக்கை எடுக்கின்றது? வழக்கம்போல கடிதம் எழுதுவதோடு நின்றுவிடுமா? வேறு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெளிவான வகையில், மீனவ மக்கள் புரிந்துகொள்ளும் வகையில், தயவுசெய்து இந்த அரசு தன்னுடைய நிலையை விளக்க வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 9—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

2011 ஜனவரி 13]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கப் போகிறபோது, எல்லையைக் கடந்துவிட்டதாகச் சொல்லி இலங்கை இராணுவம் அவர்களை அடிக்கடி சுட்டுக் கொல்கிற நிகழ்வுகள் அரங்கேறிக் கொண்டேயிருக்கின்றன. நம்முடைய தமிழக மீனவர்கள் எல்லையைத் தாண்டாவண்ணம், எப்படியாவது விட்டு விட்டு ஒளிரும் மிதவை விளக்குகளை அந்த எல்லையிலே அமைக்க வேண்டும் என்று நாங்களும் இதே அவையில் பல முறை எடுத்துச்சொல்லியிருக்கிறோம்.

அதேபோல, நம்முடைய கடலோரக் காவல் படை எப்போதுமே ரோந்துப் பணியில் இருந்து, எல்லைகளை அவ்வப்போது மீனவர்களுக்குச் சுட்டிக்காட்டி, அவர்கள் எல்லையைத் தாண்டாத ஒரு சூழ்நிலையை எப்படியாவது உருவாக்க வேண்டுமென்று இந்த அவையிலே பலமுறை வற்புறுத்தியும்கூட, தமிழக மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் ஒளிரும் மிதவை விளக்குகள் பொருத்தப்படும் என்று இந்த அவையிலேயே ஏற்கெனவே ஓர் உத்தரவாதத்தை, உறுதிமொழியைக் கொடுத்தும்கூட, இன்னும் அந்த மிதவை விளக்குகள் பொருத்தப்படாத காரணத்தினாலே, மீனவர்கள் எல்லையைத் தாண்டிப் போவதாகச் சொல்லி, இலங்கை இராணுவத்தினர் எப்பொழுதுமே கொன்றுகொண்டிருக்கிறார்கள். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

ஏற்கெனவே நம்முடைய நண்பர்கள் சொன்னதைப்போல, நேற்றுகூட, ஜெகதாப்பட்டினம் பகுதியிலே பாண்டியன் என்கிற ஒரு மீனவர் போகிறபோது, அவரைச் சுட்டுக்கொன்று அவரது உயிரை மாய்த்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிகழ்வுக்கு ஒரு முற்றுப்புள்ளியை வைக்க வேண்டுமென்று சொன்னால், அந்த ஒளிரும் மிதவை விளக்குகள் மிக மிக அவசியம்.

அதேபோல, கடலோர ரோந்துப் பணி, காவல் படையினர் தொடர்ந்து ரோந்து நடத்தி, நம்முடைய மீனவர்கள் எல்லையைத் தாண்டாவண்ணம் பார்த்துக்கொள்வது மிக மிக அவசியம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை அரசு உடனடியாக ஏற்படுத்தி, தமிழக மீனவர்கள் இலங்கைப் படையினரால் கொல்லப்படாத ஒரு சூழ்நிலையை உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[2011 ஜனவரி 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்களைத் தொடர்ந்து சிங்களப் பேரினவாத இராணுவ அரசு சுட்டுக் கொலை செய்து வருகிறது. இதுவரையில் கிட்டத்தட்ட 450—க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களைச் சிங்கள இராணுவம் படுகொலை செய்திருக்கிறது. தமிழக அரசும் இதற்காகப் பல்வேறு முறை முயற்சிகளை எடுத்து மத்திய அரசை வலியுறுத்தியும், மத்திய அரசும் 'இனி இதுபோன்ற ஒரு சம்பவம் நடைபெறாது; மத்தியக் காவல் படையும், இலங்கை இராணுவப் படையும் சேர்ந்த கூட்டு ரோந்துக்கு நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம்; இனி ஒருபோதும் தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படமாட்டார்கள்' என்று சமீபத்தில் ஒரு செய்தியை வெளியிட்டது.

ஆனால், கடல் எல்லையைத் தாண்டி தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றால், நம்முடைய எதிரி நாடு என்று சொல்லக்கூடிய பாகிஸ்தான் நாட்டினுடைய இராணுவம் அவர்களைப் பிடித்து உடனடியாகத் தமிழக அரசுக்கும், இந்திய அரசுக்கும் தகவல் தெரிவித்து எந்தவித பாதிப்பும் இல்லாமல் விடுவிக்கிறார்கள். ஆனால், பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை இந்திய அரசாங்கம் இலங்கைக்குத் தருகின்றது. இலங்கை நாட்டின் அதிபர் ராஜபக்சே இந்தியா வருகின்றபோது அவருக்குச் சிவப்புக் கம்பளம் விரித்து, சிறந்த வரவேற்பு அளிக்கின்ற அளவிற்கு நேச நாடாக இருக்கின்றபோது, நம்முடைய தாய் தமிழ்நாட்டின் உறவுகளை, அப்பாவித் தமிழக மீனவர்களைத் தொடர்ந்து சுட்டுக் கொலை செய்து வருகின்ற இலங்கை அரசை கண்டிப்பான எச்சரிக்கையுடன்கூடிய, கண்டிப்புடன்கூடிய ஒரு எச்சரிக்கை செய்வதற்கு இந்திய அரசு முன்வர வேண்டும். அதற்காகத் தமிழக அரசு ஒரு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். காரணம், தொடர்ந்து தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படும்பொழுதெல்லாம், 'கடல் எல்லையைத் தாண்டினார்கள்; கொலை செய்தோம்' என்று சொல்லுகின்றார்கள்.

ஆனால், அதே நேரத்தில் இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் தமிழகக் கடல் எல்லையைத் தாண்டி வருகின்றபோது, நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த காவல் படையும் சரி, இந்தியக் காவல்

2011 ஜனவரி 13] [திரு. தி. வேல்முருகன்]

படையும் சரி, உடனடியாக அவர்களைக் கைது செய்து சிறையில் அடைக்கிறார்கள், இல்லையென்றால் அவர்களிடத்தில் திருப்பி ஒப்படைக்கிறார்கள். எதிரி நாடுகள்கூட இதுவரையில் நம்முடைய தமிழக மீனவர்கள் ஒருவரைக்கூட சுட்டுக் கொலை செய்யவில்லை. ஆனால், நேச நாடு என்று சொல்லக்கூடிய இலங்கை அரசாங்கம் தொடர்ந்து அங்கிருக்கக்கூடிய இலட்சக்கணக்கான நம் தமிழர்களைக் கொன்றுக் குவித்ததோடு மட்டுமல்லாமல், இப்பொழுது தாய்த் தமிழ்நாட்டிலிருக்கிற நம்முடைய தமிழர்களையும் சுட்டுக் கொலை செய்து வருவதை நாம் வேடிக்கை பார்ப்பது அவமானமாக இருக்கிறது.

ஏற்கெனவே, நான் பலமுறை இந்த அவையில் பதிவு செய்திருக்கிறேன். இனி வருங்காலங்களில், இதுபோன்ற ஒரு சம்பவம் நடக்காமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், தமிழ்நாட்டிலிருந்து மீன் பிடிக்கச் செல்லுகின்ற மீனவர்கள் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு, அவர்களுக்கு ஆயுதம் தருவதற்குத் தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்கிற செய்தியையும், இந்த நேரத்திலே இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, உயிரிழந்த அந்தப் பாண்டியன் என்பவருடைய குடும்பத்திற்குத் தமிழக அரசு உடனடியாக நிவாரணம் வழங்குவது மட்டுமல்லாமல், அந்தக் கொலைபாதகச் செயலில் ஈடுபடுகின்ற இலங்கை இராணுவமாக இருந்தாலும் அல்லது இலங்கையில் இருக்கின்ற துணை இராணுவப் படையாக இருந்தாலும், அவர்கள்மீது கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்வதற்கு, சர்வதேச சட்டங்களைத் திருத்துவதற்கு மத்திய அரசு அதற்கான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இந்த அவை உடனடியாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திட வேண்டுமென்று இந்த அவையின் கவனத்தினை ஈர்த்து அமர்கிறேன்.

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

திரு. வே. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைக் கடற்படையினுடைய தாக்குதல், கடந்த 10 ஆண்டுக் காலமாக அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. கடந்த

[திரு. வே. மாரிமுத்து] [2011 ஜனவரி 13

10 ஆண்டுக் காலத்தில் ஏறத்தாழ 600-க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக்குள்ளாகி மாண்டு போயிருக்கின்றார்கள். நடைபெற்றிருக்கக்கூடிய பெரும்பாலான சம்பவங்கள், இந்தியக் கடற்பகுதி சர்வதேச கடல் எல்லையில்தான் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே, அவற்றைத் தடுப்பதற்கு இந்தியக் கடலோரக் காவல் படை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சமீபத்தில் சஃபி என்ற ஒரு நிறுவனம், தமிழகக் கடலோரப் பகுதியில் விதவைத் தாய்மார்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துக்கொண்டிருக்கின்றது என்ற ஓர் ஆய்வு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. எனவே, இப்படித் தொடர்ச்சியாக இலங்கைக் கடற்படையினுடைய அத்துமீறலால் தமிழக மீனவர்கள் மிகப் பெரிய துன்பத்திற்கு ஆளாவதோடு உயிர் இழப்புகளையும் சந்திக்கிற சூழல் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலையில்தான் நாகை மாவட்டம் தரங்கம்பாடி, சின்னங்குடி என்ற கிராமத்தைச் சேர்ந்த பாண்டி என்பவர் ஜெகதாப்பட்டினம் கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினரின் கொடூரத் தாக்குதலுக்கு ஆளாகி மாண்டு போயிருக்கின்றார். இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடராமல் தடுப்பதற்கு, இந்தியக் கடலோரக் காவல் படை மட்டுமல்ல; இந்திய அரசும் இலங்கை அரசுடன் இருக்கக்கூடிய இராஜ்ஜியரீதியிலான உறவைப் பயன்படுத்தி இந்தத் தாக்குதலை உடனடியாகத் தடுத்து நிறுத்ததுவதற்குத் தமிழக அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்வதோடு, மாண்டுபோன பாண்டியன் குடும்பத்தாருக்கு ரூ.5 இலட்சம் நிவாரணத்தை அரசு வழங்க வேண்டுமென வலியுறுத்தி அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெகதாப்பட்டினம் அருகே, நாகப்பட்டினம் மாவட்டம், சின்னங்குடியைச் சேர்ந்த பாண்டியன் என்ற மீனவர் இலங்கைக் கடற்படையால் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். இந்தச் சம்பவமானது, ஏதோ ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் ஏற்படும் யுத்தத்தைப்போல அவருடைய நெஞ்சிலே குண்டு பாய்ந்து இறந்திருக்கின்றார். பொதுவாக மீன்பிடிக்கும் பிழைப்புக்குச் செல்கிற அந்த மீனவர்களை

2011 ஜனவரி 13] [திரு. வை. சிவபுண்ணியம்]

இப்படிக் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்வது என்பது, இலங்கைக் கடற்படையினுடைய தொடர் நடவடிக்கையாக இருக்கிறது. இலங்கையில் இலட்சக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்தவர்கள், அவர்களுடைய நரபலியினுடைய வேட்டை இன்னும் குறையவில்லையென்பதைத்தான் பாண்டியன்மேல் நடந்த அந்தத் துப்பாக்கிச் சூடும் காட்டுகிறது. ஆகவே, மூர்க்கத்தனமாக இலங்கை அரசு, தமிழர்கள்மீது அங்கே தாக்குதல் தொடுக்கிறது. தொப்புள்கொடி உறவு என்ற முறையில் தமிழகத்தினுடைய மீனவர்களையும் சுட்டுக் கொல்கிறார்கள். அப்படியானால் அவர்களுடைய அந்த வெறி இன்னும் அடங்கவில்லை; தீரவில்லை என்பதை இந்த மீனவர்கள்மீது நடத்தப்படுகிற தாக்குதல்மூலமாகத் தொடர்ந்து உணர்கிறோம். கிட்டத்தட்ட 500 பேர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, பல நாடுகளில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கின்றபோது, நமது இந்தியாவிலே பல கடலோர மாநிலங்களில் இம்மாதிரியான சம்பவங்கள் நடக்கிறபோது, எல்லை மீறுகிறபோது, கைது செய்யப்படுகிறார்கள்; விசாரிக்கப்படுகிறார்கள்; நாட்டினுடைய வேண்டுகோளை ஏற்று அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். ஆனால், தமிழகத்திலே மட்டுமே இந்த நிலை நடைபெறுகிறது. இதைப் பற்றித் தமிழக அரசு ஆழமாகச் சிந்திக்க வேண்டும். மத்திய அரசாங்கம் கொல்கத்தாவில் ஒரு நிலையினை எடுக்கிறது; மும்பையிலே ஒரு நிலையினை எடுக்கிறது; ஒரிசாவில் ஒரு நிலையினை எடுக்கின்றது; ஆனால், தமிழக மீனவர்கள் என்று வருகின்றபோது, இவர்கள் செத்தால் பரவாயில்லை என்று இலங்கையில் நினைத்ததைப் போலவே மத்தியிலும் நினைக்கிறார்களா? மத்திய அரசு இப்படி ஏன் பாராமுகமாக நடந்துகொள்கிறது? அதை ஏன் நம்முடைய மாநில அரசு தட்டிக் கேட்க மறுக்கின்றது என்பது புதிராக இருக்கிறது. ஆகவே, இந்த மீனவர் தாக்குதல் என்பது தொடர் நடவடிக்கையாக இருப்பது என்பது, அவர்களுடைய வெறித்தனத்தின் உச்சகட்டம். இதைக் கண்டுகொள்ளாமல் இருப்பது, மத்திய அரசினுடைய தொடர் நடவடிக்கை. இதைத் தட்டிக் கேட்காமல் இருந்தால் இப்படிப்பட்ட கொலைகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும். இதைத் தடுப்பதற்கான முயற்சியைத் தமிழர்கள் என்ற உணர்வின் அடிப்படையிலே, இதில் விரைவாகத் தீர்வு காண்பதற்கான முயற்சியை எடுப்பதற்கு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, ஒரு தனித்த சிறப்பு ஏற்பாட்டின்மூலமாக இப்படிப்பட்ட தாக்குதல்களைத்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2011 ஜனவரி 13

தடுப்பதற்கு மத்திய அரசு என்ன முயற்சி செய்யப்போகிறது என்ற உத்தரவாதத்தைக் கண்டிப்பாகப் பெறுவதற்கான முயற்சியைத் தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இறந்த பாண்டியன் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவிக்கிறோம்; நிதியுதவி செய்கிறோம் என்று சொன்னாலும், அவர் நாகை மாவட்டத்திலிருந்து புதுக்கோட்டை மாவட்டப் பகுதியிலே சென்று அங்கு தங்கி மீன் பிடித்தவர். அவருடைய குடும்பத்தை விட்டு விட்டு அங்கே சென்று மீன்பிடித்தபொழுது, இவ்வாறு நடந்ததால், இப்போது பிணமாக அங்கே செல்கிறார். ஆகவே, இப்படிப்பட்ட தொடர் நடவடிக்கைகள் நடந்துகொண்டே இருக்கின்றன. அந்தக் குடும்பத்தைப் பாதுகாப்பதற்குரிய முயற்சியாக ரூ.5,00,000/-ஐ அந்தக் குடும்பத்திற்கு மாநில அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட தாக்குதல்களின்போது பாரபட்சமாக நடந்துகொள்கிற மத்திய அரசாங்கத்தைக் கண்டிப்பதோடு, மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி இதற்கு ஒரு தீர்வு காண்பதற்கான முயற்சியை மாநில அரசு மேற்கொள்ளுமா என்பதையும் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் *9—45*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ம.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது இலங்கை இராணுவத்தினரால் தாக்கப்படுவதும், சுட்டுக் கொல்லப்படுவதும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டேயிருக்கிறது. நேற்றையதினம், நாகை மாவட்டம், தரங்கம்பாடி, சின்னங்குடியைச் சேர்ந்த பாண்டியன் என்ற மீனவர் சக மீனவர்களோடு கடலில் மீன் பிடிக்கச் சென்றபோது, அவர் இலங்கை இராணுவத்தினாரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார். மற்றவர்கள் சுட்டு விரட்டப்பட்டிருக்கின்றார்கள். இந்தச் செய்தியைக் கேட்டு உள்ளபடியே மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றது.

திரு. பாண்டியன் அவர்கள் நாகை மாவட்டத்தைச் சார்ந்தவர்

2011 ஜனவரி 13] [டாக்டர். சதன் திருமலைக்குமார்]

என்றாலும், அவர் புதுக்கோட்டை அருகிலுள்ள ஜெகதாப்பட்டினத்தில் குடியிருந்து அங்கே கடலில் மீன் பிடித்து வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தவர். அவர் மீன் பிடிக்கச் சென்றபோது கடலில் இலங்கை இராணுவத்தினர் சுட்டிருக்கின்றார்கள். நமது மீனவர்கள் அவர்கள் எல்லையைத் தாண்டிச் சென்றார்களா அல்லது அந்த இராணுவம் எல்லையை மீறி வந்து நமது கடலில் மீனவர்களைச் சுட்டுக்கொன்றார்களா என்பதை ஆராய வேண்டும். தொடர்ந்து இந்தச் சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டே இருப்பதால், கடலில் நமது எல்லை எதுவென்று தெளிவாகத் தெரியும்படி ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாமல் தடுப்பதற்கு, நம்முடைய மாநில அரசும், மத்திய அரசும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். நம்முடைய ஆழ்ந்த கவலையையும், கண்டனத்தையும் அந்த அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு, இறந்த மீனவர் பாண்டியன் அவர்களின் குடும்பத்திற்கு நிவாரண நிதியாக ரூ.5,00,000/—ஐ வழங்க வேண்டுமென்று கேட்டு, இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்படுகிற நிகழ்வு கடந்த 27 ஆண்டுகளாகத் தொடர்ந்துகொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 400—க்கும் அதிகமான மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ** அண்டை நாடுகளான பாகிஸ்தான், மியான்மர், பங்களாதேஷ் போன்ற நாடுகள்கூட நம்முடைய மீனவர்களை அவர்கள் எல்லைமீறி மீன்பிடிக்க சென்றுவிட்டால் அவர்களைக் கைது செய்து சிறையில்தான் அடைக்கிறார்கள். நமது நாடு கேட்டுக்கொண்டால் திரும்ப ஒப்படைக்கிறார்கள். ஆனால், இலங்கை அரசாங்கம் மட்டும்தான் தொடர்ந்து நம்முடைய மீனவர்களைச் சுட்டுக் கொன்றுகொண்டிருக்கிறது. இதற்காகப் பல மட்டங்களிலே பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. அண்மையில், நம்முடைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. து. ரவிக்குமார்] [2011 ஜனவரி 13

பாதுகாப்புச் செயலாளரே அங்கேபோய் பேச்சுவார்த்தை நடத்தியும்கூட, இலங்கை அரசு அதை நிறுத்தவில்லை; தொடர்ந்து நமது மீனவர்களைத் தாக்கிக்கொண்டேதான் இருக்கிறது. இதற்கெல்லாம் முழுமுதலான காரணம், கச்சத் தீவு ஒப்பந்தம்தான். கச்சத் தீவு ஒப்பந்தம், இரு நாடுகளுக்கிடையே போடப்பட்ட bilateral agreement என்றபோதிலும், கச்சத் தீவை ஒப்படைப்பதற்கான அம்சம், இரு நாட்டுச் செயலாளர்களிடையே பரிமாறிக்கொள்ளப்பட்ட கடிதத்தில்தான் இடம் பெற்றதே தவிர, அந்த ஒப்பந்தத்தில் இடம் பெறவில்லை. எனவே, அந்த ஒப்பந்தத்தின் அம்சத்தை இரத்து செய்து கச்சத் தீவை மீண்டும் இந்திய அரசு எடுத்துக்கொள்வதிலே சர்வதேச ரீதியில், சட்ட ரீதியான தடையேதும் கிடையாது.

அதுமட்டுமல்ல; கச்சத் தீவைக் கொடுத்தது என்பது நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணான ஒன்றாகும். எனவே, கச்சச் தீவை மீட்க வேண்டுமென்கின்ற கோரிக்கையை நிறைவேற்றுவதுதான் இந்தப் பிரச்சினைகளுக்கு முழுமுதலான ஒரு தீர்வாக, முற்றுப்புள்ளியாக இருக்கும். அதற்கு நம்முடைய அரசு பல முறை கோரிக்கை வைத்திருக்கிறது. அதை வலியுறுத்தி மத்திய அரசு அந்த நடவடிக்கையை எடுக்க வைக்க வேண்டும். இலங்கைக் கடற்படையால் சுட்டுக்கொல்லப்பட்ட அந்த மீனவர் குடும்பத்திற்கு உரிய இழப்பீட்டை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு வழங்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 9—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், தரங்கம்பாடியை அடுத்த சின்னங்குடியைச் சேர்ந்த மீனவர் பாண்டியன் என்பவர் ஜெகதாப்பட்டினம் அருகே நடுக் கடலில் மீன் பிடிக்கச் சென்றிருந்தபோது, அவரை இலங்கைக் கடற்படையினர் சுட்டதால் உயிரிழந்திருக்கிறார். இதனால் அந்தப் பகுதி மீனவர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக்கூடிய கொந்தளிப்பு குறித்து இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு திரு. சி. ஞானசேகரன்,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

மாண்புமிகு திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு திரு. வே. மாரிமுத்து, மாண்புமிகு திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், மாண்புமிகு திரு. து. ரவிக்குமார் ஆகியோர் இங்கே தங்களுடைய கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்தக் கருத்துகளோடு அரசின் சார்பில் எங்களுடைய உணர்வு நிச்சயமாக இருக்கும் என்பது இங்கேயிருக்கக்கூடிய உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அந்த வகையிலே, அரசின் சார்பிலே ஒரு விளக்கத்தை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

12-1-2011 காலை 6 மணி அளவில், புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினம் மீன்பிடி தளத்திலிருந்து காரைக்கால், கிளிஞ்சல்மேட்டைச் சேர்ந்த ஆனந்தராஜ் என்பவருக்குச் சொந்தமான விசைப் படகு ஒன்றில், பாண்டியன் உள்ளிட்ட நான்கு மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றிருக்கிறார்கள்.

மாலை 5 மணியளவில் ஜெகதாப்பட்டினத்திற்குக் கிழக்கே சுமார் 15 கடல் மைல் தூரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களைப் பார்த்து துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதில் பாண்டியன் குண்டு காயம் அடைந்திருக்கிறார். உடன் இருந்த மீனவர்கள் காயம் அடைந்த பாண்டியனை கரைக்கு அழைத்து வந்து, மணல்மேல்குடி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகக் கொண்டுசென்றிருக்கிறார்கள். பாண்டியனைப் பரிசோதித்த மருத்துவர் பாண்டியன் இறந்துவிட்டதாகத் தெரிவித்திருக்கிறார்.

இதனையடுத்து, மீனவர்கள் சுமார் 100 பேர், பாண்டியனின் பிரேதத்தை ஜெகதாப்பட்டினம் கிழக்குக் கடற்கரை சாலையிலே வைத்து நடவடிக்கை எடுக்கக் கோரி சாலை மறியலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மாவட்ட நிருவாகத்தினர் மற்றும் மீன் வளத் துறை அதிகாரிகள் சம்பவ இடம் சென்று மறியலில் ஈடுபட்டவர்களிடத்திலே பேச்சுவார்த்தை நடத்தி, இறந்துபோன பாண்டியன் குடும்பத்தாருக்கு ரூபாய் ஐந்து இலட்சம் நிவாரணத் தொகை இன்றைய தினத்திற்குள் வழங்கப்படும் எனவும், மேலும் அவரது சகோதரி ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பு அளிப்பதாகவும் உறுதி அளித்ததன்பேரில், சாலை மறியலைக் கைவிட்டிருக்கிறார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2011 ஜனவரி 13

தற்போது பாண்டியனின் உடல் அரசு மருத்துவமனையில் பரிசோதனைக்காக உள்ளது. பிரேதப் பரிசோதனைக்குப்பின் உறவினரிடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் ஐந்து இலட்சம் ரூபாய்க்கான காசோலையைத் தயாராக வைத்துள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் காலையிலேயே தொலைபேசிவாயிலாகத் தொடர்புகொண்டு பேசப்பட்டிருக்கிறது. அங்கே எந்தவிதமான சட்டம்—ஒழுங்குப் பிரச்சினையும் இப்பொழுது இல்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறுகிறார். இந்தச் சம்பவம் குறித்து காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து, முறையான நடவடிக்கையை எடுத்து வருகின்றனர்.

தமிழக மீனவர்கள் இவ்வாறு தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்து மத்திய அரசிடம் நாம் தொடர்ந்து பல முறை கோரிக்கை வைத்து, அவர்களும் இலங்கை அரசிடம் வலியுறுத்திக் கூறியும், இப்படிப்பட்ட சம்பவங்கள் ஆங்காங்கே நடந்து வருகின்றன. எனவே, இந்தச் சம்பவம் குறித்து மத்திய அரசுக்கு இன்றைய தினமே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக இதன்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தந்தி ஒன்றும் அனுப்பியிருக்கிறார் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

முற்பகல் *9—55*

(ஆ) வேலூர், புதிய பேருந்து நிலையத்திற்கு நிலம் கையகப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No second issue. திரு. கு. பாண்டுரங்கன். *(குறுக்கீடு)*

திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வேலூர் புதிய பேருந்து நிலையத்தின் எதிர்கால விரிவாக்கத் தேவைக்காகக் கையகப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த இடம், வேறு யாருக்கோ விற்கப்படுகிறதென வேலூர் மாவட்ட மக்களிடையே பெருத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளதென்பதை நான் கனிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். 8.79 ஏக்கர் பரப்பளவில் தற்போது இயங்கிவரும் பேருந்து நிலையத்திற்குப் பக்கத்திலுள்ள தனியாருக்குச் சொந்தமான 9.75 ஏக்கர் நிலத்தை எதிர்காலத் தேவையைக் கருதி கையகப்படுத்த

தற்போது பாண்டியனின் உடல் அரசு மருத்துவமனையில் பரிசோதனைக்காக உள்ளது. பிரேதப் பரிசோதனைக்குப்பின் உறவினரிடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் ஐந்து இலட்சம் ரூபாய்க்கான காசோலையைத் தயாராக வைத்துள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் காலையிலேயே தொலைபேசிவாயிலாகத் தொடர்புகொண்டு பேசப்பட்டிருக்கிறது. அங்கே எந்தவிதமான சட்டம்—ஒழுங்குப் பிரச்சினையும் இப்பொழுது இல்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறுகிறார். இந்தச் சம்பவம் குறித்து காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து, முறையான நடவடிக்கையை எடுத்து வருகின்றனர்.

தமிழக மீனவர்கள் இவ்வாறு தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்து மத்திய அரசிடம் நாம் தொடர்ந்து பல முறை கோரிக்கை வைத்து, அவர்களும் இலங்கை அரசிடம் வலியுறுத்திக் கூறியும், இப்படிப்பட்ட சம்பவங்கள் ஆங்காங்கே நடந்து வருகின்றன. எனவே, இந்தச் சம்பவம் குறித்து மத்திய அரசுக்கு இன்றைய தினமே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக இதன்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தந்தி ஒன்றும் அனுப்பியிருக்கிறார் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 9—55

(ஆ) வேலூர், புதிய பேருந்து நிலையத்திற்கு நிலம் கையகப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No second issue. திரு. கு. பாண்டுரங்கன். (குறுக்கீடு)

திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வேலூர் புதிய பேருந்து நிலையத்தின் எதிர்கால விரிவாக்கத் தேவைக்காகக் கையகப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த இடம், வேறு யாருக்கோ விற்கப்படுகிறதென வேலூர் மாவட்ட மக்களிடையே பெருத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளதென்பதை நான் கனிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். 8.79 ஏக்கர் பரப்பளவில் தற்போது இயங்கிவரும் பேருந்து நிலையத்திற்குப் பக்கத்திலுள்ள தனியாருக்குச் சொந்தமான 9.75 ஏக்கர் நிலத்தை எதிர்காலத் தேவையைக் கருதி கையகப்படுத்த

2011 ஜனவரி 13] [திரு. கு. பாண்டுரங்கன்]

மாநகர மாமன்றமும் ஏகமானதாகத் தீர்மானம் நிறைவேற்றியதற்குப் பிறகு, உயர் நீதிமன்றமும் சாதகமான தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், தற்போது மாவட்ட நிருவாகமும், மாநகரத்தினுடைய ஆணையரும் பாதகமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள் என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். வேலூர் மாவட்டத்தினுடைய மக்களும் இந்தச் செயல்பாடுகளை ஐயத்தோடு பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். தற்போது மேற்காணும் நிலத்தில் அவசர அவசரமாக லாரிகள்மூலம் மண்ணைக் கொட்டி நிரப்புகிற வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேளையில், நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், மாநகராட்சியினுடைய நிதியிலிருந்தோ அல்லது அரசு நிதி உதவி மூலமாகவோ மேற்காணும் நிலத்தைப் போர்க்கால அடிப்படையில் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்வதோடு, மேற்காணும் நிலம் கை நழுவிப் போனால், வருங்காலத்தில் பேருந்து நிலையத்தினை விரிவாக்குவதற்கு, வேறு வழியே இல்லையென்பதையும் நான் இந்த நேரத்தில் தொலைநோக்குப் பார்வையோடு, பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்திலே ஒரு பாடல் எனக்கு நினைவுக்கு வருகின்றது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு படத்திலே பாடிய பாட்டு ஒன்று நினைவுக்கு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாட்டுப் பாட வேண்டாம். விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

திரு. கு. பாண்டுரங்கன்: ** என்ற அளவிற்கு இன்றைக்கு நிருவாகம் இருந்துகொண்டிருக்கின்றது என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, வேலூர் மாவட்ட மக்களுடைய வசதிக்காக, பேருந்து நிலையத்தின் விரிவாக்கத்திற்கு, தனியாருக்குச் சொந்தமான மேற்காணும் நிலத்தினைக் கையகப்படுத்துவதற்குப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க அரசிடம் திட்டம் ஏதும் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பாண்டுரங்கன், நீங்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் அவர்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேசும்பொழுது, ** மியான்மர், பங்களாதேசம் என்று சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) கவன ஈர்ப்பாக இப்போது நான் எடுக்கவில்லை, தகவல் கோரலாகத்தான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன் அவர்கள் பேசுகின்றபோது, ** என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார். எனவே அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பாண்டுரங்கன் அவர்கள் ** என்று சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) வேறு subject இருக்கிறதா? No, no. திரு. தி. வேல்முருகன், உட்காருங்கள். (குறுக்கீடு)

3. கேரளாவில் தமிழர்கள் வாழக்கூடிய பகுதிகளில் பொங்கல் திருநாளுக்கு அரசு விடுமுறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு, கேரள அரசிற்கு, அங்கு வாழக்கூடிய தமிழ் மக்களுக்குப் பொங்கல் விடுமுறை விட வேண்டுமென்கிற வேண்டுகோளை விடுத்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் மாநிலக் குழுவும் இந்த வேண்டுகோளை வைத்திருந்தது. இதனை ஏற்ற கேரள அரசு, அங்கிருக்கக்கூடிய தமிழ் மக்களுக்குப் பொங்கல் விடுமுறையை விட்டிருக்கிற மகிழ்ச்சியான செய்தியை இங்கே பரிமாறிக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேசும்பொழுது, ** மியான்மர், பங்களாதேசம் என்று சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) கவன ஈர்ப்பாக இப்போது நான் எடுக்கவில்லை, தகவல் கோரலாகத்தான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன் அவர்கள் பேசுகின்றபோது, ** என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார். எனவே அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பாண்டுரங்கன் அவர்கள் ** என்று சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) வேறு subject இருக்கிறதா? No, no. திரு. தி. வேல்முருகன், உட்காருங்கள். (குறுக்கீடு)

3. கேரளாவில் தமிழர்கள் வாழக்கூடிய பகுதிகளில் பொங்கல் திருநாளுக்கு அரசு விடுமுறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு, கேரள அரசிற்கு, அங்கு வாழக்கூடிய தமிழ் மக்களுக்குப் பொங்கல் விடுமுறை விட வேண்டுமென்கிற வேண்டுகோளை விடுத்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் மாநிலக் குழுவும் இந்த வேண்டுகோளை வைத்திருந்தது. இதனை ஏற்ற கேரள அரசு, அங்கிருக்கக்கூடிய தமிழ் மக்களுக்குப் பொங்கல் விடுமுறையை விட்டிருக்கிற மகிழ்ச்சியான செய்தியை இங்கே பரிமாறிக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2. தகவல் கோரல்

(இ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா கிராமங்களுக்கு நெய்யாறு இடதுகரைக் கால்வாயிலிருந்து தண்ணீர் தருதல்

திரு. என். நன்மாறன்: கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவில் ஒன்பது வருவாய் கிராமங்களில் உள்ள விவசாயிகளுடைய நலன் கருதி, நெய்யாறு இடதுகரைக் கால்வாயிலிருந்து தண்ணீர் பெற்றுத் தர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு அவ்வளவுதான், உட்காருங்கள்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன். (குறுக்கீடுகள்) அடுத்த matter-க்குப் போயாகிவிட்டது. உட்காருங்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து எட்டாவது முதல் இருநூற்று முப்பது ஐந்தாவது வரையிலான எட்டு அறிக்கைகளைக் குழுவின் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுத் தலைவர்.

2. தகவல் கோரல்

(இ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா கிராமங்களுக்கு நெய்யாறு இடதுகரைக் கால்வாயிலிருந்து தண்ணீர் தருதல்

திரு. என். நன்மாறன்: கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவில் ஒன்பது வருவாய் கிராமங்களில் உள்ள விவசாயிகளுடைய நலன் கருதி, நெய்யாறு இடதுகரைக் கால்வாயிலிருந்து தண்ணீர் பெற்றுத் தர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு அவ்வளவுதான், உட்காருங்கள்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன். *(குறுக்கீடுகள்)* அடுத்த matter–க்குப் போயாகிவிட்டது. உட்காருங்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து எட்டாவது முதல் இருநூற்று முப்பது ஐந்தாவது வரையிலான எட்டு அறிக்கைகளைக் குழுவின் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுத் தலைவர்.

2. தகவல் கோரல்

(இ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா கிராமங்களுக்கு நெய்யாறு இடதுகரைக் கால்வாயிலிருந்து தண்ணீர் தருதல்

திரு. என். நன்மாறன்: கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவில் ஒன்பது வருவாய் கிராமங்களில் உள்ள விவசாயிகளுடைய நலன் கருதி, நெய்யாறு இடதுகரைக் கால்வாயிலிருந்து தண்ணீர் பெற்றுத் தர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு அவ்வளவுதான், உட்காருங்கள்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன். (குறுக்கீடுகள்) அடுத்த matter–க்குப் போயாகிவிட்டது. உட்காருங்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து எட்டாவது முதல் இருநூற்று முப்பது ஐந்தாவது வரையிலான எட்டு அறிக்கைகளைக் குழுவின் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுத் தலைவர்.

[2011 ஜனவரி 13

முற்பகல் 10—00

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து, அனைவரும் வால்பாறைக்கு வர வேண்டுமென்று கேட்டு, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009-2011 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் நூற்று இரண்டாவது முதல் நூற்று ஏழாவது வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2011-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

(குறுக்கீடு) சொல்லுங்கள்.

[2011 ஜனவரி 13

முற்பகல் 10—00

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து, அனைவரும் வால்பாறைக்கு வர வேண்டுமென்று கேட்டு, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009-2011 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் நூற்று இரண்டாவது முதல் நூற்று ஏழாவது வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2011-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

(குறுக்கீடு) சொல்லுங்கள்.

2011 ஜனவரி 13]

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2011 ஜனவரி 13]

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2011 ஜனவரி 13

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம் மற்றும் பதிலுரை. பேசுவோர் பட்டியலின்படி முதலில் திரு. ஜி.கே. மணி. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 30 நிமிடங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 13 ஆவது சட்டப் பேரவையின் 15 ஆவது கூட்டத் தொடரில் ஆளுநர் உரையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 ஆங்கிலப் புத்தாண்டு, 2041–42 திருவள்ளுவர் ஆண்டு, தமிழ்ப் புத்தாண்டு, தமிழர் திருநாள், தைப் பொங்கல், தை தை என தை மகள் வருகின்றாள்; தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். இந்த ஆண்டு தமிழ்நாட்டிற்கு, ஒட்டுமொத்தத் தமிழக மக்களுக்கு நல்ல ஆண்டாக அமையவும், இது இனிய ஆண்டாக அமையவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழகத் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சக சட்டமன்ற உறுப்பினர்கள் சகோதர சகோதரிகளுக்கும், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், செய்தி ஊடக நண்பர்களுக்கும், உணவளிக்கும் விவசாயப் பெருமக்களுக்கும், உடை கொடுக்கும் நெசவாளப் பெருமக்களுக்கும், இருப்பிடம் கட்டிக் கொடுக்கும் கட்டுமானத்

[பேரவைத் தலைவர்] [2011 ஜனவரி 13

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம் மற்றும் பதிலுரை. பேசுவோர் பட்டியலின்படி முதலில் திரு. ஜி.கே. மணி. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 30 நிமிடங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 13 ஆவது சட்டப் பேரவையின் 15 ஆவது கூட்டத் தொடரில் ஆளுநர் உரையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 ஆங்கிலப் புத்தாண்டு, 2041–42 திருவள்ளுவர் ஆண்டு, தமிழ்ப் புத்தாண்டு, தமிழர் திருநாள், தைப் பொங்கல், தை தை என தை மகள் வருகின்றாள்; தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். இந்த ஆண்டு தமிழ்நாட்டிற்கு, ஒட்டுமொத்தத் தமிழக மக்களுக்கு நல்ல ஆண்டாக அமையவும், இது இனிய ஆண்டாக அமையவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழகத் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சக சட்டமன்ற உறுப்பினர்கள் சகோதர சகோதரிகளுக்கும், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், செய்தி ஊடக நண்பர்களுக்கும், உணவளிக்கும் விவசாயப் பெருமக்களுக்கும், உடை கொடுக்கும் நெசவாளப் பெருமக்களுக்கும், இருப்பிடம் கட்டிக் கொடுக்கும் கட்டுமானத்

2011 ஜனவரி 13] [திரு. ஜி.கே. மணி]

தொழிலாளர்களுக்கும், மீனவப் பெருமக்களுக்கும், அரசு ஊழியர், ஆசிரியர் பெருந்தகைகளுக்கும், அரசுசார் நிறுவன மற்றும் ஆலைத் தொழிலாளர்களுக்கும், நாளைய நம்பிக்கை மாணவச் செல்வங்களுக்கும், அனைவரையும் ஈன்றெடுத்த அன்னையான, மக்கள்தொகையில் சரிபாதியான மகளிர் சகோதரிகளுக்கும், ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களுக்கும், எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்து மகிழ்ச்சி பொங்க மன நிறைவு கண்டு, குடும்ப நலமுடன் மகிழ்ச்சியுடன் வாழ அனைவருக்கும் எங்களது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்; பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழ்கூறும் நல்லுலகின் தலையாய திருவிழா, தமிழர் பண்பாட்டின் தனிப் பெருமை தை விழா. வேளாண்மை மரபிலே வளர்ந்த நம் வாழ்விலே தலைவணங்கத்தக்கது தை மாதப் பொங்கலே. 'பொங்கலோ பொங்கல்' என்று பொங்கியெழும் நம் குரலை, நன்றியின் குரல் என்று நானிலமும் கேட்கிறது. நம் அருகே இருக்கின்ற மாநிலமும் கேட்கிறது. நம் முதல்வரின் கோரிக்கையைக் கேரளமும் கேட்கிறது, பொங்கலுக்கு விடுமுறையும் விட்டது. உழைத்து, உழைத்து நமக்கு உணவினை அளிப்பவர்கள் அழுதுகொண்டே ஏர் உழுதால் அது நமது வேதனையாகும்.

வெற்று மண் பரப்பை வயல்வெளியில் உயிர்ப்பிக்கும் வேளாண் குடிமக்களை வணங்குவோம்; வாழ வைப்போம்; தமிழர்களை வாழ வைப்போம்; தமிழ்நாட்டை வளமாக்குவோம். அனைவருக்கும் மீண்டும் இனிய புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பதைப்போல, அடுத்த மாதம் பிப்ரவரி திங்களில் இடைக்கால நிதிநிலை அறிக்கை, அதற்கு முன்பு 2011 ஆம் ஆண்டு துவக்கத்தில் ... (குறுக்கீடுகள்)

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைதி, அமைதி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு துவக்கத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் சில அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். குறிப்பாக,

[திரு. ஜி.கே. மணி] [2011 ஜனவரி 13

சேலம் மாவட்டத்தில் சரபங்கா நதி, மணிமுத்தாறு ஆகியவற்றை இணைத்து பாசனப் பெருக்கத் திட்டம், விழுப்புரம் கள்ளக்குறிச்சியில், தருமபுரி அருகே அரூரில், விருதுநகர், திருச்சுழி போன்ற இடங்களில் பல்வேறு கல்லூரிகள். கிருஷ்ணகிரியில் தோட்டக்கலைப் பல்கலைக்கழகம், கன்னியாகுமரியில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி பல்கலைக்கழகம், கடலூர், இராமநாதபுரம், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் என்று பல்வேறு அறிவிப்புகள் இங்கே வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் கேட்கிற நேரத்தில் அடுத்து வருகிற இடைக்கால நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாட்டு மக்கள் எதிர்பார்க்கிற வகையில், மக்கள் எல்லாம் அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய வகையில் மிகப் பெரிய அறிவிப்புகளை வெளியிட வேண்டுமென்ற வேண்டுகோளை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் முன்வைக்க விரும்புகிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, கடந்த சில மாதங்களில், கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக பருவ மழை அதிக அளவு பெய்த காரணத்தால் மிகப் பெரிய வெள்ளச் சேதம்; இந்த வெள்ளச் சேதத்தில் விழுப்புரம், கடலூர், தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி என்று பல்வேறு மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்டவுடனே அடுத்த நாளே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர் அதிகாரிகளை, அமைச்சர் பெருமக்களையெல்லாம் அழைத்து ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை மேற்கொண்டார்கள். முதற்கட்டமாக, 500 கோடி ரூபாய்; அடுத்து 500 கோடி ரூபாய் என்று நிவாரணப் பணிகளுக்கு வழங்கினார்கள். வேலை முடுக்கிவிடப்பட்டது. ஆனாலுங்கூட, நிவாரணம் என்பது உடனடித் தேவை. தலை வலித்தால், உடல்நலம் பாதித்தால் உடனடியாக சிகிச்சை. அந்த அடிப்படையிலேதான் தமிழக அரசு மேற்கொண்டாலும்கூட, நடுவண் அரசு அதிகாரிகள் குழுவைக் காலந்தாழ்த்தி அனுப்பியது. அப்படி காலந்தாழ்த்தி அனுப்பினாலுங்கூட, அந்தக் குழு ஆய்வு செய்து, தமிழக அரசு எவ்வளவு தொகை கேட்டது என்பதையெல்லாம் ஏற்றுக் கொண்டு டெல்லிக்குச் சென்றது. டெல்லிக்குச் சென்று நாட்கள் கடந்தன. ஆனால், நிவாரணம் இன்னும் வரவில்லை. இது வேதனையாக இருக்கிறது. இந்த வேதனையைக் குறிப்பிட்டுச் சொல்ல

2011 ஜனவரி 13] [திரு. ஜி.கே. மணி]

விரும்புகிறேன். ஆந்திராவிலும் பாதிப்பு. பல்வேறு வட மாநிலங்களிலே வெள்ளச் சேதம். நிவாரணத் தொகை கூடுதலாக அளிக்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டுக்கு கடந்த 2008 ஆம் ஆண்டில் வெள்ளச் சேத நிவாரணத் தொகையாக 2,000 கோடி ரூபாயைத் தமிழக அரசு கேட்டது. வழங்கியது வெறும் 300 கோடி ரூபாய். இப்போதும் 1832 கோடியை தமிழக அரசு கேட்டிருக்கிறது. இன்னும் வந்தபாடில்லை. ஆகவே, இந்த மாமன்றத்தின் சார்பாகப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, நான் நடுவண் அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், காலந்தாழ்த்தாமல் தமிழக அரசு கேட்ட நிவாரணத் தொகையை முழுமையாக வழங்கவேண்டுமென்று வேண்டுகோள் வைக்கிறேன். அதுமட்டுமல்ல; நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதெல்லாம், இது மிகப் பெரிய பிரச்சினை; உரிய தீர்வு வேண்டுமென்ற காரணத்தாலே இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி நடுவண் அரசை வலியுறுத்த வேண்டுமென நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்கான பொது நுழைவுத் தேர்வு. இது தமிழ்நாட்டு மக்களுக்கு ஒட்டுமொத்த ஏழையெளிய மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி, சிறுபான்மையின மாணவச் செல்வங்களுக்கு மிகப் பெரிய பாதிப்பை உண்டாக்கும். எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள்கூட, கடந்த 14 ஆண்டுகளாக நுழைவுத் தேர்வு கூடாது என்று போராடினார்கள். அதையெல்லாம் ஏற்றுக் கொண்ட தமிழக அரசு, ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனேயே நுழைவுத் தேர்வை இரத்து செய்தது. அப்படி நுழைவுத் தேர்வை இரத்து செய்த காரணத்தால்தான் கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை, எளிய நடுத்தரக் குடும்பத்துக் குழந்தைகள் இன்று நுழையமுடியாமல் இருந்த மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் நுழைய முடிந்தது. ஆனால், இந்த நுழைவுத் தேர்வு வந்து விட்டால், எல்லோரும் நுழையமுடியாமல் இருக்கக்கூடிய நுழையாத் தேர்வாக அமைந்துவிடும் என்ற காரணத்தாலேதான் இதைத் தமிழக அரசு உணர்ந்து, இடைக்காலத் தடை வாங்கி இருக்கிறது; மகிழ்ச்சி. ஆனாலுங்கூட, இன்று மாண்புமிகு அமைச்சர் குலாம் நபி ஆசாத் சொல்கிறார்: 'இது மத்திய அரசினுடைய கொள்கை, முடிவு; சில மாநில அரசுகள்

[திரு. ஜி.கே. மணி] [2011 ஜனவரி 13

எதிர்ப்பு தெரிவித்ததனாலே ஒத்தி வைத்திருக்கிறோம்' என்று சொல்லியிருக்கிறார். அதனால், பின்னாலே வர இருக்கிறது என்பது நமக்குப் புலனாகிறது. இன்னொன்றையும் சொல்கிறேன். இப்படி நுழைவுத் தேர்வு வந்து விட்டால், டெல்லி, மும்பை, கொல்கத்தா, பெங்களூரு போன்ற பெரு நகரங்களில் வாழக்கூடியவர்களுக்கு மட்டுமே இந்தக் கல்வி நிறுவனங்களில் படிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். உதாரணத்திற்கு மேலும் ஒன்றைச் சொல்கிறேன். நம்முடைய சென்னையில் I.I.T. நிறுவனம் இருக்கிறது. 1000 இடங்கள் இருக்கின்றன. அந்த 1000 இடங்களில், தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்கள் வெறும் 10 பேர் மட்டுமே படிக்கிறார்கள். 990 பேர் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். இந்த நிலை எதிர்காலத்தில், தமிழ்நாட்டு மாணவச் செல்வங்களுக்கு வந்துவிடக் கூடாது என்ற காரணத்தினாலேதான், தமிழக அரசு உறுதியாக இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல; ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும், அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் நுழைவுத் தேர்வு வராமல் தடுப்பதற்குக் குரல் கொடுக்க வேண்டும் என்று நான் வேண்டுகோளை முன்வைக்கிறேன்.

முற்பகல் 10—10

அதுமட்டுமல்ல; 1965-ஆம் ஆண்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம். மிகப் பெரிய போராட்டம். நுழைவுத் தேர்வு வந்தால் மீண்டும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் 1965-ல் நடந்ததுபோல், தமிழ்நாட்டில் வரவேண்டும் என்ற நிலைக்குத் தமிழகம் ஒன்று திரள வேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அடுத்து மிகப் பெரிய பிரச்சினை, பட்டித் தொட்டிகளில் வாழுகிற, பாமரன் முதல் கோடீஸ்வரன் வரையிலே, மாட மாளிகை, கூட, கோபுரங்களில் வாழக்கூடிய கோடீஸ்வரன், குபேந்திரன் வரையில் இன்று அவர்களால் தினமும் பேசப்படுவது, மனதை எல்லாம் உலுக்கிக் கொண்டிருப்பது விலைவாசி. காய்கறி விலை, வெங்காயம் விலை, தக்காளி, கேரட் என்று எல்லாப் பொருட்களின் விலையும் உயர்ந்து கொண்டிருக்கிறது. ஒட்டுமொத்தமாக எல்லா வீடுகளிலும், 'வீட்டுக்கு வீடு வாசப்படி' என்று சொல்வார்கள்; அதைப்போல, இன்று ஒவ்வொரு வீட்டிலும், விலைவாசி ஏறி விட்டது; என்ன செய்யப் போகிறார்கள் என்று ஆதங்கப்பட்டுக்கொள்கிறார்கள்; வேதனைப்படுகிறார்கள். இந்த

2011 ஜனவரி 13] [திரு. ஜி.கே. மணி]

வேதனைக்கு மருந்து உண்டு என்று சொல்கிற வகையிலேதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நாளை அவசர கூட்டத்தைக் கூட்டி, இந்த விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள்; வரவேற்கிறோம். ஆனால், நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது எல்லாம், இதில் மாநில அரசு நடவடிக்கையைப் போல, மத்திய அரசினுடைய நடவடிக்கை விரைவாக இருக்க வேண்டும். அதைத் தமிழக அரசு வலியுறுத்த வேண்டும். நேற்றைய முன்தினம் பாகிஸ்தானிலிருந்து வெங்காயம் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது; திரும்பிப் போய்விட்டது. இந்த நிலை நீடித்தால் நமக்கு விலைவாசி குறைப்பு என்பது எட்டாக் கனியாகிவிடும் என்ற காரணத்தினாலேதான் மத்திய, மாநில அரசுகள் கடுமையாக இதிலே கவனம் செலுத்தி, போர்க்கால அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுத்து விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இன்றைக்கு செங்கல் விலை, மணல் விலை, சிமெண்ட் விலை என்று கட்டுமானப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்திருக்கிறது. இன்று கட்டுமானப் பணிகள் முடங்கிக் கிடக்கின்றன. முதலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். ஆகையினால், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை தேவை என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல, உலக நாடுகளைப் பார்க்கிறோம். அங்கே ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு அங்கே இருக்கிற மக்களுடைய வாழ்வாதார நிலைமை சீர்கெட்ட காரணத்தினாலேதான் மக்களின் உரிமைக்காகப் பல்வேறு நாடுகளிலே புரட்சி ஏற்பட்டதை நாம் கேட்டிருக்கிறோம், படித்துக் கொண்டிருக்கிறோம். சீனப் புரட்சி, பிரஞ்சுப் புரட்சி, ருஷ்யப் புரட்சி என்று பல்வேறு புரட்சிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம், படித்துக்கொண்டிருக்கிறோம்.

அதைப்போல, இன்று தமிழ்நாட்டிலே இருக்கிற மக்களுடைய மிக முக்கியமான பிரச்சினைகளுக்குச் சில தீர்வுகளை உண்டாக்கக்கூடிய வகையில் முக்கிய புரட்சிகரமான மாறுதல்களைக் கொண்டு வரவேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்திச் சொல்கிறது. அப்படிச் சொல்கிற வேளையில், தமிழ்நாட்டுக்கு முதல் தேவை, கல்விப் புரட்சி. ஏழை, பணக்காரன் என்ற

[திரு. ஜி.கே. மணி] [2011 ஜனவரி 13

வேறுபாடில்லாமல் எல்லோருக்கும் ஒரே சமமான, ஒரே தரமான, ஒரே சீரான, கட்டணம் இல்லாத கட்டாயக் கல்வி வேண்டும். அது சமச்சீர் கல்வி, அதன் அடிப்படையிலேதான் அருகமைப் பள்ளி முறை, பொதுப் பள்ளி முறை என்று இந்தக் கல்வியிலே மிகப் பெரிய சீர்திருத்தங்கள் வேண்டும் என்று நான் வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். ஆகையினால், கல்விப் புரட்சி தமிழ்நாட்டுக்குத் தேவை.

அதைப்போல, இன்று மனிதனை, ஒட்டுமொத்த குடும்பங்களைச் சீரழித்துக் கொண்டிருப்பது மது; குடிப் பழக்கம். இன்று. மது என்பது ஒட்டுமொத்தமாகச் சொன்னால், எல்லாக் குற்றங்களுக்கும் 'தாய்' மது. ஆகையினால், 'குடி உயிருக்குக் கேடு, வீட்டுக்குக் கேடு, நாட்டுக்குக் கேடு' என்ற காரணத்தினாலே, மது ஒழிப்புப். புரட்சி கட் டாயம் வேண்டும்.

அதைப்போல, இன்று வேளாண் தொழில் அழிந்து வருகிறது. நாளுக்கு நாள் மக்கட்தொகைப் பெருக்கம், விளை நிலங்களின் பரப்புச் சுருக்கம், உணவு உற்பத்திப் பற்றாக்குறை. எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்ற காரணத்தினாலேதான் வேளாண்மையில் மிகப் பெரிய புரட்சி 'வேளாண் புரட்சி' வேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

அதேபோல, அடுத்து இருப்பது பாசனம். இன்று பல்வேறு திட்டங்களைத் தமிழக அரசு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. ஆனால், பாசனத்திற்கு முக்கியத்துவம் இல்லையோ என்ற அச்சம் எழுகின்ற காரணத்தினாலேதான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். கூடுதலான நிதி ஒதுக்குங்கள். உணவுப் பெருக்கத்திற்கு, வேளாண்மை வளர்ச்சிக்கு, பாசனம் தேவை. ஆகவே, இப்போது ஒதுக்கியிருக்கிறீர்கள். முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, இது போதாது. ஆந்திரா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மராட்டியம் போன்ற பல்வேறு மாநிலங்களை ஒப்பிடுகின்ற நேரத்தில், பாசனத்திற்குண்டான முக்கியத்துவம் தமிழ்நாட்டில் வேண்டுமென்ற காரணத்தினாலே பாசனப் புரட்சி தமிழ்நாட்டிற்குத் தேவை.

2011 ஜனவரி 13] [திரு. ஜி.கே. மணி]

அதைப்போல, இன்று தமிழ்நாட்டிலே தமிழர்களுடைய பண்பாடு, கலாச்சாரம், நாகரிகம் ஒட்டுமொத்தமாகச் சீரழிந்து கொண்டிருக்கிறது. அதைப் பேசினால் நீண்டநேரம் சொல்லிக்கொண்டிருக்கலாம். அந்த அடிப்படையிலேதான் கலாச்சாரச் சீரழிவு, பண்பாடு குறைவு, வன்முறை, தீவிரவாதம், ஆபாசம், அரைகுறை ஆடை, விளம்பரங்கள் சீரழிவு என்று பல்வேறு பண்பாட்டுச் சீரழிவுகள் நடந்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலே, கலைப் பண்பாட்டுப் புரட்சி தேவை. ஒட்டுமொத்தமாக, இன்று தமிழ்நாட்டினுடைய நிலைக்கேற்ப பல்வேறு சீர்திருத்தங்கள் வேண்டுமென்கின்ற வகையிலே புரட்சிகரமான மாறுதல்கள் தேவை.

புரட்சிகரமான மாறுதல்கள் என்று மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். கல்விப் புரட்சி வேண்டும். மது ஒழிப்புப் புரட்சி வேண்டும். வேளாண் புரட்சி வேண்டும். பாசனப் புரட்சி வேண்டும். கலைப் பண்பாட்டுப் புரட்சி வேண்டும். ஆக, இந்த ஐவகைப் புரட்சி தமிழ்நாட்டிற்குத் தேவை. ஐவகை நிலங்கள் என்று சொல்கிறோம். பஞ்சசீலக் கொள்கை என்று சொல்கிறோம். பஞ்ச பூதங்கள் என்று சொல்கிறோம். அந்த அடிப்படையிலே, ஐவகைப் புரட்சி தமிழ்நாட்டிற்குத் தேவை என்பதை நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதுபோலவே, முக்கியத்துவம் வாய்ந்தது, காவிரி நீர் உரிமை. தமிழ்நாடு, பாசன உரிமையில், காவிரி நீர் உரிமையில், நம்முடைய உரிமையை இழந்து கையேந்தி நிற்கின்ற அவல நிலை. நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு, இறுதித் தீர்ப்பு, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு என்று எல்லாத் தீர்ப்புகளையும் கர்நாடக அரசு மதிக்கவில்லை. மறுக்கப்படுகிறது. நம்முடைய உரிமை தொடர்ந்து மறுக்கப்பட்டால், எதிர்காலத்தில் நம்முடைய உரிமை இல்லாமல், தமிழ்நாடு பாலைவனமாக மாறிவிடுமோ என்ற அச்சம் எழுகிறது.

இன்னொன்றையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்தியா, பாகிஸ்தான் இரண்டு நாடுகளுக்கு இடையில் சீலம், சட்லெஜ் நதிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படுகிறது. அதைப்போல, இந்தியா, வங்காளதேசம் இடையே கங்கை, அந்தப் பிரச்சினை தீர்க்கப்படுகிறது. இந்தியா, சீனாவிற்கு இடையில் பிரம்மபுத்திரா ஆற்றுப் பிரச்சினை. இப்படி உலகின் பல்வேறு நாடுகளில் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. ஏன் இந்தியாவிலே தமிழ்நாட்டுப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை.? ஆகவே, நான் இன்னொன்றையும்

[திரு. ஜி.கே. மணி] [2011 ஜனவரி 13

சொல்ல விரும்புகிறேன். மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்கள் பயன்பெறக்கூடிய பக்ராநங்கல் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினை. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடுவண் அரசு, நீர் மேலாண்மை ஆணையம் என்ற ஒரு ஆணையத்தை உருவாக்கி, பக்ராநங்கல் அணையினுடைய முழுக் கட்டுப்பாட்டையும் தன் கையில் வைத்திருக்கிறது, அங்குப் பிரச்சினை வந்த காரணத்தினாலே.

ஆகையினாலே, தமிழக அரசு நடுவண் அரசை வலியுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் காவிரிப் பிரச்சினை தீர்வதற்கு, தமிழ்நாட்டினுடைய உரிமையை நாம் பெறுவதற்கு, காவிரி மேலாண்மை ஆணையம் கட்டாயம் வரவேண்டும். அது வந்தால்தான், நமது உரிமை பாதுகாக்கப்படும். அந்த வகையிலேதான், கர்நாடகாவிலே இருக்கின்ற கிருஷ்ணராஜ சாகர் அணை, அந்த அணையினுடைய முழுப் பொறுப்பும், குறிப்பாக, நீர் வரத்து, நீரைத் திறந்துவிடுதல், பராமரிப்பு போன்ற எல்லாக் கட்டுப்பாடுகளையும் நடுவண் அரசு கையிலே வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி இருந்தால்தான் நம்முடைய உரிமை பாதுகாக்கப்படும். அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கு நம்முடைய மாநில அரசு குரல் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, மிகப் பெரிய பிரச்சினை, முல்லைப் பெரியாறு. முல்லைப் பெரியாறிலே என்ன நிலைமை? கேரள அரசு அடம் பிடிக்கின்றது, புதிய அணை கட்டப்பட வேண்டுமென்று. தேவையே இல்லை. இப்போது பார்த்தால், அண்மையிலே குறிப்பாக, நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையில் ஐவர் குழு, அவர்களுக்கு உதவி செய்வதற்காக ஐந்து பேர் கொண்ட தொழில்நுட்பக் குழு; இது தேவையற்றது. அந்தக் குழு தமிழ்நாட்டிற்கு வருகிறது. முல்லைப் பெரியாறுக்கு வருகிறது. அணையைப் பார்வையிடுகிறது. நீருக்குள் சென்று பார்வையிடுகிறது. ஏற்கெனவே குழு சொல்லிவிட்டது, உச்ச நீதிமன்றம் சொல்லிவிட்டது. மீண்டும் தேவையில்லை. தேவையற்ற பிரச்சினை என்பதாலே நாம் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். அதிலேகூட உள்நோக்கம். அந்த ஐவர் குழு செல்கிறது; தமிழக விவசாயிகள் சந்திக்க முற்படுகிறார்கள்; அந்தக் குழுவிலே

2011 ஜனவரி 13] [திரு. ஜி.கே. மணி]

இடம்பெற்றிருந்த கேரள உறுப்பினர் தலைமறைவாகிவிடுகிறார்; வரவே இல்லை. ஆனால், கேரள எல்லைக்குள் செல்கின்ற நேரத்தில், கேரள விவசாயிகள் சந்திக்கின்றார்கள். தமிழ்நாட்டினுடைய பிரதிநிதியும் அங்கே பங்கேற்றிருக்கிறார். இது எவ்வளவு வேதனை? தமிழ்நாட்டினுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறோம். ஆனால், கேரள அரசு அடம் பிடிக்கிறது. வஞ்சகத் தன்மையைக் காட்டுகிறது.

முற்பகல் 10—20

நான் இன்னொன்றையும் கேட்டுக்கொள்கிறேன். இந்த மாமன்றத்தின் வாயிலாக, கேரள அரசை, கேரள மாநிலத்து மக்களைக் கேட்டுக்கொள்கிறேன், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொங்கல் திருநாளுக்கு விடுமுறை வேண்டும் என்று கேட்டார்கள். ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். விடுமுறை விட்டிருக்கிறீர்கள். மகிழ்ச்சி. வரவேற்கிறோம். இந்த நல்லுறவு, முல்லைப் பெரியாறு பிரச்சினையிலும் வர வேண்டும். வந்தால்தான் நாம் சகோதரர்கள் என்ற உணர்வு வரும். ஆகையினாலே அடம் பிடிக்காதீர்கள். இந்த அடம்கூட எதற்கு என்று சொன்னால், அங்கே பாசனத்தைப் பெருக்குவதற்கும், மின் உற்பத்திக்காகவும் புதிய அணை அல்ல. இதிலே உண்மை மறைந்திருக்கிறது. 136 அடி என்று குறைத்தால் அணைக்கு மேலே நிலப் பரப்பு ஏராளமாக காலியாக இருக்கும். 142 அடி அல்லது 152 அடிக்கு நீரைத் தேக்கினால் நிலப் பரப்பு எல்லாம் நீரில் மூழ்கிவிடும். ஆகவே, குறைக்கிற நேரத்தில் நிலப் பரப்பு மீதமாகும் என்ற காரணத்தினால்தான் அந்த நிலப் பரப்பை அந்த மாநிலத்தைச் சேர்ந்த முக்கியப் புள்ளிகளுக்கு அரசு குத்தகைக்கு விட்டிருக்கிறது. 99 ஆண்டுகள் என்று நினைக்கிறேன். அதற்கு மேலாகக்கூட இருக்கலாம். குத்தகைக்கு விட்டிருக்கிறது. பெரும் புள்ளிகள், அங்கே இருக்கக்கூடிய எல்லோருக்கும் குத்தகைக்கு விட்டு அவர்களைக் காப்பாற்றுவதற்காக இது நடக்கிறது. ஆன காரணத்தினாலே, தமிழக மக்களும், அங்கே அப்பாவிகளாக இருக்கிற கேரள மக்களும் முக்கிய புள்ளிகளுக்காக இந்தப் பிரச்சினை கூடாது என்று ஒரே உணர்வாக, ஒத்தக் குரலோடு முடிவுக்கு வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படி எல்லாம் பிரச்சினை. அதேபோல பாலாறு பிரச்சினை. பாலாறு பிரச்சினையில் என்ன? முன்னாள் முதலமைச்சர் சந்திரபாபு

[திரு. ஜி.கே. மணி] [2011 ஜனவரி 13

நாயுடு, அவருடைய உரிமைக்கு அண்டை மாநிலத்தில் சென்று போராடுகிறார். அங்கே இருக்கிற புதிய தலைவர் டெல்லிக்குச் சென்று குரல் கொடுக்கிறார்; போராடுகிறார். அவர்களுடைய உரிமையைப் பாதுகாக்க அரசியல் கட்சிகள், ஆண்டவர்கள், ஆட்சி செய்யத் துடிப்பவர்கள் போராடுகிற நேரத்தில் பாலாறு பிரச்சினையில், முல்லைப் பெரியாறு பிரச்சினையில், காவிரிப் பிரச்சினையில் நாம் அமைதியாக இருக்க வேண்டுமா? அழுத பிள்ளைதான் பால் குடிக்கும். ஆன காரணத்தினாலே, நாம் இன்னும் ஓங்கிக் குரல் கொடுக்க வேண்டும். உயரிய போராட்டங்களுக்குத் தள்ளப்பட வேண்டும். அப்போதுதான் நம்முடைய உரிமை பாதுகாக்கப்படும் என்ற காரணத்தினாலே நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்வதெல்லாம், நம்முடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடுவண் அரசு முன்வர வேண்டும். போர்க்கால அடிப்படையில் அவை தீர்க்கப்பட வேண்டும். தீர்க்கப்படவில்லை என்று சொன்னால் பாலாறு, முல்லைப் பெரியாறு, காவிரி ஆகியவற்றை நடுவண் அரசு நாட்டுடைமையாக்க வேண்டும். மத்திய அரசு அவற்றைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும். அந்த நிலை வந்தால்தான், நம்முடைய உரிமை பாதுகாக்கப்படும். அதற்குக் குரல் கொடுக்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மிக முக்கியமானது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'கலைஞர் வீடு வழங்கும் திட்ட'த்தை வழங்கி இருக்கிறார்கள். இது பாராட்டுக்குரியது. எல்லாத் தரப்பு மக்களும் வரவேற்கிறார்கள். 75 ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது. மூன்று தலைமுறை, நான்கு தலைமுறை குடிசை வீட்டை, கூரை வீட்டைத் தவிர வேறு எதையும் பார்க்கவில்லை. இதுதான் வறுமையின் சின்னம் என்று அடையாளமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் மாற்றுவதற்கு இந்தக் கலைஞர் வீடு வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் குடிசை இல்லாத தெரு, குடிசை இல்லாத சிற்றூர், குடிசை இல்லாத பேரூர், குடிசை இல்லாத நகரம், குடிசை இல்லாத மாநகரம் என்று சொல்லக்கூடிய நாள் தமிழகத்தில் வர வேண்டும். அதற்கு வித்திட்டவர் தமிழக முதலமைச்சர் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டு, இதை மக்கள் பெரிதும் வரவேற்கிறார்கள் என்பதையும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டுக்கு 3 இலட்சம் வீடுகள் என்பதைவிட இன்னும் உயர்த்தி அதிக அளவிலே கட்டிக்

2011 ஜனவரி 13] [திரு. ஜி.கே. மணி]

கொடுத்து இந்த நிலையை மாற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நான் இந்த மாமன்றத்திலே தொடர்ந்து பேசுவது இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை. சமூக நீதியினுடைய பிறப்பிடம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தந்தை பெரியார் வழியில் வந்தவர்கள். அவருடைய பாசறையில் பயின்றவர்கள். அவருக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. இருந்தாலும்கூட, நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புவதெல்லாம், தந்தை பெரியார் சொன்னதைப் போல வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கட்டாயம் வேண்டும். அது விரைவில் வேண்டும். அந்த அடிப்படையிலேதான் இன்றிருக்கிற இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் பிற்படுத்தப்பட்டவர்கள், கொங்கு வேளாளர், ரெட்டியார், முதலியார், செட்டியார், நாடார், நாயுடு, முத்தரையர், முக்குலத்தோர் என்று 95–க்கும் மேற்பட்ட சாதிப் பிரிவுகள் இருக்கின்றன. அவர்களுக்கான இட ஒதுக்கீட்டில் குளறுபடி இருக்கிறது. அதை, மாற்றுவதற்கு அவரவர்களுக்குரிய பங்கு சரியாகப் போய்ச் சேருவதற்கு இந்தத் தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறை கட்டாயம் வேண்டும். அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகம், ஆந்திரம் ஆகியவற்றிலே இருக்கிறது. ஏன் நம்முடைய மாநிலத்திலே முடியாது? ஆகவே, அவர்களுக்குத் தொகுப்பு இட ஒதுக்கீடு வேண்டும். இங்கே ஒடுக்கப்பட்டவர்கள் பட்டியலில் தலித் மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கான இட ஒதுக்கீட்டிலே திருத்தங்கள் வேண்டும். சிறுபான்மை இஸ்லாமியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது; மகிழ்ச்சி. அருந்ததியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது; மகிழ்ச்சி. கிறித்தவப் பெருமக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே நிறைவேற்றித் தரவேண்டும்.

அதைப்போல, தமிழ்நாட்டினுடைய பெரும்பான்மை மக்களாக இருக்கிற மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இருக்கிற வன்னியர்களுக்கு இன்று இருக்கிற இட ஒதுக்கீட்டிலே மிகப் பெரிய பாதிப்பு இருக்கிறது. இதை அறிவித்த நேரத்திலே ஓரளவுக்குப் பங்கு கிடைத்தது. 20 விழுக்காடு, இந்த நிலையில் பார்த்தால் 6 விழுக்காடு, 7 விழுக்காடு, 8 விழுக்காடுக்கு மேலே இல்லை. ஆன காரணத்தினாலே, மிகப் பிற்படுத்தப்பட்ட வன்னியப் பெருமக்களுக்கும் தனி இட ஒதுக்கீடு வேண்டும் என்ற

[திரு. ஜி.கே. மணி] [2011 ஜனவரி 13

வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன். அதைப்போல, மதம் மாறிய வன்னிய கிறித்தவர்கள் . . . (குறுக்கீடு)

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Point of order என்று கேட்கிறார். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போதெல்லாம் எப்படியும் ஒன்று அல்லது இரண்டு அமைச்சர்களாவது குறுக்கீடு செய்வீர்கள். ஆனால், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த தலைவர் சகோதரர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசுகின்றபோது அவர்களது உரையில் ஒருவர்கூட குறுக்கீடே செய்யவில்லை. ஆகவே, கூட்டணிக் கட்சி என்பதனால் குறுக்கீடு செய்யவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படி அர்த்தம் இல்லை. குறுக்கீடு வராமலேயே நன்றாகப் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சகோதரி பாலபாரதி அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சகோதரி பாலபாரதி அவர்கள், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களைப்போல, அமைச்சர்கள் குறுக்கீடு செய்யாத அளவிற்குப் பேசுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆசிரியர் என்பதைக் காட்டிவிட்டார்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சகோதரி செல்வி பாலபாரதி அவர்கள், குறுக்கீடு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல; பேசும்போது எந்தவித உள்நோக்கத்தோடும் பேசக்கூடாது. திறந்த மனதோடு, திறந்த புத்தமாகப் பேசினால் எதுவும் வராது. அதைப்போல ... (குறுக்கீடு)

2011 ஜனவரி 13]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த deal நன்றாக இருக்கிறது!

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வன்னிய கிறித்தவர்கள் பிறப்பால் ஒன்று. அவர்கள் மதம் மட்டும் மாறியிருக்கிறார்கள். ஆகவே, வன்னிய கிறித்தவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் கொண்டுவர வேண்டும். அதைப்போல, தலித் கிறித்தவர்கள். இந்த தலித் கிறித்தவர்கள் அவர்களும் மதம் மாறியது மட்டுமல்ல — (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Deal—ஆ? No Deal—ஆ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Deal! (சிரிப்பு). மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப்போல தலித் கிறித்தவர்கள். அவர்கள் பிறப்பால் தலித் மக்கள். மதம் மட்டும் மாறியிருக்கிறார்கள். வழிபாட்டு முறை மாறி இருக்கிறது. ஆன காரணத்தினாலே, அவர்களையும் பட்டியல் இனத்தில் அந்த S.C. பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அதைப்போல, இந்த இட ஒதுக்கீட்டில் சில திருத்தங்கள். Creamy layer ஒழிக்கப்பட வேண்டும். பதவி உயர்வில் இட ஒதுக்கீடு வேண்டும். தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு வேண்டும். அந்தந்த மாநிலங்களில் உள்ள நிலைமைக்கேற்ப மாநிலங்களே இட ஒதுக்கீட்டுக் கொள்கையை வகுத்துக்கொள்ள வேண்டும். 100 விழுக்காடு இட ஒதுக்கீடு வேண்டும். பங்கேற்பில் முன்னுரிமை வேண்டும். இவையெல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஐந்து நிமிடங்கள்தான் உள்ளன.

[2011 ஜனவரி 13

திரு. ஜி.கே. மணி: அதைப்போல, ஒட்டுமொத்தமாக இட ஒதுக்கீட்டிற்கு அடித்தளமாக இருக்கின்ற சாதிவாரி கணக்கெடுப்பினை நடத்துவதற்குத் தமிழக அரசு முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

மேலும், ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைப்படி ஆசிரியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு இங்கே ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது; நான் மறுக்கவில்லை. இருந்தாலும்கூட, இந்த ஊதிய உயர்வில் முரண்பாடுகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆசிரியர்கள், செவிலியர்கள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள், காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் போன்ற பல்வேறு பிரிவினருக்கு ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைப்படி மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைக்கிறேன்.

அதைப்போல, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்துள்ளனர். தங்களுக்கு 8 மணி நேரம் பணி வேண்டும்; பதவி உயர்வு, நீண்ட நாட்கள் ஆகியும் 25 வருடங்கள் ஆகியும், இல்லை என்று சொல்கிறார்கள். ஊதிய உயர்வு இல்லை; கால்கடுக்க நின்றுகொண்டு வேலை பார்க்கிறோம் என்று சொல்கிறார்கள். எனவே, ஒட்டுமொத்தமாக, காவலர்களிலிருந்து, உயர் அதிகாரிகள் வரை இருக்கின்ற காவல் துறையினரின் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, நம்முடைய தமிழக அரசு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைப் பெரிய அளவில் நிறைவேற்றிக்கொண்டிருக்கின்றது. இது மக்களால் எதிர்பார்க்கப்பட்ட வரவேற்கக்கூடிய ஒன்று. காவிரியிலிருந்து இராமநாதபுரம், காவிரி ஒகேனக்கல்லிலிருந்து கிருஷ்ணகிரி, தருமபுரி, காவிரி ஒகேனக்கல்லிலிருந்து வேலூர் மாவட்டத்திற்கு தண்ணீர் தர இது ஒரு மாபெரும் திட்டம். இதை வரவேற்கிறோம். அதைப்போல, பாசனத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். பாசனத்திற்காக இந்தப் பெருந்திட்டம் வந்தால்தான் தமிழகம் செழிக்கும். பாசனத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இலங்கை, தமிழர்கள் பிரச்சினை. நாம் நிறைய பேசிக்கொண்டு இருக்கிறோம். மாமன்றத்தில் பேசுகிறோம். இதில்

2011 ஜனவரி 13] [திரு. ஜி.கே. மணி]

எந்தவித உள்நோக்கமும் இல்லை. இன்னும்கூட, இந்த இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கின்றது. இது முடிவுக்கு வரவேண்டும் என்று சொன்னால், ஒட்டுமொத்தமாகத் தமிழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னும் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்குத் தீர்வு காண வேண்டும். தமிழர்கள் உரிமைக்காகப் போராடி, இருந்த உரிமையும் மறுக்கப்பட்டு, உயிரையும், உடைமையையும் இழந்து, இன்று நிர்கதியாகத் நடுத்தெருவில் அனாதையாக நிற்கின்ற அளவிற்குத் தமிழர்கள் தள்ளப்பட்டது, ஒட்டுமொத்த தமிழினத்திற்கே தலைகுனிவு. ஆன காரணத்தினாலே, இதனை விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

அதைப்போல, நெசவுத் தொழில். இன்றைக்குத் திருப்பூர், ஈரோடு, கோவை, மதுரை, சேலம், விருதுநகர், காஞ்சிபுரம் போன்ற மாவட்டங்களில் நெசவுத் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றது. அங்கே முதலீட்டாளர்கள் தொழிலையே முடக்கிவிட்டார்கள். தொழில் பாதிக்கப்பட்டு நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். தொழிலாளர்கள் வேலை இழந்து நிற்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், பருத்தி ஏற்றுமதி என்று சொல்லப்படுகிறது. அதனால், பருத்தி ஏற்றுமதிக்குத் தடை விதிப்பதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். தொடர்பு கொண்டு பேசிக்கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டும் இருக்கிறார்கள். ஆன காரணத்தினாலே, இந்தப் பருத்தி ஏற்றுமதிக்குத் தடை விதிக்க நம்முடைய முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

திரு. ஜி.கே. மணி: திருப்பூர், ஈரோடு, கோவை மாவட்டங்களில் சாயக் கழிவுகளை வெளியேற்றுவதற்குப் பெருந்திட்டம் தீட்டப்பட்டு, அது நிலுவையில் இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, வேலூர் மாவட்டத்திலேயும் தோல் தொழில் கழிவுகளைச் சுத்திகரிப்பதற்கு மத்திய, மாநில

[திரு. ஜி.கே. மணி] [2011 ஜனவரி 13

அரசுகள் நிதியோடு ஒரு பெரிய திட்டம்மூலம் பெரிய சுத்திகரிப்பு நிலையம் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உணவுக்கு வேலைத் திட்டம், 100 நாள் வேலைத் திட்டம். இன்றைக்கு நான் அதைக் குறை சொல்லவில்லை. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் சிறப்பாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். பாராட்டுகிறார்கள்; சான்றளித்திருக்கிறார்கள்; மகிழ்ச்சி. இருந்தாலும்கூட, அந்த வேலைத் திட்டத்தை நல்ல பணிக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படியானால், வேளாண்மைத் தொழிலுக்கு, விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். 100 நாள் வேலை, 200 நாளாக மாறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இதைப் பாசனத்திற்கு, வாய்க்காலை அகலப்படுத்துவதற்கு, தூர் வாருவதற்குப் போன்ற பல்வேறு வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குப் போக்குவரத்து மிகவும் பெருகியிருக்கிறது. நெரிசல் அதிகமாக இருக்கிறது. தொடர் வண்டிப் போக்குவரத்து பெருகியிருக்கிறது. சென்னையில் மத்திய தொடர் வண்டி நிலையம், Central, இரண்டாவது, எழும்பூரில் தொடர் வண்டி நிலையம். அங்கே நிறைய வண்டிகள் நிற்கின்றன; முடியவில்லை என்று சொல்கிறார்கள். மூன்றாவது முனையம் தாம்பரத்திற்கு மாற்றப்படுவதற்காகப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. நான் தமிழக அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன், தென் மாவட்டங்களுக்குச் செல்லக்கூடிய மக்கள் இங்கிருந்து வண்டியைப் பிடித்து தாம்பரம் சென்று, தொடர் வண்டி ஏறி, தென் மாவட்டங்களுக்குச் செல்ல இருக்கிற காரணத்தினால், சென்னையில் இருக்கிற இன்னும் தகுதி வாய்ந்த, இடம் காலியாக இருக்கிற, எல்லா வகையிலும் ஏற்புடையதாக இருக்கிற இராயபுரம் தொடர் வண்டி நிலையத்தை மூன்றாவது முனையமாக உருவாக்குவதற்கு தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, வீட்டு வசதிக் கடன். நம்முடைய முதலமைச்சரும் நிறைய செய்துகொண்டிருக்கிறார்கள். வீட்டு வசதிக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும். பண்ணைசாராக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும். எல்லாத் துறைகளிலும், பொதுப் பணித் துறை,

2011 ஜனவரி 13] [திரு. ஜி.கே. மணி]

நெடுஞ்சாலைத் துறை, கல்வித் துறை, சமூக நலத் துறை, வருவாய்த் துறை என்று பல்வேறு துறைகளிலே தற்காலிகப் பணியாளர்கள் 10 ஆண்டுகளாக, 15 ஆண்டுகளாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். 240 நாட்கள் வேலை செய்தால் பணி நிரந்தரம் என்று சொல்கிறோம். இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு அதை நிறைவேற்ற வேண்டும் என்று நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல, என்னுடைய தொகுதிப் பிரச்சினை; என்னுடைய தொகுதிக்கு மேட்டூர் பகுதியிலே ஒரு பொறியியல் கல்லூரி வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்த நேரத்தில், அடுத்த ஆண்டு கட்டாயம் வழங்குவேன் என்று சொன்னார்கள். ஆகையால் நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன், இந்த 2011-ஆம் ஆண்டில் மேட்டூரில் பொறியியல் கல்லூரி தொடங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மேட்டூர் அணை, மேட்டூர் தொகுதியில் இருக்கிறது. பாசனத்திற்குப் பயன்படவில்லை. மழைக் காலங்களில் உபரி நீர் வீணாகக் கடலுக்குப் போகிறது. அதையெல்லாம் பாசனத்திற்குப் பயன்படுத்துவதற்கு நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும். சரபங்கா, தாமிரபரணிக்கு ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள்; வரவேற்கிறோம். அதைப்போலவே, மேட்டூர் அணை நீரை, சேலம், நாமக்கல் மாவட்டங்களில் பயன்படுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். குளத்தூர் ஒன்றியப் பகுதிக்குப் பாசனம் இல்லை. அதற்குத் தோணிமடுவுத் திட்டம் என்று இருக்கிறது. வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். வனத் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு வந்தார்கள். ஏற்கெனவே, 25 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட அந்தப் பழைய திட்டத்தைத் திருத்தி ஒன்றியம் முழுவதும் பாசனம் பெறக்கூடிய தோணிமடுவுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

பாரமலை சாலை வசதி; அதை நிறைவேற்றித் தர வேண்டும். மேட்டூர் நகராட்சிக்குப் புதிய நவீன சுத்திகரிப்பு நிலையம் இல்லை.

[திரு. ஜி.கே. மணி] [2011 ஜனவரி 13

தமிழ்நாடு முழுவதும் குடிநீருக்கு நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு, காவிரி, மேட்டூர் தண்ணீர் போகிறது; மேட்டூரில் இல்லை. நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சியால், நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஆரம்பத்திலேயே ரூ.12.4 கோடி வழங்கினார்கள்; அறிவித்தார்கள். ஆனால், இன்றுவரை அந்தப் பணி நடக்கவில்லை. ஒப்பந்தம் போட்டு அப்படியே இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குளத்தூர் ஒன்றியப் பகுதி, கோனூர் கிராமம், வீரக்கல் புதூர் பேரூராட்சி இவற்றுக்கெல்லாம் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

ஒரு நாள் நள்ளிரவில், நான் பெருமையோடு சொல்கிறேன், நள்ளிரவு 12–00 மணி, நான் மாண்புமிகு துணை முதலமைச்சரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மேட்டூருக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம் வேண்டும் என்று கேட்டேன். 12–00 மணிக்குக் கேட்டேன். அடுத்த நாள் காலையில் உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சி, நகராட்சி நிருவாகம் மானியக் கோரிக்கையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. பாதாளச் சாக்கடைத் திட்டம் மேட்டூருக்கு அறிவிக்கப்பட்டது. இன்றுவரையிலும் நிலுவையில் இருக்கிறது. அதையெல்லாம் நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் எத்தனை நிமிடங்கள் ஆகும்? சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. ஜி.கே. மணி: அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகரத்தினுடைய விரிவாக்கம். சென்னை மாநகரம் விரிவாக்கப்பட வேண்டும். மாற்றுக் கருத்து இல்லை. மக்கள்தொகை அதிகமாக இருக்கிறது. இப்பொழுது 155 மாமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவ்வளவு பேர் இருந்தும்கூட, இன்னும் சாலை வசதி, சுகாதார வசதி, துப்புரவுப் பணிகளெல்லாம் நடக்காமல் இருக்கின்றன. தனியாரிடம் விட்டும்கூட நடக்கவில்லை. இப்போது மேலும் விரிவாக்கப்படும் என்று சொல்லி, இன்னும் பல நகராட்சிகளையும்,

2011 ஜனவரி 13] [திரு. ஜி.கே. மணி]

பேரூராட்சிகளையும் இணைப்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகையினால், புதிய மாநகராட்சிகளை உருவாக்கிட வேண்டும். சென்னை மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சி, அம்பத்தூர் மாநகராட்சி என்று மேலும் மாநகராட்சிகளை உருவாக்கி, உள்ளாட்சிப் பிரதிநிதிகளை அதிகமாக்கலாம். அதிகாரம் குவிவதைவிட, அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும், அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதுபோன்று நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன.

கோயம்பேடு வணிக வளாகம், 1996-ஆம் ஆண்டு திறக்கப்பட்ட நேரத்தில், முதலமைச்சர் அவர்களால் அந்த வணிகப் பெருமக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதாக அறிவிக்கப்பட்டது. அவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனையும் நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று. சாலை விபத்து. சாலை விபத்துகளைத் தவிர்க்க வாகனங்களில் தலைப்பு விளக்கு (head lamp) என்று இருக்கும். அதற்குக் கருப்பு மை பூசப்பட்டிருக்கும். அது இப்போது இல்லை. எதிர்வரும் வாகனங்களைப் பார்க்கும்போது கண்கள் கூசுகின்றன. அது விபத்துகளுக்குக் காரணமாக இருக்கின்றது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த விளக்குகளில், பாதியளவு கருப்பு வண்ணம் பூசுங்கள். கண்கள் கூசாமல் இருக்கும்; அது விபத்தையும் தடுக்கும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பெரிய மாவட்டங்களைப் பிரித்தல். வேலூர் மாவட்டத்தில் 13 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. அது பெரிய தொகுதி. விழுப்புரம் மாவட்டத்தில் 11 தொகுதிகள் உள்ளன. இதுபோன்று, தமிழ்நாட்டிலுள்ள பெரிய மாவட்டங்களையெல்லாம் இரண்டாகப் பிரித்து நிருவாக வசதிக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டுமொத்தமாக, இந்த ஆளுநர் உரையில் பல்வேறு அறிவிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பதைப்போல, வரக்கூடிய இடைக்கால நிதி நிலை அறிக்கையில், தமிழ்நாட்டின் தேவைக்கேற்ப, நான் குறிப்பிட்ட ஐந்து வகை புரட்சிகளைப்போல, பல்வேறு நல்ல

திட்டங்களை அறிவிக்க வேண்டுமென்று தமிழக அரசையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டு, நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். உங்களுக்கு 40 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டடுள்ளன Sir.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2011–2012-ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரையின்மீது நடக்கின்ற இந்த விவாதத்தில் கலந்துகொண்டு, எனது கருத்துகளைப் பதிய வைத்திட வாய்ப்பு தந்த, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கும், தங்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாக்களித்தவர்களின் கைகளில் இருக்கின்ற மை காய்வதற்குள்ளேயே வாக்காளர்களை மறந்து விடுகின்ற அரசியல்வாதிகள் மலிந்திருக்கின்ற இந்த நாட்டில், தேர்தல் அறிக்கையில் கொடுத்த கடைசி வாக்குறுதியைக்கூட நிறைவேற்றிவிட்டு, இன்னும் அதிகமான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காகக் காத்திருக்கின்ற ஒரு நல்ல முதலமைச்சர் அமர்ந்திருக்கின்ற இந்த அவையிலே (மேசையைத் தட்டும் ஒலி) அவரது நல்ல சிரிய திட்டங்களுக்கு, செயல்களுக்குத் துணையாக இருந்தோம் என்கிற பெருமையில், நாங்களும் வாக்காளர்களுக்குத் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி முடித்துவிட்டு, தேர்தல் களத்திற்குச் செல்லுகின்றபோது, வாக்காளர்களை நம்பிக்கையோடும், உண்மையோடும் சந்திக்கச் செல்கின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த தமிழக அரசுக்கு நான் உண்மையிலேயே நன்றி சொல்லக் கடமைப்பட்டவன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாபெரும் தலைவர்கள் ஓய்வு எடுப்பதில்லை. சாய்வு நாற்காலியில் ஓய்வு எடுக்காத அவர்கள், தங்கள் பணிகளிலேயே ஓய்வு எடுக்கிறார்கள். கனவுகளோடு தூங்கப் போகிறார்கள். முடிவுகளோடு எழுந்து வருகிறார்கள். திட்டங்களைத் தீட்டுகின்ற உறுதியோடு நடக்கிறார்கள் என்று சொல்வார்கள். "The great leaders, they don't take rest on armed chairs. They take rest on the deeds and they go to sleep with dreams and get up with decisions and they walk with determination" என்று சொல்கின்ற அந்த அற்புதமான வரிகளுக்கேற்ப, ஓய்வே எடுக்காமல் பணிகளுக்கிடையே

2011 ஜனவரி 13] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

ஓய்வு தேடிக்கொண்டு, தினசரி இரவுகளிலும் தூங்கப் போகின்றபோது கனவுகளோடு தூங்கச் சென்று, காலையில் எழுந்திருக்கின்றபொழுது முடிவுகளோடு எழுந்து, திட்டங்களோடு, உறுதியாக இந்த ஆட்சிக் காலத்தின் ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு திட்டத்தின்மூலம் தமிழகம் முழுவதும் பயனுள்ள தமிழகமாக ஆக்கித் தந்த நம்முடைய தமிழக அரசுக்கும், அதனுடைய தலைவராக இருக்கின்ற நம்முடைய தமிழக முதலமைச்சருக்கும், அதற்குத் துணை நிற்கின்ற நம்முடைய தமிழகத் துணை முதலமைச்சருக்கும், நம்முடைய பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், இந்தச் செயல் திட்டங்களை, சிறுபான்மை, சிறுபான்மை என்று 4½ ஆண்டுகள் சொல்லியும், 5 ஆண்டுகளை நிறைவேற்றப் போகின்ற அளவிலேகூட, அந்த வார்த்தைகளை விடாமல் சொல்லிக்கொண்டிருக்கின்றவர்களுக்கு, இது சிறுபான்மை அல்ல; இது உண்மையிலேயே பெரும்பான்மை என்று சொல்வதற்குக் காரணமாக இருந்த காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நாங்களும், நம்பிக்கையோடும், சந்தோஷத்தோடும் மகிழ்ச்சியோடும் பங்குபெறுகின்ற விவாதம், இந்த விவாதம்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய யுகத்தினுடைய துவக்கத்திலே நாம் இருக்கிறோம். 2010 லிருந்து 2020 வரை இந்த 10 ஆண்டுகள் உலகத்திற்கு மட்டுமல்ல; இந்தியாவிற்கு மிக முக்கியமான 10 ஆண்டுகள் என்று உலகத்தினுடைய பொருளாதார நிபுணர்கள் சர்வதேச அரசியலை உற்றுப் பார்க்கின்றவர்கள், புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகளை உண்டு பண்ணி, புரட்சிகரமான புதிய யுகத்தைப் படைக்க நினைக்கின்ற விஞ்ஞானிகள், வருகின்ற 10 ஆண்டுகளை மிக முக்கியமான ஆண்டுகளாகக் கருதுகிறார்கள். அதிலும் சீனா, இந்தியா இந்த இரண்டு நாடுகளை உற்றுப் பார்க்கின்றவர்கள், வரக்கூடிய 10 ஆண்டுகளில் உலகத்தினுடைய பொருளாதார இரயிலை இழுத்துச் செல்லுகின்ற என்ஜின்களாக இந்தியாவும், சீனாவும்தான் இருக்குமென்று கருதுகிறார்கள். இதிலே உலக வளர்ச்சியை நோக்கிப் பார்க்கின்ற நாடுகள், வளர்ந்துவிட்ட நாடுகள், சீனாவைவிட இந்தியாவை அதிக வாஞ்சையோடு பார்க்கின்றதன் காரணம், இன்று சீனாவில் இல்லாத ஜனநாயகம் இந்தியாவில் இருக்கின்ற காரணத்தினால். அதனால்தான் கடந்த ஒரு மாத

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2011 ஜனவரி 13

காலத்திற்குள்ளே உலகத்தினுடைய பேரரசுகளை ஆண்டு அடக்கிக்கொண்டிருக்கின்ற மிகப் பெரிய நாடுகளினுடைய தலைவர்கள், இந்தியாவை நோக்கி ஓடி வருகிறார்கள். அமெரிக்க அதிபர் வந்தார்; இரஷ்ய அதிபர் வந்தார்; சீன அதிபர் வந்தார்; பிரெஞ்சு அதிபர் வந்தார்; இன்று உலகத்தினுடைய நாடுகளிலே எங்கெல்லாம் வளர்ச்சியும், வாழ்க்கையும் இருக்கிறதோ அங்குள்ளவர்களெல்லாம் இன்று இந்தியாவோடு கைகுலுக்க நினைக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், இன்று மத்தியிலே இருக்கின்ற அன்னை சோனியா காந்தியினுடைய தலைமையிலே வழிகாட்டப்படுகின்ற டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலான அரசு, அதற்கு டாக்டர் கலைஞரைப் போன்ற தலைவர்கள் தருகின்ற தார்மீக ஆதரவு, அதற்கான ஆலோசனை, இவற்றையெல்லாம் உள் வாங்கிக்கொண்டு இன்று ஒரு மிகப் பெரிய Super power என்று அழைக்கப்படக்கூடிய அளவிலே இந்தியாவின் தரம் உயர்ந்திருக்கிறது. இந்த வளர்ச்சினுடைய பாதையிலே பல்வேறு பக்க விளைவுகள் இந்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு, என்ன ஆகுமென்று சொல்லுகின்றார்கள் என்று சொன்னால், உலகத்தினுடைய கோடீஸ்வரர்களிலே புதிய கோடீஸ்வரர்களாக இந்தியர்கள்தான் இருப்பார்கள் என்று சொல்லுகிறார்கள். உலகத்தினுடைய பல்கலைக்கழகங்களிலே பயிற்றுவிக்கின்ற பேராசியர்களில் பெரும்பாலோர் இந்தியர்களாக இருப்பார்கள் என்று சொல்லுகின்றார்கள். உலகத்தினுடைய மருத்துவமனைகளில் இருக்கின்ற மிகப் பெரிய மருத்துவ நிபுணர்கள் இந்தியர்களாக இருப்பார்கள் என்று சொல்லுகின்றார்கள். அது ஒருபுறம். ஆனால், உலகிலே புதிய பணக்காரர்கள் இந்தியாவை உருவாக்கித் தருகின்ற நேரத்திலே மிகப் பெரிய ஏழைகள் வாழ்கின்ற நாடாக இந்தியாதான் இருக்குமென்று கணித்திருக்கிறார்கள். உலகினுடைய மிகப் பெரிய மருத்துவர்கள் இந்தியர்களாக இருக்கின்ற அதேநேரத்திலே மருத்துவ வசதிகள்கூட இல்லாத இந்தியர்கள் அநேகம்பேர் இருப்பார்கள் என்று கணித்திருக்கிறார்கள். உலகத்தினுடைய பட்டதாரிகள், தொழில் நிபுணர்கள் இந்தியர்களாக இருக்கையிலே, படிப்பதற்கே வசதியற்றவர்கள் இந்தியர்களாக இருப்பார்கள் என்று எழுதியிருக்கின்றார்கள். There will be two different Indias—இந்த 10 ஆண்டுகள் முடிகின்றபோது, இரண்டு இந்தியா இருக்கும். ஒன்று, பணக்காரர்கள், படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், அதிகாரத்திலே செல்வாக்கு

2011 ஜனவரி 13] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

மிக்கவர்கள். மற்றவர்கள், இந்த வாய்ப்புகளை இழந்தவர்கள்; இந்த வாய்ப்புகளை எட்டிப் பிடிக்க முடியாதவர்கள்.

என் அருமைக்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற நம்முடைய கம்யூனிஸ்டு கட்சித் தோழர்களுக்கு நான் சொல்வேன். அவர்கள் கேட்கிறார்கள், இன்னும் சில பேர் கேட்கிறார்கள். ஏன் இலவசம் என்று கேட்கிறார்களே, அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் சொன்னாரே, ஏழைகள் இருக்கிறவரை இலவசம் இருக்குமென்று. இந்த இரண்டு இந்தியாவையும் இணைப்பதற்காக ஒரு தொலைநோக்குப் பார்வை உள்ள தலைவன் கண்டுபிடித்த தத்துவம்தான் அந்த ஏழைகளுக்கான இலவசம். என் சகோதரி பாலபாரதிகூட ஒரு பத்திரிகையிலே பேட்டி கொடுத்திருந்தார். 'ஜனசக்தி' பத்திரிகை என்று நினைக்கிறேன்; அந்தப் பத்திரிகையிலே அவர் சொல்லியிருந்தார். 21 இலட்சம் வீடுகள் கட்டுவேன் என்று சொல்லுகிறார்களே, ஆட்சிக்கு வந்தால்தானே கட்டுவார்கள் என்று கேட்டிருக்கிறார். நீங்கள் இந்தப் பேட்டியை ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரங்களிலும் போய் கொடுக்க வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செல்வி பாலபாரதி, அவர் பேசி முடித்து விடட்டும் அம்மா! அவர் ஏதோ சொல்ல வருகிறார். அது பாதியிலே இருக்கிறது. நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அந்த sentence பாதியிலே இருக்கிறது. நான் வாய்ப்புத் தருகிறேன் அம்மா! திரு. பீட்டர், நீங்கள் continue பண்ணுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: அவர்கள் ஆட்சிக்கு வந்தால்தானே கட்டுவார்கள் என்று நீங்கள் கேட்டிருக்கின்றீர்கள். அதைத்தான் நாங்களும் சொல்லுகின்றோம். நாங்கள் வைத்திருக்கின்ற இந்தக் கூட்டணி வெற்றிபெற்றால்தான் தமிழகத்திலே இருக்கின்ற குடிசை வீடுகள் concrete வீடுகளாக மாறும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே இருக்கின்ற, குடிசை வீடுகளிலே இருக்கின்ற சமையல் அடுப்புகள் எல்லாம், எரிவாயு அடுப்புகளாக மாறும். இந்த ஆட்சி நடந்தால்தான், தொடர்ந்தால்தான் முதல் பட்டதாரிகளுக்கெல்லாம் இலவசமான மேல்நிலைக் கல்வி, முதுகலைக் கல்வி கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சி தொடர்ந்தால் விவசாயிகளுக்கு

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2011 ஜனவரி 13

வட்டியில்லாக் கடன் கிடைக்கும். ஆகவேதான், நீங்கள் இப்படிச் சொல்லச் சொல்ல, இப்படி எங்களை விமர்சனம் செய்யச் செய்ய, வாக்காளர்கள் விழித்துக்கொள்கிறார்கள் என்பதை நீங்கள் தயவுசெய்து பார்க்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஜனசக்தி'யில் நான் பேட்டி கொடுத்ததாக அவர் சொல்கிறார். அவர் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர். 'ஜனசக்தி'யைப் பார்ப்பதற்கு வாய்ப்பேயில்லை. பார்த்திருந்தால், நான் கொடுக்காத பேட்டியை எப்படிக் கொடுத்ததாகச் சொல்கிறார்? ஆகவே, காங்கிரஸ் கட்சிக்கு என்று ஒரு சொந்த பத்திரிகை கிடையாது. கம்யூனிஸ்டு கட்சிகளுக்காவது 'ஜனசக்தி', 'தீக்கதிர்' இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 'முரசொலி' இருக்கிறது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 'நமது எம்.ஜி.ஆர்.' இருக்கிறது, பாட்டாளி மக்கள் கட்சிக்கும் இருக்கிறது. இவ்வளவு பெரிய காங்கிரஸ் கட்சிக்குச் சொந்தப் பத்திரிகை கிடையாது என்பதால், 'ஜனசக்தி'யைப் பார்க்காமலேயே பேட்டிக் கொடுத்ததாகச் சொல்கிறார், அது உண்மைக்கு புறம்பானது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஜனசக்தி' பேப்பரில் அவர்கள் சொன்னது அப்படியே வந்திருக்கிறது. அதைத்தான் நான் பேசும்போது சொன்னேன். அந்த பேப்பரைக் காட்டினால் அவர் மறுப்பதற்குத் தயாராக இருக்கிறாரா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஜனசக்தி'யில் நேற்று பேசியதைக்கூட

2011 ஜனவரி 13] [செல்வி கே. பாலாபாரதி]

இன்றைக்குப் போடவில்லை. 'ஜனசக்தி'யில் வந்த உண்மைக்கு மாறான ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டு, அதை உண்மையாகக் காட்டுவதுதான் காங்கிரஸ் கட்சியினுடைய நிலைமையாக இருக்கிறது. அதனால்தான் நாம் தமிழக மக்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறோம். இலவச திட்டத்தை மத்திய காங்கிரஸ் அரசு எங்கே கொடுத்தது? அவர்கள் ஆட்சியில் இருக்கக்கூடிய எந்த மாநிலத்திலாவது கொடுத்தார்களா? வேறு ஒரு மாநில அரசு, தமிழக அரசு கொடுக்கிறது என்றால் அதைச் சொல்லியே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சகோதரி பாலபாரதிக்கு ஏற்பட்டிருக்கின்ற பதற்றத்தின் பின்னணியை நான் புரிந்துகொள்கிறேன். நாம் எல்லோரும் பெண் வைத்திருந்தால், மாப்பிள்ளையை நிச்சயித்துவிட்டு திருமண மண்டபத்தைப் பார்ப்போம். மாப்பிள்ளை வைத்திருந்தால் பெண்ணைப் பார்த்துவிட்டு திருமண மண்டபம் பார்ப்போம். ஆனால், அவர்கள் திருமண மண்டபத்தைத் தயார் செய்து வைத்துக்கொண்டு மாப்பிள்ளையையும், பெண்ணையும் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

சகோதரி பாலபாரதி அவர்கள் பேசிய பேச்சு, 'ஜனசக்தி' பத்திரிகையிலே வந்திருக்கிறது. நானும், என் அருமை நண்பர் டாக்டர் இராமன் அவர்களும்தான் அதைப் படித்தோம். வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு அந்தப் பத்திரிகையினுடைய நகலை அனுப்பி வைக்கிறேன். சகோதரி பாலபாரதி அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்வேன். காங்கிரஸ்காரர்கள் பத்திரிகையைப் படிப்பதில்லை என்கிற ஒரு தவறான கருத்தை நீங்கள் கொண்டிருக்க வேண்டாம். நாங்கள் 'தீக்கதிர்' படிக்கிறோம்; 'ஜனசக்தி' படிக்கிறோம், 'முரசொலி' படிக்கிறோம்; ஏன்; நமது 'எம்.ஜி.ஆர்.'கூட படிக்கிறோம்; ஏன்; என்று சொன்னால், இந்த நாட்டிலே எங்கே என்ன அரசியல் நடக்கிறது என்று பார்க்கக்கூடிய மிகப் பெரிய பொறுப்பை காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், சகோதரி பாலபாரதி அவர்கள் பேசிய பேச்சு 'ஜனசக்தி'யில் வந்திருப்பதாகச் சொல்லி, அது 'ஜனசக்தி'யில் வரவில்லை என்று அவர் மறுத்து, அந்த நிலையில் இந்த அவை நடந்து கொண்டிருக்கிறது. பத்திரிகையில் வந்திருக்கிறதோ, வரவில்லையோ, நான் கேட்கிற கேள்வி, அவர் பேசியது உண்மையா? இல்லையா? அதைத்தான் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது தேர்தலைச் சந்திக்கக்கூடிய இந்த நேரத்தில், எதிர்காலத்தில், அடுத்த ஆட்சி வருகிறபோது, அப்போது செய்ய வேண்டிய திட்டத்திற்கான டோக்கனை இப்போது ஏன் கொடுக்க வேண்டும்? இடையிலே ஒரு தேர்தலைச் சந்திக்க இருக்கிறோம். தேர்தலில் மக்கள் வாக்களிக்க இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது முன்னாலேயே டோக்கன் கொடுப்பது என்பது. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக மீண்டும் 2011 இல் இந்த ஆட்சிதான் வரும் என்ற அந்த நம்பிக்கையோடு அந்த அறிவிப்பைத் தந்திருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் மிகச் சாதுரியமாகப் போட வேண்டிய கேள்வியைக் போட்டு, வாங்க வேண்டிய பதிலை வாங்கியிருக்கிறார்கள். இந்த அடையாள அட்டை கொடுக்கப்பட வேண்டுமென்கிற கோரிக்கையை வைத்ததே நான் என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். ஏன் என்று சொன்னால், இன்றைக்குத் தமிழகமெங்கும் 28 இலட்சம் குடிசைகள், இன்று பேரூராட்சிகளுக்கு அவற்றை வழங்குவதாக

2011 ஜனவரி 13] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

நம்முடைய ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நகர்மன்றங்களிலே வழங்குவதாக ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. பெருநகரங்களிலே, மாநகராட்சிகளிலே வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எங்களுக்கு அந்தத் தைரியம் இருக்கிறது. இன்று வாக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். மக்களுக்கு உறுதி கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

முற்பகல் 10—50

எங்களுக்கு, எங்கள்மேல் நம்பிக்கை இருக்கின்ற காரணத்தினால், அந்த உறுதியைக் கொடுக்க நாங்கள் பயப்படவில்லை. நான் தெளிவாகச் சொல்கிறேன். தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஏறக்குறைய 40 இலட்சம் குடிசைகளிலே வாழப் போகிற மக்களுக்கு இன்று இந்தக் கூட்டணியின் சார்பாக, இந்தக் கூட்டணியின் தலைவராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களின் சார்பாக, தமிழக அரசின் சார்பாகச் சொல்லுகிறோம். வரக்கூடிய தேர்தலிலே, இந்தக் கூட்டணி வெற்றி பெற்றால், 45 இலட்சம் ஏழை மக்களும் புதிய concrete வீடுகளைப் பெறுவார்கள். அதை நீங்கள் மறுக்க முடியுமா? அதைத் தர முடியாது என்று நீங்கள் சொல்ல முடியுமா? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேண்டாமென்று நான் சொல்லவில்லை. 40 இலட்சம் வீடுகள் கட்டித் தருவோம் என்றும் அதை மறுக்க முடியுமா என்றும் கேட்கிறார். கட்டித் தருவதை வேண்டாமென்று சொல்லுகிற அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல நாங்கள். 21 இலட்சம் வீடுகள் கட்டுகிறபோதே பட்டா இல்லாதவர்களுக்கும் மூன்று விதமான அடையாள அட்டை கொடுக்கிறீர்களே, அப்போது பட்டாவை எப்போது கொடுக்கப் போகிறீர்கள் என்ற கேள்விக்கு இதுவரையிலும் பதில் இல்லை. அதைத் தாண்டி இன்னும் கூடுதலாக 20 இலட்சம் கொடுக்கப் போகிறோம் என்று சொல்கிறீர்களே! இந்த அடையாள அட்டையைக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான்தான் முன்வைத்தேன் என்று அவர் சொன்னார் பாருங்கள்; இந்தமாதிரி தவறான யோசனையை சொல்வதுதான் காங்கிரஸ் கட்சியின் வேலையாக இருக்கிறதே தவிர, ஆட்சிக்கு உதவி செய்வதாக இல்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று தெளிவாக என்னுடைய விளக்கத்திலே சொல்லியிருக்கிறேன். பட்டாவும் கொடுத்து, வீடும் வழங்கியிருக்கிறோம். சமீபத்திலேகூட, காஞ்சிபுரம் மாவட்டத்திலே 8 ஆயிரம் வீடுகளுக்குப் புதிதாக பட்டா கொடுத்து, வீடு வழங்குவதற்கும் அடையாள அட்டை கொடுத்த ஆட்சி, தலைவர் கலைஞர் ஆட்சி என்பதை நான் கோடிட்டுக் காட்டுகிறேன். நீங்கள் கேட்பது குளத்தில் இருக்கிற வீடுகளுக்கும், வாய்க்காலில் இருக்கிற வீடுகளுக்கும் பட்டா கேட்கிறீர்கள். இதற்கு உச்ச நீதிமன்றத்தின் தடை ஆணை இருக்கிறது. நீங்கள் கோயில் நிலத்திற்குப் பட்டா கொடுங்கள் என்று கேட்கிறீர்கள். நீங்கள் போன வருடம் கேட்டீர்கள். 3 இலட்சம் வீடுகளுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்று சொன்னீர்கள். ஆனால், இதுவரை எட்டரை இலட்சம் வீடுகளுக்குப் பட்டா கொடுத்த ஆட்சி தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிதான். நீங்கள் அதை மறுக்கிறீர்களா? இதுவரை 8 இலட்சத்து 17 ஆயிரம் வீடுகளுக்குப் பட்டா கொடுத்திருக்கிறோம். நீங்கள் 3 இலட்சம்தான் கேட்டீர்கள். அதை நீங்கள் மறுக்கிறீர்களா? சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர் பீட்டர் அல்போன்ஸ் (குறுக்கீடுகள்) Sir, time factor is important பட்டா கொடுத்தாகிவிட்டது. அதன்பேரில் அடையாள அட்டையும் கொடுத்தாகிவிட்டது என்று சொல்கிறார்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நண்பர் திரு. சிவபுண்ணியம் அவர்கள், கும்பகோணத்திற்கு வழி கேட்டால், கொட்டைப் பாக்கு என்ன விலை என்று கேட்கக்கூடாது. போகாத ஊருக்கு வழி சொல்லியே பழக்கப்பட்டவர்கள் நீங்கள். இன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. அரசினுடைய உறுதிமொழிக் குழுவின் தலைவர் என்கிற முறையிலே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நாங்கள் சுற்றுப் பயணம் செய்கின்றபோது, கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழே கட்டப்படுகின்ற வீட்டை நாங்கள் தனியாகப் பார்வையிட்டோம். என்னுடைய குழுவிலே

2011 ஜனவரி 13] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

உறுப்பினர்களாக இருக்கின்ற உங்கள் கட்சி உறுப்பினர்களைக் கேட்டுப் பாருங்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

நேற்றுகூட, நம்முடைய இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர், நான் மிகவும் அதிகமாக, மிக மரியாதையாக மதிக்கின்ற, அப்பழுக்கற்ற பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரான தலைவர் நல்லகண்ணு அவர்கள் பேசியிருக்கிறார்கள். நான் மணல் அள்ள வேண்டாமென்று சொன்னேனேயொழிய, கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்கு மணல் கொடுக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை என்று சொல்லியிருக்கிறார். என்ன அர்த்தம்? கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. சில இடங்களிலே பட்டா இல்லாமல் இருக்கலாம். இருக்கின்ற இடங்களுக்கு எப்படிப் பட்டா கொடுப்பது என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். நடக்கின்ற பணிகள் இல்லையென்று சொல்கிறீர்களா? இந்த ஒரு வருடத்திலே 3 இலட்சம் வீடுகள் கட்டப்படவில்லை என்று சொல்கிறீர்களா? ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஆயிரம் வீடுகள், 8 ஆயிரம் வீடுகள், 7 ஆயிரம் வீடுகள் கட்டப்படவில்லை என்பதை நீங்கள் உண்மையிலேயே இல்லையென்று சொன்னால், நீங்கள் சொல்கிற வார்த்தைகளுக்கு நான் வருத்தப்படுகிறேன். முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள் மறைக்க நீங்கள் முயற்சிக்கிறீர்கள். (குறுக்கீடு)

நீங்கள்தான் சொன்னீர்கள். (குறுக்கீடுகள்) I am not yielding. நீங்கள்தான் கேட்டீர்கள். நீங்கள் முதலில் கேட்ட கேள்வி என்ன? நீங்கள் அடையாள அட்டை கொடுப்பதாகச் சொன்னீர்களே, இதுவரை வீடுகள் கட்டவில்லை; இனி எப்படி 40 இலட்சம் வீடுகள் கட்டப் போகிறீர்கள் என்று கேட்டீர்கள். நான் அதற்காகத்தான் பதில் சொன்னேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்த பிறகு பேசச் சொல்லுங்கள். I am not yielding. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே மிக அதிகமாக. . . (குறுக்கீடு)

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

[2011 ஜனவரி 13

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிசை வீடுகளுக்குப் பதிலாக concrete வீடுகள் கட்டித் தருவது என்ற திட்டம் அறிவிக்கப்பட்டு, 21 இலட்சம் வீடுகளும் கட்டித் தரப்படும் என்று சொன்னபோது, இந்த ஓராண்டிலேயா கட்டப் போகிறீர்கள் என்று கேட்டதற்கு, பதிலாக அடுத்த முறையும் நாங்கள்தான் ஆட்சிக்கு வருவோம், கட்டுவோம் என்று ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டது. நம்முடைய உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் திரும்பத் திரும்ப பட்டா கொடுக்க வேண்டுமென்றும், நீங்கள் வீடு கட்டுவதாகச் சொன்னீர்களே பட்டா கொடுக்காமலா வீடு என்றும் கேட்கிறார். எந்தத் தேதியில் வீடு தரப்படுகிறதோ அந்தத் தேதிக்கு முதல் நாள் அந்தப் பட்டா அவர்களுக்கு உரிமையாகும். வீடு கட்டுவது அவர்கள் இருக்கிற அதே இடத்திலேயே என்பது திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்படவில்லை. காரணம், குடிசை இருக்கிற இடம், கட்டக்கூடிய இடமாக இருந்தால் அந்த இடத்தில் கட்டுவோம். அவர் காலி செய்ய முடியவில்லை, நீங்கள் வீடு கட்டுகிறவரை இங்கேதான் நாங்கள் இருப்போம் என்று சொன்னால், அங்கு இருக்க வைத்து, இன்னொரு இடத்திலே வீடு கட்டி, அந்த நிலத்தினுடைய பட்டாவையும் கொடுத்து, மறுநாள் வீடும் கொடுத்து, மூன்றாவது நாள் குத்து விளக்கு ஏற்றி வைப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) யாராவது ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, பேசுங்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூரை வீடு, காரை வீடானால் நல்லதுதான். ஆனால், அது இப்போது சாத்தியமா? செங்கல் லோடு ஒன்றிற்கு 6,000 ரூபாயிலிருந்து 21,000 ரூபாய் வரை விற்கிறது என்று நான் பேசியிருக்கிறேன். இதே சபையில் நேற்றுதான் பேசினேன். அதாவது, வீடு கட்டவில்லை என்று சொல்லவில்லை, கட்ட முடியவில்லை, இந்த விலை உயர்வால். சிமென்ட், செங்கல் எல்லாவற்றின் விலையும் உயர்ந்துவிட்டது. 75 ஆயிரம் ரூபாயில் கட்ட முடியவில்லை என்றுதான் மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியாகிய நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதைச் சரியாகக்கூட காதில் வாங்காமல், காங்கிரஸ் கட்சியினுடைய பாணியில் வீணான*

2011 ஜனவரி 13] [செல்வி கே. பாலபாரதி]

குற்றச்சாட்டை அவர் சுமத்துகிறார். ஆனால் அவருடைய நோக்கம் என்னவென்றால் ஓட்டுதான் நோக்கம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏழை மக்களுக்கான வீடு நோக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் 60 ஆயிரம் ரூபாய்க்கு வீடு என்று அறிவித்து, உங்களுடைய உறுப்பினர்தான் அதை உயர்த்த வேண்டுமென்று கேட்டு, 75 ஆயிரம் ரூபாய் உயர்த்தியிருக்கிறார்கள். வீடு கட்டுவதென்றால் 10 இலட்சம் ரூபாயிலும் கட்டலாம், 25 இலட்சம் ரூபாயிலும் கட்டலாம். கலைஞர் ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று எண்ணுகிறாரே தவிர, கலைஞர் கம்யூனிஸ்டுக்காரர்களுக்காக மட்டும் வீடு கட்டிக் கொடுப்பதாக எண்ணிவிடக் கூடாது. 75 ஆயிரம் ரூபாயில் இன்றைக்கு வீடு இல்லாதவன் எவ்வளவு பேர் இருக்கிறார்கள். 'சும்மா கொடுத்த மாட்டை, பல்லைப் பிடித்துப் பார்த்தார்கள்' என்று கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். அந்தமாதிரி கிராமத்தில் 'வீட்டைக் கட்டிப் பார், கல்யாணம் பண்ணிப் பார்' என்று சொல்வார்கள். வீட்டைக் கட்டுவதற்கும் பணம் 75 ஆயிரம் ரூபாய் கொடுக்கிற ஒரு முதலமைச்சர், கல்யாணம் பண்ணுவதற்கும் 25 ஆயிரம் ரூபாய் கொடுக்கிற ஒரே முதலமைச்சர், இந்தியாவிலேயே டாக்டர் கலைஞர் ஒருவர்தான். ஏழைகளுக்காக கம்யூனிஸ்டுக்காரர்கள் வடிக்கிற கண்ணீரைவிட, ஏழைகளின் உணர்வைப் புரிந்து கொண்டிருக்கிற முதலமைச்சர் டாக்டர் கலைஞர் என்பதை இந்த வீடு கட்டும் திட்டம் நிரூபித்திருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபொழுது, சும்மா கொடுக்கிற மாட்டை, பல்லைப் பிடித்துப் பதம் பார்க்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், அந்த வீட்டை நீங்கள் சும்மா கொடுக்கவில்லை. முதலில் 60 ஆயிரம் ரூபாய் என்று அறிவித்தீர்கள். பிறகு 15 ஆயிரம் ரூபாய்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2011 ஜனவரி 13

சேர்த்து 75 ஆயிரம் ரூபாய் என்று அறிவித்தீர்கள். இப்போது 20 ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்கப் போகிறீர்கள். இப்போது கடனை அவர்கள் தலையில் சுமத்துகிறீர்கள். சும்மா கொடுக்கின்றோம் என்று இனிமேல் நீங்கள் சொல்லக்கூடாது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 75 ஆயிரம் ரூபாய் வீடு கட்டுவதற்கு அவர்களுக்குக் கொடுக்கிறோம். அது போதவில்லை என்றால், செல்வி கே. பாலபாரதி போன்றவர்களுக்கு பெரிய வீடாக வேண்டும் என்றால், மேற்கொண்டு 20 ஆயிரம் ரூபாய் வங்கியில் அவர்களுக்கு 4 சதவீதம் குறைந்த வட்டியில் வாங்கிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம். ஆகையினாலே அவர்களும் கடனை Late-ஆகக் கட்டலாம். (குறுக்கீடு) ஆனால், ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். சும்மாதான் கொடுக்கிறோம். அவர்களிடம் நாங்கள் ஒன்றும் வாங்கவில்லை. சும்மாதான் கொடுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே அன்றைக்கு வாங்கிய கடனை திரும்பச் செலுத்தவில்லை என்று பொருள்படக் கூறுகிறாரா என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் 60 ஆயிரம் ரூபாய் என்றிருந்ததை, செங்கல் விலை ஏறியதன் காரணமாக 75 ஆயிரம் ரூபாயாக ஆக்கிக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஒரே ஊரில் பார்த்தால், கதவை சாதாரண மரம் போட்டு, 75 ஆயிரம் ரூபாயில் கட்டுகிறார்கள். அதேபோல், பக்கத்து வீட்டில் தேக்கு மரம் போட்டு அவர்கள் கட்டுகிறார்கள். தேக்கு மரம் போடுகிறபோது அவர்கள் 20 ஆயிரம் ரூபாய் வங்கியில் வட்டியில்லாமல்

2011 ஜனவரி 13] [திரு. எ.வ. வேலு]

வாங்கிக்கொள்கிறார்கள். இந்த வீட்டுக்காக அல்ல; அவனுடைய சௌகரியத்திற்காகக் கூடுதலாக வங்கியிலே பணம் வாங்குகிறானேயொழிய, இந்த 75 ஆயிரம் ரூபாயில் கட்டாயம் வீடுகள் கட்ட முடியும், கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது 3 இலட்சம் வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சகோதரி பாலபாரதி அவர்கள் பேசுகின்றபோது, காங்கிரஸ் கட்சியின்மீது ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள். 'உங்களுக்கு வாக்குகள்மேல்தான் கண், எங்களுக்கு ஏழைகள் மீது கண்' என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லுவேன், இந்திய ஜனநாயக நாட்டிலே, அரசியல் சாசனச் சட்டம் இருக்கின்ற நாட்டிலே ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைதி, அமைதி.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: இல்லையென்று சொல்லுங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) இல்லையென்று சொல்லுங்கள் நீங்கள். I am not yielding. இன்று நம்முடைய ... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. மகேந்திரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கே. மகேந்திரன், என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: சட்டம்—ஒழுங்குப் பிரச்சினையைப் பற்றி நேற்று சகோதரி பாலபாரதி அவர்கள் இந்த அவையிலே பேசினார்கள். (குறுக்கீடுகள்) மரியாதைக்குரிய (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படிக் குறுக்கீடுகள் நிறைய இருந்தால் பேச முடியாது. குறிப்பிட்ட நேரத்திலே முடிக்க முடியாது. (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

LEGISLATURE — TRUTH ALONE TRIUMPHS — வாய்மையே வெல்லும்

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: நான் இந்த அவையினுடைய விதிகளுக்கு மாறாகவோ அல்லது தவறான புள்ளிவிவரங்களைத் தந்தோ அனாவசியமாக இந்த மன்றத்திலே எதுவும் பேசவில்லை. *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேச வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை இருக்கிறது. *(குறுக்கீடுகள்)*

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: நான் பேசுவதில் ஏதாவது மறுப்பு சொல்ல வேண்டுமென்றால், சொல்லக்கூடியவர்கள் நான் பேசி முடித்த பிறகு அவர்கள் எழுந்து நின்று சொல்லலாம். நான் unparliamentary—யாகவோ அல்லது கூறக்கூடாத வார்த்தைகளையோ இந்த அவையில் பதிவு செய்யவில்லை. *(குறுக்கீடுகள்)* நீங்கள் சொன்ன வார்த்தைக்கு – *(குறுக்கீடுகள்)* நீங்கள் என்ன சொன்னீர்கள்? 'காங்கிரஸ் கட்சிக்கு வாக்குகளின்மீதுதான் கண், எங்களுக்கு ஏழைகளின்மீது கண்' என்று சொன்னீர்கள். ** அந்தக் கட்சியைச் சார்ந்த உங்களுக்கு இதைப் பற்றிப் பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது என்பதுதான் என்னுடைய கேள்வி. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செல்வி பாலபாரதி, அவர் பேசி முடிக்கட்டும். நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், please, உட்காருங்கள், *(குறுக்கீடுகள்)* திரு. பீட்டர் அல்போன்ஸ், உங்கள் உரையை continue செய்யுங்கள். *(குறுக்கீடுகள்)* செல்வி பாலபாரதி, நான் உங்களுக்குப் பிறகு வாய்ப்புத் தருகிறேன் அம்மா. *(குறுக்கீடுகள்)* நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். *(குறுக்கீடுகள்)*

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: நான் பேசி முடித்த பின்னர் நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் பேசி முடிக்கட்டும். அதன் பிறகு உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். *(குறுக்கீடுகள்)* திரு. கே. மகேந்திரன், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அனைவரும் உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2011 ஜனவரி 13]

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசுவதற்கு அவர்கள் ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி, நிற்கிறவர்களில் யாராவது ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நிற்கிறவர்களில் யாராவது ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து மற்றவர்களெல்லாம் உட்காருங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், இங்கே செல்வி பாலபாரதி குறிப்பிட்டதற்காக ** (குறுக்கீடுகள்) ஆனால், ஒரே ஒரு விஷயம் (குறுக்கீடுகள்) இதைச் சொல்லுகிற அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், (குறுக்கீடுகள்) இன்னும் ஒரு விஷயம், இதைச் சொல்கிற அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இல்லை, ** சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அதை அனுமதிக்க முடியாது. திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள். (குறுக்கீடுகள்) ** மேற்கோள் காட்டி உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசிய பேச்சையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) Sir, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பின்மீது எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், 'காங்கிரசுக்கு வாக்குகளின்மீது கண், எங்களுக்கு ஏழைகளின்மீது கண்' என்று செல்வி பாலபாரதி சொன்ன வார்த்தைகளையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். (குறுக்கீடுகள்) அப்படியானால் இதை ஏன் நீக்க வேண்டும்? (குறுக்கீடுகள்) அந்த வார்த்தைகளை நீக்குவதாக இருந்தால் நான் சொன்ன வார்த்தைகளையும் நீக்கலாம். அந்த வார்த்தைகளை நீக்கினால் நான் சொன்ன வார்த்தைகளையும் நீங்கள் நீக்கிவிடுங்கள். (குறுக்கீடுகள்) ஆனால் நான் அந்த வார்த்தைக்குப் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். காங்கிரஸ் கட்சியின்மீது

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

குற்றச்சாட்டு சொன்னால், அந்தக் குற்றச்சாட்டுக்கு நான் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். *(குறுக்கீடுகள்)* அதாவது நீங்கள் சொல்வதற்கு ஆதாரம் இல்லை. நான், சகோதரி பாலபாரதிக்கு இந்த 'சண்டே இந்தியன்' என்கின்ற பத்திரிகை, ** அதை வேண்டுமானால் அவர்களுடைய பார்வைக்கு நான் கொடுக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். அவர் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் எல்லோருமே எழுந்து நின்றால் எப்படி? உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நேற்று Deputy C.M. பேசியது, பொத்தாம் பொதுவான என்கின்ற ஒரு வார்த்தையைச் சொன்னார். நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை. நீங்கள் இதுமாதிரியெல்லாம் பேசக்கூடாது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அவர் பத்திரிகையை மேற்கோள் காட்டித்தான் பேசினார். Personal—ஆக ஒன்றும் சொல்லவில்லை. *(குறுக்கீடுகள்)*

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: நான் பத்திரிகையை மேற்கோள் காட்டவில்லை, நான் மேற்கோள் காட்டவில்லை. *(குறுக்கீடுகள்)* செய்தி வந்திருக்கிறது என்றுதான் சொன்னேன். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் அளித்த தீர்ப்பை நான் ஒத்துக்கொண்டேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் சொல்லி முடியுங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. செந்தமிழன் பேசுகின்றபோது பத்திரிகைக் குறிப்பை கையில் வைத்துக்கொண்டு அதை ஆதாரமாக வைத்துக்கொண்டுப் பேசக்கூடாது என்று நீங்கள் சொன்னீர்கள். இன்றைக்கு, அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் பேச்சுக்கு நியாயம் கற்பிக்கின்ற வகையில் அவர் பத்திரிகையை வைத்துக் கொண்டுதானே பேசினார் என்று நீங்களே சொல்கிறீர்கள். ஏதாவது ஒன்று சொல்லுங்கள்.

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2011 ஜனவரி 13]

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு நான் அதை எடுத்துச் சொன்னதற்குக் காரணம், ஒரு ஹேஷ்யமாக பத்திரிகையில் வந்திருக்கின்ற செய்தியை வைத்துப் பேசக் கூடாது என்பதற்காகச் சொன்னேன். ஆனால் அவர் பேசிய பேச்சே அந்தப் பத்திரிகையில் வந்திருக்கிறது. ** பேசிய பேச்சு பத்திரிகையில் வந்திருக்கிறது. அதைத்தான் அவர் மேற்கோள் காட்டிப் பேசுகிறாரே தவிர, வேறல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுவுடைமைத் தோழர்களைப் பற்றி நான் விமர்சிக்க விரும்பவில்லை. ஏனென்றால் அதற்கான தகுதியும் எனக்கில்லை. அவர்களைச் சரியாகக் கணித்தவர் முன்னாள் முதலமைச்சர் அவர்கள்தான். 'தகரம் கண்டுபிடிப்பதற்கு முன்னாலேயே உண்டியல் கண்டுபிடித்தவர்கள்' என்கின்ற ஒப்பற்ற உண்மையை இந்த நாட்டிற்குச் சொன்னவர். ஆகவே, நான் அதோடு நிறுத்திவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றைய முதலமைச்சர், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் இதே அவையில் கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களைப் பார்த்து, 'தகரம் கண்டுபிடித்தபோது அதில் உண்டியல் கண்டுபிடித்தவர்கள் இவர்கள்தான்' என்று சொல்லிப் பதிவாகியிருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், முன்னாள் முதலமைச்சர்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

செல்வி ஜெயலலிதா அவர்கள் இந்த அவையில் ... (குறுக்கீடுகள்) நான் சொல்வதை முதலில் கேளுங்கள். அவர் இந்த அவையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிகளைப் பற்றிச் சொன்ன ஒரு வரியைச் சொல்லியிருக்கிறார்கள். அவையிலே பதிவாகியிருக்கிறது. அன்றைக்கு இருந்த அதே பல உறுப்பினர்கள் இன்றைக்கும் உயிரோடு இந்த அவையிலே உட்கார்ந்திருக்கிறார்கள். அன்றைக்கு எழுந்து யாரும் முன்னாள் முதலமைச்சர் அவர்களைப் பார்த்து நீங்கள் சொன்னது தவறு என்றும் சொல்லவில்லை. Record–இல் பதிவாகியிருக்கிறது. அன்றைக்கு அச்சடித்த பதுமைகளாக உட்கார்ந்திருந்தார்கள். அம்மையார் பேசினார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? பேசவில்லை என்று சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) Quote பண்ணலாம். சபையிலே Quote பண்ணலாம்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: இதோடு முடித்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் நேராக பாயின்டுக்கு வாருங்கள். (குறுக்கீடுகள்) ஆளுநர் உரைக்கு வாருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், ஆளுநர் உரைக்கு வாருங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: இதோடு முடித்தாயிற்று. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சார், உட்காருங்கள். நான் அவையை நடத்தியாக வேண்டும். நேரத்தைப் பார்க்க வேண்டும். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

2011 ஜனவரி 13]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவை முன்னவர் பேசட்டும்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவை முன்னவர் பேசிய பிறகு யாராவது ஒருவருக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) எந்தச் சட்டமன்றமாக இருந்தாலும், பாராளுமன்றமாக இருந்தாலும் அந்தச் சட்டமன்றத்தில், பாராளுமன்றத்தில் யார் பேச அழைக்கப்படுகிறார்களோ, அவர்கள் அந்த நேரத்தில் அந்தச் சட்டமன்றத்தை they are holding the House என்று சொல்லப்படுகிற அளவுக்குச் சட்டமன்றத்தில் அவர் மட்டும்தான் பேச உரிமை பெற்றவராகப் பேசுகிறார். அப்படிப் பேசுகிற பேச்சில் கருத்து மாறுபாடு இருக்குமானால், குறுக்கிட்டுப் பேச உரிமை கிடையாது. ஆனால், பேசப்படுகிற பேச்சு முறை, தவறாக இருக்குமானால், point of order என்று எழுப்பி, இன்ன வார்த்தை தவறு, இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தலாமா; அவையிலே இப்படி ஒரு செய்தியைச் சொல்லலாமா என்று கேட்கலாமே தவிர, மறுத்து வாதம் செய்வதற்கு (குறுக்கீடுகள்) கேட்பதற்கு இது நேரமல்ல. (குறுக்கீடுகள்) ஏனென்றால், அந்த உறுப்பினர் பேசுகிற உரிமை அல்லது ஒரு கட்சித் தலைவர் பேசுகிற உரிமை என்ற முறையில் பேசுகிறபோது முழுவதும் குறுக்கிட்டு தங்களுடைய கருத்துகளை வாதம் செய்ய முடியாது. பேசுகிற பேச்சு தவறு என்றால், தவறு என்றுகூட சொல்லலாம். (குறுக்கீடுகள்) ஆனால், சொல்லி வாதம் செய்வதற்கு, இந்த அவையினுடைய நேரத்தை யாரும் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதை, அவையின் முறை என்பதற்காக நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம், அவர் பேச ஆரம்பித்ததிலிருந்தே நீங்கள் எத்தனை

தடவை எழுந்து குறுக்கீடு செய்திருக்கிறீர்கள் என்று பாருங்கள். (குறுக்கீடுகள்) பேரவை முன்னவர் சொன்னதுபோல ஒரு முறை எழுந்து ஒரு clarification கேட்கலாம். ஆனால், 40 நிமிடங்களும் நாங்கள்தான் குறுக்கீடு செய்வோம் என்று சொன்னால், பிறகு அவையை யாராலும் நடத்த முடியாது. (குறுக்கீடுகள்) நீங்களெல்லாம் senior members. நீங்கள் வழிகாட்டியாக இருக்க வேண்டும். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், ஆளுநர் உரைக்கு வாருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நம்முடைய சகோதரி பாலபாரதி அவர்கள் இங்கே பேசுகிறபோது இந்த அவையிலே நானும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவரும் (குறுக்கீடுகள்) அமைதியாக உட்கார்ந்து, மத்திய அரசின்மீது அவர்கள் சொல்லுகிற குற்றச்சாட்டை ... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் பேசி முடித்த பிறகு யாராவது ஒருவருக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாராவது ஒருவருக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: காங்கிரஸ் கட்சிமீது சொல்கின்ற குற்றச்சாட்டைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தோம். நாங்கள் எந்தவிதமான இடையூறும் செய்யவில்லை. (குறுக்கீடுகள்) நேற்றையதினம் அவர்கள் பேசுகிறபோது, அவர்கள் காங்கிரஸ் கட்சியைப் பற்றி என்ன சொன்னார்கள், மத்திய அரசு பற்றி என்ன சொன்னார்கள் என்பதெல்லாம் இந்த அவையிலே பதிவாகியிருக்கின்றது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் வாய்ப்புத் தருகிறேன். ஆனால், நீங்கள் கேட்கிற நேரத்தில் கொடுக்க வேண்டுமென்று Chair–க்கு dictate செய்யக்கூடாது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: நேற்றையதினம் நாங்கள் குறுக்கிட்டு எதுவும் பேசவில்லை. (குறுக்கீடுகள்) இன்று நான் பேசி முடித்த பிறகு சொல்லுங்கள் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன்.

2011 ஜனவரி 13]

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: இன்று நான் பேசி முடித்தபிறகு உங்களுக்கு ஏதாவது மாற்றுக் கருத்து இருக்குமென்றால் நீங்கள் எழுந்து சொல்வதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் ஏதாவது கண்ணியக் குறைவாகவோ, பாராளுமன்ற முறைகளுக்கு, விதிகளுக்கு எதிராகவோ பேசவில்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் எனக்கு வழங்கிய நேரத்தை முழுவதும் இதைப்போன்று வீண் வரட்டு வாதங்களிலே நான் செலவழிக்க விரும்பவில்லை. இந்த அவை மிகப் பொறுப்போடும், மிகக் கவனத்தோடும், மிகக் கரிசனத்தோடும் இலங்கைவாழ் தமிழர்களுடைய நிலையைப் பற்றி கடந்த நான்கு நாட்களாகப் பேசிய உறுப்பினர்களெல்லாம், பேசிய கட்சிகளெல்லாம், அவற்றினுடைய தலைவர்களெல்லாம் ...

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப் பகுதிக்கு வந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இல்லை. நீங்கள் மையப் பகுதிக்கு வராமல் இருக்கையில் இருந்தே பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* இரு கட்சியினரும் மையப் பகுதிக்கு வரவேண்டாம். *(குறுக்கீடுகள்)* Don't come to the Well. *(குறுக்கீடுகள்)* Don't come to the Well. உங்கள் இடத்திற்குப் போங்கள்.

முற்பகல் 11–15

Point of order என்பதனை ஒரு முறை கேட்கலாம். ஆனால், 40 நிமிடங்களாக குறுக்கீடு செய்வேன் என்று சொன்னால், அது சரியாக இருக்காது. *(குறுக்கீடுகள்)* ஆகையினால், நீங்கள் அனைவரும் தயவுசெய்து உங்களது இருக்கைக்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் அனைவரும் உங்களது இருக்கைக்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, 40 நிமிடங்களும் குறுக்கீடு செய்வீர்கள் என்று சொன்னால், இந்த அவையினை யாராலும் நடத்த முடியாது. *(குறுக்கீடுகள்)* நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பினைத் தர வேண்டும். *(குறுக்கீடுகள்)* நீங்கள் எல்லோரும் உங்களுடைய இருக்கைக்குப் போங்கள். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசி முடித்த பிறகு, உங்களுக்கு வாய்ப்புத் தருகின்றேன். *(குறுக்கீடுகள்)* உங்களைப் பேச அனுமதிக்கின்றேன். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசி முடித்த பிறகு,

உங்களுக்குப் பேச அனுமதியளிக்கின்றேன். (குறுக்கீடுகள்) நீங்கள் Chair person—ஐ நம்பாவிட்டால், பிறகு எப்படி? (குறுக்கீடுகள்) இல்லை, தயவுசெய்து நீங்கள் அனைவரும் உங்களது இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, முதலில் உங்களது இருக்கைக்குப் போய் அமருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்த பிறகு, உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இது நல்லதொரு நடைமுறை கிடையாது. (குறுக்கீடுகள்) ஒரு உறுப்பினர் இப்போதே பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று Chair person—ஐக் கட்டாயப்படுத்திட முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் எல்லோரும் உங்களது இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன் என்றுதான் சொல்கிறேன். உங்களுக்குப் பேச வாய்ப்புத் தரமாட்டேன் என்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

திரு. கே. மகேந்திரன்: துணைத் தலைவர் அவர்களே ...

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) திரு. கே. மகேந்திரன் ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மகேந்திரன், நீங்கள் எல்லாம் உங்களது இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) அவையை முறையாக நடத்த வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லையென்றால், உங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) உங்களது இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) Please go to your seat. (குறுக்கீடுகள்) Please resume your seat. (குறுக்கீடுகள்) நீங்கள் போய் அமருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். தங்களிடம் அனுமதி பெற்றுப் பேசுவதிலே யாருக்கும் எந்தவித மாறுபட்ட கருத்தும் கிடையாது. எனவே, இந்த இடத்திலே வந்து நின்றுகொண்டு எங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தால்தான் நாங்கள் இருக்கைக்குப் போவோம் என்று சொல்வது தவறு. முதலில் இந்த அவையினை நடத்துவதில் அவர்களுக்கு உடன்பாடு உண்டு என்றால், முதலில் அவர்கள் எல்லோரும் இருக்கைக்குப் போய்

2011 ஜனவரி 13] [திரு. துரைமுருகன்]

அமரட்டும். பிறகு, தாங்கள் அவர்களது கோரிக்கையினைக் கவனிக்கலாம். முதலில், அவர்கள் இருக்கையில் அமரட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள். (குறுக்கீடுகள்) முதலில், நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. என். நன்மாறன். (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் பேசுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பல அரசியல் விமர்சனங்களைச் செய்கிறார். எனக்கு அதில் ஒன்றும் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், அவர் பேசத் தொடங்கியதிலிருந்து, இப்போது அவர் இவ்வளவு நேரம் பேசியது வரையிலும் கம்யூனிஸ்டுகளை மட்டுமே குறி வைத்தே பேசுகிறார்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ...

திரு. வை. சிவபுண்ணியம்: கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) இது என்ன? (குறுக்கீடு) எங்களுக்குத் தெரியும். காங்கிரசின் வீரம் எங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கோவை தங்கம், உட்காருங்கள். அவர் Chair person—ஐப் பார்த்துதான் பேசுகிறார்.

திரு. வை. சிவபுண்ணியம்: இதில் என்னவென்றால், தகரம் கண்டுபிடிக்கப்பட்டபோதே உண்டியல் கண்டுபிடிக்கப்பட்டது பற்றிச் சொன்னார்கள் என்று இவர் சொல்கிறார். எங்களது கட்சி உண்டியல் குலுக்கித்தான் கட்சி நடத்துவது என்பது உண்மை. ** ஆனால், அவர் பேசுகின்றார், நாங்கள் உண்டியலைக் குலுக்குகின்றோம் என்று. நாங்கள் உண்டியலைக் குலுக்கித்தான் கட்சி நடத்துவோம். அதை வைத்துதான் நாங்கள் கட்சி நடத்துகிறோம். அதன் மூலமாகத்தான் எங்களது இயக்கம் இதுவரையிலும் வாழ்ந்துகொண்டிருக்கின்றது. ஆனால்,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2011 ஜனவரி 13

அதைப் பற்றிப் பேசுவதற்குக் தொடர்ந்து அனுமதியினை அளித்துக்கொண்டேயிருக்கின்றீர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சார், போதும். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் உண்டியல் குலுக்கித்தான் கட்சியை நடத்துகின்றோம் என்று இப்போது சொல்கிறார் திரு. சிவபுண்ணியம். அன்றைய முதலமைச்சர் தகரம் கண்டுபிடித்தபோது, உண்டியல் கண்டுபிடித்தார்கள் என்று சொன்னபோது, அப்போது உள்ளேயிருந்த நீங்கள் இந்தக் கருத்தைச் சொல்லியிருக்க வேண்டும். காலம் கடந்து ஞானோதயம்! (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. எழுந்து நின்றவர்களிலே யாராவது ஒருவருக்குத்தான் பேச வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னேன். திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் பேசிவிட்டார்கள். அடுத்தது, திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒன்றைச் சுட்டிக்காட்டினார். அதோடு முடிந்தது. ஆனால், அதற்குப் பதில் சொல்லியிருக்க வேண்டுமே தவிர, திரு. சிவபுண்ணியம் அவர்கள் காங்கிரஸ் கட்சியின்மீது ஒரு புதிய குற்றச்சாட்டைச் சொல்லுவது அபாண்டம். எனவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம் அவர்கள் காங்கிரஸ் கட்சியைப் பற்றிச் சொன்ன அத்தனை வார்த்தைகளையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு நிறைய வாய்ப்புக் கொடுத்துவிட்டோம்,

2011 ஜனவரி 13][பேரவைத் துணைத் தலைவர்]

உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை அம்மா. ஒவ்வொருவரும் கேட்டீர்கள் என்றால் எல்லோருக்கும் வாய்ப்புத் தர முடியாது. (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கு நாட்களாக ஆளுநர் உரையின்மீதான விவாதத்திலே பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்கள், தோழர்கள் இலங்கைவாழ் தமிழர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி, அங்கு நடக்கின்ற சம்பவங்களைப் பற்றி, அங்கே மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் பற்றி பல்வேறு கருத்துகளை இந்த அவையிலே எடுத்து வைத்தார்கள். இந்த அவையிலே அளிக்கப்பட்ட ஆளுநர் உரையின்மீது உரையாற்ற வந்த ... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செல்வி பாலபாரதி, உட்காருங்கள். உங்களுக்கு நிறைய வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: அங்கே சிந்திய கண்ணீரும், செத்து மடிந்த உயிர்களும் போதாது என்று இன்னமும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கையில் முள்வேலி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதும், முகாம்களிலிருந்து சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டு, தமிழர்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள் முழுமையடையாமல் இருப்பதும், நீண்டகாலமாகப் பேசப்பட்டுவரும் அரசியல் தீர்வுக்கான ஆரம்பகட்ட முயற்சிகள்கூட இதுவரை மேற்கொள்ளப்படாமல் இருப்பதும், தொடர்ந்து தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதும், தமிழக அரசுக்கு மிகுந்த கவலை அளிக்கிறது என்று இந்த அரசு தன்னுடைய ஆதங்கத்தை, கவலையை, கடல் தாண்டி வாழ்கின்ற இலங்கைத் தமிழர்கள் மத்தியில் இன்று நடக்கின்ற நிகழ்வுகளை, வருத்தங்களைப் பகிர்ந்து கொண்டிருக்கிறது. இதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. காங்கிரஸ் கட்சி இந்தக் கவலைகளிலே, வருத்தங்களிலே முழுக்க முழுக்கப் பங்குகொள்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செல்வி பாலபாரதி, உட்காருங்கள். உங்களுக்கு நிறைய வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: கடைசியில் நீங்கள் பேசிக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) நான் இதைப் பேசி முடித்துவிட்ட பிறகு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: இந்த நிலைகளையெல்லாம் களைந்திட, மத்திய அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த ஆளுநர் உரையின்மூலம் மாநில அரசு, மத்திய அரசுக்குக் கோரிக்கையினை வைத்திருக்கிறது. இந்தக் கோரிக்கையிலே இருக்கிற நியாயத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இன்று கடல் சார்ந்து வாழ்கின்ற தமிழர்களுடைய உரிமைகளின்மீது அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான தீர்வுகளின்மீது நேரடியாகப் பணியாற்றக்கூடிய அரசியல் சாசன சட்டக் கடமை மத்திய அரசுக்கு மட்டும்தான் இருக்கிறது. (குறுக்கீடுகள்) அது மத்திய அரசு சம்பந்தமான ... (குறுக்கீடு) என்ன point of order? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரைப் பேச அனுமதித்திருக்கிறேன். There should be no interference. உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், I think your time is over.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) யுத்தம் முடிந்த பிறகு இலங்கையிலே வாழும் தமிழர்களுக்காகச் செய்யப்படுகின்ற பணிகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, Re–settlement; and another is political solution. (குறுக்கீடு) ஒன்று, யுத்தத்தின் காரணமாகப் பல இடங்களுக்குப் புலம் பெயர்ந்து சென்ற தமிழர்களை மீண்டும் அவர்களது சொந்தப் பகுதியிலே குடியமர்த்துகின்ற பணி ஒருபுறம். (குறுக்கீடுகள்) மற்றொருபுறம் இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அரசியல் தீர்வினைப் பெற்றுத் தருகின்ற பணி. இந்த இரண்டு பணிகளையும் மத்திய அரசு கடந்த 4, 5 மாத காலங்களிலே, அதிலும் குறிப்பாக, யுத்தம் முடிந்த பிறகு எடுத்துக்கொண்டிருக்கிற பணிகளை நான் இந்த அவையிலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு)

2011 ஜனவரி 13] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

மத்திய அரசு 50,000 வீடுகளைக் கட்டுவதற்கான உதவிகளைச் செய்ய முன்வந்திருக்கிறது. 1,000 கோடி ரூபாயை மத்திய அரசு, இலங்கையிலே தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளிலே செலவழிப்பதற்காக மட்டுமே, இலங்கை அரசிடம் தந்திருக்கிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இலங்கையிலே தமிழர்கள் வாழ்கின்ற பகுதியிலே, சீரழிந்து கிடக்கின்ற அடிப்படைக் கட்டுமானப் பணிகளைச் சீரமைப்பதற்காக ... (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசிக்கொண்டிருக்கின்றார். மற்ற உறுப்பினர்கள்—நீங்கள் ஏற்கெனவே இந்த அவையின் முன்னவர் அவர்கள் சொன்னதைப்போல, point of order கிளப்பலாம், அவர்களைப் பற்றி personal ஆக ஏதாவது சொல்லியிருந்தால், அதற்கு மட்டும் விளக்கம் பெற விரும்பலாம். ஆனால், ஒவ்வொரு வார்த்தைக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருப்பதற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டும்; எங்களுக்கு ஒரு நிமிடம் கொடுங்கள்; ஒரு செகண்டு கொடுங்கள் என்று இந்த அவையே நடைபெறாமல் இருப்பதற்கு—இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு உறுப்பினர் பேசக்கூடிய கருத்தை முழுமையாக நாங்கள் பெறுவதற்கு, இந்த அவை பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல், இடைவிடாது உங்கள் ஆணையையும் மீறி, நீங்கள் ஆணையிட்ட பிறகும் நின்றுகொண்டே—ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது நின்றுகொண்டே கட்டாயப்படுத்துவது எந்த வகையிலே நியாயம்? இது மரபுக்கு உகந்தது அல்ல. இதை அனுமதித்தால் இந்தச் சபையே நடக்காது. ஆகவே, இதற்கு நீங்கள் அனுமதிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ், சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) செல்வி பாலபாரதி, திரு. நன்மாறன், அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) செல்வி பாலபாரதி, கொஞ்சம்

[பேரவைத் தலைவர்] [2011 ஜனவரி 13

co-operate பண்ணுங்கள். உட்காருங்கள், please. (குறுக்கீடு) இங்கே என்ன நடந்தது என்று நான் என்னுடைய room–இலே இருந்து கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நிறைய நேரம் பேச உங்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார். உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) செல்வி பாலபாரதி, உட்காருங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளிலே ... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய வாய்ப்பு உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் நேரத்தை நீங்கள் எடுப்பதற்கு நான் allow பண்ண மாட்டேன். உட்காருங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: யுத்தத்தின் காரணமாக சீரழிந்து கிடக்கின்ற அடிப்படைக் கட்டுமானப் பணிகளைச் சீர் செய்வதற்கான முயற்சிகளிலே மத்திய அரசு களம் இறங்கி இருக்கிறது. நேற்றையதினம் இந்த அவையிலே பேசிய மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் Commonwealth விளையாட்டிற்கு எதற்காக ராஜபக்சேவை மத்திய அரசு அழைத்தது என்ற கேள்வியைக் கேட்டார்கள். நான்கூட சற்று திடுக்கிட்டுப் போனேன். இன்று நான் ராஜபக்சேவை அழைத்தது யார் என்கிற கேள்விக்கு இந்த அவையிலே பதில் சொல்ல வேண்டும். Commonwealth Games–ஐ நடத்துகின்ற பொறுப்பு முற்றிலுமாக பிரிட்டிஷ் பேரரசினுடைய தலைமையிலே அமைந்த Commonwealth குழுவிடம்தான் இருந்தது. அந்தக் குழுதான் அந்த விளையாட்டிற்கு வருகின்ற விருந்தினர்களை அழைக்கிறது. இந்த நாட்டினுடைய குடியரசுத் தலைவர்கூட எப்பொழுது வர வேண்டும் என்பதை— ஏனென்றால், அந்த Commonwealth Games–க்கு வேல்ஸ் இளவரசர் வந்திருந்தார். வேல்ஸ் இளவரசர் முன்னர் வருவதா அல்லது இந்தியக் குடியரசுத் தலைவர் முன்னர் வருவதா; ,என்கிற கேள்வி இருந்தது. யார் துவக்கி வைப்பது என்கிற பிரச்சினை வந்தது. அதைக்கூட இந்தியப் பேரரசு முடிவு செய்ய முடியவில்லை. அந்த Commonwealth விளையாட்டுப் போட்டிகளை நடத்துகின்ற அமைப்புதான் வேல்ஸ் இளவரசர் என்ன செய்ய வேண்டும்;

2011 ஜனவரி 13] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

இந்தியக் குடியரசுத் தலைவர் என்ன செய்ய வேண்டும் என்பதை நிர்ணயிக்கக்கூடிய பொறுப்புகூட Commonwealth விளையாட்டுக் குழுவிற்குதான் உண்டேயொழிய, இந்தியப் பேரரசுக்கு இல்லை. ஆனால், நேற்றையதினம் இந்த அவையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள், இந்தியப் பேரரசுதான்,— (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இன்னொன்றுகூட சொன்னார்கள் அவர்கள். இங்கேயிருந்து மின்சாரத்தைத் தயார் செய்து இலங்கைக்கு அனுப்புகிறார்கள் என்கிற குற்றச்சாட்டைக்கூட இங்கே பதிவு செய்தார்கள். நாங்கள் அதைக் கேட்டோம். இன்றையதினம் காலையிலே உள் துறை அமைச்சரைத் தொடர்புகொண்டு நம்முடைய சட்டமன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்கள் இதைப் பற்றிக் கேட்டார்கள். SAARC நாடுகள், தங்களுக்குள்ளே ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தப் பகுதியிலே மின்சாரம் எங்கேயாவது அதிகமாக இருக்கின்றபோது, பக்கத்து நாடுகளுக்கு அந்த மின்சாரத்தைக் கொடுத்துக்கொள்ளலாம். அப்படிக் கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக (குறுக்கீடு) சார், இங்கே பாருங்கள். உங்களுக்குத் தெரிந்தால் பேசுங்கள். (குறுக்கீடு) SAARC நாடுகள் ஒரு முடிவு செய்து, இதற்கான திட்டங்களைப் பற்றிய விவாதங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்த நாட்டிலே மியான்மரோடு, பாகிஸ்தானோடு, பங்களாதேஷோடு, இலங்கையோடு மற்றும் (குறுக்கீடு) அதெல்லாம் தெரியும். நீங்கள் பேசாதீர்கள். (குறுக்கீடு)

முற்பகல் 11—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அனுமதியில்லாமல் சத்தம் போட்டுக்கொண்டிருக்காதீர்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்ன செய்ய நினைக்கிறீர்கள் என்பது எங்களுக்குப் புரிகிறது. இன்றையதினம்கூட, 'தினமலர்' பத்திரிகையில் ஒரு பெரிய செய்தி வந்திருக்கிறது. ஒரு இரகசிய C.D. தயாரிக்கப்படுவதாகவும், தமிழக முதலமைச்சர்மீதும், இந்தியப் பேரரசுமீதும், இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக குற்றவாளிகள்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2011 ஜனவரி 13

என்ற குற்றத்தைச் சுமத்தி, படுகொலைகள் நடப்பதையும், கற்பழிப்புகள் நடப்பதையும், மீண்டும் வரக்கூடிய தேர்தலிலே அதை ஒரு பெரிய விளம்பர யுக்தியாக செய்வதற்கான முயற்சியும், சதியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதை நாங்கள் அறிவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்று சொல்லிக்கொள்கிறேன். இந்த இலங்கைப் பிரச்சினையிலே, இலங்கைப் பிரச்சினை, இலங்கை வாழ் தமிழர்கள் பிரச்சினை, இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வு, இந்தத் தமிழகத்திலே ஒரே ஒரு தமிழன் மூலமாகத்தான் கிடைக்க முடியும். அது தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் மூலமாகத்தான் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முதலமைச்சருக்கு ஆதரவும் வழிக்காட்டுதலும், பாதுகாப்பும், வேண்டிய உதவிகளும் செய்யக்கூடிய ஒரே பிரதமர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங், ஒரே தலைவி டாக்டர் திருமதி சோனியா காந்தி அவர்கள்தான். இவர்கள் மூன்று பேரும் சேர்ந்து இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க முடியவில்லையென்று சொன்னால், இந்தத் தமிழகத்திலே அந்தப் பாதுகாப்பைக் கொடுக்கக்கூடிய தகுதி வேறு யாருக்கும் இல்லையென்பதை இந்த அவையில் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் நான் சொல்லியாக வேண்டும் ... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றவர்களெல்லாம் அமைதியாக இருங்கள். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், உட்காருங்கள். திரு. தி. வேல்முருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை, உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் உரையை முடியுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நான் மத்திய அரசினுடைய தகவல்களைச் சொல்லவில்லை. நம்முடைய இந்திய நாட்டினுடைய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள், இலங்கையிலே மூன்று நாட்கள் தங்கியிருந்தார். நம்முடைய வெளியுறவுத் துறைச் செயலர் போனார். அரசியல் தீர்வு காண பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள

2011 ஜனவரி 13] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

வேண்டுமென்று அந்த நாட்டினுடைய அரசை வலியுறுத்தியிருக்கிறோம். அதனுடைய விளைவுதான் நேற்று அங்கே ஏற்பட்டிருக்கிற தீர்வு; இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு. அரசுடன் இன்று பேச்சுவார்த்தை. இலங்கை நாடாளுமன்றத்திலே தமிழ்க் கூட்டமைப்பின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றையதினம் அவர்களுக்குள் ஒன்றுகூடி போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களை மறுகுடியமர்வு செய்யும் பிரச்சினைக்கு, அரசியல் தீர்வு காண்பதற்கு, விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு, இலங்கை அரசை, இந்தியா நிர்ப்பந்தித்ததைத் தொடர்ந்து, நேற்று பேச்சுவார்த்தை ஆரம்பித்திருக்கிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் பாலபாரதி அவர்கள் –

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம், திரு. தி. வேல்முருகன், திரு. சு. குணசேகரன், அவருடைய கருத்தைச் சொல்கிறார். உங்களைப் பற்றி எதுவும் பேசவில்லை. அமைதியாக உட்காருங்கள். எதற்காக எழுந்திருக்கிறீர்கள்? உட்காருங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: நேற்று மத்திய அரசைக் குற்றம் சொன்னீர்கள், கேட்டுக்கொண்டிருந்தோம். என்ன செய்கிறோம் என்று சொன்னால், கேட்டுக்கொள்ள மாட்டேன் என்கிறீர்களே? (குறுக்கீடு) நான் முடித்தவுடன் பேசச் சொல்லுங்கள். திரு. வை. சிவபுண்ணியம், I am not yielding. இதில் என்ன தவறு இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர், நீங்கள் பேசுங்கள். அவர்களுக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டியதில்லை. நீங்கள் அதிக நேரம் எடுத்துக்கொண்டுவிட்டீர்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுவதற்கு நீங்கள் ஒரு அமைதியான அவையை எனக்கு உருவாக்கித் தர வேண்டும். நான் எப்படிப் பேச முடியும்? (குறுக்கீடு)

HON. SPEAKER: Mr. Peter Alphonse, please wind up your speech.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அந்தப் பேச்சுவார்த்தை தொடங்கியிருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தையிலே என்ன பொருள்கள் பேசப்பட வேண்டுமென்ற தகவல்கள் அடங்கிய

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2011 ஜனவரி 13

agenda உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுசம்பந்தமாக இலங்கைத் தமிழர் கூட்டமைப்பு தனி விவாதத்தை நடத்தியிருக்கிறது. இந்தப் பேச்சுவார்த்தைக்கு மத்திய அரசு உதவி செய்வதற்கான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இதை யார் செய்ய முடியும்? இந்த நாட்டினுடைய பிரதமர் செய்ய முடியும்; தமிழகத்தினுடைய முதலமைச்சர் செய்ய முடியும். இலங்கைத் தமிழ்க் கூட்டமைப்பைச் சார்ந்த உறுப்பினர்களே ராஜபக்சேவுடன்தான் உட்கார்ந்து பேசுகிறார்கள். ஏனென்றால், அவர் அந்த நாட்டின் அரசியல் சாசன சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவர். ஆகவே, பாதிக்கப்பட்ட தமிழர்கள் என்று நீங்கள் சொல்கின்ற அந்தத் தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே யாரிடம் போய் உட்கார்ந்து பேசுகிறார்கள் என்று சொன்னால், அதே ராஜபக்சேவிடம்தான் பேசுகிறார்கள். ஆகவே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நீங்கள் கேள்விக்குக் கேள்வி லாவணி பாட வேண்டாம். (குறுக்கீடுகள்) என் அன்பு நண்பர்களே, நேற்றையதினம் ...

முற்பகல் 11—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் இங்கே பார்த்துப் பேசுங்கள், அவர்களிடம் எதற்குப் பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: அவர்களை அமைதியாக இருக்கச் சொல்லுங்கள்.

HON. SPEAKER: Thiru Peter, you continue your speech.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: எப்படிப் பேச முடியும்?

HON. SPEAKER: Please, windup your speech at the earliest possible time. (Interruptions) மற்றவர்கள் உட்காருங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: No, No. I am not yielding. நான் பேசி முடித்த பிறகு பேசுங்கள். (குறுக்கீடுகள்) அது எப்படிப் பேச முடியும்? நேற்றையதினம் கனடா அரசு அறிக்கை கொடுத்திருக்கிறது. நேற்றையதினம் சர்வதேச நாடுகளுடைய பிரதிநிதிகளாக இருக்கின்றவர்கள் ... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள்.

2011 ஜனவரி 13]

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: தலைவர் அவர்களே, எப்படி முடிக்க முடியும்? நான் இன்னும் பேசவே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் அவையைப் பார்த்துப் பேசுங்கள். அவர்களைப் பார்த்துப் பேசாதீர்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: அவையைப் பார்த்துத்தான் பேசுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல. . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் உங்களுடைய ஆணைக்கேற்பதான் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேசுவதிலே எந்தத் தவறும் இல்லை. ஆனால், அவரைப் பேசுவதற்கே விடாமல் இடையிடையே மறித்து, 'நான் ஒரு கேள்வி கேட்கிறேன், அதற்குப் பதில் சொல்லுங்கள்' என்று சொன்னால் எப்படிப் பேச முடியும்? உங்கள் அனுமதி இருந்தால்தான், நீங்கள் அனுமதி கொடுத்தால்தான் அவர்கள் கேள்வியே எழுப்பலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ், உரையை முடியுங்கள். விரைவாக உரையை முடியுங்கள். இன்னும் பிரதான எதிர்க்கட்சி சார்பிலே பேச வேண்டும்; பிறகு பதிலுரை இருக்கிறது. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே பேசுவதற்காக காங்கிரஸ் கட்சிக்கு நீங்கள் 40 நிமிடங்களைத் தந்திருக்கிறீர்கள். எத்தனைக் குறுக்கீடுகள், எத்தனை முறை வந்தன என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். இன்னும் எனக்கு ஒரு 5 நிமிடங்கள் தாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு பிரச்சினைகளைச் சுற்றித்தான் கடந்த 4 நாட்களும் விவாதங்கள் நடந்தன. இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைகள், விலைவாசி உயர்வைப் பற்றிய பிரச்சினைகள். விலைவாசி உயர்வு இல்லை, விலைவாசி உயர்வு இல்லவே இல்லை என்று

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2011 ஜனவரி 13

விவாதிக்கக்கூடிய அளவுக்குக் காங்கிரஸ் கட்சியோ, இங்கே ஆட்சியில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகமோ பொறுப்பற்ற கட்சிகள் அல்ல. நேற்றையதினம் நம்முடைய பிரதமர் அவர்கள் இதற்கான சிறப்புக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார். நேற்றையதினம் பாகிஸ்தானோடு பேசி அங்கிருந்து வெங்காயத்தை அனுப்பச் சொல்லியிருக்கிறோம். உடனே பாகிஸ்தான் என்ன சொல்கிறது? வெங்காயத்தை அனுப்ப வேண்டுமென்று சொன்னால், நீங்கள் பருத்தியை அனுப்புங்கள் என்று சொல்கிறது. அந்தத் தடைகளைத் தளர்த்தி, இன்று பாகிஸ்தானுக்குப் பருத்தியை அனுப்பி வெங்காயத்தைப் பெற்றிருக்கிறோம். இங்கே புதிய சட்டங்களைக் கொண்டு வருவதன்மூலமாகப் பதுக்கலைத் தடுக்க முடியுமா என்கிற முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். காய்கறி விலை, ஒவ்வொரு இடத்திலும், இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. இன்றுகூட பரங்கிக்காய் கிலோ 3 ரூபாய்க்கு விற்கிறது; வாங்குவதற்கு ஆள் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, காய்கறி விலையை வைத்துக்கொண்டு ஏதோ மன்மோகன் சிங் காய்கறி வியாபாரம் பார்ப்பதுபோல, அன்னை சோனியா காந்தி காய்கறி வியாபாரம் பார்ப்பதுபோல, தமிழக முதலமைச்சர் காய்கறித் தோட்டம் வைத்திருப்பதுபோல, நீங்கள் பேசுவது பொறுப்பற்ற பேச்சு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு முக்கியமான கோரிக்கைகளை, காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த அரசுக்கு வைக்க நான் ஆசைப்படுகிறேன். ஒன்று, இன்று தமிழகத்திலே நவோதயா பள்ளிகள் தொடங்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கை மிகப் பரவலாக வந்திருக்கிறது. நேற்றுமுன்தினம் என்னைச் சந்தித்த நவோதயா பள்ளிகளிலே வேலை பார்க்கின்ற தமிழ் ஆசிரியர்கள் சொன்னார்கள்; இந்தப் பள்ளிகளை இன்று இந்தியாவிலேயே தொடங்காத ஒரே மாநிலமாகத் தமிழகம்தான் இருக்கிறது. இதுவரை மேற்கு வங்க மாநிலத்திலும் தொடங்காமல் இருந்தார்கள். ஆனால், அவர்கள் கடந்த ஆண்டு அதற்காக ஒரு குழுவை நியமனம் செய்து கேரளாவிற்குச் சென்று நவோதயா பள்ளிகள் எப்படி நடக்கின்றன என்பதைப் பார்த்துவிட்டு, அவர்கள் அதற்குப் பிறகு இந்த ஆண்டிலே தொடங்குவதற்கு ஒத்துக்கொண்டார்கள். அந்தப் பள்ளிகளில், 31 பள்ளிகள் இன்று தமிழகத்திற்கு வர வேண்டும். ஒரு பள்ளிக்கு 20 கோடி ரூபாய் மத்திய அரசு வைத்திருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு அதனுடைய நிருவாகச் செலவுக்கு இரண்டரை கோடி ரூபாய் கொடுக்கிறது.

2011 ஜனவரி 13] *[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]*

ஏற்கெனவே 600 கோடி ரூபாய் நம்முடைய மாநிலத்திற்கு வர வேண்டிய பணத்தை நாம் ஏன் பயன்படுத்தாமல் இருக்க வேண்டுமென்கிற கேள்வியை நான் வைக்க ஆசைப்படுகிறேன். ஏனென்று சொன்னால், இந்த நவோதயா பள்ளி முழுக்க முழுக்க கிராமப்புற மாணவர்களுக்காக நடத்தப்படுகின்ற பள்ளி. ஒவ்வொரு பிளாக்கிலும் தகுதியான மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு உறைவிடம், உணவு எல்லாமே இலவசமாக வழங்கப்பட்டு, அவர்களுக்கு அற்புதமான கல்வி அளிக்கப்படுகிறது. மாநிலத்தில் தமிழ் பயிற்று மொழியாக அளிக்கப்படுகிறது. வேண்டுமென்று சொன்னால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு குழுவை நியமித்து, பக்கத்தில் இருக்கிற புதுவை மாநிலத்திலே அந்தப் பள்ளி எப்படிச் செயல்படுகிறது என்று பார்த்து, நம்முடைய கொள்கைகளுக்கு அது விரோதமாக இல்லையென்று சொன்னால், தமிழகத்திலே தயவுசெய்து அந்த 31 நவோதயா பள்ளிகளைத் தொடங்குவதற்கும், ஒரு 1,000 கோடி ரூபாய் முதலீடு வருவதற்கும் நீங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–40

எங்கள் தென் மாவட்டங்களிலே தேவேந்திர குல வேளாளர்கள் என்று அழைக்கப்படுகின்ற பட்டியல் இன மக்கள் மிக அடர்த்தியாக வாழ்கிறார்கள். நீண்ட நாட்களாக அந்த இளைஞர்கள் மத்தியிலே ஒரு சலசலப்பு இருக்கிறது. அவர்கள் நிறைய கோரிக்கைளை உங்களுக்கு ஏற்கெனவே அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவர்கள் உயர் நீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். தேவேந்திர குல வேளாளர் என்று அழைக்கப்படுகின்ற அந்த மக்கள், ஒட்டுமொத்தமாகத் தங்களை ஆதி திராவிடர்கள் என்று அழைக்கக்கூடாது என்று அந்தப் பகுதியிலே ஒரு பெரிய பிரச்சினையை ஒவ்வொரு ஊராக, ஒவ்வொரு கிராமமாகச் சென்று, இந்தத் தேர்தல் காலங்களிலே அதை ஒரு தேர்தல் பிரச்சார யுத்தியாகப் பயன்படுத்த நினைக்கிறார்கள். இதே மன்றத்திலே, 1923 ஆம் ஆண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பஞ்சமர் அல்லது பறையர் என்று அழைக்கப்படுகின்ற மக்களை, ஆதி திராவிடர்கள் என்று அழைக்கப்படுவதற்கான அனுமதியினை இந்தச் சட்டப் பேரவை 1923 ஆம் ஆண்டு ஒரு தீர்மானம் இயற்றி அந்த அனுமதியை வழங்கி இருக்கிறது. அதைப்போலவே, இந்த

TRUTH ALONE TRIUMPHS

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2011 ஜனவரி 13

மக்களை, இவர்கள் உழவுத் தொழில் செய்கின்றவர்கள்; எனவே, தங்களை தேவேந்திர குல வேளாளர்கள் என்றழைக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். ஏற்கெனவே அழைத்து வரப்படுகின்ற அந்தப் பெயர் தங்கள் சுயமரியாதைக்குப் பங்கம் விளைவிப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். எனவே, தேவேந்திர குல வேளாளர்கள் என்று அழைக்கப்படுகின்ற வகையில் அந்த விதிகளைத் தளர்த்த வேண்டும் என்றும், பட்டியல் இனத்தில் 76 பிரிவு மக்கள் வாழ்வதாகவும் சொல்கிறார்கள். எனவே, அந்த 76 பட்டியல் இன மக்களையும் ஒட்டுமொத்தமாக ஒரே அடைமொழிக்குள் அடைக்காமல் பட்டியல் இன மக்கள் என்று அழைக்கப்பட வேண்டும். மத்திய அரசிலே அழைக்கப்படுவதுபோல, பக்கத்திலே இருக்கின்ற புதுவை மாநிலத்திலே அழைக்கப்படுவதுபோல அவர்கள் அழைக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கையை ஒரு பெரிய தேர்தல் பிரச்சார யுத்தியாகவே சிலர் நடத்த முற்படுகின்றனர். அதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர நான் ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இனிய தலைவர் ராஜிவ் காந்தி அவர்கள் இந்த தேசத்தினுடைய விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு, இந்த தேசத்தினுடைய அறிவுசார் வளர்ச்சிக்கு, வரக்கூடிய 21 ஆம் நூற்றாண்டினுடைய அறிவுசார் பொருளாதாரத்தினுடைய அடிக்கல்லை நாட்டிய மாபெரும் இளந்தலைவர் இந்த மண்ணிலே மறைந்து போனார். அவருடைய சடலம் இறுதியாக கிடத்தப்பட்டிருந்தது, இந்தச் சென்னை மருத்துவமனையிலே. அந்த மருத்துவமனைக்கு ராஜிவ் காந்தியினுடைய பெயரை வைக்க வேண்டுமென்று நாங்கள் அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மிக அன்போடு கேட்டுக்கொள்கிறோம். காங்கிரஸ் தியாகிகளை, சுதந்திரப் போராட்டத் தியாகிகளை, காங்கிரஸ் தலைவர்களை, நேரு குடும்பத்தை, அன்னை இந்திரா காந்தியை, சோனியா காந்தியை, எங்கள் இனிய தலைவர் ராஜிவ் காந்தியை நீங்கள் மதித்துப் பெருமை சேர்த்ததை நாங்கள் மறக்க மாட்டோம். அந்தப் பெருமைக்கு மகுடம் சேர்ப்பதைப்போல, இந்த மருத்துவமனைக்கும் அமரர் ராஜிவ் காந்தி அவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்று உங்களிடம் கேட்டு அமைகின்றேன். நன்றி.

2011 ஜனவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தன்னுடைய உரையை நிறைவு செய்யும்போது, இரண்டு கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறார். ஆதி திராவிட மக்கள் என்று சொல்லப்படுகின்றவர்களை "பட்டியல் இன மக்கள்" என்று அழைக்க வேண்டும் என்பது குறித்து ஒன்று. இரண்டாவதாக, சென்னையிலே உள்ள பொது மருத்துவமனைக்கு மறைந்த இளந்தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்பது மற்றொரு கோரிக்கை.

முதல் கோரிக்கை, ஆதி திராவிட மக்களை "ஆதி திராவிடர்கள்" என்று அழைப்பதா அல்லது வேறு பெயரில் அழைப்பதா? எல்லாவற்றையும் விட்டுவிட்டு புதுப் பெயரில் அழைப்பதா என்றெல்லாம் ஒரு பிரச்சினை, கேள்வி எழுந்தபோது, அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினுடைய முடிவுக்கு இது விடப்பட்டிருக்கின்றது.

நான் இந்தப் பெயர் பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆதி திராவிடர்களா? பஞ்சமர்களா? பறையர்களா? பள்ளர்களா? என்றெல்லாம் பகுத்துச் சொல்கின்ற நிலைக்கு முன்பு, தந்தை பெரியார் அவர்களிடத்திலே கேட்டார்கள் — "நீங்கள் ஆதி திராவிடர்களுக்காக உழைப்பதாகச் சொல்கிறீர்களே; நீங்கள் கேட்கிற திராவிட நாடு வந்தால், எங்கள் நிலை என்ன?" என்று கேட்டபோது, பெரியார் சொன்னார் "ஆதி" என்ற அந்தப் பெயரை நீங்கள் இழக்க நேரிடும்; "நீங்களும் திராவிடர்களாக ஆகி விடுவீர்கள்" என்று பெரியார் சொன்னார். இப்பொழுதுள்ள சூழ்நிலையில், அந்தப் பதிலைச் சொல்ல நான் விரும்பவில்லை. ஏனென்றால், நான் பெரியார் அல்ல. பெரியார் எதையும் ஆய்ந்து சொல்வார்கள் — துணிந்து சொல்வார்கள். ஆகவேதான், நான் அதைச் சொல்ல விரும்பவில்லை.

முற்பகல் 11—45

இப்பொழுது எழுந்துள்ள பிரச்சினை, "பட்டியல் இனத்தவர்" என்று அழைப்பதா; அல்லது ஆங்காங்குள்ள அந்த வகுப்பினரைக் குறித்து, அதையும் சொல்லிவிட்டு, "பட்டியல் இனத்தவர் "என்று

அழைப்பதா என்ற ஒரு பிரச்சினை வந்திருக்கிறது. நான் சில நண்பர்களோடு கலந்து பேசியதில், முடிவாக அறிவிக்கலாம் என்று கருதுவது, இனி ஆதி திராவிடர்கள் என்றோ, தலித் என்றோ அழைக்காமல், "பட்டியல் இனத்து மக்கள்" என்று அழைத்துவிட்டு, அவர்களுடைய வகுப்பை, அவர்கள் ஆதி திராவிடரா அல்லது அருந்ததியரா என்பதையெல்லாம் அடைப்புக் குறிக்குள்ளே போட்டுவிட்டு – அதாவது "பிராக்கெட்"–இல் போட்டுவிட்டு, அவர்களைப் "பட்டியல் இன மக்கள்" என அழைக்கலாம் என்ற ஒரு கருத்தை நாங்கள் ஏற்கெனவே அமைத்திருக்கின்ற குழுவிடத்திலே கருத்து பரிமாறிக்கொண்டிருக்கிறோம். அந்தக் குழுவினுடைய அறிக்கை விரைவிலே வரும். அது, அந்த மக்களுடைய மனம் மகிழத்தக்க அளவிலே, அந்த முடிவு இருக்கும் என்று கருதுகிறேன்.

இன்னொன்று சொன்னார்; ராஜிவ் காந்தி அவர்களுடைய – குண்டடிப்பட்ட உடல் வைக்கப்பட்டிருந்த சென்னை மருத்துவமனைக்கு அவருடைய பெயரை வைக்க வேண்டும் என்று சொன்னார். நிச்சயமாக அந்தப் பெயர் வைக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய இலட்சக்கணக்கான காங்கிரஸ் கட்சித் தொண்டர்களின் சார்பாகவும், எங்கள் அருமை அன்னை, தியாகத் திருவிளக்கு அன்னை சோனியா காந்தி அவர்களின் சார்பாகவும், இந்த அவையிலே இருக்கின்ற காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரின் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார். (குறுக்கீடு)*

திரு. டி. ஜெயக்குமார்: *சார், செல்வி. பாலபாரதிக்கு ஒரு நிமிடம் கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்கள் பேசுகிற நேரத்தை உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் கழித்து விடுவேன். (குறுக்கீடு)*

2011 ஜனவரி 13]

திரு. டி. ஜெயக்குமார்: செல்வி பாலபாரதிக்கு ஒரு நிமிடம் கொடுங்கள். Please sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No. நான் உங்களைப் பேச அழைத்திருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் recommend செய்ய வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர், பேசி அமர்ந்து விட்டார். திரும்பவும், அதற்குப் பிறகும் எழுந்து, இன்னும் பிரச்சினையை உருவாக்கப் பார்க்கிறீர்களே? (குறுக்கீடு) திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசி உட்கார்ந்து விட்டார். மறுபடியும் open பண்ணி, திரும்பப் பிரச்சினையைக் கிளப்புவதற்கு வழிவரும். அது எதற்கு? வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமிக்குபின். அமைதி என்ற அடிப்படையில். . . (குறுக்கீடு) அவர்களைப் பேச விடுங்கள். ஒரு இரண்டு நிமிடங்கள் விடுங்கள் Sir. please. அவர்கள் என்னதான் சொல்ல வருகிறார்கள் என்பதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்கள். காதை அங்குக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி பாலபாரதி, சொல்லுங்கள். ஒரு நிமிடம், சொல்லுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒன்றும் பேசப் போவதில்லை. உண்மையிலேயே, காங்கிரஸ் கட்சி எப்போது பேசினாலும், மத்திய ஆட்சி அதிகாரத்தில் இருக்கக்கூடிய ஒரு மிக முக்கியத்துவம் வாய்ந்த கட்சி. அதனுடைய தலைவர் என்ற முறையில் அவருடைய உரை எங்களுக்கும்—கம்னியூஸ்டு இயக்கங்களுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் கொள்கை வேறுபாடுகள் இருக்கலாம், ஆனால், ஒரு ஆட்சி அதிகாரத்தில் இருக்கக்கூடிய, ஒரு மிகப் பிரதான, தேசத்தினுடைய ஒரு அரசியல் இயக்கம் என்ற முறையில் நாங்கள் கவனிப்போம். ஆனால், இன்றைக்கு நம்முடைய மரியாதைக்குரிய சகோதரர், திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், புதை சகதிக்குள் மாட்டிக்கொண்ட ஒரு மனிதனைப்

[செல்வி கே. பாலபாரதி] [2011 ஜனவரி 13

போன்று அவருடைய உரை இங்கும் போக முடியாமல், அங்கும் போக முடியாமல் ரொம்ப தவிக்கிறது. ** பற்றிக் கூறியதை சபைக் குறிப்பிலிருந்து நீக்கினீர்கள், நன்றி. ஆனால், இப்படிப் பதற்றப்பட்டு நம்முடைய தமிழக மக்களுடைய கஷ்டங்களுக்கு, இந்த மாநில அரசுக்கு நீங்கள் என்ன செய்வது என்பது சம்பந்தமாகச் சொன்னால், நாங்கள் உண்மையிலேயே கவனிப்போம். கம்னியூஸ்டு கட்சி நேற்று, இன்றைக்கா உண்டியல் குலுக்குகிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கருத்தை மட்டும் சொல்லுங்கள். என்ன வேண்டும் என்பதை மட்டும் சொல்லுங்கள். அவரை criticize செய்வது எல்லாம் இருக்கட்டும். அவர் அதைச் சொல்லவில்லை, இதைச் சொன்னார், அதைச் சொன்னார் என்று சொல்லாதீர்கள். உங்கள் கருத்து என்ன? அதை மாத்திரம் சொல்லுங்கள்.

முற்பகல் 11—50

செல்வி கே. பாலபாரதி: எங்கள் கருத்தைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். கம்யூனிஸ்டு இயக்கங்கள் பற்றி அவர்கள் தகரம் கண்டுபிடிப்பதற்கு முன்பே உண்டியல் கண்டுபிடித்தவர்கள் என்று சொன்னார்கள். உண்மைதான். தகரம் கண்டுபிடிப்பதற்கு முன்னாலே உண்டியலைக் கண்டுபிடித்தது உண்மைதான். ஆனால், இந்தியாவிலேயும், தமிழகத்திலேயும் சாதாரண மக்கள் இரண்டு பேருக்குத்தான் காசு போடுகிறார்கள். ஒன்று, பழனியில் இருக்கக்கூடிய, திருச்செந்தூரில் இருக்கக்கூடிய கடவுளுக்கு உண்டியலில் போடுகிறார்கள். இன்னொன்று, கம்யூனிஸ்டுகளுடைய உண்டியலில் போடுகிறார்கள். ஆகவே, கம்யூனிஸ்டுகள் எப்போதுமே கையேந்தி, உண்டியல் ஏந்திதான் இயக்கம் நடத்துகிறோம். அது திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும் தெரியும். இது ஒரு மிகப் பெரிய குற்றமா? அந்தக் குற்றமும் மத்தியிலே இருக்கக்கூடிய அமைச்சர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் செய்வதைத்தான் அவர் சொல்லி இருக்கிறார். இதில் என்ன controversy இருக்கிறது? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் செய்வதைத்தானே அவர் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2011 ஜனவரி 13] [பேரவைத் தலைவர்]

திரு. பீட்டர், நீங்கள் சொன்னதில் controversy ஒன்றும் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *11–50*—க்குத்தான் என்னைப் பேசவிட்டிருக்கிறீர்கள். சுனாமிக்குப் பின் அமைதி என்ற அடிப்படையில் ... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான செய்தி அவையிலே வந்துவிடக்கூடாது. அந்த உண்டியல் சமாச்சாரத்தை சொன்னது, திரு. பீட்டர் அல்போன்ஸ் அல்ல. (குறுக்கீடுகள்) தகர டப்பா என்று சொன்னது, பீட்டர் அல்ல. அந்தக் கருத்துக்கு திரு. பீட்டர் அல்போன்ஸ் சொந்தக்காரர் அல்ல. அந்தக் கருத்துக்கு சொந்தக்காரர், இந்த அவையிலே சொன்னவர், முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு ஜெயலலிதா அவர்கள்தான். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, பிரச்சினையை விடுங்கள். திரு. டி. ஜெயக்குமார், நீங்கள் பேசுங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: அப்படியானால் நாங்கள் முதலமைச்சர் கருணாநிதி என்று எல்லா இடத்திலும் சொல்வோம். ஏனென்றால், ஏற்கெனவே தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள், யார் பெயரையும் சொல்லக்கூடாது என்று சொல்லி. அப்புறம் திரும்பத் திரும்ப அதையே சொல்லிக்கொண்டிருந்தால் எப்படி? அதை நீக்குங்கள் முதலில்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை நடவடிக்கையிலே முன்னாள் முதல்வர் என்று சொன்ன வார்த்தை இருக்கிறது. (குறுக்கீடுகள்) அதைச் சொல்லியிருக்கிறார். வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: முதலமைச்சர் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறார். யார் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது என்று. அப்படியிருக்கும்போது எப்படி அவர் பெயர் குறிப்பிட்டுச் சொல்லலாம்? (குறுக்கீடுகள்) அப்படியானால் நாங்களும் சொல்வோம்.

[2011 ஜனவரி 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்னாள் முதல்வர் என்று சொன்ன வார்த்தையைச் சொன்னதில் என்ன குறைபாடு இருக்கிறது? (குறுக்கீடுகள்) இது record-இல் இருக்கிறது. நானும் பார்த்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பணியாற்றிய, இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற முன்னாள் முதலமைச்சர் என்று அப்படியே சொல்லிக்கொண்டிருக்க முடியுமா? எத்தனையோ பேர் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். பெயர் சொல்வதில் என்ன தவறு? நீங்கள் பெயரை ஜெயலலிதா என்று சொன்னால் நாங்களும் பெயரைச் சொல்வோம் என்று மிரட்டிப் பார்க்கிறார்களா? சொல்லுங்கள். அவர் விரும்புவதும் அதுதான். பெயரைச் சொல்லக்கூடாது என்று என்றைக்கும் எங்கள் தலைவர் சொல்பவர் அல்ல. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் என்று மொட்டையாக நான் சொல்லியிருந்தால் அபாண்டமான பழி திரு. பன்னீர்செல்வத்தின் மீது வந்துவிடக் கூடாதே என்பதற்காகத்தான் யார் சொன்னார்கள் என்று பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள். திரு. ஓ. பன்னீர்செல்வம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெயரைச் சொல்லி, இங்கு அமளி ஏற்பட்டு, அதற்குப் பின்னாலே, பரிமாற்றங்கள் வந்ததற்குப் பின்னாலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் இனிமேல் முன்னாள் முதலமைச்சர் என்று சொன்னால் போதும், யாருடைய பெயரையும் விளித்துச் சொல்லவேண்டாமென்ற கருத்தினைச் சொன்னார்கள். இப்போது மீண்டும் யார் பெயரை வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். எந்தக் கருத்தை, எந்தத் தீர்ப்பை எடுத்துக்கொள்வது? ஒரு முடிவான தீர்ப்பு சொன்னால் . . . (குறுக்கீடுகள்) சொல்லலாம். அதைப் பற்றி எங்களுக்கும் கவலை இல்லை. யார் பெயரை வேண்டுமானாலும் சொல்லுங்கள்.

2011 ஜனவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: உங்கள் மனசாட்சிப்படி நீங்கள் பேசலாம். யாருக்கும் தடை கிடையாது. *(குறுக்கீடு)* இல்லை. மாண்புமிகு ஜெயக்குமார் அவர்கள், நீங்கள் என்ன பேசியிருக்க வேண்டும்? ஏற்கெனவே இந்த அவையில் ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது, தனிப்பட்ட முறையில் பெயர் சொல்ல வேண்டாம் என்று சொல்லி அதோடு நிறுத்தியிருக்கலாம். நாங்கள் உங்கள் முதலமைச்சர் பெயரையும் சொல்வோம் என்று சொல்லி மிரட்டிப் பார்ப்பதா? *(குறுக்கீடுகள்)*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: ஏற்கெனவே இங்கே வழங்கப்பட்ட தீர்ப்புக்கு மாறாக புதிய விளக்கம் தந்துகொண்டிருக்கிறீர்கள். அதற்குத்தான் நாங்கள் விளக்கம் கேட்கிறோம், எப்படிச் சொல்லலாம் என்று. திரும்ப நீங்கள் சொன்னால், நாங்களும் சொல்லலாம்; அவ்வளவுதான்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றத்திலே நீங்களும் முதலமைச்சராக இருந்தீர்கள். அப்போது கலைஞர் பெயரைச் சொல்லாமல் பேசிய அமைச்சர்களே கிடையாது. சட்டமன்ற உறுப்பினர்களே கிடையாது. நீங்களும் பார்த்துக்கொண்டிருந்தீர்கள். அப்போது வேண்டுமென்றே பேசினார்கள். அப்போதெல்லாம் நாங்கள் கேட்டுக்கொண்டே தான் இருந்தோம். இப்போது மட்டும் சொல்லும்போது ஏன் உங்களுக்குக் கோபம் வருகிறது? அதுவும் முன்னாள் முதலமைச்சர்கள் 10 பேர் இருக்கும்போது யாராவது ஒருவர் பெயரைச் சொல்ல வேண்டும். அப்போது எழுந்து நீங்கள் இந்தத் தீர்ப்பை கொடுத்திருந்தால், முதலமைச்சராக இருந்தவர்கள் பெயரைச் சொல்லக்கூடாது என்று யாராவது சொல்லியிருந்தீர்கள் என்றால் பரவாயில்லை. ஆனால், கடைசி வரையில் அதுவும் குறிப்பாக எல்லோருமே சேர்ந்து சொல்லிக்கொண்டிருந்தீர்கள். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் உறுப்பினர் பேசுகின்ற நேரம் போகிறது. நேரம் இல்லை. *(குறுக்கீடுகள்)* சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் சொன்ன அந்தத்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2011 ஜனவரி 13

தீர்ப்பு இருக்கிறதா? அல்லது அதில் மாற்றுக் கருத்துகள் இப்போது சொன்னார்களே அமைச்சர்கள், அந்தத் தீர்ப்பு இருக்கிறதா? அதைத்தான் நான் இங்கே கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நான் ஒன்றே ஒன்று சொல்கிறேன். முன்னாள் முதல்வர் என்று சொல்லும்போது முன்னாள் முதல்வர்கள் நிறைய பேர் இருந்திருக்கிறார்கள். அதில் இவர்தான் என்று எப்படிக் குறிப்பிடச் சொல்கிறீர்கள்?

திரு. டி. ஜெயக்குமார்: ஏற்கெனவே முதலமைச்சர் ஒரு தீர்ப்பு கொடுத்திருக்கிறார். அந்தத் தீர்ப்பை நீங்கள் மதிக்கவில்லையா? அதுதான் எங்களுடைய கேள்வி. விவசாயத் துறை அமைச்சருக்கு என்ன கோபம் என்று தெரியவில்லை முதலமைச்சர் அவர்கள்மீது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், முன்னாள் முதலமைச்சராக, இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றார்கள். எதிர்க்கட்சித் தலைவர் என்றுகூட விளிக்கலாம். அப்படித்தான் மரபு இங்கே. யார் பெயரையும் அமைச்சர்கள் பெயரையோ, முதலமைச்சர்கள் பெயரையோ, எதிர்க்கட்சித் தலைவர்கள் பெயரையோ சொல்லக்கூடாது. அவர்கள் வகிக்கின்ற பொறுப்பைச் சொல்லி சொல்ல வேண்டியதுதானே? இதிலென்ன இருக்கிறது? தேவையில்லாமல் விவாதத்தை வளர்க்கிறீர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் முதலமைச்சர்மீது எனக்கு என்ன கோபமோ தெரியவில்லை என்று சொல்கிறார். நீங்கள்தான் உங்கள் கட்சித் தலைவியினுடைய பெயரையே சொல்ல வெட்கப்படுகிறீர்கள்; மறைக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

2011 ஜனவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார், நீங்கள் பேசுங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: இப்பொழுது starting time 11–56. Note பண்ணிக்கொள்ளுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமிக்குப் பின் அமைதி என்ற அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சுனாமியாகப் பேசி இப்பொழுது அமைதியாக நான் பேச இருக்கின்றேன். எனவே, அவருக்கு ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் கொடுத்தீர்கள். அதைவிட ஒரு 5 நிமிடம் கூடுதலாகக் கொடுத்தால் மகிழ்ச்சி கொண்டவனாக நான் இருப்பேன்.

இன்று நாடு முழுவதும் ஒலித்துக் கொண்டிருக்கும் குரல் புரட்சித் தலைவி அம்மா, அம்மா, அம்மா.

தமிழ்நாட்டை வளமாக்கவும் பலமாக்கவும் மீண்டும் விசுவரூபம் எடுத்து வரும் புரட்சித் தலைவி அம்மா, அம்மா, அம்மா.

தமிழகத்தை மீண்டும் தலைநிமிர வைக்க வரும் தாய்; இத்தரணியை நாளை ஆளப் போகும் எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா, அம்மா, அம்மா. (குறுக்கீடு) நீங்களும் அப்படிச் சொல்லுங்கள். அந்த இதய தெய்வத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி ஆரம்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெயக்குமார், சப்ஜெக்ட்டிற்குள்ளே வாருங்கள். திரும்பத் திரும்ப அம்மா, அம்மா என்று ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? எல்லோரும் சிரிக்கக்கூடிய அளவிலே கேலியாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்களே! எதற்கு?

திரு. டி. ஜெயக்குமார்: ஆளும் கட்சியில் வளரும் சர்வாதிகாரத்தைக் கண்டிப்பதா? ஆளும் கட்சியினால் ஏற்படும் அவதியை எடுத்துக் காட்டுவதா? ஆளும் கட்சியின் சட்ட திட்டங்களும், நிருவாக முறைகளும் நாட்டை எவ்விதத்தில் கெடுக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதா? பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு ஆட்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது, சமுதாயம் அனைத்தும் மகிழ்ச்சியாக இருக்கச் செய்ய வேண்டும்; நிம்மதியாக இருக்கச் செய்ய வேண்டும்; நிறைவாக இருக்கச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், இந்த மூன்றும் இல்லாத இந்த ஆட்சியின் அவல நிலை குறித்து ஆளுநர் உரையின்மீது எனது கருத்துகளை எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

[திரு. டி. ஜெயக்குமார்] [2011 ஜனவரி 13

இந்தக் கூட்டத் தொடரைத் தொடங்கி வைத்துப் பேசிய ஆளுநர் ஒன்பதாவது முறையாக இந்தச் சட்டமன்றத்தில் உரையாற்றியதாகப் பெருமிதம் கொண்டிருக்கிறார். அதை ஒன்றுமே இல்லாத உரை என்று தமிழக மக்கள் வீதிக்கு வீதி விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஓட்டு வாங்குவது ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட உரை.

தி.மு.க. மேடைகளில் பேசிக் கொண்டிருப்பதை சட்டமன்றத்தில் ஆளுநர் வாசித்திருக்கிறார். இதுவும் மக்களுடைய விமர்சனங்கள்தான்.

நகைச்சுவைக் காட்சிகள் நிறைந்த படம் என்று திரைப்படங்களுக்கு விளம்பரம் செய்வார்கள். நகைச்சுவை நிறைந்த உரை என்று ஆளுநர் உரைக்கும் விளம்பரம் செய்யலாம்.

இந்த உரையைக் கேட்டு சிரிப்பாய் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள் தமிழக மக்கள்.

ஏளனச் சிரிப்பு, கேலிச் சிரிப்பு, கிண்டல் சிரிப்பு என்று விதவிதமாகச் சிரித்தாலும், இந்த உரை முழுவதும் வேதனைச் சிரிப்பு என்பதுதான் உண்மை.

நண்பகல் 12—00

21 இலட்சம் கூரை வீடுகளைக் காரை வீடுகளாக மாற்றித் தருவோம் என்று கூறியிருக்கிறீர்கள். தேர்தலை மனதில் கொண்டு சில வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். மணல் விற்கும் விலையில், சிமெண்ட் விற்கும் விலையில், செங்கல் விற்கும் விலையில் வீடு கட்ட முடியாது என்பது விவரம் தெரிந்தவர்களுக்கும் தெரியும். 2 ஏக்கர் நிலம் கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்து, கொடுக்காமல் ஏமாற்றியதுபோல் வீடு கட்டும் திட்டமும் தேர்தலை மனதில் வைத்துக் கொண்டு வந்த திட்டம்தான். இதுவும் ஏமாற்றுத் திட்டம்தான். சட்டமன்றத் தேர்தல் முடிந்த பிறகு இந்தத் திட்டம் செயல்படப் போவதில்லை என்று மக்கள் பேச ஆரம்பித்தார்கள். அவர்களை நம்ப வைப்பதற்காக இப்பொழுதே அடையாள அட்டை கொடுக்கிறீர்கள். ஆனால் உண்மை நிலை என்ன? வீடு கட்டுவதற்குத் தேவையான சிமெண்ட், செங்கல், மணல், இரும்புக் கம்பிகள்

2011 ஜனவரி 13] [திரு. டி. ஜெயக்குமார்]

ஆகியவற்றின் விலைகள் கடந்த சில மாதங்களில் மட்டும் பன்மடங்கு உயர்ந்துள்ளன. 150 ரூபாயாக இருந்த ஒரு மூட்டை சிமென்டின் விலை தற்போது 300 ரூபாயாக உயர்ந்துள்ளது. அதேபோன்று 16,000 ரூபாய் என்ற விலைக்கு விற்கப்பட்டு வந்த ஒரு லாரி செங்கல்லின் விலை தற்போது 27,500 ரூபாயாக உயர்ந்துவிட்டது. 3 யூனிட் மணலின் விலை 18,000 ரூபாயாக உயர்ந்துவிட்டது. கட்டுமானத்திற்கான இரும்புக் கம்பியின் விலை டன்னுக்கு 3,000 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

அனலில் விழுந்த புழு போல துடித்துக்கொண்டிருக்கிறார்கள் மக்கள். திட்டமிட்டதைவிட இரு மடங்கு செலவு செய்ய வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டதன் காரணமாக, கட்டுமானப் பணிகளைப் பாதியில் நிறுத்த வேண்டிய அவல நிலைக்கு ஏழை, எளிய, சாமானிய மக்கள் ஆளாக்கப்பட்டுள்ளனர். பங்குச் சந்தை நிலவரத்தைப் போன்று கட்டுமானப் பொருட்களின் விலை நிலவரமும் ஆகிவிட்டது. நிலைமை இப்படி இருக்கும்போது 75,000 ரூபாயில் எப்படி வீடு கட்டுவது? இதில், 2016-ஆம் ஆண்டு வரை திட்டம் நடைமுறையில் இருக்கும் என்று அரசு அறிவித்து இருப்பது வேடிக்கையாக இருக்கிறது. ஒரு பழமொழி எனக்கு ஞாபகம் வருகிறது. "கடல் வத்தி கருவாடு சாப்பிட நினைத்த கொக்கு, குடல் வத்தி செத்ததாம்!" அதுபோன்ற நிலைதான் இந்த ஆட்சியாளர்களுக்கு ஏற்படும்.

இலவச வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தைத் துவக்கி வைத்து, மூன்று இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கும்தறுவாயில் இருப்பதாகவும், மேலும் 3 இலட்சம் வீடுகள் கட்ட இந்த ஆண்டிலேயே பணிகள் துவக்கப்படும் என்றும் கவர்னர் உரையில் பக்கம் 47, பத்தி 47-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினால் அரசு 3 இலட்சம் ஏழை மக்களை, அதாவது பயனாளிகளை தலா 1-இலிருந்து ஒன்றரை இலட்சம் ரூபாய் வரை கடனாளியாக்கி உள்ளது. அதாவது, 3 இலட்சம் பயனாளிகளை 1.50 இலட்சம் ரூபாய் கடனாளியாக்கியதுடன், மேலும் இந்த ஆண்டே மேலும் 3 இலட்சம் குடும்பத்தினரைக் கடனாளியாக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. அரசுக் கணக்குப்படி, அஸ்திவாரத்திற்கு ரூ. 9,500, கூரை மட்டம் வரை 23 ஆயிரம் ரூபாய், concrete கூரை அமைக்க 16 ஆயிரம்

[திரு. டி. ஜெயக்குமார்] [2011 ஜனவரி 13

ரூபாய், இறுதிக் கட்டப் பணிக்கு 26,500 ரூபாய் என்று நான்கு கட்டமாக 75 ஆயிரம் ரூபாய் அரசு வழங்குகிறது. இதில் அரசு வழங்கும் 60 மூட்டை சிமெண்ட், 155 கிலோ இரும்புக் கம்பி, ஒரு கதவு, இரண்டு ஜன்னல்கள் ஆகியவற்றிற்கான தொகை பிடித்தம் செய்யப்படுகிறது. செங்கல், மணல், சிமெண்ட், இரும்புக் கம்பியின் விலை உயர்வால், கூடுதலாக அதாவது அஸ்திவாரம் அமைக்க 16,000 ரூபாயும், கூடுதல் சிமெண்டிற்கு 14,000 ரூபாயும், இரும்புக் கம்பிக்காக 6,000 ரூபாயும், செங்கல் வாங்குவதற்கு 56,000 ரூபாயும், மணல் வாங்குவதற்கு 20,000 ரூபாயும், கூடுதல் கருங்கல் ஜல்லி வாங்கிட 5,000 ரூபாயும், கட்டடப் பணிக் கூலிக்காக மொத்தம் 30,000 ரூபாயும், மேலும் மின் இணைப்புப் பணிகளைச் சேர்த்து 1.50 இலட்சம் ரூபாய் கடன் வாங்கித்தான் பயனாளிகள் வீடு கட்டிக்கொள்ள முடிகிறது.

அரசு கூறியதுபோல, எந்த வங்கியும், கூடுதல் செலவிற்குக் கடன் கொடுத்ததாகத் தெரியவில்லை. இந்தத் திட்டத்தைப் பார்த்தால், கிராமத்தில் கூறும் பழமொழி ஒன்றுதான் நினைவுக்கு வருகிறது. "சொம்பைக் காட்டி, அண்டாவைத் தள்ளிக் கொண்டு போய்விட்டான்" என்று சொல்வார்கள். இலவச வீடு கட்டும் திட்டம் என்ற சொம்பைக் காட்டி, அண்டாவான ஏழை மக்கள் பணத்தை, தனக்குச் சொந்தமாக்கத் தொழில் அதிபர்கள் பெறும் வகையில் இந்த அரசு நடந்துகொள்கிறது என்று கூறலாம்.

கிராமப்புற மக்களை ஏமாற்றியதுபோல குடிசைக்குப் பதிலாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை நகர்ப்புறங்களிலும் கொண்டு வருவோம் என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. நகர்ப்புறங்களில் செல்வாக்காக இருந்த தி.மு.க. இப்பொழுது நகர்ப்புறங்களிலும் பலவீனமாகிவிட்டது என்று பல பத்திரிகைகள் எழுதுகின்றன; ஊடகங்கள் சொல்லுகின்றன.

நகர்ப்புற மக்கள் நம்மைவிட்டு விலகிச் செல்கிறார்கள் என்பதாலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி அமைய அவர்கள் முடிவெடுத்துவிட்டதைத் தடுப்பதற்காகவும், நீங்கள் போடும் திட்டம்தான் நகர்ப்புற குடிசைகளையும் வீடுகளாக மாற்றுவோம் என்ற அறிவிப்பு.

எத்தனை அறிவிப்பு வந்தாலும் அவர்கள் ஆதரிக்கப் போவது எங்களைத்தான், அம்மாவைத்தான் என்பது உறுதியாகிவிட்ட ஒன்று.

2011 ஜனவரி 13] [திரு. டி. ஜெயக்குமார்]

வீட்டைக் காட்டி, ஓட்டைப் பறிக்க நினைக்கும் உங்கள் எண்ணம் பலிக்கப் போவதில்லை என்பதைப் பார்க்கத்தான் போகிறீர்கள்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மாய்ந்து மாய்ந்து சுழல் நிதி கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி அவர்களிடம் சொந்தக் காலில் நிற்கின்ற தன்னம்பிக்கையை வளர்த்தவர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். யார் தயவையும் எதிர்பார்க்காமல், சுயமாக, கௌரவமாக வாழ முடியும் என்ற மன உறுதியை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஊட்டியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் மனதில் இன்றும் இருப்பது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அவர்களுக்குக் கிடைக்கின்ற நிதியைவிட தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய நீதிதான் அவர்களுக்கு முக்கியம் என்பதை உணர்ந்துதான் இருக்கின்றார்கள். நிதி வாங்கியவர்கள் எல்லாம் உங்களுக்குத்தான் வாக்களிப்பார்கள் என்று கனவு காண்கிறீர்கள். அது கனவாகத்தான் முடியப் போகிறது என்பது தேர்தல் நேரத்தில் உங்களுக்குத் தெரியத்தான் போகிறது.

நகர்ப்புறமாக இருந்தாலும் சரி, கிராமப்புறமாக இருந்தாலும் சரி, அடிப்படை வசதிகள் எல்லாம் அடியோடு சிதைந்து போய்விட்டன. உங்கள் ஆட்சியில் ஒழுங்கான குடிதண்ணீர் வசதி இல்லை. சாலை வசதி இல்லை. கழிப்பிட வசதி இல்லை. விவசாயிகள் வேதனையில் இருக்கின்றார்கள். தொழிலாளர்களோ துன்பத்தில் இருக்கிறார்கள். நெசவாளர்கள் நெஞ்சம் புண்பட்டுப் போயிருக்கிறார்கள். நகரங்களும், கிராமங்களும் அவலங்களாக மாறிவிட்டன.

பிற்பகல் 12–05

விலைவாசி உயர்வால் வேதனையின் விளிம்பில் நொந்து நூலாகி 'நூடுல்ஸ்' ஆகி உள்ளனர். விலைவாசி உயர்வால் வாழ்வதா, சாவதா என்ற பரிதாப நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டு உள்ளனர். விலைவாசி உயர்வில் உயிரே போய்க்கொண்டிருக்கிறது. விண்ணைத் தொடும் விஷம் விலைவாசி உயர்வு. கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்குக் காய்கறி விலை உயர்ந்துபோய் இருக்கிறது. வெங்காயம் வேண்டாத விருந்தாளிபோல ஆகிவிட்டது. வெங்காயத்தை

[திரு. டி. ஜெயக்குமார்] [2011 ஜனவரி 13

உரித்தால்தான் கண்ணீர் வரும் என்று சொன்னால், இப்போது விலையைக் கேட்டாலே கண்ணீர் வருகிறது. தக்காளி விலையைக் கேட்டால் சீக்காளி போல ஆகிவிடுகிறார்கள் தாய்மார்கள். எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் இருந்ததைவிட, பல மடங்கு விலைவாசி ஏறிப் போயிருக்கிறது.

உங்கள் ஆட்சியில், ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்குப் போடுகிறீர்கள். ஆனால், வெளி மார்க்கெட்டில் அரிசி ஒரு கிலோ 40 ரூபாய், கடலை எண்ணெய் ஒரு கிலோ 42 ரூபாய், வெங்காயம் ஒரு கிலோ 80 ரூபாய், பாமாயில் ஒரு கிலோ 60 ரூபாய், முட்டை ஒன்று ரூ. 3.50 காசு, மிளகாய்த் தூள் ஒரு கிலோ 220 ரூபாய், உப்பு, அதுகூட ஒரு கிலோ ரூ.7 ஆகிவிட்டது. தக்காளி—நம்முடைய canteen—இல் தக்காளிச் சட்டினியே கொடுப்பதில்லை—தக்காளி ஒரு கிலோ 40 ரூபாய், தனியா ஒரு கிலோ 60 ரூபாய், கடுகு ஒரு கிலோ 58 ரூபாய், மிளகு ஒரு கிலோ 300 ரூபாய், முந்திரி ஒரு கிலோ 460 ரூபாய், பூண்டு ஒரு கிலோ ரூ.200, இஞ்சி ஒரு கிலோ 80 ரூபாய், புளி ஒரு கிலோ 100 ரூபாய். வெங்காயம் பதுக்கல்காரர்களால் பதுக்கப்படுகிறது என்று சில பத்திரிகைகள் எழுதுகின்றன. அந்தச் செய்தி உண்மையாக இருந்தால் பதுக்கியது யார்? இன்றைய தங்கம் நிலவரம்போல வெங்காய நிலவரமும் ஆகிவிட்டது. வெங்காய மண்டியில்கூட Income Tax raid அடித்தது உங்கள் ஆட்சியில்தான் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசி ஏற்றம் குறித்து நேற்றுகூட தெரிவித்தேன். அது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால், தமிழக அரசைப் பொறுத்தவரையிலும், விலைவாசியை எந்த அளவிற்குக் கட்டுப்படுத்தியிருக்கிறது என்பதையெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

ஆனால், 2001—இலே அம்மையார் அவர்கள் ஆட்சிக்கு வந்து 2006—இல் ஆட்சியை விட்டுப் போகிறபோது விலைவாசியைக் கட்டுப்படுத்தி வைத்ததைப்போல இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள்; அப்படியல்ல. இரண்டே இரண்டு உதாரணங்களை நான் சொல்ல விரும்புகிறேன். துவரம் பருப்பைப் பொறுத்த அளவில், ஆட்சிக்கு வந்து, ஆட்சியை விட்டுப்

2011 ஜனவரி 13] [திரு. எ.வ. வேலு]

போகிறபோது 21 சதவிகிதம் உங்கள் ஆட்சியில் ஏறித்தான் இருந்தது. நல்லெண்ணெயைப் பொறுத்த அளவில், நீங்கள் ஆட்சிக்கு வந்து, ஆட்சியை விட்டு போகிறபோது விலைவாசி ஏற்றம் என்று பார்க்கிறபோது 46 சதவிகிதம் விலையேற்றம் இருக்கத்தான் செய்தது. அதேபோன்று சர்க்கரை. சர்க்கரைகூட ஆட்சிக்கு நீங்கள் வருகிறபோது, ஆட்சியை விட்டுப் போகிறபோது 29.45 சதவிகிதம் விலையேற்றம் இருக்கத்தான் செய்தது. மிளகாய் இருக்கிறதே, அது 51 சதவிகிதம் விலையேற்றம் இருந்தது. புளியைப் பொறுத்தவரையில், ஆட்சிக்கு வந்து நீங்கள் ஆட்சியை விட்டுப் போகிறபோது 74 சதவிகிதம் ஏறியிருக்கிறது. எப்போதும் விலையேற்றம் என்பது, நீங்கள் ஆட்சியில் இருந்தாலும் சரி, நாங்கள் ஆட்சியில் இருந்தாலும் சரி, விலையேற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால், அந்த விலையேற்றத்தை நாங்கள் கட்டுப்படுத்தியிருக்கிறோம். பொது விநியோகத் திட்டத்தின்மூலமாக ரூ. 80 துவரம் பருப்பு விற்கிறபோது, ரூ. 40/-க்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். பாமாயில் ரூ. 60 என்று குறிப்பிட்டீர்கள். பாமாயில் ரேஷன் கடைக்குப் போனால் ரூ. 30/-க்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். உளுத்தம் பருப்பு ரூ. 40/-க்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். வெளி மார்க்கெட் என்று பேசுவதென்பது, நீங்கள் பொது மக்களுக்காகப் பேசவில்லை; பணக்காரர்களுக்காகப் பேசிக்கொண்டிருக்கிறீர்களேயொழிய, இந்த ஆட்சி ஏழையெளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, தொழிலாளர் மக்களுக்காக இருக்கிற ஆட்சி இந்த ஆட்சி, கலைஞர் ஆட்சியில் விலைவாசியைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறோம்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய வெங்காய விளக்கத்தை மக்கள் கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றார்கள். நல்ல தீர்ப்பு வழங்குவார்கள்.

யானையை ஒரு ரூபாய்க்குக் கொடுத்துவிட்டு அங்குசத்தை ஒரு கோடி ரூபாய் என்று சொல்வதைப்போல, நியாய விலைக் கடைகளில் அரிசியை ஒரு ரூபாய்க்கு கொடுக்கிறீர்கள்; குழம்பு வைக்க முடியாமல் குடும்பங்களைக் குழப்ப வைத்திருக்கிறீர்கள்; கொந்தளிக்க வைத்திருக்கிறீர்கள். அதுவும், நியாய விலைக் கடைகளில் மட்டும்தான் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய், வெளி மார்க்கெட்டில் என்ன விலை என்பது, வாங்க முடியாமல் தவித்துக்

[திரு. டி. ஜெயக்குமார்] [2011 ஜனவரி 13

கொண்டிருப்பவர்களுக்குத் தெரியும். ஆனால், வெளி மார்க்கெட்டிலும் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி கிடைப்பதைப் போல ஒரு மாயையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

நதி நீர் இணைப்புத் திட்டம், அண்டை மாநிலங்களுடனான நதி நீர்ப் பங்கீடு ஆகியவை ஆளுநர் உரையில் இடம் பெறாததில் இருந்து அந்தத் திட்டங்களைச் சுத்தமாகக் கை கழுவி விட்டீர்கள் என்பதைத் தெளிவுபடுத்திவிட்டீர்கள்.

உங்கள் ஆட்சியின் சாதனைகள் என்று நீங்கள் பட்டியல் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் ஆட்சியின் வேதனைகளை தமிழக மக்கள் பட்டியல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். உங்களது சாதனைகளைவிட வேதனைகளும், சோதனைகளும்தான் அதிகம், அதிகம் என்பது அவர்களுக்குத் தெரியும்.

பராமரிக்கப்படாத, குண்டும் குழியுமாக உள்ள மோசமான சாலைகள், மரணப் படுகுழிகள், பாலம் கட்டும் பணிகள் நடைபெறும் இடங்களில் அதிக விபத்துகள் ஏற்படுகின்றன. இத்தகைய காரணங்களால் மட்டும் இந்த ஆண்டில் சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் 150 பேர் வரை இறந்துள்ளனர். இது தவிர, மோசமான பருவ நிலையாலும், இரவு நேரத்திலும், சாலையோரத்தில் நிறுத்தப்படும் வாகனங்களிலும் மோதி விபத்தில் சிக்கி அதிக அளவில் உயிரிழக்கின்றனர். முக்கியமாக, தமிழக அரசு, சாலை மேம்பாட்டுப் பணிகளில் அதிக கவனம் செலுத்துவதில்லை. சாலைகளையும் சரிவர பராமரிப்பதில்லை. இவையே சாலை விபத்துகளுக்கு முக்கியக் காரணமாகும். எனவே, தமிழக அரசு இனியும் காலந்தாழ்த்தாமல் சாலைகளைப் பராமரிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12—10

மேலும் சாலை விபத்துகளினால் உயிரிழக்கும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை பல ஆண்டுகளாக வழங்கப்படவில்லை. அதிகரிக்கப்படவும் இல்லை. அதனை அதிகரிக்கவும், உடனடியாக வழங்கப்படவும் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனது இராயபுரம் தொகுதியில், சாலைகள் குண்டும், குழியுமாக இருப்பதன் காரணமாக container lorry மோதி தாய் மற்றும் இரு குழந்தைகள் அந்த இடத்திலேயே இறந்த சோகச் சம்பவம் இந்த

2011 ஜனவரி 13] [திரு. டி. ஜெயக்குமார்]

அவல ஆட்சியால் ஏற்பட்டது. அந்தக் குடும்பத்தின் சாபம் நிச்சயமாக இந்த ஆட்சியை வீழ்த்தும்.

அனைத்துச் சாலைகளும் குண்டும் குழியுமாக, மேடும் பள்ளமுமாக பல் இளித்துக் கொண்டு, சென்னை நகரச் சாலைகளில் எந்த வாகனமும் செல்ல இயலாத அளவுக்கு படுமோசமான நிலைக்குக் கொண்டு சென்றுவிட்ட பெருமை இந்த தி.மு.க. அரசையே சாரும். மழைநீர் வடிகால்கள் உரிய முறையில் கட்டப்படாதது மற்றும் இருக்கின்ற வடிகால்களும் உரிய காலத்தில் முறைப்படி பராமரிக்கப்படாதது ஆகியவையே மழை, வெள்ள நீர் தேங்குவதற்கு முக்கியக் காரணங்களாகும். இவற்றைச் சரிசெய்ய அரசால் முடியவில்லை. ஆனால் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவில் சாலைக் கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று தம்பட்டம். எங்கே போய் அடித்துக்கொள்வது? தலைநகரச் சாலைகளையே பராமரிக்க முடியாத உங்களால், தமிழகத்தின் அனைத்துச் சாலைகளையும் எப்படிச் செப்பனிட முடியும்?

தமிழகத்தில் சட்டம்—ஒழுங்கு சந்தி சிரித்துக் கொண்டிருக்கிறது என்பது சத்தியம். தினம் தினம் கொலை, கொள்ளை, கடத்தல், அரிசி கடத்தல், மணல் கடத்தல், குழந்தைகள் கடத்தல் இல்லாத நாள் இல்லை; இல்லாத செய்தித் தாள்கள் இல்லை.

வீட்டை உடைத்துத் திருடுகிறார்கள்; பூட்டை உடைத்துத் திருடுகிறார்கள்; வங்கிகளின் A.T.M.—களை உடைத்துத் திருடுகிறார்கள். இரும்பு லாக்கரையே தூக்கிச் செல்கிறார்கள். திருட்டு என்பது உங்களுடைய ஆட்சியிலே சகஜமாகிவிட்டது. கொலை என்பது அன்றாட நடவடிக்கையாகிவிட்டது. உங்கள் ஆட்சியில் திருடர்களுக்கும் பயம் இல்லை. தீவிரவாதிகளுக்கும் பயம் இல்லை; கடத்தல்காரர்களுக்கும் பயம் இல்லை; இதோ உதாரணங்கள் சில.

அம்பத்தூர் அ.இ.அ.தி.மு.க. நகரச் செயலாளர் திரு. எம்.ஆர். ரவி படுகொலையில் ஆரம்பித்து பல கொலைச் சம்பவங்கள் அன்றாடம் நடந்து வருகின்றன.

சேலம், தாசநாயக்கன்பட்டியைச் சேர்ந்த ஆறு பேர் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட கொலைக் குற்றவாளியை அமைச்சரே நேரில் காரில் சென்று பார்க்கிறார். இன்னோர் அமைச்சர்

[திரு. டி. ஜெயக்குமார்] [2011 ஜனவரி 13

கம்யூனிஸ்டு தோழர்களை மிரட்டுகிறார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. தா. பாண்டியன் தாக்கப்படுகிறார்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் கொலை மிரட்டல். புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லை. இப்படி தி.மு.க. அரசின் சட்டம்—ஒழுங்கு சீரழிவிற்குப் பல சம்பவங்களை எடுத்துக் கூறலாம்.

சங்கரன்கோவிலில் நாட்டு வெடி குண்டுகள் தயாரிப்பு, நெல்லையில் எவர்சில்வர் கூஜா குண்டுகள் பதுக்கல், சேலத்தில் நக்சல் சதி வேலைக்கு வெடி மருந்து சப்ளை, சென்னையில் ராக்கெட் லாஞ்சர் தயாரிப்பு, ஓசூரில் கட்டடங்களைத் தகர்க்கும் வெடி குண்டுகள், டெட்டனேட்டர்கள், ஜெலட்டின் குச்சிகள் தயாரிப்பு, அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் இல்லத்தில் குண்டு வெடிப்பு, சென்ட்ரல் ரயில் நிலையம் எதிரே உள்ள போலீஸ் பூத்தில் பட்டப் பகலில் ரவுடி டில்லி பாபு கொலைக் கும்பலால் வெட்டிக் கொலை, ராஜபாளையத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் வீட்டிற்குள் வெட்டிக் கொலை, ம.தி.மு.க. ஊராட்சித் தலைவர் ராஜேந்திரன் வெட்டிக் கொலை, திருவொற்றியூர் நகரப் பாட்டாளி மக்கள் கட்சியின் துணைச் செயலாளர் ஓட ஓட வெட்டப்பட்டது, சென்னை அயனாவரம் காவல் நிலையத்தில் மிரட்டி லாக் அப்பில் இருந்த கைதியை மீட்டுச் சென்ற சட்டமன்ற உறுப்பினர், சென்னையை அடுத்த துரைப்பாக்கத்தில் ரவுடி ஒருவன் ஓட ஓட விரட்டிப் படுகொலை, கடலூர் அருகே காணாமல் போன மூவர் கிரிக்கெட் மைதானத்தில் புதைப்பு என்று அடுக்கிக்கொண்டே போகும் அளவுக்கு எண்ணற்ற அராஜகச் செயல்கள் தமிழ்நாட்டிலே கடந்த ஐந்து ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கின்றன.

சென்னை அம்பத்தூரில், தி.மு.க. கவுன்சிலர் ஒருவரால் அரசுப் போக்குவரத்து ஓட்டுநர் மற்றும் நடத்துநர் தாக்கப்பட்டது, கன்னியாகுமரி மாவட்டத்தில், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த அரசுப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர் ரவுடிகளால் தாக்கப்பட்டுப் படுகாயம், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் திரு. வெங்கடாசலம் படுபயங்கரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டது, தி.மு.க. வட்டச் செயலாளர் ஒருவர் படுகொலை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தூத்துக்குடி மண்டல உதவி தரக் கட்டுப்பாட்டு ஆய்வாளர், தலித் சமுதாயத்தைச் சேர்ந்த

2011 ஜனவரி 13] [திரு. டி. ஜெயக்குமார்]

திரு. முருகன், ரேஷன் பொருள் கடத்தலைத் தடுத்தபோது படுகொலை செய்யப்பட்டது, திருமங்கலத்தில் 17–9–2010 அன்று அ.தி.மு.க. உறுப்பினர்கள்மீது ரவுடிகள் பயங்கரத் தாக்குதல், கோயம்புத்தூர் மாவட்டத்தில் இரண்டு குழந்தைகள் கடத்தப்பட்டு கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டது, சென்னை, அண்ணா நகரில், சிறுவன் கடத்தப்பட்டு, மிகக் கேவலமாகப் பணத்தைக் கொடுத்து காவல் துறை சிறுவனை மீட்ட சம்பவம், சிறுவன் ஒருவனை கொலை செய்து துண்டு துண்டாக வெட்டி, சூட்கேசில் அடைத்து பேருந்து நிலையத்திலே வைத்தது. தி.மு.க. ஆட்சியில் குழந்தைகள்கூட குதூகலமாக இருக்க முடியவில்லை. இன்று தமிழகத்தில் குழந்தைகள் கடத்தல் என்பது குடிசைத் தொழில் ஆகிவிட்டது.

உயர் நீதிமன்றத்தில், நீதிபதிகள் முன்னிலையில், ரவுடிகளால் வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் கொடூரமான முறையில் தாக்கப்பட்ட நிகழ்ச்சி, திருவள்ளூர் அருகே புரட்சி பாரதம் கட்சி நிருவாகி பட்டப் பகலில் கொலை செய்யப்பட்டது, முன்னாள் அமைச்சர் திரு. தா. கிருட்டிணன் கொலை, மதுரை தினகரன் அலுவலகத்தில், ஊழியர்கள் 3 பேர் படுகொலை.

பிப்ரவரி 22-இல் சென்னையில் எழும்பூர் நீதிமன்ற வக்கீல் சம்பத் மகன் கண்ணெதிரில் சரமாரியாக வெட்டிப் படுகொலை, ஏப்ரல் 30-இல், சென்னை ரவுடி சின்னா, பூந்தமல்லியில் வெட்டிப் படுகொலை, உடன் சென்ற வக்கீல் பகவதிசிங்கும் கொலை.

சென்னை, இராயப்பேட்டை தி.மு.க. கவுன்சிலர் திரு. சேரன், கடந்த மே 27-ஆம் தேதி தனது அலுவலகத்திலே படுகொலை, சிவகங்கையிலே தி.மு.க.வைச் சேர்ந்த முருகன் என்பவர் படுகொலை, சாத்தூரிலே தலைமைக் காவலர் வெட்டிக் கொலை.

சென்னை, வேளச்சேரியைச் சேர்ந்த மின் வாரிய அதிகாரி ராஜேந்திரன் கடந்த ஜூலை மாதம் திடீரெனக் காணாமல் போனதாகப் போலீசில் புகார் செய்யப்பட்டு, விசாரணையில், பெண் போலீஸ் ஏட்டு சாஸ்திரக்கனி, புதுக் காதலன், போலீஸ் நண்பர்கள் குழுவைச் சேர்ந்த வீரா மற்றும் கூட்டாளிகள் சேர்ந்து ராஜேந்திரனைக் கடத்திச் சென்று, கொலை செய்து உடலை எரித்தது, மக்கள் பிரதிநிதியாகச் சேவை செய்ய வந்து கொள்ளையனாக மாறிய ரவிசங்கரனின் பரபரப்புக் குற்றங்கள் திகில் ஒரு ரகம்.

[திரு. டி. ஜெயக்குமார்] [2011 ஜனவரி 13

பிற்பகல் 12—15

அக்டோபர் 17—இல் சென்னை, அசோக் நகரில் ஓய்வுபெற்ற பொதுப் பணித் துறை அதிகாரி வெங்கட்ராகவன் வீட்டில் வருமான வரித் துறை அதிகாரி போல் நடித்து 25 சவரன் நகைகளைச் சுருட்ட நினைத்தார் ரவிசங்கர். அவரைப் பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்தனர். விசாரணையில் இவர் விளாத்திகுளம் முன்னாள் எம்.எல்.ஏ. என்ற விஷயம் தெரிய வந்தது. கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல, போதைப் பொருள் கடத்தல், விளாத்திகுளம் கூட்டுறவு வங்கி மோசடி எனப் பல வழக்குகள் இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளன. நெல்லை மாவட்டம், ஆழ்வார்குறிச்சி சப்—இன்ஸ்பெக்டர் வெற்றிவேல் கொல்லப்பட்டார். சென்னையில், கீர்த்திவாசன் என்ற மாணவர் நவம்பர் 3-ஆம் தேதி கடத்தப்பட்டான்.

ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள், குற்றங்களைத் தடுக்கும் முயற்சியில் இறங்காமல், வேடிக்கை பார்ப்பதும், குற்றங்கள் புரிவோருக்கு உரிய பதவியும் கொடுத்து அழகு பார்ப்பதால் இந்தியாவிலேயே குற்றங்கள் அதிகரிக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு மாறிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

2009-ஆம் ஆண்டு நடந்த major crime trends – பிரதானக் குற்றங்கள் 22,941; நடந்த கொலைகள் 1,644; ஆதாயக் கொலைகள் 123; கூட்டுக் கொள்ளைகள் 97; நடந்த கொள்ளைகள் 1,144; கன்னக்கோல் 4,221; பிற திருட்டுகள் 15,712. Violent crimes, அதாவது major crimes 10,518. அதேபோன்று 2008-ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடந்ததில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதல் இடம் வகிக்கிறது என்ற புள்ளிவிவரங்களோடு National Crime Records Bureau கூறுகிறது. இது உங்கள் ஆட்சிக்குக் கிடைத்த ஒரு நற்சான்றிதழ்.

குற்றங்களைத் தடுக்க வேண்டிய காவல் துறையின் strength நியாயமாக இருக்கிறதா என்றால் இல்லை. 1,04,901 எண்ணிக்கையில் இருக்க வேண்டிய காவல் துறை அலுவலர்கள் 89,651 பேர் என்ற அளவில்தான் இருக்கிறார்கள். Additional Director General of Police பதவியில் இருந்து கடைநிலைக் காவலர்கள் வரை பல பணியிடங்கள் நிரப்பப்படாமலேயே இருக்கின்றன.

2011 ஜனவரி 13] [திரு. டி. ஜெயக்குமார்]

இவ்வளவுக் குறைகள் இருக்கின்ற காவல் துறை, நவீனப்படுத்தப்பட்டிருப்பதாக ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. ஆனால், எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத வகையில், காவல் துறை நவீனம் அல்ல, பலவீனப்படுத்தப்பட்டிருக்கிறது. எங்குப் பார்த்தாலும் கொலை, கொள்ளை, சாமி சிலை திருட்டு, குழந்தைகள் கடத்திக் கொலை, வீட்டில் இருக்கும் பெண்களிடம் தாலித் திருட்டு, கோயில் உண்டியல் உடைத்துக் கொள்ளை பெருகிவிட்டது. ரௌடிகளின் அராஜகம், ஆளுங்கட்சியினரே காவல் அதிகாரிகளை மிரட்டி லாக்-அப்பில் இருந்து கைதிகளை மீட்டுச் செல்வது போன்ற பல்வேறு அடாவடித்தனங்களை இந்த ஆட்சியில்தான் பார்க்க முடியும். 'தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை' என்ற பழமொழியைப் போல அரசின் தலைமை பீடத்தில் இருப்பவர்கள் சொல்வதைக் கேட்டு நடக்கும் காவல் துறை, நவீனப்படுத்தப்பட்ட காவல் துறை என்று கூறிக்கொள்ளும் உங்களது ஆட்சியில்தான், காவலர்களுக்கே ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதை இந்த நாடே அறியும்.

உங்கள் ஆட்சியில்தான் காவல் துறையைச் சார்ந்த இரு அதிகாரிகள் உயர் நீதிமன்ற வளாகத்தில் நடந்த சம்பவத்திற்காக ஒருவரை ஒருவர் தூற்றிக்கொண்ட சம்பவங்கள் எல்லாம் நடந்தன. உயர் நீதிமன்ற வளாகத்தில் மாணவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டபோது மனதில் ஈரமே இல்லாமல் வேடிக்கை பார்த்த காவலர்கள் உயர் நீதிமன்ற நீதிபதியை மண்டையில் அடித்துக் காயப்படுத்தினர். உங்களுடைய ஆட்சியில் மருத்துவர்கள் தாக்கப்பட்டனர். விவசாயிகள் தாக்கப்பட்டனர். அடிப்படை வசதிகளைக் கோரும் பொது மக்கள் தாக்கப்பட்டனர். சத்துணவுத் துறை ஊழியர்கள், அதுவும் பெண்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். தங்களது உரிமைக்காகப் போராடிய தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர். ஏன், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர், மேலூர் சாமி தாக்கப்பட்டார். எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற காரணத்திற்காகக் குடியாத்தம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டு இன்று வரை மருத்துவ உதவியுடன்தான் வலம் வருகிறார். மொத்தத்தில் தமிழகக் காவல் துறையைப் பார்த்தால் அரசின் தலைமையிடத்திற்கு ஜால்ரா போட்டுக் கொண்டிருக்கிறது. "சிரங்கு உள்ளவனுக்குச் சொரிபவன்தான் சொந்தக்காரனாக இருக்க முடியும்" என்ற கிராமத்துப் பழமொழியைப் போல, தமிழகக்

[திரு. டி. ஜெயக்குமார்] [2011 ஜனவரி 13

காவல் துறை ஆளுங்கட்சிக்குச் சொரிந்து விட்டுக்கொண்டிருக்கிறது என்றே கூறலாம். நிலைமை இவ்வாறு இருக்க, சட்டம்-ஒழுங்கைப் பேணுவதில் தமிழக அரசு மிகச் சிறப்பாகச் செயல்படுவதன் விளைவாக, தமிழகத்தில் அமைதியான சூழல் நிலவி வருகிறது என்று ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 'முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்தது போல' என்று சொல்வார்கள்; ஆனால், நீங்கள் யானையையே மறைக்கப் பார்க்கிறீர்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் செயல் நிறைந்த காவல் துறையாக இருந்தது. உங்கள் ஆட்சியில் செயல் இழந்த காவல் துறையாகிவிட்டது என்பது படிப்பறிவில்லாத பாமரனுக்கும்கூட தெரிந்த உண்மை.

நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள். அதனால் இந்த நாடே பாதுகாப்பாக இருக்கிறது என்று தமிழக மக்களை நம்ப வைக்க முயற்சி செய்கிறீர்கள்.

உங்கள் ஆட்சியில் மக்களுக்கு இருந்த நம்பிக்கை போய் பல மாதங்களாகிவிட்டன. அதைச் சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நான்கு ஆண்டுகளில் 12,137 பேருந்துகள் வாங்கப்பட்டதாகவும், மேலும் இந்த ஆண்டில் 3,000 புதிய பேருந்துகள் வாங்கப் போவதாகவும் கவர்னர் உரையிலே இடம் பெற்றிருக்கிறது, பக்கம் 19, பத்தி 22. அதே பத்தியில், 2006–2007-ஆம் ஆண்டில் பயணிகளின் எண்ணிக்கை 1 கோடியே 77 இலட்சம் என்றும், 2009–2010-ஆம் ஆண்டில் 205 இலட்சம்—2 கோடியே 5 இலட்சம்—என்றும் குறிப்பிட ப்பட்டுள்ளது. இது எதைக் காட்டுகிறது என்றால், பேருந்துகள் எண்ணிக்கை விகிதாசாரத்தையும், பயணிகளின் எண்ணிக்கை விகிதாசாரத்தையும் ஒப்பிடும்போது, பயணிகளின் எண்ணிக்கை 2½ கோடியாக உயர்ந்து இருக்க வேண்டும். ஆனால், குறைந்திருக்கிறது. உயர்த்தப்பட்ட பேருந்து பயணச்சீட்டுக் கட்டணம், சரியான வசதிகள் செய்து தராதது, தேவையான வழித் தடத்தில், அதாவது, வருமானம் வரும் வழித் தடங்களைத் தனியாருக்கு தாரை வார்த்துவிட்டு, ஈ அடித்துக் கொண்டிருக்கும் ரூட்டில் அரசுப் பேருந்தை இயக்குவது போன்ற பொறுப்பற்ற செயல்களால் ... (குறுக்கீடு)

2011 ஜனவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15,000 புதிய பேருந்துகள் வாங்கித் தரப்பட்டிருக்கின்றன. உண்மை. 2 கோடியே 11 இலட்சம் பேர்கள் ஏறி இறங்குவதும் உண்மை. ஆனால், நீங்கள் ஏதோ விகிதாச்சார அடிப்படையில் பேருந்துகள் அதிகப்படுத்த, அதிகப்படுத்த பயணிகள் அதிகப்பட வேண்டுமென்று சொல்வது எந்தவகையிலே நியாயம்? தேவையுள்ளவர்கள் ஏறி இறங்குகிறார்கள். நீங்கள் விகிதாச்சார அடிப்படையிலே இதை எப்படிக் கொண்டு வர முடியும்? நீங்கள் அதை எப்படிச் சொல்கிறீர்கள்? பழைய பேருந்துகள், புதியதாக மாற்றப்பட்டிருக்கின்றன. உங்கள் காலத்தில் 5 ஆண்டுக் காலமும் 5,600 பேருந்துகள் வாங்கப்பட்டன. இந்த நான்கரை ஆண்டுக் காலங்களில் 15 ஆயிரம் பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன. இது உண்மை. நீங்கள் எல்லாவற்றையும் பேப்பரைப் பார்த்துவிட்டு அங்கே கொலை, இங்கே கொலை என்று படிப்பது மாதிரி, இங்கே இதையும் சேர்த்துப் படிக்கிறீர்களே! இது என்ன நியாயம்? (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. விசுவநாதன், உங்களுக்கு இதிலே என்ன இருக்கிறது? திரு. டி. ஜெயக்குமார் பேசுகிறார், அதற்கு அமைச்சர் பதில் சொல்கிறார். திரு. விசுவநாதன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதிலே clarification–உம் இல்லை point of order–உம் இல்லை. Nothing. உட்காருங்கள் (குறுக்கீடுகள்)

திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? சொல்லுங்கள் திரு. இரா. விசுவநாதன்.

திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தவறான தகவலைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் கூடுதல் பேருந்துகள் வாங்கியதற்கு மேலாக–ஏறத்தாழ 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் கடன் சுமையில்

[திரு. இரா. விசுவநாதன்] [2011 ஜனவரி 13

இருக்கின்றபொழுது—நேற்றைக்கு அமைச்சர் தவறான தகவலாக ஆயிரம் கோடிதான் மொத்தம் கடன் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு—ஏற்கெனவே இருந்த கடன் 2 ஆயிரம் கோடி 50 ஆண்டுக் காலமாக. இப்பொழுது ஏற்பட்டிருக்கிற கடன் 2 ஆயிரத்து 500 கோடி. உங்கள் ஆட்சியில் மட்டும் ஏற்பட்டிருக்கிற கடன் 2 ஆயிரத்து 500 கோடி. ஆக 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் கடன் வாங்கி இருக்கிறார்கள். அந்தக் கடனையும் புதிய பேருந்துகள் வாங்கியதற்குக் கணக்கிட்டாலும்கூட இன்னும் 30 ஆயிரம் பேருந்துகள் வாங்கியிருக்கலாம், இந்தக் கடனுக்கு. அதுமட்டுமல்ல; occupancy ratio என்று சொல்வார்கள். பயணிகளுடைய அடர்வு, அந்த அடர்வு கூடியிருப்பதாகச் சொல்கிறார். பயணிகள் occupancy ratio கூடியிருக்கும்போது, நட்டம் வருவதற்கு வாய்ப்பேயில்லை. ஆனால், இப்பொழுது நட்டம் வந்திருக்கிறது என்று சொன்னால், அதற்கெல்லாம் காரணம், பேருந்துக் கட்டணம்—body—கூடு கட்டுவதைத் தனியாருக்குக் கொடுத்து ** காரணமாகத்தான் இந்த 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நட்டம் வந்திருக்கிறது. இந்த 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நட்டம் வந்திருப்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா, இல்லையா என்பதை மட்டும் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: என்ன, 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் என்கிறீர்கள்? நீங்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கும்போது 2 ஆயிரம் கோடி ரூபாய் நட்டம். (குறுக்கீடுகள்) சொல்கிறேன் கேளுங்கள். ஆண்டுக்குத் தொடர்ந்து 600 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு ரூ. ஆயிரம் கோடியாக உயர்ந்திருக்கிறது. காரணம், சம்பள உயர்வு தரப்பட்டிருக்கிறது. உங்களது ஆட்சியில் புதிய ஆட்கள் நியமிக்கப்படவில்லை. இருக்கிற தொழிலாளிக்கு போனஸ் தரப்படவில்லை. சம்பள உயர்வு தரப்படவில்லை. இப்பொழுது சம்பள உயர்வு தரப்பட்டிருக்கிறது; போனஸ் தரப்பட்டிருக்கிறது; புதிய ஆட்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்; புதிய பேருந்துகள் வாங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2011 ஜனவரி 13] [திரு. கே.என். நேரு]

மட்டுமல்ல; 2 ஆயிரம் வழித் தடங்களில், புதிய வழித் தடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. யார் வேண்டுமானலும் பேருந்தைப் பற்றிப் பேசலாம் (குறுக்கீடுகள்) முதன்முதலில் போக்குவரத்துக் கழகத்தை உருவாக்கியவர் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. விசுவநாதன், உட்காருங்கள். அனுமதியில்லை, இனி உங்களுக்கு அனுமதியில்லை. திரு. டி. ஜெயக்குமார் நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) அமைச்சர் நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: நான் சொல்வதைக் கேட்டுவிட்டு பதில் சொல்லுங்கள். முதன்முதலில் போக்குவரத்துக் கழகத்தை உருவாக்கியர் நம்முடைய முதலமைச்சர். போக்குவரத்துக் கழகத்தைத் தனியாருக்குத் தாரைவார்த்துக் கொடுத்தவர் உங்களுடைய முதலமைச்சர். நீங்கள் அன்று சட்டம் போட்டீர்கள். தலைவர் இந்த அவைக்குக்கூட வரவில்லை, அறிவாலயத்தில் இருந்து கொண்டே சொன்னார்: "நீங்கள் தனியாருக்கு போக்குவரத்தைக் கொடுத்தீர்கள் என்றால், மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அரசுடைமையாக்குவோம்" என்றார். அது அப்படியே நின்று போய்விட்டது. யாருக்கும் பேசுவதற்கு யோக்கியதை இருக்கிறது. ஆனால், உங்களுக்கு மட்டும் அதற்கு யோக்கியதையே கிடையாது. அதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், நேரம் இல்லை. நீங்கள் பேசுங்கள் திரு. டி. ஜெயக்குமார். (குறுக்கீடு) திரு. விசுவநாதன் controversy உருவாகிக்கொண்டே இருக்கும், நீங்கள் உட்காருங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு திரு. விசுவநாதன் பேசுகிறபோது, குற்றச்சாட்டுகளை, allegation–களை ஆளுங்கட்சியின்மீது திணிக்கிற மாதிரி பேசினார். அதுபற்றியெல்லாம் நான் திருப்பிச் சொல்ல விரும்பவில்லை. ஆகையினால் எந்த ஆதாரமும் இல்லாமல் குற்றச்சாட்டுகளை அடுக்கிச் சொன்ன அவருடைய பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். (குறுக்கீடு)

[2011 ஜனவரி 13

பிற்பகல் 12—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. விசுவநாதன், நீங்கள் குற்றஞ்சாட்டு பேசியது அவைக் குறிப்பில் நீக்கப்படுகிறது. உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்கின்ற நேரத்தில் தமிழக அரசின் சார்பாக இயங்கிக் கொண்டிருந்த போக்குவரத்து நிறுவனம் மிகப் பெரிய நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. அதோடுமட்டுமல்லாமல், கடந்த ஆட்சிக் காலத்தில் அவர்கள் விட்டுச்சென்ற நிலுவைத் தொகை, அது கடன் அல்ல; நிலுவைத் தொகையாக டீசல் போட்ட வகையிலும், உதிரிப் பாகங்கள் வாங்கிய வகையிலும் கிட்டத் தட்ட 3 ஆயிரம் கோடி ரூபாய் நிலுவைத் தொகை மட்டும் இருந்தது. ஆக, மாண்புமிகு அம்மா அவர்கள் கொள்கை முடிவெடுத்து தனியாருக்குத் தாரைவார்க்கப்படும் என்று அறிவிக்கவில்லை. அன்றைக்கு இருந்த நிலையில் அரசு சார்பாக, போக்குவரத்து நிறுவனங்களின் சார்பாக அந்த பஸ் போக்குவரத்துகளை இயக்குவதற்குக் கடினமாகத்தான் இருந்தது. சம்பளங்கள்கூட வழங்க முடியாத சூழ்நிலையில் பெருத்த நட்டத்தை அன்றைக்கு போக்குவரத்துக் கழகங்கள் சந்தித்துக் கொண்டிருந்த நிலையில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்கள். அங்கு வேலை பார்க்கிற தொழிலாளர்கள் நலனைக் கருதியும், பொது மக்களுக்குப் போக்குவரத்து நிறுவனங்களின் சேவை மனப்பான்மையைக் கருதிதான், தொடர்ந்து அதிலே இருக்கின்ற நிலுவையையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரே வருடத்தில் சரிக்கட்டி, செலுத்தி, போக்குவரத்துக் கழகத்தில் வேலை பார்க்கின்ற அலுவலர்களையும் காப்பாற்றிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்றபடி யாரும் போக்குவரத்துக் கழகத்தை தனியாருக்குத் தாரைவார்த்து கொடுக்கப் போகிறோம் என்று சொன்னதே கிடையாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2011 ஜனவரி 13]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் காலத்திலும் போக்குவரத்துக் கழகத்தில் இருந்த கடனை நீங்கள் அடைக்கவில்லை. அது தொடர் கதையாகத்தான் இருந்தது. (குறுக்கீடுகள்) கணக்கு இருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் அடைக்கிறேன் என்று சொன்னது எல்லாம், கணக்கு இருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் சொல்கிறார். நீங்கள் குறுக்கிடாதீர்கள். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் அதனுடைய செலவினம் கூடிக்கொண்டு வருகிறது. பொருள்களின் விலை ஏறுகிறது. டயர் விலை ஏறுகிறது. டீசல் விலை ஏறுகிறது. வண்டிகளின் விலை ஏறுகிறது. உங்களுடைய ஆட்சியில் புதிய பேருந்துகளும் குறைவாகத்தான் வாங்கினீர்கள். புதிய வழித்தடங்களை நீங்கள் உருவாக்கவில்லை. ஆனால், நம்முடைய முதலமைச்சர் தனியார் பேருந்துகள் எல்லாம், கிராமங்களை நோக்கியிருந்த பேருந்துகள், நீதிமன்ற ஆணையைப் பெற்று நகரத்துக்கு வந்துவிட்ட பிறகு கிராமங்களுக்குப் பேருந்து வசதியைச் செய்துதர வேண்டுமென்று உத்தரவிட்டதன் காரணமாக, 2 ஆயிரம் புதிய வழித்தடங்களிலே இன்று பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. நான்காயிரம் வழித்தடங்களில் வழி நீட்டிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. தடம் நீட்டிப்பு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, ஒரு பேருந்து ஓட வேண்டுமென்று சொன்னால், புறநகர்ப் பேருந்து என்று சொன்னால் ரூ.8,500 தினந்தோறும் வசூலானால்தான் break even. நகரப் பேருந்து ஓட வேண்டுமென்று சொன்னால் ரூ.5,500 வசூலாக வேண்டும். ஆனால், ரூ.3,000/-ம், ரூ.6,000/-ம் என்று தினந்தோறும் இதில் நஷ்டம் ஏற்படுகிறது. அந்த நஷ்டத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இதற்கு ரூ.1,200 கோடி பணமும் தந்து, மக்களுக்கு முழு வசதியையும் செய்து தந்திருப்பது நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) Please, மற்றவர்களெல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடு) No time please.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முரண்பாடான கருத்துகளை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அடுத்த subject–க்குப் போங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் அவர் போக்குவரத்துக் கழகத்தில் ஆயிரம் கோடி ரூபாய் நட்டம் என்று சொல்லிவிட்டு, இன்றைக்கு, 4,500 கோடி ரூபாய் நஷ்டம் என்று சொல்கிறார். என்ன நிலைமை? நான் ஒரேயொரு கேள்விதான் உங்களிடம் கேட்கிறேன் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக இதுவரை ஏற்பட்டிருக்கிற கடன் தொகை வேண்டுமானால் நீங்கள் சொல்லலாம். இந்த ஆண்டுக்கு நான் சொன்னேன். இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிற செலவினம், இந்த ஆண்டு மட்டும் ரூ.522 கோடி ஊதிய உயர்வு தந்திருக்கிறார் முதலமைச்சர். ஏற்கெனவே, கடந்த ஆண்டு 600 கோடி ரூபாய் என்று சொன்னால், இந்த ஆண்டு கிட்டத் தட்ட ரூ.522 கோடி. அந்த நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு அரசாங்கத்தின் சார்பாகத் தொழிலாளர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் ரூ. ஆயிரம் கோடி என்று சொன்னேன். (குறுக்கீடு)

திரு. டி. ஜெயக்குமார்: Sir, ஒரேயொரு solution. நம்முடைய State Transport corporation–இனுடைய 1996–2001-ஆம் ஆண்டுகளின் Financial Statement– களை நீங்கள் place பண்ணுங்கள். 2001–2006-ஆம் ஆண்டுகளின் statement–களை நாங்கள் place பண்ணுகிறோம். இப்போது இரண்டும் உங்களிடத்தில்தான் இருக்கும். எடுத்து வையுங்கள். அதை base பண்ணி ஒருநாள் விவாதம் வைத்துக்கொள்ளுங்கள், இதற்கு ஒரு விடை கிடைக்கும். (குறுக்கீடு)

2011 ஜனவரி 13]

பிற்பகல் 12—30

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: 1991—1996—இல் இருப்பதையும் வையுங்கள். அப்போதுதான் முதன்முதலில் loss என்று Transport loss—இல் போக ஆரம்பித்ததே 1991—96—ல்தான். 114 கோடி ரூபாய் loss என்று ஆரம்பித்ததே அப்போதுதான். அப்போதுதான் Pallavan Transport Corporation—இல் கட்டிக்கொண்டிருந்த body building—ஐ குரோம்பேட்டையிலிருந்து மாற்றி தனியாரிடம் தாரைவார்த்துக் கொடுத்ததே அப்போதுதான். ஆசாத் என்ற கம்பெனியை உருவாக்கிக் கொண்டு வந்ததும் அப்போதுதான். இதுகுறித்து court—இல் case இருக்கிறது; அதெல்லாம் நிறைய இருக்கிறது. முதன்முதலில் Transport—ஐப் பற்றி மக்களுக்கு விவரமாகத் தெரிய வைத்ததே 1991—1996—இல்தான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. ஜெயக்குமார்: Comparative statement வைக்கட்டும், விவாதம் நாங்கள் நடத்தத் தயார். 1989—1991—லேயும் இரண்டு வருடத்தையும் சேர்த்து வையுங்கள். இப்போது நான் சப்ஜெட்டுக்கு வருகிறேன், விடுங்கள்.

இந்த ஆட்சியில் புதிது புதிதாகத் தொழிற்சாலைகள் உருவாகிக் கொண்டேயிருக்கின்றன என்று ஆளுநர் உரையில் ஆரவாரம் செய்திருக்கிறீர்கள். அந்தத் தொழிற்சாலைகளின் மூலமாக இலட்சக் கணக்கான இளைஞர்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்குப் பதில் இலட்சக்கணக்கான வீடுகளில் இருளை ஏற்படுத்தியிருக்கிறீர்கள்.

தடையில்லாத மின்சாரம் கிடைக்காமல் தமிழக மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். பல தொழிற்சாலைகள் முடங்கிப் போய் கிடக்கின்றன. மின்சார உற்பத்தியைப் பெருக்க முடியாத நீங்கள் புதிது புதிதாகத் தொழிற்சாலைகள் தொடங்குவதாக அறிவித்திருப்பது மாவு இல்லாமல் தோசை சுட முயற்சி செய்வதுபோல கேலிக் கூத்தாகத்தான் தெரிகிறது.

மின்சாரத் துறையைப் பொறுத்தவரை, கவர்னர் உரையில் 33,020 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6,176 மெகா வாட் மின் உற்பத்திக்காக இந்த அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதாகவும் கூறப்பட்டிருக்கிறது. அதிலே நொண்டிச் சாக்கு சொல்வதைப்போல, மின் திட்டங்கள் எல்லாம் நீண்ட காலத் திட்டங்கள்; எனவே, காலதாமதமாகும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த

[திரு. டி. ஜெயக்குமார்] [2011 ஜனவரி 13

அரசு பொறுப்பேற்று ஏறக்குறைய ஆட்சி முடியும்தறுவாயில்கூட, திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன; நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; திட்டம் முடிந்துவிட்டது என்ற காரணங்கள், அரைத்த மாவையே அரைப்பது போல் இருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்கள் இப்போது சற்று தெம்பாகத்தான் இருக்கிறார். கிராமத்துப் பழமொழியான "நரி வலம் போனால் என்ன? இடம் போனால் என்ன? நம்மீது பாயாமல் இருந்தால் சரி" என்பதுபோல மின்வெட்டு பிரதான பிரச்சினையாக இருந்தது போய், இப்போது ** அமைச்சரை யாரும் விமர்சிப்பதில்லை. அதனால் அவர் நிம்மதி அடைந்திருக்கிறார் என்றே தோன்றுகிறது. அவர் நிம்மதியாக இருந்தாலும், மக்கள் நிம்மதியாக இல்லை. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும், விவசாய உற்பத்திற்கும் மிகவும் இன்றியமையாததாக விளங்கும் மின்சாரம், தி.மு.க. அரசு பொறுப்பேற்றதிலிருந்து கடுமையான மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டு, அதன் காரணமாக அனைத்துத் தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன. தேர்தல் வருகிறது என்பதற்காக ஆட்சி முடியும்தறுவாயில், சில புதிய திட்டங்களைக் குறிப்பிட்டு அதற்கான பணிகள் நடைபெறுவதாக ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த நான்கரை ஆண்டுக் கால ஆட்சியில் என்ன செய்தீர்கள் என்பது மக்களுக்குத் தெரியும். இனிமேல் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்பதும் மக்களுக்குத் தெரியும்.

புரட்சித் தலைவி, எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில் வீடுகள் இருளில் மூழ்கிப் போனது இல்லை. தொழிற்சாலைகள் முடங்கிப் போனது இல்லை என்பதும் மக்களுக்குத் தெரியும். இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் நிலவும் கடுமையான மின்வெட்டு குறித்தும், தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி குறித்தும், மின் வாரியத்தின் நிதிநிலைமை குறித்தும் மற்றும் நான்கரை ஆண்டு காலத்தில் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளும் அவற்றுக்கு அளிக்கப்படும் சலுகைகள் குறித்தும் இந்த அரசு வெள்ளை அறிக்கையாக வெளியிடக் கேட்டுக்கொள்கின்றேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2011 ஜனவரி 13] [திரு. டி. ஜெயக்குமார்]

தமிழ்வழிமூலம் கல்வி கற்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் சட்டத்தால் தமிழ்வழி மாணவர்கள் மிகுந்த எதிர்பார்ப்பில் இருந்த நேரத்தில், அந்தச் சட்டத்தில் உள்ள முரண்பாடுகள் காரணமாக, சென்னை உயர் நீதிமன்றம் இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது. உரிய வகையில் ஆராயாமல் தெளிவான கொள்கைகளுடன் இல்லாமல், இந்தச் சட்டம் இயற்றப்பட்டதால்தான், இப்போது மாணவர்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இது முழுக்க முழுக்க தி.மு.க. அரசின் நிருவாகத் திறமையின்மையையே காட்டுகிறது.

வேலைவாய்ப்புக்காக வேலை வேண்டி காத்திருக்கும் சுமார் 65 இலட்சம் இளைஞர்கள், படித்தவர்களின் எதிர்காலத்திற்கு இந்த அரசு எவ்விதத் திட்டத்தையும் அறிவிக்கவில்லை. எதிர்காலம் கேள்விக் குறி என்ற மன உணர்வோடு வேலை தேடி அலையும் நிலையில்தான் இந்த இளைஞர்களுடைய நிலை இருக்கிறது.

இந்த அரசில் விளம்பரங்களுக்குப் பஞ்சமில்லை. சாதாரண பொதுக் கழிப்பிடம் திறப்பதற்குக்கூட வண்ண, வண்ண அழைப்பிதழ்கள். 108 ஆம்புலன்ஸ் சேவைக்கு மட்டும் ** அதனால் மக்களுடைய வரிப் பணம் விளம்பரமாகக் கொடுக்கப்பட்டது என்ற விவரங்களை ஒளிவு மறைவில்லாமல் அவைக்குக் கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

இந்த அரசில், தமிழ் படித்தவர்கள் எல்லாம் அல்லல்பட வேண்டிய சூழ்நிலைதான். குறிப்பாகப் பட்டதாரி தமிழ் ஆசிரியர்கள், பணியிடங்கள் 828, இன்றுவரை நிரப்பப்படாமல் உள்ளன. 2007–2008-ஆம் ஆண்டில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் கொடுக்கப்பட்ட அறிவிப்பில் இப்பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டதோடு சரி, இதுவரை நிரப்பப்படவில்லை. 'கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன், வானம் ஏறி வைகுண்டம் பார்த்த' கதைதான் இந்த அரசினுடைய தமிழ்ப் பற்று மற்றும் தமிழ் வளர்ச்சி.

இந்த அரசு வெல்லம், முந்திரி, திராட்சை, ஏலக்காய் அடங்கிய பொங்கல் பையை இலவசமாக வழங்கியது. அவ்வாறு வழங்கப்பட்டதில் மண்டைவெல்லம் என்று கலந்து தயாரிக்கப்படும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. டி. ஜெயக்குமார்] [2011 ஜனவரி 13

பொங்கல் பச்சை நிறமாகவும், நீல நிறமாகவும் மொத்தத்தில் அந்தச் சர்க்கரைப் பொங்கல் ஈஸ்ட்மென் கலரிலே வெளிவந்துள்ளது. கொடுக்கப்பட்ட முந்திரிப் பருப்பு மக்கிப் போன வாசம், அரிசியோ புழுத்துப் போன அரிசி. அரசு உடனடியாக இதில் கவனம் செலுத்தி பொது மக்களுக்கு ஒவ்வாமை, allergy மற்றும் food poison வராதவாறு பாதுகாக்கும்படி தடுக்க வேண்டுமென்றும், மண்டை வெல்லத்தை இனி வெளிமாநிலத்திலிருந்து வாங்கி...(குறுக்கீடு)

பிற்பகல் 12—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஜெயக்குமார், நீங்கள் படித்து முடித்துவிட்டீர்களா?

திரு. டி. ஜெயக்குமார்: இன்னும் இல்லை sir. வெளி மாநிலங்களிலிருந்து வாங்கும்போது— நான் நல்ல எண்ணத்தில்தான் சொல்கிறேன். மக்களுக்கு எதுவும் ஆகிவிடக்கூடாது. இந்த வெல்லத்தைப் போட்டு, சர்க்கரைப் பொங்கல் பண்ணுங்கள். என்ன கலரில் வருகிறதென்று நீங்களே சொல்லுங்கள்.

(உறுப்பினர் வெல்லக் கட்டியை எடுத்துக் காட்டினார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிக்கிரம் உங்கள் உரையைப் படியுங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: இதில் இரசாயனம் கலக்கப்பட்டுள்ளதா என்பதையும் அரசு ஆய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்காக, கவர்னர் உரையில் கண்ணீர் சிந்தியிருக்கிறீர்கள். இலங்கையில் செத்து மடிந்தவர்களுக்காக ஆளுநர் உரையில் அழுது புலம்பியிருக்கிறீர்கள். இலங்கை இராணுவத்தின் அராஜகத்தினால் இலங்கைத் தமிழர்கள் தங்கள் இன்னுயிரை இழந்து, உடைமைகளை இழந்து, சொந்தங்களை இழந்து, சுகங்களை இழந்து, மகிழ்ச்சியான முகங்களை இழந்து இன்றும் முள்வேலி முகாம்களில் தங்கியிருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்களுக்கு இந்த தி.மு.க. அரசு உதவி செய்யவில்லை என்று சொல்வதைவிட, உதவி செய்வதற்கு மனம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இன்று இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக நீங்கள் எத்தனை முறை டெல்லி

2011 ஜனவரி 13] [திரு. டி. ஜெயக்குமார்]

சென்று பாரதப் பிரதமரையும் மற்றவர்களையும் சந்தித்திருக்கிறீர்கள்? குறிப்பாக, காமன்வெல்த் போட்டிகளின்போது இலங்கை அதிபர் கொடுங்கோலன் ராஜபக்சே டெல்லிக்கு வந்தபோது, அவருக்கு நீங்கள் அங்கம் வகிக்கும் மத்திய அரசு சிவப்புக் கம்பள வரவேற்பு கொடுத்தபோது நீங்கள் கண்கட்டி, வாய்மூடி மௌனமாக இருந்தீர்களே, இதுதான் தமிழர்களைக் காக்கும் இலட்சணமா? "அக்கா இருக்கிறவரைக்கும்தான் மச்சான் உறவு" என்று சொல்வதைப்போல மத்தியில் ஆதரவு இருந்தால்தான் நீங்கள் ஆட்சியில் நீடிக்க முடியும் என்பதால் வாய் மூடி மௌனம் சாதிக்கிறீர்கள். மீனவர்கள் சாவதைக்கூட மீன்கள் சாவதைப்போல சர்வ சாதாரணமாக நினைத்துக்கொள்கிறீர்கள்.

கத்தார் நாட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட 44 மீனவர்களில் 37 மீனவர்கள் தெற்காசிய மீனவர் தோழமைக் கூட்டமைப்பு சார்பில் Father Churchill அவர்களுடைய முயற்சியால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கத்தார் சிறையிலுள்ள மீனவர்கள் விடுதலைக்காக வாதாடிய வழக்கறிஞர்கள் நிசார் குச்சேரி மற்றும் அப்துல் அன்சாரி ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். இந்த இரு வழக்கறிஞர்கள், கத்தார் நீதிமன்றத்தில் வாதாடியதற்கான வழக்குச் செலவு இதுவரை அவர்களுக்கு அரசின் சார்பில் அளிக்கப்படவில்லை. எனவே, அந்தக் கூட்டமைப்பு சார்பில் தமிழக மீனவர்களை மீட்க வாதாடிய வழக்கறிஞர்களுக்கு வழக்குச் செலவை அரசு உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மீதமுள்ள 7 மீனவர்களான சூசைராஜ், சேதுபுத்திரன், ஆன்டனி செபஸ்டின், அருள் ஆன்டனி, பிரான்சிஸ், சாம்சன் மற்றும் பாலு ஆகியோரையும் கத்தார் சிறையிலிருந்து மீட்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எவ்வளவுதான் நாங்கள் கோரிக்கைகள் வைத்தாலும், ஆர்ப்பாட்டங்கள் நடத்தினாலும் போராட்டங்கள் நடத்தினாலும், நீங்கள் மீனவர்களைப் பற்றிக் கவலைப்படுவதாக இல்லை. உங்கள் ஆட்சியில் பாவம், மீனவர்கள் மீளாத் துயரில் தத்தளிக்கிறார்கள். 'செவிடன் காதில் ஊதிய சங்குபோல' உங்கள் காதுகளுக்கு எங்களுடைய குரல் கேட்பதில்லை. எதைப் பற்றியும் கவலைப்படாமல், ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் இறந்த நிலையில் கத்தார் சிறையில் வாடும் 7 தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்காத அரசு, வெளிநாடுவாழ் தமிழர்கள் நல வாரியம் ஒன்றை அமைக்க இருப்பதாக, ஆளுநர் உரையிலே இடம்

[திரு. டி. ஜெயக்குமார்] [2011 ஜனவரி 13

பெறச் செய்திருப்பது கேலிக்கூத்தாக இருக்கிறது. குமுறிக் கொண்டிருக்கிறது கடல் மட்டுமல்ல; மீனவர்களின் நெஞ்சமும்தான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

உண்மையான மீனவ நண்பன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான், புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நாடு அறியும்; மீளாத வேதனையில் இருக்கும் மீனவர்கள் அறிவார்கள். வர இருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் அதை அறிந்துகொள்ளத்தான் போகிறீர்கள்.

மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி என்பது இந்த அரசின் நோக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த நிலையில் சென்ற ஆண்டு சிவகங்கை, பெரம்பலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்னமும் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்படவில்லை. நிலைமை இவ்வாறு இருக்க, இப்போது மேலும் மூன்று மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும் என்று அறிவித்திருப்பது நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்றாகும். ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிப் பணிகள் முடிவுற்று, கல்லூரிகளைத் தொடங்கினால்தான் தமிழக மாணவ மாணவியர் பயன்பெறுவர். அதைவிடுத்து, மேலும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று கூறியிருப்பது தமிழக மக்களை ஏமாற்றும் செயலாகும்.

நேற்றைய 'தினமணி' நாளிதழில்கூட 'மாவட்டத்திற்கு ஓர் அரசு மருத்துவக் கல்லூரி—துணை முதல்வரின் நிறைவேறாத வாக்குறுதி' என்று தலைப்பிடப்பட்ட செய்தியே இதற்குச் சான்றாகும். கடந்த ஆண்டு ஜூலை மாதம் புதுக்கோட்டையில் நடைபெற்ற இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் முத்துலட்சுமி சிலை திறப்பு விழாவில் பேசிய துணை முதலமைச்சர் நிகழ் ஆண்டில் புதுக்கோட்டையில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும் என அறிவித்தார். அது வெறும் அறிவிப்போடு சரி.

எனது இராயபுரம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை, நிருவாகச் சீர்கேட்டின் மொத்த உருவமாக உள்ளது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்றால் நோய் குணமாகும் என்பதற்குப் பதிலாக ஸ்டான்லி மருத்துவமனைக்குச் சென்றால், நோயுடன் திரும்பி வருவார்கள் என்ற நிலைதான் உள்ளது.

2011 ஜனவரி 13] [திரு. டி. ஜெயக்குமார்]

அரசு மருத்துவமனைகளில் Superintendent, அதாவது மருத்துவமனைக் கண்காணிப்பாளர் மற்றும் மருத்துவமனை Dean-க்கும் நடைபெறும் cold war—நீ பெரியவனா, நான் பெரியவனா என்ற சண்டையில் பாதிக்கப்படுவது நோயாளிகள்தான். கடந்த டிசம்பர் மாதம் 23-ஆம் தேதி ஸ்டான்லி மருத்துவமனையின் கண்காணிப்பாளரின் மோசமான நிருவாகச் சீர்கேட்டைக் கண்டித்து மருத்துவர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். பல அரசு மருத்துவமனைகளில் Dean பதவி இன்றுவரை காலிப் பணியிடங்களாகவே உள்ளன.

தமிழகத்தில் சமீபத்தில் தென் மாவட்டங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களில் கன மழை பெய்ததன் காரணமாக, இலட்சக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள் சேதமடைந்ததுடன், ஏராளமான உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டன. அரசின் கணக்குப்படி ஏறத்தாழ 3 இலட்சம் எக்டேர் நெற்பயிர்கள் சேதமடைந்துள்ளன. ஆனால், அவற்றிற்கான இழப்பீடு எக்டேருக்கு 10 ஆயிரம் ரூபாய் என்ற அளவில்தான் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நெற்பயிர்களுக்கான இழப்பீட்டை உரிய முறையில் ஆராய்ந்து தகுந்த இழப்பீட்டை நிர்ணயிக்க வேண்டும். எவ்வளவு பாதிக்கப்பட்டுள்ளதோ அதற்குத் தகுந்தவாறு இழப்பீட்டுத் தொகையை வழங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இந்த இழப்பீடு தற்போது நிலவி வருகின்ற விலைவாசியை ஒப்பிடும்போது மிக மிகக் குறைவானது. இதனை அதிகரித்து வழங்க வேண்டும். எவ்வளவு நிதி இதுவரை மத்திய அரசிடமிருந்து பெற்று நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களை வெள்ளை அறிக்கையாகத் தரக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12—40

மேலும், மத்திய அரசுக் குழுவினர் தமிழகம் வந்து மழை வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்டுச் சென்று, தங்களுடைய அறிக்கையினை மத்திய அரசிடம் அளித்துள்ளதாகத் தெரிகிறது. தமிழகத்தில் ஏற்பட்டுள்ள சேத அளவுக்கு ஏற்ப மிக அதிக அளவில் நிவாரண நிதி ஒதுக்கீடு செய்வதற்குத் தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்திட வேண்டும்.

தற்போது நெல் கொள்முதல் செய்யும் நிலையில். மத்திய அரசு நெல்லுக்கு மூட்டைக்கு ஆதார விலையாக ரூ.50/— ஏற்றியுள்ள

[திரு. டி. ஜெயக்குமார்] [2011 ஜனவரி 13

நிலையில், மாநில அரசு இன்னும் அந்த விலையை உயர்த்திக் கொடுக்கவில்லை.

ஆளுநர் உரை, பத்தி 19—இல் 'இந்த அரசு சுற்றுலா வளர்ச்சிக்குப் பெரும் முக்கியத்துவம் வழங்கி வருகிறது' என்று கூறப்பட்டுள்ளது. தமிழக அரசு சுற்றுலாத் துறையுடன் இணைந்து, ** (மணியடிக்கப் பெற்றது) அகில உலக இமாலய ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார், உரையை முடித்துவிட்டீர்களா? இன்னும் எத்தனை பக்கம் இருக்கிறது?

திரு. டி. ஜெயக்குமார்: ஒரே ஒரு நிமிடம். இன்னும் இரண்டு பக்கங்கள்தான். ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** பற்றி அவரே குறிப்பிடுவதுபோல் வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. எனவே அதுகுறித்து, அது தொடர்பாக அவர் பேசிய பேச்சுகளைச் சபைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ** என்பதும் வழக்கு மன்றத்தில் இருக்கிறது. அதையெல்லாம் பேசக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் கூறிய அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அதெல்லாம் vigilance probe—இல் இருக்கிறது. திரு. ஜெயக்குமார், பேசுங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: நான் அந்த வழக்குக்குள் செல்லவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் கேளுங்கள். தற்போதைய தி.மு.க. அரசு நீதிமன்றங்களின் கண்டனங்களைப் பெறும் அரசாகத் திகழ்ந்து வருகிறது. சென்னை மாநகராட்சி தேர்தலில் நடைபெற்ற வரலாறு காணாத வன்முறை காரணமாக, சென்னை உயர் நீதிமன்றம், 99 வார்டுகளுக்கு நடைபெற்ற தேர்தல்கள் செல்லாது, மறு தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும், வெற்றி பெற்றதாக வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்களைத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2011 ஜனவரி 13] [திரு. டி. ஜெயக்குமார்]

திரும்பப் பெற வேண்டும் எனவும், உயர் நீதிமன்ற நீதியரசர் எப்.எம். கலிபுல்லா அவர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்கள். "The stand and attitude of the State Election Commission was highly irresponsible and that he had miserably failed in the discharge of his duties" என்று சென்னை உயர் நீதிமன்றம் மிகக் கடுமையாகக் கண்டனத்தைத் தெரிவித்தது.

மாநில அரசுகள் சார்பில் பந்த் எதுவும் நடத்தக் கூடாது என்று உச்ச நீதிமன்றம், கேரளம் தொடர்பான வழக்கில் தெளிவாகத் தீர்ப்பளித்திருந்தபோதிலும், தி.மு.க.—வின் சார்பாக 1–10–2007 அன்று மாநிலம் தழுவிய பந்த், அதாவது, State sponsored Bandh நடத்தப்படும் என்று அறிவித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தபோது, 'தி.மு.க. அரசினால் 1-10-2007 அன்று நடத்தப்பட்டுள்ள பந்த் சட்ட விரோதம் என்றும், ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிரானது' என்றும் மிகக் கடுமையான கண்டனத்திற்கு ஆளானது இந்த அரசு.

தமிழ்நாடு மாநிலக் காவல் துறையில் மிக உயரிய பதவியான காவல் துறைத் தலைவர், அதாவது டி.ஜி.பி. பதவிக்கு திருமதி லத்திகா சரண் நியமனம் செய்யப்பட்டது செல்லாது என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்து, அந்த நியமனத்தை இரத்து செய்துள்ளது. உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே வகுத்தளித்த நெறிமுறைகளுக்கு மாறாகத் தமிழ்நாடு அரசு செயல்பட்டுள்ளது என்று உச்ச நீதிமன்றம் தமிழ்நாடு அரசுக்கு மிகக் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. நிலைமை இப்படியே போனால், The Hague—இல் அமைந்துள்ள International Court of Justice—இல் இருந்துகூட தி.மு.க. அரசு கண்டனம் பெற்று சாதனை செய்யும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று சொன்னால், அது மிகையாகாது. எனவே, தற்போதைய தி.மு.க. அரசை, கண்டனம் பெறும் அரசு அல்லது கண்டன அரசு என்றுகூட அழைக்கலாம்.

இந்த அரசு அமைந்து, கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மூலம் ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலைகள், அவற்றில் தமிழக அரசின் சார்பில் செய்யப்பட்டுள்ள முதலீடுகள், தமிழக அரசு சார்பில் அத்தகைய தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பல்வேறு சலுகைகள், அந்தச் சலுகைகளுக்கு ஏற்ப அந்தத் தொழிற்சாலைகள்மூலம் தமிழக அரசு பெற்றுள்ள வருவாய், அந்தத் தொழிற்சாலைகளால்

[திரு. டி. ஜெயக்குமார்] [2011 ஜனவரி 13

ஏற்படுத்தப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் உள்ளிட்ட அனைத்து அம்சங்கள் அடங்கிய வெள்ளை அறிக்கை ஒன்றைத் தமிழக அரசு வெளியிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்துவிட்டீர்களா? நேரமாகிவிட்டது. நீங்கள் எழுதிய பேப்பரை இங்குக் கொடுத்துவிடுங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் மட்டும் 18 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. அந்தத் தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் தமிழக இளைஞர்கள் அல்ல. கேரளா, ஆந்திரா மற்றும் வடநாட்டு இளைஞர்கள்தான். தமிழக அரசு இதை மறுத்தால் தமிழகத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளித்த பட்டியலை வெளியிடத் தயாரா? ஸ்ரீபெரும்புதூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளுக்கு 24 மணி நேரமும் தடையில்லா மின்சாரம், பாலாறு குடிநீர் தடையில்லாமல் வழங்கப்படுகிறது. ஆனால் இத்தொழிற்சாலைகள் அமைந்துள்ள சுற்று வட்டாரத்தில் வசிக்கும் மக்களுக்குத் தடையான மின்சாரமும், வாரம் ஒரு முறை ஒரு குடம் தண்ணீரும்தான் வழங்கப்படுகிறது.

அரசின் சார்பில் நடத்தப்படும் அரசு விழா அழைப்பிதழில் சட்டமன்ற உறுப்பினர் பெயர் சரியான வகையில் முகவரியிடப்படுகிறதா என்றால், இல்லை. உங்கள் அரசின்கீழ் பணிபுரியும் அதிகாரிகளுக்குச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய initial—உம் தெரியாது; அவர் எந்தப் பகுதியில் வசிக்கிறார் என்பதுகூட தெரியாது. இன்னாள் சட்டமன்ற உறுப்பினரை முன்னாள் ஆக்குவதும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரை இன்னாள் ஆக்குவதும் உங்கள் அலுவலர்களுக்கு வழக்கமான ஒன்று. இதிலே அழகு பார்ப்பதிலே அந்த அதிகாரிகள் பலே கில்லாடிகள். கடந்த 10—1—2011. . .

பிற்பகல் 12—45

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கேயாவது இனிஷியல் மாற்றிப்போட்டார்கள் என்று குற்றச்சாட்டாகச் சொல்கிறார். உங்கள் ஆட்சி நடக்கிறபொழுது,

2011 ஜனவரி 13] [திரு. துரைமுருகன்]

சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பெயரைப் போடாமலேயே உங்களுடைய முதலமைச்சராக இருந்தவர் விழாவை நடத்தியிருக்கிறார். வேலூரிலேயே, வேலூர் பாராளுமன்ற உறுப்பினருடைய பெயரைப் போடாமல் வேலூரிலே அரசு விழா நடத்தினார்.

திரு. டி. ஜெயக்குமார்: 10—1—2011, திங்கட்கிழமை சுகாதாரத் துறை அமைச்சர் பங்குபெற்ற அழைப்பிதழில் திரு. ஜெயக்குமார், Ex–M.L.A., Royapuram என்று முகவரியிட்டு அழைப்பிதழ் அனுப்பியுள்ளார்கள். இதைப் பார்த்து நாங்கள் vex ஆகிவிடவில்லை. நீங்கள்தான் Ex-ஆகப் போகிறீர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது வேறு ஒன்றும் கிடையாது. எதிர்காலத்திலே வரக்கூடியதை முன்கூட்டியே அறிந்து அவருடைய designation-ஐ அவர்கள் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். வேறு ஒன்றும் கிடையாது.

திரு. டி. ஜெயக்குமார்: நான் சொல்லிவிட்டேனல்லவா? Ex.—ஐப் பார்த்து நான் vex ஆகப் போவதில்லை, நீங்கள்தான் Ex.-ஆகப் போகிறீர்கள் என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் கடைசி பத்தியில் "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று வள்ளலாரையும் முதல்வரையும் ஒப்பிட்டுச் சில வரிகள் இடம் பெற்றிருக்கின்றன. எந்த உயிரும் வாடக்கூடாது என்று முதல்வர் பணிபுரிவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முடிக்கிறீர்களா? நான் முடித்து வைக்கவா? நீங்களாக முடிக்கிறீர்களா? நானே முடித்து வைக்கவா சார்? சீக்கிரம் உரையை முடியுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2011 ஜனவரி 13

திரு. டி. ஜெயக்குமார்: ** "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்றும் அந்தப் பத்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ** என்று நாட்டு மக்களுக்கு நன்றாகப் புரிந்திருக்கும். ** அதனால்தான், இந்துக்கள் பிள்ளையார் சுழி போட்டு தொடங்குவதுபோல, இஸ்லாமியர்கள் 786 என்று போட்டு தொடங்குவதுபோல, **

இந்த அவலங்கள் எல்லாம் ஆனந்தமாக மாற, அம்மாவின் ஆட்சி வர வேண்டும். விலைவாசி குறைந்து வேதனை தீர, சட்டம்—ஒழுங்கு சரியாகி, சாதனையாக மாற மீண்டும். அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி வளர வேண்டும், வர வேண்டும் என்பதே தமிழக மக்களின் கனவாக இருக்கிறது. அந்தக் கனவுகள் எல்லாம் நனவாகும் நாள் நெருங்குகிறது, உங்கள் ஆட்சியின் முடிவும் நெருங்கிவிட்டது. ஆளுநரின் உரை உங்கள் ஆட்சிக்கு முடிவுரை என்று உறுதியாகிவிட்டது என்று கூறி, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை கூறினார், 'ஆர்ப்பரித்துக் கிடப்பவன் ஒரு நாள் அழுதுதான் தீர வேண்டும்; மக்களைக் கசக்கிப் பிழிபவன், ஒரு நாள் கலங்கி நிற்கத்தான் வேண்டும்' என்று. இது தி.மு.க. அரசிற்கும் பொருந்தும்.

நீங்கள் கொடுத்த ஆளுநர் உரைப் புத்தகத்தின் அடிப்படையில், ஆளுநர் உரையில், "அகழ்ந்தெடுத்த முத்துக்கள்" என்று இருந்தது. இந்த உரை, "அகழ்ந்தெடுத்த முத்துக்கள்" அல்ல, "ஆபத்தை விளைவிக்கும் வித்துக்கள்" என்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று கூறி, மீண்டும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் அவர் ** என்று சொன்னவற்றை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும். இரண்டாவது, ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2011 ஜனவரி 13]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று சொன்னார். ** நீதிமன்றமே தீர்ப்பளித்திருக்கிறது. மக்கள் செல்லுகின்ற பாதையைக்கூட அடைத்துவிட்டார்கள். அதை மக்களுக்குத் திறந்துவிட வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள். ** நீங்கள்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன சொன்னார்? அவர் தனிப்பட்ட முறையில் யாரையும் குறை சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அவர் உங்கள் யாரையும் தனியாகக் குறிப்பிட்டுச் சொல்லவில்லையே? (குறுக்கீடுகள்) அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. என்ன ஓ.பி.எஸ். சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அவர் யாருடைய பெயரையும் சொல்லவில்லை. யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்?

பிற்பகல் 12—50

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் பேசுகின்றபோது ** பற்றிப் பேசினார். அதுகுறித்து உயர் நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி, நீங்கள் அதைச் சபைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிட்டீர்கள். ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, வேறுவகையில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அதைப் பதிவு செய்ய விரும்புகிறார். இப்போது அவர் சொன்னதையும் சேர்த்து expunge செய்ய வேண்டும். இதற்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நீக்குங்கள்; எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அதாவது, கருத்தைப் பதிவு செய்யும்போது அதை நீக்க வேண்டுமென்று கேட்கிறார். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2011 ஜனவரி 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் அமைதியாக இருங்கள். உங்களுடைய துணைத் தலைவர் அவர்கள்தான் பேசுகின்றார். கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: உயர் நீதிமன்றத்தில் வழக்கில் இருக்கின்ற பிரச்சினையைப் பற்றி இங்கு பேசக்கூடாது என்று அதை நீக்கி வைத்திருக்கின்றீர்கள். உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுகொண்டிருக்கிறது. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No Stay. ** (குறுக்கீடு) மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் சார்பாக வழங்கக்கூடிய நிதிக்கும் ** எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. நேரடியாக கலைஞர்களுக்குத்தான் வழங்கப்பட்டு வருகின்றது. ** மாண்புமிகு உறுப்பினர் குற்றச்சாட்டைச் சொல்வது நியாயமான ஒன்றாக இருக்காது. உண்மைக்கு மாறான ஒன்று. அதுமட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் கலைஞர்களுக்கு என்று நல வாரியம் அமைக்கப்பெற்று, அந்த நல வாரியத்தின் மூலமாகக் கடந்த மாதம் 31 ஆம் தேதி 25,192 கலைஞர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இதுவரையிலும் பயன்பெற்றவர்கள் 4,869 பேர்கள். மொத்தம் ரூ.66 இலட்சத்து 31 ஆயிரத்து 567 கலைஞர்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதற்கும் அதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. ** சுற்றுலாத் துறையினுடைய பங்கு என்னவென்று சொன்னால், அங்கே பங்குபெறக்கூடிய கலைஞர்களுக்கு நேரடியாக சுற்றுலாத் துறை உதவித் தொகையை வழங்கிக்கொண்டிருக்கின்றது. அதற்காக தவறான கண்ணோட்டத்தில் நீங்கள் பார்க்க வேண்டிய தேவையில்லை. கடந்த காலத்தினுடைய அரசுக்கும், கலைஞர் அவர்களுடைய அரசுக்கும் வேறுபாடு இருக்கின்றது. இந்த அரசைப் பொறுத்தவரையில் நேர்மையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2011 ஜனவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே பேசிய பேச்சுகள், திரு. டி. ஜெயக்குமார் Active voice–இல் பேசியதை Passive voice–இல் பேசுகிறார். So it should be expunged.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் பேசியதை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதைத் திரும்பவும் நீங்கள் பதிய வைத்திருக்கின்றீர்கள் என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்) இல்லை. நீங்கள் ஒரு விவரத்தைச் சொன்னீர்கள். நான் stay இல்லை என்று சொன்னேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் பதிலுரையினைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு நேரம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது நாங்கள் அமைதியாக இருந்தோம். ஆனால், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று நீங்கள் சொன்னதற்குப் பிறகு வேண்டுமென்றே அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அத்தனை பேரும் கூச்சல் போட்டுக்கொண்டிருக்கின்றார்கள். வெளிநடப்புச் செய்வதற்காக ஒத்திகை செய்கிறார்களா என்று தெரியவில்லை. அவையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பேசுவதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்களுடைய ஆட்களையெல்லாம் முதலில்

[பேரவைத் தலைவர்] [2011 ஜனவரி 13

அவரவர்களின் இருக்கைக்குப் போகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நடைபெற்ற விவாதத்தில் கருத்துக்கு கருத்து என்ற முறையில் (குறுக்கீடுகள்) பதில் சொல்லுகிற உரிமை எல்லோருக்கும் உண்டு. அதிலும் ஆளும் கட்சிக்கு நிச்சயமாக உண்டு. ஆளும் கட்சியினுடைய முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) ** என்று சொல்லப்படுமானால் ... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் இதனை allow செய்கிறீர்களா? (குறுக்கீடு) அவரவர்களின் இடத்தில் போய் அவர்களை உட்காரச் சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: 7-ஆம் தேதி தொடங்கிய அந்த நாடகத்தை மறுபடியும் நடத்தி (குறுக்கீடுகள்) இந்த அவையிலிருந்து வெளியேற (குறுக்கீடுகள்) பேசிய வார்த்தையிலே தவறு இல்லை. கருத்துகள் மாறுபடலாம். உங்கள் எண்ணத்தோடு நாங்கள் ஒத்துவர முடியாது. கருத்து மாறுபடலாம். உங்கள் கருத்தை நீங்கள் சொல்வதைப்போல எங்கள் கருத்தை நாங்கள் சொல்கிறோம். யாரையும் பெயர் சொல்லவில்லை. (குறுக்கீடு) பெயர் சொன்னால்தான் அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) யாரையும் பெயர் சொல்லாதபோது எப்படி வருத்தம் தெரிவிப்பது? அவர் பேசியதில் உங்களுக்கு உடன்பாடு இல்லையென்றால் எதிர்ப்பு தெரிவிக்கலாமே தவிர, நீங்கள் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அவசியம் கிடையாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாருடைய பெயரையாவது சொன்னேனா? என்ன சொன்னேன்? ** ஏன் உங்களுக்குக் கோபம் வருகிறது? ஏன் உங்களுக்குக் குடைகிறது? நான் யாருடைய பெயரையாவது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2011 ஜனவரி 13] *[திரு. துரைமுருகன்]*

*சொன்னேனா? ** நான் பொதுவாகச் சொன்னால், ஏன் உங்களுக்குக் குடைகிறது? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முதலில் உங்களுடைய இடத்திலே போய் உட்கார்ந்தீர்கள் என்றால்தான், நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பதை நான் consider செய்ய முடியும். (குறுக்கீடுகள்) முதலில் அவரவர்கள் இடத்திலே போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், அவர்களை உட்காரச் சொல்லுங்கள். இல்லையென்றால், நீங்கள் எல்லோரும் ஏதோ ஒரு காரணத்தைத் தேடுகிற மாதிரி தெரிகிறது. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் காரணம் தேடிக்கொண்டே அலைகிறீர்கள். திரு. டி. ஜெயக்குமார், உங்களுடைய இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) அவரவர்கள் இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் என்ன சொல்ல வேண்டுமோ, அதைச் சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம், நீங்கள் என்ன இடையிலே? (குறுக்கீடுகள்) No, allow செய்ய முடியாது. Dispute is not between yourself and Ministers. But it is between Mr. Panneerselvam and Ministers. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் என்ன கோரிக்கைக்காக இங்கே வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். ஆட்சேபகரமான அந்த வார்த்தையை நீக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2011 ஜனவரி 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் என்னுடைய வார்த்தையை நீக்க வேண்டுமென்று மாண்புமிகு திரு. பன்னீர்செல்வம் சொல்கிறார். நான் பேசியதில் என்ன தவறு? இந்த அவையில் இருப்பவர்களையோ அல்லது வெளியில் இருப்பவர்களையோ, யாரையாவது (குறுக்கீடுகள்) நான் குற்றம் சொல்லி, பெயரைச் சொல்லி பேசியிருந்தால் பரவாயில்லை. அவர் ** என்று சொன்னார். நான் சொன்னேன்; ** இதில் என்னய்யா தவறு இருக்கிறது? நீங்கள் சொல்லுங்கள், என்னய்யா தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், ** பற்றியும் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அதேபோன்று ** பற்றி அமைச்சர்கள் சொன்ன அந்த வார்த்தைகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்.

*** மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனவு மெய்ப்பட வேண்டும் என்று பாரதி பாடினான். ஒவ்வொருவருக்கும் ஒரு கனவு உண்டு. குழந்தைக்குப் பால் கனவு; மாணவனுக்குத் தேர்வு கனவு; வாலிபனுக்குக் காதல் கனவு; தொழிலாளிக்கு ஊதியம் கனவு; முதலாளிக்கு இலாபம் கனவு; கவிஞனுக்குக் கற்பனை கனவு; அதிகாரிக்குக் கோப்பு கனவு; ஆட்சியாளர்களுக்குச் சாதனை கனவு; நல் அரசியல்வாதிகளுக்கு மக்கள் நலனே கனவு. (மேசையைத் தட்டும் ஒலி) கௌதம புத்தர் கனவு கண்டார்; அது அவரை ஆரிய வைரியாக்கியது. அலெக்சாண்டர் கனவு கண்டார்; அது அவரை அகிலத்தின் மாவீரனாக்கியது. கரிகாலர் கனவு கண்டார்; அது அவரை கல்லணை பொறியாளராக்கியது. ராஜ ராஜ சோழர் கனவு கண்டார்; அது அவரைப் பெருவுடையார் கோயில் புகழ் தச்சராக்கியது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2011 ஜனவரி 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

ஷேக்ஸ்பியர் கனவு கண்டார்; அது அவரை நாடகத் தந்தையாக்கியது; கீட்ஸ் கனவு கண்டார்; அது அவரைக் கவின்மிகு கனவுக் கவிஞராக்கியது. காரல் மார்க்ஸ் கனவு கண்டார்; அது அவரை உலகப் பாட்டாளிகளின் பாதுகாவலனாக்கியது. மாவோ கனவு கண்டார்; அது அவரை செஞ்சீனத்தின் சிற்பியாக்கியது. அண்ணல் காந்தியடிகள் கனவு கண்டார்; அது அவரை இந்திய நாட்டின் தந்தையாக்கியது. பண்டித நேரு கனவு கண்டார்; அது அவரை ஆசிய ஜோதியாக்கியது. அம்பேத்கர் கனவு கண்டார்; அது அவரை ஒடுக்கப்பட்டவர்களின் பாதுகாவலனாக்கியது. தந்தை பெரியார் கனவு கண்டார்; அது அவரை எஃகு நாத்திகராக்கியது. காமராஜர் கனவு கண்டார்; அது அவரைக் கல்விக் கண் திறந்த பெருந்தலைவராக்கியது. (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணா கனவு கண்டார்; அது அவரை அனைவருக்கும் அன்பான அண்ணனாக்கியது. அதுபோல ஐந்தாவது முறையாக ஆட்சிபீடம் ஏறி ஓயாது உழைத்துக் கொண்டிருக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வுக்கே ஓய்வுகொடுத்து உழைத்துக்கொண்டிருக்கக்கூடிய நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் கனவொன்று உண்டு. பசியும், பிணியும் அற்ற தமிழகமாக, கல்வியில் சிறந்த தமிழகமாக, உழவில் உயர்ந்த தமிழகமாக, தொழிலில் சிறந்த தமிழகமாக, செம்மொழியாம் தமிழ் மொழிமீது தணியாத பற்று கொண்ட தமிழகமாக தமிழ்நாடு ஆக வேண்டும் என்கிற கலையாத கனவு தலைவர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கனவை நனவாக்கும் சாதனைகளின் தொடர்ச்சியே இந்த ஆளுநர் உரை.

இந்தப் புதிய சட்டமன்றப் பேரவை வளாகம் உருவாக்கப்பட்டதற்குப் பிறகு, கடந்த 7 ஆம் தேதியன்று முதன்முதலாக ஆளுநர் உரை. மேதகு ஆளுநர் அவர்களால் படிக்கப்பட்ட அந்த உரையின்மீது நடைபெற்றிருக்கக்கூடிய விவாதத்திற்குப் பதிலளிக்கக்கூடிய, அதுவும் இந்தப் புதிய சட்டமன்றக் கட்டடத்தில் முதன்முதலாக பதிலளிக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பை வழங்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கும், அதற்கு அனுமதி தந்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், குறிப்பாக இந்த அவைக்கும் நான் என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. மு.க. ஸ்டாலின்] [2011 ஜனவரி 13

பிற்பகல் 1–05

நடைபெற்றிருக்கக்கூடிய விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியிருக்கக்கூடிய உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கு. பிச்சாண்டி, திரு. எம். அன்பழகன், திரு. கம்பம் ராமகிருஷ்ணன், திருமதி சங்கரி நாராயணன், திரு. ஆ. இராஜேந்திரன், அ.தி.மு.க.–வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. ஜெயக்குமார், திரு. பி. தங்கமணி, திரு. ஞா. செந்தமிழன், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. சி. ஞானசேகரன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. கோவை தங்கம், திரு. பெ.சு. விஜயகுமார், டாக்டர் கு. ஜெயக்குமார், திரு. பா. வேல்துரை, பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. கோ. எதிரொலி மணியன், திரு. செந்தமிழ்ச்செல்வன், திரு. அ. தமிழரசு, திரு. தி.க. ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் செல்வி கே. பாலபாரதி, திரு. வே. மாரிமுத்து, இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வை. சிவபுண்ணியம், திரு. சு. குணசேகரன், ம.தி.மு.க-வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் ஆகியோர் தங்களுடைய ஆக்கபூர்வமான கருத்துகளை எல்லாம் கூறி, இந்த அரசுக்குத் தேவைப்படக்கூடிய வகையில் தங்களுடைய உரையை ஆற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மதிப்பிற்குரிய எதிர்க்கட்சியினுடைய உறுப்பினராக இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் துவக்கத்தில் சொன்னார், இந்த ஆளுநர் உரையைப் பார்த்து நாடே சிரிக்கிறது என்று. யார் சிரிக்கிறார்கள் என்று எங்களுக்குப் புரியவில்லை. ஒருவேளை அது அவருடைய கோளாறாகக்கூட இருக்கலாம். வேண்டுமென்றால், கலைஞர் காப்பீட்டுத் திட்டத்திலே நாங்கள் பரிந்துரை செய்து, அவருக்குச் சிகிச்சை அளிப்பதற்குக்கூட தயாராக இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 ஜனவரி 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

இந்த ஆளுநர் உரையென்பது வெறும் காகிதம் அல்ல; இது ஒரு காலக் கண்ணாடி. நான்கரை ஆண்டு சாதனைகளுக்கான நற்றமிழ்ச் சான்று. இனி ஆற்ற இருக்கக்கூடிய பணிகளுக்கான அறிமுகம். இந்த உரையில் இருப்பவை வெறும் சொற்கள் அல்ல. இந்த அரசினுடைய முன்னேற்றத்தைக் குறிக்கக்கூடிய மைல் கற்கள்.

ஆளுநர் உரையைப் பற்றிப் பல்வேறு கட்சிகளைச் சார்ந்திருக்கக்கூடிய தலைவர்கள், பல்வேறு பத்திரிகைகள், அதேபோல், இந்த அவையில் இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் பாராட்டியும், விமர்சித்தும் தங்களுடைய கருத்துகளையெல்லாம் எடுத்து வைத்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த, மாநிலச் செயலாளராக இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய திரு. ராமகிருஷ்ணன் அவர்கள், இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய மூத்த உறுப்பினர்களில் ஒருவராக இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய திரு. நல்லக்கண்ணு அவர்கள், இந்த ஆளுநர் உரையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கின்றபோது, வரக்கூடிய தேர்தலைக் கருத்திலேகொண்டு தயாரிக்கப்பட்டிருக்கக்கூடிய தேர்தல் அறிக்கை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே இது எங்களுக்கு மகிழ்ச்சிதான். நாட்டிலே இன்றைக்கு எத்தனையோ கட்சிகள் இருக்கின்றன. தேர்தல் களத்திலே சில கட்சிகள் போட்டியிடுகின்றன. போட்டியிடக்கூடிய கட்சிகள் எல்லாம், தேர்தல் நேரத்திலே வாக்குறுதிகளை, உறுதிமொழிகளை வழங்குவதுண்டு. அது வழக்கம். அது மரபு. நாங்கள் ஆட்சிக்கு வந்தால், அதைச் செய்வோம், இதைச் செய்வோம், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வானத்தைக் கிழிப்போம், வைகுண்டத்தைக் காட்டுவோம், மணலைக்கட்டி கயிறாக்குவோம் என்ற நிலையிலே சொல்லக்கூடிய உறுதிமொழிகள் எல்லாம் உண்டு. ஆனால், அதற்கெல்லாம் நேர்மாறாக, விதிவிலக்காக, தேர்தல் நேரத்தில் வழங்கிய உறுதிமொழிகளை, வாக்குறுதிகளை ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு நூற்றுக்கு நூறு சதவிகிதம் (மேசையைத்தட்டும் ஒலி) நிறைவேற்றிக் காட்டியிருக்கக்கூடிய ஆட்சிதான் கலைஞர் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய இந்த ஆட்சி என்பதை நாடு நன்றாக உணர்ந்திருக்கிறது. எனவே, கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர் சொன்ன அந்த அடிப்படையிலே ஆளுநர் உரை, தி.மு. கழகத்தினுடைய தேர்தல் அறிக்கை என்று சொன்னதை, நாங்கள் விமர்சனமாகக் கருதவில்லை. அதை ஒரு பெரிய பாராட்டாகத்தான் நாங்கள் கருதிக் கொண்டிருக்கிறோம் என்பதை அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2011 ஜனவரி 13

அதுமட்டுமல்ல; 2006-ஆம் ஆண்டில் தேர்தல் நடைபெற்றபோது, அப்பொழுது தேர்தல் பிரச்சாரம் நாடு முழுவதும் நடந்தது. இன்றைக்கு மத்தியிலே உள் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்கள் தேர்தல் நடைபெற்ற நேரத்தில், அப்பொழுது நிதித் துறை அமைச்சராகப் இருந்தவர். அவர் அன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் நம்முடைய கட்சியினுடைய, கூட்டணிக் கட்சியினுடைய வேட்பாளர்களையெல்லாம் வெற்றி பெற வைக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்கள். அப்படி ஈடுபட்டபோது, அவர் தன்னுடைய பிரச்சாரத்தில் ஒன்றை மறக்காமல் தொடர்ந்து எடுத்துச் சொன்னார். என்ன என்று கேட்டால், இந்தத் தேர்தல் களத்திலே, கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கக்கூடிய இந்த தேர்தல் அறிக்கைதான் ஒரு hero-ஒரு கதாநாயகன் என்று குறிப்பிட்டுச் சொன்னார். அதையும் தாண்டி இன்னொன்றையும் குறிப்பிட்டார். பல தொகுதிகளில் அவருடைய காங்கிரஸ் கட்சியினுடைய வேட்பாளர்கள் பெயர்களைக்கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இருக்கக்கூடிய வேட்பாளர்கள் பெயர்களைக்கூட, நம்முடைய தோழமைக் கட்சியினுடைய வேட்பாளர்கள் பெயர்களைக்கூட அவர் தவிர்த்துவிட்டு, பெயரைக்கூடச் சொல்லாமல், இந்தத் தொகுதியிலே நம்முடைய கூட்டணி வேட்பாளர் யார் என்று கேட்டால், கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கக்கூடிய தி.மு. கழகத்தினுடைய தேர்தல் அறிக்கைதான் என்று (மேசையைத் தட்டும் ஒலி) அவர் மனந்திறந்து பாராட்டிச் சொன்னார். காரணம், அந்த அளவுக்கு அவருடைய உள்ளத்தில் மட்டுமல்ல; மக்களுடைய உள்ளத்திலும் தி.மு. கழகத்தினுடைய தேர்தல் அறிக்கை ஆழமாகப் பதிந்த காரணத்தால், ஒரு மிகப் பெரிய வெற்றியைப் பெற்று நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றோம். ஆகவே, கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர்கள் சொன்னதுபோல, ஆளுநர் உரை ஒரு தேர்தல் அறிக்கைதான். ஆக, 2011 ஆம் ஆண்டிலும் கழகம்தான், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சிதான் மீண்டும் பொறுப்பேற்க இருக்கிறது என்பதற்கு அவர்களே சான்று வழங்கியிருக்கிறார்கள் என்றுதான் நான் நம்புகிறேன்.

பிற்பகல் 1—10

தேர்தல் அறிக்கையைப் பற்றி நான் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பதுபோல,

2011 ஜனவரி 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

'தேர்தல் அறிக்கை வரும் பின்னே, ஆளுநர் உரை வந்திருக்கிறது முன்னே' என்பதையும் நான் இந்த நேரத்திலே இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, இன்றைக்கு எதிர்க்கட்சியினுடைய தலைவராக இருக்கக்கூடிய முன்னாள் முதலமைச்சர் அவர்கள், இந்த ஆளுநர் உரையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, தமிழ்நாட்டை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய உரையாக அமைந்திருக்கிறது; இந்த ஆளுநர் உரை அவல உரையாக அமைந்திருக்கிறது; இந்த ஆளுநர் உரை தொலைநோக்கோடு அல்ல; கொலைநோக்கோடு அமைந்திருக்கக்கூடிய உரையாக அமைந்திருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். நான் கேட்க விரும்புவது, அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது, அப்போது அந்த ஆட்சியினுடைய தன்மை எப்படி இருந்தது? மனந்திறந்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அழிவுப் பாதைக்கு அழைத்துச் சென்ற ஆட்சி எந்த ஆட்சி? அவல நிலைமைக்கு, கொலைநோக்கோடு நடைபெற்ற ஆட்சி எந்த ஆட்சி? அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், எஸ்மா, டெஸ்மா என்ற கொடுமையான சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. அந்தச் சட்டத்தின் காரணமாக என்னென்ன கொடுமைகளெல்லாம் நாட்டிலே நடைபெற்றன? வேலை நியமனத் தடையாணை எந்த ஆட்சியிலே வழங்கப்பட்டது? அரசு ஊழியர்கள், ஆசிரியர் பெருமக்கள் பல கொடுமைகளுக்கெல்லாம் ஆளாக்கப்படவில்லையா? அவர்களையெல்லாம், ஒரே நாளில் இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களை வேலையிலிருந்து நீக்கி, வீட்டிற்கு அனுப்பிய ஆட்சி எந்த ஆட்சி? நான் இன்னும் கேட்கிறேன், மக்கள் நலப் பணியாளர்கள், சாலைப் பணியாளர்கள், அவர்கள் செய்த தவறு என்ன? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நியமிக்கப்பட்டார்கள் என்கிற ஒரே காரணத்திற்காக அவர்களையும் வீட்டிற்கு அனுப்பிய ஆட்சி எந்த ஆட்சி? ஆக, அரசு ஊழியர்களும், ஆசிரியர் பெருமக்களும், மக்கள் நலப் பணியாளர்களும், சாலைப் பணியாளர்களும் நடுத்தெருவிற்கு வந்து போராட வேண்டிய ஒரு சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டு, கொடுமை தாங்க முடியாத காரணத்தால் பலபேர் தற்கொலை செய்து கொண்டு மாண்ட கொடுமைகளெல்லாம் எந்த ஆட்சியிலே நடந்தது? ஆக, அவர்கள் இந்த ஆட்சியைப் பற்றி, இந்த ஆளுநர் உரையைப் பற்றி இப்படிக் குறிப்பிடுகிறார்களே? எனவே, நான்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2011 ஜனவரி 13

அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன், இந்த ஆளுநர் உரை அழிவுப் பாதைக்கு அல்ல; ஆக்கபூர்வமான பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய உரையாக அமைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவல உரையாக அல்ல; வளமான உரையாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. கொலைநோக்கோடு அல்ல; தொலைநோக்கோடு அமைந்திருக்கக்கூடிய உரையாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது.

மழை வருகிறபோதெல்லாம் பாதிப்படையும் நாகை, திருவாரூர், தஞ்சை, கடலூர் மாவட்டங்களுக்கெல்லாம் நிரந்தரமாக 'சிறப்பு வெள்ள மேலாண்மைத் திட்டத்தை' அறிவித்திருக்கிறோமே, இது என்ன தொலைநோக்குத் திட்டமாக அவர்களுக்குத் தெரியவில்லையா? சரபங்கா நதி, திருமணிமுத்தாறு மற்றும் அய்யாறு நதிகளின் உபரி நீரைப் பயன்படுத்தி சேலம், நாமக்கல், திருச்சி மாவட்டங்களுக்குப் பயனளித்திடும் திட்டத்தை அறிவித்திருக்கிறோமே, இது தொலைநோக்குத் திட்டமாகத் தெரியவில்லையா?

686 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாட்டினுடைய வன வளத்தைப் பாதுகாக்க ஒரு பெரிய திட்டத்தையே அறிவித்திருக்கிறோமே, இது என்ன அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயலா? 480 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிழக்குக் கடற்கரை மற்றும் தென்னகச் சுற்றுலா மையங்களை மேம்படுத்த பெரிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறோமே, இது என்ன அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயலா? சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, மூலக்கடை—திருமங்கலம், மூலக்கடை—திருவான்மியூர், லஸ்—பூவிருந்தவல்லி போன்ற வழித் தடங்களை அறிவித்திருக்கிறோமே, இது என்ன தொலைநோக்குத் திட்டமாக அவர்களுக்குத் தெரியவில்லையா?

பிற்பகல் 1—15

கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் எந்த ஒரு மின் உற்பத்தித் திட்டமும் செயல்படுத்தாத நிலையில், வட சென்னையில் 4,600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,200 மெகா வாட் அனல் மின் திட்டம், மேட்டூரிலே 3,100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 600 மெகா வாட் அனல் மின் திட்டம், வல்லூரிலே 9,000 கோடி

2011 ஜனவரி 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

ரூபாய் செலவில் 1,500 மெகா வாட் அனல் மின் திட்டம், தூத்துக்குடியில் 4,909 கோடி ரூபாய் செலவில் 1,000 மெகா வாட் அனல் மின் திட்டம், உடன்குடியிலே 9,000 கோடி ரூபாய் செலவிலே 1,600 மெகா வாட் அனல் மின் திட்டம், பவானி மற்றும் பெரியாறு அணைகளில் 1,255 கோடி ரூபாய் செலவிலே 93 மெகா வாட் புனல் மின் உற்பத்தி, 12 கூட்டுறவு மற்றும் அரசு சர்க்கரை ஆலைகளில் 1,126 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 183 மெகா வாட் மின் உற்பத்தி போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோமே, இவையெல்லாம் தொலைநோக்குத் திட்டங்களாக அவர்களுக்குத் தெரியவில்லையா?

சென்னை, அதைச் சுற்றியிருக்கக்கூடிய புறநகர் பகுதிகள், மதுரை, கோவை, திருச்சி, ஈரோடு, திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், தூத்துக்குடி போன்ற மாநகராட்சிகளில், தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு நகராட்சிப் பகுதிகளில் 15,000 கோடி ரூபாய் செலவிலே அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்குத் திட்டம் போட்டிருக்கிறோமே, இவையெல்லாம் தொலைநோக்குத் திட்டங்களாக அவர்களுக்குத் தெரியவில்லையா?

மத்திய அரசின் நிதியுதவியைப் பெற்று நிறைவேற்றி வரக்கூடிய இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், IAY என்கிற அந்தத் திட்டத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டி பழுதடைந்திருக்கக்கூடிய வீடுகளையெல்லாம் சீரமைக்க வீடு ஒன்றுக்கு 15,000 ரூபாய் நிதி வழங்க முடிவு எடுத்திருக்கிறோமே (மேசையைத் தட்டும் ஒலி) இது என்ன, தமிழ்நாட்டை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயலா?

மீனவர்களின் நாட்டுப் படகுகளுக்கு மானிய விலையிலே மண்ணெண்ணெய் வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறோமே, இது என்ன அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயலா?

பட்டதாரியே இல்லாத குடும்பங்களிலிருந்து தொழிற்கல்வி பயில ஒற்றைச் சாளர முறையிலே ஒதுக்கீடு பெறக்கூடிய மாணவ, மாணவிகளுக்குக் கல்விக் கட்டணத்தை முழுமையாக அரசே ஏற்கும் என்று அறிவித்த காரணத்தால், இந்த ஆண்டு 80,450 மாணவர்கள் பயன் பெற்றிருக்கிறார்களே, இது என்ன தமிழகத்தை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயலா?

[திரு. மு.க. ஸ்டாலின்] [2011 ஜனவரி 13

நெம்மேலியில், நாகலாபுரத்தில், அரூரில், கள்ளக்குறிச்சியில், திருச்சுழியில் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கீவளூரிலே புதிதாக விவசாயக் கல்லூரி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் என இப்படி உருவாக்குகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோமே, இவையெல்லாம் தமிழ்நாட்டை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயல்களா?

இராமநாதபுரம், கடலூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகளும், கன்னியாகுமரியிலே இந்திய மருத்துவ மற்றும் ஓமியோபதி பல்கலைக்கழகம் தொடங்க அறிவிக்கப்பட்டிருக்கிறதே, இவை என்ன அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயலா?

பஞ்சமி நிலம் தொடர்பான பிரச்சினைகளைப் பற்றி ஆராய ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையிலே குழு, கிராமச் சாலைகளை மேம்படுத்த நபார்டு வங்கியின் உதவியை எதிர்நோக்கி 320 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்திருக்கிறது. இவையெல்லாம் அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயல்களா?

வெளிநாட்டில் பணிபுரியக்கூடிய தமிழர்களின் நலனுக்காக நல வாரியம் ஒன்றை அமைத்திருக்கிறோமே, இது என்ன தொலைநோக்குத் திட்டமாகத் தெரியவில்லையா?

மகாபாரதத்திலே கதை ஒன்று உண்டு. அதுதான் இப்போது என்னுடைய நினைவுக்கு வருகிறது. என்னவென்று கேட்டால், துரோணர்-குருவாக இருக்கக்கூடிய துரோணர்-ஒருநாள் தருமனையும், துரியோதனனையும் அழைத்து, நாட்டில் நல்லவர்கள் எத்தனை பேர், கெட்டவர்கள் எத்தனை பேர் என்று நீங்கள் நாடு முழுவதும் சுற்றிப் பார்த்து விட்டு வந்து எனக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று உத்தரவிட்டாராம். ஆக, தருமனும், துரியோதனனும் இருவரும் நாடு முழுவதும் சுற்றிப் பார்த்து விட்டு தங்களுடைய குருவினிடத்திலே வந்து சொன்னார்களாம். முதலில் தருமன் சொல்கிறான்-குருவிடம் சென்று தருமன் சொல்கிறான்-நாட்டிலுள்ள எல்லோரிடமும் சில நல்ல குணங்கள் இருக்கின்றன. ஆகவே, எல்லோரும் நல்லவர்கள் என்று குறிப்பிட்டானாம். ஆனால், துரியோதனன் சொன்னானாம், நாட்டிலுள்ள எல்லோரிடமும் சில

2011 ஜனவரி 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

கெட்ட குணங்கள் இருக்கின்றன. ஆகவே, எல்லோரும் கெட்டவர்கள் என்று சொன்னானாம். இது எதைக் காட்டுகிறது, 'காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்' என்பதுபோல, **'The beauty lies in the eyes of the beholder'** என்பார்களே, அதுதான் இப்பொழுது என்னுடைய நினைவுக்கு வருகிறது.

பிற்பகல் 1–20

அடுத்து, விலைவாசி. விலைவாசியைப் பற்றி இந்த அவையிலே நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டிருக்கிறது. எல்லா உறுப்பினர்களும்—எதிர்க்கட்சி, தோழமைக் கட்சி என்ற பாகுபாடில்லாமல்—விலைவாசியைப் பற்றி இந்த அவையிலே நாம் விவாதித்திருக்கிறோம். அதிலும் குறிப்பாக, நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு சரியான விளக்கத்தை, எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய நிலையிலே, அவர் ஆணித்தரமாக, அழுத்தமாக அதைப்பற்றி இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். எனவே, நான் அதைப்பற்றி அதிகம் இங்கு விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் நான் குறிப்பிட விரும்புவது, விலைவாசி உயர்வைப் பற்றிப் பேசுகிறபோது, அது எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் சரி, ஆளுங்கட்சியைப் பற்றிச் சொல்லப்படக்கூடிய குற்றச்சாட்டுகளில் அது முக்கியமாக இருப்பதை நாம் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இது ஏதோ தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய உள்ளூர்ப் பிரச்சினை மட்டுமல்ல; அகில இந்திய அளவில் இருக்கக்கூடிய பிரச்சினை மட்டுமல்ல; உலக அளவில் இருக்கக்கூடிய பிரச்சினை என்பதை யாரும் மறுத்திட முடியாது. கடந்த 2, 3 நாட்களாக டெல்லியிலும்கூட நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள், மத்தியில் இருக்கக்கூடிய மூத்த அமைச்சர்களை எல்லாம் அழைத்து, பல நேரங்களில் இதுபற்றிப் பேசி, இதை எப்படிக் கட்டுப்படுத்துவது என்கிற முயற்சியிலே தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் செய்தித்தாள்களில் பார்க்கிறோம், தொலைக்காட்சிகளிலும் அந்தச் செய்திகளைப் பார்க்கிறோம். இன்னும்கூட சொன்னால், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த, அதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்வதற்காக, **"Core Committee"** என்ற ஒரு கமிட்டியைக்கூட நம்முடைய பிரதமர் அவர்கள் சில மாதங்களுக்கு முன்னர், இன்றைக்கு குஜராத் மாநிலத்தினுடைய

[திரு. மு.க. ஸ்டாலின்] [2011 ஜனவரி 13

முதலமைச்சராக இருக்கக்கூடிய திரு. நரேந்திர மோடி அவர்கள் தலைமையிலே அமைத்தார்கள்.

அந்தக் குழுவிலே நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஓர் உறுப்பினராக இடம்பெற்றிருக்கிறார். ஆந்திர மாநிலத்தினுடைய முதலமைச்சர், மகாராஷ்டிரா மாநிலத்தினுடைய முதலமைச்சர், இன்னும் பலர் அதில் இடம் பெற்றிருக்கிறார்கள். அந்தக் குழு இரண்டு முறை டெல்லியிலே இதுவரை கூடியிருக்கிறது. அந்தக் குழுக் கூட்டத்திற்கு தமிழகத்தின் சார்பில் நம்முடைய முதல்வர் அவர்கள் சார்பில், நான் பங்கேற்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றேன். அப்படி வாய்ப்பைப் பெற்றபோது நம்முடைய அரசினுடைய கொள்கைகளை, நம்முடைய முதல்வர் அவர்களுடைய எண்ணங்களையெல்லாம் அந்தக் கூட்டத்திலே பரிந்துரைகளாக நான் எடுத்து வைத்திருக்கிறேன். அது உங்களுக்கு நன்றாகவே தெரியும். ஆக, இந்த நிலையிலேதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றி நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இங்கேகூட அமைச்சர் பெருமக்கள் சில நேரங்களில் உங்களுக்கு பதில் சொல்கிறபோது இந்த விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். ஆகவே, விலைவாசியைக் கட்டுப்படுத்துகிற முயற்சியிலே நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கக்கூடிய திட்டம். அதேபோல சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தை, மிகச் சிறப்பான வகையிலே நாம் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். மானிய விலையிலே 10 மளிகைப் பொருட்களைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறோம். இவையெல்லாம் எதற்காக? ஏழையெளிய மக்களைப் பொறுத்தவரையிலே இந்த விலைவாசி பிரச்சினையிலே அவதிக்கு ஆளாகிவிடக்கூடாது, பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான், இந்த நடவடிக்கைகளை எல்லாம் தொடர்ந்து நாம் எடுத்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல; மக்களுடைய வாங்கும் சக்தியை உயர்த்தக்கூடிய நிலையிலே பல்வேறு திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அவற்றிலே குறிப்பாக, மத்திய அரசின் துணையோடு நாம் இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோமே, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத

2011 ஜனவரி 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

வகையிலே, நம்முடைய தமிழ்நாட்டிலே, 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை' இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோமே (மேசையைத் தட்டும் ஒலி), அந்தத் திட்டத்தின்மூலமாக 2010—2011-ஆம் ஆண்டில் மட்டும் இதுவரை நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய ஊரகப் பகுதிகளில், ஏழையெளிய மக்களுக்கு 1,847 கோடி ரூபாய் ஊதியமாக வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இதனுடைய பொருள் என்ன? வாங்கும் சக்தி அதிகரித்து இருக்கிறதா, இல்லையா?

அதுமட்டுமல்ல; இந்த அரசு பொறுப்பேற்றவுடனே, தேர்தல் நேரத்தில் வழங்கிய அந்த உறுதிமொழிகளை எல்லாம் காப்பாற்றுகிற, நிறைவேற்றுகிற நேரத்தில், முதல் திட்டமாக ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு நிறைவேற்றக்கூடிய அந்தத் திட்டத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் கையொப்பமிட்டு நிறைவேற்றினார்கள்.

அடுத்து, இரண்டாவதாக, விவசாயப் பெருங்குடி மக்கள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியிருக்கக்கூடிய கடன், ஏழாயிரம் கோடி ரூபாய். அதை முழுமையாகத் தள்ளுபடி செய்வேன் என்று தேர்தல் நேரத்தில் தந்த உறுதி மொழி. அதற்காகக் கையொப்பமிட்டு ஏழாயிரம் கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்து, அதனால் பல இலட்சக்கணக்கான விவசாயிகளினுடைய கண்ணீரைத் துடைத்து அவர்கள் பயன்பெறக்கூடிய வகையிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்தார். அதனால் என்ன பயன் என்று கேட்டால், அவர்கள் வாங்கும் சக்தி, அவர்களுடைய கையிருப்பு, முதலீட்டுத் தொகை இதனால் அதிகரித்து இருக்கிறதா, இல்லையா?

நான் இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இதனால் இங்கிருக்கக்கூடிய எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், எந்த அளவுக்கு இலாபம் பெற்றார்கள்? பலன் பெற்றார்கள்? அவர்களால் இல்லையென்று மறுக்க முடியுமா? நான் இன்னும்கூட ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஏழாயிரம் கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்வதற்காக நம்முடைய முதல்வர் அவர்கள் கையொப்பமிடுகிற நேரத்திலே எங்களைப் போன்றவர்கள் எல்லாம் நம்முடைய முதல்வரிடத்திலே நாங்கள் வைத்த ஒரு கோரிக்கை. எங்களுடைய உள்ளத்தில் தோன்றிய அந்த உணர்வை நாங்கள் முதல்வரிடத்திலே வெளிப்படுத்தினோம். என்னவென்று கேட்டால்,

[திரு. மு.க. ஸ்டாலின்] [2011 ஜனவரி 13

ஏழாயிரம் கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்கின்றீர்களே, ஒரு கோடியல்ல, இரண்டு கோடியல்ல; 10 கோடியோ 20 கோடியோ அல்ல; ஐநூறோ ஆயிரமோ அல்ல; ஏழாயிரம் கோடி ரூபாய்; இதைத் தள்ளுபடி செய்கின்றீர்களே, இதனால் யாருக்கு அதிக இலாபம் என்று கேட்டால், எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்கள்தான் இதனால் அதிக இலாபம் பெறுகின்றார்கள். ஆகவே, இது நியாயமா என்று எங்களுடைய உள்ளத்தில் தோன்றிய உணர்வை எடுத்துச் சொன்னோம். உடனே நம்முடைய முதல்வர் அவர்கள் எங்களிடத்திலே என்ன விளக்கம் தந்தார் என்று கேட்டால், நான் ஏழாயிரம் கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்கின்றேன் என்று சொன்னால், நான் அவர்களையெல்லாம் ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய திமுகவாகப் பார்க்கவில்லை. எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க.வாகப் பார்க்கவில்லை. தோழமைக் கட்சியாக இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியாகப் பார்க்கவில்லை. பாட்டாளி மக்கள் கட்சியாகப் பார்க்கவில்லை. கம்யூனிஸ்டு கட்சிகளாகப் பார்க்கவில்லை. நான் அவர்களையெல்லாம் ஒட்டுமொத்தமாக விவசாயப் பெருங்குடி மக்களாகப் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய இனத்து மக்களாகப் பார்க்கிறேன் என்று எங்களுக்கு எடுத்துச் சொல்லி அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்தார்.

பிற்பகல் 1—25

அதனால் அதிகமான அளவிற்கு அவர்கள்தான் அதிக இலாபம் பெற்றிருக்கிறார்கள் என்பதும் உண்மை. எவ்வளவு இலாபம் பெற்றிருக்கிறார்கள் என்ற விவரங்கள் எல்லாம் என்னிடத்திலே இருக்கின்றன. இல்லையென்று மறுக்க முடியாது. சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட, இந்த அவையில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் பெயர்கள்கூட இருக்கின்றன. இந்தப் புள்ளிவிவரத்தையெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டுமா? உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். கூட்டுறவுப் பயிர்க் கடன் தள்ளுபடி திட்டத்தின்மூலமாக பயன்பெற்றவர்கள் விவரம் இந்தப் பட்டியலில் உள்ளது. அ.தி.மு.க.—வினுடைய பொறுப்பில் இருக்கக்கூடியவர்கள், உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்கள், அவர்களில் சிலர் பற்றிய பட்டியல் மட்டும் என்னிடம் இப்போது இருக்கிறது. அதில் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். கோயம்புத்தூர் மாவட்டத்திலே திரு. சுகுமார், பாராளுமன்ற உறுப்பினர்,

2011 ஜனவரி 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

பொள்ளாச்சி, தளவாய்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திலே 1,15,691 ரூபாய் அவருடைய கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய உடுமலைப்பேட்டை தொகுதியைச் சேர்ந்த திரு. சி. சண்முகவேலு, குமரலிங்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திலே 1,39,120 ரூபாய்; அவருடைய துணைவியார் திருமதி மனோன்மணி, குமரலிங்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கக் கடன் ரூ. 1,37,750. ஆக, நான் ஏதோ குறை சொல்ல வேண்டும், குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்காக, அவர்களுடைய மதிப்பைக் குறைத்துப் பேச வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன் என்று தயவுசெய்து அவர்களும் கருதக்கூடாது. நானும் அவ்வாறு கருதவில்லை. ஆனால், உண்மை நிலையை, கட்சிக்கு அப்பாற்பட்டு, கட்சி சார்பற்ற முறையிலே இந்த ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதற்கு இவையெல்லாம் ஒரு சாட்சியாக, சான்றாக இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகளுடைய கடன்கள் மட்டுமல்ல. நெல், கரும்பு, பால் போன்ற விவசாயம் சார்ந்த உற்பத்திப் பொருள்களுடைய கொள்முதல் விலையை உயர்த்தி, வாங்குபவர்களுடைய திறனை நாம் அதிகரித்திருக்கிறோம். அதுமட்டுமா? அரசு அலுவலர்களுடைய ஊதியத்தை உயர்த்தி வழங்கியிருக்கிறோம்.

அரசுத் துறைகளில் 5,05,314 பேர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்திருக்கிறோம். பல்வேறு மாவட்டங்களில் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி, தனியார் நிறுவனங்களில் 1,34,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். தொழிலாளர் நலத் துறையின் சார்பில், இளைஞர்களின் தொழில் திறனை மேம்படுத்தி, சுமார் 18,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியிருக்கின்றோம். மேலும், தொழில் வளர்ச்சியின் காரணமாக, சுமார் 11,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியிருக்கிறோம். எனவே, இதுபோன்ற நடவடிக்கைகள் காரணமாக மக்களுடைய வாங்கும் சக்தியை அதிகரித்திருக்கிறோம் என்பதை யாரும் மறுத்திட, மறைத்திட முடியாது. இருந்தாலும், விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்கின்ற முயற்சியிலே, அது மத்திய அரசாங்கமாக இருந்தாலும் சரி, மாநில அரசாங்கமாக இருந்தாலும், சரி, அதிலே எந்த அளவிற்கு முனைப்போடு செயல்பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் நன்றாக அறிவோம்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2011 ஜனவரி 13

நாளையதினம்கூட நம்முடைய முதல்வர் அவர்கள் விலைவாசியை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது பற்றி ஆய்வு செய்வதற்கு உயரதிகாரிகளையெல்லாம் அழைத்து ஒரு கூட்டத்தைக்கூட நடத்தவிருக்கிறார்கள் என்ற செய்தியை இன்று காலையிலே நீங்கள் பத்திரிகையிலே படித்திருப்பீர்கள். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் என்னதான் விலைவாசி ஏறிக்கொண்டிருந்தாலும் அதைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் நிச்சயமாகக் கலைஞர் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய இந்த அரசு, எல்லா வகைகளிலும் ஈடுபடும் என்பதை நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இந்த அரசு நிறைவேற்றிக்கொண்டிருக்கக்கூடிய பல்வேறு சிறப்பான திட்டங்களுக்கெல்லாம் மகுடம் சூட்டக்கூடிய வகையிலே, சிகரம் வைத்தாற்போல் அமைந்திருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய திட்டம்தான், தலைவர் கலைஞர் அவர்களுடைய கனவுத் திட்டமாக, பல இலட்சம் ஏழையெளிய மக்களுடைய கனவை நனவாக்கக்கூடிய திட்டமாக அமைந்த உன்னதமான ஒரு மாபெரும் திட்டம்தான், கலைஞர் வீடு வழங்கும் திட்டம் என்பது உங்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தைப் பற்றிக் கடந்த ஆளுநர் உரையிலே அறிவித்தோம். அதற்குப் பிறகு அதன் தொடக்க விழா திருச்சியிலே நடைபெற்றது.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: அந்தத் தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெற்ற நேரத்தில், சட்டமன்றக் கட்சிகளுடைய தலைவர்களில் ஒரு சிலர் வரவில்லை, ஆனால், பல பேர் அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சிக்கு வந்து வரவேற்று, பாராட்டி, நன்றி தெரிவித்து உரையாற்றியிருக்கிறார்கள். ஆக, நன்றி மட்டுமல்ல; அதேநேரத்தில் கோரிக்கையும் வைத்து அந்த நிகழ்ச்சியிலே பேசியிருக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிற்கும் 60 ஆயிரம் ரூபாய் அரசின் சார்பில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. 60 ஆயிரம் ரூபாய் அதற்குப் போதாது; எனவே, கொஞ்சம் உயர்த்தித் தரவேண்டும் என்றுதான் அன்றைக்கு கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையைக்கூட நமது

2011 ஜனவரி 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

முதல்வர் அவர்கள் உதாசீனப்படுத்தாமல் பரிசீலனை செய்கிறேன் என்றுதான் அந்த விழாவிலே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதற்குப் பிறகு சென்னைக்கு வந்ததற்குப் பிறகு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து விவாதித்து, அதற்குப் பிறகு, கோரிக்கைகளின் அடிப்படையிலே 15 ஆயிரம் ரூபாய் உயர்த்தி 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்ற அறிவிப்பும் வெளியிடப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு, தமிழ்நாடு முழுவதும் கணக்கு எடுக்கப்பட்டது. தமிழகத்திலே 21 இலட்சம் குடிசை வீடுகள் இருக்கின்றன என்று கணக்கெடுக்கப்பட்டு, அந்த 21 இலட்சம் வீடுகளை, அந்தக் குடிசைகளை அப்புறப்படுத்திவிட்டு அதற்கு மாற்றாகக் கான்கிரீட் வீடுகளைக் கட்ட வேண்டும் என்று முடிவெடுத்து, ஆக அந்த 21 இலட்சம் வீடுகள் 6 ஆண்டுக் காலத்தில் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்று முடிவெடுத்து, அதிலே முதல் கட்டமாக இந்த ஆண்டு 3 இலட்சம் வீடுகள் கட்ட முடிவு செய்து, அறிவிக்கப்பட்டு, அந்தப் பணி நடந்து கொண்டிருக்கிறது. ஆக, இதுவரை, 30 ஆயிரம் வீடுகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 2 இலட்சம் வீடுகள் பிப்ரவரி மாதம் இறுதிக்குள்ளாகக் கட்டி முடிக்கப்பட இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் திட்டத்தைப் பயனாளிகளே விரும்பி மகிழ்ச்சியோடு வேக வேகமாக அதைக் கட்டிக் கொண்டிருக்கக்கூடியதைக் கருத்திலே கொண்டு, எதிர்வரக்கூடிய ஆண்டிலே கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டிருக்கக்கூடிய 3 இலட்சம் வீடுகளுக்குப் பணி ஆணைகள் இந்த ஆண்டே வழங்கப்படவிருக்கின்றன. இங்கேகூட நமது சிவபுண்ணியம் அவர்கள், அதேபோல திரு. கோ.க. மணி அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த ஆண்டு 3 இலட்சம் வீடுகள்தான் என்று அறிவித்திருக்கிறீர்களே, அதை ஒரு 6 இலட்சமாக உயர்த்தி அறிவித்தால் சிறப்பாக இருக்கும் என்று கோரிக்கை வைத்தார்கள். ஆகவேதான், அதற்குரிய பணி ஆணையை இந்த ஆண்டே வழங்கி, அந்தப் பணியும் தொடங்கப்பட இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்து, இந்தத் திட்டம் தொடங்கிய முதல் ஆண்டிலேயே 6 இலட்சம் வீடுகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஆக, இப்படிப்பட்ட சிறப்பான இந்தத் திட்டத்தை ஊரகப் பகுதிகளில் மட்டும் நிறுத்திவிடாமல், அடுத்த கட்டமாக

[திரு. மு.க. ஸ்டாலின்] [2011 ஜனவரி 13

பேரூராட்சிப் பகுதிகளிலும் இந்த கான்கிரீட் வீடுகளைக் கட்ட முடிவெடுத்து, ஆளுநர் உரையிலே அதுவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இப்படிப்பட்ட ஒரு உன்னதமான உயர்ந்த நிலையில் இருக்கக்கூடிய இந்தத் திட்டத்தைப் பற்றி எதிர்க்கட்சியினுடைய தலைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பாராட்டாமல்கூட இருக்கலாம்; ஆனால், கொச்சைப்படுத்தாமல் இருந்திருக்கலாம் என்பதுதான் என்னுடைய அன்பான வேண்டுகோள். தமிழகத்திலே வாழும் ஏழையெளியவர்களுக்கான இந்தத் திட்டத்தைக் கழிவறைத் திட்டம் என்று அவர் வர்ணித்திருப்பதுதான் உள்ளபடியே வேதனையாக இருக்கிறது. ஆகவே, இந்த அரசை அவமதிப்பதாக நான் கருதவில்லை. இத்திட்டத்தின்மூலம் பயன்பெறக்கூடிய ஏழையெளிய குடும்பங்களை அவமதிப்பதாகவே நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் அவர் குறிப்பிட்டிருக்கிறார், இருக்கிற வீட்டை இடித்து விட்டு செய்வதறியாது ஏழையெளிய மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் ஓர் ஆதாரமற்ற குற்றச்சாட்டைக் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு முறை இந்த வீடுகளைப் பற்றி—கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தைப் பற்றி—முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையிலே குறிப்பிட்டபோது, ஆளுங்கட்சிக்காரர்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள அந்த ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களே அதிலே பயன்பெறுவதற்காக இந்தத் திட்டத்தை நடத்துகிறார்கள் என்று ஒரு பத்திரிகையிலே, ஒரு பேட்டியிலே, ஓர் அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தார்கள். நான் அப்போது கேட்டேன்; எந்தவித ஆதாரமும் இல்லாமல் சொல்கிறார்; ஒருவேளை ஆதாரத்தோடு அவர்கள் சொல்வார்கள் என்று சொன்னால், அதற்குரிய நடவடிக்கையை எடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்; பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்; முன்னாள் முதலமைச்சர், ஒரு பொறுப்பில் இருக்கக்கூடியவர், எதிர்க்கட்சித் தலைவர், எனவே, ஆதாரத்தோடு சொல்ல வேண்டும் என்று நானே பதில் தந்தேன். ஆனால், இதுவரையிலும் அதற்கு எந்தப் பதிலும் கிடையாது. அதேபோலத்தான் இதுவும். இப்போதும் சொல்கிறேன். இந்தத் திட்டத்தில் எங்காவது குளறுபடிகள், குறைகள் இருந்தால் அவர்கள் அதனைச் சொல்வார்கள் என்று சொன்னால், நிச்சயமாக

2011 ஜனவரி 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

இந்த அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–35

இந்தக் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தைப் பொறுத்தவரையில், நேற்றைக்கு நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் பேசுகிறபோது, 75 ஆயிரம் ரூபாய் போதாது என்றும், அதனை இன்னும் உயர்த்தித் தர வேண்டும் என்றும் ஒரு கோரிக்கை வைத்தார்கள். நான் இந்த அவைக்கு ஒரு செய்தியை நினைவுபடுத்த விரும்புகிறேன். முதன்முதலில் தமிழகத்திலே ஆதி திராவிட வகுப்பினைச் சேர்ந்தவர்களுக்கு இந்த வீடு கட்டும் திட்டம், 1974 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், அந்தத் திட்டம் முதன்முதலில் தொடங்கப்பட்டது. அதற்குப் பிறகு இப்போது தேசிய அளவிலே, இந்திய அளவிலே, I.A.Y. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் என்ற வகையிலே இப்போது நாடு முழுவதும் அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டத்திற்கு I.A.Y. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்திற்கு மத்திய அரசினுடைய பங்கு 75 சதவிகிதம். மாநில அரசினுடைய பங்கு 25 சதவிகிதம். இந்தத் திட்டத்தில் கட்டப்படுகின்ற வீடுகளுக்கு கான்கிரீட் கூரைகள் அமைக்க 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை திமுக. ஆட்சியில் இருந்தபோது இந்தக் கூரை அமைக்கப்படுவதற்காக மட்டுமே நம்முடைய தமிழக அரசின் சார்பில், தி.மு.க. அரசு சார்பில் ரூ.12,000/- கூடுதலாக வழங்கினோம். அந்தத் தொகையும் தற்போது அதிகப்படுத்தப்பட்டு 30,000 ரூபாய் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதாவது, ஒரு வீட்டிற்கு ஆகக்கூடிய செலவு மொத்தம் ரூ.75,000/-. மத்திய அரசினுடைய பங்கு ரூ.33,750/-. மாநில அரசினுடைய பங்கு ரூ.41,250/-. அதாவது மாநில அரசு பங்கு 55 சதவிகிதம், மத்திய அரசினுடைய பங்கு 45 சதவிகிதம். ஆனால், அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் நடந்தது என்ன? தி.மு.க. ஆட்சியில் மேற்கூரைக்காக வழங்கப்பட்ட கூடுதல் தொகையாக வழங்கிக்கொண்டிருந்தோமே, அந்தத் தொகை ரூ.12,000/-ஐக் குறைத்தார்கள். அதாவது, ரூ.12,000/-இலிருந்து ரூ.3,000/-ஐக் குறைத்து வெறும் 9,000/- ரூபாய் மட்டுமே தந்தார்கள். 2004-2005, 2005-2006 ஆம் ஆண்டுகளில் இது குறைக்கப்பட்டதா?

இல்லையா? அவர்கள்தான் இப்போது இந்தக் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்கு நிதியை உயர்த்தித் தர வேண்டும் என்று குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்குத் துணையாக நம்முடைய திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும் இப்போது குரல் கொடுத்துக்கொண்டிருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், இந்த ஆளுநர் உரையிலே பங்கேற்று உரையாற்றியிருக்கக்கூடிய பல உறுப்பினர்கள் வெளியிலிருந்து தங்களுடைய கருத்துகளை எடுத்து வைத்திருக்கக்கூடிய சில கட்சிகளினுடைய தலைவர்கள், பல்வேறு பிரிவைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள் எடுத்து வைத்திருக்கக்கூடிய இந்தக் கோரிக்கைகளின் அடிப்படையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு சில அறிவிப்புகளை நான் இந்த அவையிலே வெளியிட விரும்புகிறேன்.

மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி என்பது இந்த அரசினுடைய நோக்கம். நிதி உதவி, இட வசதி போன்ற பல்வேறு அடிப்படையில், படிப்படியாக இந்தத் திட்டத்தினை அரசு நிறைவேற்றி வருகிறது. அனைத்து மாவட்டங்களிலும் தலைவர் கலைஞர் நிச்சயம் மருத்துவக் கல்லூரி அமைப்பார். இந்த அரசு எதிர்காலத்தில் நிச்சயமாக அதனை நிறைவேற்றும். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே பேசிய நம்முடைய திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் புதுக்கோட்டையிலே நான் ஒரு விழாவிற்குச் சென்றிருந்தபோது, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களுடைய நூற்றாண்டு விழாவிலே கலந்துகொண்டு உரையாற்றுகின்றபோது, மருத்துவக் கல்லூரி இந்த மாவட்டத்திலே அமைக்கப்படும் என்று நான் சொன்னதை அவர் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார். நல்ல எண்ணத்தோடு குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். அதற்காகத்தான் நான் இந்தப் பதிலைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆளுநர் உரையில் இராமநாதபுரம், கடலூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம். அந்தப் பட்டியலில் இப்போது பின்தங்கிய மாவட்டமான புதுக்கோட்டை மாவட்டத்தையும், அதேபோல், விருதுநகர் மாவட்டத்தையும் சேர்த்திட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2011 ஜனவரி 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

இந்தியாவின் முதல் பெண் மருத்துவரான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் பிறந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல், நம்முடைய அமைச்சர்களாக இருக்கக்கூடிய கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள், தங்கம் தென்னரசு அவர்கள் எடுத்து வைத்த அந்த வேண்டுகோள் மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கல்விக் கண் திறந்த, பெருந்தலைவர் காமராஜர் பிறந்த விருதுநகர் மாவட்டத்திலே மருத்துவக் கல்லூரி தொடங்கப்படவிருக்கின்றது என்பதையும், நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர், திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும், அதேபோல் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய திரு. கே. உலகநாதன் அவர்களும் தொடர்ந்து இந்த அவையிலே எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு கோரிக்கை, திருத்துறைப்பூண்டியில் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டுமென அவர்கள் தொடர்ந்து எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கோரிக்கை நிறைவேறும் சூழல் கிட்டி வந்தது. ஆனால் எட்டிப் போய்விட்டது. இன்று எட்டிப் போய் இருக்கக்கூடிய அவர், நேற்று இந்த அவையிலே அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, நீங்கள் மட்டுமல்ல; அந்தத் தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய சகோதரர் ஏ.கே.எஸ். விஜயன் அவர்களும்கூட, இந்தக் கோரிக்கையை நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலும், நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தவகையிலே கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்றல்ல; கேட்காமலேயே கொடுக்கக்கூடிய ஆட்சி, தட்டாமலேயே அதை வழங்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வர் நம்முடைய தலைவர் கலைஞர் என்கிற காரணத்தால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் புதிய அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்க அனுமதித்திருக்கிறார்கள். ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட 5 கல்லூரிகளோடு இந்தக் கல்லூரியையும் சேர்த்து 6 கல்லூரிகள் இந்த அரசால் தொடங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2011 ஜனவரி 13

பிற்பகல் 1–40

அதேபோல், தமிழ்நாடு வணிகர் சங்கங்கள் பேரமைப்பின் சார்பாகப் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று தொடர்ந்து அரசிடம் வேண்டுகோளை எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சங்கத்தினுடைய தலைவராக இருக்கக்கூடிய விக்கிரமராஜா அவர்கள், அவரைச் சார்ந்திருக்கக்கூடிய நிர்வாகிகள், பலமுறை நம்முடைய முதல்வர் அவர்களை நேரடியாகச் சந்தித்து மனுக்களைத் தந்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

விற்பனை மதிப்பு அளவு (Turn–over) உச்சவரம்பின்றி, பாதையோர வணிகர்கள் தவிர்த்து, சிறு வணிகர்கள் உள்பட அனைத்து வணிகர்களையும், வணிகர் நல வாரியத்திலே உறுப்பினர்களாகச் சேர்க்க நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் உயிரிழக்க நேரிடும்பட்சத்தில், அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்படக்கூடிய நிவாரணத் தொகை தற்போதுள்ள ரூ.50,000–விலிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. வசந்தகுமார் அவர்கள்கூட, இதுபோன்ற கோரிக்கைகளையெல்லாம் தெரிவித்துள்ளார். இன்னும் பல கோரிக்கைகள் இருக்கின்றன. அவையெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. எனவே, விரைவில் அவற்றிற்குரிய நடவடிக்கையை இந்த அரசு நிச்சயமாக எடுக்கும்.

அதேபோல், உயிர் காக்கக்கூடிய உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை, அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு விரிவுபடுத்தியதற்காக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக்கூடிய வகையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், சில கோரிக்கைகள் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவராக இருக்கக்கூடிய பொன்குமார் மூலமாக அரசுக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்கள், பணியின்போது இறந்தால் மட்டுமே, விபத்து உதவித் தொகை ரூபாய் ஒரு இலட்சம் கிடைக்கின்ற நிலையை மாற்றி, இவர்கள் எவ்வித விபத்தின் மூலம் இறந்தாலும், அந்தக் குடும்பத்திற்கு நிவாரணத் தொகை ரூ. 1 இலட்சம் வழங்கப்படும்.

2011 ஜனவரி 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

கட்டுமானம் மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், 5 வருடங்கள் தொடர்ந்து உறுப்பினராக இருந்து, 60 வயது பூர்த்தியடைந்த உறுப்பினர்களுக்கு மட்டுமே, ஓய்வூதியம் வழங்கும் நிலையை மாற்றி, பதிவு செய்து 60 வயது பூர்த்தியடைந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கப்படும்.

தற்போது கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு, கல்வி உதவித் தொகை, திருமண உதவி, மகப்பேறு உதவி போன்ற உதவிகள், பதிவு செய்து ஓராண்டு கழிந்த பிறகுதான் கிடைக்கின்றது என்ற நிலையை மாற்றி, உறுப்பினர்கள் பதிவு செய்த நாள் முதல், நலத் திட்ட உதவிகள் வழங்கப்படும்.

கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்கள் மட்டுமே, அரசு மற்றும் அரசு சார்ந்த பொதுத் துறை நிறுவனப் பணிகளில் ஒப்பந்ததாரர் மூலம் ஈடுபடுத்தத் தக்க அரசாணை வெளியிடப்படும்.

அதேபோல், சிவகங்கை சட்டமன்றத் தொகுதியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள், அவருக்காகப் பரிந்து பேசிய திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள், நேற்றைக்குக்கூட இந்த அவையிலே பேசியிருக்கிறார்கள். சிவகங்கை பகுதியிலே தனியார் கிராஃபைட் செங்கல் ஆலைத் திட்டத்திற்கு விரைவில் அனுமதி வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். தற்போது சிவகங்கையில் அரசு நிறுவனமான 'டாமின்' மூலம், கிராஃபைட் கனிமம் தயாரிக்கும் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. இந்தக் கனிமத்தைப் பயன்படுத்தி, பிற பொருட்களைத் தயாரிக்க, தனியார் நிறுவனங்களிடமிருந்து விருப்புணர்வு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இதற்கு 3 நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்து, அவற்றில் ஒரு நிறுவனம் தொழில்நுட்ப வல்லுநர் குழுவால் தெரிவு செய்யப்பட்டு, இந்த நிறுவனத்திற்குத் தேவையான அனுமதிகளை விரைவில் 'டாமின்' வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதேபோல், 1990-1991 வரை தொடங்கப்பட்டு, அரசு மானியம் பெற்றுவரும் சிறுபான்மையினர் மற்றும் சிறுபான்மையினரல்லாத தனியார் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கைப்படி கூடுதலாகத் தேவைப்படும்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2011 ஜனவரி 13

சுமார் 6,400 ஆசிரியர் பணியிடங்களை அனுமதிக்க, இப்பள்ளிகள் வலியுறுத்தி வருவதைக் கருத்திலே கொண்டு, இந்தக் கூடுதல் பணியிடங்களுக்கு அரசு அனுமதி அளிக்க முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆண்டுக்கு ரூ.200 கோடி அளவிற்கு இப்பள்ளிகள் கூடுதல் நிதி உதவியைப் பெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—45

அதேபோல், மக்கள் நலப் பணியாளர்கள் ஒவ்வொரு மாதமும், ஊதியத்தினை ஊராட்சித் தலைவர் மூலமாகப் பெறுவது மிகவும் சிரமமாகவுள்ளது என்றும், இதில் பல்வேறு பிரச்சினைகள் பணியாளர்களுக்கு ஏற்படுகின்றன என்றும் குறிப்பிட்டுள்ள கோரிக்கையைக் கருத்தில் கொண்டு, மக்கள் நலப் பணியாளர்களுக்குரிய மாதாந்திர ஊதியம் உரிய காலத்தில் கிடைத்திட ஏதுவாக, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்தும் நேரடியாக சம்பளத் தொகையை மக்கள் நலப் பணியாளர்களுக்கு வழங்க உரிய ஆணையை அரசு பிறப்பிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் நலப் பணியாளர்கள் பணியிலிருக்கும்போது மரணமடைந்தால், குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலமாக குடும்பப் பாதுகாப்பு நிதி வழங்கிட வேண்டும் எனக் கோரிக்கை வைத்துள்ளனர். அவர்களின் நியாயமான இந்தக் கோரிக்கையினை ஏற்று, பணியிலிருக்கும்போது மரணமடையும் மக்கள் நலப் பணியாளர்களின் குடும்பத்திற்கு, குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் குடும்பப் பாதுகாப்பு நிதி வழங்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மோட்டாரை இயக்கக்கூடிய பணியினை மேற்கொள்ளும் பகுதிநேரப் பணியாளர்களுக்கு, தற்போது ரூ. 1,150/- தொகுப்பூதியமாக நிர்ணயிக்கப்பட்டு, தற்காலிக உயர்வுகளையும் (Adhoc increase) சேர்த்து, மாதம் ரூ.1,510/- வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுடைய ஊதியத்தை, இவர்களுடைய பணியின் தன்மை மற்றும் நீண்டகால கோரிக்கையினைக் கருத்தில் கொண்டு 1-1-2011 முதல் தொகுப்பூதியம் ரூ.2,000/- என நிர்ணயித்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் சுமார் 40,000 பேர் பயன் பெறுவார்கள்.

2011 ஜனவரி 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

அடுத்து, ஓய்வூதியம் பெறுவோர் சங்கங்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசிடம் தொடர்ந்து வைத்து வருகிறார்கள். அவர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவற்றில் முக்கிய கோரிக்கையான, மத்திய அரசு வழங்குவதுபோல, 80 வயதைக் கடந்த மூத்த ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர்களுக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு வழங்குவதுபோல, 80—84 வயது உள்ளவர்களுக்கு அடிப்படை ஓய்வூதியத்தில் 20 சதவீதம் உயர்த்தவும், 85—89 வயது வரை, அடிப்படை ஓய்வூதியத்தில் 30 சதவீதம் உயர்த்தவும், 90-94 வயது வரை அடிப்படை ஓய்வூதியத்தில் 40 சதவீதம் உயர்த்தவும், 95-99 வயது வரை அடிப்படை ஓய்வூதியத்தில் 50 சதவீதம் உயர்த்தவும், 100 வயது மற்றும் அதற்குமேல் உள்ளவர்களுக்கு 100 சதவீதம் உயர்த்தி இதற்குரிய ஆணை வெளியிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிவிப்பின்மூலம் சுமார் 40,000 ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் பயன் பெறுவார்கள். இதன்மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 97 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழகத்தைப் பொறுத்தவரையில், பல மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக, வழிகாட்டியாக, ஒரு முன்னோடி மாநிலமாகப் பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைப் பலரும் இன்றைக்குப் பாராட்டி வருகிறார்கள் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

உதாரணத்திற்கு ஒன்றிரண்டை மாத்திரம் நான் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம். இந்த அவையிலேகூட பலர் அதைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். எனவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு செயல்படுத்தக்கூடிய முறையைப் பார்த்து மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் பாராட்டு வழங்கியுள்ளது.

அதைப்போல், தமிழகத்திலே செயல்படுத்தக்கூடிய, "வாழ்ந்து காட்டுவோம்" திட்டமே உலக அளவிலே செயல்படக்கூடிய உலக வங்கியின் திட்டங்களில் சிறப்பாகச் செயல்படும் திட்டமாக உள்ளது

[திரு. மு.க. ஸ்டாலின்] [2011 ஜனவரி 13

என உலக வங்கி பாராட்டியுள்ளது. தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தக்கூடிய முதல் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்று மத்திய அரசு பாராட்டியுள்ளது.

உலக அளவிலே மோட்டார் வாகன உற்பத்தியிலே மிக வேகமாக வளரும் மையம் சென்னை என்று 'Wall Street Journal' பத்திரிகை மனந்திறந்து பாராட்டியிருக்கிறது. ஆக, இப்படி பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரிய மாநிலமாகத் தமிழகம் உயர்ந்து வருவதைக் கண்டு உங்களுக்குச் சோகமா? அதற்காகக் கருப்புச் சட்டையா?

ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, மானிய விலையிலே மளிகைப் பொருட்கள், இலவச எரிவாயு அடுப்புகள், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ஒவ்வொரு வீட்டிற்கும் 15,000/- ரூபாய் நிதியுதவி, (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவில் வாரத்திற்கு ஐந்து முறை முட்டைகள், விவசாயிகளுக்கு வட்டியில்லாப் பயிர்க் கடன், படித்த இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி, பணி நியமனம், உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம், கலைஞர் வீடு வழங்கும் திட்டம், சிறுபான்மை மக்கள் நலனுக்காகத் தனி இயக்குநரகம், பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியருக்கு 3.5 சதவிகித இட ஒதுக்கீடு, அருந்ததியினருக்கு 3 சதவிகித உள் ஒதுக்கீடு, இவையெல்லாம் இந்தியாவில் எந்த மாநிலத்திலாவது உண்டா? (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1—50

மனச்சாட்சியைத் தொட்டு நீங்கள் சொல்ல வேண்டும். சொல்ல முடியாத காரணத்தால்தான் உங்களுக்கு சோகமா? கருப்புச் சட்டையா? சமூக நீதி போற்றி, சமுதாய நலன் போற்றி, சாதி மத பேதம் அகற்றி, சமத்துவம் சகோதரத்துவம் என்ற உணர்வோடு, நல்லிணக்கமும் அமைதியும் காத்து, நலிந்தோர் உதவிகள் நல்கி, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, வளங்களைப் பெருக்கி, வாழும் சமுதாயம் நிம்மதியோடு வாழ வேண்டும்; எதிர்காலச் சமுதாயம் ஏற்றம் பெற வேண்டும் என்ற உணர்வோடு, அனைத்துத் தரப்பினரும்

2011 ஜனவரி 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

போற்றக்கூடிய வகையிலே, அண்ணா வழியிலே அயராது உழைத்து, ஆதிக்கமற்ற சமுதாயம் அமைந்திட அனுதினமும் நடைபோட்டு வருகிறதே கலைஞர் அரசு, அதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் கருப்புச் சட்டை அணிந்துகொண்டு, சோகக் கூச்சல் போடுவோரை சரித்திரம் அடையாளம் வைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, கடந்த 5 ஆண்டுகளாக நிறைவேற்றியிருக்கக்கூடிய நல்ல திட்டங்கள் எல்லாம் தமிழகத்தை தலைசிறந்த மாநிலமாக உருவாக்க அமைக்கப்பட்டிருக்கக்கூடிய வலுவான அடித்தளம், ஆணிவேர் ஆகும். இந்தப் பணி தொடரும். மேலும், மேலும் தொடரும். இந்த நேரத்தில் அமெரிக்க நாட்டினுடைய முன்னாள் ஜனாதிபதி லின்டன் ஜான்சன் கூறிய சில வார்த்தைகளை நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த வார்த்தைகளை நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்: "This great, rich, restless country can offer opportunity, education and work to all. These are our enemies – poverty, ignorance and disease. They are our enemies; not our fellowmen, not our neighbours, and these enemies we shall overcome." இந்த மகத்தான வளமான ஓய்வறியா நாடு, அனைவருக்கும் கல்வி, நம்பிக்கை மற்றும் வாய்ப்புகளை அளிக்கும் வகையில் விளங்குகிறது. ஏழ்மை, அறியாமை, நோய் போன்றவையே நம் எதிரிகள். மற்றவர்கள் அல்ல. நம்மை அடுத்துள்ளோர் அல்ல. நம் எதிரிகளை முறியடிப்போம். முன்னேறிச் செல்வோம். நாளை நமதே, நாடும் நமதே, எதிர்காலம் நமதே (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி விடைபெறுவதற்கு முன்னால் அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு—பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தற்போது மணி 1-52 (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், சொல்லுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்வழிக் கல்விப் பள்ளிகளினுடைய நீண்டநாள் கோரிக்கை, 1989-இலிருந்து நிறைவேற்றப்படாமல், கோரிக்கையாக இருந்து வருகின்ற, அரசு மானிய உதவி பெறாத பள்ளிகளின்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2011 ஜனவரி 13

சார்பாக இந்தக் கோரிக்கைகள் வைக்கப்பட்டு, இன்று ஏறக்குறைய 6,500 பணியிடங்களுக்குமேல் அதை வழங்கி, அந்த ஆசிரியர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றி வைத்திருக்கிற தமிழக அரசுக்கும், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இந்த அறிவிப்பினை இந்த அவையிலே வெளியிட்ட மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அந்தப் பள்ளிகளின் சார்பாகக் கோரிக்கைகளை வைத்த நான், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள், நம்முடைய குமரி மாவட்டத்தைச் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழக மற்றும் அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருடைய சார்பாகவும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியினை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வாழுகின்ற கோடிக்கணக்கான தமிழர்களினுடைய வாழ்வுக்கு வளம் சேர்க்கின்ற வகையில் நல்லதொரு பதிலுரையை அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய பாராட்டுதலையும், நன்றியினையும் தெரிவித்து, பொதுப் பணித் துறையில் 15, 20 ஆண்டுக் காலமாக, N.M.R.—ஆக வேலை செய்கின்ற சுமார் 1,200 பேர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கான கோப்புகள் தயார் செய்து, இன்று அறிவிப்பில் இடம் பெறும் என்று அவர்களும் மாடத்தில் ஆவலோடு காத்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பு வரவில்லை. அந்த அறிவிப்பு வருவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் ஆவன செய்ய வேண்டுமென்கிற கருத்தையும் இந்த நேரத்திலே வலியுறுத்தி, அதேமாதிரி மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் பொறியாளர்கள் தேர்வுக்கு 1:1 என்ற அடிப்படையிலும், 1—க்கு 20 என்ற அடிப்படையிலும் இரண்டுவிதமான அரசு ஆணையால் மிகப் பெரிய குழப்பம் நிலவி அவர்கள் பணி நிரந்தரத்திலே ஒரு குளறுபடி இருக்கிறது; அதைக் களைவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்லதொரு உத்தரவை வெளியிட்டு, அந்தப் பொதுப் பணித் துறையின் 1,200 N.M.R.—ஐயும் உடனடியாகப் பணி நிரந்தரம் செய்வதற்கான உத்தரவையும், இந்தத் தமிழர் திருநாளாம் பொங்கல் நாளில் வெளியிடுமாறு கேட்டு, மாண்புமிகு

2011 ஜனவரி 13] [திரு. தி. வேல்முருகன்]

முதலமைச்சர் உள்ளிட்ட அனைத்து சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவைத் தலைவருக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக, எங்கள் பொங்கல்—புத்தாண்டு, தமிழர் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள், பல்வேறு விவரங்களை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இத்தகைய தெளிவான உரை நிகழ்த்தப்பட்டபோதும், கடந்த காலததிலிருந்து தொடர்ந்து கொண்டிருக்கக்கூடிய மின் வெட்டு குறித்து எந்தவிதமான பதிலும் துணை முதல்வர் அவர்கள் தெரிவிக்கவில்லை. ஆளுநர் உரையில் புதிய மின் திட்டங்கள்தான் இடம்பெற்றிருக்கின்றன. எதிர்காலத்தில் இந்த மின் வெட்டு நீக்கப்படுமா, தொடருமா என்பது குறித்து அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் பல்வேறு அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். அவற்றிலே திருத்துறைப்பூண்டிக்குக் கலைக் கல்லூரி வேண்டுமென்று நானும், சட்டமன்ற உறுப்பினர் திரு. உலகநாதன் அவர்களும் தொடர்ந்து இந்த அவையிலேயும், நேரிலேயும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நழுவிப்போனது திரும்ப கைக்கு வந்திருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதி என்ற காரணத்தினாலேதான் அதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தினோம். அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதற்காக, இங்கே அறிவிப்புச் செய்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2011 ஜனவரி 13

அதோடு, நேற்றைய தினம் நான் குறிப்பிட்டுச் சொல்கிறபோது வெள்ள நிவாரணப் பணிகளிலே அந்த வீடுகள் முழுமையடையாமல் இருக்கின்றன என அந்த நிவாரணப் பணிகள் பற்றிச் சொன்னேன். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பெருமளவிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே அளவு வழங்கவேண்டும் என்கிற கோரிக்கை வலுவாக இருக்கிறது. தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் கோரிக்கை இது. எதிர்க்கட்சிகளின் கோரிக்கை அல்ல. ஆகவே, அதற்குரிய நிதியையும் ஒதுக்கி, அறிவிப்பார்கள் என்று எதிர்ப்பார்த்தோம். அதைத்தான் எங்களது டெல்டா பகுதி மாவட்டத்திலே இருக்கிற அனைவருமே எதிர்பார்க்கிறார்கள். அதைப்போல, விவசாயிகளுடைய நிவாரணத்தையும் எதிர்பார்க்கிறார்கள். அதையும் இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மூலமாக அறிவிப்பு செய்வார்களா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைக் குடிநீர்த் தேக்கத் தொட்டி மோட்டாரை இயக்கக்கூடிய அந்தப் பணியாளர்களுடைய தொகுப்பூதியத்தை உயர்த்தி வழங்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருந்தேன். அந்த தொகுப்பூதியத்தை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதிலுரையிலே அறிவித்திருக்கிறார்கள். அதற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பிலே உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அடுத்து, இந்திய மருத்துவப் பணியைச் செய்கிறவர்கள், ஓமியோபதி மருத்துவர்கள், சித்தா, ஆயுர்வேதம் போன்ற மருத்துவப் பணிகளைச் செய்கிறவர்களுக்கு நல வாரியம் அமைத்துத் தர வேண்டுமென்று ஒரு நீண்டகால கோரிக்கை இருக்கிறது. அந்தப் படிப்புகளுக்கு இன்றைக்குப் பல்கலைக்கழகம் அமைத்து ஒரு சாதனை அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். அவர்களே இதைப் பரிசீலனை செய்து, அந்தக் கிராமப் பகுதிகளிலே மக்களுக்குப் பணி செய்து கொண்டிருக்கிற அந்த ஓமியோபதி மருத்துவர்களுக்கு ஒரு நல வாரியம் அமைத்து உத்தரவிட வேண்டுமென்று கேட்டு, இந்த அறிவிப்புகளுக்கு நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

2011 ஜனவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி. (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், கட்சிக்கு ஒருவர்தான் உட்காருங்கள்.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூரை வீடுகள் மொத்தம் 21 இலட்சம் இருப்பதாக மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். இதில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் வருடந்தோறும் பார்ப்பீர்களேயானால், 1 இலட்சத்திலிருந்து ஒன்றரை இலட்சம் வீடுகள் வருகின்றன. அதையும் சேர்த்து 21 இலட்சம் வீடுகளா, இல்லை அதைக் கழித்து 21 இலட்சம் வீடுகளா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று; தொகுப்பு வீடுகள் பராமரிப்புக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேயே 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது என்பதையும் இந்தச் சபையிலே பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. 12-1-2011 அன்று மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

(திருத்தங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள திருத்தங்கள் அனைத்தும் பேரவையின் முன்னனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"2011 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 7 ஆம் நாளன்று சட்டப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன் அவர்களால் 10-1-2011 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 2—00

7. அரசினர் தீர்மானம்

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றை தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2011) மற்றும் 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2011) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 2—00

7. அரசினர் தீர்மானம்

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றை தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2011) மற்றும் 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2011) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2011 ஜனவரி 13]

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2011). 20—12—2010 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2010 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/2010) நிராகரிப்பது குறித்த தீர்மானம். திரு. செ.ம. வேலுசாமி, தான் கொடுத்துள்ள தீர்மானத்தை முன்மொழியலாம். (குறுக்கீடு) திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2011)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.*

திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சி திருத்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இப்போது மாநகராட்சியினுடைய எல்லை விரிவாக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளை உள்ளடக்கி ஏறக்குறைய 800 உள்ளாட்சிப் பிரதிநிதிகள் வருகிறார்கள். அந்தப் பகுதிகளையெல்லாம் அதிலே சேர்ப்பதாலே மக்களுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படும் என்ற குறை இருந்து கொண்டிருக்கிறது.*

@ 13-1-2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[திரு. கி. ஆறுமுகம்] [2011 ஜனவரி 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தாம்பரம், அம்பத்தூர் போன்ற பகுதிகளிலே புதிய மாநகராட்சியை உருவாக்கினால், அடிப்படை வசதிகள் செய்வதற்கு அதிகமான வாய்ப்புகள் இருக்கின்றன. ஏற்கெனவே, சென்னை மாநகரம் பெரிய மாநகரமாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த வகையிலே, அந்த மாநகராட்சியால் இந்தப் பணிகளை முழுமையாகச் செய்ய முடியாத நிலையில் இன்னும் அதிகமான சுமை ஏற்படும். எனவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் இதிலே கவனத்தைச் செலுத்தி, புதிதாக தாம்பரம் மற்றும் அம்பத்தூர் மாநகராட்சிகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவை நிலைக் குழுவுக்கு அனுப்பி, ஆய்வு செய்த பின்னர் இதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் எனப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி திருத்தச் சட்டமுன்வடிவின்மூலம் சென்னை மாநகராட்சியின் எல்லையை விரிவாக்கம் செய்ய அரசு முடிவு எடுத்துள்ளது. ஆனால், அதன் காரணம் மற்றும் நோக்கங்களை சட்டமுன்வடிவில் தெரிவிக்கவில்லை. இதைக் கவுன்சிலர்களே எதிர்க்கின்றனர். நகராட்சியை மாநகராட்சியாக மாற்றம் செய்து அறிவிக்க, குறைந்தபட்சம் மக்கள்தொகை 5 இலட்சத்திற்கும் குறையாமல் இருந்தால் போதுமானது. ஆனால், தற்போது சென்னை மாநகராட்சியில் மக்கள்தொகை கிட்டத்தட்ட 98 இலட்சம் பேர் இருக்கின்றார்கள். 98 இலட்சம் மக்களுக்கும் சென்னை மாநகராட்சியில் சரியான சாலை வசதியில்லாமல், கழிவுநீர்ப் பாதைகள் சரியாக இல்லாமல், குப்பைமேடுகளும் சுகாதாரக்கேடுகளும் நிரம்பியுள்ளன. இந்த நிலையில் நகராட்சியின் விரிவாக்கம் நல்ல பலனைத் தராது.

மேலும், பொதுமக்கள், தாங்கள் வசிக்கும் பகுதி மாநகராட்சி எல்லைக்குள் வரும்பொழுது நில மதிப்பு உயரும்; சாலை வசதி, குடிநீர் வசதி பெருகும்; பதிவுக் கட்டண உயர்வால், அரசுக்கு வருவாய் அதிகரிக்கும்; வசதிகள் பெருகும் என்று

நினைத்திருப்பார்கள். இது ஒரு மாயை என்பது தாமதமாகத் தெரியவரும். ஆனால், உண்மையில் நகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டால், ஊராட்சியின் ஜனநாயகச் செயல்பாடுகள் தடைபடும். திட்டங்களின் பலன்கள் அனைத்துப் பகுதிகளையும் சென்றடையாது. நிருவாகம் பிரச்சினைக்குரியதாகிவிடும். கிராமம் மற்றும் ஊராட்சிகளின் விளைநிலங்கள் வீட்டுமனைகளாக மாறும் நிலை உருவாகும்.

மத்திய அரசின் திட்ட உதவிகளும், பஞ்சாயத்துராஜ் திட்டத்தின்மூலம் கிராம ஊராட்சிகளுக்குக் கிடைக்கும் நிதி உதவிகளும் நேரடியாகக் கிடைக்காது. நிதி கிடைப்பதற்கு மாநகராட்சி ஒரு இடைத்தரகர்களைப்போல் செயல்படும் நிலை உருவாகும். அதேபோல், விவசாயம் மற்றும் கிராமப்புறத் தொழில்கள் அந்தந்தப் பகுதியிலிருந்து அழியும் நிலை உருவாகும். மாநகராட்சியின் எல்லை விரிவாக்கத்தின்மூலம் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்த முடியாத நிலை உருவாகலாம். ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் மாநகராட்சியின் நிதி செலவிட வழிவகுக்கும். இதனால் மாநகராட்சியின் பகுதிகளுக்குள் ஏற்றத்தாழ்வு நிலை உருவாகும். ஊராட்சியின் வருவாயை ஊராட்சியே உபயோகித்துக்கொள்ளும் நிலை மாறுவதால், ஊராட்சிகள் தன்னிறைவு பெற முடியாத நிலை உருவாகும். எனவே, 2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டமுன்வடிவில் தற்போது கொண்டுவரக்கூடிய திருத்தத்தை நீக்க வேண்டும். அதேபோல், நம்முடைய துணை முதல்வர் அவர்கள் பேசும்போது தொடர்ந்து கருப்புச் சட்டையைப் பற்றிப் பேசினார்கள். கருப்புச் சட்டையை நாங்கள் அணிந்து வந்தது. . .

பிற்பகல் 2–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு துணை முதல்வர் ஏதாவது சொல்கிறீர்களா?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியினுடைய வார்டுகள் எண்ணிக்கையை நிர்ணயிப்பது குறித்து, இந்தியாவில் உள்ள முக்கிய

பெருநகரமாக இருக்கக்கூடிய மாநகராட்சிகளில் புதுடில்லி, மும்பை, கொல்கத்தா, பெங்களூரு, ஹைதராபாத் ஆகிய இடங்களின் மக்கள் தொகை, பரப்பளவு, வார்டுகளின் எண்ணிக்கை பரிசீலிக்கப்பட்டு, சென்னை மாநகராட்சி வார்டு எண்ணிக்கையை 200 ஆக நிர்ணயம் செய்ய முடிவு செய்யப்பட்டது. மாநகராட்சியை விரிவுபடுத்தினால்தான் கூடுதல் நிதியுதவி, மானியம் போன்றவை சென்னையின் தேவைக்கேற்ப பெறமுடியும். இந்த அடிப்படையில்தான் பெங்களூரு, ஹைதராபாத் போன்ற மாநகராட்சிகள் எல்லையை விரிவுபடுத்தியிருக்கின்றன என்பதையும் கவனத்திலேகொண்டுதான் இதை நாம் கொண்டு வருகிறோம். 42 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து, சென்னை மாநகராட்சி எல்லையை விரிவுபடுத்துவதற்காக முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2011 ஜனவரி 13] *[பேரவைத் தலைவர்]*

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2011). மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

2011 ஜனவரி 13] *[பேரவைத் தலைவர்]*

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2011). மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2011)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 29 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 29 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 12-1-2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

2011 ஜனவரி 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2011). மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2011 ஜனவரி 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2011). மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. கோ.சி. மணி] [2011 ஜனவரி 13

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2011)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுச்சாமி, அவையில் இல்லை. எனவே, அவர் கொடுத்துள்ள திருத்தம் முன்மொழியப் பெறவில்லை.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

* 12-1-2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2011 ஜனவரி 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2—10

9. அறிவிப்பு

கோயம்புத்தூர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கோயம்புத்தூர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு (சிண்டிகேட்) அலுவல்சாரா

2011 ஜனவரி 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2—10

9. அறிவிப்பு

கோயம்புத்தூர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கோயம்புத்தூர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு (சிண்டிகேட்) அலுவல்சாரா

உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்) சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களிடமிருந்து முறையாக வேட்பு மனு பெறப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினரின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுவின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்) அவர்கள் அந்தப் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய ஆட்சிக் குழுவின் (செனட்டிகேட்) உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெற்று ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீண்டும் கூடும் நாள் குறிப்பிட்டு, பேரவையை ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 25 (1)-ன்கீழ், பேரவையின் நிகழ்ச்சிகள் 3—2—2011 வரை ஒத்திவைக்கப்பெற்று பேரவை மீண்டும் 4—2—2011 அன்று (வெள்ளிக்கிழமை) கூடும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2011 ஜனவரி 13

உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்) சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களிடமிருந்து முறையாக வேட்பு மனு பெறப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினரின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுவின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்) அவர்கள் அந்தப் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய ஆட்சிக் குழுவின் (சின்டிகேட்) உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெற்று ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீண்டும் கூடும் நாள் குறிப்பிட்டு, பேரவையை ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 25 (1)-ன்கீழ், பேரவையின் நிகழ்ச்சிகள் 3—2—2011 வரை ஒத்திவைக்கப்பெற்று பேரவை மீண்டும் 4—2—2011 அன்று (வெள்ளிக்கிழமை) கூடும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2011 ஜனவரி 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை 3–2–2011 வரை ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை மீண்டும் 4–2–2011 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 9–30 மணிக்குக் கூடும்.

பேரவையின் சார்பில் அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு–பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(ஆ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

19. 2009-2010-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் இருபத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. (1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

20. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. (1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

21. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்)

2011 ஜனவரி 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை 3—2—2011 வரை ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை மீண்டும் 4—2—2011 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 9—30 மணிக்குக் கூடும்.

பேரவையின் சார்பில் அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு—பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(ஆ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

19. 2009-2010-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் இருபத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. (1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

20. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. (1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

21. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்)

22. 2009-2010-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

23. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

10. தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையத்தின் 1-4-2005 முதல் 31-3-2006 வரையிலான கால அளவிற்கான நாற்பதாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

11. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து எட்டாவது அறிக்கை. (2009-2011)

12. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து ஒன்பதாவது அறிக்கை. (2009-2011)

13. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பதாவது அறிக்கை. (2009-2011)

14. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2009-2011)

15. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து இரண்டாவது அறிக்கை. (2009-2011)

16. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2009-2011)

17. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து நான்காவது அறிக்கை. (2009-2011)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

22. 2009-2010-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

23. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

10. தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையத்தின் 1-4-2005 முதல் 31-3-2006 வரையிலான கால அளவிற்கான நாற்பதாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

11. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து எட்டாவது அறிக்கை. (2009-2011)

12. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து ஒன்பதாவது அறிக்கை. (2009-2011)

13. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பதாவது அறிக்கை. (2009-2011)

14. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2009-2011)

15. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து இரண்டாவது அறிக்கை. (2009-2011)

16. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2009-2011)

17. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து நான்காவது அறிக்கை. (2009-2011)

2011 ஜனவரி 13]

18. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து ஐந்தாவது அறிக்கை. (2009–2011)

19. மனுக்கள் குழுவின் நூற்று இரண்டாவது அறிக்கை. (2009–2011)

20. மனுக்கள் குழுவின் நூற்று மூன்றாவது அறிக்கை. (2009–2011)

21. மனுக்கள் குழுவின் நூற்று நான்காவது அறிக்கை. (2009–2011)

22. மனுக்கள் குழுவின் நூற்று ஐந்தாவது அறிக்கை. (2009–2011)

23. மனுக்கள் குழுவின் நூற்று ஆறாவது அறிக்கை. (2009–2011)

24. மனுக்கள் குழுவின் நூற்று ஏழாவது அறிக்கை. (2009–2011)

25. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

26. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

27. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

28. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 500 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

29. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 500 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

30. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 500 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

[2011 ஜனவரி 13

31. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 500 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

32. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 500 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

* * *

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

இணைப்பு–1

(1—ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

உடுக்குறியிடாத வினாக்கள்

பட்டியல்கள் (1 முதல் 3 வரை)@

பட்டியல்–1

1—

காவலர் குடியிருப்பு

வினா எண் 5870—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, காரிமங்கலம் ஒன்றியம், மகேந்திரமங்கலம் காவல் நிலையம் மற்றும் காவலர் குடியிருப்பு புதியதாகக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள மகேந்திரமங்கலம் காவல் நிலையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மகேந்திரமங்கலம் காவல் நிலையக் கட்டடம் கட்ட மகேந்திரமங்கலம் கிராமத்திலுள்ள பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான புல எண் 1.21.3-ல் 0.91.5 ஏக்கர் (2.26 சென்ட்) புஞ்சை நிலத்தை கோயில் அறங்காவலர் திருமதி சாவித்திரி அம்மாள்

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

காவல் துறைக்கு மாற்றுதல் கிரயம் செய்து கொடுத்துள்ளார். மேற்குறிப்பிட்ட நிலத்தை வருவாய்த் துறைக் கணக்குகளில் காவல் துறை பெயரில் மாற்றுதல் செய்யும் பொருட்டு தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலம் மாற்றம் செய்யப்பட்ட பின்னர் மகேந்திரமங்கலம் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் மற்றும் காவலர் குடியிருப்புகள் கட்ட பரிசிலனை செய்யப்படும்.

2—

சீரமைத்தல்

வினா எண் 15614—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகர், உப்பிலிபாளையம் காவல் துறை குடியிருப்பு வீடுகள் பழுதடைந்துள்ளதைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கோவை மாவட்டம், உப்பிலிபாளையத்தில் உள்ள பழைய 112 ஆயுதப் படை குடியிருப்புகளுக்கு சிறப்பு பழுது மேற்கொள்ள ரூ.12.52 லட்சம் 17-10-2008 அன்று தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி குடியிருப்புகளுக்கான சிறப்புப் பழுது 1,2,3 என வகைப்படுத்தப்பட்டு அனைத்துப் பழுதுகளும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்துப் பணிகளையும் மிக விரைவில் முடிக்க தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3—

காவலர் குடியிருப்புகள்

வினா எண் 15620—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் பணிபுரியும் காவல் ஆய்வாளர்களுக்கும், உதவி ஆய்வாளர்களுக்கும் நவீன வசதிகளுடன் கூடிய காவலர் குடியிருப்புகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்தில் மொத்தம் 48 ஆய்வாளர்கள் மற்றும் 160 உதவி ஆய்வாளர்கள் பணிபுரிகின்றார்கள். இவர்களுக்கு முறையே 20 ஆய்வாளர் மற்றும் 66 உதவி ஆய்வாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. ஏனைய அனைவருக்கும் ஒரே நேரத்தில் அனைத்துக் குடியிருப்புகளும் கட்ட இயலாத நிலை உள்ளதால் மீதமுள்ளோர்களுக்குப் புதிய குடியிருப்புகள் படிப்படியாகக் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4—

காவல் நிலையம் பராமரித்தல்

வினா எண் 25681—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில், பூம்புகார் மற்றும் திருவெண்காடு காவல் நிலையங்களைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செம்பனார்கோவில், பூம்புகார் மற்றும் திருவெண்காடு காவல் நிலையங்கள் முறையே 1999 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட புதிய கட்டடங்கள் ஆகும். இக்காவல் நிலையக் கட்டடங்கள் வருடந்தோறும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

[2011 ஜனவரி 13

5—

கட்டட வசதி

வினா எண் 63267—திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் காவல் நிலையத்திற்குப் புதிதாகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் காவல் நிலையத்திற்குப் புதிதாகக் கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 991, உள் (நவீனம்) துறை, நாள் 25-11-2009-ல் அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

6—

தூர் வாருதல்

வினா எண் 63287—திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், வேல்வார்கோட்டை பெரியகுளம், தென்னம்மட்டி மந்தைகுளம் மற்றும் பிலாத்துமந்தை குளம் ஆகியவற்றின் கரைகளைப் பலப்படுத்தி தூர்வார அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மேற்படி 3 குளங்கள் தூர்வாரும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

7—

தூர் வாருதல்

வினா எண் 63291—திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

LEGISLATIVE ASSEMBLY ... TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

வேடசந்தூர் தொகுதி, மாரம்பாடி பெரியகுளத்தைத் தூர்வாரி கரையைப் பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வேடசந்தூர் தொகுதி, மாரம்பாடி பெரியகுளத்தைத் தூர்வாரி கரையைப் பலப்படுத்தும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

8—

கட்டட வசதி

வினா எண் 70731—திரு. வி.எ.டி. கலியவரதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது சொந்தக் கட்டடம் இல்லாத 273 காவல் நிலையங்களுக்குப் படிப்படியாக அடுத்த மூன்று ஆண்டுகளில் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, விழுப்புரம் மாவட்டம், மணலூர்பேட்டை காவல் நிலையம் கட்டுவதற்கு, அரசாணை (நிலை) எண் 649, உள் (காவல் 10) துறை, நாள் 7-8-2009-ல் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

9—

அலைகற்கள் அமைத்தல்

வினா எண் 76572—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) சிவகங்கை மாவட்டம், பார்த்திபனூர் மதகு அணையின் வலது, இடது கால்வாய்களில் சிமெண்ட் கான்கிரீட் போட்டு அலைகற்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், பார்த்திபனூர் மதகு அணையின்கீழ் வலது மற்றும் இடது பிரதான கால்வாய்களில் ஒரு போக சாகுபடிக்கு வைகை அணையிலிருந்து நீர் இருப்பினைப் பொறுத்து வருடத்தில் சுமார் 10 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் வழங்கப்படுகிறது. எனவே, இக்கால்வாய்களில் சிமெண்ட் கான்கிரீட் லைனிங் செய்து அலைகற்கள் அமைக்கும் திட்டம் பொருளாதார ரீதியில் சாத்தியமில்லை.

10—

கால்வாய்களை விரிவுபடுத்துதல்

வினா எண் **76757—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், விரகனூர் மதகு அணையின் வலது, இடது கால்வாய்களை விரிவுபடுத்தி தேவையான நீர் செல்ல ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், விரகனூர் மதகணையிலிருந்து பிரிந்து செல்லும் வலது மற்றும் இடது பிரதானக் கால்வாய்களை விரிவுபடுத்த தற்சமயம் திட்டம் ஏதும் இல்லை.

2011 ஜனவரி 13]

11—

கட்டடம்

வினா எண் 85630—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, வெள்ளாளப்பட்டி காவல் நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஓமலூர் தொகுதியைச் சார்ந்த வெள்ளாளப்பட்டிக்கு ஒப்பளிக்கப்பட்ட காவல் நிலையமோ, புறக் காவல் நிலையமோ இல்லை. எனவே, புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

12—

பராமரித்தல்

வினா எண் 92654—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், வைகை அணையை மீண்டும் சுற்றுலாத் தலமாக்கி, பராமரிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தேனி மாவட்டம், வைகை அணை ஏற்கெனவே சுற்றுலாத் தலமாகவே உள்ளது. ஒவ்வொரு வருடமும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர். தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வைகை அணை மற்றும் பூங்காக்கள் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

13—

சொந்தக் கட்டடம்

வினா எண் 98351—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள சத்துவாச்சாரி காவல் நிலையத்திற்கு ரூபாய் 33.90 லட்சம் மதிப்பீட்டில், புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆணை (பல்வகை) எண் 1594, உள் (காவல் 10) துறை, நாள் 26-10-2007-ல் ஆணை வெளியிடப்பட்டு தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால், காவல் நிலைய கட்டுமானப் பணிகள் முடிக்கப்பெற்று, 22-01-2010 அன்று காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, மேற்கண்ட கட்டடத்தில் காவல் நிலையம் செயல்பட்டு வருகிறது.

14—

காவல் நிலையம்

வினா எண் 103016—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, அவனியாபுரத்தில் கூடுதல் காவல் நிலையம் திறக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் கூடுதலாகக் காவல் நிலையம் துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

15—

காவல் நிலையம்

வினா எண் 103021—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, வி. கைகாட்டியில் காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

அரியலூர் தொகுதி, வி. கைகாட்டியில் புதிய காவல் நிலையம் துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

16—

காவல் நிலையம்

வினா எண் 103043—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கலசப்பாக்கம் தொகுதி, ஆதமங்கலம் புதூர், வில்வாரணி ஆகிய இடங்களில் புதிய காவல் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, ஆதமங்கலம் புதூர், வில்வாரணி ஆகிய இடங்களில் புதிய காவல் நிலையங்கள் துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

17—

கட்டடம்

வினா எண் 103644—திரு. ப. மோகன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியத்திலுள்ள காவல் நிலையத்திற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் காவல் நிலையம் தற்பொழுது அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் வருங்கால நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

18—

காவல் நிலையம்

வினா எண் 104803—திரு. வே. மாரிமுத்து: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகப்பட்டினம் தொகுதி, திருப்பூண்டியில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

நாகப்பட்டினம் தொகுதி, திருப்பூண்டியில் புதிய காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

19—

கட்டட வசதி

வினா எண் 105466—திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பல்லடம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருப்பூர் மாவட்டம், பல்லடம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் 2006-2007-ஆம் ஆண்டிற்கான நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, கட்டுமானப் பணிகள்

2011 ஜனவரி 13]

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டன. தற்போது கட்டுமானப் பணிகள் அனைத்தும் முடிந்து கட்டடம் தயார் நிலையில் உள்ளது. இக்கட்டடத்தில் மகளிர் காவல் நிலையம் விரைவில் செயல்படத் தொடங்கும்.

20—

காவல் நிலையம்

வினா எண் 105468—திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பல்லடம் தொகுதி, வகராயம்பாளையத்தில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

பல்லடம் தொகுதி, வகராயம்பாளையத்தில் புதிய காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

21—

புறக்காவல் நிலையம்

வினா எண் 105735—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, கட்டிக்குளம், முத்தனேந்தலில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, கட்டிக்குளம், முத்தனேந்தலில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

22—

காவல் நிலையம்

வினா எண் 105738—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கொந்தகையில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, கொந்தகையில் புதிய காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

23—

அலுவலகம்

வினா எண் 105874—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கத்தில் காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர் உட்கோட்டத்தில் போளூர், சேத்துப்பட்டு, கடலாடி, கலசப்பாக்கம் மற்றும் ஜமனாமாத்தூர் ஆகிய காவல் நிலையங்கள் உள்ளன. மேலும், போளூர் உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து, கலசப்பாக்கம் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. எனவே, தற்போது போளூர் உட்கோட்டத்தை இரண்டாகப் பிரித்து கலசப்பாக்கம் உட்கோட்டம் ஏற்படுத்தத் தேவை எழவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

2011 ஜனவரி 13]

24—

அதிநவீன கருவிகள்

வினா எண் 106513—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகக் கடலோரக் காவல் படைக்கு அதிநவீன கருவிகள் மற்றும் ஏ.கே. 47 போன்ற ஆயுதங்களும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகக் கடலோரக் காவல் படைக்கு அதிநவீன கருவிகள் மற்றும் துப்பாக்கிகள் (ஏ.கே.47 தவிர) வழங்குவது தொடர்பாக மத்திய அரசால் நேரடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், இதைத் தவிர, மத்திய அரசால் ஒப்பளிக்கப்பட்ட நிதியின் வாயிலாக மற்ற அத்தியாவசிய பொருட்கள் (12 மோட்டார் வாகனம் மற்றும் 36 இரு சக்கர வாகனம் உட்பட) வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவை கூடிய விரைவில் தமிழகக் கடலோரக் காவல் படைக்கு வழங்கப்பட உள்ளது.

25—

காவலர் பயிற்சிப் பள்ளி

வினா எண் 108255—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் காவலர் பயிற்சிப் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

காவல் துறையில் புதியதாகப் பணியில் சேரும் காவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சிகள் அளிப்பதற்காக தற்போது மாநிலத்தில்

[2011 ஜனவரி 13

வேலூர், கோவை, தூத்துக்குடி மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் காவலர்களின் நியமனத் தேவைகளுக்கேற்ப நிரந்தர காவல் பயிற்சிப் பள்ளிகள் நிறுவப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், தற்போது செங்கல்பட்டு நகருக்கு அருகில் ஊனமாஞ்சேரியில் ஒரு காவல் உயர் பயிற்சியகம் நிறுவப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. தற்போது மாநிலத்தில் உள்ள காவல் பயிற்சிப் பள்ளிகளே போதுமானதாக உள்ளதால், புதியதாக தருமபுரி நகரில் காவல் பயிற்சிப் பள்ளி நிறுவ அவசியம் ஏற்படவில்லை.

26—

காவலர் குடியிருப்புகள்

வினா எண் 108776—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் காவலர் குடியிருப்புகள் புதிதாகக் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கருமத்தம்பட்டி காவல் நிலையத்திற்கு 1 ஆய்வாளர், 3 உதவி ஆய்வாளர் மற்றும் 11 காவலர்கள் என மொத்தம் 15 காவல் அலுவலர்கள் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் முறையே 1 உதவி ஆய்வாளர், 7 காவலர் என மொத்தம் 8 குடியிருப்புகள் உள்ளன. 1 ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர் மற்றும் 4 காவலர்கள் என மொத்தம் 7 குடியிருப்புகள் கடந்த 2007-2008 ஆம் நிதியாண்டில் 3,000 குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு அதற்கான அரசாணை எண் 380 உள் (காவல் 10) துறை, நாள் 15-03-2007-ல் நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் சேயூர், கருமத்தம்பட்டி, அவிநாசி ஆகிய காவல் நிலையங்களில் பணிபுரியும் காவலர்களுக்கு, முறையே 3 ஆய்வாளர், 6 உதவி ஆய்வாளர் மற்றும் 48 காவலர்கள் என மொத்தம் 57 புதிய குடியிருப்புகள் அவிநாசியில் கட்டப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளில் கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில்

2011 ஜனவரி 13]

பணிபுரியும் 1 ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 4 காவலர்களுக்கான குடியிருப்புகளும் உள்ளடங்கும். எனவே கட்டுமானப் பணிகள் முடிவுற்றதும், கருமத்தம்பட்டி காவலர்களின் பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

27—

கட்டட வசதி

வினா எண் 108866—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னிமலை, வெள்ளோடு காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், வெள்ளோடு காவல் நிலையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. சொந்தக் கட்டடம் இல்லாத 273 காவல் நிலையங்களுக்குப் படிப்படியாக புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்ற சட்டப் பேரவை அறிவிப்பிற்கிணங்க, அரசாணை (நிலை) எண் 649, உள் (காவல் 10) துறை, நாள் 07-08-2009-ல் இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட ரூ. 48.14 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. புதிய கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

28—

சீருடைகள் மாற்றுதல்

வினா எண் 109031—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காவல் துறையில் உள்ள பிரிவுகளை அடையாளம்காணும் வகையில் சீருடைகளை மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவல் துறையில் உள்ள பிரிவுகளை அடையாளம் காண தற்போதுள்ள நடைமுறையே போதுமானது. இதுகுறித்து எவ்விதக் கருத்துருவும் பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

29—

காவலர் பயிற்சிப் பள்ளி

வினா எண் 109961—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு நகரில் காவலர் பயிற்சிப் பள்ளியை புதியதாகத் தோற்றுவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவல் துறையில் புதியதாகப் பணியில் சேரும் காவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சிகள் அளிப்பதற்காக தற்போது மாநிலத்தில் வேலூர், கோவை, தூத்துக்குடி மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் காவலர்களின் நியமனத் தேவைகளுக்கேற்ப நிரந்தர காவல் பயிற்சிப் பள்ளிகள் நிறுவப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மேலும் தற்போது செங்கல்பட்டு நகருக்கு அருகில் ஊனமாஞ்சேரியில் ஒரு காவல் உயர் பயிற்சியகம் நிறுவப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. தற்போது மாநிலத்தில் உள்ள காவல் பயிற்சிப் பள்ளிகளே போதுமானதாக உள்ளதால், புதியதாக செங்கல்பட்டு நகரில் காவல் பயிற்சிப் பள்ளி நிறுவ அவசியம் ஏற்படவில்லை.

30—

புதிய கட்டடம்

வினா எண் 110118—திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

கிணத்துக்கடவு காவல் நிலையத்தைப் புதிதாக கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கிணத்துக்கடவு காவல் நிலையம் அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வருங்கால நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசிலனை செய்யப்படும்.

31—

கட்டட வசதி

வினா எண் 116893—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை, வெள்ளோடு காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம் சென்னிமலை மற்றும் வெள்ளோடு காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு, அரசாணை (நிலை) எண் 517, உள் (காவல் 10) துறை, நாள் 7-5-2010 மற்றும் அரசாணை (நிலை) எண் 649, உள் (காவல் 10) துறை, நாள் 7-8-2009-ல் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டு, அதன் கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

32—

சூதாட்டம் தடுத்தல்

வினா எண் 117272—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) இளைஞர்களைச் சீரழிக்கும் நம்பர் விளையாட்டு சூதாட்டத்தை நிரந்தரமாகத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இளைஞர்களைச் சீரழிக்கும் நம்பர் விளையாட்டு சூதாட்டத்தில் ஈடுபடும் நபர்களின் மீது தேனி மாவட்டத்தில் 2000 ஆம் ஆண்டில் 1,767 வழக்குகள் தொடரப்பட்டு அனைத்து வழக்குகளும் தண்டனையில் முடிந்துள்ளன. அதனைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட கடும் நடவடிக்கைகளால் சூதாட்டக் குற்றங்கள் படிப்படியாகக் குறைந்துள்ளன. 2001 ஆம் ஆண்டில் 1,525 வழக்குகளும், 2002 ஆம் ஆண்டில் 1,111 வழக்குகளும், 2009 ஆம் ஆண்டில் 179 வழக்குகளும், 2010 ஆம் ஆண்டில் 56 வழக்குகளும், திண்டுக்கல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டு 57 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு அபராதத் தொகையாக ரூ. 62,000/- நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டுள்ளது. இதைத் தவிர வேறு எந்த மாவட்டத்திலும் நம்பர் விளையாட்டு சூதாட்டம் நடைபெறவில்லை என்ற விவரம் இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகின்றது.

(2) மேற்கூறிய நம்பர் விளையாட்டு சூதாட்டப் பழக்கங்களுக்கு அடிமையாகாமல் இளைஞர்களைக் காப்பாற்ற அவர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடும் சமுதாய விரோதிகளை அடையாளம் கண்டறிந்து, அவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் பெற்றுத் தரும் நோக்கத்தில் தற்போது காவல் துறை செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்படி குற்றம் நடைபெறாமலிருக்க கிராம விழிப்புணர்வுக் குழுக்களின் மூலமாகவும், காவல் நண்பர்கள் கொண்ட குழுக்களின் மூலமாகவும் தகவல்களைப் பெற்றும் தீவிர கண்காணிப்பிற்காக பகல் நேர ரோந்து, இரவு நேர ரோந்து மற்றும் தனிப் பிரிவு காவலர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் மூலமாக இதுபோன்ற குற்றம் நடவாமல் இருக்க தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. இதனால் இளைஞர்களைச் சீரழிக்கும் நம்பர் விளையாட்டு சூதாட்டம் காவல் துறையின் கடும் நடவடிக்கைகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

2011 ஜனவரி 13]

33—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3667—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், மேல் காமண்டம்பட்டி பகுதி, சங்கீதப்பட்டி ஊராட்சி, ரயில்வே ரோடு காலனி பகுதி, பொட்டியாபுரம் ஊராட்சி காலனி பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், கோட்டை மாரியம்மன் கோயில் ஊராட்சியைச் சார்ந்த மேல்காமண்டம்பட்டி குடியிருப்பில் 60,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி உள்ளதாலும் மற்றும் சங்கீதப்பட்டி ஊராட்சியிலுள்ள ரயில்வே ரோடு காலனி குடியிருப்பில் 10,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி உள்ளதாலும் கூடுதலாக மேல்நிலைத் தொட்டி கட்டும் அவசியம் இல்லை. மேலும், பொட்டியாபுரம் ஊராட்சியிலுள்ள பொட்டியாபுரம் ஆதி திராவிடர் காலனி குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி 9/2006-ல் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது.

34—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 5366—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், சென்னசமுத்திரம் அண்ணா நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், சென்னசமுத்திரம் ஊராட்சியைச் சேர்ந்த அண்ணா நகர் குடியிருப்புக்கு 2008-09 ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

35—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6176—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், மழையூர் கிராமத்தில் 60,000 கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், மழையூர் ஊராட்சியைச் சேர்ந்த மழையூர் குடியிருப்பில் உள்ள இரண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலும் நீர் நிரப்பப்பட்டு குடிநீர்த் திட்டங்கள் செவ்வனே செயல்பட்டு வருவதுடன் மாற்று நீராதாரமாக ஆழ்துளைக் கிணறு செயலாக்கப்பட்டு 6/2007-ல் திட்டம் முடிக்கப்பட்டு ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

36—

சிறு மின்விசை குடிநீர்த் தொட்டி

வினா எண் 8755—திரு. வை. காவேரி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரம், வீரப்பம்பாளையம் பகுதியில் சிறு மின்விசை குடிநீர்த் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சி, வீரப்பம்பாளையம் பகுதியில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மற்றும் ஐந்து ஆழ்துளைக் கிணறுகள் போடப்பட்டுள்ளன. மேலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி (2008-09) மூலம் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற குடிசை மேம்பாட்டுத் திட்டத்தில் (HSDP 2008-09) ஆழ்துளைக் கிணறுடன் மினி பவர் பம்ப் அமைக்கப்பட்டு போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லை.

37—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 8789—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், தளவாய்ப்பட்டி பிரிவு சாலை அருகில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு காவிரி குடிநீர் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், தளாவாய்பட்டி பிரிவு சாலை அருகில் அமைக்கப்பட்டுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் காவிரி குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் காவிரி குடிநீர் வழங்கப்படுகிறது.

38—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 8917—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நூலஅள்ளி ஊராட்சி, கதிர்வேல்கொட்டாய், இராமத்தூரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரி ஒன்றியம், நூலஅள்ளி ஊராட்சி, கதிர்வேல்கொட்டாய் குடியிருப்பிற்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் 2007-08-ல் நிறைவேற்றப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

39—

குடிநீர் சுத்திகரித்தல்

வினா எண் 16916—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

(அ) வால்பாறை தொகுதி, ரொட்டிக்கடையில் குடிநீரைச் சுத்திகரித்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சிக்குட்பட்ட ரொட்டிக்கடை பகுதிக்கு வால்பாறை நகராட்சிமூலம் தனி மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

40—

உப்புத் தண்ணீர்த் தொட்டி

வினா எண் 19059—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, 56-வது வட்டம், கோணார் தோட்டம் பகுதியில் உப்புத் தண்ணீர்த் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், 57-வது வட்டம், கோணார் தோட்டம் பகுதியில் உப்புத் தண்ணீர்த் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

41—

அலுவலக வசதி

வினா எண் 19534—திரு. கே.வீ. இராமநாதன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) பவானி தொகுதி, ஒலகடம் கிராமம், கரலாமணி மகளிர் சுய உதவிக் குழுவிற்கு அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓர் ஊராட்சிக்கு ஒரு சுய உதவிக் குழு கட்டடம் கட்ட வேண்டும் என்ற அடிப்படையில், 2003-04 ஆம் நிதியாண்டில் சம்பூர்ண கிராம ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில், குறிச்சி ஊராட்சியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் அனைத்திற்கும் கூட்டம் நடத்துவதற்கு வசதியாக பல்நோக்கு மையம் ஒன்று குறிச்சி ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடத்திற்கு அருகிலேயே கட்டி முடிக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது. கரலாமணி கிராமம், குறிச்சி ஊராட்சிக்குட்பட்டதாகும். கரலாமணியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுவினர் மேற்படி கட்டடத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, தனியாக அலுவலகம் கட்ட வாய்ப்பில்லை.

42—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 31785—திரு. பெ.சு. விஜயகுமார்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

போளூர் தொகுதி, குப்பம் ஊராட்சியில் கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஒன்றியம், குப்பம் ஊராட்சியைச் சேர்ந்த 10 குடியிருப்புகளில், 9 குடியிருப்புகளுக்குப் போதுமான அளவு குடிநீர் வசதி உள்ளது. தாழாம்பூர் குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (2009-10) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படவுள்ளது.

2011 ஜனவரி 13]

43—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 34475—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, பொன்விளைந்தகளத்தூர், பெரியபுத்தேரி ஆகிய ஊராட்சிகளில் கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

செங்கற்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தைச் சேர்ந்த பொன்விளைந்தகளத்தூர் ஊராட்சியில் மொத்தம் 9 குடியிருப்புகள் உள்ளன. இக்குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே உள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டங்கள் அமைக்கப்பட்டு முழுமையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த பெரிய புத்தேரி ஊராட்சியில் மொத்தம் 6 குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் சென்னேரி, சென்னேரி இருளர் காலனி, பெரிய புத்தேரி, ஒட்டேரி மற்றும் பெரிய காலனி ஆகிய 5 குடியிருப்புகளுக்கு மக்கள் தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் அமைக்கப்பட்டு முழுமையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பெரிய புத்தேரி காலனி விரிவு பகுதி குடியிருப்புக்கு மட்டும் நடப்பு நிதியாண்டில் (2009-10) திட்டப் பணிகள் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, இவ்விரு ஊராட்சிகளுக்கும் கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

44—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 35751—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) தாரமங்கலம் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி ஈஸ்வரன் கோயில், சொரக்காய்பட்டி காட்டுவளவு, வண்ணங்காடு, குண்டியாள்காடு, மஞ்சாளயூர் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி ஈஸ்வரன் கோயில், சொரக்காய்பட்டி காட்டுவளவு, வண்ணங்காடு மற்றும் குண்டியாள்காடு பகுதிகளுக்கு மேட்டூர் ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் அந்தந்தக் குடியிருப்புகளில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், மேற்கண்ட பகுதிகளுக்குப் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் அவசியம் இல்லை. மஞ்சாளயூர் குடியிருப்பிற்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டிலுள்ளது.

45—

கட்டடம்

வினா எண் 40023—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், செய்யாளூரில் மகளிர் குழுக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓர் ஊராட்சிக்கு ஒரு சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற அடிப்படையில்,

2011 ஜனவரி 13]

2002-2003 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சன்னதி புதுக்குளம் ஊராட்சி, சன்னதி புதுக்குளம் கிராமத்தில் மகளிர் குழுக் கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. அதே ஊராட்சியைச் சார்ந்த குக்கிராமமான செய்யாலூரிலுள்ள மகளிர் குழுக்கள் அக்கட்டடத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, செய்யாலூர் கிராமத்திற்கெனத் தனியாக மகளிர் குழுக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

46—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 40549—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் தொகுதி, கோனேரிகுப்பம் முதல்நிலை ஊராட்சி, மாருதி நகருக்குப் புதிதாக ஆழ்துளைக் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, கோனேரிகுப்பம் முதல்நிலை ஊராட்சி, அரப்பனஞ்சேரி குடியிருப்பைச் சேர்ந்த மாருதி நகருக்கு 2007-08 ஆம் ஆண்டில் புதிய நீராதாரம் தோற்றுவிக்கப்பட்டு ஏற்கெனவே உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் போதுமான அளவு (40 lpcd) குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

47—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 40551—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

(அ) காஞ்சிபுரம் தொகுதி, திம்மாசமுத்திரம் ஊராட்சி, திருப்பதி ரியல் எஸ்டேட் பகுதி, மேல்கதிர்பூர் ஊராட்சியில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, திம்மாசமுத்திரம் ஊராட்சி, திருப்பதி நகர் குடியிருப்புக்கு உட்பட்ட திருப்பதி ரியல் எஸ்டேட் காலனிக்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேல்கதிர் ஊராட்சியில் மொத்தம் 6 குடியிருப்புகள் உள்ளன. இங்குள்ள 6 குடியிருப்புகளுக்கும் தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, திருப்பதி ரியல் எஸ்டேட் பகுதிக்கும், மேல்கதிர்பூர் ஊராட்சிக்கும் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் எழவில்லை.

48—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 41570—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, வே. முத்தம்பட்டி ஊராட்சி, நாகலம்மன்கோம்பை, கடகத்தூர் ஊராட்சி, குட்டகொள்ளை, கணபதிகவுண்டர் கொட்டாய், இலக்கியப்பட்டி ஊராட்சி, பிடமனேரியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, வே. முத்தம்பட்டி ஊராட்சி,

2011 ஜனவரி 13]

நாகலம்மன்கோம்பை குடியிருப்புக்கு 2008-2009 ஆம் ஆண்டு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு தற்போது மக்கள் பயனில் உள்ளது. மேலும் கடகத்தூர் ஊராட்சி, குட்டகொள்ளை கணபதிகவுண்டர் கொட்டாய் குடியிருப்புக்கு 2009-2010 ஆம் நிதியாண்டில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டப் பணிகள் விரைவில் முடிவுற்று மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும். மற்றும் இலக்கியப்பட்டி ஊராட்சி, பிடமனேரி குடியிருப்பிற்கு ஒரு இலட்சம் லிட்டர், 30,000 லிட்டர் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

49—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 41693—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், செல்லபிள்ளைகுட்டை ஊராட்சி, குப்பாண்டியூர் மாரியம்மன் கோவில் மானிய நிலத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

ஓமலூர் ஒன்றியம், செல்லபிள்ளைகுட்டை ஊராட்சி, குப்பாண்டியூர் மாரியம்மன் கோவில் மானிய நிலம், குப்பாண்டியூர் பிரதான குடியிருப்பைச் சார்ந்தது. இக்குடியிருப்பிலுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து இக்குடியிருப்பின் அனைத்துப் பகுதிகளுக்கும் போதுமான அளவு (40 lpcd) குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், குப்பாண்டியூர் மாரியம்மன் கோயில் மானிய நிலத்தில் தனியாக மேல்நிலைத் தொட்டி அமைக்க அவசியம் இல்லை.

[2011 ஜனவரி 13

50—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 42138—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, பெரியேரிப்பட்டி ஊராட்சி, *1*-வது வார்டு, தானங்காடு பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் பெரியேரிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட தானங்காடு என்ற தானபூசாரிவளவு குடியிருப்பில் அமைந்துள்ள *10,000* லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து போதுமான அளவு (40 lpcd) குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இக்குடியிருப்புக்கெனக் கூடுதலாக மேல்நிலைத் தொட்டி அமைக்க அவசியம் இல்லை.

51—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 45429—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், மேச்சேரி கோவில் வெள்ளார் பகுதி, காவேரி கிருஷ்ணாபுரம் நெசவாளர் குடியிருப்பு பகுதி, மற்றும் பள்ளிப்பட்டு ஊராட்சி, கே.வி.ப. குடையன் தெரு ஆகிய பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வெள்ளார் ஊராட்சி, கோவில் வெள்ளார் குடியிருப்புக்கு அங்கு அமைந்துள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்தும், பள்ளிப்பட்டு ஊராட்சி, கே.வி.ப. குடையன் தெரு பகுதிக்கு காக்கையன் தெரு பிரதானக் குடியிருப்பிலுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்தும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் மேற்கண்ட இரு குடியிருப்புகளுக்கும் மேல்நிலைத் தொட்டிகள் அமைக்க அவசியம் இல்லை. வெள்ளார் ஊராட்சி, காவேரி கிருஷ்ணாபுரம் நெசவாளர் குடியிருப்புப் பகுதிக்கு, இதன் பிரதானக் குடியிருப்பான வெள்ளார் குடியிருப்பில் அமைந்துள்ள ஆழ்துளைக் கிணற்றில் மின் மோட்டார் அமைத்து நேரடியாக நீர் உந்து குழாய் மூலமே ஒரே பகுதியில் பொதுக் குழாய்கள் அமைத்து தற்சமயம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இப்பகுதி புதிய குடியிருப்பானதால் மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று, பின்னர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த பரிசீலிக்கப்படும்.

52—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 45830—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, சங்கராமநல்லூர் பேரூராட்சி, மயிலாபுரம் கிராமத்தில் புதிய காலனிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை, சங்கராமநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து கிராமங்களுக்கும் தனியாகக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு, பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

மயிலாபுரம் கிராமம் புதிய காலனிக்கு மயிலாபுரம் கிராமத்தில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 60,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே இப்பகுதிக்குத் தனியாகக் குடிநீர்த் தொட்டி கட்ட அவசியம் இல்லை.

53—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 46440—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, 10-வது பிளாக் டேங் காம்பவுண்டு உள்ளே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, 10-வது வார்டு வாழைத்தோட்டம் என்ற பகுதியில் இரண்டு 65,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் (GLSR) பள்ளியின் சுற்றுச் சுவர் அருகிலும், நகராட்சி ஊழியர் குடியிருப்புப் பகுதியிலும் அமைந்துள்ளன. தற்பொழுது செயல்படுத்தப்பட்டிருக்கும் வால்பாறை அபிவிருத்தித் திட்டத்தின்மூலம் வால்பாறையின் அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதனால் இப்பகுதிக்குத் தனியாகக் குடிநீர்த் தொட்டி கட்ட அவசியம் இல்லை.

54—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49231—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், சிங்கிரிப்பட்டி ஊராட்சி, வெளவால் தோப்பூர், எம்.ஜி.ஆர். நகர் மற்றும் கரையாம் A.D.C. ஆகிய கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், சிங்கிரிப்பட்டி ஊராட்சி, வெளவால் தோப்பூர், எம்.ஜி.ஆர். நகர் மற்றும் கரையாம் A.D.C. காலனி குடியிருப்பிற்கு 2008-2009 ஆம் நிதியாண்டில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு 07/2009 முதல் மக்கள் பயன்பாட்டிலுள்ளது.

55—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49245—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், காவேரிபுரம் ஊராட்சி, அரிசிப்பாளையம் (கோவிந்தப்பாடி), மாமரத்துக்காடு, காஞ்சி நகர் மற்றும் சத்தியா நகர் H, செட்டிப்பட்டி H, ஆகிய கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், காவேரிபுரம் ஊராட்சி, அரிசிப்பாளையம், கோவிந்தப்பாடி குடியிருப்புக்கு, அக்குடியிருப்பில் கட்டடப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து

[2011 ஜனவரி 13

போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மாமரத்துக்காடு என்ற மாமரத்தூர் காலனிக்கு நாயம்பாடி குடியிருப்பிலுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு மூலமும் சத்தியா நகர்-எச் பகுதிக்கு சத்தியா நகர் மற்றும் கோவிந்தப்பாடி குடியிருப்பிலுள்ள 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புமூலமும், செட்டிப்பட்டி-எச் குடியிருப்புக்கு செட்டிப்பட்டி குடியிருப்பிலுள்ள நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புமூலமும், காஞ்சி நகர் என்ற கோவிந்தசாமி நகருக்கு செந்திட்டு குடியிருப்பிலுள்ள 10,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புமூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

56—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49514—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி கிராமம், கரையானூர், பொந்தனூர், செலம்பன்காடு, செங்கோடனூர் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி ஊராட்சி, செங்கோடனூர் குடியிருப்புக்கு 2008-09 ஆம் ஆண்டில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனில் உள்ளது. கரையானூர் மற்றும் செலம்பன்காடு குடியிருப்புகள் தற்போது ஆய்விலுள்ள எடப்பாடி தொகுதியைச் சார்ந்த 92 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டம் செயலுக்கு வரும்போது

2011 ஜனவரி 13]

இக்குடியிருப்புகளில் தேவையான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பொந்தனூர் குடியிருப்பில் ஏற்கெனவே 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

57—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49528—திரு. வை. காவேரி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பகுட்டை ஊராட்சி, கன்னிமார்கோவில் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சி, கன்னிமார்கோவில் குடியிருப்புக்கு தற்போது தாடிக்காரனூர் குடியிருப்பிலுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புமூலம் அத்தியாவசியத் தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்பு தற்போது செயல்படுத்தப்படவுள்ள எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி மற்றும் கொங்கணாபுரம் ஒன்றியங்களைச் சார்ந்த 145 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயலுக்கு வரும்போது இக்குடியிருப்பில் மேல்நிலைத் தொட்டி கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

58—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 50545—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, சந்தாபுரம் ஊராட்சி, சரஸ்வதி கார்டன் பகுதி, ஆவத்துவாடி ஊராட்சி, சுண்டக்காய்பட்டி, செவத்தான் கொட்டாய், கால்வேஹள்ளி ஊராட்சி, முத்துரான் கொட்டாய், பாலேகுளி ஊராட்சி, சமயகாரன் கொட்டாய், செல்லகுட்டப்பட்டி ஊராட்சி, புங்கம்பட்டி கிராமம் மற்றும் மிட்டஹள்ளி ஊராட்சி, அங்கினாம்பட்டி தீர்த்தக் கோவிலுக்கு மேல் பகுதி ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, சந்தாபுரம் ஊராட்சி, சரஸ்வதி கார்டன் பகுதி, ஆவத்துவாடி ஊராட்சி, சுண்டக்காய்பட்டி, செவத்தான்கொட்டாய், கால்வேஹள்ளி ஊராட்சி, முத்துரான் கொட்டாய், பாலேகுளி ஊராட்சி, சமயகாரன் கொட்டாய், செல்லகுட்டப்பட்டி ஊராட்சி, புங்கம்பட்டி கிராமம் மற்றும் மிட்டஹள்ளி ஊராட்சி, அங்கினாம்பட்டி தீர்த்தக்கோவிலுக்கு மேல்பகுதி ஆகிய ஊராட்சிகளுக்கு முழுமையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

59—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 58226—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, திப்பிரெட்டி அள்ளி ஊராட்சி, கந்தகவுண்டன் கொட்டாய் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி ஒன்றியம், திப்பிரெட்டி அள்ளி ஊராட்சி, கந்தகவுண்டன் கொட்டாய் கிராமத்திற்கு 30,000 லிட்டர்

2011 ஜனவரி 13]

கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் 2008-09 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டு தற்பொழுது முழுமையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதிகளுக்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

60—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 61468—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, மூக்கனூர் ஊராட்சி, கருக்குட்டிக்காடு பகுதி, சூரப்புலியான் காட்டுவளவு பகுதி, கொங்குப்பட்டி ஊராட்சி, ராசிகரடு பகுதி, கூ. குட்டப்பட்டி ஊராட்சி, நாய்க்கடிச்சான் காட்டு வளவு, கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, கீழ்காலனி பகுதி, முட்டக்காரன் கொட்டாய் பகுதி மற்றும் செம்மாண்டப்பட்டி ஊராட்சி, பெரியப்பட்டி பிரிவு சாலைகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

ஓமலூர் தொகுதி, மூக்கனூர் ஊராட்சி, கருக்குட்டிக்காடு என்ற கருங்குட்டி கரடு பகுதிக்கு அக்குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும் சூரப்புலியான் காட்டுவளவு பகுதிக்கு இம்மேல்நிலைத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புமூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கொங்குப்பட்டி ஊராட்சி, ராசிகரடு பகுதிக்கு பெரியகவுண்டனூர் குடியிருப்பில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. கூ. குட்டப்பட்டி ஊராட்சி, நாய்கடிச்சான்வளவு என்ற பகுதி மாட்டுக்காரன் புதூர் குடியிருப்பைச் சார்ந்தது. இங்குள்ள 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து நாய்கடிச்சான்வளவு பகுதிக்கு குழாய் நீட்டிப்புப் பணி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முட்டக்காரன் கொட்டாய் பகுதிக்கு கஞ்சநாயக்கன்பட்டி கீழ்காலனி குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள

10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. செம்மாண்டிப்பட்டி ஊராட்சி, பெரியப்பட்டி பிரிவு சாலை பகுதி என்பது செம்மாண்டப்பட்டி குடியிருப்பைச் சார்ந்தது. இங்குள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலை தொட்டியிலிருந்து பெரியபட்டி பிரிவு சாலை பகுதிக்கும் சேர்த்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட பகுதிகளில் கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் அவசியம் இல்லை.

61—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 62365—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், மின்னல் அரசு உயர்நிலைப் பள்ளியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், காவேரிப்பாக்கம் ஒன்றியம், மின்னல் அரசு உயர்நிலைப் பள்ளியில் 5000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

62—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 65101—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, ஆத்துவாரம்பாடி கிராமத்திலுள்ள ஜோதிநகர் கொல்லை கொட்டாய், உத்தண்டபாளையம்,

2011 ஜனவரி 13]

இலுப்பகுணம், எடப்பாறை, கல்பட்டு ஊராட்சி இரும்புலி, ஆனைக்கல் கல்பட்டு கிராமத்திலுள்ள இரும்புலி, வேப்பங்குட்டை, குப்தார்பேட்டை, விநாயகபுரம், இருளர் காலனி, கல்வாசல் கிராமம், முருகபாடி, கிராமத்தில் இந்திரா நகர் மற்றும் முக்குறும்பை கிராமம் ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஒன்றியத்தைச் சேர்ந்த உத்தண்டபாளையம், இலுப்பகுணம், எடப்பாறை, கல்வாசல் மற்றும் முக்குறும்பை ஆகிய குடியிருப்புகளின் மக்கள் தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய குடிநீர்த் திட்டங்கள் ஏற்கெனவே செயலாக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளன. ஆத்துவரம்பாடி ஜோதி நகர் கொல்லை கொட்டாய் மற்றும் கல்பட்டு இரும்புலி ஆனைக்கல் ஆகிய குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கப்படவுள்ளன. வேப்பங்குட்டை, குப்தார்பேட்டை பகுதிகள் பட்டங்குளம் குடியிருப்புடன் இணைந்த பகுதிகள். இவ்விரு பகுதிகளும் அடங்கிய பட்டங்குளம் குடியிருப்பில் அங்கு உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து இவ்விரு பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். விநாயகபுரம் மூழகொட்டாய் குடியிருப்பின் பகுதியாகும். இப்பகுதிக்கு மூழகொட்டாய் குடியிருப்பிலுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து விநாயகபுரம் பகுதிக்கும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். கல்பட்டு இருளர் காலனி கல்பட்டு குடியிருப்புடன் இணைந்த பகுதியாகும். இதற்கு கல்பட்டு குடியிருப்பிலுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். முருகபாடி, இந்திரா நகர் முருகபாடி குடியிருப்புடன் இணைந்த பகுதியாகும். இப்பகுதி, இணைந்த முருகபாடியின் மொத்த மக்கள்தொகைக்கும் அங்குள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[2011 ஜனவரி 13

63—

காவிரிக் குடிநீர்

வினா எண் 66053—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குண்டடம், காரப்பாளையம், அம்மாபாளையம், ஓடக்கல்பாளையம் ஆகிய கிராமங்களுக்குக் காவிரிக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முத்தூர் காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் காங்கேயம் தொகுதிக்கு உட்பட்ட குண்டடம் ஊராட்சி ஒன்றியத்தின் மேட்டுக்கடையில் அமைந்துள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அம்மாபாளையம் மற்றும் ஓடக்கல்பாளையம் ஆகிய குடியிருப்புகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும், அதே பகுதியில் அமைந்துள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் காரப்பாளையம் குடியிருப்புகளுக்கும் காவிரிக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

64—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 69916—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதி, தளி அள்ளி ஊராட்சியில் உள்ள சின்ன தளி அள்ளி கிராமத்திற்குக் குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஒன்றியம், தளி அள்ளி ஊராட்சியில் உள்ள சின்ன தளி அள்ளி கிராமத்திற்கு

2011 ஜனவரி 13]

ஏற்கெனவே பழுதடைந்துள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குப் பதிலாக புதிய 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி சின்ன தளி அள்ளி கிராமத்தில் ஒன்றும், அதனின் மேடான பகுதிக்கு ஒன்றும் அமைத்து அனைத்துப் பணிகளும் முடிவுற்று பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

65—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 75459—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு மின் மோட்டாருடன் கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சியில் உள்ள பள்ளியில் ஏற்கெனவே உள்ள 1000 லிட்டர் குடிநீர்த் தொட்டிக்குப் புனரமைப்பு மற்றும் குழாய் நீட்டிப்பு செய்யப்பட்டு போதிய அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மின் மோட்டாருடன் கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

66—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 39385—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) திருப்பூர் மாவட்டம், புங்கமுத்தூர் ஊராட்சி, கரட்டூர், அந்தியூர் ஊராட்சி, அந்தியூர், செல்லப்பம்பாளையம் ஊராட்சி, அண்ணா நகர், தின்னப்பட்டி ஊராட்சி, சாளையூர் மற்றும் கண்ணமநாயக்கனூர் ஊராட்சி, மருள்பட்டி (சாளரப்பட்டி சாலை அருகில்) கருப்பட்டிபாளையம் ஆகிய பகுதிகளிலுள்ள ஆதி திராவிட காலனிகளுக்கு மேல்நிலைத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்டம் தற்போது திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பட்டி ஒன்றியம், புங்கமுத்தூர் ஊராட்சி கரட்டூர், ஆதி திராவிடர் காலனி என்ற கரட்டூர் காந்திபுரம் மற்றும் தின்னப்பட்டி ஊராட்சி, தின்னப்பட்டி ஆதி திராவிடர் காலனி குடியிருப்புகளுக்கு மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தியூர் ஊராட்சி, அந்தியூர் மற்றும் செல்லப்பாளையம் ஊராட்சி, அண்ணாநகர் ஆகிய இரு குடியிருப்புகளிலும் ஆதி திராவிடர் காலனி, பகுதிக் குடியிருப்புகளாக இடம் பெற்றுள்ளன. ஏற்கெனவே இக்குடியிருப்புகளில் உள்ள முறையே 60,000 மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிகள் மூலம் போதுமான அளவு குடிநீர் இப்பகுதிக்கும் வழங்கப்பட்டு வருகிறது. கண்ணமநாயக்கனூர் ஊராட்சி, மருள்பட்டி (சாளரப்பட்டி சாலை அருகில்) மற்றும் கருப்பட்டிபாளையம் அருகிலுள்ள ஆதி திராவிடர் காலனிக்கு அந்தந்த பிரதானக் குடியிருப்புகளிலிருந்து தற்போது குழாய் நீட்டிப்பு செய்து அத்தியாவசியத் தேவைக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விரு பகுதிகளுக்கும் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

67—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 101723—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) மொரப்பூர் தொகுதி, கோபிசெட்டிபாளையம் ஊராட்சி, பாப்பிசெட்டிபட்டி கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதி, கோபிசெட்டிபாளையம் ஊராட்சி, பாப்பிசெட்டிபட்டி ஆகிய குடியிருப்புகளுக்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருகிறது. எனவே, தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

68—

குடிநீர் வசதி

வினா எண் 102349—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் நகருக்கு அருகேயுள்ள ஓரிக்கை கிராமத்திலிருந்து பாலாற்றுக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் நகராட்சிக்கு பாலாற்றில் ஓரிக்கை மற்றும் திருப்பாற்கடல் ஆகிய இடங்களை தலைமையிடமாகக் கொண்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், காஞ்சிபுரம் நகராட்சியில் ஓரிக்கை என்ற இடத்தில் மட்டும் பாலாற்றில் இரண்டு நீர் உறிஞ்சுக் கிணறுகள் (infiltration wells) மூலம் நாள் ஒன்றுக்கு 15 இலட்சம் முதல் 20 இலட்சம் லிட்டர்கள் குடிநீர், கோடைக் காலங்களிலும், 30 முதல் 35 இலட்சம் லிட்டர்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

குளிர் காலங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடிநீர் காஞ்சிபுரம் நகராட்சியில் உள்ள தலா 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்றப்பட்டு 5 வார்டுகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிதாகப் பாலாற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

69—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 109832—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, பாண்டூர், விளாகம், கிளாப்பாக்கம், பெரும்பேடு, அம்மணப்பாக்கம், ஈச்சங்கரணை ஆகிய ஊராட்சிகளுக்கு பாலாற்றுக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தைச் சேர்ந்த பாண்டூர், விளாகம், கிளாப்பாக்கம், பெரும்பேடு, அம்மணப்பாக்கம், ஈச்சங்கரணை ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த மொத்தம் 26 குடியிருப்புகளிலும் தனி மின்விசைத் திட்டத்தின்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்கூறிய ஊராட்சிகளுக்கு பாலாற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

70—

கட்டட வசதி

வினா எண் 119407—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தாழிக்குளம் கிராமத்தில் மகளிர் குழுக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓர் ஊராட்சிக்கு ஒரு சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற அடிப்படையில், 2003-04 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், திருப்பாசேத்தி ஊராட்சியில் சலுப்பனோடையில் மகளிர் குழுக் கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. அதே ஊராட்சியைச் சார்ந்த குக்கிராமமான தாழிக்குளத்தில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் அக்கட்டடத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, தாழிக்குளம் கிராமத்திற்கெனத் தனியாக மகளிர் குழுக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

71—

கட்டட வசதி

வினா எண் 119705—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சொக்கனாதிருப்பு ஆதி திராவிடர் காலனியில், பூவந்தி, அருணகிரி, திருப்பாச்சேத்தி, பத்துப்பட்டியில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓர் ஊராட்சிக்கு ஒரு சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற அடிப்படையில், 2003-04 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் பிரமனூர் ஊராட்சியில் சொக்கனாதிருப்புவிலும், எஸ். வாகைக்குளம் ஊராட்சியில் அருணகிரியிலும், பூவந்தி ஊராட்சியில் பூவந்தியிலும், திருப்பாச்சேத்தி ஊராட்சியில் திருப்பாச்சேத்தியிலும், மேலச்சொரிக்குளம் ஊராட்சியில் மேலச்சொரிக்குளம் ஆகிய கிராமங்களில் ஏற்கெனவே மகளிர் குழுக்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. பத்துப்பட்டி கிராமம், மேலச்சொரிக்குளம் ஊராட்சியைச் சார்ந்தது. மேலச்சொரிக் குளத்தில் ஏற்கெனவே சுய உதவிக் குழுக் கட்டடம் உள்ளதால் அதனை பத்துப்பட்டி கிராம சுய உதவிக் குழுக்கள் பயன்படுத்தலாம். எனவே, பத்துப்பட்டிக்கெனத் தனியாகச் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

72—

விதைப் பண்ணை

வினா எண் 27226—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதி, கண்ணம்பாளையம் சிறப்பு ஊராட்சி விதைப் பண்ணையை விரிவாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கண்ணம்பாளையம் சிறப்பு ஊராட்சி விதைப் பண்ணை, அரசு விதைப் பண்ணையில் இருந்து பிரிந்து 2001 ஆம் ஆண்டு முதல் 27.66 ஏக்கர் தோட்டக்கலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. தோட்டக்கலைத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நிலம் தொழிற்சாலையின் கழிவினால் பாழ்பட்டுப் போனதால் அந்நிலத்தை விரிவாக்கம் செய்யும் திட்டம் ஏதும் இல்லை. இது தவிர 23.00 ஏக்கர் நிலம் விதைச் சான்றுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. பயிர் இரகங்களின் இனத்தூய்மையை உறுதி செய்யும் பயிர் வளர்ப்புப் பரிசோதனை மேற்கொள்ள இப்பண்ணையின் 23.00 ஏக்கர் நிலமே போதுமானதாக உள்ளது. எனவே, பல்லடம் தொகுதி, கண்ணம்பாளையம் சிறப்பு ஊராட்சி விதைப் பண்ணையை விரிவாக்கம் செய்யும் திட்டம் ஏதும் இல்லை.

73—

விதை உற்பத்தி

வினா எண் 39537—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) சிவகங்கை மாவட்ட வேளாண்மை விதைப் பண்ணைகளில் விதைகள் கூடுதலாக உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்திற்கு ஓர் ஆண்டிற்கு நெல் விதை 300 மெ. டன்; சிறு தானியங்கள் விதை 1,500 மெ. டன்; பயறு வகை விதை 16 மெ.டன்; எண்ணெய் வித்து விதை 53 மெ. டன் தேவைப்படுகிறது. அம்மாவட்டத்தில் ஆண்டு ஒன்றிற்கு நெல் விதை 306.18 மெ. டன்; சிறு தானியங்கள் விதை 1.535 மெ. டன், பயறு வகை விதை 16.159 மெ.டன்; எண்ணெய் வித்து விதை 53.261 மெ. டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்த விதைகள் வருடந்தோறும் சிவகங்கை மாவட்டத்திலுள்ள முன்னோடி விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்படும் விதைப் பண்ணைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன. சிவகங்கை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் விதைகள் அம்மாவட்டத்தின் விதைத் தேவையைப் பூர்த்தி செய்வதால் கூடுதலாக விதை உற்பத்தி செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

74—

பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்

வினா எண் 57512—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெற்றிலைக், கொடிக்கால் விவசாயத்தையும், விவசாயிகளையும் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

உயர் தொழில்நுட்ப உயர் விளைச்சல் திட்டத்தில், தோட்டப் பயிர்களுக்கான பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே வெற்றிலைப் பயிர் சேர்க்கப்பட்டுள்ளது. அதன்படி தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் உயர் தொழில்நுட்ப உயர் விளைச்சல் திட்டத்தின்கீழ் வெற்றிலைப் பயிர்ப் பாதுகாப்புத்

[2011 ஜனவரி 13

திட்டமானது, 700 எக்டரில் ரூ. 52.500 இலட்சம் நிதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தாவரப் பூச்சிக் கொல்லி மருந்துகள் எக்டருக்கு ரூ.7500/- மானியத்தில் வெற்றிலைச் சாகுபடியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

75—

விதை சுத்திகரிப்பு இயந்திரம்

வினா எண் 74705—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு விதை சுத்திகரிப்பு இயந்திரம் வாங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டத்தில் பாப்பாரப்பட்டி மற்றும் அரூர் ஆகிய இரண்டு ஊர்களில் அரசு விதை சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 230 மெ. டன் நெல் விதைகளும், 25 மெ.டன் சிறுதானிய விதைகளும் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன. இதுதவிர தருமபுரி மாவட்டத்தில் 2008-09 ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அரூர் தாலுக்காவில் உள்ள திரு. டி. சுப்பிரமணியன் என்பவர் விதை சுத்திகரிப்பு நிலையத்தை 20-3-2009 அன்று தொடங்கியுள்ளார். இதன் சுத்திகரிப்புத் திறன் ஆண்டிற்கு 1000 மெ. டன் ஆகும். மேலும் இந்தத் தனியார் விதை சுத்திகரிப்பு நிலையம் மூலமாக ஆண்டொன்றுக்கு 300 மெ. டன் விதை சுத்திகரிப்பு செய்யும் நிலை உள்ளது. எனவே இம்மாவட்டத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையில் போதுமான அளவு விதை சுத்திகரிப்பு இயந்திரங்கள் உள்ளன. எனவே, தருமபுரியில் புதியதாக விதை சுத்திகரிப்பு இயந்திரம் வாங்குவது தொடர்பான அவசியம் எழவில்லை.

76—

வேளாண்மை விரிவாக்க மையம்

வினா எண் 86376—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பண்ணந்தூர் பகுதியில் வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காவேரிப்பட்டினத்தில் ஒரு பிரதான வேளாண்மை விரிவாக்க மையமும், நாகரசம்பட்டி மற்றும் அரசம்பட்டி ஆகிய ஊர்களில் தலா ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையமும் ஆக மொத்தம் 3 வேளாண்மை விரிவாக்க மையங்கள் இயங்கி வருகின்றன. பண்ணந்தூரில் ஏற்கெனவே இயங்கி வந்த துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் விற்பனை மிகவும் குறைவாக இருந்த காரணத்தால் அதை மூடும் நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே, மேற்கண்ட மையங்களிலும், காரியமங்கலத்திலும் இயங்கி வரும் வேளாண்மை விரிவாக்க மையங்கள், பண்ணந்தூர் பகுதிக்கு அருகில் உள்ளதாலும், இந்த மையங்களுக்குச் சென்று விவசாயிகள் விதைகளை எளிதில் பெற்றுக்கொள்ள ஏதுவாக, அடிக்கடி பயணம் செய்ய பேருந்து வசதி உள்ளதாலும், பண்ணந்தூர் பகுதிக்குத் துணை வேளாண்மை விரிவாக்க மையம் தேவையில்லை.

77—

விதைகள்

வினா எண் 103286—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசு விதைப் பண்ணைகள் மூலம் விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில், வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் 36 அரசு விதைப் பண்ணைகள், 6 எண்ணெய்

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2011 ஜனவரி 13

வித்துப் பண்ணைகள், ஒரு பயறு பெருக்கப் பண்ணை ஆகியவை விவசாயிகளுக்குத் தரமான விதைகளை வழங்கும் நோக்கத்தோடு இயங்கி வருகின்றன. இந்திய வேளாண் கழகம் (ICAR) மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திலிருந்து சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 20 மெ. டன் நெல், 0.5 மெ. டன் சிறு தானியங்கள், 12 மெ. டன் பயறு வகைகள், 25 மெ. டக் எண்ணெய் வித்துக்கள், 0.4 மெ. டன் பருத்த வல்லுநர் விதைகள் பெறப்பட்டு விதை சான்றளிப்புத் துறையின் தரக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டு இவைகளிலிருந்து சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 1400 மெ.டன் நெல், 40 மெ. டன் சிறுதானியங்கள், 50 மெ. டன் பயறு வகைகள், 38 மெ. டன் எண்ணெய் வித்துக்கள், 3 மெ. டன் பருத்தி ஆகிய ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்தி செய்யப்படும் ஆதார விதைகள், அந்தந்த மாவட்டங்களிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு அனுப்பப்பட்டு, அரசு விலைக் கொள்கையின்படி சான்று விதை உற்பத்திக்கென விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) கேள்வி எழவில்லை.

78—

கரும்பு சாகுபடி

வினா எண் 118962—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தில் புதிய தொழில்நுட்பம் மூலமாகக் கரும்பு சாகுபடியை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், படமாத்தூர் கிராமத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலையான சக்தி சர்க்கரை ஆலையின் கரும்பு ஒதுக்கீடு பகுதியாகும். சக்தி சர்க்கரை ஆலையின் மற்றும் தமிழக அரசின் மூலம் வழங்கப்படும் மானியங்கள் மூலம் திருப்புவனம் ஒன்றியம் பகுதியில் கடந்த வருடம் 2,875 ஏக்கர் நடவு மற்றும் கட்டைக்

2011 ஜனவரி 13]

கரும்பு பயிரிடப்பட்டிருந்தது. அதில் 289 ஏக்கர் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கப்பட்டு இருந்தது. தற்சமயம், நடப்புப் பருவத்தில் பல்வேறு நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி 2,000 ஏக்கர் வரை கரும்பு நடவு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக நிலத்தடி சொட்டுநீர்ப் பாசனம், அகன்ற இடைவெளிப் பயிர்கள், முழுவதும் இயந்திரமயமாக்கல் சாகுபடி போன்ற நவீன உத்திகள் கையாளப்பட்டு இந்த வறட்சியான பகுதியிலும் 2,550 ஏக்கர் வரை கரும்பு பயிரிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பரப்பளவில் சுமார் 400 ஏக்கர் கரும்பிற்கு நவீன நீர்ப்பாசன முறையான நிலத்தடி சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், விவசாயிகளுக்குப் பல்வேறு தொழில்நுட்பங்களை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், (கே.வி.கே) உழவர் பயிற்சி நிலையங்கள் மற்றும் வேளாண்மைத் துறை மூலமாக நவீன தொழில்நுட்பங்கள் பயிற்சி கொடுக்கப்பட்டு, கரும்பு பயிர் அபிவிருத்தி மேம்படுத்தப்பட்டு வருகிறது. எதிர்வரும் பருவத்தில் மேற்கண்ட புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அதிக அளவில் கரும்பு சாகுபடி செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

79—

பூச்சி மருந்து தெளித்தல்

வினா எண் 122593—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மைப் பொருட்களை அதிக அளவில் படர்ந்து அழித்து விடுகின்ற வெள்ளைப் பேன்களைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

இவ்வினாவில் குறிப்பிட்டுள்ள வெள்ளைப் பேன்கள் என்பவை மாவுப் பூச்சிகளே ஆகும். மாவுப் பூச்சிகள் வெள்ளையாகக் காணப்படுவதால் அதனை வெள்ளைப் பேன்கள் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

[2011 ஜனவரி 13

கடந்த 2009-2010 ஆம் ஆண்டு மாவுப் பூச்சி தாக்குதலினால் கோயம்புத்தூர், ஈரோடு, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் பயிரிடப்பட்ட பயிர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டன. மாவுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த "Mass Spraying for the control of Mealy Bug" என்ற திட்டத்தின்கீழ் கோவை, சேலம், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் இரண்டு கட்டங்களில் பரந்த அளவில் பூச்சி மருந்து தெளிக்கும் பணி 7,027 எக்டர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.100 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பூச்சி மருந்துகள் தெளிக்கும் பணி முழுவதும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டது.

80—

விதைப் பண்ணை

வினா எண் 123312—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதியிலுள்ள விதைப் பண்ணையை நவீனமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பஞ்சுப்பேட்டை அரசு விதைப் பண்ணை, முசரவாக்கம் அரசு எண்ணெய் வித்துப் பண்ணை ஆகியவற்றில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நீர்ப்பாசன ஆதாரங்களை உருவாக்கி, பண்ணை இயந்திரமாக்கி, நவீன மயமாக்கம் வகையில் பல்வேறு வகையான பண்ணை இயந்திரங்கள் வழங்கப்பட்டு கீழ்க்கண்டவாறு உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன:

வ.எண்	இனம்	அலகு	பஞ்சுப்பேட்டை அ.வி.ப.	முசரவாக்கம் அ.எ.வி.ப.
1.	புதிய ஆழ்குழாய்க் கிணறு	எண்	2	2
2.	நில மேம்பாடு	ஏக்கர்	18.47	—

2011 ஜனவரி 13]

3.	நிலச் சீர்திருத்தம்	ஏக்கர்	—	2
4.	கைத்தெளிப்பான்	எண்	2	2
5.	விசைத் தெளிப்பான்	எண்	1	2
6.	மின் மோட்டார்	எண்	1	—
7.	பவர்டில்லர்	எண்	1	—
8.	நெல் நடவு இயந்திரம்	எண்	1	—
9.	பல்பயிர் கதிரடிப்பான்	எண்	1	—
10.	பண்ணைக்கருவிகள் (கடப்பாரை, களைக் கொத்து, இரும்புச்சட்டி இன்னும்பிற)	யூனிட்	1	1

மேலும், நில மேம்பாடு மற்றும் நிலச் சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தேவையான அளவு நவீனப்படுத்தப்பட்டு, பண்ணையின் சாகுபடிப் பரப்பும், விதை உற்பத்தியும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

81—

பேருந்து வசதி

வினா எண் 111971—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், பூலாங்குறிச்சி அரசுக் கலைக் கல்லூரிக்குப் பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரிலிருந்து பூலாங்குறிச்சி அரசுக் கலைக் கல்லூரி வழியாக பொன்னமராவதி வரை பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

[2011 ஜனவரி 13

82—

பேருந்து வசதி

வினா எண் 127364—டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதியிலிருந்து திருப்பதி, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், நெல்லை, நாகர்கோவில், கன்னியாகுமரி, தஞ்சாவூர், திண்டுக்கல், கரூர், ஈரோடு மற்றும் சேலம் ஆகிய பகுதிகளுக்கு ஒரு வழித்தடம் அமைத்து பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மதுராந்தகம்-திருப்பதி செல்லும் பயணிகள், நகரப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி செங்கல்பட்டு சென்று அங்கிருந்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், காஞ்சிபுரம் மண்டலம் மூலமாகத் திருப்பதிக்கு இயக்கப்படும் பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக மதுராந்தகம் வழியாக திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், நெல்லை, நாகர்கோவில், கன்னியாகுமரி, தஞ்சாவூர், திண்டுக்கல், கரூர், ஈரோடு மற்றும் சேலம் ஆகிய இடங்களுக்கு பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. மேற்படி பேருந்து வசதியை மதுராந்தகத்திலிருந்து மேற்படி இடங்களுக்குச் செல்லும் பயணிகள் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது. மதுராந்தகத்திலிருந்து திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், நெல்லை, நாகர்கோவில், கன்னியாகுமரி, தஞ்சாவூர், திண்டுக்கல், கரூர், ஈரோடு மற்றும் சேலம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் நேரடிப் பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்பட்சத்தில் மேற்படித் தடங்களில் நேரடிப் பேருந்து இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

83—

வெள்ளாட்டு ஆராய்ச்சி மையம்

வினா எண் 121610—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

ஓமலூர் தொகுதி, ஓமலூர் பகுதியில் வெள்ளாட்டு ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஓமலூர் பகுதியில் வெள்ளாட்டு ஆராய்ச்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

84—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 122463—திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், வகுரணி கே. பொத்தம்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், வகுரணி கே. போத்தம்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகின்றது.

85—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 122465—திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கருமாத்தூரில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கருமாத்தூரில் ஏற்கெனவே கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருவதால் புதியதாகக் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

86—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 122466—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கல்லூத்து, வெள்ளைமலைப்பட்டி, கணவாய்ப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், வெள்ளைமலைப்பட்டி, கணவாய்ப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

2010-2011 ஆம் ஆண்டின் அறிவிப்பில் 100 கால்நடைக் கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு, கல்லூத்து கிராமம் தேர்வு செய்யப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

87—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 122469—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், ஆரியப்பட்டி, பானாமூப்பன்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், ஆரியப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

2010-2011 ஆம் ஆண்டின் அறிவிப்பில் 100 புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு, பானாமூப்பன்பட்டி கிராமம் தேர்வு செய்யப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

88—

சீரமைத்தல்

வினா எண் 46366—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அடிப்படை வசதிகளுடன் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள அனைத்து வருவாய்த் துறை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்கள் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களின் குடியிருப்புகளின் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் போன்ற பணிகளுக்காக ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

அரசால் செய்யப்படுகிறது. மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்படும் முன்னுரிமை பட்டியல்களின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதில் கிராம நிர்வாக அலுவலர்களின் அலுவலகங்களைச் சீரமைக்கும் பணியும் அடங்கும். இவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் பணி மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்பார்வையில் அந்தந்த மாவட்டப் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்படுகிறது.

89—

பட்டா வழங்குதல்

வினா எண் 59238—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினம் அருகேயுள்ள சுண்ணாம்புச் சூளையில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், காவேரிப்பட்டினம்-I, கிராம புல எண் 45அ, பரப்பு 0.40.0 ஹெக்டேர் புல எண் 45பி, பரப்பு 0.33.0 ஹெக்டேர் மற்றும் புல எண் 46, பரப்பு 0.11.0 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலங்கள் கிராம கணக்குகளின்படி, கோயில் என உள்ளது. இவை இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஆட்சேபகரமான புறம்போக்கு ஆகும். எனவே, இப்புலங்களில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருக்கும் நபர்களுக்குப் பட்டா வழங்க இயலாது.

90—

மரங்களை வளர்த்தல்

வினா எண் 117273—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) தமிழகத்தில் உள்ள வருவாய்த் துறை அலுவலக வளாகத்தில் காலியாக உள்ள இடங்களில் மரங்களை வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மாவட்ட பெருந்திட்ட வளாகத்திற்குள் உள்ள சாலைகளின் இருமருங்கிலும் நிழல் தரும் மரங்களை நட்டும் பச்சைபசேலென்று காட்சியளிக்கும் வகையில் புல் தரைகளை அமைத்தும் பராமரிக்க வேண்டும் என அறிவுரைகள் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மாவட்ட பெருந்திட்ட வளாகத்தின் மொத்த விஸ்திரணத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை திறந்தவெளிப் பூங்கா அமைக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ஆ) வினா எழவில்லை.

91—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 117580—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் அரசுத் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் அரசுத் தொழிற்பயிற்சி நிலையம் துவக்க தற்போது அரசிற்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

[2011 ஜனவரி 13

92—

அர்ச்சகர் பயிற்சி நிலையம்

வினா எண் 71698—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, நெல்லிக்குப்பம் நகரில் அர்ச்சகர் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள இந்து திருக்கோயில்களில் இந்துக்களில் உரிய பயிற்சியும் தகுதிகளும் உள்ள அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்பது தொடர்பாக ஆலோசனைகள் வழங்கிட, நீதியரசர் திரு. ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் அரசால் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் பரிந்துரைப்படி அரசாணை (நிலை) எண் 1, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 2-1-2007-ல் தொடர் நடவடிக்கை எடுத்திட அரசால் ஆணையிடப்பட்டது. இதனடிப்படையில் முதற்கட்டமாக மதுரை, பழனி, திருச்செந்தூர், திருவண்ணாமலை, சென்னை மற்றும் திருவரங்கம் ஆகிய ஆறு இடங்களில் அர்ச்சகர்களுக்கான பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன. எனவே, அரசாணையில் தெரிவிக்கப்பட்ட இடங்களைத் தவிர வேறு இடங்களில் அர்ச்சகர் பயிற்சி நிலையங்களைத் தொடங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

93—

முழு வரி விலக்கு

வினா எண் 123380—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண் பொருட்களுக்கு VAT-இலிருந்து முழு வரி விலக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டப் பிரிவு 15-ன்கீழ் 4 ஆம் அட்டவணை-B பிரிவில் வரிசை எண் 1-ன்கீழ் மொத்தம் 23 வகையான வேளாண் பொருட்களுக்கு (கருவிகள்) மதிப்புக் கூட்டு வரியிலிருந்து முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் கீழ்க்கண்ட வேளாண் பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது:

வரிசை எண்	பொருள்
18	மிளகாய், புளி, மல்லி, பெருங்காயம், சிகைக்காய், வெல்லம், மற்றும் நாட்டுச் சர்க்கரை.
19	அரிசி மற்றும் குருணை.
33	அனைத்து வகையான காய்கறிகள், உருளைக் கிழங்கு மற்றும் மரவள்ளிக் கிழங்கு மற்றும் பழவகைகள்.
34	பூண்டு மற்றும் இஞ்சி.
48பி	ஆமணக்கு விதை மற்றும் ஆமணக்கு எண்ணெய்.
55	வேப்பம் புண்ணாக்கு மற்றும் பொது மக்களுக்கு பொது விநியோகத்தின் மூலம் விநியோகிக்கப்படும் கோதுமை.
60	அனைத்து வகையான தானிய வகைகள், கம்பு, கேழ்வரகு, சோளம், தினை, வரகு, சாமை, கொள்ளு மற்றும் மைலோ.
62	அரிசி உடைப்பட்டது, குத்தல் அரிசி மற்றும் அரிசி தவிடு.
68	12 வகையான பருப்பு வகைகள்.
73	அனைத்து வகையான விதைகள் (எண்ணெய் வித்து விதைகள் தவிர).
77	இளநீர், தேங்காய் துருவல் மற்றும் தேங்காய்ப் பால்.

[2011 ஜனவரி 13

94—

தர்ஹா பராமரித்தல்

வினா எண் 81592—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி அருகேயுள்ள பிரான்மலை தர்ஹா பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பிரான்மலை சேக் அப்துல்லா அவுலியா தர்ஹா, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் பதிவு எண் 99/இராமநாதபுரம் என பதிவாகியுள்ள ஒரு வக்ஃபு நிறுவனமாகும். எனவே, மேற்கண்ட தர்ஹா, வக்ஃபு சட்டம், 1995-ன்படி தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ளதால் இதனை அரசு பராமரிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

95—

பெண்களைப் பராமரித்தல்

வினா எண் 107966—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பாலியல் தொல்லைகளுக்கு ஆட்பட்டு சமுதாயத்தில் புறக்கணிக்கப்படும் பெண்களைப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாலியல் கொடுமைகளால் பாதிப்பிற்குள்ளாகி, 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ்

2011 ஜனவரி 13]

மீட்கப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்கு பாதுகாப்பு, பராமரிப்பு, பயிற்சி மற்றும் மறுவாழ்வு அளிப்பதற்கென, தமிழ்நாட்டில் ஐந்து மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள் முறையே சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் சமூகப் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன.

அரசு மகளிர் காப்பகங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு வேலைவாய்ப்பு சார்ந்த பிரிவுகள், திறமைகள் வளர்க்கும் பிரிவுகள் மற்றும் தொழிற் பிரிவுகளில் தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

மேலும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நல நிதித் திட்டத்தின்கீழ் அரசினர் மகளிர் காப்பகங்களிலிருந்து வீடேகும் தகுதி வாய்ந்த பெண்களுக்கு சுய வேலைவாய்ப்பு உதவிக்காக, நிதி உதவியாக ரூ.5,000/-க்கு மிகாமலும் அல்லது பொருள் உதவியாக ரூ.10,000/-க்கு மிகாமலும் வழங்கப்பட்டு வருகிறது. இவை தவிர சமூக நல ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் சேவை இல்லங்களிலும், இவ்வாறு பாதிக்கப்பட்டு ஆதரவு இல்லாத மகளிர் தங்க வைத்துப் பாதுகாக்கப்படுகின்றனர்.

96—

மீனவர் தேசிய மையம்

வினா எண் 58115—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மீனவர்களின் வாழ்க்கைத் தரம் உயர மீனவர் தேசிய மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக மீனவர்களின் வாழ்க்கைத் தரம் உயர மீனவர் தேசிய மையம் அமைப்பது குறித்த திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. மாறாக, தமிழக மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடும் வகையில் தமிழக அரசால்

[2011 ஜனவரி 13

பல்வேறு மீன்வள மேம்பாட்டுத் திட்டங்களும், மீனவர் நலத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அனைத்து மீனவர்களின் நலத்தைப் பேணிக் காத்திட அவர்களின் நல்வாழ்விற்காக, தேசிய அளவில் செயல்பட்டுவரும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டங்கள் தமிழகத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரை, தமிழக மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட மீனவர் நல வாரியம் துவங்கப்பட்டு மீனவர்களுக்கான நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மீனவர்கள், தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து, பல திட்டங்கள் வாயிலாகப் பயனடைந்து வருகின்றனர். மேலும், மீனவர் தொழில்நுட்ப மற்றும் பயிற்சி நிலையம் ஒன்றும் துவங்கி செயல்பட்டு வருகின்றது.

மேற்கூறிய அனைத்து அமைப்புகளும் தமிழகத்தில் மீனவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட நிறுவப்பட்டுள்ளதால் தனியே மீனவர் தேசிய மையம் அமைப்பது குறித்து தேவை எழவில்லை.

97—

உலர் கலன்கள்

வினா எண் 123647—டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி, லத்தூர் ஒன்றியம், தென்பட்டினம், வடபட்டினம், ஆலிக்குப்பம், சின்னக்குப்பம், பெரியக்குப்பம், முகையூர், கடலூர் கிராமம் ஆகிய பகுதிகளுக்கு சூரிய வெப்ப உலர் கலன்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

தற்போது கடலூர் பெரியகுப்பம் மீனவ கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் மீன் இறங்கு தளத்தில் அதிக அளவு பிடிபடும் மீன்கள் வைத்து பாதுகாக்கும் பொருட்டு குளிரூட்டல் அறை (cold storage) கட்டப்பட்டு வருவதால் புதிய சூரிய

2011 ஜனவரி 13]

ஒளி மீன் உலர் கலம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும், ஏற்கெனவே அரசு மற்றும் தொண்டு நிறுவனங்கள்மூலம் அமைக்கப்பட்டு சூரிய ஒளி மீன் உலர் கலன்கள் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவைகளுக்கு போதுமான மூலப்பொருட்கள் (Raw Meterials) தற்போது கிடைக்கப்பெறவில்லை. ஆகையால் புதிய சூரிய ஒளி மீன் உலர் கலன்கள் அமைப்பதற்கு உடனடித் தேவை எழவில்லை.

98—

பால் பண்ணை

வினா எண் 121545—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் மாதிரி பால் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையிலிருந்து 18 கி.மீ. தூரத்தில் உள்ள சிவகங்கையில் நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பால் குளிர்விக்கும் திறனுள்ள பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், மானாமதுரையிலிருந்து 75 கி.மீ. தூரத்திலுள்ள காரைக்குடியில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் பதப்படுத்தும், பால் பதன ஆலை ஒன்று செயல்பட்டு வருகிறது.

2. மானாமதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து தற்போது நாளொன்றுக்கு சுமார் 2,000 லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே, மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் மாதிரி பால் பண்ணை அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

99—

கட்டட வசதி

வினா எண் 121637—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், தாமல் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், தாமல் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, மேற்கொண்டு தாமல் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

100—

மாட்டுத் தீவனம்

வினா எண் 122424—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் மானிய விலையில் தவிடு, பிண்ணாக்கு, பருத்திக் கொட்டை, பூசா போன்ற மாட்டுத் தீவனங்களை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தவிடு, பிண்ணாக்கு, பருத்திக் கொட்டை, பூசா போன்ற மாட்டுத் தீவனங்களை மானிய விலையில் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை. எனினும், சங்கங்கள் தேவைக்கு ஏற்ப, ஈரோடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து கால்நடைத் தீவனம் வாங்கப்பட்டு சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2011 ஜனவரி 13]

பட்டியல் – 2

1—

தூர் வாருதல்

வினா எண் 25709—திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், மாங்குடி ஊராட்சி, ஆரியான் கொள்ளைக் கால்வாய் வரத்து வாரியைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், மாங்குடி ஊராட்சி, ஆரியான் கொள்ளைக் கால்வாய் வரத்து வாரி தூர்வாரும் பணியானது, உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வள நில வளத்திட்டத்தின்கீழ் ரூ.2.34 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு முடிக்கப்பட்டு விட்டது.

2—

தூர் வாருதல்

வினா எண் 29523—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, குலமங்கலம் வடக்கு ஊராட்சி, பெரிய குளத்தைத் தூர்வாரி மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, குலமங்கலம் பெரிய ஏரி தூர்வாரி சீரமைக்கும் பணி முடிக்கப்பட்டு விட்டது.

3—

புதுப்பித்தல்

வினா எண் 52390—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாயனூரில் பொதுப் பணித் துறையின் ஆய்வு மாளிகையைப் புதுப்பிக்க அல்லது புதியதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாயனூரில் பொதுப் பணித் துறையின் ஆய்வு மாளிகையைப் புதுப்பிக்க அல்லது புதியதாகக் கட்ட கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

4—

சீரமைத்தல்

வினா எண் 52392—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, லாலாபேட்டையில் காவிரி வலதுகரை வாய்க்கால்மேல் கரூர்-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பொதுப் பணித் துறை பாலத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி,

2011 ஜனவரி 13]

லாலாபேட்டையில் தற்பொழுது தேசிய நெடுஞ்சாலைத் துறை மூலம் புதிய இரயில்வே மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு போக்குவரத்துகள் அனைத்தும் புதிய இரயில்வே மேம்பாலம் வழியாகச் சென்று வருகின்றன. தென்கரை கால்வாயின் குறுக்கே இருந்த தேசிய நெடுஞ்சாலை என்.எச். 67-ஐக் கடந்து செல்லும் பாலத்தில் தற்பொழுது போக்குவரத்து கிடையாது என்பதால் இப்பாலத்தினை அகலப்படுத்த வேண்டிய தேவை இல்லை.

5—

தடுப்பணை

வினா எண் 59191—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், வடவம்பாடி ஊராட்சிக்குட்பட்ட ஏர்வாடி பூலாம்பட்டிக்கு தென்புறம் புங்காற்றில் இரண்டு தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* இத்திட்டம் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

6—

தூர் வாருதல்

வினா எண் 59207—திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, குன்னாண்டார்கோவில் ஒன்றியம், விசலூர் ஊராட்சி, பெரியகுளம் உடைப்பைச் சரி செய்து தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் தொகுதி, குன்னாண்டார்கோவில் ஒன்றியம், விசலூர் ஊராட்சி, பெரியகுளம் உடைப்பு சரி செய்து தூர்வாரி கரை பலப்படுத்தும் பணி 2008-ம் ஆண்டு "வெள்ளப்பணிகள்" தலைப்பின்கீழ் செய்து முடிக்கப்பட்டது.

7—

தூர் வாருதல்

வினா எண் 59210—திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், மாங்குடி பெரிய குளத்தைத் தூர்வாரி வரத்து வாரிகளை சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இலுப்பூர் தாலுகா, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், மாங்குடி கிராமம், மாங்குடி பெரிய குளம் மற்றும் அதன் வரத்துவாரி நீர்வள, நிலவளத் திட்டத்தில் ரூ.4.60 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி சீர் செய்யப்பட்டுள்ளது.

8—

தூர் வாருதல்

வினா எண் 59211—திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம், பெரிய குளத்திலுள்ள உடைப்பைச் சீர் செய்து தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் **(IAMWARAM)** *2008-2009 ஆம் ஆண்டில், குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம், பெரிய குளத்தின் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குளத்தின் உடைப்பு சரி செய்யப்பட்டு கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.*

9—

மணல் தடுப்பணை

வினா எண் 78579—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருச்சி மாவட்டம், கட்டளைக் கால்வாயிலிருந்து முசிறி பாலம் வரை காவிரியின் நடுவிலுள்ள மணல் தடுப்பணையை அகற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கரூர் மாவட்டம், மாயனூர் கிராமம், கட்டளை படுகை அணையில் இருந்து முசிறி பாலம் வரை இருந்த மணல் தடுப்புகள் 2008-ம் ஆண்டு காவிரி டெல்டா பாசனத்திற்குத் தண்ணீர் சென்ற காலத்தில் அடித்துச் செல்லப்பட்டு டெல்டா பாசனத்திற்கு எந்தவித இடையூறுமின்றி காவிரியில் தண்ணீர் சென்றது.

10—

அவசர சிகிச்சை மையம்

வினா எண் 98292—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அல்லது திருப்புவனத்தில் நெடுஞ்சாலை விபத்து அவசர சிகிச்சை மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில், திருப்புவனம்-மானாமதுரை தேசிய நெடுஞ்சாலையில் மானாமதுரையில் ஏற்கெனவே அவசர விபத்து சிகிச்சை மையம் செயல்பட்டு வருகிறது.

11—

கண்காணிப்புக் கேமிராக்கள்

வினா எண் 98293—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை—இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் சோதனைச் சாவடிகளில் கண்காணிப்புக் கேமிராக்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை—இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை மதுரை, சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களின் வழியாகச் செல்கிறது. இதில் மதுரை மாவட்ட எல்லைக்குள் சோதனைச் சாவடிகள் எதுவுமில்லை. சிவகங்கை மாவட்டத்தில் திருப்புவனம் என்ற இடத்தில் ஒரு சோதனைச் சாவடி உள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட 4 இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைந்துள்ளன:

1. *பாம்பன் பாலம் அருகில் கடலோரக் காவல் படையின் சோதனைச் சாவடி.*

2. *பெரியார் நகர் (பயோனியர் மருத்துவமனை அருகில்) காவல் துறை சோதனைச் சாவடி.*

3. *பட்டினம்காத்தான் (மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில்) காவல் துறை சோதனைச் சாவடி.*

2011 ஜனவரி 13]

4. பார்த்திபனூர் காவல் துறை சோதனைச் சாவடி.

இவற்றில் கண்காணிப்புக் கேமிராக்கள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

12—

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம்

வினா எண் **100704**—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை அம்பேத்கர் நகரில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை அம்பேத்கர் நகரின் மக்கள் தொகை 72,000 ஆகும். இந்த நகரைச் சுற்றியுள்ள 96 கிராமங்களின் மக்கள் தொகை 2,32,300 ஆகும். இவ்விடத்தினைச் சுற்றி கிழக்கே 59 கிலோ மீட்டர் தொலைவில் பொன்னேரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையமும், மேற்கே 60 கிலோ மீட்டர் தொலைவில் புத்தூர் (ஆந்திர மாநிலம்) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையமும், வடக்கே 25 கிலோ மீட்டர் தொலைவில் சத்தியவேடு (ஆந்திர மாநிலம்) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையமும், தெற்கே 29 கிலோ மீட்டர் தொலைவில் திருவள்ளூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையமும் செயல்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் அதாவது 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் அப்பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து அழைப்புகளின் எண்ணிக்கை 23 ஆகும். மேலும், கடந்த 3 ஆண்டுகளில் ஏற்பட்ட தீ விபத்து அழைப்புகளின் புள்ளி விவரங்களை நோக்கும்போது மாதாந்திர தீ விபத்து அழைப்புகளின் சராசரி எண்ணிக்கை 1 ஆக உள்ளது. எனவே, இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து அழைப்புகளை அருகில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களின் ஊர்திகளைக் கொண்டு மேற்கொள்ள இயலும்.

[2011 ஜனவரி 13

13—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 100705—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், பேர்பெரியாங்குப்பத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா—

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், பேர்பெரியாங்குப்பம் ஊரைச்சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் குறிஞ்சிப்பாடி மற்றும் பண்ருட்டி ஆகிய இரண்டு இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, மேற்கண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களின் ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

14—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 102999—திரு. எஸ். ராஜகுமார்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மணல்மேட்டில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை தொகுதி, மணல்மேட்டுப் பகுதியைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் மூன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அங்குள்ள ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

15—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 103017—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மதுரை மாவட்டம்—திருப்பரங்குன்றம் நகரத்தைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் அனுப்பானடி, மதுரை மற்றும் திருமங்கலம் ஆகிய மூன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, மேற்கண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்களிலுள்ள ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

[2011 ஜனவரி 13

16—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 103118—திருமதி ஆர். பிரேமா: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அவினாசியில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், அவினாசி நகரைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் திருப்பூர் (தெற்கு) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்திலுள்ள ஊர்திகள் மற்றும் அருகில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் நிகழும் தீ விபத்து அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் அவினாசியில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

17—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 103122—திரு. ஆர்.கே. பாரதிமோகன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாளில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாள் ஊரைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் இரண்டு தீயணைப்பு மற்றும்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அங்குள்ள ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

18—

தண்டனை வழங்குதல்

வினா எண் 103854—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொது இடங்களில் மாணவிகளை கிண்டல், கேலி செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

பொது இடங்களில் மாணவிகளை கிண்டல் மற்றும் கேலி செய்பவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 509 மற்றும் 4, தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம், 1998-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின்படி குற்றம் நிரூபிக்கப்பட்டால் எதிரிக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் ரூ. 10,000/- அபராதமும் விதிக்கப்படும்.

2. சென்னை மாநகரில் பொது இடங்கள் மற்றும் பெண்கள் பள்ளி, கல்லூரி அருகில், சீருடை அணியாத பெண் காவலர்கள் மற்றும் சரக ரோந்து வாகனப் படையினர் (Patrol Party) மூலம் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. மாணவிகளை கிண்டல் மற்றும் கேலி செய்பவர்கள் மீது காவல் துறையினர் உடனடி நடவடிக்கை எடுக்க 95000 99100 என்ற எண்ணிற்கு குறுந்தகவல் (SMS) மூலம் புகார் அளிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், இதுகுறித்து பள்ளி மற்றும் கல்லூரி முதல்வர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

4. பொது இடங்களில் பெண்களை கேலி செய்தவர்களின் மீது இவ்வருடம் இதுவரை 27 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 19 வழக்குகளில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்குகள் நீதிமன்ற நிலுவையில் உள்ளன. 7 வழக்குகளில் தண்டனை முடிவு பெற்றுள்ளது.

19—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 104742—திரு. வி.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை மற்றும் முகையூரில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருக்கோவிலூர் தாலுகா, மணலூர்பேட்டையைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் செயல்பட்டு வருகிறது மற்றும் திருக்கோவிலூர் தாலுகா முகையூரைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் விழுப்புரம், திருக்கோவிலூர், வேட்டவலம் மற்றும் திருவெண்ணைநல்லூர் ஆகிய நான்கு இடங்களிலும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, முகையூர் மற்றும் மணலூர்பேட்டை ஆகிய இடங்களில் 25 கி.மீ. தொலைவிற்குள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருவதால் அங்கு ஏற்படும் தீ விபத்து அழைப்புகளை அவற்றிற்கு அருகில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய ஊர்திகளைக் கொண்டே சமாளிக்க இயலும் என்பதால், தற்போது மணலூர்பேட்டை மற்றும் முகையூரில் புதிதாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

2011 ஜனவரி 13]

20—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 105821—திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சியில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி நகரைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் ஒரு தியணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலைய ஊர்தியைக் கொண்டே, இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

21—

ஏலம்

வினா எண் 105828—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசால் பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து வாகனங்களும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஏலம் விட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1974-ம் வருட தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் வரி செலுத்தாத வாகனங்கள் பறிமுதல்

[2011 ஜனவரி 13

செய்யப்பட்டால் மட்டுமே உரிய நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

வாகன உரிமையாளருக்கு உரிய அறிவிக்கை கொடுத்தும், வாகனத்தின் மதிப்பீடு செய்ய, மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை பெற்றும், உரிய பொது ஏல நடைமுறைகள் முடிந்த பின்தான் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களால் வாகனம் எங்கு உள்ளதோ அங்கு ஏலம் விடப்படும். எனவே, அரசால் பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து வாகனங்களும் மூன்று மாதத்திற்கு ஒருமுறை ஏலம் விட சாத்தியக்கூறுகள் இல்லை.

தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டப் பிரிவு 14-ன்படி மதுவிலக்குக் குற்றங்களில் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

அரசாணை நிலை எண் 315, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (5) துறை, நாள்: 25-08-2004-ல் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களை ஏலம் விடுவதற்கு கீழ்க்கண்ட நபர்கள் அடங்கிய குழு (Auction Committee) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கூடும்.

(i)	காவல் கண்காணிப்பாளர்/காவல் ஆணையர்	–	தலைவர்
(ii)	மாவட்ட கூடுதல் கண்காணிப்பாளர், அமலாக்கம்	–	கூட்டுநர் (Convenor)
(iii)	உதவி ஆணையர் (ஆயத்தீர்வை) / துணை ஆணையர் (ஆயத்தீர்வை)	–	உறுப்பினர்
(iv)	மாவட்ட/மாநகர மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, தானியங்கி பொறியாளர்	–	உறுப்பினர்.

அரசாணை நிலை எண் 1509, நிதி (உள்–1) துறை, நாள் : 25-10-2007-ல் வாகனங்களை ஆய்வு செய்வதற்கும் மற்றும் அதன் மதிப்பிற்கான விலையை நிர்ணயம் செய்வதற்கும் கீழ்க்கண்ட அலுவலர்கள் அடங்கிய (நிர்ணய) குழு அமைக்கப்பட்டுள்ளது:

2011 ஜனவரி 13]

(i) மோட்டார் வாகன பராமரிப்புத் துறை — தலைவர் அதிகாரி

(ii) மோட்டார் வாகன துறை ஆய்வாளர் — உறுப்பினர்-1 (முதல் நிலை)

(iii) மாநில போக்குவரத்துக் கழகத்தின் உதவிப் — உறுப்பினர்-2 பொறியாளர் பதவிக்குக் குறையாத தொழில் நுட்ப அலுவலர்

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை காவல் துறை கூடுதல் இயக்குநர்/காவல் துறை தலைவர் அவர்களுக்கு கூட்டுநர் (Convenor), தகுதி வாய்ந்த அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களின் விவரங்களை அறிக்கை செய்ய வேண்டும். அத்துடன், விவரக் குறிப்புகளாக ஏலக் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்ட வாகன சொத்துக்களின் எண்ணிக்கை, நிர்ணயித்த பண மதிப்பீடு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி/பொது ஏலத்தில் ஏலம் எடுத்த தொகை மற்றும் தகுந்த தலைப்பின்கீழ் அரசுக்குச் செலுத்திய தொகை மற்றும் அரசு கருவூலத்திற்குச் செலுத்தப்பட்ட நாள் முதலியவையும் சமர்ப்பிக்க வேண்டும். இது குறித்து காவல் துறை கூடுதல் இயக்குநர் (அமலாக்கம்)/காவல் துறை தலைவர் (அமலாக்கம்) அவர்கள் அரசுக்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மேற்கண்டவற்றின் தொகுப்பு விவர அறிக்கையை அனுப்புதல் வேண்டும்.

பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் அவ்வப்போது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூடும் ஏலக் குழு மூலம் ஏலம் விடப்பட்டு அத்தொகை அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகின்றது. இது குறித்த அறிக்கை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களிலிருந்தும் பெறப்பட்டு வருகிறது.

இனிவரும் காலங்களிலும் மதுவிலக்குக் குற்றங்களில் பறிமுதல் செய்யப்படும் வாகனங்கள் அரசு ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஏலம் விடப்பட்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தவறாமல் அறிக்கை பெறப்படும்.

[2011 ஜனவரி 13

22—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 105925—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, திருமானூரில் தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

அரியலூர் மாவட்டம், திருமானூர் கிராமத்தைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் புள்ளம்பாடி, அரியலூர் மற்றும் திருவையாறு ஆகிய மூன்று இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, மேற்கண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்களிலுள்ள ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப்பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

23—

தரம் உயர்த்துதல்

வினா எண் 107663—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருமணி, பெத்தேல் நகர், கல்வாரி நகர் பகுதிகளில் வாழும் தொழுநோயாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, திருமணி, பெத்தேல் நகர், கல்வாரி நகர் பகுதிகளில் வாழும் தொழுநோயால்

2011 ஜனவரி 13]

பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி, 40 சதவிகிதத்திற்கு மேல் கை, கால், இயக்க குறைபாடு உள்ளவர்களுக்கு மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு அவர்களுக்கு உதவித் தொகை மாதம் ரூ.400/- வீதம் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:

பெத்தேல் நகர்	:	64 பேர்
கல்வாரி நகர்	:	33 பேர்
திருமணி	:	112 பேர்

தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழுநோயின் தாக்கத்தைக் குறைக்கவும் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் பொதுவான நோய்களுக்கும் மருத்துவ உதவிகள் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைமூலம் வழங்கப்படுகிறது.

மாற்றுத் திறனாளிகளுக்காக வழங்கப்படும் உபகரணங்கள் (Aids and Appliances) தொழுநோயாளிகளுக்கும் வழங்கப்படுகிறது. அக்குள் கட்டை, கால் தாங்கி போன்ற பொருட்கள் தொழுநோயால் ஒரு கால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஒரு கால் மற்றும் இரண்டு கால்கள் துண்டிக்கப்பட்டவர்களுக்கு செயற்கைக் கால் பொருத்தப்பட்டு சாதாரண நபர்கள் போல் நடக்க உதவி செய்யப்படுகிறது. இரண்டு கால் செயல் இழந்தவர்கள் அல்லது துண்டிக்கப்பட்டவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடம் செல்ல, மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன. செவித்திறன் குறைவுள்ளவர்களுக்கு காதொலிக் கருவி வழங்கப்படுகிறது.

மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெற்றிருக்கும் அனைவருக்கும் அரசு பேருந்துகளில் 75 சதவிகிதம் சலுகைக் கட்டணத்தில் பயணம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

24—

காவலர் குடியிருப்புகள்

வினா எண் 108068—திரு. பெ. மோகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரத்தில் புதிய காவலர் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் காவலர் குடியிருப்பு 1892-ல் கட்டப்பட்டது. தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளதால், இதனை இடித்துவிட்டு ஒட்டப்பிடாரம் கிராம சர்வே எண் 534/13 மற்றும் 15-ல் 1 ஏக்கர் 66 சென்ட் காலி மனையில், புதிய குடியிருப்புகள், ஆண்டுதோறும் 2,000 குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து, புதிய குடியிருப்புகள் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

25—

ஒருவழிப் பாதை

வினா எண் 111814—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க ஒருவழிப் பாதை முறையை நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை நகரில் மதுரை மார்க்கத்திலிருந்து வரும் வாகனங்களும், மானாமதுரை வழியாக வரும் வாகனங்களும், திருப்பத்தூர் வழியாக வரும் வாகனங்களும் மதுரை சந்திப்பு ரோடு வழியாக சிவகங்கை பேருந்து நிலையம் செல்கின்றன. சிவகங்கை நகரில் தற்பொழுது பாதாள சாக்கடைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பாதாள சாக்கடைப் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்ட பின்பு, ஒருவழிப் பாதை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

26—

குடிநீர் வசதி

வினா எண் 7438—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, வெங்கிட்டாபுரம் பள்ளிக்கூடம் முன்பு மற்றும் கொண்டைசாமி நாயுடு 2-வது வீதியில் பொதுக் குடிநீர் குழாய் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் 60, 61-வது வட்டம் பேரூர் தொகுதி, வெங்கிட்டாபுரம் பள்ளிக்கூடம் அருகில் கொண்டைசாமி நாயுடு 2-வது வீதியில் ஏற்கெனவே பொதுக் குடிநீர் குழாய் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

27—

குடிநீர் வசதி

வினா எண் 11698—திரு. கோ. அரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி நகரத்தில் தினமும் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருத்தணி, அரக்கோணம் நகராட்சிகளுக்கான செயல்படுத்தப்பட்ட கூட்டுக் குடிநீர் திட்டத்தின் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு இத்திட்டத்தின்மூலம் அரக்கோணம் நகராட்சிக்கு சராசரியாக நாள்தோறும் 25 இலட்சம் லிட்டர் குடிநீரும் திருத்தணி நகராட்சிக்கு 15 இலட்சம் லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது.

[2011 ஜனவரி 13

28—

மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

வினா எண் 32388—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், வடகம்பாடி ஊராட்சி, கலைஞர் நகர், இருளர் காலனி, பங்காருபேட்டை, மேட்டுக்காலனி, காட்டுத்தாங்கல், கரியச்சேரி ஊராட்சி, பொன்விளைந்தகளத்தூர் ஊராட்சி, வள்ளிமலை கோவில் பகுதி, அம்மணம்பாக்கம் ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், வடகம்பாடி ஊராட்சி, கலைஞர் நகருக்கு, மேட்டுக் காலனி குடியிருப்பிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்தும், பங்காருபேட்டை குடியிருப்பிற்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் மூலமும், இருளர் காலனிக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமும், காட்டுத்தாங்கல் குடியிருப்பிற்கு, 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் மூலமும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

நத்தம் கரியாச்சேரி ஊராட்சி, கரியாச்சேரி குடியிருப்பிற்கு, 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் மூலமும், பொன்விளைந்தகளத்தூர் ஊராட்சி, வள்ளிமலைக் கோயில் பகுதிக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் மூலமும், மேலும் அம்மணம்பாக்கம் ஊராட்சியில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் தனி மின்விசைத் திட்டம் அமைத்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் அவசியம் இல்லை.

2011 ஜனவரி 13]

29—

மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

வினா எண் 45410—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டி ஊராட்சி, தாசன்காடு பகுதி அரூர்பட்டி ஊராட்சி, மேட்டுமானூர் காட்டுவளவு, சின்ன பூசாரி வளவு பகுதி, மல்லிகுட்டை ஊராட்சி, மாரப்பன் காட்டுவளவு, கரையபட்டன் வளவு பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டி ஊராட்சி, தாசன்காடு பகுதி அரூர்பட்டி ஊராட்சி, மேட்டுமானூர் காட்டுவளவு சின்ன பூசாரி வளவு பகுதி, மல்லிகுட்டை ஊராட்சி, மாரப்பன் காட்டுவளவு, கரையபட்டன் வளவு ஆகிய பகுதிகளுக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து இப்பகுதிக்குச் சேர்த்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் கரையபட்டன் வளவு பகுதிக்கெனத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியம் இல்லை.

30—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 50786—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நல்லூர் நகராட்சிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அனுமதி வழங்க் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நல்லூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 சேரன் நகர் பகுதியில் 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.99.50 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் தரைமட்டத் தொட்டி கட்ட அனுமதி வழங்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

31—

காவிரி குடிநீர் இணைப்பு

வினா எண் 58559—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, ஈரோடு சென்னிமலை 1,010 காலனிக்கு காவிரி குடிநீர் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், முகாசிபிடாரியூர் ஊராட்சி 1,010 நெசவாளர் காலனிக்கு பெருந்துறை சென்னிமலை மற்றும் கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இருந்து தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அளவில் உபரியாக உள்ள குடிநீரினைப் பகிர்ந்து நாளொன்றுக்கு 1.00 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் ஊராட்சியின் பொது நிதியின்மூலம் பணிகளை மேற்கொள்ள உள்ளாட்சி அமைப்பிற்கு மாவட்ட நிர்வாகத்தால் அறிவுரை வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

32—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 74422—திரு. கே.எல். இளவழகன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

(அ) ஆற்காடு தொகுதி, சக்கரமல்லூர் ஊராட்சி, கன்னிகாபுரம் கிராமம், கரிவேடு ஊராட்சி, கரிவேடு காலனி, அத்தித்தாங்கல் ஊராட்சி, அத்தித்தாங்கல் கிராமம், மாங்காடு ஊராட்சி, வி.கே. மாங்காடு தாஜ்புரா ஊராட்சி, சத்யா நகர் பகுதி மற்றும் அரும்பாக்கம் ஊராட்சி, அரும்பாக்கம் கிராமம் ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு ஒன்றியம், சக்கரமல்லூர் ஊராட்சியை சேர்ந்த கன்னிகாபுரம் கிராமம், அத்தித்தாங்கல் ஊராட்சியை சேர்ந்த அத்தித்தாங்கல், மாங்காடு ஊராட்சியை சேர்ந்த வி.கே. மாங்காடு, தாஜ்புரா ஊராட்சியை சேர்ந்த சத்யாநகர் மற்றும் அரும்பாக்கம் ஊராட்சியை சேர்ந்த அரும்பாக்கம் ஆகிய குடியிருப்புகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் குடிநீர் நல்ல முறையில் வழங்கப்பட்டு வருகிறது. கரிவேடு ஊராட்சியை சேர்ந்த கரிவேடு காலனி குடியிருப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. எனவே, மேற்கண்ட குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் இல்லை.

33—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 74453—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் நகராட்சி, 15-வது வார்டு பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் நகராட்சி, 15-வது வார்டு பகுதியில் 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 1,954 ஆகும். தற்போதைய மக்கள் தொகை 2,100 ஆகும். தற்போது ஆத்தூர் நகராட்சி 15-வது வார்டு பகுதிக்கு 26-வது வார்டு பகுதியில் அமைந்துள்ள 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தற்போது ஏற்கெனவே 15-வது வார்டு புதுப்பேட்டைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் நமக்கு நாமே திட்டத்தில் ஆத்தூர் நகராட்சியின்மூலம் 3/2010-ல் குடிநீர் திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனில் உள்ளன.

34—

மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

வினா எண் 93222—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளி ஊராட்சி, நாச்சியூருத்தான் கொட்டாய், முருகன் கோவில் வளவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி காவிரி நீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளி ஊராட்சி, நாச்சியூருத்தான் கொட்டாய், முருகன் கோவில் வளவு குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய

2011 ஜனவரி 13]

குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு இராசிபுரம்—எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து காவிரிக் குடிநீர் 1/2010-ல் பணிகள் முடிக்கப்பட்டு போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

35—

மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

வினா எண் 97872—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, பள்ளிப்பட்டி ஊராட்சி, காசகாரனூரிலுள்ள ஆதி திராவிடர் காலனி பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பள்ளிப்பட்டி ஊராட்சி, காசகாரனூர் காட்டு வளவு என்ற காசகாரனூர் ஆதி திராவிடர் காலனி குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (2010-2011) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணிகள் 11/2010-ல் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டு வரப்படும்.

36—

குடிநீர்த் திட்டம்

வினா எண் 113758—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம் பெருந்துறை சிப்காட் சாய கழிவு நீரால் பாதிக்கப்பட்ட வாய்பாடி, வரப்பாளையம், கூத்தம்பாளையம், சிறுகளஞ்சிபணியம் பள்ளி

ஆகிய ஊராட்சிகளுக்கான தனிக் குடிநீர் காவிரி எல் & டி திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியத்திற்கு உட்பட்ட வரப்பாளையம் ஈங்கூர், பனியம்பள்ளி, வாய்பாடி சிறுகளஞ்சிபணியம், கூத்தம்பாளையம் ஆகிய ஊராட்சிகளுக்கு ஈரோடு மாவட்டம், பெருந்துறை மற்றும் சென்னிமலை ஒன்றியங்களுக்குட்பட்ட 392 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே மேற்கூறிய ஊராட்சிகளுக்கு தனிக் காவிரிக் குடிநீர்த் திட்டம் அமைக்க அவசியம் எழவில்லை.

37—

எரிசக்தி பூங்கா

வினா எண் 104426—திரு. ஞா. ஜான் ஜோசப்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூங்கா நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூங்கா நிறுவும் சாத்தியக்கூறு இல்லை.

38—

சேவை வங்கி

வினா எண் 108543—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

சீர்காழி தொகுதி, மன்னங்குடி ஊராட்சியில் துவக்கப்பட்ட சேவை வங்கியைச் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதியில், மன்னங்குடி என்ற கிராமம் ஏதும் இல்லை. பன்னங்குடி என்ற கிராமத்தில் ஐ.சி.ஐ.சி.ஐ. சேவை வங்கி துவங்கியுள்ளது. எனவே, இப்பொருள் கூட்டுறவுத் துறைக்கு தொடர்புடையது இல்லை. இப்பகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தமட்டில் பன்னங்குடி கிராமம் எஸ். புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் விவகார எல்லையில் உள்ளது. இப்பகுதியில் உள்ள மக்களுக்கு எஸ். புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், கடன் வசதி மற்றும் அனைத்து சேவைகளையும் வழங்கி வருகிறது.

39—

வேளாண்மை வளர்ச்சி முகாம்

வினா எண் 7041—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலர்கள், காய்கறிகள், பழங்கள் மற்றும் மூலிகைச் செடிகள் போன்றவற்றை ஏற்றுமதி செய்ய மாவட்டங்கள் தோறும் வேளாண்மை வளர்ச்சி முகமை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் வேளாண் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு தொழில் அபிவிருத்திக் கழகம் (TIDCO), வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு முகமை (APEDA) மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து கிருஷ்ணகிரி மாவட்டம்

[2011 ஜனவரி 13

ஓசூரில் கொய் மலர்களுக்கென ஏற்றுமதி மண்டலமும், நீலகிரி மாவட்டத்தில் உதகையில் மலர்களுக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலமும், கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கென ஏற்றுமதி மண்டலமும், திண்டுக்கல் மாவட்டத்தில் நிலக்கோட்டையில் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் சிப்காட் இணைந்து மைய அரசு உணவு பதப்படுத்தும் அமைச்சகத்தின் மானியம் பெற்று உணவுப் பூங்காவும் செயல்பட்டு வருகிறது. எனவே, தற்போது மலர்கள், காய்கறிகள், பழங்கள் மற்றும் மூலிகைச் செடிகள் போன்றவற்றை ஏற்றுமதி செய்ய மாவட்டங்கள்தோறும் வேளாண்மை வளர்ச்சி முகமை ஏற்படுத்துவது குறித்த திட்டங்கள் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

40—

வேலைவாய்ப்பு

வினா எண் 10497—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரில் மூங்கில் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு தோட்டக்கலைத் துறை மூலமாக புதிய பரப்பில் மூங்கில் சாகுபடியினை அதிகரித்து அதன் உற்பத்தியினை பெருக்கும் வகையில் தேசிய மூங்கில் இயக்கம் கடந்த 2007-2008 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் கோவை உட்பட 23 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் மூங்கில் தொழிலுக்கு தேவையான மூலப்பொருளான மூங்கில் உற்பத்தியை அதிகரிக்க புதிய பரப்பில் வனமில்லா நிலங்களில் சாகுபடி செய்தும்

2011 ஜனவரி 13]

முள்ளில்லா மூங்கில் உற்பத்தியினை அதிகரிக்கவும், 2008-2009 ஆம் ஆண்டில் 950 எக்டர் பரப்பிலும், 2009-2010 ஆம் ஆண்டில் 850 எக்டர் பரப்பிலும் சாகுபடி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் நடவு செய்த 5 ஆண்டுகளுக்குப்பிறகு ஒரு எக்டருக்கு சராசரியாக 30 முதல் 40 மெட்ரிக் டன் மூங்கில் மகசூலாக கிடைக்க வாய்ப்புள்ளது. இதனால் மூங்கில் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு இம்மூங்கில் மூலப்பொருள் தாராளமாகக் கிடைப்பதுடன் மிகவும் பயனுள்ளதாக இருக்க வாய்ப்பாகிறது.

41—

மான்யம் வழங்குதல்

வினா எண் 20952—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் மல்லிகை மலர் உற்பத்தி செய்ய மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மல்லிகை மலர் சாகுபடி செய்ய துல்லிய பண்ணையத் திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் ஆகிய திட்டங்கள்மூலம் மானியம் வழங்கப்பட்டு வருகின்றது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடவுச் செடிகள் 50% மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. துல்லிய பண்ணையத் திட்டத்தின்கீழ் மலர்களை துல்லிய பண்ணைய முறையில் சாகுபடி செய்ய ஒரு எக்டருக்கு ரூ.63,640/- வரை மானியம் வழங்கப்படுகிறது, ஆனால், வால்பாறை தொகுதியில் உள்ள பெரும்பாலான இடங்களில் சமவெளிப் பகுதிகளில் தென்னை மரங்களும், மலைப்பகுதியில் தேயிலைப் பயிரும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. எனவே, மல்லிகை மலர் சாகுபடி செய்ய விரும்பும்

[2011 ஜனவரி 13

விவசாயிகள் நடைமுறையில் உள்ள இத்திட்டங்களைப் பயனபடுத்திக் கொள்ளலாம்.

42—

விவசாயிகளை ஊக்குவித்தல்

வினா எண் 43821—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பகுதியில், பனங்கிழங்கு, சீத்தாபழம், கொய்யா, ஏலக்காய், வரகு, மக்காச் சோளம் மற்றும் செவ்வந்திப் பூ ஆகியவற்றைப் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம், மானாமதுரை பகுதியில் சீத்தாப்பழம், கொய்யா மற்றும் செவ்வந்திப்பூ ஆகியவற்றைப் பயிரிட ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் தேவையான விதைகள் மற்றும் செடிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் தேவையான தொழில்நுட்ப ஆலோசனையும் வழங்கப்படுகிறது. மேலும், ஏலக்காய், மலைப் பகுதியில் மட்டுமே பயிர் செய்ய இயலும், தற்போது இத்திட்டம் நடைமுறையில் உள்ளது.

மேலும், சிவகங்கை மாவட்டத்தில் மக்காச் சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து, பயறு, எண்ணெய்ப் பனை மற்றும் மக்காச் சோளம் அபிவிருத்தித் திட்டம் (ISOPOM, Macro Management) திட்டத்தில் விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. வரகு சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்த நடப்பு

2011 ஜனவரி 13]

ஆண்டில் திட்டம் எதுவும் சிவகங்கை மாவட்டத்தில் செயல்படுத்தப்படவில்லை.

43—

மூலிகை பயிர் பயிரிடுதல்

வினா எண் 48204—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, புதுப்பாளையம் ஊராட்சியில் மூலிகைப் பயிர் பயிரிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

எடப்பாடி தொகுதியிலுள்ள அனைத்து வட்டார, ஊராட்சி மன்ற விவசாயிகளுக்கும் தேசிய மூலிகை இயக்கம் செயல்படுவது குறித்தும், மானியம் அளிப்பது குறித்தும், விவரம் தெரிவிக்கப்பட்டு வருகிறது. அதன்படி எடப்பாடி தொகுதியில் 2009-2010ஆம் ஆண்டில் எடப்பாடி வட்டாரத்தில் தாதாபுரம், இருப்பாளி, செட்டிமாங்குறிச்சி, சித்தூர் பகுதிகளில் கண்வலிக்கிழங்கு 24.81 எக்டரில் சாகுபடி செய்த 160 விவசாயிகளுக்கு 50 சத மான்யமாக ரூ.17.06 இலட்சம் தோட்டக்கலைத் துறைமூலம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், எடப்பாடி தொகுதியிலுள்ள கொங்கணாபுரம் வட்டாரத்தில் தோரணம்பட்டி, சமுத்திரம், கோணசமுத்திரம், குரும்பப்பட்டி, கச்சிப்பள்ளி பகுதிகளில் கண்வலிக்கிழங்கு 12.71 எக்டர் பரப்பில் சாகுபடி செய்த 81 விவசாயிகளுக்கு 50 சத மான்யமாக ரூ. 8.73 இலட்சம் தோட்டக்கலைத் துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

எடப்பாடி தொகுதியிலுள்ள மகுடஞ்சாவடி வட்டாரத்தில் அ.புதூர், காளிகவுண்டம்பாளையம், அ.தாழையூர், கூடலூர், எடங்கணசாலை பகுதிகளில் கண்வலிக்கிழங்கு 9.20 எக்டர் பரப்பில் சாகுபடி செய்த 11 விவசாயிகளுக்கு 50 சத மான்யமாக ரூ. 6.68 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

[2011 ஜனவரி 13

எடப்பாடி தொகுதி புதுப்பாளையம் ஊராட்சி விவசாயிகள் மூலிகை பயிர் பயிரிட யாரும் முன்வரவில்லை. நடப்பு ஆண்டில் மூலிகை பயிர் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு உரிய மானியம் தோட்டக்கலைத் துறைமூலம் வழங்கப்படும்.

44—

விற்பனைக் கூடம்

வினா எண் 52607—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலமலைத் தொகுதி, வேலூரில் வெற்றிலைக்கான ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கபிலமலைத் தொகுதி, பரமத்திவேலூரில் வெற்றிலைக்கான ஒழுங்குமுறை விற்பனைக் கூட்டம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் ஏதும் தற்போது இல்லை.

45—

பழக்கன்று விற்பனை

வினா எண் 56080—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் அரசுப் பழப் பண்ணைகள் அமைத்து குறைந்த விலையில் பழக்கன்றுகளை விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் 1980 ஆம் ஆண்டு சாக்கோட்டை வட்டாரம், நேமத்தில் 96.93 ஏக்கர் பரப்பளவில் ஓர் அரசுத் தோட்டக்கலைப் பண்ணையும், 1985-ஆம் ஆண்டு தேவகோட்டை வட்டம், தேவகோட்டையில் 202 ஏக்கர் பரப்பளவில் ஓர் அரசுத் தோட்டக்கலைப் பண்ணையும் ஆக மொத்தம் இரண்டு பண்ணைகளும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட இரண்டு பண்ணைகளின் மூலம் ஆண்டுதோறும் 6,00,000 முதல் 7,00,000 எண்கள் வரை பழக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு சிவகங்கை மாவட்ட விவசாயிகளுக்கு அரசு நிர்ணயம் செய்த குறைந்த விலையிலும், அரசால் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் மூலமும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. சிவகங்கை மாவட்ட விவசாயிகள் தேவைக்குப் போக மீதமுள்ள செடிகள் பிற மாவட்ட விவசாயிகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் இம்மாவட்டத்தில் உள்ள இரண்டு பண்ணைகளின்மூலம் 90,000 எண்கள் மா ஒட்டுச் செடிகள், 35,000 எண்கள் கொய்யா பதியன்கள், 40,000 எண்கள் சப்போட்டா ஒட்டுச் செடிகள், 3,00,000 எண்கள் முந்திரி ஒட்டுச் செடிகள், 15,000 எண்கள் புளி ஒட்டுச் செடிகள், 50,000 எண்கள் நெல்லி ஒட்டுச் செடிகள் மற்றும் 90,000 எண்கள் கறிவேப்பிலை, மல்லிகை, பப்பாளி, எலுமிச்சை, இதர மரக்கன்றுகள், அழகுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மேற்கண்டபடி உற்பத்தி செய்யப்படும் பழக்கன்றுகளே சிவகங்கை மாவட்ட விவசாயிகளுக்கு போதுமானதாக உள்ளது. சிவகங்கை மாவட்ட விவசாயிகளுக்கு பழக்கன்றுகள் தேவை கூடுதலாக இல்லாததால் மேற்கொண்டு புதிய அரசு தோட்டக்கலைப் பண்ணை அமைக்க தற்போது தேவை எழவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தில் புதியதாக பழப் பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் செயற்குறிப்பில் இல்லை. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்கீழ் இயங்கி வரும் பழப்பண்ணையில் விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்படும் பழக் கன்றுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

[2011 ஜனவரி 13

46—

நெற்களம்

வினா எண் 70603—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் ஒன்றியம், அழகு சமுத்திரம் ஊராட்சி, மேலேரியில் நெற்களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், அழகுசமுத்திரம் ஊராட்சி, மேலேரியில் 2010-2011 ஆம் ஆண்டு திட்டத்தில் இடத்தேர்வு செய்யப்பட்டு முன் நுழைவு அனுமதி பெற்று உலர்களம் கட்டித் தரப்படும்.

47—

விவசாயிகளை ஊக்குவித்தல்

வினா எண் 115507—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் சாமந்தி துலுக்கமல்லி பூக்கள் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஆம். 2009-2010 ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்டத்தில் சாமந்தி/துலுக்கமல்லி 13 எக்டர் பரப்பில் சாகுபடி

2011 ஜனவரி 13]

செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி மலர்கள் சாகுபடிப் பரப்பினை அதிகரிக்க, சிவகங்கை மாவட்ட தோட்டக்கலைத் துறைமூலம் மானாமதுரை, திருப்புவனம், சிங்கம்புணரி, எஸ். புதூர் வட்டாரங்களில் களப் பணியாளர்கள் மூலம் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேசிய தோட்டக்கலை இயக்க திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, 2010-2011 ஆம் ஆண்டு துலுக்கமல்லி/சாமந்தி உதிரி மலர்கள் இனத்தில் சிறு/குறு விவசாயிகளுக்கு 50 சத மானியமாக எக்டருக்கு ரூ. 12,000/- வழங்கப்படவுள்ளது.

(ஆ) 2010-2011 ஆம் ஆண்டு தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் சாமந்தி/துலுக்கமல்லி மலர் சாகுபடிக்கு தற்போது பயனாளிகள் தேர்வு செய்யப்படவுள்ளனர். அந்தந்த வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களைத் தொடர்பு கொண்டு பயனடைய விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

48—

பூச்சிக்கொல்லி

வினா எண் 116968—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், கோபி பகுதியில் வெற்றிலைகளில் கள்ளிப்பூச்சி தாக்குதலைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டத்தில் வெற்றிலை சுமார் 60 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. வெற்றிலைப் பயிரில் கள்ளிப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த கீழ்க்காணும் தாவரப் பூச்சிக் கொல்லி மருந்தினைத் தெளித்து கட்டுப்படுத்துமாறு பரிந்துரை செய்யப்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

வேப்பெண்ணெய் 2 சதம் (அல்லது)
வேப்பங்கொட்டை பருப்புச் சாறு 5 சதம்

+

மீன் எண்ணெய் சோப்பு 25 கிராம்/லிட்டர் (அல்லது)
ஆசாடிராக்டின் 2 மிலி/லிட்டர்.

நடப்பு ஆண்டில் வெற்றிலையில் பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ள தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம்—உயர் தொழில்நுட்ப உயர் விளைச்சல் உற்பத்தி திறன் திட்டத்தின்கீழ் 50 எக்டர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு தாவரப் பூச்சிக்கொல்லி மருந்துகள் 50 சத மானிய விலையில் வெற்றிலை சாகுபடி பயனாளி விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

49—

பயிற்சி மையம்

வினா எண் 117329—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில் தென்னை வளர்ச்சி வாரிய கிளை மற்றும் பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் மண்டல அலுவலகம் சென்னையில் (கிண்டியில்) இயங்கி வருகிறது. திருப்பூர் மாவட்ட தென்னை விவசாயிகளுக்கு ஈரோட்டில் உள்ள விவசாயிகள் பயிற்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

தென்னை வளர்ச்சி வாரியத்தின் பயிற்சி மையம், அலுவா, கொச்சியில் உள்ளது. இங்கு தமிழகத்தைச் சேர்ந்த குழு தலைவர்களுக்கும் வேளாண்மை அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு, அவ்வேளாண்மை அலுவலர்கள் தமது மாவட்டத்தின் தென்னை விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கின்றனர். பிரத்தியோகமான தனி பயிற்சி ஏதும் தற்போது வழங்கப்படவில்லை. இப்பயிற்சி மையத்தில் இவ்வருடத்தில் தென்னை உபபொருட்கள் உற்பத்தி மற்றும் மதிப்புக் கூட்டும் பொருள் தயாரித்தல் போன்றவற்றில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. எனவே, திருப்பூர் மாவட்டம், காங்கேயத்தில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் கிளை மற்றும் பயிற்சி மையம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

50—

விதைகள் வழங்குதல்

வினா எண் 117338—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு, சென்னிமலை வட்டாரப் பகுதிகளில் விவசாயிகளுக்கு மானிய விலையில் தென்னை மரக்கன்றுகள் மற்றும் எண்ணெய்வித்து விதைகளை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2009-2010 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டம், சென்னிமலை வட்டாரத்தில் கீழ்க்கண்டவாறு தென்னங்கன்றுகள்

[2011 ஜனவரி 13

மற்றும் எண்ணெய்வித்து விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

வ. எண்	தென்னங்கன்று விபரம்	தென்னங்கன்று எண்ணிக்கை	மொத்த மானியம் (ரூ.)	பயனாளிகளின் எண்ணிக்கை
1	நெட்டை ரகம் (ஒரு கன்றுக்கு ரூ.7.50/-)	1,050	7875.00	8
2	நெட்டை X குட்டை (ஒரு கன்றுக்கு ரூ.12.50/-)	300	3750.00	3

வ. எண்	இடுபொருள்	அளவு (கிலோ)	விவசாயிகள் எண்ணிக்கை	வழங்கப்பட்ட மானியத் தொகை
1	நிலக்கடலை	14,099	86	208353.00
2	எள்	755	126	10624.00

மேலும், தமிழகத்தில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் (National Agriculture Development Programme) நெட்டை தென்னங்கன்று ஒன்று ரூ.7.50 வீதமும் நெட்டை X குட்டை தென்னங்கன்று ஒன்று ரூ.12.50/- வீதமும் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

51—

பெயர்ப் பலகை

வினா எண் 117677—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரிலுள்ள உழவர் சந்தைக்குப் பெயர்ப் பலகை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரிலுள்ள உழவர் சந்தைக்கு இரண்டு நுழைவாயில்கள் உள்ளன. அதில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு சூறாவளி காற்றுடன் பெய்த மழையினால் ஒரு நுழைவு வாயிலிலிருந்த பெயர்ப் பலகை சரிந்துவிட்டது. அது தற்போது சரி செய்யப்பட்டு, உழவர் சந்தையின் பெயர்ப் பலகை நிறுவப்பட்டுள்ளது.

52—

பலா மரங்களின் சாகுபடி

வினா எண் 118811—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் பலா மரங்கள் சாகுபடி செய்ய ஆலோசனை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உயர் இரக பழச்செடிகள் விவசாயிகளுக்கு 50% மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்கீழ் 50% மானிய விலையில் பலாக் கன்றுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், மானாமதுரை

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொகுதியில் பலா மரங்கள் சாகுபடி மிகவும் குறைவாகவே உள்ளன. பலா மரங்கள் சாகுபடி செய்வதற்குக் கீழ்க்கண்ட சீதோஷ்ண நிலை ஏற்றவையாக இருக்கும்.

தட்பவெப்ப நிலை	–	27–42° C
ஈரப்பதம்	–	65–80%
மண்ணின் கார அமில நிலை	–	5.5

தற்போது தோட்டக்கலை நிலங்களில் நடப்பட்டுள்ள பலா மரங்கள் இங்கு நிலவும் தட்பவெப்ப நிலையில், சரியான காய்ப்பு இல்லாததால், பலா சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை. ஒருசில விவசாயிகள் பலாக் கன்றுகள் நட்டு போதிய காய்ப்பு இல்லாமையால், வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே, அரசுத் திட்டங்கள்மூலம் பலா மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்க வாய்ப்புகள் இருந்தும் விவசாயிகளிடையே வரவேற்பு இல்லாததால் மானாமதுரை வட்டாரத்தில் தோட்டக்கலைத் துறைமூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில் இதுவரை பலா மரங்கள் பரப்பு விரிவாக்கம் செய்யப்படவில்லை.

எனவே, மேற்கூறியவாறு பலாமரம் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் 50% மானிய விலையில் உயர் இரக ஒட்டுக் கன்றுகள் பெற்றுப் பயன் பெறலாம்.

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

53—

கடனுதவி

வினா எண் 119831—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பூவந்தியில் தென்னை விவசாயிகளை ஊக்குவித்து கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைத் துறை, தென்னை வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன் பல்வேறு தென்னை வளர்ச்சி திட்டங்களைத் தமிழகத்தில் செயல்படுத்தி வருகிறது. மேலும், தென்னை விவசாயிகளுக்கு வேளாண் துறைமூலம் பல்வேறு திட்டங்களின்கீழ் மானியம் வழங்கப்படுவதால் கடனுதவி நேரடியாக வழங்கப்படுவதில்லை. எனினும், விவசாயிகள் வேளாண்மைக் கூட்டுறவு வங்கி / தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் நேரடியாக அணுகி கடனுதவி பெற்று வருகின்றனர்.

54—

பழப் பயிர் உற்பத்தி

வினா எண் **121428**—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் மாம்பழம், திராட்சை மற்றும் ஆப்பிள் பயிரிடவும் உற்பத்தியைப் பெருக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மானாமதுரை வட்டத்தில் மானாமதுரை மற்றும் திருப்புவனம் வட்டாரங்கள் உள்ளன. தோட்டக்கலைத் துறை மூலம், தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தேசிய மூலிகைப் பயிர் சாகுபடி இயக்கம் ஆகிய திட்டங்களின்கீழ், தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடிக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மானாமதுரை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

வட்டாரத்தில் கீழ்க்கண்ட பழப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

வ. எண்	பயிர்	பரப்பு (ஹெக்டேரில்)
1	மா	125
2	முந்திரி	307
3	நெல்லி	53
4	வாழை	161
5	சப்போட்டா	17
6	கொய்யா	28

ஒவ்வொரு பயிரின் வளர்ச்சியும் அப்பகுதியில் நிலவும் சீதோஷ்ணநிலை மற்றும் மண்வளத்தைச் சார்ந்தது. மானாமதுரை வட்டாரத்தில், கீழ்க்கண்டவாறு சீதோஷ்ணநிலை நிலவுகிறது. இது மாம் பழப் பயிர் வளர்வதற்கு மிகவும் உகந்ததாக உள்ளது.

ஆண்டு சராசரி மழையளவு	–	800–810 மி.மீ
காற்றிலுள்ள ஈரப்பதம்	–	50–70%
சராசரி வெப்பநிலை	–	30–39 C

எனவே, தேசிய தோட்டக்கலை இயக்கம் மற்றும் நீர்வள நிலவளத் திட்டம் ஆகிய திட்டங்களின்மூலம் அதிக அளவு மாம் பரப்பு விரிவாக்கம் செய்யப்படுகிறது. தோட்டக்கலைத் துறைமூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு அரசு திட்டங்கள்மூலம் பரப்பு விரிவாக்கம் செய்யப்பட்டதில் 200 ஹெக்டேர் மா தற்போது காய்ப்பு நிலையில் உள்ளது. மேலும் 2007 முதல் 2010ம் ஆண்டு வரை பல்வேறு திட்டங்களின் மூலம் புதிய பரப்பு விரிவாக்கம் விவரம் கீழ்வருமாறு:—

2011 ஜனவரி 13]

1 தேசிய தோட்டக்கலை இயக்கம்	
2007–08	15 ஹெக்டேர்
2008–09	38 ஹெக்டேர்
2009–10	45 ஹெக்டேர்
2 நீர்வள நிலவளத் திட்டம்	
2008–09	10 ஹெக்டேர்

தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டு 2010-2011க்கு மாம் பயிர் பரப்பு 10 ஹெக்டேர் சாதாரண நடவுமுறை மூலமாகவும், அடர்நடவுமூலம் 7 ஹெக்டேரும் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்து தயார் நிலையில் உள்ளனர்.

ஆப்பிள் மற்றும் திராட்சை சாகுபடிக்கு, கீழ்க்கண்ட தட்பவெப்ப நிலை இருந்தால் மட்டுமே பயிர் வளர்ச்சியடைந்து முழுமையான மகசூல் கிடைக்கும்.

பயிர்	வெப்பநிலை	காற்றின் ஈரப்பதம்	மண்ணின் கார அமிலநிலை
ஆப்பிள்	7 C	85–90%	5.8–6.2
திராட்சை	28–32C	50–80%	6.5–7.0

மேற்கண்ட தட்பவெப்பநிலை மானாமதுரை வட்டாரத்தில் நிலவாத காரணத்தினால், ஆப்பிள் மற்றும் திராட்சை சாகுபடி செய்ய இயலாது.

55—

உழவர் சந்தை

வினா எண் 121674—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உழவர் சந்தையில் கூடுதலான கடைகளை ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் 63,906 (2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு 729.24 ஹெக்டேர் (பசலி 1418) பரப்பில் 30 கிராமங்களில் காய்கறி சாகுபடி செய்யப்படுகிறது. சீனி அவரை, தக்காளி, புடலை, முருங்கை, பீன்ஸ் மற்றும் கருணைக் கிழங்கு போன்ற 14 வகையான காய்கறிகளின் மொத்த உற்பத்தி 25,214 மெ.டன் ஆகும். காய்கறிகள் உசிலம்பட்டி உழவர் சந்தை, உசிலம்பட்டி நகராட்சி சந்தை மற்றும் தேனி, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், நிலக்கோட்டை, மதுரை மைய காய்கறி அங்காடிகள் ஆகிய இடங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

உசிலம்பட்டி உழவர் சந்தையில் 72 கடைகள் கட்டப்பட்டு, 13 கடைகள் மட்டுமே விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. காய்கறி வரத்து உழவர் சந்தைக்குக் குறைவாகவே வருகின்ற காரணத்தால் மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது உசிலம்பட்டி உழவர் சந்தையில் கூடுதல் கடைகள் ஏதும் தேவைப்படாத நிலை உள்ளது.

56—

பாக்குமரக் கன்றுகள்

வினா எண் 123123—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாக்குமரக் கன்றுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில், உயர் தொழில்நுட்ப உயர் விளைச்சல் திட்டத்தின்கீழ் 50 சதவீதம் மானியம்

2011 ஜனவரி 13]

தோட்டப் பயிர்கள் பரப்பு அதிகரிப்பதற்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், அயோத்தியாப்பட்டினம், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம் மற்றும் வாழப்பாடி வட்டாரப் பகுதிகளில் 40 எக்டர் பரப்பிற்கு பாக்குச் செடிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் 2010-2011 ஆம் ஆண்டில் உயர் தொழில்நுட்ப உயர் விளைச்சல் திட்டத்தின்கீழ் பாக்குச் செடிகள் உள்ளிட்ட தோட்டப் பயிர்கள் பரப்பு அதிகரிப்பிற்கு ரூ. 132.00 இலட்சம் ஒதுக்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

57—

பதப்படுத்தும் நிலையம்

வினா எண் 125894—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூரில் வாழைப்பழங்களைக் குளிரூட்டவும், பதப்படுத்தவும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2010-2011-ன் கீழ் ரூ. 50.00 இலட்சம் மதிப்பீட்டில் வாழை பழுக்க வைக்கும் நிலையம் மோகனூரில் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

58—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 126924—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒருங்கிணைந்த விதை விற்பனை மையத்தை மேம்படுத்தவும் சேமிப்புக் கிடங்கை நவீனப்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு தொகுதி திருக்கழுக்குன்றத்தில் விதைக் கிராமத் திட்டத்தின்கீழ் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய விதைக் கிடங்கு கட்டப்பட்டு வருகிறது. ஆகவே, ஒருங்கிணைந்த விதை மையத்தை மேம்படுத்தவும், சேமிப்புக் கிடங்கை நவீனப்படுத்தவும் வேண்டிய அவசியம் எழவில்லை.

59—

கிளைச் சிறைச்சாலை

வினா எண் 119307—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை வட்டாட்சியர் அலுவலகத்தில் கிளைச் சிறைச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரைக்கு அருகில் பரமக்குடி மற்றும் முதுகுளத்தூர் ஆகிய இடங்களில் கிளைச் சிறைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் அங்கீகரிக்கப்பட்ட அடைப்பு முறையே 18 மற்றும் 21 ஆகும். இக்கிளைச் சிறைகளில்

2011 ஜனவரி 13]

தற்போது முறையே 18 மற்றும் 21 சிறைவாசிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இவற்றில் பரமக்குடி கிளைச் சிறை பெண் சிறைவாசிகள் மட்டும் அனுமதிக்கப்படும் கிளைச் சிறையாகும். மேலும், சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் மாவட்ட தலைநகரான இராமநாதபுரம் கிளைச் சிறையை மாவட்ட சிறையாக மாற்றுவதற்கு ரூ.178.16 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு வழங்கப்பெற்று, கட்டுமானப் பணிகள் நிறைவு பெறும் தறுவாயில் உள்ளது. இச்சிறையில் 200 சிறைவாசிகளை அனுமதிக்க இயலும். மேற்கண்ட சிறைகளில் அதன் அங்கீகரிக்கப்பட்ட அடைப்பு எண்ணிக்கைக்கும் கூடுதலாக சிறைவாசிகள் அனுமதிக்கப்பட வேண்டிய நிலை இல்லாததாலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு மாவட்ட சிறை அமைக்கப்பட்டுள்ள காரணத்தாலும் மானாமதுரையில் புதியதாக ஒரு கிளைச் சிறைச்சாலை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

60—

கிளைச் சிறைச்சாலை

வினா எண் 122161—திரு. டி. ராமச்சந்திரன்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் கிளைச் சிறைச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேன்கனிக்கோட்டைக்கு அருகில் சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் ஓசூர் கிளைச் சிறை உள்ளது. இக்கிளைச் சிறையின் அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 44 ஆகும். இங்கு தற்போது 10 சிறைவாசிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர். தேன்கனிக்கோட்டையைச்

சார்ந்த விசாரணை சிறைவாசிகள் ஓசூர் கிளைச் சிறையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். தண்டனை சிறைவாசிகள் அனைவரும் சேலம் மத்திய சிறையில் அனுமதிக்கப்படுவதால், தேனிகனிக்கோட்டையில் புதிதாக ஒரு கிளைச் சிறை அமைக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை.

61—

பேருந்து வசதி

வினா எண் 127189—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம் கீழப்பெரம்பலூர் கிராமத்திற்கு அரியலூரிலிருந்து கோவில்பாளையம், துங்கபுரம் வழியாகப் புறநகர் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூரிலிருந்து கோவில்பாளையம், துங்கபுரம் வயலப்பாடி, கீழப்பெரம்பலூர் வழியாக அகரம்சீகூர் வரை ஒரு நகரப் பேருந்தின் மூலமாக நான்கு நடைகள் இயக்கப்படுகின்றன. பெரம்பலூரில் இருந்து வயலப்பாடி, கீழப்பெரம்பலூர் வழியாக அகரம்சீகூருக்கு இரண்டு புறநகர் பேருந்துகள் மூலமாக நான்கு நடைகள் இயக்கப்படுகின்றன. அரியலூரிலிருந்து கோவில்பாளையம், துங்கபுரம், வயலப்பாடி வழியாக அகரம்சீகூர் மற்றும் திட்டக்குடிக்கு 56 நடைகள் இயக்கப்பட்டு கீழப்பெரம்பலூர் கிராமம் நேரடியாகவும், பகுதி பகுதியாகவும் பேருந்து வசதி பெற்றுள்ளது.

62—

பேருந்து வசதி

வினா எண் 127193—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) எடப்பாடி—ஈரோடு, பொள்ளாச்சி வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி—ஈரோடு எனவும், ஈரோடு பொள்ளாச்சி எனவும் பகுதி வாரியாக பேருந்து வசதி பெற்றுள்ளது. எடப்பாடி—ஈரோடு வழித்தடம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம் மூலம் 2 புறநகர்ப் பேருந்து தினசரி 12 நடைகளும், ஒன்பது தனியார் புறநகர்ப் பேருந்துகள் மூலம் தினசரி 52 நடைகளும் தற்போது பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஈரோடு—பொள்ளாச்சி வழித்தடத்தில் ஒவ்வொரு 30 நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே இப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவையை நிறைவு செய்யும் வகையில் உள்ளது.

63—

இலவச சிகிச்சை

வினா எண் 117712—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாண்புமிகு முதல்வர் கலைஞர் காப்பீட்டு திட்டத்தில் பக்கவாதம், கண்புரை, போன்ற நோய்களுக்கு சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 51 வகையான உயிர் காக்கும் உயர் சிகிச்சைகளுக்கு முதல்வர் கலைஞரின் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

சிகிச்சை அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதில் பக்கவாதம், கண்புரை போன்ற நோய்கள் இடம்பெறவில்லை. இந்நோய்களை இத்திட்டத்தின் கீழ் சேர்ப்பதற்கான கருத்துருக்கள் எதுவும் தற்போது பரிசிலனையில் இல்லை. இந்நோய்களுக்கு அரசு மருத்துவமனைகளில் இலவசமாக சிகிச்சை பெறலாம்.

64—

ஊட்டச்சத்து உணவு திட்டம்

வினா எண் 122698—திரு. சி. கோவிந்தசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்ட தலைமை மருத்துவமனையில் ஊட்டச்சத்து உணவு திட்டம் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் அரசுத் தலைமை மருத்துவமனை உட்பட அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் அரசாணையின்படி உள்நோயாளிகளுக்கு நோயாளிகளின் நோயின் தன்மைக்கேற்ப சத்தான உணவு வழங்கப்பட்டு வருகிறது.

65—

உறைவிந்து மையம்

வினா எண் 90820—திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதியில், காங்கேயம் காளைகளை இனப்பெருக்கம் செய்ய உறைவிந்து மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் உள்ள ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில், காங்கேயம் இனத்தின் உறைவிந்து உற்பத்தி செய்யப்பட்டு, கோயம்புத்தூர், திண்டுக்கல், கரூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களுக்கு, புதிய இனவிருத்தி கொள்கையின்படி விநியோகம் செய்யப்படுகிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில், ஏற்கெனவே உள்ள உறைவிந்து மையம் மூலம் மாவட்டத்தில் உள்ள கால்நடை நிலையங்களுக்கு தேவைக்கேற்ப, காங்கேயம் இன உறைவிந்து குச்சிகள் விநியோகிக்கப்பட்டு, செயற்கைமுறை கருவூட்டல் செய்வதன்மூலம் இனப்பெருக்கம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, பல்லடம் தொகுதியில் காங்கேயம் காளைகளை இனப்பெருக்கம் செய்ய உறைவிந்து மையம் அமைக்க, அரசிடம் திட்டம் எதுவும் தற்போதைய நிலையில் பரிசீலனையில் இல்லை.

66—

பண்ணைகள்

வினா எண் **119909—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் வெள்ளைப் பன்றி மற்றும் கோழிப் பண்ணைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் வெள்ளைப் பன்றிப் பண்ணை மற்றும் கோழிப் பண்ணைகள் அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது ஏதுமில்லை. தனியார் மேற்படி பண்ணைகள் அமைக்க முன்வரும் பட்சத்தில் அமைக்கலாம்.

(ஆ) கேள்வி எழாது.

[2011 ஜனவரி 13

67—

கால்நடை துணை நிலையம்

வினா எண் 122304—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, சங்கரப்பநாயக்கனூர் ஊராட்சி, மேலப்பெருமாள்பட்டிக்கு கால்நடை துணை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தற்போது, 2010-2011 ஆம் ஆண்டில் 100 புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிப்பதில் உசிலம்பட்டி தொகுதி, மேலப்பெருமாள்பட்டி கிராமம் தேர்வு செய்யப்பட்டு அரசின் பரிசிலனையில் உள்ளது.

68—

பட்டு நூல் விற்பனை நிலையம்

வினா எண் 123684—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் பட்டு நூல் விற்பனை நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பட்டு நூற்பாளர்களும் பயன்பெறும் வகையில் அண்ணா

2011 ஜனவரி 13]

பட்டு பரிமாற்றகம் காஞ்சிபுரம் சிறுகாவேரிபாக்கத்தில் செயல்பட்டு வருகிறது.

பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் ஊடை, பாவு ரகங்கள் விற்பனை செய்ய டான்சில்க் நிறுவனம்—522, காந்தி ரோடு, காஞ்சிபுரம் என்ற விலாசத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த இரு நிறுவனங்களும் முறையே கச்சா மற்றும் முறுக்கேற்றிய பட்டு நூல்களை தேவையுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு முழு அளவில் வழங்கி வருகின்றன. எனவே, புதிதாகப் பட்டு நூல் விற்பனை மையம் துவங்கும் அவசியம் எழவில்லை.

69—

பொது மக்கள் ஒய்வறை

வினா எண் 63712—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டாட்சியர் அலுவலகத்தில் பொது மக்கள் ஓய்வறை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டாட்சியர் அலுவலகத்தில் பொது மக்கள் பயன்படுத்த ஓய்வறை கட்ட தற்போது திட்டம் ஏதுமில்லை.

70—

விடு கட்டுதல்

வினா எண் 73464—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், கன்னிராஜபுரம் ஊராட்சி, ரோஸ்மா நகரில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், கன்னிராஜபுரம் ஊராட்சி ரோஸ்மா நகரில் இராஜீவ் காந்தி மறுகட்டமைப்பு திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள 55 வீடுகளில், 36 வீடுகள் 19-3-2010-லும், 17 வீடுகள் 31-3-2010-லும் ஒப்படைக்கப்பட்டு விட்டதாகவும் மீதமுள்ள 2 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு கடலாடி வட்டம், ரோஸ்மா நகரைச் சேர்ந்த திரு. குணசேகரன் மற்றும் திரு. ஜெயபாலன் என்பவர்களிடம் மாவட்ட செயலாக்க அலகு (சுனாமி) திட்ட ஒருங்கிணைப்பாளரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

71—

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்

வினா எண் 96838—திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் மாநகராட்சியில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

வேலூர் மாநகராட்சியில் 48 வார்டுகளில் 46 வார்டுகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வரப்பெற்று வழங்கி முடிக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள இரண்டு வார்டுகளில் ஒரு வார்டிற்கு (47) மட்டும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வரப்பெற்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மற்றொரு வார்டிற்கு (32) எல்காட் நிறுவனத்திடமிருந்து

2011 ஜனவரி 13]

வரப்பெற்றவுடன் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

72—

துணி வழங்குதல்

வினா எண் 117288—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வழங்கும் இலவச வேட்டி—சேலையுடன் கைத்தறித் துண்டு மற்றும் ரவிக்கைத் துணி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வழங்கும் இலவச வேட்டி—சேலையுடன் கைத்தறித் துண்டு மற்றும் கைத்தறி ரவிக்கைத் துணி வழங்கும் திட்டம் குறித்து தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

73—

பதிவு செய்தல்

வினா எண் 124829—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நில அளவை செய்ய உரியவர் பணம் செலுத்தும் வரிசைப்படி அளவை செய்து கணினியில் பதிவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

நில அளவை செய்யக் கோரி பெறப்படும் மனுக்களின் தேதியின் அடிப்படையில் வரிசைக்கிரமமாகப் பதிந்து அளவை செய்து முடிக்க

[2011 ஜனவரி 13

ஏற்கெனவே அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

74—

முத்திரைத் தாள்

வினா எண் 70437—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் அனைத்து முத்திரைத் தாள்களின் பற்றாக்குறையை உடனே போக்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ்ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

முத்திரைத்தாள் விற்பனையாளர்கள், முத்திரைத்தாள் கையிருப்பில் வைத்துக்கொள்ள உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் சாதாரண தாளில் ஆவணம் எழுதி, முத்திரைத் தீர்வையை எவ்வித உச்சவரம்பின்றி சார்பதிவாளரிடம் ரூ. 1000/-க்குள் இருப்பின், பணமாகவோ/கேட்பு வரைவு காசோலையாகவோ, ரூ. 1000/-க்கு மேற்படின் வரைவோலையாகவும் செலுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது ஈ-ஸ்டாம்பிங் (மின்னணுவழி) முறையில் முத்திரைத் தீர்வையை செலுத்திட 9 சார்பதிவாளர் அலுவலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறை படிப்படியாக மாநிலம் முழுவதும் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. முத்திரைத்தாள்கள் இன்றி முத்திரைத் தீர்வை செலுத்தும் மாற்று வழிமுறைகளும் பயன்படுத்தும்படி பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு வருகிறது. தற்போது தமிழகத்தில் முத்திரைத்தாள் பற்றாக்குறை என்ற புகார் எதுவும் பெறப்படவில்லை.

75—

முத்திரைத் தாள்

வினா எண் 117564—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) தமிழகத்தில் முத்திரைத்தாள் விற்பனையாளர் முகவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ்ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தில் முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

76—

கட்டடம்

வினா என் 88233—திரு. எஸ். இராசசேகரன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, நெடுவாசல், கறம்பக்குடி, ரெகுநாதபுரம், காட்டாத்தி ஆகிய இடங்களில் தமிழக நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நிரந்தர கொள்முதல் நிலைய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, நெடுவாசல், கறம்பக்குடி, ரெகுநாதபுரம், காட்டாத்தி ஆகிய இடங்களில் நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்ட தேவைப்படும் நிலம் [சுமார் 331/3 சென்ட் (100 குழி)], இனாம் சாசனமாக வாணிபக் கழகத்திற்கு இன்னும் கிடைக்கப் பெறவில்லை. எனவே இலவசமாக இடம் கிடைக்கப் பெறும் பட்சத்தில் அங்கு அரசு நிதி ஒதுக்கீடு பெற்று இப்பகுதிகளில் நிரந்தர கொள்முதல் நிலையம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2011 ஜனவரி 13

77—

மண்ணெண்ணெய்

வினா எண் 118501—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை எஸ்டேட் குடியிருப்பு பகுதியில் இரண்டு சிலிண்டர் இருந்தாலும் 3 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

மத்திய அரசு இரண்டு எரிவாயு இணைப்பு வைத்திருப்பவர்களுக்கு வழங்குவதற்காக பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்வதில்லை. எனவே, தமிழ்நாட்டில் இரண்டு எரிவாயு இணைப்பு பெற்றுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் வழங்கப்படுவதில்லை. ஆகவே, வால்பாறையில் 2 எரிவாயு இணைப்பு வைத்திருப்பவர்களுக்கு பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் வழங்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

78—

ஆரம்பப் பள்ளி

வினா எண் 117728—டாக்டர். க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பென்னாகரம் தொகுதி, சின்னம்பள்ளி ஊராட்சி, கரியங்காட்டு வலசு கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

பென்னாகரம் தொகுதி, சின்னம்பள்ளி ஊராட்சி, கரியங்காட்டு வலசு கிராமத்தில் புதிய ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

பள்ளி தொடங்குவதற்கான நிபந்தனைகளில் ஒன்றான பள்ளி மாணவ/மாணவியருக்குப் போதுமான இடவசதி, கட்டட வசதி, விளையாட்டிட வசதி, தளவாடச் சாமான்கள் வசதி போன்றவற்றை சமுதாயப் பங்காக ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற நிபந்தனையைப் பூர்த்தி செய்யாததால் இக்கிராமத்தில் புதிய ஆரம்பப் பள்ளி தொடங்குவதற்குத் தற்போதைக்கு வாய்ப்பு இல்லை.

79—

வகுப்பறைகள்

வினா எண் 121624—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, எல்.என். புரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டத்தின் மூலம் வகுப்பறைகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, எல்.என்.புரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டத்தின் மூலம் பகுதி X(B)-ல் 18 வகுப்பறைகள், 2 கழிவறைகள், 750 மீட்டர் சுற்றுச்சுவர் போன்ற அடிப்படை வசதிகள் அமைக்க ரூ.115.56 இலட்சம் செலவினம் அனுமதித்து அரசாணை (நிலை) எண் 276, பள்ளிக் கல்வித் (எக்ஸ்.1) துறை, நாள்: 21-9-2010-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறையால் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

80—

வரி விலக்கு

வினா எண் 123828—திரு. கே.எஸ்.கே. இராஜேந்திரன்: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மிளகுப் பொடி, சீரகப் பொடிக்கு வரி விலக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

2010-2011-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட அறிவிப்பிற்கிணங்க, அரசாணை (நிலை) எண் 33, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 29-3-2010-ல் மிளகுப் பொடி மற்றும் சீரகப் பொடி ஆகியவற்றுக்கு 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் வரி விலக்கு அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

81—

மாசுபடுதல்

வினா எண் 8042—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், வாய்பாடி ஊராட்சி, தோட்டத்துபுதூர், பாப்பாங்காடு, வயக்காரன்காடு, தொரட்டிக்காடு, வயக்காடு, புளிகாடு, துண்டுகாடு போன்ற பகுதிகளின் கிணறு, குளம், குட்டைகளை, பெருந்துறை சிப்காட்டின் மாசு நீரினால் மாசுபடுவதை நிரந்தரமாகத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் தொழில் வளாகத்தில் தற்பொழுது 49 சாயத் தொழிற்சாலைகளும், ஒரு துணி அலசும் (Washing Unit) *தொழிற்சாலையும் இயங்கி வருகின்றன.*

தற்போது இயங்கி வரும் தொழிற்சாலைகளில் 36 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் தனிக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், எதிர்மறை சவ்வூடு பரவல் மற்றும் அடர் கசடு மேலாண்மை திட்டம் ஆகியவற்றை நிறுவி பூஜ்ய கழிவு நீர் வெளியேற்றும்

2011 ஜனவரி 13]

முறையை (Zero Liquid Discharge System) மேற்கொண்டுள்ளன. மீதமுள்ள 13 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளும் மற்றும் ஒரு துணி அலசும் தொழிற்சாலையும் ஒன்று சேர்ந்து திருவாளர்கள் பெருந்துறை பொதுக் கழிவு சுத்திகரிப்பு நிலையம் (M/s. Perundurai Common Effluent Treatment Plant) என்ற பெயரில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை நிறுவி இயக்கி வருகின்றன. இப்பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வரும் கழிவுநீர் தொழிற்சாலையிலேயே இரண்டு விதமாக சாயக் கழிவுநீர் (Dye Bath Effluent) மற்றும் துணி அலசும் கழிவுநீர் (Wash Water Effluent) எனப் பிரிக்கப்பட்டு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அடைகிறது.

இதனிடையே ஈரோடு மாவட்டத்திலுள்ள தோல் மற்றும் சாயச் சாலைகள் குறித்த வழக்குகளில் (வழக்கு எண் 5494/98 மற்றும் 30153/2003 மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் 04-07-07 மற்றும் 09-08-2007 அன்று வழங்கியுள்ள தீர்ப்பில் மேற்கண்ட தொழிற்சாலைகளை ஆறு வகைகளாகப் பிரித்து அவற்றின் பேரில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை விவரத்தினை குறிப்பிட்டுள்ளது.

இத்தீர்ப்பினை நடைமுறைப்படுத்த தடை வழங்க கோரி தி/ள் பெருந்துறை பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு (Special Leave petition (C) No. 16278-16279/2007) தொடர்ந்துள்ளது. இவ்வழக்கு நிலுவையில் உள்ளது.

தங்களது உற்பத்தியை சரிபாதியாக குறைத்து கழிவுநீரின் மொத்த உற்பத்தியானது துணி அலசும் கழிவுநீர் 1800 கிலி மற்றும் அடர் சாயக் கழிவுநீரை 200 கிலோ லிட்டருக்கு மிகாமல் இருக்குமாறும் மற்றும் எவ்வித கழிவுநீரும் விவசாய நிலத்தில் வெளியேற்றாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் உட்பட பல நிபந்தனைகளுக்குட்பட்டு இயங்க 28-01-2008 அன்று நீர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை குறிப்பாணை மூலம் இப்பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் மற்றும் அதன் உறுப்பினர் தொழிற்சாலைகளும் பணிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை எண் 11557/08-ன் கீழ் 28-1-2008 தேதியிட்ட, மேற்சொன்ன வாரிய நடவடிக்கைகளுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தது. இவ்வழக்கில்

[2011 ஜனவரி 13

மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் 11-11-2008 அன்று வழங்கிய தீர்ப்பில் "பொதுக் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையமும் அதன் உறுப்பினர் தொழிற்சாலைகளும் தற்பொழுது அனுமதித்துள்ள கழிவுநீர் அளவு போக, மீதமுள்ள கழிவுநீரின் அளவிற்கும் எதிர்மறை சவ்வூடு பரவல் அமைப்பு மற்றும் அடர் கசடு மேலாண்மை அமைப்பு நிறுவியிருப்பதாகக் கருதினால் அதுகுறித்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு மனு அளிக்க வேண்டும். அம்மனுவினை பெறும்பட்சத்தில், வாரியம் நான்கு வாரத்திற்குள், அம்மனுவின் பேரில் உரிய உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும்" என்று ஆணையிட்டுள்ளது.

மேற்கண்ட ஆணையில் கூறியவாறு, பொது சுத்திகரிப்பு நிலையம், மீதமுள்ள 50 சதவீத உற்பத்தி செய்வதற்கு வாரியத்தின் அனுமதி கோரி, விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கவில்லை. பொதுகழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்தின் உறுப்பினர் தொழிற்சாலைகள் இன்றைய தேதியில் வாரியம் 28-01-2008 அன்று அனுமதி வழங்கிய 50 சதவீத உற்பத்தி நிலையில் இயங்கி வருகின்றன. பொது சுத்திகரிப்பு நிலையம் பகுதி சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தன்னுடைய விவசாய நிலத்தில் வெளியேற்றியது அறியப்பட்டதாலும், திடக்கழிவுகள் பாதுகாப்பற்ற முறையில் சேமித்து வைக்கப்பட்டதாலும், 16-03-2009 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இப்பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு முகாந்திரக் கடிதம் அனுப்பி தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

82—

நிலத்தடி நீர்

வினா எண் 25008—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பசியாபுரத்தில் குடிநீரும், நிலத்தடி நீரும் பாதிக்கப்படுவதைத் தடுக்க பாண்டியன் சிலிக்கேட்ஸ் கம்பெனி போன்ற இரசாயன நிறுவனங்களைத் தடை செய்ய அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் பசியாபுரத்தில் கீழ்க்கண்ட 4 தொழிற்சாலைகள் மட்டுமே செயல்பட்டு வந்தன:

1. தி/ள். பாண்டியன் சிலிகேட் இரசாயன தொழிற்சாலை 1995-ம் வருடம் முதல் நிறுத்தப்பட்டு விட்டது.

2. தி/ள். குட்டுவா சிலிகேட் நிறுவனம் கொதிகலனிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சூரிய ஒளி மூலம் ஆவியாக்கும் தொட்டியில் ஆவியாக்கப்படுவதால், நிலத்தடி நீர் பாதிப்படைய வாய்ப்பில்லை.

3. தி/ள். ஸ்ரீநிவாஸ் கெமிக்கல்ஸ் தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்காததால் 01-12-2007 அன்று மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு அதன் பிறகு முறையாக சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டதால் மீண்டும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

4. தி/ள். ரேஸ்மி அகர் என்ற தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து இயங்கி வருகிறது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் வாரிய தர அளவுக்கு உட்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தொழிற்சாலைக்குச் சொந்தமான நிலத்தில் விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

இவற்றைத் தவிர பசியாபுரத்தில் வேறு வர்த்தகக் கழிவுநீர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இல்லை.

83—

கிளை அலுவலகம்

வினா எண் 39743—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் சுற்றுச்சூழல் துறையின் சார்பாகக் கிளை அலுவலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் குறைந்த அளவே தொழிற்சாலைகள் உள்ளதாலும், எதிர்பார்க்கப்பட்ட போதுமான அளவு வேலைப் பளு/இசைவாணை கட்டண வருவாய் அதிகரிக்க வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் மானாமதுரையில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் கிளை அலுவலகம் ஒன்றினை அமைக்கும் அவசியம் தற்போது இல்லை என கருதப்படுகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மதுரை இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தில் உள்ள ஒரு உதவிச் சுற்றுச்சூழல் பொறியாளர் தற்போது சிவகங்கை மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளின் செயல்பாடுகளைக் கண்காணித்து வருகிறார்.

84—

கழிவுகளை தடுத்தல்

வினா எண் 43791—திரு. மா. அன்பழகன்: *மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, புஷ்பத்தூர் ஊராட்சி, சாமிநாதபுரம் பகுதி தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வெள்ளை நிறக் கழிவுகளைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், புஷ்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாமிநாதபுரம் கிராமத்தில் 9 பெரிய மற்றும்

2011 ஜனவரி 13]

நடுத்தர காகிதத் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. இவை அனைத்தும் கழிவுக் காகிதத்தில் இருந்து புதிய காகிதம் மற்றும் அட்டை தயாரிக்கும் வகையைச் சார்ந்தவை. இந்த தொழிற்சாலைகளில் இருந்து உருவாகும் தொழிற்சாலைக் கழிவு நீரானது தொழிற்சாலைகளின் வளாகத்தில் அமைந்துள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீர் தொழிற்சாலைகளுக்குச் சொந்தமான நிலத்தில் விவசாயத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இதனை மாசுக் கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது. இவ்வாறு தொழிற் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்படும்போது வெள்ளைநிறத் திடக்கழிவு (ETP Sludge) உருவாகிறது. இது அபாயகரமான அல்லது நச்சுத்தன்மை வாய்ந்த திடக்கழிவு வகையைச் சார்ந்தது அல்ல. காகித தொழிற்சாலைகளின் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து உருவாகும் வெள்ளை நிற திடக்கழிவு சிறிய அட்டை தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருளாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுரையின்படி எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது. இதனால் இவை ஆங்காங்கே கொட்டப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

85—

சுகாதாரம்

வினா எண் 44019—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், புலியூர் பகுதி மில்களின் கழிவுகளால் சுகாதாரக் கேடுகள் ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டம், திருப்புவனம் ஒன்றியம், புலியூர், சாயனாபுரம், பொட்டபாளையம் பகுதிகளில் இயங்கும்

[2011 ஜனவரி 13

தமிழ்நாடு குளோரைடு கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸில் இருந்து வெளியேற்றப்படும் தொழிற்கழிவு நீர், கழிவு நீர் தொட்டிகளில் சேகரிக்கப்பட்டு சூரிய ஆவியாக்குதல் மூலம் ஆவியாக்கப்படுகின்றன. என்.எஸ். பெருங்காயம் கம்பெனியிலிருந்து எவ்வித தொழிற்கழிவு நீரும் உற்பத்தி செய்யப்படுவதில்லை.

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், புலியூர் பகுதியில் அமைந்துள்ள 7 சாயப் பட்டறைகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது, அவை கீழ் வருமாறு:—

1. திருவாளர்கள் ஜே.கே.டி. பிளீச்சர்ஸ், நெடுங்குளம் விளக்கு, பொட்டபாளையம், மானாமதுரை தாலுகா, சிவகங்கை மாவட்டம்.

2. வி.வி. டெக்ஸ்டைல்ஸ் பிராசஸ், புலியூர், நெடுங்குளம் மெயின் ரோடு, மானாமதுரை தாலுகா, சிவகங்கை மாவட்டம்.

3. ரோஜா பிளீச்சர்ஸ், பொட்டப்பாளையம், மானாமதுரை தாலுகா, சிவகங்கை மாவட்டம்.

4. கணபதி பிளீச்சர்ஸ், பொட்டப்பாளையம், மானாமதுரை தாலுகா, சிவகங்கை மாவட்டம்.

5. டி.டி.பிளீச்சிங் அண்டு டையிங், புலியூர், நெடுங்குளம் மெயின் ரோடு, மானாமதுரை தாலுகா, சிவகங்கை மாவட்டம்.

6. இராஜலெட்சுமி பிளீச்சிங் அண்டு டையிங், புலியூர், மானாமதுரை தாலுகா, சிவகங்கை மாவட்டம்.

7. கணேசன் ப்ளீச்சர்ஸ், சிலைமான், மானாமதுரை தாலுகா, சிவகங்கை மாவட்டம்.

மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட தொழிற்சாலையான திருவாளர்கள் டி.டி.பிளிச்சிங் அண்டு டையிங், மானாமதுரை, டி.மு.கோர்ட் ஓ.எஸ். நம்.84/2008-ல் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நடைபெற்றுக்கொண்டிருப்பதால் மீண்டும் மின் இணைப்பு அளிக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. திருவாளர்கள் ரோஜா பிளீச்சர்ஸ் தொழிற்சாலையானது உயர் நீதிமன்றம் மதுரை பலகையில் டபுள்யு.பி.எண்.6158/2008-ல் வழக்கு தொடரப்பட்டு

2011 ஜனவரி 13]

மின் இணைப்பு மீண்டும் வழங்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. மேலும் திருவாளர்கள் ஜே.கே.டி.பிளீச்சர்ஸ் மற்றும் திருவாளர்கள் வி.வி.டெக்ஸ்டைல் பிராசஸ் ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கும் முறையான சுத்திகரிப்பு தொட்டிகள் அமைக்கப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டு தொழிற்சாலை இயங்குவதற்கு இசைவாணை வழங்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைகளினால் சுகாதாரக் கேடுகள் ஏற்படாதவண்ணம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

86—

நிலத்தடி நீர்

வினா எண் 47619—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலக்குறிச்சி ஊராட்சி, கபிலர்மலை மாரியம்மன் கோவில் அருகில் உள்ள பால்பண்ணையின் கழிவு நீரை, பெரிய சோளி பாளையம் கிராமம் கோழிபண்ணையின் வடபுறம் உள்ள தரிசு நிலத்தில் வடிப்பதால் நிலத்தடி நீர் மாசுபடுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், கபிலர்மலை, ஜேடர்பாளையம்ரோட்டில் உள்ள தி/ள். கே.என்.எஸ். என்ற பால்பண்ணை நிறுவனத்திற்கு எதிராக பெறப்பட்ட புகார் மனு அடிப்படையில் மேற்கண்ட பால்பண்ணை மார்ச் 2008-ல் நாமக்கல், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலகத்தால் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் அடிப்படையில் மேற்படி பால்பண்ணைக்கு விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. இதற்கு பதில் அளித்த நிறுவனம், அவ்விடத்தில் பால்பண்ணையை நிரந்தரமாக மூடிவிடுவதாக தெரிவித்தது. அதன்பின் மேற்கொண்ட ஆய்வின்போது

[2011 ஜனவரி 13

தொழிற்சாலை இயந்திரங்கள் அகற்றப்பட்டு அந்நிறுவனம் மேற்படி இடத்திலிருந்து வெளியேறியுள்ளது அறியப்பட்டது. இதனால் பால்பண்ணையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் வெளியேற்றம் தவிர்க்கப்பட்டுள்ளது.

மேலும் தி/ள். கே.என்.எஸ். பால் பண்ணை நிறுவனம் தனது பால் பண்ணை செயல்பாடுகளை நிறுத்தி விட்டு அதே இடத்தில் தி/ள். கே.என்.எஸ். என்ற நிறுவன பெயரில் புதிதாகக் கோழித் தீவன அரைவை தொழிற்சாலையை அமைத்து உற்பத்தியை தொடங்கி இருப்பது ஆய்வின்போது கண்டறியப்பட்டது. தற்போது மேற்கண்ட நிறுவனம் வாரியத்தின் அறிவுறுத்தலின்பேரில் வாரியத்தின் இசைவாணையை முறைப்படி பெற்று இயங்கி வருகிறது. இதனால் நிலத்தடி நீர் மாசுபடுவது தடுக்கப்பட்டுள்ளது.

87—

விளையாட்டு மைதானம்

வினா எண் 56633—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜல்லிபட்டி, காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபுதூர், தென்சித்தூர், சோமந்துறை, தென்சங்கம்பாளையம், அர்த்தநாரிபாளையம், கம்பலாபட்டி, அங்கலக்குறிச்சி, கரியஞ்செட்டிபாளையம் மற்றும் பிலிசின்னம்பாளையம் ஊராட்சிகளிலுள்ள கிராமங்களில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜல்லிபட்டி, காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமண முதலிபுதூர், தென்சித்தூர், சோமந்துறை, தென்சங்கம்பாளையம், அர்த்தநாரிபாளையம், கம்பலாபட்டி, அங்கலக்குறிச்சி, கரியஞ்செட்டிபாளையம் மற்றும்

2011 ஜனவரி 13]

பிலிசின்னம்பாளையம் ஊராட்சிகளிலுள்ள கிராமங்களில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

88—

விளையாட்டு மைதானம்

வினா எண் 59051—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பழையனூரில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பழையனூரில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

89—

விளையாட்டுத் திடல்

வினா எண் 70299—டாக்டர் க. நெடுஞ்செழியன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கபிலமலைத் தொகுதியில் அரசு உதவி பெறும் கந்தசாமி கவுண்டர் கலைக் கல்லூரியில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கபிலமலைத் தொகுதியில் அரசு உதவி பெறும் கந்தசாமி கவுண்டர் கலைக் கல்லூரியில் விளையாட்டுத் திடல் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

90—

விளையாட்டு மைதானம்

வினா எண் 76265—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி, சாத்தான்குளம் செல்லும் சாலையில் தஞ்சை நகரம் சாலை அருகில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி, சாத்தான்குளம் செல்லும் சாலையில் தஞ்சை நகரம் சாலை அருகில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

91—

கழிவுநீர்க் குழாய்

வினா எண் 93538—திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், சேலம், நாமக்கல் மாவட்ட சாயப்பட்டறை கழிவுநீரைக் குழாய்கள் மூலம் நாகப்பட்டினம் பகுதியில் கடலில் கலக்கச் செய்யும் திட்டத்தினை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

திருப்பூர் சாய மற்றும் சலவைப் பட்டறை சங்கமானது எதிர்மறை சவ்வூடு பரவல் (Reverse Osmosis Sysyem) மூலம் கிடைக்கப் பெறுகின்ற அடர்த்தி மிகு கழிவுநீரை (Reject) மட்டும் கடலில் கொண்டு சென்று கலப்பதற்கு அனுமதி கோரியது.

இதன் அடிப்படையில் திருப்பூர் சாயப்பட்டறைகளின் சுத்திகரிக்கப்பட்ட கழிவுகளைக் கொண்டுபோய் கடலில் விடும் திட்டத்திற்கு 700 கோடி ரூபாய் அளவிற்கு செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த 700 கோடி ரூபாயில் தமிழக அரசு சார்பில் 15 சதவீதமும் (சுமார் 100 கோடி ரூபாய்) மத்திய அரசின் சார்பில் 25 சதவீதமும் (சுமார் 175 கோடி ரூபாய்) மற்றும் மீதத் தொகையை சாயப்பட்டறைகளும் செலவிட்டு அவர்கள் சார்பிலேயே ஒரு நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும், இதுசம்பந்தமான திட்ட அறிக்கை ஏதும் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம்/திருப்பூர் சாயப்பட்டறைகள் சங்கம் ஆகியவற்றால் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும், திருப்பூர் சாயப்பட்டறைகள் சங்கம், அடர்மிகு சாயக் கழிவுகளைக் கடலுக்கு கொண்டுசெல்லும் திட்டத்திற்காக, டெக்ஸ்டைல் இகோ சொலுஸ்சன்ஸ் தமிழ்நாடு லிமிடெட் என்ற அமைப்பினை ஏற்படுத்தி, இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு வாட்டர் இன்வெஸ்ட்மெண்டு கம்பெனி லிமிடெட் (TWICL) என்ற நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்து, முதல் தவணையாக ரூ.10 இலட்சங்களை அந்நிறுவனத்திற்கு அளித்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மேலும், மாண்புமிகு உயர் நீதிமன்றம் திருப்பூர், ஈரோடு, கரூர் பகுதியிலுள்ள அனைத்து சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளையும், ஈரோடு தோல் தொழிற்சாலைகளையும் பூஜ்யநிலை கழிவுநீர் வெளியேற்ற திட்டத்தினை அமைக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் அரசுத் துறைகளாக தொழிற் துறை மற்றும் கைத்தறி மற்றும் ஜவுளித் துறை ஆகியவை செயல்படுவதால், கழிவுநீரைக் குழாய் மூலம் கடலுக்கு

[2011 ஜனவரி 13

கொண்டுசெல்லும் திட்டத்தினை, மத்திய அரசின், தொழில் வளர்ச்சி அமைச்சகம் அல்லது ஜவுளி அமைச்சகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு, நிறைவேற்ற மேற்படி துறைகள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.

92—

அப்புறப்படுத்துதல்

வினா எண் 113179—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஈரோடு மாவட்டம் காவேரி கரையோர பகுதிகளிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளை அப்புறப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

ஈரோடு வட்டம், ஈரோடு மாவட்டத்தில் காவேரி கரையோரப் பகுதிகளில் 44 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ளன. இந்த தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அனைத்தும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் காற்று மற்றும் நீர் சட்டத்தின்கீழ் ஒப்புதல் பெற்றுள்ளன. காவேரி ஆறு மற்றும் காளிங்கராயன் வாய்க்கால் அருகில் உள்ள மேற்கண்ட தோல் தொழிற்சாலைகள் நீர் ஆதாரங்களை மாசுபடாமல் இருப்பதற்கு, உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளில் **(W.P. No. 5494/98** *(ம)* **30153/2003)** வெளியிட்ட தீர்ப்பின்படி, அனைத்து தோல் மற்றும் சாயத் தொழிற்சாலைகளும் சுத்திகரிப்பு நிலையம், ஆர். ஓ. பிளாண்ட் மற்றும் ஆர்.எம்.எஸ். அமைத்து பூஜ்ய வெளியீட்டைக் கடைப்பிடிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து தோல் தொழிற்சாலைகளும் சுத்திகரிப்பு நிலையம், ஆர். ஓ. பிளாண்ட் மற்றும் ஆர்.எம்.எஸ். அமைத்து பூஜ்ய வெளியீட்டை கடைபிடித்து வருகிறார்கள். மேலும் நீதிமன்றத்தின் 04-07-2007 நாளிட்ட ஆணையின் பேரில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் உள்ள பல துறைகள் இணைந்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சரிவர இயக்காத தோல் தொழிற்சாலைகள்மீது தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்

2011 ஜனவரி 13]

முகாந்திரக் கடிதம் கோருதல், மின் இணைப்பு துண்டிப்பது மற்றும் தொழிற்சாலைகளை மூடுவது போன்ற நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

மேலும் தமிழ்நாடு அரசு ஆணை எண் 213, தேதி 30-08-1989 மற்றும் அரசு ஆணை எண் 127, தேதி 08-05-1998-ன் படி காளிங்கராயன் வாய்க்கால் மற்றும் காவிரி ஆற்றிலிருந்து முறையே 1 கி.மீ மற்றும் 5 கி.மீ தொலைவிற்குள் புதிய தோல் மற்றும் சாயத் தொழிற்சாலைகள் நிறுவ தடை செய்யப்பட்டுள்ளது. இதன்படி எந்த ஒரு புதிய தோல் மற்றும் சாய தொழிற்சாலைகள் அமைப்பதற்கும் வாரியத்தினால் உரிமம் வழங்கப்பட மாட்டாது.

93—

கழிப்பறை

வினா எண் 46430—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நெடுங்குன்றா செட்டில்மெண்ட் குடியிருப்பு பகுதியில் கழிப்பறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெடுங்குன்றா செட்டில்மெண்டிற்கு ஆண், பெண் இருபாலருக்கும் நவீன கழிப்பிடம் மற்றும் நீர் தொட்டி கட்டி, குழாய் அமைத்துக் கொடுக்க அரசு ஆணை (நிலை) எண் 76, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள்: 10-6-2010-ன்படி ரூ. 5.00 லட்சம் மேற்குமலை மேம்பாட்டு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு மதிப்பீடு வரப்பெற்று கழிப்பறை கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

94—

நஷ்டஈடு

வினா எண்—118620—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை ஜவளகிரி, ஊடதுர்க்கம், உரிகம், தளி ஆகிய வனப் பகுதிகளில் காட்டு யானைகள் பயிர்களை நாசம் செய்ததற்கு நஷ்ட ஈடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர் வனக் கோட்டத்தில் தேன்கனிக்கோட்டை, ஜவளகிரி, இராயக்கோட்டை, உரிகம், ஊடதுர்க்கம், ஓசூர், அஞ்செட்டி மற்றும் தளி ஆகிய வனச் சரக எல்லைப் பகுதிகள் வனத்தை ஒட்டிய குறிப்பாக காப்புக் காட்டிற்கு அருகிலேயே உள்ள சொந்த பட்டா விளைநிலங்கள் கொண்டதாகவுள்ளது. இப்பகுதிகளில் வன விலங்குகளால் குறிப்பாக யானைகளால் பயிர்சேதம் மற்றும் உயிர்சேதம் போன்ற நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வன விலங்குகளால் பாதிக்கப்பட்ட நபர்கள் உரிய சான்று ஆவணங்களை வனத் துறையிடம் வழங்கி உடனுக்குடன் நிவாரணமும் பெற்று வருகின்றனர்.

2001-2002ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட 43 நபர்களுக்கு ரூ.1,62,500/-ம், 2002-2003 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட 45 நபர்களுக்கு ரூ.1,11,500/-ம், 2003-2004 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட 160 நபர்களுக்கு ரூ.5,68,950/-ம், 2004-2005 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட 80 நபர்களுக்கு ரூ.1,66,000/-ம், 2005-2006 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட 126 நபர்களுக்கு ரூ.4,86,450/-ம், 2006-2007 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட 701 நபர்களுக்கு ரூ.22,36,600/-ம், 2007-2008 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட 530 நபர்களுக்கு ரூ.20,00,000/- மற்றும் 2008-2009 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட 633 நபர்களுக்கு ரூ.20,07,500/-ம் பயிர்ச் சேத நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

2009-2010 ஆம் ஆண்டில் 741 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதில் 304 நபர்களுக்கு நஷ்ட ஈடாக ரூ. 11,58,750/- வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 437 விண்ணப்பதாரர்களுக்கு ரூ. 19,62,000/- வழங்கப்பட வேண்டும். அதற்கான ஆவணங்கள் மனுதாரரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. ஆவணங்கள் வரப்பெற்றதும் பயிர்ச் சேதத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2011 ஜனவரி 13]

95—

மரக் கன்றுகள்

வினா எண் 122257—திரு. எம்.ஆர். சுந்தரம்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆத்தூர் தொகுதி, சின்னகல்ராயன்மலை அடிவாரம் ராமநாயக்கன்பாளையம் பகுதியில் வனத் துறை மூலம் மரக் கன்று நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட சின்னகல்ராயன்மலை அடிவாரம் ராமநாயக்கன் பாளையம் பகுதியில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் மூலம் 2003-2004 ஆம் ஆண்டில் பத்து ஏக்கர் காலனி கிராமத்தை ஒட்டி 300 எக்டேர் பரப்பில் 1,02,000 மரக் கன்றுகளும் மற்றும் ஊத்துமேடு, ராமமூர்த்தி நகர் பகுதிகளில் 2003-2004 முதல் 2008-2009 வரை, தேசிய காடு வளர்ப்பு திட்டம், தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் 46.22 எக்டர் பரப்பில் 32,350 மரக் கன்றுகளுமாக, ஆக மொத்தம் 1,34,350 மரங்கள் நடப்பட்டுள்ளன. மேலும், தமிழக அரசு, வனத் துறை மூலம் தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் மேற்சொன்ன கிராமங்களில் தனியார் நிலங்களில் தகுந்த இடம் இருப்பின் அங்கு மரக் கன்றுகள் நட வனத் துறை பரிசிலனை செய்யும்.

96—

கான்கிரீட் சாலை

வினா எண் 47350—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

(அ) வால்பாறை தொகுதி, ரமணமுதலிபுதூர் ஊராட்சியிலுள்ள நெடுஞ்சாலைத் துறை சாலைகளைக் கான்கீரிட் சாலைகளாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ரமணமுதலிபுதூர் ஊராட்சியிலுள்ள சாலையானது ஆனைமலை (நெ) உட்கோட்டம், பொள்ளாச்சி (நெ) கோட்டம் பராமரிப்பில் உள்ள ரமணமுதலிபுதூர் சுற்றுச் சாலை கி.மீ. 0/0-3/180. 3.180 கி.மீ. நீளமுள்ள மாவட்ட இதர சாலையாகும். தற்போது இச்சாலை நல்ல நிலையில் உள்ளது. எனவே, மேற்படி சாலையினை கான்கிரீட் சாலைகளாக அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

97—

பாதுகாப்பு

வினா எண் 127067—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தகவல் தொழில்நுட்பவியல் துறையில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு அந்த நிறுவனங்கள் பாதுகாப்பு அளிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தகவல் தொழில்நுட்பவியல் துறையில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு, அந்நிறுவனங்கள், அனைத்து பாதுகாப்பு வசதிகளை அளித்துள்ளன.

2011 ஜனவரி 13]

98—

மீன்கள் ஏற்றுமதி மையங்கள்

வினா எண் 125382—டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுராந்தகம் தொகுதி, வடபட்டினம், பெரியகுப்பம், ஆலிக்குப்பம், சின்னக்குப்பம், ஆகிய பகுதிகளில் மீன்கள் ஏற்றுமதி மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. பி. பி சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

மதுராந்தகம் தொகுதி, வடபட்டினம், பெரியகுப்பம், ஆலிக்குப்பம், சின்னக்குப்பம், ஆகிய மீனவ கிராமங்களில் சிறிய வகை நாட்டுப் படகுகள் கொண்டு குறைந்த அளவு மீன்களே பிடிக்கப்பட்டு அவையனைத்தும் அன்றைய தினமே பொது ஏலத்தில் விற்பனை செய்து வருகின்றனர். எனவே ஏற்றுமதி செய்யப்படும் அளவிற்கு மீன்கள் பிடிக்கப்படாத நிலையில் இக்கிராமங்களில் மீன்கள் ஏற்றுமதி மையங்கள் அமைக்கத் தேவை எழவில்லை.

99—

வேலைவாய்ப்புத் திட்டம்

வினா எண் 123160—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் மகளிர் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதியில் ஏற்கனவே மகளிர் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மகளிர் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

[2011 ஜனவரி 13

(1) திண்டமங்கலம் ஜெ.ஜெ. நகர்

(2) சின்ன திருப்பதி

(3) கொங்குபட்டி வடக்கு

(4) தொட்டம்பட்டி.

100—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 125386—டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம், லத்தூர் ஆகிய ஒன்றியங்களில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் மற்றும் லத்தூர் ஆகிய பகுதிகளில் உற்பத்தியாகும் பால், மதுராந்தகத்திலிருந்து 7 கி.மீ. தூரத்திலுள்ள சானூர் பால் குளிரூட்டும் நிலையம்மூலம் சேகரம் செய்து பதப்படுத்தப்பட்டு வருகிறது. சானூர் பால் குளிரூட்டும் நிலலையத்தின் கொள்திறன் 30,000 லிட்டராகும். ஆனால், தற்போது நாளொன்றுக்கு 10,500 லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே, போதிய பால் உற்பத்தி இல்லாத காரணத்தினால் மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் மற்றும் லத்தூர் ஆகிய ஒன்றியங்களில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

2011 ஜனவரி 13]

பட்டியல்—3

1—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6728—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சி, இடிந்தகரை வீரப்பன் காலனி பகுதியில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், விஜயாபதி ஊராட்சி, வீரப்பன் காலனி என்பது இடிந்தகரை குடியிருப்பின் ஒரு பகுதி ஆகும். இக்குடியிருப்பில் உள்ளூர் ஆழ்குழாய்க் கிணற்று நீர், திறந்தவெளிக் கிணற்று நீர் ஆகியவற்றினை 1,00,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் ஏற்றி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நாங்குனேரி-திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் ஆற்று நீரும் வழங்கப்பட்டு வருகிறது. மக்கட் தொகைக்கேற்ப மேல்நிலை தொட்டிகள் பயனில் உள்ளன. ஆதலால் கூடுதலாக மேல்நிலை தொட்டிகள் அமைக்க கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

2—

குடிநீர் வசதி

வினா எண் 31024—திரு. பா. வேல்துரை: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி, ஐந்தாங்கட்டளை, வெங்கடாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டங்களிலுள்ள நீர் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 25 குடியிருப்புகளுக்கும், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 6 குடியிருப்புகளுக்கும் ஆக மொத்தம் 31 குடியிருப்புகளுக்கு திட்டம் வடிவமைக்கப்பட்டு, 6-7-2003 முதல் திருநெல்வேலி குடிநீர் வடிகால் வாரிய கோட்டத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் உச்சக்கட்ட தேவை (2026) 1,728 மில்லயன் லிட்டர் ஆகும். தற்போது 1.90 மில்லியன் லிட்டர் குடிநீர் தினந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்னர் இத்திட்டத்தின் மூலமாக அமைக்கப்பட்டுள்ள நாலான்குறிச்சி நீருந்து நிலையத்தில் கிராமப்புற மின் இணைப்பு (Rural Feeder Main) மின்சார வாரியத்திலிருந்து மின் விநியோகம் நேரம் வடிவமைக்கப்பட்ட நேரம் நீரேற்றும் நேரத்தை விட குறைவாக இருந்ததால் மின் பற்றாக்குறையைச் சீரமைப்பதற்கு மின்சார வாரியத்திற்கு நான்காவது வழித்தட மின்பாதை (4th line connection) அமைப்பதற்கு வைப்புத் தொகையாக ரூ.36,41,100/- செலுத்தி, நான்காவது வழித்தட மின் இணைப்பு கிடைக்கப் பெற்றதிலிருந்து பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் சீரான முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2. ஐந்தாங்கட்டளை, கீழப்பாவூர் பேரூராட்சி மற்றும் 32 கிராமங்களுக்கு இக்கூட்டுக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் இடைநிலை தேவை (2011) நாளொன்றுக்கு 1.873 மில்லியன் லிட்டர் ஆகும். தற்போது, நாளொன்றுக்கு 1.874 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இத்திட்டத்தின்மூலம் வடிவமைக்கப்பட்ட குடிநீர் சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

2011 ஜனவரி 13]

3. வெங்கடாம்பட்டி-பூலாங்குளம் மற்றும் 28 வழியோரக் கிராமங்களுக்கு இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் உச்சக்கட்ட தேவை (2026) நாளொன்றுக்கு 1.027 மில்லியன் லிட்டர் ஆகும். தற்போது நாளொன்றுக்கு 1.070 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

3—

தொழிற்சாலை

வினா எண் 63956—திருமதி சங்கரவல்லி (எ) சங்கரிநாராயணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அச்சரப்பாக்கம் தொகுதியில் தொழிற்சாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

அச்சரப்பாக்கம் தொகுதியில் தொழிற்சாலை துவங்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், தகுந்த தொழில் முனைவர்கள், பெரிய தொழில் திட்டங்கள் நிறுவுவதற்குத் தேவையான நிதி முதலீடுகளுடன் (5 கோடிக்குமேல்) புதிய திட்ட செயல் குறிப்புகளுடன் செயல்படுத்த முன்வந்தால் அவர்களுடன் டிட்கோவும் இணைந்து திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து திட்டத்தை செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

4—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 105811—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவில், காங்கேயம் நகராட்சிகளுக்கான 2-வது காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் துவக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வெள்ளக்கோவில் நகராட்சி, காங்கேயம் நகராட்சி மற்றும் 174 ஊரக குடியிருப்புகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.47.74 கோடி திட்ட மதிப்பீட்டிற்கு அரசாணை எண் 12, ந.நி.கு.வ. துறை, நாள் 19-1-2010-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள வெள்ளக்கோவில் நகராட்சி, காங்கேயம் நகராட்சி மற்றும் 174 ஊரக குடியிருப்புகளில் உள்ள சுமார் 1.80 இலட்சம் மக்கள் பயன்பெறுவர். இத்திட்டத்திற்கான ஒப்புந்தப்புள்ளி 24-3-2010 அன்று பெறப்பட்டது. விலைப்பட்டியல் 21-5-2010 அன்று திறக்கப்பட்டு, தற்போது ஒப்பந்தப்புள்ளி பரிசிலனையில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டவுடன் பணி துவங்கப்படும். இத்திட்டத்திற்கான பணிக்காலம் 18 மாதங்கள் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு வெள்ளக்கோயில் நகராட்சிக்கு 135 லிட்டர் வீதமும், காங்கேயம் நகராட்சிக்கு 70 லிட்டர் வீதமும், ஊரக குடியிருப்புகளுக்கு 40 லிட்டர் வீதமும் குடிநீர் வழங்கப்படும்.

5—

சமுதாயக் கிணறு

வினா எண் 119070—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, தெற்குச்சந்தனூர் குடியிருப்பில் சமுதாயக் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) சமுதாயக் கிணறு அமைக்கும் திட்டம் ஏதும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் தற்போது நடைமுறையில்

2011 ஜனவரி 13]

இல்லையாதலால், சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, தெற்குச்சந்தனூர் குடியிருப்பில் சமுதாயக் கிணறு அமைக்க இயலாது.

(ஆ) எழவில்லை.

6—

சமுதாயக் கிணறு

வினா எண் 119665—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், நண்டுகாச்சி கிராமத்தில், சமுதாயக் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) சமுதாயக் கிணறு அமைக்கும் திட்டம் தற்போது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் நடைமுறையில் இல்லை. ஆதலால், சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், நண்டுகாச்சி கிராமத்தில் சமுதாயக் கிணறு அமைக்க இயலாது.

(ஆ) எழவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

7—

சமுதாயக் கிணறு

வினா எண் 119691—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், அருணகிரி கிராமத்தில், விவசாய சமுதாயக் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) சமுதாயக் கிணறு அமைக்கும் திட்டம் தற்போது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் நடைமுறையில் இல்லை. எனவே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், அருணகிரி கிராமத்தில் சமுதாயக் கிணறு அமைக்க இயலாது.

(ஆ) எழவில்லை.

8—

சமுதாயக் கிணறு

வினா எண் 119692—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், எஸ். வாகைக்குளம், குருந்தன்குளம், பூவந்தி கிராமங்களில் சமுதாயக் கிணறு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) சமுதாயக் கிணறு அமைக்கும் திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், எஸ். வாகைக்குளம் குருந்தன்குளம், பூவந்தி கிராமங்களில் சமுதாயக் கிணறு அமைக்க இயலாது.

(ஆ) எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

9—

தூர் வாருதல்

வினா எண் 121854—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, களம்பூர் பேரூராட்சி, பெருமாள் கோவில் தெரு கால்வாயினைத் தூர் வாரி புதிதாக கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், களம்பூர் பேரூராட்சியில் சித்தேரிக்கரை முதல் சோழந்தாங்கல் ஏரி வரை சுமார் 1 கி.மீ. நீளமுள்ள கால்வாய் பொதுப் பணித் துறையை சார்ந்ததாகும். மேற்படி கால்வாயின் சுமார் 300 மீ. நீளம் களம்பூர் பேரூராட்சியில் பொதுமக்கள் குடியிருக்கும், பெருமாள் கோயில் தெரு, வழியாகச் செல்கிறது. பொது மக்கள் நலன் கருதி இக்கால்வாய் அவ்வப்போது பேரூராட்சிமூலம் சுத்தம் செய்யப்படுகிறது. இக்கால்வாய் பராமரிப்புப் பணிகள் அனைத்தும் பொதுப் பணித் துறை தொடர்புடையதால், பேரூராட்சிமூலம் தூர் வாரி புதியதாக கட்ட வழிவகை இல்லாததால் பொதுப் பணித் துறையின் மூலமே கால்வாய் சீரமைக்க இயலும்.

10—

சுற்றுச் சுவர் வசதி

வினா எண் 128029—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, மதுக்கரை பேரூராட்சி, குரும்ப பாளையத்திலுள்ள மயானத்தினைச் சீரமைத்து, சுற்றுச் சுவர் கட்ட, அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மதுக்கரை பேரூராட்சியில் உள்ள குரும்பாளையம் மயானத்தில் 2008-2009 ஆம் ஆண்டிற்கான அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 4.00 இலட்சம் மதிப்பீட்டில், சிமெண்ட் கான்கிரீட் தளம், காத்திருப்போர் அறை, எரிமேடை மற்றும் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மயானத்தில் ரூ. 3.50 இலட்சம் மதிப்பீட்டில் இருபாலர் கழிப்பிடம் கட்டப்பட்டு, மயானத்தின் முன்புறம் ஆர்ச் போடப்பட்டு, கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. தற்போது சுற்றுச் சுவர் கட்டும் திட்டம் எதுவும் இல்லை.

11—

புதிய மின்மாற்றிகள்

வினா எண் 104946—திரு. எஸ். ஆர். இராஜா: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் 25-வது வார்டில் புதிய மின்மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் 25-வது வார்டில் லட்சுமி நகரில் 100 கே.வி.ஏ. மின்மாற்றி 7-4-2010 அன்று இயக்கி வைக்கப்பட்டது.

12—

புதிய மின்கம்பங்கள்

வினா எண் 115603—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி 2, 7 மற்றும் 8-வது வார்டுகளில் புதிய மின்கம்பங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி 2, 7 மற்றும் 8-வது வார்டுகளில் தற்போது அனைத்து மின் கம்பங்களும் நல்ல நிலையில் உள்ளன. எனவே புதிய மின் கம்பங்கள் அமைக்கத் தேவையில்லை.

13—

சீரான மின்சாரம்

வினா என் 115612—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி 10-வது வார்டில் புதிய மின்கம்பங்கள், தெரு விளக்குகள் அமைக்கவும், சீரான மின்சாரம் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி 10-வது வார்டில் கூடுதல் தெரு மின் விளக்கு வேண்டி விண்ணப்பம் ஏதும் தேர்வு நிலை பேரூராட்சியிடமிருந்து பெறப்படவில்லை. கூடுதல் தெரு விளக்கு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்கு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

[2011 ஜனவரி 13

மேலும், இந்தப் பகுதியில் அறிவிக்கப்பட்ட மின் வெட்டு நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது.

14—

புதிய மின்மாற்றி

வினா எண் 115614—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி 11-வது வார்டில் மின்மாற்றி, புதிய மின் கம்பங்கள் அமைத்து, சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி 11-வது வார்டில் ஒரு பழுதான மின் கம்பம் 25-3-2010 அன்று ரூ6,000 மதிப்பீட்டில் மாற்றப்பட்டுள்ளது. மேலும் மற்ற மின் கம்பங்கள் நல்ல நிலையில் உள்ளன.

திருப்புவனம் SS V 250 KVA மின்மாற்றியில் மின்திறனுக்குக் குறைவான மின்பளு இருப்பதாலும், மேலும் மின் அழுத்தம் நன்றாக இருப்பதாலும் புதிய மின்மாற்றி அமைக்கத் தேவையில்லை.

15—

மும்முனை மின் இணைப்பு

வினா எண் 117050—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம், மருதுறை பகுதியில் மும்முனை மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம், மருதுறை பகுதிக்கு பழையகோட்டை 110/33-11 கி.வோ. துணை மின் நிலையத்தில் உள்ள நத்தகாவடையூர் கி.வோ. மின்பாதை வழியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்பாதை ஊரக மின்பாதையாக இருப்பதால் பகலில் 6 மணி நேரமும் இரவில் 3 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

16—

தொழிற்சாலை

வினா எண் 119315—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரையில் வேலிக்கருவல் மரத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மற்றும் இதர மாவட்டங்களில் உபரியாக கிடைக்கும் தாவரக்கழிவுகளைக் கொண்டு பெரிய அளவில் (மெகா வாட் அளவில்) மின்சாரம் தயாரிக்கும் முறையை தமிழக அரசு தனியார் நிறுவனங்கள்மூலம் நிறுவ ஊக்குவித்து வருகிறது.

தற்சமயம், சிவகங்கை மாவட்டத்தில் காளையார்கோயில் என்ற இடத்தில் 15 மெகா வாட் மற்றும் கோவிலூர், காரைக்குடி என்ற இடத்தில் 9 மெகா வாட் திறன் கொண்ட இரண்டு மின் உற்பத்தி நிலையமும் தனியார் துறையில் இயங்கி வருகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள உபரி தாவரக் கழிவுகள், கருவேல மரங்கள் உட்பட மொத்தம் 40 மெகா வாட்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

(24 மெகா வாட் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளது) மின் உற்பத்தி செய்யலாம் என ஆய்வில் தெரிய வந்துள்ளது.

உபரி தாவரக்கழிவுகளைக் கொண்டு மீதமுள்ள 16 மெகா வாட் உற்பத்தித் திறனுக்கு மின் உற்பத்தி நிலையம் நிறுவ தனியார் முதலீட்டாளர்கள் முன்வந்தால் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை ஆவன செய்யும்.

17—

கூட்டுறவுப் பயிற்சி நிலையம்

வினா எண் 125896—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூரில் செயல்படும் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தை தருமபுரிக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் செயல்பட்டு வரும் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் சொந்த கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி நிலையத்தை தருமபுரிக்கு மாற்ற வாய்ப்பில்லை.

18—

பெயர் மாற்றம்

வினா எண் 125897—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியை சேலம் மண்டல மத்தியக் கூட்டுறவு வங்கி என்று பெயர் மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியானது சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் செயல் எல்லைகளாக கொண்டு இரு மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கிடும் வங்கியாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியை சேலம் மண்டல மத்தியக் கூட்டுறவு வங்கி என பெயர் மாற்றம் செய்ய அவசியம் இல்லை.

19—

விவசாயப் பண்ணை

வினா எண் 5760—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம் மேல்செங்கம் கிராமத்தில் செயல்படாமல் உள்ள மத்திய, மாநில அரசு விவசாயப் பண்ணையைத் தற்சமயம் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், மேல்செங்கம் கிராமத்திலுள்ள மத்திய, மாநில அரசு விதைப் பண்ணையானது ஆனந்தவாடி பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிக்குள் அமைந்துள்ளது. 1971 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 30 ஆண்டு காலத்திற்கு வனத் துறையிடமிருந்து குத்தகை அடிப்படையில் பெறப்பட்டு இயங்கி வந்தது. குத்தகை காலம் 31-3-2001 உடன் முடிவடைந்ததால் மீண்டும் பண்ணையானது அரசாணை (நிலை) எண் 147, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 23-8-2005-ன்படி சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

[2011 ஜனவரி 13

மேலும், இப்பண்ணையானது சமமற்ற பாறைகள் நிறைந்த பகுதியாக உள்ளது. இப்பண்ணையில் மா, சப்போட்டா, கொய்யா போன்ற பழவகை மரங்களும், தேக்கு, சவுக்கு, யூக்கலிப்டஸ் போன்ற மரங்களும் சுமார் 750 எக்டேர் பரப்பளவில் உள்ளன. நீர் வளத்தைப் பொறுத்தமட்டில் மேல்செங்கம் பண்ணையில் விதைப்பண்ணை அமைத்து பராமரிக்க தகுந்த அளவில் நீர்வளம் இல்லை என்பதால் மேல்செங்கம் கிராமத்தில் செயல்படாமல் உள்ள மத்திய, மாநில அரசு விதைப் பண்ணையை மீண்டும் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

20—

பண்ணை

வினா எண் 8536—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், மேல்செங்கத்தில் செயல்பட்டு வந்த மத்திய, மாநில அரசுப் பண்ணையினை மீண்டும் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், மேல்செங்கம் கிராமத்திலுள்ள மத்திய, மாநில அரசு விதைப்பண்ணையானது ஆனந்தவாடி பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிக்குள் அமைந்துள்ளது. 1971 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 30 ஆண்டு காலத்திற்கு வனத் துறையிடமிருந்து குத்தகை அடிப்படையில் பெறப்பட்டு இயங்கி வந்தது. குத்தகை காலம் 31-3-2001 உடன் முடிவடைந்ததால் மீண்டும் பண்ணையானது அரசாணை (நிலை) எண் 147, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 23-8-05-ன்படி சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

2011 ஜனவரி 13]

மேலும், இப்பண்ணையானது சமமற்ற பாறைகள் நிறைந்த பகுதியாக உள்ளது. இப்பண்ணையில் மா, சப்போட்டா, கொய்யா போன்ற பழவகை மரங்களும், தேக்கு, சவுக்கு, யூக்கலிப்டஸ் போன்ற மரங்களும் சுமார் 750 எக்டேர் பரப்பளவில் உள்ளன. நீர் வளத்தைப் பொறுத்தமட்டில் மேல்செங்கம் பண்ணையில் விதைப் பண்ணை அமைத்துப் பராமரிக்க தகுந்த அளவில் நீர்வளம் இல்லை என்பதால் மேல்செங்கம் கிராமத்தில் செயல்படாமல் உள்ள மத்திய, மாநில அரசு விதைப் பண்ணையை மீண்டும் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

21—

பருத்தி ஆராய்ச்சி மையம்

வினா எண் 121722—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியில் பருத்தி ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் பருத்தி ஆராய்ச்சி நிலையம் 2008 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாராய்ச்சி நிலையம் ஆத்தூரிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. ஆத்தூர் மற்றும் வேப்பந்தட்டை பகுதிகளில் ஒரேவகையான தட்பவெப்பம் நிலவுவதால், ஆத்தூர் பகுதிக்கென மேலும் ஒரு பருத்தி ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

22—

சர்க்கரை ஆலை

வினா எண் 124580—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

(அ) எடப்பாடி பகுதியில் (ஆடையூர், சித்தூர்) தனியார்மூலம் கரும்பு அரைவை ஆலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி (ஆடையூர், சித்தூர்) பகுதியில் புதிய தனியார் சர்க்கரை ஆலை அமைப்பது தொடர்பான முன்மொழிவு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், தனியார் நிறுவனங்களிடமிருந்தும் இத்தொகுதியில் ஒரு புதிய சர்க்கரை ஆலை அமைக்க அரசுக்குப் பிரேரணை ஏதும் பெறப்படவில்லை. எடப்பாடி தாலுகாவில் உள்ள கரும்பு பரப்பு முழுவதும் பொன்னி சர்க்கரை ஆலைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 2500 மெட்டன் கரும்பு பிழிதிறன் அளவில் ஒரு புதிய சர்க்கரை ஆலை அமைக்க ஒரு அரைவைப் பருவத்திற்கு 4.30 இலட்சம் டன்கள் கரும்பு தேவைப்படும். ஒரு புதிய சர்க்கரை ஆலை இயங்குவதற்குத் தேவையான கரும்பு எடப்பாடி தொகுதியில் சாகுபடி செய்யப்படாததால், ஒரு புதிய சர்க்கரை ஆலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

23—

புதிய உபகரணங்கள்

வினா எண் 119223—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அழகப்பா பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிக் கூடங்களுக்கு புதிய உபகரணங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அழகப்பா பல்கலைக்கழக ஆராய்ச்சிக் கூடங்களுக்கு புதிய உபகரணங்கள் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

24—

நகரப் பேருந்து வசதி

வினா எண் 37749—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து ஓமலூர் வரை மகளிர்க்கென கூடுதலாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஓமலூரில் காலை 7.25 மணிக்கு புறப்பட்டு சேலம் அரசு மகளிர் கல்லூரியினை 8.15 மணிக்கு வந்தடையுமாறு மகளிர்க்கென நகரப் பேருந்து ஒன்று இயக்கப்பட்டு வருகின்றது. இப்பேருந்தில் சராசரியாக 50 மகளிர் மட்டுமே பயணிக்கின்றனர். இது பேருந்தின் கொள்ளளவை (44+40) விட குறைவாக உள்ளது. எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும். இருப்பினும் அனைத்துப் பயணிகளும் பயனடையும் வகையில் நகரப் பேருந்து வசதி உள்ளது.

25—

நகரப் பேருந்து

வினா எண் 118839—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து திருப்பாச்சேத்தி, மாரநாடு வழியாகப் பழையனூருக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து திருப்பாச்சேத்தி, மாரநாடு வழியாகப் பழையனூருக்கு நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

26—

பேருந்து வசதி

வினா எண் 119013—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கையிலிருந்து இரவு நேரங்களில் மானாமதுரைக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கையிலிருந்து மானாமதுரைக்கு இரவு 23-35 மணிக்கு கடைசி பேருந்து இயக்கப்படுகிறது. இதில் பயணிகளின் பயன்பாடு மிக மிகக் குறைவாக இருப்பதால் இதுவே போதுமானதாகும்.

27—

சிறப்புப் பேருந்துகள்

வினா எண் 119015—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) மானாமதுரையிலிருந்து தாயமங்கலம் திருவிழாவிற்குக் கூடுதலாகச் சிறப்புப் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாயமங்கலம் ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் திருவிழாவிற்கு பொதுமக்களின் வசதிக்காக மானாமதுரையிலிருந்து தாயமங்கலத்திற்கு 24 மணி நேரமும் இரவு பகலாக சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

28—

பேருந்து வசதி

வினா எண் 119921—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வரகூர் தொகுதி, குன்னம் அண்ணாநகர் பேருந்து நிறுத்தத்தில் தொடர்ந்து பேருந்து நிறுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பெரம்பலூர்-அரியலூர் வழித்தடத்தில் குன்னம் கிராமம் அமைந்துள்ளது. குன்னம் பேருந்து நிறுத்தத்தில் இருந்து 0.5 கி.மீ. தொலைவிலேயே அண்ணா நகர் பேருந்து நிறுத்தம் உள்ளது. அரியலூரில் இருந்து பெரம்பலூர் மற்றும் ஒலப்பாடி அவுட்டர் வழித்தடங்களில் இயங்கும் நகரப் பேருந்துகள் அனைத்தும் குன்னம் அண்ணா நகர் பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தம் செய்து பயணிகளை ஏற்றி, இறக்கி செல்கின்றன. குன்னம் பேருந்து நிறுத்தத்தில் இருந்து அண்ணா நகர் பேருந்து நிறுத்தம் குறைந்த அளவு தூரமே உள்ளதால் புறநகர்ப் பேருந்துகளை நிறுத்தம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

29—

பேருந்து வசதி

வினா எண் 119929—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம் (நல்லார் காலனி) தேவனூர்புதூர் நல்லார் காலனி வழியாக புளிப்பட்டி மற்றும் மாவடப்பு செட்டில்மெண்டு பகுதிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலை-மாவடப்பு செட்டில்மெண்ட் பகுதிக்கு பேருந்து வசதி கோரிய வழித்தடத்தில் உடுமலையிலிருந்து நல்லார் காலனி வரை மட்டுமே சாலை வசதி உள்ளது. நல்லார் காலனி முதல் புளிப்பட்டி மற்றும் மாவடப்பு செட்டில்மெண்ட் வரை உள்ள மலைப் பகுதியில் சாலை வசதி இல்லை. எனவே, சாலை வசதியுள்ள உடுமலை-நல்லார் காலனி வழித்தடத்தில் நல்லார் காலனி வரை தற்போதைய பயணிகள் அடர்விற்கு ஏற்ப 2 கழகப் பேருந்துகள் தினசரி 4 நடைகள் என இயங்கி வருகின்றன. எனவே, சாலை வசதியில்லாத மாவடப்பு செட்டில்மெண்ட் மற்றும் புளிப்பட்டி பகுதிக்குப் பேருந்து வசதியளித்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

30—

நகரப் பேருந்து

வினா எண் 120256—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து மடப்புரத்திற்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து திருப்புவனத்திற்கும், திருப்புவனத்திலிருந்து மடப்புரத்திற்கும் எனப் பகுதி பகுதியாக போதுமான அளவு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

31—

பேருந்து வசதி

வினா எண் 121303—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டணம் தொகுதி, கிருஷ்ணகிரியிலிருந்து காவேரிப்பட்டணம், வேலம்பட்டி, கரடியூர், மலையாண்டஅள்ளி வழியாக போச்சம்பள்ளி வரை, நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி-போச்சம்பள்ளி (வழி) காவேரிப்பட்டணம், மலையாண்டஅள்ளி, வேலம்பட்டி, கரடியூர் தடத்தின் நீளம் 39.0 கி.மீ. ஆகும். இதில் அரசு ஆணைப்படி யாதொரு பேருந்து வசதியும் பெறாத கிராமங்களுக்கு மட்டுமே 35-வது கி.மீ.யிலிருந்து 40-வது கி.மீ. வரை இயக்கிட வழிவகையுள்ளது. ஆனால், பேருந்து வசதி கோரியுள்ள வழித் தடம் முழுவதும் பேருந்து வசதியுள்ளதாலும், தடத்தின் நீளம் 39.0 கி.மீ. வருவதாலும், கோரியுள்ள வழித் தடத்தில் நகரப் பேருந்து ஒன்றை தற்சமயம் இயக்கிட இயலாத நிலையுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

32—

பேருந்து வசதி

வினா எண் 121720—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதி, ஆத்தூர்-தஞ்சாவூர் வழியாக நாகர்கோவிலுக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஆத்தூரிலிருந்து நாகர்கோவிலுக்கு தஞ்சாவூர் வழியாகச் செல்வது சுற்றுப் பாதை என்பதால் ஆத்தூர் பயணிகள் அங்கிருந்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட் மூலமாக இயக்கப்படும் புறநகர்ப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி திருச்சி வந்து, திருச்சியிலிருந்தும் திருச்சி வழியாகவும் நாகர்கோவிலுக்கு மிக அதிக அளவில் இயக்கப்படும் அரசு விரைவுப் பேருந்துகள் வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம்.

33—

பேருந்து வசதி

வினா எண் 122703—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், புதிய, பழைய பேருந்து நிலையங்களில் இருந்து அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு நேரடியாகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு 24 கழகப்

2011 ஜனவரி 13]

பேருந்துகள் தினசரி 265 நடைகளும், 4 தனியார் பேருந்துகள் தினசரி 64 நடைகளும், புதிய பேருந்து நிலையத்திலிருந்து 2 தனியார் பேருந்துகள் தினசரி 18 நடைகளும் ஆக மொத்தம் 30 பேருந்துகள் தினசரி 347 நடைகள் அரசு தலைமை மருத்துவமனைக்கு இயங்கி வருகின்றன. எனவே, வருங்காலத்தில் தேவைக்கேற்ப கூடுதல் பேருந்துகள் இயக்கிட ஆவன செய்யப்படும்.

34—

பேருந்து வசதி

வினா எண் 122706—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் இருந்து மேட்டுப்பாளையத்திற்கு கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர்-மேட்டுப்பாளையம் வழித்தடத்தில், கழகப் பேருந்துகள் 37 மூலம் தினசரி 170 நடைகளும், 5 தனியார் பேருந்துகள் தினசரி 33 நடைகளும், ஆக மொத்தம் 42 பேருந்துகள் மூலம் தினசரி 203 நடைகள் தற்போதைய பயணிகள் அடர்விற்கேற்ப இயங்கி வருகின்றன. வருங்காலத்தில் பயணிகள் அடர்வு அதிகரிக்கும்போது கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும்.

35—

பேருந்து வசதி

வினா எண் 123267—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, ப.வேலூர் உள்ளே அனைத்து பேருந்துகளும் வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நாமக்கல்-கரூர், மதுரை, திண்டுக்கல் வழித்தடங்களில் பரமத்தி வேலூர் வழியாக இயக்கப்படும் பேருந்துகள் (புறவழிச்சாலை பேருந்துகள் தவிர) ப. வேலூர் உள்ளே சென்று வருமாறு இயக்கப்பட்டு வருகின்றன.

36—

பேருந்து வசதி

வினா எண் 125917—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை-ஓசூருக்கு புறவழியாக இயக்கப்படும் பேருந்தை மேட்டூர் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை-ஓசூர் (வழி) மேட்டூர் வழித்தடத்தில் பகுதிவாரியாக பயணிகள் தேவைக்கேற்ப பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், இவ்வழித்தடத்தில் இயக்கப்படும் கோவை-ஓசூர் (வழி) மேட்டூர் பேருந்துகளுக்கு பயணிகள் அடர்வு குறைவாக உள்ளதால், பயணிகள் அடர்வு அதிகமுள்ள சேலம் வழித் தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன.

37—

பேருந்து வசதி

வினா எண் 125921—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் ஒகேனக்கல்லுக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒகேனக்கல் சுற்றுலாத்தலம் தருமபுரி மாவட்டத்தில் உள்ளது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், தருமபுரி மண்டல பேருந்துகள் சேலத்திலிருந்து ஒகேனக்கல்லுக்கு 2 பேருந்துகள்மூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இது தவிர தருமபுரியிலிருந்து ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மற்ற மாவட்டங்களில் இருந்து சேலம்/தருமபுரிக்கு போதுமான அளவிற்கு பேருந்து வசதி உள்ளது. எனவே, தற்போதுள்ள பகுதிவாரியான பேருந்து வசதியே போதுமானது.

38—

பேருந்து வசதி

வினா எண் 127191—திரு. லை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியிலிருந்து திருச்செங்கோடு வழியாக மதுரைக்கு நேரடி பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப்போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம்மூலம் எடப்பாடியிலிருந்து திருச்செங்கோடு வழியாக மதுரைக்கு நேரடியாக ஒரு பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

39—

தரம் உயர்த்துதல்

வினா எண் 60319—திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி, சோலூர்மட்டம் துணை சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம், சோலூர்மட்டம் கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும் அருகிலேயே சோலூர்மட்டம் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், சோலூர்மட்டம் துணை சுகாதார நிலையத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

40—

கண் சிகிச்சைப் பிரிவு

வினா எண் 74716—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சைப் பிரிவினை ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே கண் சிகிச்சைப் பிரிவு (Eye Clinic) இயங்கி வருகிறது.

2011 ஜனவரி 13]

41—

தரம் உயர்த்துதல்

வினா எண் 87996—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், தாராபுரம் சுகாதார மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்தில் சென்னிமலை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. சென்னிமலை ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 97,687 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் சென்னிமலை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம், காசிபாளையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் வெள்ளோடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. சென்னிமலை ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாதமொன்றுக்கு சராசரியாக 14 பிரசவங்கள் நிகழ்கின்றன. மாதமொன்றுக்கு சராசரியாக 11,400 வெளி நோயாளிகள் பயனடைகின்றனர். 6,480 சதுர அடி பரப்பளவில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கை வசதி உள்ளது. குடிநீர் வசதி உள்ளது. அறுவை அரங்கு வசதி உள்ளது. நான்கு புறமும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டு உள்ளது. சென்னிமலை ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால் மேலும் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

[2011 ஜனவரி 13

42—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 102771—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தொகுதி, சோளங்குறுனியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், சோளங்குறுனி கிராம மக்கள் தொகை 3009 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. இக்கிராமத்திற்கு 3 கிலோ மீட்டர் தொலைவில் வலையங்குளம் ஆரம்ப சுகாதார நிலையமும், 10 கிலோ மீட்டர் தொலைவில் திருமங்கலம் அரசு மருத்துவமனையும் செயல்படுகின்றன. இக்கிராமம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகை 2,74,577 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே (1) திருப்பரங்குன்றம், (2) துவரிமான், (3) நாகமலை புதுக்கோட்டை, (4) தனக்கன்குளம், (5) நிலையூர், (6) வலையங்குளம், (7) விராதனூர் ஆகியன செயல்படுகின்றன. மேலும், இரண்டு ஆரம்ப சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், சோளங்குறுனி கிராமத்திற்கும், வலையங்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 3 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் சோளங்குறுனி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

2011 ஜனவரி 13]

43—

விளம்பரப் பலகைகள்

வினா எண் 107437—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குடும்ப நல அறுவைச் சிகிச்சை பற்றிய விளம்பரப் பலகைகள் பொது மக்கள் கூடும் இடங்களில் வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

குடும்ப நல அறுவை சிகிச்சை பற்றிய விளம்பரப் பலகைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், நகர்ப்புற மருத்துவமனைகள், துணைச் சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவக் கல்லூரி வளாகங்கள், அரசு அலுவலக வளாகங்கள், பொது மக்கள் கூடும் இடங்களாக உள்ள பேருந்து நிலையங்கள் மற்றும் இரயில் நிலையங்கள் ஆகிய இடங்களில் மாநில மற்றும் மத்திய அரசு நிறுவனங்களின் முன் அனுமதி பெற்று விளம்பரப் பலகைகள் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

44—

மருத்துவ முகாம்

வினா எண் 11094—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டத்தில், ஒவ்வொரு ஊராட்சியிலும் இலவச கண் சிகிச்சை மருத்துவ முகாம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சியிலும் இலவச கண் சிகிச்சை மருத்துவ முகாம் மாவட்ட ஆட்சியரின் அறிவுரையின் பேரில் நடத்தப்படும்.

[2011 ஜனவரி 13

45—

108 அவசர கால ஊர்தி

வினா எண் 117671—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அவசர கால ஊர்தி எண் 108—ஐ வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தனித்தனியாக அவசர கால ஊர்தி எண் 108-ஐ வழங்க இயலாது. ஆனால், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய மக்கள் அனைவருக்கும் 108-ன் சேவை, அவசர காலங்களில் வழங்கப்பட்டு சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அவசர அழைப்பு பெற்ற 20-30 நிமிடங்களில் 108 ஊர்தி அழைப்பிடத்தை அடைந்து நோயாளிக்கு முதலுதவி அளித்து மருத்துவமனையில் சேர்க்கும்.

46—

மருத்துவமனை

வினா எண் 12223—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, தும்மக்குண்டு, விக்கிரமங்கலம், தொட்டப்பநாயக்கனூர், உத்தப்பநாயக்கனூர் மற்றும் அல்லிகுண்டம் ஆகிய பகுதிகளிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே (1) அல்லிகுண்டம் மற்றும் (2) உத்தப்பநாயக்கனூரும் மற்றும் தொட்டப்பநாயக்கனூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றது. தொட்டப்பநாயக்கனூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்த ஏற்றதாக உள்ளது. இனி, வருங்காலங்களில் தொட்டப்பநாயக்கனூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அல்லிகுண்டம் மற்றும் உத்தப்பநாயக்கனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், தொட்டப்பநாயக்கனூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் பிரசவ பின்கவனிப்பு அறை கட்ட தேசிய ஊரக நலத்திட்டத்தின்கீழ் ரூ.8.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறைமூலம் கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் தும்மக்குண்டு மற்றும் விக்கிரமங்கலம் ஆகிய கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் செல்லப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம், மேம்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்படுவதால் இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தும்மக்குண்டு மற்றும் விக்கிரமங்கலம் ஆகிய கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

47—

108 அவசர ஊர்தி

வினா எண் 123067—டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ECR சாலையில், கடலூர் கிராம சந்திப்பில் அவசர ஊர்தி (Ambulance) 108-ஐ நிறுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ECR சாலையில், கடலூர் கிராம தேவைக்கு தற்சமயம் மரக்காணம் காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 108 ஆம்புலன்ஸை 108 எண் வழியாகத் தொடர்பு கொண்டு, இலவசமாக இச்சேவையை எந்த நேரத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

48—

உதவி இயக்குநர் அலுவலகம்

வினா எண் 120146—திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் உள்ள கால்நடை உதவி இயக்குநர் அலுவலகத்தை பிரித்து நிருவாக வசதிக்காக தலைவாசலில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சேலம் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தை பிரித்து தலைவாசலில் ஒரு புதிய கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழாது.

49—

கால்நடை மருந்தகம்

வினா எண் 121535—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) மானாமதுரை தொகுதி, அல்லி நகரத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, அல்லி நகரத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை. மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அல்லி நகரம் கிராமத்தில், ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்ட கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) கேள்வி எழாது.

50—

தரம் உயர்த்துதல்

வினா எண் 121574—திரு. வெ. கண்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி ஊராட்சி பேருந்து நிலையம் அருகிலுள்ள கால்நடை மருந்தகத்தை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி ஊராட்சி பேருந்து நிலையம் அருகிலுள்ள கால்நடை கிளை நிலையம் 20—2—2010 முதல் தரம் உயர்த்தப்பட்டு தரம் உயர்த்தப்பட்ட கால்நடைக் கிளை நிலையமாக செயல்பட்டு வருகிறது. மேற்படி தரம் உயர்த்தப்பட்ட கால்நடைக் கிளை நிலையத்தில், இளநிலை

கால்நடை உதவி மருத்துவர் பணியமர்த்தப்பட்டு சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஆ) கேள்வி எழாது.

51—

சுற்றுச் சுவர்

வினா எண் 122289—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம், குட்டப்பாளையம் கால்நடை மருத்துவமனைக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊரக உள் கட்டமைப்பு நிதியிலிருந்து (RIDF) நிதி ஒதுக்கீடு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் காங்கேயம், குட்டப்பாளையம் கால்நடை மருந்தகத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

52—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 122291—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், காங்கேயம் தொகுதி, சாவடிப்பாளையத்தில் மீண்டும் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், காங்கேயம் தொகுதி, சாவடிப்பாளையத்தில் மீண்டும் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

53—

கட்டடம்

வினா எண் 122398—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கீரக்களூரில் கால்நடை கிளை மருத்துவமனை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதியினைச் சார்ந்த கீரக்களூர் கால்நடை மருந்தகத்திற்கு நாகப்பட்டினம் பாராளுமன்ற அல்லது திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் நிரந்தர கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

54—

மருந்துகள்

வினா எண் 127785—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் உள்ள கால்நடை மருந்தகங்களுக்கு போதிய மருந்துகள் மற்றும் ஊசி மருந்துகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கால்நடை பராமரிப்புத் துறையில் செயல்படும் கால்நடை நிலையங்களுக்குத் தேவைப்படும் மருந்துகள், ஊசி மருந்துகள் மற்றும் உபகரணங்கள் விவரம் ஒவ்வொரு ஆண்டும் சம்பந்தப்பட்ட அலுவலரிடமிருந்து தேவைப்பட்டியல் பெற்று அந்நிலையங்களுக்கான ஆண்டு உச்சவரம்பான ஒரு கால்நடை மருந்தகத்திற்கு ரூ72,750/-க்கு தேவைப்பட்டியல் தயாரித்து சென்னை, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கு அனுப்பப்படுகிறது. அதன்படி மருந்துகள் மற்றும் உபகரணங்கள் போதுமான அளவிற்கு பெற்று வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 2010-2011 ஆம் ஆண்டிற்கு கால்நடை மருந்தகத்திற்கு போதுமான அளவு மருந்துகள் சென்னை தமிழ்நாடு மருத்துவப் பணிக் கழகத்தின்மூலம் கொள்முதல் செய்து வழங்கப்பட்டு வருகிறது. இவை மானாமதுரை தொகுதியிலுள்ள அனைத்து கால்நடை மருந்தகங்களுக்கும் பொருந்தும்.

(ஆ) 2010-2011 ஆம் ஆண்டுக்கான மருந்துகள் ஆகஸ்டு, 2010 முதல் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

2011 ஜனவரி 13]

55—

கோழிப்பண்ணை

வினா எண் 128050—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, திருவரங்குளத்தில் இயங்கி வந்த கோழிப்பண்ணையை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, திருவரங்குளத்தில் இயங்கி வந்த கோழிப்பண்ணை 26-7-2002 அன்று மூடப்பட்டது. தற்போது அவ்விடத்தில் கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. ஓரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணை மற்றும் செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் கோழிப் பிரிவு செயல்பட்டு வருகிறது. அதன்மூலம் புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் அருகாமையில் உள்ள மாவட்ட விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர். எனவே, மூடப்பட்ட திருவரங்குளம் கோழிப்பண்ணையை மீண்டும் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

56—

பட்டா வழங்குதல்

வினா எண் 118913—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், குன்னத்தூர் சந்தைப்பேட்டை பகுதி நரிக்குறவர் சமூக மக்களுக்கு நிலப்பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், பூலாங்குளம் கிராமம், புதிய சர்வே எண் 88/1—ல் நரிக்குறவர் சமூக மக்கள் குடியுள்ளனர். இது கிராமக் கணக்குகளின்படி ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், ஊத்துக்குளி எனப் பதிவாகியுள்ளது. இது ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த இடம் என்பதால், பட்டா வழங்க இயலாது.

57—

உதவித் தொகை

வினா எண் 123984—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதியோர் உதவித் தொகையைப் பயனாளிகளுக்கு உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசிய திட்டத்தின்கீழ், ஓய்வூதியம் பெறும் முதியோர் எளிய முறையில் ஓய்வூதியம் பெற்றிட ஏதுவாக முதியோர் ஓய்வூதியம் கோரி விண்ணப்பிப்பவர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியரால் அவ்வப்போது விசாரணை செய்து தகுதியின் அடிப்படையில், விதிமுறைகளுக்குட்பட்டு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

ஓய்வூதியம் பெறும் பயனாளிகளின் பெயர் மைய அரசின் விதிகளின்படி வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும். வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளோர் பட்டியலில் இடம்பெறாத ஆனால் தகுதியுள்ள நபர்களது பெயர்களை வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்த்திட உள்ளாட்சி அமைப்புகள்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உள்ளாட்சி அமைப்புகள்மூலம் வறுமைக்கோட்டிற்குக்கீழ்

2011 ஜனவரி 13]

உள்ளோர் பட்டியல் எண் பெறப்பட்டவுடன் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

58—

தங்கும் அறைகள்

வினா எண் 110780—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, பழைய வால்பாறை பகுதியில் சுற்றுலாத் துறை சார்பாக தங்கும் அறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதி கட்டுவதற்கு அரசாணை எண் 127, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, நாள்: 30-7-2009 மூலம் ரூ.71.14 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகளும் தொடங்கப்பட்டவுள்ளது.

59—

அடிப்படை வசதிகள்

வினா எண் 121238—திரு. கோ. அரி: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி நகருக்கு சுற்றுலாத் துறைமூலம் அனைத்து வசதிகளும் செய்ய அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

2005-2006 ஆம் ஆண்டில் மைய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ், அறுபடை வீடுகள் சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியிலுள்ள அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் மற்றும் அணுகுசாலை வசதிகள் மேற்கொள்வதற்கு ரூ.185.57 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.

2008-2009 ஆம் ஆண்டில் மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியிலுள்ள அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில் பகுதி, திருவாலங்காடு அருள்மிகு வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில், மாத்தூர் அருள்மிகு மகிஷாசுரமர்த்தினி திருக்கோயில் மற்றும் கரிம்பேடு அருள்மிகு நாதாதீஸ்வரசுவாமி திருக்கோயில் பகுதி ஆகிய இடங்களில் அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கு ரூ.138.25 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு (மாநில அரசின் பங்கு ரூ.69.13 இலட்சம் + திருக்கோயில் பங்கு ரூ. 69.12 இலட்சம்) பணிகள் நடைபெற்று வருகின்றன.

60—

சுற்றுலாத் தலம்

வினா எண் 121262—திரு. ஆர். சாமி: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, திருவாதவூரில் உள்ள மாணிக்கவாசகர் பிறந்த இல்லத்தை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, அடிப்படை வசதிகள் மட்டும் செய்து வருகிறது.

மேலூர் தொகுதி, திருவாதவூரில் உள்ள மாணிக்கவாசகர் பிறந்த இல்லம் உள்ள பகுதியை மேம்படுத்துவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

61—

சுற்றுலாத் தலம்

வினா எண் 121264—திரு. ஆர். சாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, அழகர்கோவில் மற்றும் சோலைமலை முருகன் கோவிலை சுற்றுலாத் தலமாக அறிவித்து மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது.

2005-2006 ஆம் ஆண்டில் மைய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ், அறுபடை வீடுகள் சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டம், சோலைமலை மண்டபம் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.89.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.

[2011 ஜனவரி 13

மேலும், 2008-2009 ஆம் ஆண்டில் மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ், மதுரை மாவட்டத்திலுள்ள அருள்மிகு அழகர்கோவில் பகுதியில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வதற்காக மொத்தம் ரூ. 102.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

62—

சுற்றுலாத் தலம்

வினா எண் 121350—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, அரகண்டநல்லூர் பேரூராட்சி, அதல்யநாதீஸ்வரர் ஆலயம், திருக்கோவிலூர் பேரூராட்சி, உலகளந்தப்பெருமாள் திருக்கோயில் ஆகியவற்றைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது. முகையூர் தொகுதி, அரகண்டநல்லூர் பேரூராட்சி, அதல்யநாதீஸ்வரர் ஆலயம், திருக்கோவிலூர் பேரூராட்சி, உலகளந்தப்பெருமாள் திருக்கோயில் ஆகிய பகுதிகளில் சுற்றுலா அடிப்படை வசதிகள் மேற்கொள்வது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

63—

சுற்றுலா மையம்

வினா எண் 121702—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) மானாமதுரை தொகுதியில் சுற்றுலா மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் சுற்றுலா மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

64—

சுற்றுலாத் தலம்

வினா எண் 125866—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தியாகராய நகர், உஸ்மான் சாலை மற்றும் பாண்டி பஜார் ஆகிய இடங்களை தமிழகச் சுற்றுலாத் துறையின்மூலம் சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஒரு இடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, அடிப்படை வசதிகள் மட்டும் செய்து வருகிறது. தியாகராய நகர், உஸ்மான் சாலை மற்றும் பாண்டி பஜார் ஆகிய இடங்களை மேம்படுத்துவது குறித்த செயற்குறிப்பு ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

65—

சுற்றுலாப் பாதுகாவலர்கள்

வினா எண் 126963—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பிற்கு மாமல்லபுரத்தில் சுற்றுலாக் காவலர்கள் அமைப்பு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காக சுற்றுலாத் துறையின்கீழ் சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பு ஏற்படுத்தவும், முதற்கட்டமாக மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல், இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து முக்கிய சுற்றுலாத் தலங்களில் முன்னாள் படைவீரர்களைக் கொண்டு சுற்றுலாப் பாதுகாவலர்களாக நியமிக்கவும் அரசாணை (நிலை) எண் 170, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, நாள் 2-8-2010-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

66—

அடிப்படை வசதிகள்

வினா எண் 126974—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், கொட்டிவாக்கம் கடற்கரையில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 116, செய்தி மற்றும் சுற்றுலா(சு3)த் துறை, நாள் 30-6-2006-ல் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள

2011 ஜனவரி 13]

கொட்டிவாக்கம் கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் பின்வரும் பணிகளை மேற்கொள்ள ரூ.17.05 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து அரசால் ஆணையிடப்பட்டது:

வ. எண்	பணி விவரம்	தொகை (ரூ இலட்சத்தில்)	பணியின் நிலை
1.	கொட்டிவாக்கம் கடற்கரை சாலையில் நடைபாதை அமைத்தல்	15.00	75% முடிக்கப் பட்டுள்ளன.
2.	கொட்டிவாக்கம் கடற்கரை சாலையில் குப்பத்திற்கு அருகில் கழிப்பறை கட்டுதல்	1.40	பணிகள் தொடங்கப் படவில்லை.
3	கடற்கரை சாலையில் நடைபாதை உபயோகிப்போருக்கு நிழற்குடை	0.65	பணிகள் தொடங்கப் படவில்லை.
	கூடுதல்	17.05	

பணிகள் நடைபெற்று வந்த நிலையில், உயர் நீதிமன்றம் தடையாணை பிறப்பித்தும், பின்னர் தனது தீர்ப்பில் CRZ வழிகாட்டு நெறிமுறைகளை மீறும் வகையில் நடைபாதை அல்லது சாலையினை (Joggers track or road) தற்போதும் இனி வருங்காலங்களிலும் அமைத்திடக் கூடாது என்றும், மீனவர்களுக்குத் தேவைப்படும் சாலை, பொதுக் கழிவறைகள், மின் கம்பங்கள் போன்ற அடிப்படை வசதிகளைத் தேவையான இடங்களில் செய்து கொடுக்கலாம் என்றும், தீர்ப்பளித்ததன் காரணமாக கொட்டிவாக்கம் கடற்கரைப் பகுதியில் சுற்றுலாத் திட்டப் பணிகள் மேற்கொள்வது நிறுத்தப்பட்டு 75 சதவீதம் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்குண்டான தொகை ரூ.6,59,049/- வழங்கப்பட்டது போக, மீதமுள்ள செலவழிக்கப்படாத தொகை ரூ.10,45,951/- காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டு உரிய அரசுக் கணக்கில் திரும்பச் செலுத்தப்பட்டுவிட்டது.

[2011 ஜனவரி 13

67—

பராமரித்தல்

வினா எண் 127358—டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புகழ்பெற்ற வேடந்தாங்கல் பறவை சரணாலயத்தைச் சுத்தப்படுத்தி பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

2010-2011 ஆம் ஆண்டில், மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் மாவட்டம், வேடந்தாங்கலில் உள்ள பறவைகள் சரணாலயத்தை மேம்படுத்துவதற்காக ரூ.37.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வனத் துறைமூலம் விரைவில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மேலும், சுற்றுலாப் பகுதியான வேடந்தாங்கல் பகுதிக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் வசதிகளைக் கருத்தில்கொண்டு, வேடந்தாங்கல் செல்லும் சாலையினை ஒரு வழித்தடத்திலிருந்து இரு வழித்தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்திட ரூ. 270.00 இலட்சம் 2009-2010 ஆம் நிதி ஆண்டில் மாநில அரசால் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

68—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 80757—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியம், மேலமையூர் இராமகிருஷ்ணா நகர், கந்தவேல் நகர், டி.கே.எம். ரோடு பகுதிகளுக்கு பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், ஆத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் மேலமையூர் நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ள இராமகிருஷ்ணா நகர், கந்தவேல் நகர், டி.கே.எம்.ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள மொத்த 177 குடும்ப அட்டைகளுடன் அருகிலுள்ள லேக் அவின்யூ பகுதியிலுள்ள 20 குடும்ப அட்டைகளையும் சேர்த்து 197 குடும்ப அட்டைகளுடன் இராமகிருஷ்ணா நகரில் புதிய பகுதிநேரக் கடை அமைக்கப்பட்டு 3-8-2009 முதல் செயல்பட்டு வருகிறது.

69—

நியாய விலைக் கடை

வினா எண் 80759—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம். மேலமையூர் கிராமம், 1-வது வார்டின் விரிவாக்கப் பகுதிகளில் தனியாக நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், மேலமையூர் கிராமம், 1-வது வார்டின் விரிவாக்கப் பகுதியின் இராமகிருஷ்ணா நகரில் 197 குடும்ப அட்டைகளுடன் புதிய பகுதி நேரக் கடை 3-8-2009 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

70—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 87982—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

(அ) காங்கேயம் பரஞ்சேர் வழி, சிவியார்பாளையத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், ஆலாம்பாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் நத்தக்காட்டுவலசு நியாய விலைக் கடையிலிருந்து 340 குடும்ப அட்டைகளைப் பிரித்து சிவியார்பாளையம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 29-10-2009 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

71—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 87988—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் நத்தக் காட்டுவலசில் நியாய விலைக் கடையைப் பிரித்து சிவியார்பாளையத்திலும், மருதுறை ஊராட்சி காளி வலசிலும் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் வட்டம், (தற்போது திருப்பூர் மாவட்டம்) ஆலாம்பாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்தும் நத்தக்காட்டுவலசு முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து 340 குடும்ப அட்டைகளைப் பிரித்து சிவியார் பாளையம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 27-11-2009 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மருதுறை ஊராட்சி, எஜமானர்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் மருதுறை

2011 ஜனவரி 13]

நியாய விலைக் கடையில் மொத்தம் 720 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் காளிவலசு பகுதியில் உள்ள 96 குடும்ப அட்டைகளும் அடங்கும். புதிய பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாததால் காளிவலசு கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

72—

நியாய விலைக் கடை

வினா எண் 90740—திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேத்தமங்கலம் தொகுதி, குண்டனிநாடு கிராமத்திற்குப் புதிதாக நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை பவர்காடு லேம்ப் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் பெரியமங்கலம் பகுதிநேர நியாய விலைக் கடையிலிருந்து 238 குடும்ப அட்டைகளைப் பிரித்து குண்டனிநாடு என்னும் 2-வது பகுதி நேரக் கடை (இருப்பு) கீரைக்காடு 30-12-2009 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

73—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 102185—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், எருக்களவெள்ளூர், ஜாரி புதுக்கோட்டை ஆகிய கிராமங்களுக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எருக்களவெள்ளூர் கிராமத்தில் 63 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்குடும்ப அட்டைகள் அனைத்தும் இப்பகுதியிலிருந்து 1.5 கிலோ மீட்டர் தூரத்தில் செயல்பட்டு வரும், ஜாரி புதுக்கோட்டை நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஜாரி புதுக்கோட்டை கிராமத்தில் 234 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேரக் கடை செயல்பட்டு வரும் நிலையில் மீண்டும் ஒரு பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

74—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 107362—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஓமலூர் தொகுதியில் நியாய விலைக் கடைகள் இல்லாத கிராமங்களில் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் தொகுதியில் 93 முழுநேர நியாய விலைக் கடைகளும், 36 பகுதிநேர நியாய விலைக் கடைகளும், 9 மகளிர் நியாய விலைக் கடைகளும் ஆக மொத்தம் 138 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. ஓமலூர் வட்டத்தில் 2009-ம் ஆண்டு 6 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் மற்றும் 2010-ம் ஆண்டு 5 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் 3 முழுநேர நியாயவிலைக் கடைகளும் திறக்கப்பட்டுள்ளன.

2011 ஜனவரி 13]

75—

பகுதிநேர அங்காடி

வினா எண் 115183—திரு. துரை சந்திரசேகரன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், பாதிரகுடி கிராம அங்காடியைப் பிரித்து செய்யாமங்கலம் கிராமத்துக்குப் புதிய பகுதி நேர அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், பாதிரகுடி கிராம அங்காடியைப் பிரித்து செய்யாமங்கலம் கிராமத்தில் புதிய பகுதி நேரக் கடை அமைக்கப்பட்டு 2-1-2010 முதல் செயல்பட்டு வருகிறது.

76—

பகுதிநேர அங்காடி

வினா எண் 115187—திரு. துரை சந்திரசேகரன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், அம்மையகரம் கிராமத்தில் இயங்கும் அங்காடியைப் பிரித்து பிரமன்பேட்டை கிராமத்தில் புதிய பகுதிநேர அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், அம்மையகரம் நியாய விலைக் கடையில் மொத்தம் 300 குடும்ப அட்டைகள் உள்ளன. இவற்றில் 85 குடும்ப அட்டைகள் மட்டுமே பிரமன்பேட்டை கிராமத்தில் உள்ளன. இக்கிராமத்தில் பகுதிநேர அங்காடி அமைக்கத் தேவையான கட்டடம் இலவசமாக அளிக்க எவரும் முன்வராததால்

[2011 ஜனவரி 13

அம்மையகரம் நியாய விலைக் கடையினை இரண்டாகப் பிரித்து பிரமன்பேட்டை கிராமத்தில் பகுதிநேரக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

77—

அலுவலகம்

வினா எண் 114256—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் மத்திய வருங்கால வைப்பு நிதி ஆணையர் அலுவலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு மண்டலக் குழுவின் 115-வது கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி, புதுதில்லி, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தின் கருத்தினைப் பெற்று, திருத்திய வரன்முறை கொண்டு வரப்பட்ட பின்னர், ஈரோட்டில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையர் அலுவலகம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

(ஆ) புதுதில்லி, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தின் கருத்துரு கிடைக்கப் பெற்ற பின் பரிசீலிக்கப்படும்.

78—

வேலைவாய்ப்பு

வினா எண் 124200—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யும்.

(ஆ) திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் விவரங்கள் பின்வருமாறு:

பதவியின் பெயர்	*ஒப்பளிக்கப் பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை*	*நிரப்பப் பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை*	*காலியாகவுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை*
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்	1	1	—
இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்	2	2	—
உதவியாளர்	4	2	2
இளநிலை உதவியாளர்	4	4	—
தட்டச்சர்	2	2	—
பதிவறை எழுத்தர்	1	1	—
அலுவலக உதவியாளர்	2	2	—
காவலர்	1	—	1
துப்புரவாளர்	1	—	1
மொத்தம்	18	14	4

திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் காலியாக உள்ள மேற்குறிப்பிட்டுள்ள நான்கு பணியிடங்களையும் விரைவில் நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2011 ஜனவரி 13

79—

தொழிலாளர் நல அலுவலர் அலுவலகம்

வினா எண் 124609—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் தொழிலாளர் நல அலுவலர் அலுவலகம் துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் தொழிலாளர் நல அலுவலர் அலுவலகம் தொடங்கும் செயல் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

80—

சுற்றுச் சுவர்

வினா எண் 104937—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, களம்பூர் பேரூராட்சியிலுள்ள கங்கையம்மன் கோயில், தர்மராஜா கோயில் மற்றும் மாரியம்மன் கோயிலுக்குச் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், களம்பூர் பேரூராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு கங்கையம்மன்

2011 ஜனவரி 13]

திருக்கோயிலும், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலும், இத்துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில்களாகும். இவ்விரு திருக்கோயில்களுக்கும் அதன் மதில் சுவர்கள் நல்ல நிலையில் உள்ளன. அருள்மிகு தர்மராஜா திருக்கோயில் இத்துறையின் நிருவாகத்தின்கீழ் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் மதில் சுவரும் நல்ல நிலையில் உள்ளது. எனவே, மேற்படி மூன்று திருக்கோயில்களின் சுற்றுச் சுவர்களைக் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

81—

புனரமைத்தல்

வினா எண் 107754—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், வீராபுரம் கிராமம், அமிஞ்சிக்கரை கிராமங்களில் உள்ள சிவன், பெருமாள் கோயில்களைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், அமிஞ்சிக்கரை ஒன்றியம், வீராபுரம், அருள்மிகு தேவராஜப் பெருமாள் மற்றும் சீனிவாசப் பெருமாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் அருள்மிகு சீனிவாசப் பெருமாள் சன்னதி, சுற்றுப்புற மதில் சுவர் ஆகியன நன்கொடையாளர்கள்மூலம் கட்டப்பட்டு வருகிறது. கோயில் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், இக்கிராமத்தில் திறந்தவெளி நிலப்பரப்பில் வழிபாடு ஏதுமின்றி ஆவுடையாருடன் கூடிய சிவன் சிலை ஒன்றும் உள்ளது. இத்திருக்கோயில் துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆலயம் என்பதால் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக நிதியுதவி வழங்கிட வழிவகை இல்லை. எனவே, இக்கோயில்களைத் தற்போது புனரமைத்திட வேண்டிய நிலை ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[2011 ஜனவரி 13

82—

இயல், இசை, நாடகம்

வினா எண் 108559—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக திருக்கோயில்களில் சைவ சித்தாந்தத்தைப் பரப்பவும், தமிழ், இயல், இசை, நாடகம் போன்றவற்றைப் பாதுகாக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில், சைவ சித்தாந்தத்தைப் பரப்பவும், இயல், இசை, நாடகம் போன்றவற்றைப் பாதுகாக்கவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழக திருக்கோயில்களில், திருவிழா நாட்கள், குடமுழுக்கு விழா போன்ற முக்கிய திருநாட்களில், சைவ சித்தாந்தம், திருமுறைகள், திவ்வியப் பிரபந்தம், திருக்குறள், தமிழ் இலக்கியங்கள், புராணங்கள் போன்ற பொருண்மையில், ஆன்மீக சொற்பொழிவாளர்கள், பேராசிரியர்கள், தமிழ்ச் சான்றோர்கள் ஆகியோரைக் கொண்டு சொற்பொழிவுகள், கருத்தரங்கங்கள் நடத்தப்படுகின்றன. மேலும், இயல், இசை, நாடகம் போன்றவற்றை பாதுகாத்திட, இயல், இசை, நாடகங்களில் திறம்படச் செயலாற்றிடும் குழுக்களைக் கொண்டு பக்தி இன்னிசையும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. 114 முக்கிய திருக்கோயில்களில் நூலகங்கள் தொடங்கப்பட்டு செயலாற்றி வருகின்றன. இவற்றில், சைவ சித்தாந்தம், திருமுறைகள், திவ்வியப் பிரபந்தம், திருக்குறள், இயல், இசை, நாடகம் தொடர்புடைய நூல்களை வாங்கி பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வைத்து நல்லமுறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழகத் திருக்கோயில்களில், சைவ சித்தாந்தம் தொடர்பான ஆன்மீக சொற்பொழிவுகள், கருத்தரங்கங்கள், இயல், இசை, நாடகம் தொடர்பான கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

2011 ஜனவரி 13]

83—

மண்டபம்

வினா எண் 113708—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காருவள்ளி சின்ன திருப்பதி கோயிலில் பக்தர்கள் தங்கும் மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காருவள்ளி, சின்ன திருப்பதி, அருள்மிகு பிரசன்ன வெங்கட்ரமண சுவாமி திருக்கோயிலின் வடபுறத்தில் ஏற்கெனவே பக்தர்கள் தங்கும் மண்டபங்கள் இரண்டு கட்டப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டில் உள்ளன. மேலும், ஆறு அறைகள் கொண்ட பக்தர்கள் தங்கும் விடுதிகள் மூன்று கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. எனவே இத்திருக்கோயிலில் போதியளவு பக்தர்கள் தங்கும் விடுதிகள் உள்ளதால் இத்திருக்கோயிலுக்குப் புதியதாக பக்தர்கள் தங்கும் மற்றொரு மண்டபம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

84—

பிளாஸ்டிக் டம்ளர்

வினா எண் 41339—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமண மண்டபங்கள், விருந்துகளில் பிளாஸ்டிக் டம்ளர் பயன்படுத்துவதைத் தடை செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அவற்றால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

நாளுக்குநாள் அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள்மூலம் அனைத்து திருமண மண்டபங்களுக்கும் கீழ்க்கண்டவாறு அறிக்கை அனுப்பியுள்ளது:—

ஒரு முறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட தட்டுகள், பிளாஸ்டிக் கப்புகள், பிளாஸ்டிக் மேசை விரிப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தக்கூடாது. மேற்படி பொருட்கள் பயன்பாட்டிற்குத் தடை செய்யப்பட்டுள்ளது என எழுதப்பட்ட தகவல் பலகையை (Notice Board) திருமண மண்டபத்தின் அலுவலகத்தில் வைக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு அவ்வாறே தகவல் பலகை வைக்கப்பட்டுள்ளது. அதன்படி திருமண மண்டபத்தை வாடகைக்கு எடுக்கும் நபர்கள் மேற்படி பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிபந்தனைகளைத் திருமண மண்டபங்கள் கடைப்பிடிக்கின்றனவா என மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மூலம் அவ்வப்போது ஆய்வு செய்து கண்காணிக்கப்படுகிறது. மேலும் விருந்துகள், பொது இடங்கள் மற்றும் தனிநபர்கள் ஒரு முறையே பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களைக் கட்டுப்படுத்தும் வகையில் அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்றங்களில் அதற்கான தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியுள்ளது. அதன்படி உள்ளாட்சி அமைப்புகள் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. மேலும், பொது மக்களின் ஒத்துழைப்புடன் மட்டுமே ஒரு முறை உபயோகிக்கும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினைத் தவிர்க்க முடியும்.

85—

இட ஒதுக்கீடு

வினா எண் 117383—திரு. என். நன்மாறன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, ஜெய்ஹிந்த்புரம் பகுதியில் இஸ்லாமிய சிறுபான்மையினருக்கு மயானம் அமைக்க அவனியாபுரம் நகருக்குள் இடம் ஒதுக்கித் தர அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

மதுரை, ஜெய்ஹிந்த்புரத்தில் இஸ்லாமியர்களுக்குத் தனியே மயானம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

86—

மரங்கள் பராமரித்தல்

வினா எண் **118702**—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மாரநாடு கண்மாயில் கருவேல மரங்கள் நட்டு பராமரிக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் சமூக வனக் கோட்ட கண்மாய்களில் கருவேல மரக்கன்றுகள் நடும் திட்டம் தற்போது செயல்படுத்தப்படவில்லை. தமிழ்நாடு வனத் துறையில் 1961 முதல் 1996 வரை பண்ணைக் காடுகள் சுவீடன் சர்வதேச வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் சமுதாய நிலங்களான ஏரி மற்றும் குளங்களில் உற்பத்தி செய்யப்பட்டது. 2003-2004 முதல் 2006-2007 ஆம் ஆண்டு வரை தமிழக அரசின் மாநில திட்ட ஒதுக்கீட்டில் சமுதாய நிலங்களான ஏரி மற்றும் குளங்களில் கருவேல மரங்கள் உற்பத்தி செய்யப்பட்டது. வருங்காலங்களில் ஏரி மற்றும் குளங்களில் தோட்டங்கள் எழுப்ப வேண்டாம் என்ற அரசின் கொள்கை முடிவுப்படியும், தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றும் சட்டம் 2007 (2007 ஆம் ஆண்டின் 8-வது சட்டம்) [Tamil Nadu Protection of Tanks and Eviction of Encroachment Act, 2007 (Act No.8 of 2007)]-ன்படி சட்டபூர்வமான

அதிகாரமின்றி ஏரி மற்றும் தோட்டங்களில் தோட்டம் எழுப்புவது இச்சட்டத்தின்படி குற்றமாகும் என்ற காரணத்தாலும் மாரநாடு கண்மாயில் மரங்கள் நட்டு பராமரிக்க இயலாது.

87—

மரக் கன்றுகள் நடுதல்

வினா எண் 122319—திரு. டி. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியிலுள்ள அனைத்து தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் வனத் துறை சார்பில் மரக் கன்றுகள் நட்டு பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியிலுள்ள அனைத்துத் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வனத் துறை சார்பில் மரக் கன்றுகளை நட்டு பராமரிக்கும் திட்டம் ஏதுமில்லையெனினும், தமிழக அரசு, வனத் துறையின்மூலம் இலவசமாக மரக் கன்றுகள் வழங்க பகுதி 2 திட்டத்தின்கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் வேதியரேந்தல் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 200 மரக் கன்றுகளும், 2010-2011 ஆம் ஆண்டில் ஓ.வி.சி. தொடக்கப் பள்ளிக்கு 200 மரக் கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அரசு மற்றும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், தேவையின் அடிப்படையில் இலவசமாக மரக் கன்றுகளை வனத் துறையிடமிருந்து பெற்று, நிறுவனமே மரக் கன்றுகளை நட்டு பராமரிக்கலாம் என்ற திட்டம் செயலாக்கத்தில் உள்ளது.

88—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 123673—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை முதல் மூணார் வரை செல்லும் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை முதல் மூணார் வரை செல்லும் சாலையின் மொத்த நீளம் 90 கி.மீ. ஆகும். இதில் ஆனைமலை புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட ஆனை மலை காப்புக் காடு வழியாக வன நிலத்தில் செல்லும் சாலையின் நீளம் 14.80 கி.மீ. ஆகும். இச்சாலையின் சராசரி அகலம் 20.11 மீ. ஆகும். இது வன விலங்குகளின் நடமாட்டம் மிகவும் அதிகமாக உள்ள பகுதியாகும். இச்சாலையை மேலும் அகலப்படுத்தும் பட்சத்தில் வன விலங்குகளின் நடமாட்டத்திற்கு மேலும் இடையூறு நேரிடும். இச்சாலையில் 25/6 கி.மீ.-ல் உள்ள குறுகலான இரு கொண்டை ஊசி வளைவுகளை மேம்படுத்த வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன்படியும், தேசிய புலிகள் காப்பக ஆணையத்தின் கீழும் அனுமதி பெற கருத்துரு, நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து பெறப்பட்டது. கருத்துரு முழுமையான விவரங்களுடன் இல்லாததால், முழுமையான விவரங்களுடன் கருத்துருவை மீண்டும் அனுப்பி வைக்குமாறு நெடுஞ்சாலைத் துறை கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளது. எனவே, புலிகள் காப்பகத்திற்குட்பட்ட ஆனைமலை காப்புக்காடு வழியே செல்லும் உடுமலைப்பேட்டை-மூணார் சாலையை அகலப்படுத்த அவசியம் ஏற்படவில்லை.

89—

வன விலங்குகளைப் பாதுகாத்தல்

வினா எண் 129082—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வன விலங்குகளைப் பாதுகாக்க, சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் வன உயிரினங்களைப் பாதுகாக்க 35796288 எக்டேர் பரப்பளவில் 10 வன உயிரின சரணாலயங்களும் 17074.59 எக்டேர் பரப்பளவில் 12 பறவைகள் சரணாலயங்களும், 82763.00 எக்டேர் பரப்பளவில் 5 தேசிய பூங்காக்களும் மற்றும் 2.84 எக்டேர் பரப்பளவில் பாதுகாப்பு ஒதுக்குப் பகுதி ஒன்றும் உள்ளது. மத்திய அரசின் யானைகள் பாதுகாப்புத் திட்டம், புலிகள் காப்பகத் திட்டம், வன உயிரின சரணாலய மேம்பாட்டுத் திட்டம், தேசிய பூங்கா மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின்கீழ் மத்திய அரசிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீடு பெற்று வன உயிரினங்களைச் சிறப்பாகப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், வன உயிரினங்கள் காட்டை விட்டு வெளியே வராமல் தடுக்க காட்டை ஒட்டிய பகுதிகளில் சூரிய மின்வேலிகள் மற்றும் யானைகள் புகா அகழிகள் (EPT) தோண்டப்பட்டுள்ளன. வறட்சி ஏற்படுகின்ற காலங்களில் வன உயிரினங்கள் இரை தேடியோ, நீர் ஆதாரம் தேடியோ காட்டைவிட்டு வெளியே வரும் பட்சத்தில் உயிரிழப்பு, பயிர்ச் சேதாரம், பொருட் சேதாரம், கால்நடைச் சேதாரம் ஏற்படுகின்றன. சேதாரத்தின் தன்மைக்கேற்ப மனுதாரரின் குடும்பத்தாருக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வரப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

90—

பறவைகளைப் பராமரித்தல்

வினா எண் 129083—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்நாடு மற்றும் வெளிநாட்டுப் பறவைகளைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். தமிழகத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பறவைகளைப் பராமரிக்க 1707.59 எக்டேர் பரப்பளவில் 12 பறவைகள் சரணாலயங்கள் உள்ளன. மத்திய அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ் வருடந்தோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. அக்டோபர் முதல் பிப்ரவரி வரையுள்ள காலங்களில் நீர்நிலைகளைத் தேடி பல மைல் தொலைவிற்கு அப்பாலிருந்து பல சிறப்பு இனங்களைச் சார்ந்த வெளிநாட்டுப் பறவைகள் இச்சரணாலயங்களில் தங்கி இனப்பெருக்கம் செய்துவிட்டு செல்கின்றன. மேலும், சரணாலயங்களில் மட்டுமல்லாது நீர்நிலைகளிலுள்ள பறவைகளை, பாதுகாப்புகளையும் மீறி வேட்டையாடுபவர்கள் மீது வன உயிரின (பாதுகாப்புச்) சட்டம், 1972-ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகிறது. எனவே, பறவைகளைப் பாதுகாப்பதில் வனத் துறை மும்முரமாகச் செயல்பட்டு வருகிறது.

91—

கப்பல் போக்குவரத்து

வினா எண் **115122—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடியில் இருந்து இலங்கை தலைமன்னாருக்கு மீண்டும் கப்பல் போக்குவரத்தைத் தொடங்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1964 வரை, இந்தியாவிலுள்ள தனுஷ்கோடியிலிருந்து இலங்கை தலைமன்னாருக்கு கப்பல் போக்குவரத்து நடைபெற்று வந்தது. 1964 ஆம் ஆண்டில் உருவான

[2011 ஜனவரி 13

கடுமையான புயல் காரணமாக துறைமுகம் உட்பட தனுஷ்கோடி முழுமையாக அழிந்துவிட்டதால், இங்கு நடைபெற்று வந்த கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டுவிட்டது. மேலும், கப்பலணையும் மேடையும் பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் அகற்றப்பட்டு விட்டது. எனவே, இராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கு கப்பல் போக்குவரத்து தொடங்குவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

92—

புது துறைமுகம்

வினா எண் 117783—திரு. விஜயல் எஸ். சேகர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் விரைவில் புது துறைமுகம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் துறைமுகத்தினை மேம்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டு, இதற்கான தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை தமிழ்நாடு கடல்சார் வாரியத்தால் ஆலோசகர்மூலம் தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இவ்வறிக்கையின் அடிப்படையில், இத்துறைமுகத்தை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

(ஆ) குளச்சல் துறைமுக மேம்பாடு பொருளாதார சாத்திய அடிப்படையில் மேம்படுத்தப்பட ஏற்புடையதாக இருப்பின், வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி வாயிலாக தேர்வு செய்யப்படவுள்ள துறைமுக மேம்பாட்டாளர்மூலம் இத்திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

2011 ஜனவரி 13]

93—

பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

வினா எண் 117762—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க தாய்க்கு வயது வரம்பு திருமணத்தின்போது 21 என்பதை 18 ஆக குறைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் விண்ணப்பிக்கும் குழந்தையின் தாய்க்கு, திருமணத்தின்போது 18 வயது நிறைவடைந்திருந்தால் போதுமானது என்ற விதிமுறைதான் தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது.

94—

தார்ச் சாலை

வினா எண் 6175—திரு. கே.எம். இளவழகன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வரகூர் ஆதி திராவிடர் காலனி மயானத்திற்குச் செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்றி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வரகூர் ஆதி திராவிடர் காலனியை ஒட்டியே நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக தார்ச் சாலை பராமரிக்கப்படுவதால் மயானத்திற்குச் செல்ல தனியாக தார்ச் சாலை அமைக்க அவசியம் எழவில்லை.

95—

காங்கிரீட் சாலை

வினா எண் 19213—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஆறுதொழுவு தேவணம்பாளையம் ஆதி திராவிடர் காலனியில் கான்கிரீட் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், காங்கேயம் தொகுதி, குண்டடம் வட்டாரம், ஆறுதொழுவு ஊராட்சி, தேவணம்பாளையம், சுண்ணாம்புமேடு, கிறிஸ்துவ தெருவில் 2007-2008 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலைத் திட்டத்தின்கீழ் சிமென்ட் தளம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

96—

கறவை மாடுகள் வழங்குதல்

வினா எண் 98494—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சின்னக்கண்ணனூர் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர்களுக்குக் கறவை மாடுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் சின்னக்கண்ணனூர் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர்கள் அந்த மாவட்டத்தில் (சிவகங்கை) உள்ள தாட்கோ அலுவலகத்தில் முறையான விண்ணப்பம் பெற்று சாதிச் சான்று, வருமானச் சான்று, குடும்ப அட்டை நகல், திட்ட மதிப்பீடு போன்ற தகுந்த சான்றுகளின் நகல்களை இணைத்தும், கடன் வழங்கும் வங்கியின் பெயர் மற்றும் விலாசம் ஆகியவை தெளிவாக தெரிவித்து, விண்ணப்பித்தால், அவர்களை நேர்முகத் தேர்வின் மூலமாக மாவட்ட அளவிலான தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்பட்டு, வங்கிக்கு பரிந்துரைக்கப்பட்டு கடன் வழங்கக் கூடிய வங்கி (படிவம் III), சம்மதக் கடிதம் (Acceptance) கிடைக்கப்பெற்றவுடன் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெறப்பட்டு தாட்கோமூலம் அவர்களுக்குக் கடன் உதவி வழங்கப்படும்.

[2011 ஜனவரி 13

97—

கறவை மாடுகள் வழங்குதல்

வினா எண் 118734—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பூவந்தி ஆதி திராவிடர் காலனி பெண்களுக்கு மானியத்துடன் கறவை மாடுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, பூவந்தி ஆதி திராவிடர் காலனி பெண்கள் அந்த மாவட்டத்தில் உள்ள தாட்கோ அலுவலகத்தில் முறையான விண்ணப்பத்தினை இலவசமாகப் பெற்று விண்ணப்பித்தால் தகுதியிருப்பின் தாட்கோ மானியத்துடன் கறவை மாடுகள் வழங்க ஆவன செய்யப்படும். தற்சமயம் 15 நபர்களுக்கு விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டு, தகுந்த சான்றிதழ்களுடன் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள தாட்கோ, மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் கறவை மாடுகள் வழங்க மானியம் விடுவிக்கப்படும்.

98—

மாணவர் விடுதி

வினா எண் 121607—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

ஓமலூர் தொகுதி, நடுப்பட்டி ஊராட்சி, நடுப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி பகுதியில் பழங்குடியின மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், நடுப்பட்டி கிராமம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஏற்கெனவே பழங்குடியினர் நல மாணவர் விடுதி இயங்கி வருவதால் புதியதாக வேறு விடுதி அமைக்கும் அவசியம் எழவில்லை.

99—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 124407—திரு. வை. காவேரி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் பகுதியில் கூட்டுறவு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் வட்டத்தில், நல்லாம்பட்டி (ஆதனூர்) மற்றும் ஏரியூர் பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 2 மொத்த பால் குளிர்விப்பு மையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அம்மையங்களைச் சுற்றியுள்ள 31 பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களை இணைத்து, நாளது தேதியில் 6,385 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, குளிரூட்டம் செய்யப்பட்டு அனைத்து பாலும் சென்னைப் பெருநகரப் பால் பண்ணைக்கு நேரடியாக அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், பெண்ணாகரம் வட்டத்திலிருந்து சுமார் 30 கிலோ மீட்டர்

[2011 ஜனவரி 13

தொலைவில் உள்ள தருமபுரி ஒன்றியத்தில் நாளொன்றுக்கு, 50,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட இடங்களில் தொகுப்பு பால் குளிர்விப்பு மைய சங்கங்கள் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்கள் செயல்பட்டு வருவதால், பெண்ணாகரத்தில் புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

100—

பால் சேமிப்பு நிலையம்

வினா எண் 127377—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் பகுதியில் குளிர்சாதன பால் சேமிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டிலிருந்து 18 கிலோ மீட்டர் தொலைவில் சானூர் பால் குளிரூட்டு நிலையம் 30,000 லிட்டர் கையாளும் திறனுடன் செயல்படுகிறது. மேலும், செங்கல்பட்டிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருக்கழுக்குன்றத்தில் 3,000 லிட்டர் கொள்ளளவும், 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சாலவாக்கத்தில் 5,000 லிட்டர் கொள்ளளவும், 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள உத்திரமேரூரில் 5,000 லிட்டர் கொள்ளளவும் கொண்ட மொத்த பால் குளிர்விப்பான்களும் செயல்படுகின்றன. இவற்றின் மொத்த பால் குளிர்விக்கும் திறன் 43,000 லிட்டர் ஆகும். ஆனால், இப்பகுதியில் தினசரி கொள்முதல் செய்யப்படும் பாலின் அளவு 14,210 லிட்டர் மட்டுமே ஆகும். எனவே, மேற்குறிப்பிட்ட கையாளும் திறன் முழுமையும் பயன்படுத்தக்கூடிய அளவில் பால் கொள்முதல் இல்லாத நிலையில், திருக்கழுக்குன்றத்தில் மேலும் ஒரு மொத்த பால் குளிர்விப்பான் (Bulk Milk Cooler) அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

இணைப்பு—II

(1ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க)

உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் அமைச்சர்கள் விடைகளுடன்

(பட்டியல்கள் 4 முதல் 8 வரை) @

பட்டியல்–4

1—

கட்டடம்

வினா எண் 2569—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை சார்நிலைக் கருவூலத்திற்குப் புதியதாகக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

உடுமலைப்பேட்டை சார்நிலைக் கருவூலத்திற்கெனப் புதியதாகக் கட்டடம் கட்ட தேவைப்படும் நிலம், வருவாய்த் துறையால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கருவூலக் கணக்குத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இயக்குநர், கருவூலக் கணக்குத் துறையிடமிருந்து கட்டடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு பற்றிய கருத்துரு பெறப்பட்டவுடன் பரிசீலிக்கப்பட்டு உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2011 ஜனவரி 13

2—

சிறுசேமிப்பு

வினா எண் 15559—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறுசேமிப்புமூலம் அதிக நிதி வசூலிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிறுசேமிப்பு குறித்த விழிப்புணர்வைப் பொது மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் விளம்பர நோட்டிஸ்கள், ஆட்டோ விளம்பரம், கிராமங்களில் சிறுசேமிப்பு நாடகம் நடத்துதல், சிறப்பு முகாம்கள் நடத்துதல், அதிக வசூல் செய்த முகவர்கள், அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்குப் பரிசுத் திட்டம் அறிவித்தல் ஆகிய விளம்பர யுக்திகளைப் பின்பற்றி சிறு சேமிப்புமூலம் அதிக வசூல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறுசேமிப்பு வசூலினை மேம்படுத்த இந்நிதியாண்டில் புதியதாக 232 சிறுசேமிப்பு முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்நிதியாண்டில் கோவை மாவட்டத்தில் முகவர் ஊக்கத் தொகையாக ரூ.2.68 கோடி வழங்கப்பட்டுள்ளது.

3—

அடையாள அட்டை

வினா எண் 22389—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை அனைவருக்கும் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்படாமல் விடுபட்டுள்ள வாக்காளர்கள் மற்றும் வாக்காளர் பட்டியலில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள வாக்காளர்கள் ஆகிய அனைவருக்கும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளைத் தயாரித்து விநியோகிப்பது என்பது தொடர்ந்து நடைபெறும் ஒரு நடைமுறையாகும். இதுவரை மொத்த வாக்காளர்களில் 96 சதவிகிதத்தினருக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்காகப் புகைப்படம் சேகரிக்கும் பணி முடிவடைந்துள்ளது. மீதம் உள்ள 4 (நான்கு) சதவிகிதத்தினருக்கும் புகைப்படங்கள் சேகரிக்கப்பட்டவுடன் அவர்களுக்கும் அடையாள அட்டை விரைவில் வழங்கப்படும்.

4—

வாக்குச் சாவடி.

வினா எண் 23116—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஆண்டியப்பனூர் ஊராட்சி, குண்டுரெட்டியூர் கிராமத்திற்குத் தனியாக வாக்குச் சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

தற்போது தமிழ்நாட்டில் சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. சட்டமன்றத் தொகுதிகள் மறுவரையறை செய்து முடிக்கப்பட்டபின், வாக்குச் சாவடிகளை மறுசீரமைக்கும் பணியையும் மேற்கொள்ள இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணையிடும். இந்தியத் , தேர்தல் ஆணையத்தின் அறிவுரை பெறப்பட்டவுடன், இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

5—

வாக்குச் சாவடி

வினா எண் 23118—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, இருணாபட்டு ஊராட்சியில் உள்ள பாப்பனூர் கிராமத்திற்குத் தனியாக வாக்குச் சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

தற்போது தமிழ்நாட்டில் சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. சட்டமன்றத் தொகுதிகள் மறுவரையறை செய்து முடிக்கப்பட்டபின், வாக்குச் சாவடிகளை மறுசீரமைக்கும் பணியையும் மேற்கொள்ள இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணையிடும். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரை பெறப்பட்டவுடன், இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

6—

வாக்குச் சாவடி

வினா எண் 23119—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, மிட்டூர் ஊராட்சி, ரெட்டிவலசை கிராமத்திற்குத் தனியாக வாக்குச் சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

தற்போது தமிழ்நாட்டில் சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்யும் பணி நடைபெற்று வருகின்றது.

2011 ஜனவரி 13]

சட்டமன்றத் தொகுதிகள் மறுவரையறை செய்து முடிக்கப்பட்டபின், வாக்குச் சாவடிகளை மறுசீரமைக்கும் பணியையும் மேற்கொள்ள இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணையிடும். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரை பெறப்பட்டவுடன், இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

7—

வாக்காளர் பட்டியல்

வினா எண் 23792—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், குட்டப்பட்டி ஊராட்சி, மலையடிப்பட்டி, எல்லைக்குட்டையூர் பகுதி வாக்காளர் பட்டியலைச் சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளபடி 142 மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதியைத் தவிர தமிழ்நாட்டிலுள்ள இதர 233 சட்டமன்றத் தொகுதிகளிலும் புகைப்பட வாக்காளர் பட்டியல் சுருக்குமுறைத் திருத்தம், 25-5-2007 ஆம் நாள் அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீட்டுடன் தொடங்குகின்றது.

11-6-2007 அன்று வரை பெயர்களைச் சேர்க்க/நீக்க/திருத்த மனுக்கள் பெறப்படும். பெறப்பட்ட மனுக்களின் மேல் முடிவெடுத்தலுக்கான கால அவகாசம் 21-06-2007 வரை ஆகும். 02-07-2007 வரையிலான காலத்தில் புகைப்படம் இல்லாதோரைப் புகைப்படம் எடுத்து, துணைப் பட்டியல் அச்சிடும் பணி நடைபெறும். அனைத்துத் தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி நடைபெறவுள்ளதால் தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி

[2011 ஜனவரி 13

ஒன்றியம், குட்டப்பட்டி ஊராட்சி, மலையடிப்பட்டி, எல்லைக்குட்டையூர் பகுதியின் வாக்காளர் பட்டியலும் திருத்தப்பட்டு, இறுதிப்பட்டியல்கள் 11-07-2007 அன்று வெளியிடப்படும்.

8—

வாக்குச் சாவடி

வினா எண் 31299—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காட்டாண்டிகுப்பம் ஊராட்சி, துவக்கப் பள்ளியில் வாக்குச் சாவடி அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 64. பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காட்டாண்டிகுப்பம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியில் ஏற்கெனவே வாக்குச் சாவடி எண் 91 (ஊராட்சி ஒன்றியத் துவக்க பள்ளி, பிளாக் 6, காட்டாண்டிகுப்பம்) என்ற வாக்குச் சாவடி அமைக்கப்பட்டு, அனைத்து வாக்காளர்களும் வாக்களிக்க ஏதுவாக உள்ளது.

9—

துணைக் கருவூலம்

வினா எண் 32376—திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, பொன்னமராவதியில் துணைக் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

(அ) சார்நிலைக் கருவூலங்களில் பணியாளர்களின் வேலைப் பளுவினைப் பொறுத்தும், அருகிலுள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் அடிப்படை வசதிகளைச் சார்ந்தும், அவைகளின் ஒப்புதல் பெறவேண்டிய அவசியம் இருப்பதாலும், புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்கு அதிகமான தொடர் செலவினம் தேவைப்படுவதாலும், பொன்னமராவதி தாலுக்கா தலைமையிடமாக இல்லாததாலும், பொன்னமராவதி அமைந்துள்ள திருமயம் வட்டத்துக்கு திருமயத்திலேயே சார்நிலைக் கருவூலம் உள்ளதாலும் பொன்னமராவதியில் புதிதாக சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்கான சாத்திக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு விடையளிக்கும் அவசியம் எழவில்லை.

10—

வாக்குச் சாவடி

வினா எண் 32628—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சோமத்தூரில் வாக்குச்சாவடி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தற்போது தமிழ்நாட்டில் சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. சட்டமன்றத் தொகுதிகள் மறுவரையறை செய்து முடிக்கப்பட்டபின், வாக்குச் சாவடிகளை மறுசிரமைக்கும் பணியையும் மேற்கொள்ள இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணையிடும். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரை பெறப்பட்டவுடன், இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

11—

துணைக் கருவூலம்

வினா எண் 55782—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் துணைக் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

(அ) வால்பாறையில் சார்நிலைக் கருவூலம் சொந்தக் கட்டடத்தில், வால்பாறை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அருகில் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு விடையளிக்கும் அவசியம் எழவில்லை.

12—

கருவூலம்

வினா எண் 56781—திரு. வை. காவேரி: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி தாலுக்காவில் கருவூலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

(அ) சார்நிலைக் கருவூலங்களில் பணியாளர்களின் வேலைப் பளுவினைப் பொறுத்தும், அருகிலுள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் அடிப்படை வசதிகளைச் சார்ந்தும், அவைகளின் ஒப்புதல் பெறவேண்டிய அவசியம் இருப்பதாலும், புதிய சார்நிலைக்

2011 ஜனவரி 13]

கருவூலம் அமைப்பதற்கு அதிகமான தொடர் செலவினம் தேவைப்படுவதாலும், எடப்பாடி தாலுக்கா, சங்ககிரி சார்நிலைக் கருவூலத்திற்கு மிக அண்மையில் இருப்பதாலும், எடப்பாடியில் புதியதாக சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு விடையளிக்கும் அவசியம் எழவில்லை.

13—

துணைக் கருவூலம்

வினா எண் 57854—திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தலைவாசல் தொகுதி, கெங்கவல்லி வட்டாட்சியர் அலுவலகத்தில் துணைக் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

சார்நிலைக் கருவூலங்களில் பணியாளர்களின் வேலைப் பளுவினை பொறுத்தும், அருகிலுள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் அடிப்படை வசதிகளைச் சார்ந்தும், அவைகளின் ஒப்புதல் பெறவேண்டிய அவசியம் இருப்பதாலும், புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்கு அதிகமான தொடர் செலவினம் தேவைப்படுவதாலும், தலைவாசல் தொகுதி, கெங்கவல்லி தாலுக்காவில் புதிதாக சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

14—

சார்நிலைக் கருவூலம்

வினா எண் 60391—திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, இலுப்பூர் வட்டாட்சியர் அலுவலகம் செயல்படும் இடத்தில் சார்நிலைக் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு பேராசியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

வங்கிசாரா சார்நிலைக் கருவூலங்கள் வங்கி சார்ந்த கருவூலங்களாக மாற்றப்பட்டுள்ளதாலும், அனைத்து சார்நிலைக் கருவூலங்களில் கணினிமயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாலும், மின் ஆளுகையின்கீழ் கருவூலக் கணக்குத் துறை மாற்றப்பட்டு வருவதாலும், சார்நிலைக் கருவூலங்களை அமைப்பதற்கு அதிகமான தொடர் செலவினம் தேவைப்படுவதாலும், வட்டத் தலைமையிடமான இலுப்பூரில் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்குப் புதியதாக வாடகை/சொந்தக் கட்டடம் தேவைப்படுவதாலும், குறைந்தது 7 எண்ணிக்கையிலான பணியாளர்கள் அமர்த்தப்பட்டு தொடர் செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், கணினிமயமாக்கப்படுவதன் விளைவாக கருவூலப் பணியாளர்களின் பணிகள் குறைய வாய்ப்புள்ளதாலும் மேலும் ஓய்வூதியதாரர்களுக்கு முதல் முறையாக ஓய்வூதியம் வழங்கப்படுவது மட்டுமே கருவூலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பின்னர் வங்கிகளின் மூலமே மேற்கொள்ளப்படுவதால் வேலைப்பளு குறைவாகவே இருக்கும். எனவே, இலுப்பூரில் சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை.

15—

சார்நிலைக் கருவூலம்

வினா எண் 62427—திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனமரத்துப்பட்டி தொகுதி, வாழப்பாடி வட்ட தலைநகரில் சார்நிலைக் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

(அ) சார்நிலைக் கருவூலங்களில் பணியாளர்களின் வேலைப் பளுவினைப் பொறுத்தும், அருகிலுள்ள தேசியமயமாக்கப்பட்ட

2011 ஜனவரி 13]

வங்கிகளின் அடிப்படை வசதிகளைச் சார்ந்தும், அவைகளின் ஒப்புதல் பெறவேண்டிய அவசியம் இருப்பதாலும், புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்கு அதிகமான தொடர் செலவினம் தேவைப்படுவதாலும், பனமரத்துப்பட்டி தொகுதி, வாழப்பாடி வட்டத் தலைநகரில் புதிதாக சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு விடையளிக்கும் அவசியம் எழவில்லை.

16—

சிறுசேமிப்பு ஊக்கத் தொகை

வினா எண் 77224—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறுசேமிப்பு முகவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஊக்கத்தொகையினைத் தொடர்ந்து வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் முகவர்களால் திரட்டப்படும் முதலீடுகளுக்கு ஊக்கத் தொகை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அரசாணை நிலை எண் 240, நிதித் (சி.சே). துறை, நாள் 16-06-2008-ன்படி கீழே குறிப்பிட்டுள்ள வீதத்தில் முகவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்பு (SAS)	0.5 சதவீதம்
மகளிர் முகவரமைப்பைச் சார்ந்த முகவர்களுக்கு (MPKBY)	2 சதவீதம்

மேற்கூறப்பட்ட முகவர் ஊக்கத் தொகை மாறுபட்ட சூழலில் மறு ஆணை பிறப்பிக்கும் வரை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

இவ்வாறாக சிறுசேமிப்பு முகவர்களுக்கான ஊக்கத் தொகை திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

[2011 ஜனவரி 13

17—

கட்டடம்

வினா எண் 123666—திரு. ச. லட்சுமணன்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

போடிநாயக்கனூர் தொகுதி, போடிநாயக்கனூர் சார்நிலைக் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

போடிநாயக்கனூர் சார்நிலைக் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

18—

மின்மாற்றி

வினா எண் 76—திரு. என். நன்மாறன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை, அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் துணை மின்மாற்றி ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை அரசு இராஜாஜி மருத்துவனையில் இரண்டு உயர் அழுத்த மின் இணைப்புகள் உள்ளன. அவை (1) மின் இணைப்பு எண் 6, அனுமதிக்கப்பட்ட மின் பளு 375 கே.வி.ஏ. (2) மின் இணைப்பு எண் 11, அனுமதிக்கப்பட்ட மின் பளு 375 கே.வி.ஏ. இந்த மருத்துவமனைக்குள் மின்சார சாதனங்கள் மற்றும் மின் அமைப்புகள் பொதுப் பணித் துறையினரால் (மின் பிரிவு) பராமரிக்கப்பட்டு வருவதால், இதில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தொடர்பில்லை. எனவே, புதிதாக மின்மாற்றி தமிழ்நாடு மின்சார வாரியத்தால் நிறுவப்பட வேண்டியதில்லை.

2011 ஜனவரி 13]

19—

அலுவலகம்

வினா எண் 212—திரு. வீ.பெ. துரைசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்ட மின் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் எப்போது தொடங்கப்பட உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

மேட்டூர் மற்றும் சேலம் மின் பகிர்மான வட்டங்களில் மொத்தம் 13 கோட்டங்கள் உள்ளன. இதில் நாமக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மின் பகிர்மான வட்டம் அமைக்கும் கருத்துரு தற்போது வாரியத்தின் பரிசிலனையில் இல்லை.

20—

திறன் உயர்த்துதல்

வினா எண் 341—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மருத்தூரில் இயங்கி வரும் 101 MW எரிவாயு மின்கழலி மின் உற்பத்தி நிலையத்தின் (Gas Turbine) திறனை 200 MW அளவிற்குத் திறன் அதிகரிக்க தேவையான எரிவாயு அப்பகுதியில் கிடைப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், திறன் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) 200 மெகா வாட் அளவிற்குத் திறன் அதிகரிக்க தேவையான எரிவாயு அப்பகுதியில் கிடைக்கவில்லை. தற்சமயம் அப்பகுதியில் கிடைக்கும் எரிவாயு, தற்பொழுதுள்ள மின் நிலையங்களின் தேவையை மட்டும் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

21—

மின் கட்டணம்

வினா எண் 466—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உள்ளாட்சிமூலம் பொது பயன்பாட்டிற்கான குடிநீர் விசைப் பம்பு மற்றும் தெரு விளக்கு ஆகியவற்றின் மின் கட்டணங்களைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி மின்சாரத் துறை அமைச்சர்:

உள்ளாட்சிமூலம் பொது பயன்பாட்டிற்கான குடிநீர் விசைப் பம்பு மற்றும் தெரு விளக்கு ஆகியவற்றுக்கான மின் கட்டணங்கள் குறைவாகத்தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதாவது, தற்போது ஒரு யூனிட் மின்சாரத்திற்கு சராசரியாக அடக்க விலை ரூபாய் 3.58 ஆகும். ஆனால் தெரு விளக்கு மற்றும் குடிநீர் விசைப் பம்புகளுக்கான மின் கட்டணம் சராசரியாக யூனிட்டிற்கு ரூபாய் 3.42 என்று தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, ஒரு யூனிட்டுக்கு ஆகும் செலவைவிட குறைந்த அளவு கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

22—

துணை மின் நிலையம்

வினா எண் 513—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை தொகுதி, துவரங்குறிச்சியில் 33 **K.V.A.** *துணை மின் நிலையம் அமைக்கும் பணி உடனடியாக தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை தொகுதி, துவரங்குறிச்சியில் ஒரு புதிய 33/11கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் இத்துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்படும்.

23—

மின்சாரம்

வினா எண் 552—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தாம்பரம் தொகுதி, செம்பாக்கம், மாடம்பாக்கம் மற்றும் சிட்லபாக்கம் பகுதியில் குறைந்த அழுத்த மின்சாரம் உள்ளதால், அதனை நீக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

தாம்பரம் தொகுதி, செம்பாக்கம், மாடம்பாக்கம் மற்றும் சிட்லபாக்கம் பகுதியில் குறைந்த மின்னழுத்தம் நிலவி வருவதைக்

[2011 ஜனவரி 13

கருத்தில் கொண்டு அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு மாடம்பாக்கத்தில் ஒரு துணை மின் நிலையம் நிறுவப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் 5-9-2006 அன்று தொடங்கப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.

24—

மின்சாரம்

வினா எண் 670—திரு. ஆர். ஞானதாஸ்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விவசாய மின் இணைப்பு கொடுக்கப்பட்டு, இணைப்புதாரர் இறந்ததற்குப் பின்பு பெயர் மாற்றம் பெறுவதிலுள்ள வழிமுறைகளை எளிதாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

விவசாய மின் இணைப்பு கொடுக்கப்பட்டு, இணைப்புதாரர் இறந்ததற்குப் பிறகு, வாரிசுதாரர்களின் பெயரில் பெயர் மாற்றம் பெறுவதற்கான வழிமுறைகள் எளிதாக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

25—

மின்சாரம்

வினா எண் 673—திரு. ஆர். ஞானதாஸ்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மின் பற்றாக்குறையைத் தவிர்க்க மரபு சார்ந்த முறையில் மின்சார உற்பத்தியை அதிகரிக்க, தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் வருங்காலத்தில் மின் பற்றாக்குறையைத் தவிர்க்கும் நோக்கில், மரபு சார்ந்த முறையில் மின் உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒன்பது புதிய புனல் மின் திட்டங்கள், மூன்று புதிய அனல் மின் திட்டங்கள் மற்றும் கூட்டு ஒப்பந்த அடிப்படையில் மூன்று அனல் மின் திட்டங்களையும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

26—

இலவச மின்சாரம்

வினா எண் 784—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் நெசவாளர்களுக்கு நெசவுத் தொழிலுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு தனது 2006-07 வருடத்திற்கான நிதிநிலை அறிக்கையில் கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதத்திற்கு 100 யூனிட்டுகள் வரையும் விசைத்தறி நெசவாளர்களுக்கு (10HP வரை) இரு மாதத்திற்கு 500 யூனிட்டுகள் வரையும் இலவசமாக மின்சாரம் வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

27—

மின்சாரம்

வினா எண் 786—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

(அ) காங்கேயம் தொகுதி, நத்தகாடையூர், பழைய கோட்டைப் பகுதியில் விசைத்தறிக்கு மின்விசை 80 KV-யிலிருந்து 110 KV-யாக உயர்த்தி மும்முனை இணைப்பு வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, நத்தகாடையூர், பழைய கோட்டையிலுள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110/33-11 கி.வோ. துணை மின் நிலையமாக உயர்த்த கருத்துரு பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது. தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இருப்பின், 11-வது ஐந்தாண்டுப் பெருந்திட்டக் காலப் பகுதியில் மேற்கூறிய துணை மின் நிலையம் அமைத்திட தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

28—

கட்டடம்

வினா எண் 795—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி மின்வாரிய அலுவலகம் மற்றும் மின்சாரத் துறை கட்டுமானப் பிரிவு அலுவலகம் ஆகியவற்றிற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

சீர்காழியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள வைத்தீஸ்வரன் கோவில் துணை மின் நிலைய வளாகத்தில் கட்டுமானப் பிரிவு கட்டடம் கட்ட இயலும். அதன் மதிப்பு சுமார் ரூ. 25,00,000/- அதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அனுமதி கிடைக்கப்பெற்று, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன், கட்டடம் கட்டப்படும்.

2011 ஜனவரி 13]

29—

மின்மாற்றி

வினா எண் 796—திரு. எம். பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, கீழ்சட்டநாதபுரம் ஊராட்சி, நிம்மேலி கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, கீழ்சட்டநாதபுரம் ஊராட்சி, நிம்மேலி கிராமத்தில் புதியதாக 21-5-2005 அன்று மின்மாற்றி அமைக்கப்பட்டது.

30—

இலவச மின்சாரம்

வினா எண் 808—திரு. அருள் அன்பரசு: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோளிங்கர் தொகுதி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு தனது 2006-2007 வருடத்திற்கான நிதிநிலை அறிக்கையில் கைத்தறி நெசவாளர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு 100 யூனிட்டுகள் வரையும் விசைத்தறி நெசவாளர்களுக்கு (10HP வரை) இரண்டு மாதங்களுக்கு

500 யூனிட்டுகள் வரையும் இலவசமாக மின்சாரம் வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

31—

தெரு விளக்குகள்

வினா எண் 1186—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு *மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி ஊராட்சியில் பழுதடைந்துள்ள தெரு விளக்குகளையும், மின் கம்பிகளையும் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி ஊராட்சியில் 20 கி.மீ. பழுதடைந்த கம்பிகள் ஏற்கெனவே மாற்றப்பட்டுள்ளன. மேலும், பழுதடைந்த மின் கம்பிகள் மாற்றப்பட வேண்டும். அதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

32—

மின் கம்பங்கள்

வினா எண் 1189—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு *மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி மற்றும் ஜல்லிப்பட்டி ஆகிய ஊராட்சிகளிலுள்ள பழுதடைந்துள்ள மின் கம்பங்களையும் மின் கம்பிகளையும் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி மற்றும் ஜல்லிப்பட்டி ஊராட்சிகளில் பழுதடைந்துள்ள மின் கம்பங்கள் மற்றும் மின் கம்பிகள் ஏதுமில்லை.

33—

மின்சாரம்

வினா எண் 1193—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, சோமந்துரை மற்றும் தென்சித்தூர் ஆகிய ஊராட்சிகளில் பழுதடைந்துள்ள மின் கம்பங்களையும் மின் கம்பிகளையும் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, சோமந்துரை மற்றும் தென்சித்தூர் ஊராட்சிகளில் பழுதடைந்த 43 மின் கம்பங்களும் கடந்த ஜூன் 2006-க்குள் புதியதாக மாற்றியமைக்கப்பட்டன. மேலும் பழுதடைந்த மின் கம்பங்கள் வேறு எதுவுமில்லை. சோமந்துரை ஊராட்சியில் 2 கி.மீ. அளவுக்குப் பழுதடைந்த மின் கம்பிகள் மாற்றப்பட்டுள்ளன. தென்சித்தூர் ஊராட்சியில் 1.2 கி.மீ. அளவுக்குப் பழைய மின் கம்பிகள் மாற்றப்பட்டுள்ளன. மேலும், இந்த ஊராட்சிகளில் 3 கி.மீ. பழைய மின்கம்பிகளை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

[2011 ஜனவரி 13

34—

மின்சாரம்

வினா எண் 1195—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ரமணமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர் மற்றும் காளியாபுரம் ஊராட்சிகளில் பழுதடைந்துள்ள மின் கம்பங்களையும் மின் கம்பிகளையும் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ரமணமுதலி புதூர், பெத்தநாயக்கனூர் மற்றும் காளியாபுரம் பகுதிகளில் பழுதடைந்துள்ள மின் கம்பங்கள் அவ்வப்போது தேவைக்கேற்ப மாற்றப்பட்டு வருகின்றன.

35—

மின்சாரம்

வினா எண் 1198—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள விவசாயிகளுக்கு மின் இணைப்பு தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு ஆண்டும் அரசு நிர்ணயிக்கும் குறியீட்டிற்குத் தகுந்தவாறு இலவச விவசாய மின் இணைப்புகள் பதிவு மூப்பு அடிப்படையில், சாதாரண அடிப்படையில், சாதாரண வரிசையில் வழங்கப்படுகிறது. வால்பாறை தொகுதியை உள்ளடக்கிய உடுமலைப்பேட்டை மின் பகிர்மான வட்டத்தில் 31-03-1988 வரை பதிவு செய்த விவசாயிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

36—

துணை மின் நிலையம்

வினா எண் 1234—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, தென்சங்கம்பாளையம் ஊராட்சியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். வரும் 2007-2008 ஆம் ஆண்டில் இங்கு ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.

37—

துணை மின் நிலையம்

வினா எண் 1235—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சேத்துமடை பகுதியில் ஒரு துணை மின் நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். சேத்துமடையிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள ஆனைமலையில் 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதற்கான ஆரம்ப பணியை 2007-2008-ஆம் ஆண்டு துவக்க, நிதி நிலைமையைப் பொறுத்து ஆவன செய்யப்படும். எனவே, சேத்துமடை பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இல்லை.

38—

மின்சாரம்

வினா எண் 1454—திரு. து. அமரமூர்த்தி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமானூர், ஏலாக்குறிச்சியை மையமாகக் கொண்டு தனியே ஒரு மின் பிரிவு அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஏலாக்குறிச்சி, திருமானூரிலிருந்து 9 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மேலும் ஏலாக்குறிச்சி, திருமானூர் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, திருமானூர், ஏலாக்குறிச்சியில் புதிதாகப் பிரிவு அலுவலகம் அமைக்க தற்போது சாத்தியமில்லை.

39—

துணை மின் நிலையம்

வினா எண் 1471—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

செங்கல்பட்டு தொகுதி, பெரியபொத்தேரி பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, பெரியபொத்தேரி பகுதியில் ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது. தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இருப்பின், 11-வது ஐந்தாண்டுப் பெருந்திட்டக் காலப் பகுதியில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைத்திட தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

40—

துணை மின் நிலையம்

வினா எண் 1472—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, பொன்விளைந்தகளத்தூர் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, பொன்விளைந்தகளத்தூர் பகுதியில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது. தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இருப்பின், 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

41—

மின்சாரம்

வினா எண் 1474—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயத்திற்குக் கூடுதலாக மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஒவ்வொரு வருடமும் அரசு நிர்ணயிக்கும் குறியீட்டிற்குத் தகுந்தவாறு பதிவு மூப்பு அடிப்படையில் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2006-2007-க்கான குறியீடாக அனைத்துப் பிரிவுகளுக்கும் மொத்தமாக 684 எண்ணிக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

42—

மின்சாரம்

வினா எண் 1521—திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி, திருநெல்வேலி, பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 7,500 காற்றாலைகளில் தயாரிக்கும் மின்சாரத்தை முழுமையாக ஏற்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு மின்சார வாரியம், ஏற்கெனவே கன்னியாகுமரி, திருநெல்வேலி, பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 6,375 காற்றாலைகளில் தயாராகும் மின்சாரத்தை முழுமையாகப் பெற்றுக் கொண்டு, காற்றாலை உரிமையாளரின் விருப்பத்திற்கிணங்க அந்த மின்சாரத்தைத் தமிழ்நாடு மின்சார வாரியம் முழுவதும் வாங்கிக் கொள்ளவும் அல்லது அவர்களின் உயர் மின் அழுத்த தொழிற்சாலைகளுக்கு உபயோகித்துக் கொள்ளவும் (Banking) அல்லது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்கவும் (Sale), வழிவகை செய்துள்ளது.

2011 ஜனவரி 13]

43—

மின்மாற்றி

வினா எண் 1525—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, நம்பிவயல் கிராமத்தில் புதிதாக ஒரு மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை தொகுதி, நம்பிவயல் கிராமத்தில் தற்பொழுது மூன்று மின்மாற்றிகள் உள்ளன. நம்பிவயல் கிராமத்தில் குறைந்த மின்னழுத்தம் கண்டறியப்பட்டதால் புதிதாக ஒரு மின்மாற்றியை நம்பிவயல் கிராமத்தில் உள்ள ஜீவா நகரில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்குரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அனுமதிக்கப்படவுள்ளது. பின்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு 30-09-2006-க்குள் முடிக்கப்பட்டுவிடும்.

44—

உதவித் தொகை

வினா எண் 1526—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சாரம் தாக்கி இறந்தவர்களுக்குக் கூடுதல் உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மின்சாரத் துறைசாரா நபர் மின்சாரம் தாக்கி இறந்தால் அவர்களது குடும்பத்தினருக்குத் தமிழ்நாடு மின்சார வாரியம்

தற்பொழுது ரூ. 25,000/- வழங்குகிறது. கூடுதல் தொகை வழங்குதல் குறித்து பரிசீலிக்கப்பட உள்ளது. இருப்பினும், நீதிமன்ற தீர்ப்பாணை பெறப்பட்ட நிகழ்வுகளில் வழக்கின் தன்மையினைப் பொறுத்து நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குக் கூடுதலான தொகையையும் வாரியத்தினால் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இதுபற்றி விரிவான விவரங்களுடன் முழு வாரியக் கூட்டத்தில் கருத்துரு வைக்கப்பட்டு ஒப்புதல் அளித்த பின்னர், கூடுதல் உதவித் தொகை பற்றி இறுதி ஆணை வெளியிடப்படும்.

45—

துணை மின் நிலையம்

வினா எண் 1689—திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பனைமரத்துப்பட்டி ஊராட்சி பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

தற்சமயம் பனைமரத்துப்பட்டி பகுதிக்கு 9 கி.மீ. தொலைவிலுள்ள மல்லூர் 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் பனைமரத்துப்பட்டிக்கு அருகில் உள்ள நாழிக்கல்பட்டியில் ஒரு புதிய 110/22 கி.வோ. துணை மின்நிலையம் அமைப்பதற்குக் கருத்துரு பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளது. தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இருப்பின், 11-வது ஐந்தாண்டுப் பெருந்திட்டக் காலப் பகுதியில் மேற்கூறிய துணை மின் நிலையம் அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

46—

மின் கம்பங்கள்

வினா எண் 1886—திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, ஆத்துப்பாலம் காயிதே மில்லத் காலனி 4-வது வீதியில் பழுதடைந்துள்ள மின் கம்பங்க்ளை மாற்றி, புதிய மின் கம்பங்கள் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம். இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

47—

மின்மாற்றி

வினா எண் 2230—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, எச்சூர் கிராமத்தில் மின்னழுத்தம் குறைவாக உள்ளதால், புதிய மின்மாற்றிகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, எச்சூர் கிராமப் பகுதி தாழ்வழுத்த மின்பாதையின் கடைகோடியில் இருப்பதால் குறைந்த மின்னழுத்தம் நிலவுகிறது. இந்த தாழ்வழுத்த மின்பாதை 4 கி.மீ. நீளம் உள்ளது. விரைவுபடுத்தப்பட்ட மின்மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு தொகுதிக்குட்பட்ட எச்சூர் கிராமத்தில் ஒரு புதிய 100 கே.வி.ஏ. மின்மாற்றி அமைப்பதற்கு மதிப்பீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் 31-10-2006-க்குள் முடிக்கப்படும்.

[2011 ஜனவரி 13

48—

மின்சாரம்

வினா எண் 2671—திரு. வீ.பெ. துரைசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு காகித ஆலை (TNPL) யும், மோகனூர் சர்க்கரை ஆலையும் இணைந்து மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு காகித ஆலையும், மோகனூர் சர்க்கரை ஆலையும் இணைந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் இதுவரை எதுவும் பெறப்படவில்லை.

49—

துணை மின்நிலையம்

வினா எண் 3935—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், பழவேலங்குடியில் 33/11 கி.வோ. துணை மின்நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

2011 ஜனவரி 13]

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், பழவேலங்குடியில் துணை மின்நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

50—

மின் கட்டணம்

வினா எண் 4863—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஊராட்சியில் உள்ள மக்களுக்கு மின் கட்டணம் செலுத்த வேண்டியதைத் தள்ளுபடி செய்தி அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மின்கட்டணம் செலுத்தப்படாத மின் இணைப்புகளைத் துண்டிக்க வேண்டாம் என மேற்பார்வைப் பொறியாளர், நாகை வட்டம் அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார். மேலும் சுனாமி நிதியிலிருந்து மின்வாரியத்திற்கு நிதி ஒதுக்கீடு பெற்ற பிறகு, மின்கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.

51—

மின்சாரம்

வினா எண் 4891—திருமதி. ரா. லீமா றோஸ்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதிக்குட்பட்ட கிராமப்புறப் பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் மின் தடையைச் சீர் செய்ய, அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதிக்குட்பட்ட கிராமப்புறப் பகுதிகளுக்கு, குழித்துறை, வியன்னூர் மற்றும் பேச்சிப்பாறை ஆகிய மூன்று 110/11 கி.வோ. மின் நிலையங்களிலிருந்து செல்லும் 11 கி.வோ. மின்னூட்டிகள் மூலமாக மின் விநியோகம் செய்யப்படுகின்றது. தற்போது மின் விநியோகம் சீராக உள்ளது.

52—

மின்சாரம்

வினா எண் 4893—திருமதி ரா. லீமா றோஸ்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியில் உள்ள மலைப் பகுதிகள் மற்றும் மணலோடை, வில்லுசாரி, புறாவிளை, காயக்கரை, கிள்ளிக்கோணம், கோரக்குழி, ஆலம்பாறை, வலியமலை, படுபாறை போன்ற இடங்களில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு மின்சாரம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதிக்குட்பட்ட மலைப் பகுதிகள் மற்றும் மணலோடை, வில்லுசாரி, புறாவிளை, காயக்கரை, கிள்ளிக்கோணம், கோரக்குழி, ஆலம்பாறை, வலியமலை, படுபாறை போன்ற இடங்களுக்கு மரபுசாரா முறை மூலம் மின்சாரம் வழங்க தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

53—

மின்மாற்றி

வினா எண் 4967—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி வளிச்சப்பட்டி பகுதியில் மின்மாற்றி அமைத்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி வளிச்சப்பட்டி பகுதிக்கு பச்சப்பட்டி S.S-II (100 கே.வி.ஏ/11 கே.வி) மற்றும் ஓடக்காடு S.S-II (63 கே.வி.ஏ/22 கே.வி) மின்மாற்றிகள் மூலம் மின் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது ஓடக்காடு மின்மாற்றியின் மின்னழுத்தம் சீராக உள்ளதால் வளிச்சம்பட்டி பகுதிக்கு, தற்போது புதிதாக மின்மாற்றி அமைக்க அவசியம் இல்லை.

54—

துணை மின் நிலையங்கள்

வினா எண் 5338—திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதியில் கூடுதலாக இரண்டு துணை மின் நிலையங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

[2011 ஜனவரி 13

(ஆ) அவினாசி தொகுதியில் கருவலூரில் ஒரு 110/11 கி.வோ துணை மின்நிலையமும் வடுகபாளையத்தில் ஒரு 33/11 கி.வோ துணை மின்நிலையமும் அடுத்த ஆண்டு இறுதிக்குள் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

55—

மின்சாரம்

வினா எண் 5341—திரு. ஒ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, பில்லூர் அணைப் பகுதியில் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி செய்து த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, கீழ்பில்லூர் பகுதிக்கு சூரிய ஒளி மூலம் மின்வசதி செய்ய தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

56—

மின்தடையைச் சீர் செய்தல்

வினா எண் 5358—திரு. கே.எல். இளவழகன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம் திமிரி துணை மின்நிலையத்தில் அடிக்கடி ஏற்படும் மின் தடையைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி துணை மின்நிலையத்தில் அடிக்கடி ஏற்படும் மின் தடையைச் சீர் செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தற்போது தடையற்ற சீரான மின் விநியோக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

57—

மின்சாரம்

வினா எண் 5664—திரு. சி. சண்முகவேலு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளில் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் நிலையங்கள் உள்ளன?

(ஆ) அவற்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் உடுமலைப்பேட்டை பகுதிகளிலும் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் நிலையங்கள் உள்ளன. மேற்கண்ட மாவட்டங்கள் திருநெல்வேலி பகுதி என்றும், உடுமலைப்பேட்டை பகுதி என்றும் பெயர் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) இதுவரை 6,699 காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. அதன் மொத்த திறன், திருநெல்வேலி பகுதியில் 1919 மெகா வாட்டும், உடுமாலைப்பேட்டை பகுதியில் 1,243 மெகா வாட்டும் ஆகும். மேற்கண்ட மின்காற்றாலைகளிலிருந்து இதுவரை

[2011 ஜனவரி 13

தயாரிக்கப்பட்ட மின்சாரத்தின் அளவு 19,772 மில்லியன் யூனிட் ஆகும். ஆண்டிற்கு சுமார் 3,500 மில்லியன் யூனிட்டுகள் வீதம் உற்பத்தி செய்யப்படுகிறது.

58—

இலவச மின்சாரம்

வினா எண் 6240—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச மின்சாரம் பெறும் விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்யப்படும் குதிரைத் திறன் அளவை 12 HP வரை உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைத்து விவசாய மின் இணைப்புகளுக்கும் மின் கட்டணத் தொகை, குதிரைத் திறன் அளவைக் கருத்தில் கொள்ளாமல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

59—

துணை மின் நிலையம்

வினா எண் 6322—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், திருத்துறைபூண்டி தொகுதி, கோட்டூரில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம். நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்படும்

2011 ஜனவரி 13]

60—

மின்மாற்றி

வினா எண் 6772—திரு. மு. அப்பபாவு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், குமாரபுரம் ஊராட்சி, அந்தோணியார்புரத்தில் 100 KV மின்மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், குமாரபுரம் ஊராட்சிக்குட்பட்ட அந்தோணியார்புரம் கிராமத்தில் 100 கே.வி.ஏ. மின்மாற்றி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

61—

மின்னிணைப்பு

வினா எண் 6774—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் பணகுடி, அண்ணா நகர் கோயில்விளை பகுதிக்கு மின்னிணைப்பு வழங்கிட, அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி, பணகுடி, அண்ணா நகர் கோயில்விளை பகுதியானது, அருள்மிகு இராமலிங்க சுவாமி

[2011 ஜனவரி 13

திருக்கோயிலுக்குப் பாத்தியப்பட்ட அறநிலையத் துறையின்கீழ் வருவதால், அதன் செயல் அலுவலர் அவர்களிடமிருந்து மின்னிணைப்பு வழங்க தடையில்லா சான்று பெற்று விண்ணப்பம் செய்தால், உடனடியாக மின்னிணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

62—

மின்மாற்றி

வினா எண் 6773—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குமாரபுரம் ஊராட்சி, வாழைத் தோட்டம் கிராமத்தில் கூடுதல் மின்மாற்றி அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம் குமாரபுரம் ஊராட்சி, வாழைத் தோட்டம் கிராமத்தில் கூடுதல் மின்மாற்றி 30-11-2006 அன்று இயக்கத்தில் கொண்டு வரப்பட்டது.

63—

துணை மின் நிலையம்

வினா எண் 6887—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் தொகுதி, வெம்பூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 *ஜனவரி* 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) விளாத்திக்குளம் தொகுதி, வெம்பூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

64—

துணை மின் நிலையம்

வினா எண் 6899—திரு. ராம சுப்புராம்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமயம் தொகுதி, அரிமளம் ஒன்றியம், புதுப்பட்டி பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) திருமயம் தொகுதி, அரிமளம் ஒன்றியம், புதுப்பட்டி பகுதியில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பரிசிலனையில் உள்ளது. உரிய அனுமதி பெற்று வரும் 2007-08 ஆம் நிதியாண்டில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் துவக்கப்படும்.

65—

மின்சாரம்

வினா எண் 6906—திரு. கே.பி. இராமசுவாமி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

இராசிபுரம் தொகுதிக்கு உட்பட்ட ஆர். புதுப்பாளையம், கல்லாங்குளம், களாம்பள்ளி, ஆர். பட்டணம் முனியப்பம்பாளையம், வடுகம் பகுதிகளில் மும்முனை மின்சாரம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

இராசிபுரம் தொகுதிக்கு உட்பட்ட ஆர். புதுப்பாளையம், கல்லாங்குளம், களாம்பள்ளி, ஆர். பட்டணம், முனியப்பம்பாளையம், வடுகம் ஆகிய பகுதிகளில் இராசிபுரம் 110/22 கி.வோ துணை மின் நிலையத்தில் இருந்து ஆர். புதுப்பாளையம் கிராமியப் பாதையின் மூலம் பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

66—

நீர் மின் நிலையம்

வினா எண் 6983—திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, பெரிய கல்வராயன் மலை, கீழ்நாடு நாகலூர் கிராமம், எயுத்திகாரன் நீர் வீழ்ச்சியில் நீர் மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

67—

மின்சாரம்

வினா எண் 6896—திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

சேந்தமங்கலம் தொகுதியில் மும்முனை மின்சாரம் தடையில்லாமல் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

சேந்தமங்கலம் தொகுதியில் உள்ள நகர் பகுதிகளில் 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் தடையில்லாமல வழங்கப்படுகிறது. ஊரகப் பகுதிகளில் பகலில் 6 மணி நேரம், இரவில் 8 மணி நேரம், ஆக மொத்தம் 14 மணி நேரத்திற்கு மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. மீதமுள்ள நேரங்களில் ஒரு முனை மின்சாரம் வழங்கப்படுகிறது.

68—

மின் கம்பிகள்

வினா எண் 7153—திருமதி ஆர். லீமா றோஸ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மலைப்பகுதிகளில் கேபிள் மூலம் மின்சாரக் கம்பிகளைக் கொண்டுச் செல்லும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

மலைப்பகுதிகளில் கேபிள் மூலம் மின்சாரக் கம்பிகளைக் கொண்டு செல்ல வேண்டுமென்றால், வனத் துறையின் அனுமதி தேவை. மலைப் பகுதிகளில் கேபிள் மூலம் மின்சாரக் கம்பிகள் கொண்டு செல்லும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

69—

மின்மாற்றி

வினா எண் 7513—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, இலட்சுமிநாராயணபுரம் கிராமம், வேதாந்தம் நகர், திருமலை நகர் ஆகிய இடங்களில் புதியதாக மின்மாற்றிகளை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, திருமலை நகரில் ஏற்கெனவே இருந்த மின்மாற்றியின் திறன் 100 கே.வி.ஏ.-விலிருந்து 200 கே.வி.ஏ. ஆக உயர்த்தப்பட்டு, தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இலட்சுமிநாராயணபுரம் கிராமம், வேதாந்த நகருக்கு மின்மாற்றி 14 என்னும் மின்மாற்றியினால் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

70—

துணை மின் நிலையம்

வினா எண் 7572—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் காற்றாலைகள் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தினைச் சேமிக்க துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காற்றாலைகள் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தைச் சேமிப்பது தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமற்றதாகும்.

71—

இலவச மின்சாரம்

வினா எண் 7577—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிறப்பு ஊராட்சிகளில் உள்ள குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ). அரசாணைப்படி கிராமப் பஞ்சாயத்துக்களில் மட்டும் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படுகிறது. மேலும், சிறப்பு ஊராட்சிப் பகுதிகள், அரசாணையில் குறிப்பிடப்படாததால் அங்குள்ள குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்க இயலவில்லை.

72—

இலவச மின்சாரம்

வினா எண் 7937—திரு. வை. காவேரி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில் செயற்கை வைரம் பட்டை தீட்டும் சிறு தொழிலுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

இல்லை.

73—

துணை மின் நிலையம்

வினா எண் 7975—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, ஊதியூரில் துணை மின் நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) காங்கேயம் தொகுதி, ஊதியூர் பகுதியில் ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க வாரிய ஆணை எண் 131, நாள் 17-7-2006 மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

74—

மின்சாரம்

வினா எண் 8839—திரு. ஆர். நெடுஞ்செழியன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை பகுதியில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் நிறுவனம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக் கோட்டையில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் நிறுவனம் ஏற்படுத்த தற்போது அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

75—

துணை மின் நிலையங்கள்

வினா எண் 6942—திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோவை மாவட்டம், பல்லடம் தொகுதியில் உள்ள இச்சிப்பட்டி பல்லடம், கிரிபிவாலி, சோமனூர், சிங்கேதுபாளையம் ஆகிய இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) அதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

76—

சாலை சீர்செய்தல்

வினா எண் 9625—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டுப்பாளையம் தொகுதி, வெள்ளியங்காடு பில்லூர் டேம் சாலையைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

வெள்ளியங்காடு முதல் அன்சூர் மலையடிவாரம் வரை நான்கு கி.மீ. சாலை செப்பனிடப்பட்டு முழுவதுமாக தார்ச் சாலையாக, ரூ. 16,14,030/- (ரூபாய் பதினாறு இலட்சத்து பதினான்காயிரத்து முப்பது மட்டும்) செலவில் போடப்பட்டுள்ளது. பிறகு அங்கிருந்து முள்ளி, பரளி சந்திப்பு வழியாக பில்லூர் வரை சுமார் 28 கி.மீ. தூரச் சாலை செப்பனிடப்பட்டு, தார் ஒட்டு (Patch work) *ரூ.23,08,640/- (ரூபாய் இருபத்து மூன்று இலட்சத்து எட்டாயிரத்து அறுநூற்று நாற்பது மட்டும்) செலவில் சரி செய்யப்பட்டு, வாகனப் போக்குவரத்துக்கு உகந்ததாக நவம்பர் 2007-இல் இருந்து ஆக்கப்பட்டுள்ளது.*

77—

துணை மின் நிலையம்

வினா எண் 11299—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஓமலூர் பகுதிக்கு தும்பிபாடி 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த துணை மின் நிலையத்தின் மின்மாற்றியில் ஓமலூர் பகுதியின் மின்தேவைக்கும் போதுமான அளவு மின் திறன் உள்ளதால் தற்போது ஓமலூர் பகுதிக்கு என துணை மின் நிலையம் அமைக்க அவசியம் ஏற்படவில்லை.

2011 ஜனவரி 13]

78—

துணை மின் நிலையம்

வினா எண் 11483—திரு. வே. செந்தில்பாலாஜி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, தாண்தோணி நகராட்சி, காந்தி கிராமம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

கரூர் தொகுதி, தாண்தோணி நகராட்சி, காந்தி கிராமம் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் தற்போது இல்லை.

79—

துணை மின் நிலையம்

வினா எண் 11685—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், நவ்வலடியில் ஒரு 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம். திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், நவ்வலடியில் ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் துவக்கப்படும்.

[2011 ஜனவரி 13

80—

துணை மின் நிலையம்

வினா எண் 11849—திரு. குத்தாலம் க. அன்பழகன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், பெரம்பூர் பகுதியில் 33/11, கி.வா. துணைமின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், பெரம்பூர் பகுதியில் ஒரு 33/11 கி.வா. துணைமின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது. உரிய அனுமதி பெற்று, வரும் 11-ஆவது திட்டக் காலம் பகுதி 2007-12-இல் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் துவக்கப்படும்.

81—

துணை மின் நிலையம்

வினா எண் 12292—திரு. சபா. இராஜேந்திரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நெல்லிக்குப்பம் தொகுதியில் வெள்ளக்கரையில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2011 ஜனவரி 13]

(ஆ) நெல்லிக்குப்பம் தொகுதியில் வெள்ளக்கரையில் ஒரு புதிய 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது. துணை மின் நிலையம் அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், உரிய அனுமதி பெற்று துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவக்கப்படும்.

82—

துணை மின் நிலையம்

வினா எண் 13565—திரு. கோ. எதிரொலி மணியன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, மண்ட கொளத்தூர் கிராமத்திற்குத் துணை மின் நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம். திருவண்ணாமலை மாவட்டம், மண்டகொளத்தூர் கிராமத்தில் புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் துவக்கப்படும்.

83—

துணை மின் நிலையம்

வினா எண் 13568—திரு. கோ. எதிரொலி மணியன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, மடம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி மின்சாரத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், மடம் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் தற்போது இல்லை.

84—

மின்சாரம்

வினா எண் 14398—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், கிருஷ்ணா நகரில் தொடர்ந்து மின் தடை ஏற்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர், கிருஷ்ணா நகர் பகுதியில் அடிக்கடி ஏற்படும் மின்தடையை நிவர்த்தி செய்ய, 100 கே.வி./11 கி.வோ. மின்மாற்றி ஒன்று கிருஷ்ணா நகரில் அமைக்கப்பட்டு, மின் விநியோகம் தற்போது சீராக நடைபெற்று வருகிறது.

85—

மின்சாரம்

வினா எண் 14418—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் காற்றாலைகள் தவிர மரபுசாரா எரிசக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

வால்பாறை தொகுதியில் காற்றாலைகள் தவிர மரபுசாரா எரிசக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம் தனியார் மற்றும் அரசு நிறுவனங்களிடமிருந்து மின்சார வாரியத்தினால் இதுநாள் வரை விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பங்கள் பெறப்படும் பட்சத்தில் வாரிய விதிமுறைகளின்படி பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

86—

மின்சாரம்

வினா எண் 14419—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோவை மாவட்டத்தில் காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தனியார் நிறுவனங்கள் பெருமளவில் காற்றாலை அமைப்பதில் முதலீடு செய்து வருவதால், அரசு மூலமாக தனியாக காற்றாலைகள் நிறுவும் திட்டம் தற்போதைக்கு அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

துணை மின் நிலையம்

வினா எண் 15144—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

(அ) வால்பாறை தொகுதி, முடீஸ் பகுதியில் துணை மின் நிலையம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வால்பாறை தொகுதி, முடீஸ் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

88—

மின்சாரம்

வினா என் 15217—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கூடுதலாக மின்சாரம் தயாரிக்க அரசிடம் புதிய திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம். கூடுதலாக மின்சாரத்தை உற்பத்தி செய்ய புதிய திட்டங்களை அரசு உத்தேசித்துள்ளது.

(ஆ) சொந்த மின் உற்பத்தி திட்டங்கள் தனியார் திட்டங்கள், மத்திய அரசு திட்டங்களிலிருந்து பங்கு மற்றும் கூட்டு துறை திட்டங்கள் ஆகியவைகளிலிருந்து 11-ஆவது திட்டக் காலத்தில் (2007-2012) 11,766 மெகா வாட் அளவிற்குத் திட்டங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

89—

மின்சாரம்

வினா எண் 15232—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் அரசுப் பொது மருத்துவமனையில் மின் தடை ஏற்படாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை அரசுப் பொது மருத்துவமனைக்குத் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

90—

பணி நிரந்தரம்

வினா எண் 15253—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் மின் துறையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் 11-12-2007 முதல் பணி நிரந்தரம் செய்யப்பட்டுவிட்டனர்.

[2011 ஜனவரி 13

91—

மின்சாரம்

வினா எண் 15255—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள விவசாயிகளுக்கு 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதியிலுள்ள விவசாயிகளுக்கு கிராமிய மின்னூட்டிகள் மூலம் பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் மும்முனை மின்சாரமும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் கிராமிய மின்னூட்டிகள் தவிர மற்ற மின்னூட்டிகளில் 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

92—

துணை மின் நிலையம்

வினா எண் 15265—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் அரசு பெரிய மருத்துவமனைக்குத் தனியாக துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கோயம்புத்தூர் அரசு பெரிய மருத்துவமனைக்குத் தனியாக துணை மின் நிலையம் அமைக்க அவசியம் தற்போது எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

93—

மின்சாரம்

வினா எண் 15267—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, அமராவதி சர்க்கரை ஆலையில் மின் உற்பத்தி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை, அமராவதி சர்க்கரை ஆலை நிர்வாகத்தில் இருந்து கரும்புச் சக்கை மூலம் மின்சாரம் தயாரிக்கும் நிலையம் அமைப்பதற்கான (Co-generation power plant) விண்ணப்பம் இதுநாள்வரை தமிழ்நாடு மின்வாரியத்தினால் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், வாரிய விதி முறைகளின்படி பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

94—

மின்சாரம்

வினா எண் 15268—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மைய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கக் கூடிய எரிசக்தி அமைச்சகம் மற்றும் தமிழ்நாடு அரசின் நிதி உதவியுடன்

[2011 ஜனவரி 13

தமிழ்நாட்டில் மொத்தம் 69 இடங்களில் காற்று வள ஆதாரங்களை மதிப்பீடு செய்ய, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்தால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு ஆய்வு செய்யப்பட்ட 69 இடங்களில் காற்றின் அடர்த்தி ஆகியவற்றின் அடிப்படையில், மைய அரசு தமிழ்நாட்டின் 8 மாவட்டங்களில் 41 இடங்களில் காற்றாலைகள் அமைத்து மின் உற்பத்தி செய்வதற்கு உகந்த இடங்கள் என அறிவித்துள்ளது. ஏற்கெனவே தொழில்நுட்ப ரீதியாக, காற்றுசக்தி தொழில்நுட்ப மையத்தால் ஆய்வு செய்து தெரிவு செய்த காற்றுவளம் மிக்க 41 பகுதிகளில் வால்பாறை தொகுதி இல்லை. எனவே, வால்பாறை தொகுதியில் காற்றாலை அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்குத் தற்போது இயலாது.

95—

மின்சாரம்

வினா எண் 15269—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

96—

மின்சாரம்

வினா எண் 15270—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் இயற்கை எரிவாயுவைக் கொண்டு மின்சாரம் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் இயற்கை எரிவாயு கிடைக்காததால் தமிழ்நாடு மின்சார வாரியம் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி, அம்மாவட்டத்தில் மின் உற்பத்தி செய்யும் திட்டம் தற்சமயம் எதுவும் இல்லை.

97—

மின்சாரம்

வினா எண் 15272—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், சந்தைகளில் வீணாகும் காய்கறிக் கழிவுகள் மூலம் மின்சாரம் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை கோயம்பேடு காய்கறி மொத்த விற்பனை வளாகத்தில், 250 கிலோவாட் அளவில் ஒரு நாளைக்கு 30 டன் காய்கறிக் கழிவுகளைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் செயல்பாட்டை ஒரு வருடத்திற்கு ஆய்வு செய்து, மேலும் இந்த அளவிற்குக் காய்கறிக் கழிவுகள், கோயம்புத்தூர் பகுதியில் கிடைக்கும் பட்சத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சி மூலம்

[2011 ஜனவரி 13

காய்கறிக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தினை மத்திய மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் உதவியுடன் செயல்படுத்த பரிசீலனை செய்யப்படும்.

98—

மின்சாரம்

வினா எண் 15273—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் வீணாகும் காய்கறிக் கழிவுகள் மூலம் மின்சாரம் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை கோயம்பேடு காய்கறி மொத்த விற்பனை வளாகத்தில், 250 கிலோ வாட் அளவில் ஒரு நாளைக்கு 30 டன் காய்கறிக் கழிவுகளைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் செயல்பாட்டை ஒரு வருடத்திற்கு ஆய்வு செய்து மேலும் இவ்வளவிற்கு காய்கறிக் கழிவுகள் வால்பாறை பகுதியில் உற்பத்தியாகும்பட்சத்தில், வால்பாறை பேரூராட்சி மூலம் காய்கறிக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தினை மத்திய மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் உதவியுடன் செயல்படுத்த பரிசீலனை செய்யப்படும்.

99—

மின்சாரம்

வினா எண் 15278—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் கருவேல மரங்களின் கட்டைகளை எரித்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் மரம் மற்றும் மரக் கழிவினை (Biomass) எரியவைத்து மின்சாரம் தயாரிக்கும் முறையை, தமிழ்நாடு அரசு, தனியார் நிறுவனங்களின் மூலம் நிறுவ ஊக்குவித்து வருகிறது. தற்சமயம் 4 தனியார் நிறுவனங்கள் காஞ்சிபுரம், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. இதுபோல கோயம்புத்தூர் மாவட்டத்தில் மரம் மற்றும் மரக்கழிவு உற்பத்தியினைப் பொறுத்து கருவேலம் மற்றும் பிற மரக் கழிவினைக் கொண்டு மின்சாரம் தயாரிக்க இரண்டு தனியார் நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் இசைவு அளிப்பதற்குத் தமிழ்நாடு மின்வாரியத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

100—

சூரிய ஒளி மின்சாரம்

வினா எண் 15279—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி முழுவதும் சூரிய ஒளி மூலம் மின் விளக்குகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் மின்கட்டமைப்பில் இணைக்கப்படாத ஈதல்குழி, கடம்பாரை, கல்லார், குருமுட்டி, காவரிகால், பாலங்கிணறு, பரமன்கடவு, சங்கரன்குடி, சிங்கோனா, உடுமன்பாரை மற்றும் வெள்ளிமுடி ஆகிய 11 தொலை தூர கிராமங்களில் 273 சூரிய ஒளி வீட்டு விளக்குகளும் மற்றும் 14 சூரிய ஒளி தெரு விளக்குகளும் மத்திய மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் நிறுவப்பட்டுள்ளது.

2. மேலும் பிற இடங்களுக்குப் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் 2006-2007 ஆம் ஆண்டிற்கான சூரிய ஒளி விளக்குகள் பொருத்தும் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களுக்கு 4000 சூரிய ஒளி வீட்டு விளக்குகளும் 400 சூரிய ஒளி தெரு விளக்குகளும் 50 சதவீத மானியத்துடன் நிறுவ நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் தொகுதியில் நிறுவப்படாத கிராமங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் அவர்களிடமிருந்து கருத்துரு பெற்று திட்டம் செயல்படுத்தப்படும்.

சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

101—

துணை மின் நிலையம்

வினா எண் 15282—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பச்சாப்பாளையத்தில் ஆவின் பால் நிறுவனத்திற்கு அருகில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பச்சாப்பாளையத்தில் ஆவின் பால் நிறுவனத்திற்கு அருகில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

102—

மின் நிலையம்

வினா எண் 15288—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோலையார் அணை மின் நிலையத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) சோலையார் மின் நிலையம் 1-ஐ 2X35 மெகா வாட்டில் இருந்து 2X42 மெகா வாட்டாக விரிவுபடுத்தும் திட்டம் தீவிர பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இந்த விரிவுபடுத்தும் கருத்துக் குறிப்பானது, 2007-2008 நிதியாண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

103—

துணை மின் நிலையம்

வினா எண் 15291—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) வால்பாறையில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வால்பாறையில் துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

104—

'சோலார்' விளக்கு

வினா எண் 15923—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தும்பிப்பாடி ஊராட்சி, முள்ளிசெட்டிப்பட்டி மருத்துவமனை அருகில் 'சோலார்' விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தும்பிப்பாடி ஊராட்சி, முள்ளிசெட்டிப்பட்டி மருத்துவமனை அருகில் பழுதாகியிருந்த மின்சாரத் தெருவிளக்கு பழுது நிவர்த்தி செய்யப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது. எனவே, அவ்விடத்தில் 'சோலார்' விளக்கு அமைத்திடும் தேவை எழவில்லை.

105—

அலுவலகம்

வினா எண் 16019—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கருக்கல்வாடி ஊராட்சியில் துணை மின் பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கருக்கல்வாடி ஊராட்சியில் புதிய துணை மின் பொறியாளர் அலுவலகம் தற்போது தொடங்க இயலாது. ஏனெனில், மக்கள் தொகை அதிகமுள்ள பகுதியான பஞ்சகாளிப்பட்டியில் புதிய பிரிவு அலுவலகம் தொடங்கப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.

106—

காற்றாலை மின் உற்பத்தி

வினா எண் 18385—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம், தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், திண்டுக்கல், இராமநாதபுரம் மாவட்டங்களில் காற்றாலை மின் உற்பத்திக்கு மானியம் வழங்கி ஊக்குவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம், தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் காற்று வள ஆதாரங்களை மதிப்பீடு செய்வதற்கான ஆய்வு மேற்கொண்டு காற்று வளம் மிக்க பகுதிகளாகத் தெரிவு செய்யப்பட்டால், இவ்விடங்களில் தனியார் துறை மூலம் காற்றாலைப் பண்ணைகள் அமைக்க ஆவன செய்யப்படும். ஆனால், தற்போது காற்று வளமிக்க பகுதிகளில் இந்த இடம் சேராததால், இங்குக் காற்றாலைப் பண்ணைகள்

அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. தமிழகத்தில் காற்றாலைப் பண்ணைகள் அமைக்க முன்வருபவர்களுக்கு வருமான வரிச் சலுகை மற்றும் தாங்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தைத் தமிழகத்தில் வேறு பகுதிகளில் அமைந்துள்ள உயர் அழுத்த மின் இணைப்பைப் பெற்றுள்ள தங்கள் தொழிற்சாலைகளில் அந்த மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் வசதி போன்றவை செய்து தரப்படுகிறது.

107—

மின்சாரம்

வினா எண் 18386—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் கடற்பகுதியின் உள்ளே காற்றாலைகள் நிறுவி, அதன் மூலம் மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் கடற்பகுதியின் உள்ளே காற்றாலைகள் நிறுவி அதன் மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

108—

மின்சாரம்

வினா எண் 18387—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் கிராமபுறங்களில் விறகைப் பயன்படுத்தி மின்சார உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செயல்முறைத் திட்டத்தில் விறகு மற்றும் மரக்கழிவுகள் மூலம் இயங்கும் தாவர எரிவாயுக் கலன்கள் (9 கி.வாட்) தமிழ்நாட்டில் ஊராட்சிகளில் நிறுவப்பட்டு வருகின்றன. இத்தகைய கலன்களை 100 சதவீத தாவர எரிவாயுவைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் என்ஜினுடன் இணைத்து மின்சாரம் உற்பத்தி செய்து, மின்சார வாரியக் கட்டமைப்பில் இணைக்கப்படாமல், கிராமங்களில் உள்ள நீர் இறைக்கும் பம்புகளைச் செயல்படுத்துவதற்கும் மற்றும் சில இடங்களில் தெரு விளக்குகளை எரிய வைக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

109—

மின்சாரம்

வினா எண் 18388—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நகராட்சி கழிவுகள், விவசாயக் கழிவுகளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விவசாயக் கழிவுகளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் தனியாரின் திட்டம் தமிழ்நாடு மின் வாரியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், நகராட்சிக் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான விண்ணப்பம் வாரியத்தினால் இதுவரை பெறப்படவில்லை. அவ்வாறு விண்ணப்பம் ஏதும் பெறப்பட்டால், வாரிய விதிமுறைகளின்படி பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

110—

மின்சாரம்

வினா எண் 18391—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் இயற்கை எரிவாயு மூலம் மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை.—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தின் காவிரிப் படுகையில் நரிமணம், நல்லூர், மருதூர் ஆகிய இடங்களிலும், இராமநாதபுரம் மாவட்டம் பெருங்குளத்திலும், இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தின் (ONGC) ஆழ்கிணறுகளிலிருந்து எடுக்கப்படும் இயற்கை எரிவாயு, எரிவாயு ஆணைய கழகத்தின் (GAIL) மூலம் எரிவாயு மின் திட்டங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த எரிவாயுவைப் பயன்படுத்தி, தமிழ்நாடு மின்சார வாரியம் தற்போது திருமாக்கோட்டையில் (கோவில்களப்பால்) 107.88 மெகா வாட், வழுதூரில் (இராமநாதபுரம்) 95 மெகா வாட், குத்தாலத்தில் (நாகப்பட்டினம்) 100 மெகா வாட் திறனுள்ள எரிவாயு மின் உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்தி மின் உற்பத்தி செய்து வருகிறது.

111—

மின் வசதி

வினா எண் 18469—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, பெரியசோரகை ஊராட்சி, வெள்ளக்காடு பகுதியில் மின் வசதி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் பெரியசோரகை ஊராட்சி, வெள்ளக்காடு பகுதியில் தற்போது நங்கவள்ளி 110/11 கி.வா. மின் நிலையத்திலிருந்து எல்லனூர் 11 கி. வா. மின்னூட்டி மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

112—

நீர் மின் நிலையம்

வினா எண் 18471—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கலில் நீர் மின் நிலையம் அமைத்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

அரசின் பரிசீலனையில் உள்ளது.

113—

வினா எண் 18475—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூரிய ஒளி மூலம் இயங்கும் மின் விளக்கு, நீர் சூடேற்றி, சமையல் அடுப்பு ஆகியவற்றைத் குறைந்த விலையில் மானியத்துடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

(ஆ) சூரிய ஒளி மூலம் இயங்கும் மின்விளக்கு, நீர் சூடேற்றி, சமையல் அடுப்பு ஆகியவற்றுக்கு மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், மானியம் வழங்குகிறது. இம்மானியம் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி முகமை மூலம் வழங்கப்படுகிறது.

114—

சூரிய ஒளி விளக்குகள்

வினா எண் 18480—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மின் வசதி இல்லாத கிராமங்களுக்கு சூரிய ஒளி விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம். மேல்முதலம்பேடு ஊராட்சி, கவரைப்பேட்டை பகுதியில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க வாரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

200—

துணை மின் நிலையம்

வினா எண் 32380—திரு. சி. துரைராஜ்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

சேடப்பட்டி தொகுதி, பேரையூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம்.

சேடப்பட்டி தொகுதி, பேரையூர் பகுதியில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைக்க தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டு அதற்கான அரசு நிர்ணய விலை மாவட்ட வருவாய்த் துறை அலுவலரிடம் கோரப்பட்டுள்ளது. அரசு நிர்ணய விலை கிடைக்கப்பெற்றவுடன், நிலம் கையகப்படுத்தப்படும். நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், துணை மின் நிலையம் நிறுவுவதற்கு வாரிய ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும்.

201—

துணை மின் நிலையம்

வினா எண் 32396—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தொகுதி, நெரூர் வடபாகம் ஊராட்சியில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் தொகுதி, நெரூர் வடபாகம் ஊராட்சியில் புதிய 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம். தற்போது இல்லை.

சட்டமன்றம் LEGISLATURE TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

202—

சீரான மின்சாரம்

வினா எண் 32454—திரு. ரெ. **நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, எம். குளவாய்ப்பட்டி ஊராட்சி, எம். குளவாய்பட்டி கிராமத்தில் விவசாயத்திற்குச் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, எம். குளவாய்ப்பட்டி ஊராட்சி, எம். குளவாய்பட்டி கிராமத்தில் விவசாயத்திற்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

203—

நீர் மின் நிலையங்கள்

வினா எண் 32475—திருமதி ரா. **லீமா ரோஸ்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோதயார் மின் நிலையம் 1-இன் அருகில் இரண்டு நீர்மின் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

கோதயார் மின் நிலையம் 1-இன் அருகில் நீர்மின் நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

[2011 ஜனவரி 13

204—

மின் மாற்றி

வினா எண் 32736—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கீழிருப்பு கிராமத்தில் மின் மாற்றியை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, கீழிருப்பு கிராமத்தில் மின் மாற்றியை மாற்றி அமைக்க சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் கிராம மக்களிடம் இருந்து கோரிக்கைகள் ஏதும் பெறப்படவில்லை. கோரிக்கை பெறப்படின் மின் மாற்றிகளை மாற்றியமைக்க வாரிய விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

205—

துணை மின் நிலையம்

வினா எண் 32754—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, திருவரங்குளத்தில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, திருவரங்குளத்தில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம், தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

206—

துணை மின் நிலையம்

வினா எண் 32770—திரு. செ. சின்னச்சாமி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மருங்காபுரி தொகுதி, வையம்பட்டி ஒன்றியத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

மருங்காபுரி தொகுதி வையம்பட்டி ஒன்றியத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

207—

துணை மின் நிலையம்

வினா எண் 32794—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டைப் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டைப் பகுதியில் ஒரு புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

208—

காற்றாலை மின்சாரம்

வினா எண் 33037—திரு. ச. லட்சுமணன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

போடிநாயக்கனூர் தொகுதியில் காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

போடிநாயக்கனூர் தொகுதியில் காற்றாலை அமைத்து அதன் மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

209—

துணை மின் நிலையம்

வினா எண் 33066—திரு. மா. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரைத் தொகுதி, மாங்குளம் ஊராட்சி, மூங்கில் ஊரணியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

210—

புதிய மின் மாற்றி

வினா எண் 33244—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், திருக்காளச்சேரி, வடக்குத் தெரு, பிலால் நகரில் புதிய மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியத்திற்குட்பட்ட திருக்காளச்சேரி, வடக்குத் தெரு, பிலால் நகர் பகுதிக்கு ஒரு 100 கே.வி.ஏ. மின் மாற்றி நிறுவப்பட்டு இயக்கி வைக்கப்பட்டுள்ளது.

211—

துணை மின் நிலையம்

வினா எண் 33661—டாக்டர் க. நெடுஞ்செழியன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கபிலமலைத் தொகுதி, மோகனூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம். கபிலமலைத் தொகுதி, மோகனூரில் ஒரு 110/122 கி.வோ. துணைமின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி துணை மின்நிலையம் அமைக்க தேவையான நிலம் மோகனூர் ஒன்றியம், அரியூர் கிராமத்தில் தேர்வு செய்யப்பட்டு அதற்கான அரசு நிர்ணய விலை, மாவட்ட வருவாய்த் துறை அலுவலரிடம் கோரப்பட்டுள்ளது. அரசு நிர்ணய விலை கிடைக்கப்பெற்றவுடன், நிலம் கையகப்படுத்தப்பட்டு, துணை மின் நிலையம் நிறுவுவதற்கு, வாரிய ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும்.

[2011 ஜனவரி 13

212—

கம்பி வடம்

வினா எண் 33915—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரத்தில் மின் இணைப்புகளைக் கம்பி வடமாக நிலத்தில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாணபுமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை, திருநெல்வேலி, திருச்சி, சேலம், மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஐந்து மாநகராட்சிகளிலும் உள்ள மேல்நிலை மின்பாதைகளைப் புதைவடமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நகராட்சிகளில் உள்ள மேல்நிலை மின்பாதைகளைப் புதைவடமாக மாற்றும் கருத்துரு, தற்போதைக்கு இல்லை.

213—

மின்சாரம் தயாரித்தல்

வினா எண் 33949—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மைய அரசின் ஆளுமைக்குட்பட்ட தேசிய நீர் மின் குழுமம், காவிரி புனல் மின் திட்டத்தின்கீழ், தருமபுரி

2011 ஜனவரி 13]

மாவட்டம், ஒகேனக்கல்லில் நீர் மின் திட்டம் (120 மெகா வாட் திறன்) அமைக்க உத்தேசித்துள்ளது. காவிரி மின் திட்டத்தை தேசிய நீர் மின் குழுமத்தின் மூலம் செயலாக்குவதற்கும், திட்டத்தின் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தை நடுவண் அரசின் எரிசக்தி அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி பகிர்ந்து கொள்வதற்கும் தமிழ்நாடு அரசு ஒப்புக்கொண்டு திட்டத்தைச் செயலாக்குவதற்கான "வரைவு ஒப்பந்தத்திற்கான" ஒப்புதலை, தமிழ்நாடு அரசு நடுவண் அரசுக்கு 15-12-2008 அன்று அனுப்பியுள்ளது. நடுவண் அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

214—

துணை மின் நிலையம்

வினா எண் 33955—திரு. எஸ். மணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொங்கலூர் தொகுதி, பொங்கலூரில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பொங்கலூர் தொகுதியில், தெற்கு அவினாசிபாளையத்தில் ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைக்க இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம் தேர்வு செய்யப்பட்டு, அத்துறையின் அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், நிலம் கையகப்படுத்தப்பட்டு, துணை மின் நிலையம் நிறுவுவதற்கு, வாரிய ஒப்புதல் பெறப்பட்டு, 2008-09-ஆம் ஆண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

[2011 ஜனவரி 13

215—

சீரான மின்சாரம்

வினா எண் 34218—திரு. பெ.சு. விஜயகுமார்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், நம்மியபட்டு ஊராட்சியில் சீரான மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், நம்மியபட்டு ஊராட்சியில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

216—

புதிய கட்டடம்

வினா எண் 34232—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, ஓமலூர் மின்வாரிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஓமலூர் மின்சார வாரிய அலுவலகத்திற்கு மின்சார வாரியத்திற்குச் சொந்தமாக இடம் கிடைக்கும்பட்சத்தில், அலுவலகம் கட்டப்படும்.

2011 ஜனவரி 13]

217—

சீரான மின்சாரம்

வினா எண் 34233—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்ப்புத்தூர், டேனிஸ்பேட்டை, வேப்பிலை ஊராட்சி பகுதிகளில் சீரான மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்ப்புத்தூர், டேனிஸ்பேட்டை, மற்றும் வேப்பிலை ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கு தும்பிபாடி 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து, தோப்பூர் 22 கி.வோ. நகரிய மின்னூட்டி வாயிலாக சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

218—

உயர் அழுத்த மின்மாற்றி

வினா எண் 34290—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, எலத்தூர் ஊராட்சியில் உயரழுத்த மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், எலத்தூர் ஊராட்சிக்குட்பட்ட எலத்தூர் கிராமத்திற்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே எலத்தூரில் உள்ள மின்மாற்றிகளைக் கூடுதல் திறன் கொண்ட மின்மாற்றியாக மாற்ற தற்சமயம் அவசியம் எழவில்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
WITH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

219—

மின் விளக்கு

வினா எண் 34293—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, பருவத மலை கோவிலைச் சுற்றி மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி வனத் துறைக்குச் சொந்தமானது. பருவத மலை கோவிலைச் சுற்றி மின் விளக்கு அமைக்க வேண்டி சம்பந்தப்பட்ட ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டால், வனத் துறையின் அனுமதி பெற்று தெரு விளக்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

220—

சீரான மின்சாரம்

வினா எண் 34513—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, வீரராக்கியம் பகுதியில் சீரான மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, வீரராக்கியம் பகுதியில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

2011 ஜனவரி 13]

221—

புதிய மின் மாற்றி

வினா எண் 34514—திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், முள்ளிப்பாடிப் பகுதியில் புதிய மின் மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், முள்ளிப்பாடிப் பகுதியில் புதிய 100 கே.வி.ஏ. மின் மாற்றி 24-12-2007 அன்று இயக்கி வைக்கப்பட்டது.

222—

மின் மாற்றி

வினா எண் 34574—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கழுகர் கடை கிராமத்தில் மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கழுகர்கடை கிராமத்தில் ஏற்கனவே மூன்று மின் மாற்றிகள் இயக்கத்தில் உள்ளன. அவற்றில் இணைக்கப்பட்டுள்ள மின்பளுக்கள் மின் மாற்றியின் திறனைவிட குறைவாக உள்ளது. எனவே, கழுகர்கடை கிராமத்தில் புதியதாக மின் மாற்றி அமைக்க தற்போது அவசியம் இல்லை.

[2011 ஜனவரி 13

223—

மின்சாரம் உற்பத்தி

வினா எண் 34818—திரு. அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் பகுதியில் காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் பகுதியில் காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

224—

மின்சாரம் உற்பத்தி

வினா எண் 34941—திரு. வி.எஸ். பாபு: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை மாநகரில் குப்பையிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

சென்னை மாநகரில் குப்பையிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

225—

துணை மின் நிலையம்

வினா எண் 35570—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஊதியூரில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) காங்கேயம் தொகுதி, ஊதியூரில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான நிலம் கிடைக்காததால், அருகில் உள்ள வட்டமலையில் துணை மின் நிலையம் அமைக்கப்படுகிறது.

(ஆ) இந்த நிதியாண்டிற்குள் (2007-2008) இத்துணை மின் நிலையம் இயக்கத்திற்குக் கொண்டு வரப்படும்.

226—

துணை மின் நிலையம்

வினா எண் 35782—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பண்ணந்தூர் ஊராட்சி, பண்ணந்தூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். காவேரிப்பட்டினம் தொகுதி, பண்ணந்தூர் கிராமத்தில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

227—

புதிய மின் மாற்றி

வினா எண் 36633—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானமதுரை தொகுதி, வேம்பத்தூரில் புதிய மின் மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, வேம்பத்தூரில் ஏற்கனவே இரண்டு மின் மாற்றிகள் இயக்கத்தில் உள்ளன. இவ்விரண்டு மின் மாற்றிகளில் இணைக்கப்பட்டுள்ள மின்பளுக்கள் மின் மாற்றிகளின் திறனை விடக் குறைவாகவே உள்ளது. எனவே, வேம்பத்தூரில் புதிய மின் மாற்றி அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

228—

துணை மின் நிலையம்

வினா எண் 37635—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதி, பண்ணந்தூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம். பண்ணந்தூரில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2011 ஜனவரி 13]

229—

துணை மின் நிலையம்

வினா எண் 37639—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பூம்புகார் தொகுதி, ஆக்கூர் பகுதியில் 110 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

பூம்புகார் தொகுதி, ஆக்கூர் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

230—

துணை மின் நிலையம்

வினா எண் 37640—திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையில் 230 கி.வா. துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையில் 230 கி.வா. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம், தற்போது பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

231—

புதிய மின் மாற்றி

வினா எண் 38493—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாநகராட்சி, பயோனியர் குமாரசாமி நகர்ப் பகுதியில் புதிய மின் மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாநகராட்சி, பயோனியர் குமாரசாமி நகர்ப் பகுதியில், விரிவாக்க பணிகள் முடிக்கப்பட்டு, ஒரு 100 கே.வி.ஏ. மின் மாற்றி, 25-8-2007 அன்று இயக்கத்தில் கொண்டு வரப்பட்டது.

232—

மின் உற்பத்தி நிலையங்கள்

வினா எண் 39212—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில், புதிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 11-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மொத்தம் 3270 மெகா வாட் அளவிற்கு அனல், புனல், எரிவாயு மின் திட்டங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2011 ஜனவரி 13]

233—

மின் மாற்றி அமைத்தல்

வினா எண் 40847—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், பொன்னார்குளம் கிராமத்திற்கு கூடுதல் திறன் கொண்ட மின் மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், பொன்னார்குளம் கிராமத்திற்கு 100 கே.வி.ஏ. திறனுள்ள மின் மாற்றியின் மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இம்மின் மாற்றியில் இணைக்கப்பட்டுள்ள மின்பளு, மின் மாற்றியின் திறனைவிடக் குறைவாகவே உள்ளது. எனவே பொன்னார்குளம் கிராமத்தில் கூடுதல் திறன் கொண்ட மின் மாற்றி அமைக்கும் அவசியம் தற்போதைக்கு இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

234—

துணை மின் நிலையம்

வினா எண் 40991—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மாங்குளம் ஆ. விளாக்குளம் பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை. தற்சமயம் தரமான மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால் மாங்குளம் ஆ. விளாக்குளம் பகுதிகளில் புதிய துணை மின் நிலையம் அமைக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

235—

துணை மின் நிலையம்

வினா எண் 41495—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, காடையூரில் துணை மின்நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

காங்கேயம் தொகுதி, காடையூரில் ஒரு புதிய 110/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க வாரியம் வாரிய ஆணை எண் 275, நாள் 08-12-2005-இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட துணை மின் நிலையம் அமைக்க காடையூர் கிராமத்தில் அரசுப் புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்ட ஆட்சியர், மேற்கண்ட நிலத்தை மின் நிலையம் அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்ய உத்தரவாதம் அளித்துள்ளார். ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் துணை மின்நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டு துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2011 ஜனவரி 13]

236—

துணை மின் நிலையம்

வினா எண் 41497—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், குண்டடம் ஒன்றியம், ஊதியூரில் 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், குண்டடம் ஒன்றியம் பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கும் பொருட்டு, வட்டமலையில் நிலம் கையகப்படுத்தப்பட்டு 110/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் நடைப்பெற்று வருகின்றன. எனவே, ஊதியூரில் 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

237—

மின் மாற்றி

வினா எண் 41575—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, கண்டேகுப்பம் ஊராட்சி, செட்டிமாரம்பட்டி கிராமத்தில் மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, கண்டேகுப்பம் ஊராட்சி, செட்டிமாரம்பட்டி கிராமத்தில் புதியதாக ஒரு 100 கே.வி.ஏ. மின் மாற்றி 19-4-2008 அன்று இயக்கி வைக்கப்பட்டது.

238—

மின் உற்பத்தி

வினா எண் 42155—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூருக்கும், நொய்யல் ஆறு காவேரியில் கலக்கும் இடத்திற்கும் இடையில் குறைவான மின்சாரம் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூருக்கும், நொய்யல் ஆறு காவேரியில் கலக்கும் இடத்திற்கும் இடையில் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் எதுவும், தற்போது மின்சார வாரியத்தின் பரிசிலனையில் இல்லை.

239—

துணை மின் நிலையம்

வினா எண் 42156—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை, திப்பனம்பாளையத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை. காங்கேயம் தொகுதி, திப்பனம்பாளையத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள பெரியாண்டிப் பாளையத்தில் ஒரு புதிய 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, திப்பனம்பாளையத்தில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

240—

மின்சார வசதி

வினா எண் 42346—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், மோப்பிரிப்பட்டி ஊராட்சி, சோரியம்பட்டி புதுக் காலனி கிராமத்திற்கு மின்சார வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்தால், உடனடியாக மின் இணைப்பு வழங்க மின்சார வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

241—

துணை மின் நிலையம்

வினா எண் 45922—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, காங்கேயம் சிவன்மலை துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, காங்கேயம் சிவன்மலை துணை மின் நிலையத்தை, 33/11 கி.வோ.-இலிருந்து 110/11 துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த, தற்பொழுது அவசியம் எழவில்லை.

242—

மின் தயாரிப்பு

வினா எண் 46826—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

243—

காற்றாலை மின்சாரம்

வினா எண் 48533—திரு. ஞா. ஜான் ஜோசப்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

குமரி மாவட்ட கடலோரங்களில் ஆண்டு முழுவதும் பலத்த காற்று வீசுவதால், அங்கே காற்றாலைகள் அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

குமரி மாவட்ட கடலோரங்களில் காற்றாலைகள் அமைத்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

244—

மின்சாரம்

வினா எண் 49394—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, அரூர் சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

மொரப்பூர் தொகுதி, அரூர் சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலமாக 15 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

245—

தனி துணை மின் நிலையம்

வினா எண் 49450—செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரத்திற்குத் தனித் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம். திண்டுக்கல் நகரத்தில் சந்தை ரோடு பகுதியில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி துணை மின்நிலையம் அமைக்க தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டு, கையகப்படுத்தப்படும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் துணை மின்நிலையம் நிறுவுவதற்கு, வாரிய ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும்.

246—

மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 49543—திரு. வை. காவேரி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பகுதிக்கு தற்போது 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எடப்பாடி 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பெருகி வரும் மின் பளுவைக், கருத்தில்கொண்டு, கொங்கணாபுரம் பகுதியிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எட்டிக்குட்டைமேடு என்ற இடத்தில் ஒரு புதிய 110/22 கி.வோ. துணை மின் நிலையம் 11-ஆவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, கொங்கணாபுரம் பகுதியில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

247—

துணை மின் நிலையம்

வினா எண் 49551—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், பெருமத்தூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், பெருமத்தூரில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

248—

மின் தயாரித்தல்

வினா எண் 49572—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி மலை, ஜவ்வாது மலைப் பகுதியில் காற்றாலைமூலம் மின்சாரம் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி மலை, ஜவ்வாது மலைப் பகுதியில் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

[2011 ஜனவரி 13

249—

துணை மின் நிலையம்

வினா எண் 49573—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாதுமலை புதூர் நாடு பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாது மலையில் உள்ள புதூர் நாடு கிராமத்தில், ஒரு துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

250—

மின் மாற்றி அமைத்தல்

வினா எண் 51138—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி, கீழ்க்கரந்தை கிராமத்தில் கூடுதல் சக்தியுடைய மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கீழ்க்கரந்தை கிராமத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டு இருந்த 63 கே.வி.ஏ. மின் மாற்றிக்குப் பதிலாகக் கூடுதல் திறனுடைய 100 கே.வி.ஏ. மின் மாற்றி நிறுவப்பட்டுள்ளது.

2011 ஜனவரி 13]

251—

துணை மின் நிலையம்

வினா எண் 51306—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு *மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வால்பாறை தொகுதியிலுள்ள கம்பாலபட்டி, ஜல்லிப்பட்டி பகுதிகளில் ஒரு இடத்தில் துணை மின் நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

தற்போது வால்பாறை தொகுதியில் உள்ள கம்பாலபட்டி ஜல்லிப்பட்டி பகுதிக்கு 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அங்காலகுறிச்சி 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இத்துணை மின் நிலையத்தில் தற்சமயம் 2x16 எம்.வி.ஏ. (32 எம்.வி.ஏ.) திறனுள்ள மின்மாற்றிகள் இயங்கி வருகின்றன. அதன் மின்பளு 28.76 எம்.வி.ஏ.-ஐ எட்டியுள்ளது. இப்பகுதிகளில் தற்சமயம் தரமான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கம்பாலபட்டி மற்றும் ஜல்லிப்பட்டி பகுதிகளில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

252—

துணை மின் நிலையம்

வினா எண் 54295—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு *மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, மத்தம்பாளையம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மேட்டுப்பாளையம் தொகுதி, மத்தம்பாளையத்தில் ஒரு புதிய 110/22 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க, வாரியம் வாரிய ஆணை எண் 85, நாள் 5-6-2004-இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட துணை மின் நிலையம் அமைக்க பிளிச்சி கிராமத்தில் அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான நிலம் கண்டறியப்பட்டு, கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

253—

துணை மின் நிலையம்

வினா எண் 54329—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாதுமலை புதூர் நாட்டில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாது மலையில் உள்ள புதூர் நாடு கிராமத்தில், ஒரு 33/11 கி.வோ. மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

2011 ஜனவரி 13]

254—

துணை மின் நிலையம்

வினா எண் 56774—திரு. வை. காவேரி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

255—

மின்சாரம் தயாரித்தல்

வினா எண் 56380—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை பகுதியில் கரும்புக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கரும்புக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

[2011 ஜனவரி 13

256—

புனல் மின் நிலையம்

வினா எண் 56965—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதி, பெருஞ்சாணி குரு புனல் மின் நிலையத்தைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருஞ்சாணி குரு புனல் மின் நிலையத்தின் அலகு எண் 1 ஏற்கனவே இயக்கத்தில் இருந்து வருகிறது. அலகு எண் 2 வேலைகள் முடிக்கப்பட்டு 30-9-2008 அன்றிலிருந்து தமிழ்நாடு மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

257—

துணை மின் நிலையம்

வினா எண் 57851—திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, சேந்தமங்கலம் ஒன்றியத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

சேந்தமங்கலம் தொகுதி, சேந்தமங்கலம் ஒன்றியம் பகுதியில் உள்ள அக்கியம்பட்டி கிராமத்தில் புதியதாக ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2011 ஜனவரி 13]

மேற்படி துணை மின் நிலையம் அமைக்க தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டு, கையகப்படுத்தும் தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் துணை மின் நிலையம் அமைப்பதற்கு வாரிய ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும்.

258—

துணை மின் நிலையம்

வினா எண் 57932—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, கெலமங்கலம் பேரூராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, கெலமங்கலம் பேரூராட்சியில் 33/11 கி.வோ. ஆனில்லா துணை மின் நிலையத்தின் மின் மாற்றியினுடைய திறன் 1 X 5 எம்.வி.ஏ.- விலிருந்து 1 X 8 எம்விஏ. ஆக கடந்த ஆண்டில்தான் (13-8-2007 அன்று) உயர்த்தப்பட்டது. மேலும், பெருகி வரும் மின் பளுவைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள 1 X 8 எம்.வி.ஏ. மின் மாற்றியை 2 X 8 எம்.வி.ஏ. ஆக மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, கெலமங்கலம் பேரூராட்சியில் மேலும் ஒரு துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

259—

துணை மின் நிலையம்

வினா எண் 57943—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

(அ) திருவிடைமருதூர் வட்டம், பரந்தநால்லூர் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருவிடைமருதூர் வட்டம், பரந்தநால்லூர் பகுதியில், 11-ஆவது பெருந்திட்டக் காலத்தில் துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

260—

துணை மின் நிலையம்

வினா எண் 57944—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருச்சேறை ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருச்சேறை ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்கும் அவசியம் தற்பொழுது எழவில்லை.

261—

துணை மின் நிலையம்

வினா எண் 58659—திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மணவாசி ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மணவாசி ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

262—

துணை மின் நிலையம்

வினா எண் 61316—திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு *மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொள்ளாச்சி வட்டம், மண்ணூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி வட்டம், மண்ணூர் பகுதியில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைக்கத் தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டு வருகின்றது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் துணை மின் நிலையம் அமைப்பதற்கு வாரிய ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும்.

263—

மின்சாரம் தயாரித்தல்

வினா எண் 61475—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு *மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கருவேல மரங்களை வைத்து மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கருவேல மரங்களை வைத்து மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

264—

மின் மாற்றி

வினா எண் 61985—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேரூர் தொகுதி, மைலேரிபாளையம் ஊராட்சியில் மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

265—

துணை மின் நிலையம்

வினா எண் 62190—திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

உசிலம்பட்டி தொகுதி, வாலாந்தூரில் துணை மின் நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம்.

266—

துணை மின் நிலையம்

வினா எண் 62326—திரு. தா. மலரவன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர், ஆர்.எஸ்.புரம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் ஆர்.எஸ்.புரம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க மின்சார வாரியம் அனுமதி அளித்துள்ளது. விரைவில் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

267—

துணை மின் நிலையம்.

வினா எண் 62327—திரு. தா. மலரவன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் பீளமேடு பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

பீளமேடு பகுதிக்கு தற்பொழுது பீளமேடு 110/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் செய்யப்படுகிறது.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2011 ஜனவரி 13

இத்துணை மின் நிலையத்தில் தற்சமயம் 3 x 16 எம்.வி.ஏ. திறனுள்ள மின் மாற்றிகள் இயங்கி வருகின்றன. இத்துணை மின் நிலையத்தின் அதிகபட்ச மின்பளு 38.67 எம்.வி.ஏ. ஆகும். தற்சமயம் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அப்பகுதியில் பெருகிவரும் மின் பளுவைக் கருத்தில் கொண்டு, 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் ஒரு புதிய 110/33-11 கி.வோ. துணை மின் நிலையமும், மேலும் 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ரேஸ் கோர்ஸ் பகுதியில் ஒரு புதிய துணை மின் நிலையமும் அமைக்க 11-ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் 2007-12-இல் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது பீளமேடு பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

268—

மின் வசதி

வினா எண் 62560—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் நகரில் போக்குவரத்திற்கு இடையூறாக நிற்கும் மின் கம்பங்களை மாற்றி மண்ணிற்கு அடியில் கேபிள் அமைத்து மின் வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

269—

புதிய துணை மின் நிலையம்

வினா எண் 65064—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலையில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

270—

துணை மின் நிலையம்

வினா எண் 67624—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், ஏ. முக்குளத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

271—

துணை மின் நிலையம்

வினா எண் 70193—திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, கூடமலை ஊராட்சியில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தலைவாசல் தொகுதி, கூடமலை ஊராட்சியில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

272—

துணை மின் நிலையம்

வினா எண் 70284—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, ஆக்கூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

பூம்புகார் தொகுதி, ஆக்கூரில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

273—

துணை மின் நிலையம்

வினா எண் 72629—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, கலத்தம்பட்டு கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதி, கலத்தம்பட்டு கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

274—

துணை மின் நிலையம்

வினா எண் 74755—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் மின் விநியோகத்திற்காகப் புதியதாக ஒரு துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை. எனினும், மின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ஒரு 230 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கு தேவையான நிலம் கையகப்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

275—

துணை மின் நிலையம்

வினா எண் 74863—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தி பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

இல்லை.

276—

துணை மின் நிலையம்

வினா எண் 75403—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

இல்லை.

277—

மின்சாரம் தயாரித்தல்

வினா எண் 75697—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, அழகர்கோவில் பைக்காரா பசுமலை போன்ற பகுதிகளில் காற்றாலைமூலம் மின்சாரம் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

278—

துணை மின் நிலையம்

வினா எண் 75717—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, பூவந்தி பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* இல்லை.

279—

துணை மின் நிலையம்

வினா எண் 75718—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இடைக்காட்டூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

280—

துணை மின் நிலையம்

வினா எண் 88636—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் கடையீரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, கடையீரில் ஒரு புதிய 110/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க வாரியத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட துணை மின் நிலையம் அமைக்க, தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

281—

துணை மின் நிலையம்

வினா எண் 96899—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், கோட்டூர் ஊராட்சியில் 110 கிலோவாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோட்டூர் பகுதியில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை.

282—

துணை மின் நிலையம்

வினா எண் 96900—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

283—

அணு மின் நிலையம்

வினா எண் 97144—திரு. எம்.ஆர். சுந்தரம்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் பகுதியில் அணு மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் சேலம் மாவட்டம், ஆத்தூர் பகுதியில் அணு மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இந்திய அரசின் அணுசக்தித் துறையிடம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

284—

துணை மின் நிலையம்

வினா எண் 97894—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரையில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்பொழுது எழவில்லை.

285—

நியாய விலைக் கடை

வினா எண் 390—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலை வட்டம், போடிபட்டி கிராமத்திலுள்ள நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து காமராஜ் நகரில் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், போடிபட்டி கிராமத்திலுள்ள, நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து காமராஜ் நகரில் புதியதாக ஒரு பகுதிநேரக் கடை அமைப்பது தற்போதுள்ள அரசு விதிமுறைகளின்படி சாத்தியமில்லை.

286—

நியாய விலைக் கடை

வினா எண் 1722—திரு. வை. காவேரி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், காளிக்கவுண்டன்பாளையம் ஊராட்சி, எடையன்காடு, செட்டியூர், நொறுக்கம்பாளையம் மற்றும் மகுடஞ்சாவடி ஊராட்சி, மேட்டுத் தெரு ஆகிய பகுதிகளுக்குப் புதியதாக ஒரு நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், காளிக்கவுண்டன்பாளையம் ஊராட்சியில் உள்ள காளிக்கவுண்டம்பாளையம்-2 மற்றும் நொறுக்கம்பாளையம் பகுதிக்குமிடையே 1 கி.மீ. தூரமே உள்ளதால் நொறுக்கம்பாளையத்தில் புதிய பகுதிநேரக் கடை திறக்க வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும், எடையன்காடு, செட்டியூர் மற்றும் மேட்டுத் தெரு ஆகிய பகுதிகளில் இலவசக் கட்டடம் கொடுக்க யாரும் முன்வராததால், அரசு விதிகளின்படி அப்பகுதிகளில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

287—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 2726—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், பள்ள ஈகை கிராமத்திற்குப் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், பள்ள ஈகை கிராமத்தில் புதிய பகுதி நேரக்கடை 1-8-2007 முதல் செயல்பட்டு வருகிறது.

288—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 15784—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டி ஊராட்சி, பூம்பட்டியில் புதிய நியாய விலைக் கடை திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டி ஊராட்சி, மானத்தாள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 740 குடும்ப அட்டைகளைக் கொண்டு செயல்பட்டுவரும் டி. மாரமங்கலம் என்ற முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து பூம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த

2011 ஜனவரி 13]

228 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு, புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 29–4–2007–இல் திறக்கப்பட்டு 1–5–2007 முதல் செயல்பட்டு வருகிறது.

289—

வங்கி வைப்புத் தொகை

வினா எண் 16200—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நகர்ப்புற கூட்டுறவு வங்கியில் வைப்புத் தொகை முதிர்ச்சி பெற்றும் உரியவர்களுக்கு அத்தொகை திரும்ப வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகரக் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றுள்ள உறுப்பினர்களிடமிருந்து கடன் தொகை வசூலாகாததால் வங்கியில் வைப்புத் தொகை முதிர்வடைந்த நிலையிலும் வைப்புதாரர்களுக்குத் தொகை வழங்க இயலாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் வங்கி சட்டபூர்வ நீர்ம நிதியில் (Statutory Liquid Reserves) இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ள விகிதாச்சாரத்தினைக் காட்டிலும் கூடுதலாகப் பராமரித்துவரும் தொகையினைக் காசாக்கி அதன்மூலம் முதிர்வடைந்த வைப்புத் தொகையினைத் திரும்ப வழங்க தீர்மானிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் ரூ.52,52,300/- கடன் அரசுப் பத்திரங்கள் 2-2-2007 மற்றும் 20-02-2007-ல் விற்கப்பட்டும், விற்ற தேதியில் நிலுவை இருந்த முதிர்வடைந்த வைப்புத் தொகையான ரூ.18.00 இலட்சங்கள் 164 நபர்களுக்குத் திரும்ப வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ள விகிதாச்சாரத்தின்படி 04-02-2007 முதல் வங்கி முறையாக ரொக்க ஒதுக்கீடு விகிதம் (Cash Reserve Ratio) பேணி வருகிறது.

கடந்த 01-04-2007 முதல் 03-03-2008 வரை ரூ.62.89 இலட்சம் கடன் வசூல் செய்யப்பட்டு முதிர்வடைந்த வைப்புகள் ரூ.45.69 இலட்சம் திரும்ப வழங்கப்பட்டுள்ளது.

290—

கணினிமயமாக்கல்

வினா எண் 16818—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தொடக்க கூட்டுறவு வங்கிகளையும் கணினிமயமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

பெரும்பாலான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் பழமையான கணக்குகள், பராமரிக்கும் நடைமுறைகளைக் கடைப்பிடித்து வருகின்றன. ஆனால், புதிய தலைமுறை தொழில்நுட்ப உத்திகள் மூலம் புதிய அணுகுமுறைகளைப் பிற வங்கிகள் கையாண்டு செயல்படுவதால் ஏற்பட்டுள்ள நிலையினை எதிர்கொள்ளும் வகையில் வங்கியியல் தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி 2008 ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைத்துத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் கணினிமயமாக்கப்படும்.

291—

பணி நிரந்தரம்

வினா எண் 17750—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கூட்டுறவுத் துறையில் பணிபுரியும் தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ)	*கூட்டுறவுச் சங்கங்களில் 8-7-1980க்குப் பின்னர் 11-3-2001 வரை முறையற்ற வகையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்கள்*	*—37,566*
	அதில் பணிவரன்முறை செய்யப்பட்டவர்கள்	*—27,510*
	பணிவரன்முறை தகுதிபெறாத பணியாளர்கள்	*—10,156*

292—

கட்டடம்

வினா எண் 17914—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, செலவடை ஊராட்சி, வெண்ணம்பட்டியில் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, செலவடை ஊராட்சி, வெண்ணம்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடை செலவடை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 573 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தற்போது, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்டும் பணியினை சிறப்பினமாக எடுத்துச் செய்ய அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வெண்ணம்பட்டி நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

[2011 ஜனவரி 13

293—

முழுநேர நியாய விலைக் கடை

வினா எண் 17935—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், நூலஅள்ளி கிராம பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டத்தில் உள்ள என்.எஸ். ரெட்டியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் நூலஅள்ளி கிராமத்தில் இயங்கும் நியாய விலைக் கடை, 739 குடும்ப அட்டைகளுடன் முழுநேரக் கடையாக ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

294—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 18303—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், சீமானூத்து ஊராட்சி, நல்லிவீரன்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், சீமானூத்து ஊராட்சி நல்லிவீரன்பட்டி கிராமத்தில் 133 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இக்கிராம மக்கள் 1/2 கி.மீ. தொலைவிலுள்ள சீமானூத்து நியாய விலைக் கடையில் தற்போது அத்தியாவசியப்

2011 ஜனவரி 13]

பொருட்களைப் பெற்று வருகின்றனர். எனவே, நல்லிவீரன்பட்டியில் நியாய விலைக் கடை ஏதும் செயல்படாத நிலையில் நியாய விலைக் கடை கட்டடம் கட்டுதல் என்ற கேள்வி எழவில்லை.

295—

நியாய விலைக் கடை

வினா எண் 19010—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, முதலைமேடு கிராமத்திலுள்ள பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டம், முதலைமேடு திட்டு பகுதிநேர அங்காடி 375 குடும்ப அட்டைகளுடன் தற்போது நடுத்தட்டு கிராமத்தில் இயங்கி வருகிறது. முதலைமேடு திட்டு பகுதிநேர அங்காடி கொள்ளிடம் ஆற்றங்கரையில் உள்ளது. பிற பகுதியிலிருந்து 125 குடும்ப அட்டைகளை இணைத்து முழுநேர அங்காடியாக மாற்றும் நிலையில் மழை வெள்ளக் காலங்களில் பொதுமக்களுக்குச் சிரமங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், கட்டட வசதி செய்து தரப்படினும் மேற்சொன்ன காரணத்தினால் முதலைமேடு திட்டு பகுதிநேர அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்றம் செய்ய சாத்தியகூறுகள் இல்லை.

296—

புதிய கட்டடங்கள்

வினா எண் 21280—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

கலசப்பாக்கம் தொகுதி, பூவாம்பட்டு, கல்லந்தல் கிராம கூட்டுறவு கடைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தற்போது அமலில் உள்ள அரசாணைகளின்படி பகுதிநேரக் கடை அமைப்பதற்குச் சம்பந்தப்பட்ட கிராம மக்களால் இலவசமாக கட்டட வசதி செய்து தரப்பட வேண்டும். அவ்வரசாணையின்படி கலசப்பாக்கம் தொகுதி, பூவாம்பட்டு நியாய விலைக் கடை 127 குடும்ப அட்டைகளுடன் பகுதிநேரக் கடையாக மேல்வில்வராயநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் அவ்வூர் கிராம மக்களால் வழங்கப்பட்ட இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

கல்லந்தல் கிராமத்தில் பெரிய கல்லந்தல் மற்றும் சின்ன கல்லந்தல் ஆகிய இரு பகுதி நேர நியாய விலைக் கடைகள் முறையே 85 மற்றும் 203 குடும்ப அட்டைகளுடன் பாடகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் அக்கிராம மக்களால் வழங்கப்பட்ட இலவச கட்டடத்தில் செயல்படுகின்றன. எனவே, மேற்குறிப்பிட்ட இரண்டு பகுதிநேர நியாய விலைக் கடைகளுக்கும் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

297—

நியாய விலைக் கடை

வினா எண் 22077—திருமதி ஜா. லீமா றோஸ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதி, திருவட்டாறு பேரூராட்சி தெற்றியோடு சந்திப்பில் நியாய விலைக் கடையைத் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, திருவட்டாறு பேரூராட்சி, தெற்றியோடு சந்திப்பில் ஒரு புதிய பகுதிநேரக் கடை அமைக்கப்பட்டு, 13-2-2008 முதல் செயல்பட்டு வருகிறது.

2011 ஜனவரி 13]

298—

நியாய விலைக் கடை

வினா எண் **22096**—திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிணத்துக்கடவு தொகுதி, ஆச்சிபட்டி ஊராட்சி, சேரன் நகர் பகுதியிலும், திம்மங்குத்து ஊராட்சி, சாத்துப்பாறை சித்தூரிலும் புதிதாக நியாய விலைக் கடையை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கிணத்துக்கடவு தொகுதி, சேரன்நகர் பகுதியில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க 20—5—2008 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மற்றும் திம்மங்குத்து ஊராட்சியில் சாத்துப்பாறை சித்தூரில் 31-5-2007 முதல் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

299—

நியாய விலைக் கடை

வினா எண் **23191**—திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், சீயத்தமங்கை ஊராட்சியில் நியாய விலைக் கடை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், சீயத்தமங்கை ஊராட்சியில் சீயத்தமங்கை நியாய விலைக் கடை முழுநேரக் கடையாக 526 குடும்ப அட்டைகளுடன் திருமருகல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் ஊராட்சியால் கட்டிக் கொடுக்கப்பட்ட கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. எனவே, மேற்படி நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

[2011 ஜனவரி 13

300—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 23470—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக் குட்டை ஊராட்சி, அக்கரைப்பட்டியார்வளவில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அக்கரைப்பட்டியார்வளவில் வசிக்கும் பொதுமக்கள் மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் அமைந்துள்ள நடுவனேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்பட்டுவரும் தப்பக்குட்டை நியாய விலைக் கடையின்மூலம் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுச் செல்கின்றனர். அக்கரைப்பட்டியார்வளவு பகுதியில் மொத்தம் 110 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. தப்பக்குட்டை நியாய விலைக் கடைக்கும் அக்கரைப்பட்டியார்வளவு பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் ஒரு கிலோ மீட்டர் ஆகும். அரசின் நிபந்தனையான பகுதிநேர அங்காடி அமைக்க குறைந்த பட்சம் 150 குடும்ப அட்டைகளும், இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் இடையே உள்ள தூரம் 1.5 கிலோ மீட்டர் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை இந்நேர்வில் பூர்த்தியாகவில்லை. எனவே, தப்பக்குட்டை நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து அக்கரைப்பட்டியார்வளவில் ஒரு புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2011 ஜனவரி 13]

301—

நியாய விலைக் கடை

வினா எண் 26331—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சிப் பகுதி வீட்டு வசதிக் குடியிருப்புப் பகுதியில் நியாய விலைக் கடை துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சி வீட்டு வசதிக் குடியிருப்புப் பகுதி மக்களின் கோரிக்கையின்படி வசந்தம் நகர் பகுதியில், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணையின்படி 14-2-2007 முதல் புதிய பகுதிநேரக் கடை திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

302—

நியாய விலைக் கடை

வினா எண் 27468—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கம்மநல்லூர் ஊராட்சி, கம்மநல்லூர் கிராமத்திற்குத் தனியாக நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கம்மநல்லூர் ஊராட்சி, கம்மநல்லூர் கிராமத்தில் உள்ள 275 குடும்ப அட்டைகள் பெற்றவர்கள் மகாதானபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடைகளில்

அத்தியாவசியப் பொருள்களைப் பெற்று வருகின்றனர். மேற்படி நியாய விலைக் கடையுடன் கம்மநல்லூர் கிராமத்தில் உள்ள குடும்ப அட்டையும் சேர்த்து மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 572 ஆகும். கம்மநல்லூர் கிராமத்திற்கும், மகாதானபுரம் நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1/2 கி.மீ. ஆகும். எனவே, தற்போது நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி கம்மநல்லூர் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

303—

நியாய விலைக் கடை

வினா எண் 30071—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, மதுரைப்பாக்கம் ஊராட்சியில் புதிய நியாய விலைக் கடை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, மதுரை பாக்கம், மதுரைப்பாக்கம் ஊராட்சியிலுள்ள 299 குடும்ப அட்டைகள் அருகிலுள்ள அகரம் தென் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்நியாய விலைக் கடை காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. எனவே, மதுரைப்பாக்கம் ஊராட்சியில் நியாய விலைக் கடை ஏதும் செயல்படாத நிலையில் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

304—

மருத்துவர் நியமனம்

வினா எண் 30342—திருமதி மு. சந்திரா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

இராசபாளையம் தொகுதி, தளவாய்புரத்தில் கூட்டுறவுத் துறையின்கீழ் இயங்கும் மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

இராசபாளையம் தொகுதி தளவாய்புரம் ஆ.ச. பழனிச்சாமி நாடார் சுகாதாரக் கூட்டுறவுச் சங்கம் லிட் மருத்துவமனை சங்கத்தின் துணை விதி 38(1)-இன்படி மருத்துவரைச் சங்க நிர்வாகக் குழு நியமிக்க வேண்டும் என்று உள்ளது. அதன்படி பெண் மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டு சிகிச்சை அளித்து வருகிறார். இந்நிலையில் தளவாய்புரத்தில் கூட்டுறவுத் துறையின்கீழ் இயங்கும் மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவரை அரசு நியமிக்க வழிவகை இல்லை.

305—

நியாய விலைக் கடை

வினா எண் **32538—திரு. வை. காவேரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கச்சுப்பள்ளி ஊராட்சி, கோணங்கியூர் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கச்சுப்பள்ளி ஊராட்சி, கோணங்கியூரில் ஏற்கெனவே 2-2-2000 முதல் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வரும் நிலையில், அதே பகுதியில் மற்றொரு நியாய விலைக் கடை அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[2011 ஜனவரி 13

306—

நியாய விலைக் கடை

வினா எண் 33219—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் ஒன்றியம், திருமல்ராயபுரம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், முகையூர் ஒன்றியம், திருமல்ராயபுரத்தில் புதிய நியாய விலைக் கடை 26-4-2008 அன்று திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

307—

நியாய விலைக் கடை

வினா எண் 33408—திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோவில் தொகுதி, பரிவிளாகம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரிவிளாகம் கிராமத்தில் 324 குடும்ப அட்டைகளைக் கொண்ட முழுநேர நியாய விலைக் கடை பல வருடங்களாக இயங்கி வருகிறது. எனவே, பரிவிளாகம் கிராமத்தில் மீண்டும் புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

308—

நியாய விலைக் கடை

வினா எண் 34062—திரு. பெ.சு. விஜயகுமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, களம்பூர் பேரூராட்சி, திருவள்ளுவர் தெரு, அய்யம்பேட்டையில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், களம்பூர் பேரூராட்சி, களம்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்படும் களம்பூர் நியாய விலைக் கடை 1,085 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையிலிருந்து 456 குடும்ப அட்டைகளைப் பிரித்து அய்யம்பேட்டை பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை ஏற்கெனவே 2001-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. எனவே, அய்யம்பேட்டை பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

309—

முழுநேர அங்காடி

வினா எண் 34636—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை தொகுதி, சுந்தரநாயகிபுரம் ஊராட்சி, பகுதிநேர அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை வட்டம், சுந்தரநாயகிபுரம் பகுதிநேர அங்காடி, தாமரங்கோட்டை தெற்கு தாய் அங்காடியிலிருந்து பிரிக்கப்பட்டு 363 குடும்ப அட்டைகளுடன் பகுதிநேர அங்காடியாகச் செயல்பட்டு வருகிறது. தற்போது நடைமுறையில் உள்ள அரசாணையில் உள்ள நிபந்தனையின்படி சுந்தரநாயகிபுரம் பகுதிநேர அங்காடியில் 500 குடும்ப அட்டைகளுக்கும் குறைவாக உள்ளதால், அப்பகுதிநேர அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்ற சாத்தியக் கூறுகள் இல்லை.

310—

நியாய விலைக் கடை

வினா எண் 35043—திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதி, அன்னியாடா, இந்திரா நகர் பகுதி, ஜெகதளா பேரூராட்சி, ஒசட்டியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அன்னியாடா மற்றும் இந்திரா நகர் பகுதிகளில் தலா 130 குடும்ப அட்டைதாரர்களும், 1 கி.மீ. தூரத்தில் உள்ள எடப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்பட்டு வரும் இளித்துரை நியாய விலைக் கடையிலிருந்து அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். அன்னியாடா மற்றும் இந்திரா நகர் பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 150-க்கும் குறைவாக உள்ளதாலும், மேற்படி இரண்டு பகுதிகளுக்கும் இளித்துரை நியாய விலைக் கடைக்கும் இடையே

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

உள்ள தூரம் 1.5 கி. மீட்டருக்கும் குறைவாக உள்ளதாலும், அரசு விதிகளின்படி அன்னியாடா மற்றும் இந்திரா நகர் பகுதிகளில் புதிய நியாய விலைக் கடைகள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. ஒசட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கப்பட்டு 1-12-2007 முதல் செயல்பட்டு வருகிறது.

311—

கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி

வினா எண் 35232—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி அமைக்க உத்தேசம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

312—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 35486—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, செங்கோடம்பாளையம் வங்கி வளாகத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, செங்கோடம்பாளையம் குமாரவலசு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி வளாகத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைக்கப்பட்டு 3-10-2007 முதல் செயல்பட்டு வருகிறது.

313—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 39023—திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாங்குநேரி தொகுதி, மஞ்சுவிளை, மூங்கிலடி கிராமங்களில் புதிய நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, மஞ்சுவிளை கிராமத்தில், பகுதிநேரக் கடை அமைக்கப்பட்டு 19-4-2007 முதல் செயல்பட்டு வருகிறது. மூங்கிலடி கிராமத்திற்கான பகுதி நேரக் கடை 141 குடும்ப அட்டைகளுடன் களக்காடு என்னும் தாய்க்கடையில் இணைக்கப்பட்டுள்ளது. மூங்கிலடி கிராமத்தில் பகுதிநேரக் கடை அமைக்க கிராம மக்கள் எவரும் இலவசக் கட்டடம் கொடுக்க முன்வராததால், இங்குப் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க இயலாமல் உள்ளது.

314—

கூட்டுறவு விற்பனை நிலையம்

வினா எண் 43005—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ஓமலூர் சுற்றுப் பகுதிகளில் போதுமான விவசாய விளைபொருட்களான பருத்தி, நிலக்கடலை போன்ற பயிர்களின் மகசூல் இல்லாத நிலையில், ஓமலூர் தொகுதி, ஓமலூரில் வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

315—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 48052—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, காளிகவுண்டம்பாளையம் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி துவக்குவதற்கு அரசு விதித்துள்ள நிபந்தனைகள் பூர்த்தி ஆகாத நிலையில் புதிதாக எடப்பாடி தொகுதி, காளிகவுண்டம்பாளையம் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

316—

சொந்தக் கட்டடம்

வினா எண் 48148—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

கலசப்பாக்கம் தொகுதி, ஏடி. மங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மண்டலம், திருவண்ணாமலை சரகம், கலசப்பாக்கம் ஒன்றியத்தில் செயல்படும் ஏடி. மங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கடந்த மூன்றாண்டுகளுக்கும் மேலாக நட்டத்தில் செயல்பட்டு வருவதால், தற்போது வங்கிக்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட இயலாத நிலை உள்ளது.

317—

சொந்தக் கட்டடம்

வினா எண் 64734—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, தருமபுரி கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

318—

கரும்புக்கு கூடுதல் விலை

வினா எண் 39—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கடந்த ஆண்டு அரைவைப் பருவத்தில் அரைவை செய்த கரும்புக்குக் கூடுதல் விலை விவசாயிகளுக்கு வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அத்தொகை எப்போது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி திரு. எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளுக்கும் 2004-05 அரவைப் பருவத்தில் அரைவை செய்த கரும்பிற்குக் கூடுதல் விலை இன்னும் நிர்ணயம் செய்து வழங்கப்படவில்லை.

(ஆ) மத்திய அரசு "எல்" காரணி (L-factor) நிர்ணயம் செய்து அறிவிப்பு செய்த பிறகு, மேற்படி கூடுதல் விலை அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை உட்பட எல்லா சர்க்கரை ஆலைகளுக்கும் நிர்ணயம் செய்து ஆணைகள் வழங்கப்படும்.

319—

குளிர்பதனக் கிடங்கு

வினா எண் **558—திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி, ராயக்கோட்டை ஒட்டியுள்ள கெலமங்கலம் பகுதிகளில் உற்பத்தியாகும் தக்காளி மற்றும் காய்கறிகளைப் பாதுகாத்து வைக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி, ராயக்கோட்டை ஒட்டியுள்ள கெலமங்கலம் பகுதிகளில் உற்பத்தியாகும் தக்காளி மற்றும் காய்கறிகளைப் பாதுகாத்து வைக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

[2011 ஜனவரி 13

320—

குளிர்பதனக் கிடங்கு

வினா எண் 571—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் புளி, தக்காளி அதிகமாக விளைவதால், அங்கு குளிர்பதனக் கிடங்கு அமைத்து விவசாயிகளுக்கு உதவிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரியில் புளி, தக்காளிக்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

321—

மகசூல்

வினா எண் 636—திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

Bt. பருத்தியைப் பயிர் செய்வதால் கிடைக்கும் மகசூல் பற்றி உண்மையான தகவல்களை விவசாயிகளுக்குத் தெரிவிக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

பி.டி. பருத்தி சாகுபடி தொழில்நுட்பம் மற்றும் கிடைக்கும் மகசூல் விவரங்களை விவசாயிகளுக்குத் தெரிவித்திட இதற்கெனத் தனியான திட்டம் ஏதும் துறையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

கடந்த சில வருடங்களில் பி.டி. பருத்தி சாகுபடி தமிழகத்தில் அதிகரித்து வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் 500 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு வந்த பி.டி. பருத்தி. 2005-06 ஆம் ஆண்டில் 17,800 எக்டர் அளவிற்கு அதிகரித்துள்ளது. அதிகரித்து வரும் பி.டி. பருத்தி சாகுபடிப் பரப்பைக் கருத்தில் கொண்டு, வேளாண்மைத் துறை விரிவாக்க அலுவலர்கள் பி.டி.பருத்தி தொழில் நுட்பங்களை விவசாயிகளிடையே தெரிவிப்பதுடன் மற்ற பருத்தி சாகுபடியைப் போல பிடிபருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கும் இடுபொருள் மானியம் வழங்கிட நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். பி.டி.பருத்தி அல்லாத பருத்தியை விட பி.டி. பருத்தி சாகுபடியில் 1 முதல் 4 குவிண்டால் கூடுதல் மகசூல் பதிவு செய்யப்பட்டுள்ளது. காய்ப்புழு தாக்குதல் பி.டி.பருத்தியில் காணப்படாததால் பூச்சி மருந்து தெளிக்கும் செலவினத்திலும் கணிசமான சேமிப்பு காணப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, பி.டி. பருத்தி தொடர்பான விவரங்கள் விவசாயிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுவரும் இந்நிலையில் அதற்கென மேலும் தனியே ஒரு திட்டம் தேவைப்படவில்லை என்று கருதப்படுகிறது.

322—

ஆய்வு நிறுவனங்கள்

வினா எண் 637—திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மரபு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை ஆய்வு செய்து விவசாயிகளுக்கு விவரங்களை வெளியிட தமிழகத்தில் ஆய்வு நிறுவனங்கள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளுக்கு இவை பற்றிய விவரங்களை அளிக்கின்றனவா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்.

[2011 ஜனவரி 13

320—

குளிர்பதனக் கிடங்கு

வினா எண் 571—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் புளி, தக்காளி அதிகமாக விளைவதால், அங்கு குளிர்பதனக் கிடங்கு அமைத்து விவசாயிகளுக்கு உதவிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரியில் புளி, தக்காளிக்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

321—

மகசூல்

வினா எண் 636—திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

Bt. பருத்தியைப் பயிர் செய்வதால் கிடைக்கும் மகசூல் பற்றி உண்மையான தகவல்களை விவசாயிகளுக்குத் தெரிவிக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

பி.டி. பருத்தி சாகுபடி தொழில்நுட்பம் மற்றும் கிடைக்கும் மகசூல் விவரங்களை விவசாயிகளுக்குத் தெரிவித்திட இதற்கெனத் தனியான திட்டம் ஏதும் துறையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[2011 ஜனவரி 13

323—

இலவச மண்வெட்டி

வினா எண் 720—திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயக் கூலித் தொழிலாளருக்கு இலவச மண்வெட்டி, கடப்பாறை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தற்போது வேளாண்மைத் துறையில் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு இலவச மண்வெட்டி, கடப்பாறை வழங்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை.

324—

WTO அரசு நிறுவனம் நிறுவுதல்

வினா எண் 875—திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள விவசாயிகளுக்கும், உற்பத்தியாளர்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கு WTO விதிகள் பற்றிய விளக்கங்களையும், ஆலோசனைகளையும் கூற அரசு நிறுவனம் ஒன்று நிறுவ அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

WTO விதிமுறைகளினால் ஏற்படும் பாதிப்புகளை மத்திய அரசும், மாநில அரசும் தொடர்ந்து கண்காணித்து வருகின்றன. இதுகுறித்து, பல்வேறு நிலைகளில் விவாதங்களும், கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன. மேலும், சம்பந்தப்பட்ட அரசுத் துறை மற்றும்

2011 ஜனவரி 13]

நிறுவனங்கள் தத்தம் பயனாளிகளுக்கு இதுகுறித்த விவரங்களைத் தெரிவித்து வருகின்றன. இந்த நிலையில், மேற்கண்ட பணியைச் செய்வதற்கு மட்டும் ஒரு அரசு நிறுவனம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

325—

விலை நிர்ணயம்

வினா எண் 925—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கொப்பரைத் தேங்காயின் விலையை அரசு நிர்ணயம் செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) கொப்பரைத் தேங்காயின் விலை மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்படுகிறது.

(ஆ) வினா எழவில்லை.

326—

வினாதாள்

வினா எண் 926—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள விவசாயிகளுக்கு விதைகளைப் பற்றாக்குறை இல்லாமல் மானிய விலையில் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) அரசு முன்வரும்.

(ஆ) வால்பாறை தொகுதி விவசாயிகளுக்குக் கீழ் குறிப்பிட்ட திட்டப் பணிகள் மூலம் 2006-2007 ஆம் நிதியாண்டில் கீழ்க்குறிப்பிட்ட அளவு விதைகள் மானிய விலையில் விநியோகம் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது:

வ.எண்	திட்டப் பணிகள்	2006-07-ல் விதைகள் விநியோகம் திட்டமிட்ட அளவு (மெ.டன்னில்)
1.	ஐ.சி.டி.பி.(அரிசி) நெல் சான்று விதைகள்	7.000
2.	ஐ.சி.டி.பி. (சிறுதானியம்)சோளம் சான்று விதைகள்	0.500
3.	ஐசோபம் பயறு வகைத் திட்டம் பயறு வகைச் சான்று விதைகள்	2.000
4.	ஐசோபம் பயறு எண்ணெய் வித்துகள் நிலக்கடலை சான்று விதைகள்	10.000

327—

குளிர்பதனக் கிடங்கு

வினா எண் 967—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதியில் விளையும் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு ஒன்றைக் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப் பகுதியில் விளையும் காய்கறிகளைப் பாதுகாக்க, குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

328—

குளிர்பதனக் கிடங்கு

வினா எண் 968—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அங்கலகுறிச்சி ஊராட்சி சந்தைபேட்டை அருகில் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு ஒன்றைக் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, அங்கலகுறிச்சி ஊராட்சி, சந்தைபேட்டை அருகில் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

329—

விவசாயக் கல்லூரி

வினா எண் 1075—திரு. த. தியோடர் ரெஜினால்டு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், பத்மநாபபுரம் தொகுதியில் விவசாயக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் வேளாண்மைத் துறை அமைச்சர்:

(1) கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(2) மேலும், மாண்புமிகு நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. ராஜன் அவர்களின் "கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா" என்ற வினாவுக்கு, "கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைப்பது குறித்து சாத்தியமில்லை" என 13-4-2007 அன்று சட்டப் பேரவையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

330—

வாழை ஆராய்ச்சி நிலையம்

வினா எண் 1086—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, லாலாபேட்டையில் வாழை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

இல்லை.

331—

ஆராய்ச்சி நிலையம்

வினா எண் 1087—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

கிருஷ்ணராயபுரம் தொகுதியில், வெற்றிலைக் கொடிக்கால் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் வேளாண்மைத் துறை அமைச்சர்:

இல்லை.

332—

உழவர் சந்தைகள்

வினா எண் 1106—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகள் பயனடையும் வகையில் உழவர் சந்தைகளை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மூடப்பட்ட 28 உழவர் சந்தைகளும் மீண்டும் திறக்கப்பட்டு, தற்போது மொத்தம் 103 உழவர் சந்தைகளும் புதுப்பொலிவுடன் செயல்பட்டு வருகின்றன.

333—

புதிய நெல் ரகம்

வினா எண் 1280—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் பயன்பெறும் வகையில் அதிக மகசூல் அளிக்கும் புதிய நெல் ரகத்தை இந்த ஆண்டு அறிமுகப்படுத்த அரசு முன்வருமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் வேளாண்மைத் துறை அமைச்சர்:

அதிக மகசூல் அளிக்கக் கூடிய மூன்று புதிய நெல் இரகங்கள் இந்த ஆண்டு வெளியிடப்பட உள்ளன.

334—

குளிர்பதனக் கிடங்கு

வினா எண் 1290—திரு. டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாழைப் பழத்தினைக் குளிர்பதனக் கிடங்கில் வைத்துப் பாதுகாக்க இயலுமா?

(ஆ) ஆம் எனில், மோகனூரில் குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாழைப்பழத்தை 15 டிகிரி செல்சியஸ் முதல் 20 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் குளிர்பதனக் கிடங்கில் வைத்து 30 நாட்கள் வரை பாதுகாக்கலாம்.

மோகனூர் பகுதியில் தனியார் நிறுவனங்கள் ஏதேனும் குளிர்பதனக் கிட்டங்கி அமைத்திட முன்வந்தால், மைய அரசின் நிறுவனமான தேசிய தோட்டக்கலை வாரியம் (NHB) / தேசிய தோட்டக்கலை குழு (NHM) மூலமாக 25 விழுக்காடு முதலீட்டு மானியம் பெற்றுத் தர வேளாண்மை விற்பனைத் துறையின் மூலமாக அனைத்து உதவிகளும் செய்து கொடுக்கப்படும்.

335—

கோலப்பன் குழு

வினா எண் 1553—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையில் முன்னேற்றம் காண, கோலப்பன் குழு பரிந்துரைகளைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (2டி) எண் 24, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜே-2) துறை, நாள் 8-7-2005-இன்படி நாள் ஒன்றுக்கு ஆண் தொழிலாளர்களுக்கு ரூ. 80/- மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு ரூ. 70/- எனவும் நிர்ணயிக்கப்பட்டதை, அனைத்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு விவசாயக் கூலிகளுக்கு உயர்த்தப்பட்ட கூலித் தொகை வழங்கும் பொருட்டு அறிவுரை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில், அரசு விதைப் பண்ணைகளில் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி வழங்கப்படுகிறது.

336—

உழவர் சந்தை

வினா எண் 1601—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், ஓமலூர் பேருந்து நிலையம் அருகில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் வேளாண்மைத் துறை அமைச்சர்:

தற்சமயம் ஓமலூரில் புதியதாக உழவர் சந்தை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

337—

உழவர் சந்தை

வினா எண் 1788—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மற்றும் கோட்டூரில் உழவர் சந்தை திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் தற்சமயம் ஆர்.எஸ். புரம், சிங்காநல்லூர், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, திருப்பூர்(வடக்கு), திருப்பூர்(தெற்கு), மேட்டுப்பாளையம், குறிச்சி ஆகிய எட்டு இடங்களில் உழவர் சந்தைகள் செயல்பட்டு வருவதால், வால்பாறை மற்றும் கோட்டூர் பகுதியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

338—

கேழ்வரகு உற்பத்தி

வினா எண் 2107—திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் கேழ்வரகு உற்பத்தி செய்ய அரசு சிறப்பு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதியில் கேழ்வரகு உற்பத்தி செய்ய அரசு சிறப்பு நடவடிக்கை எடுக்கும்.

2011 ஜனவரி 13]

339—

சிறப்புத் திட்டம்

வினா எண் 2475—திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மலர்கள், முள்ளங்கி மற்றும் தர்பூசணி பயிரிடுவோரை ஊக்குவிக்க சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உயர் விளைச்சல், வீரிய ஒட்டுக் காய்கறிகள், விதைகள் மற்றும் மலர்ச் செடிகள் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் நடப்பாண்டில் வழங்கப்படவுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 255 எக்டேர் பரப்பளவில் மலர்கள், முள்ளங்கி, தர்பூசணி உள்ளிட்ட உயர் விளைச்சல்/வீரிய ஒட்டு காய்கறிப் பயிர்களையும், 4 எக்டேர் பரப்பில் மலர்களும் நடப்பாண்டில் (2006-07) கூடுதலாக சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

340—

மிளகு உற்பத்தி

வினா எண் 3063—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள சங்கரன்குடி, ஆழியார் அருகிலுள்ள பழைய சர்க்கார்பதி, மலை ஜாதி மக்களுக்கு மிளகு உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மிளகு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு தேவையான உதவிகள் மலை ஜாதி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

341—

பயிர்க் காப்பீடு

வினா எண் 3544—திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இயற்கைச் சீற்றங்களால் வாழை போன்ற பயிர்கள் அடிக்கடி சேதமடைந்து நஷ்டம் அடையும் விவசாயிகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

வாழைப் பயிருக்குப் பயிர்க் காப்பீட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் வேலூர், சிவகங்கை, கிருட்டிணகிரி, திருச்சி, திருநெல்வேலி, தஞ்சாவூர், தூத்துக்குடி, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம் மற்றும் கரூர் ஆகிய 14 மாவட்டங்களில் மட்டுமே தற்பொழுது செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்த அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள், தங்கள் மாவட்டத்தில் உள்ள வாழைப் பயிர் பயிரிடும் பரப்பை, குறைந்தபட்சம் ஒரு வட்டாரத்தில் குறைந்தது 500 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, அதன் விவரத்தை மத்திய அரசுக்குத் தெரிவித்தால், அதனை மத்திய அரசு பரிசீலித்து வாழைப் பயிர்கள் காப்பீட்டிற்கான அனுமதி வழங்கும்.

2011 ஜனவரி 13]

342—

பணி வரன்முறை

வினா எண் 4201—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில், தோட்டக்கலைத் துறைப் பண்ணைகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக தினக்கூலி அடிப்படையில் வேலை செய்யும் 500 பெண்கள் உட்பட 1,000 தொழிலாளர்களின் பணி வரன்முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

நீலகிரி மாவட்டத்தில், தோட்டக்கலைத் துறைப் பண்ணைகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக தினக்கூலி அடிப்படையில் வேலை செய்யும் தகுதி படைத்த தொழிலாளர்களின் பணியினைப் பணி வரன்முறைப்படுத்தும் கருத்துரு, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை ஆணையரால் அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

343—

காட்டாமணக்கு

வினா எண் 4457—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள கிராமங்களில் காட்டாமணக்குப் பயிர் மூலம் பயோ டீசலைத் தயாரிக்க காட்டாமணக்குச் செடிகளை இலவசமாக வழங்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள கிராமங்களில் காட்டாமணக்குப் பயிர் மூலம் பயோ டீசலைத் தயாரிக்க காட்டாமணக்குச் செடிகள் அரசு மூலம் இலவசமாக தற்சமயம் வழங்கப்படுவதில்லை. ஆனால் 50 சதவீத மானியத்தில் வழங்கி விவசாயிகளை ஊக்குவிக்க அரசு பரிசிலனை செய்து வருகிறது.

344—

நஷ்ட ஈடு

வினா எண் 4548—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, ஒரத்துப்பாளையம் அணையில் இரசாயன நீர் கலந்ததால் விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டதற்கு அரசு நஷ்ட ஈடு அளிக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, ஒரத்துப்பாளையம் அணையில் இரசாயன நீர் கலந்ததால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டதற்கு நஷ்ட ஈடு வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

345—

கரும்பு வெட்டும் இயந்திரம்

வினா எண் 4761—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டையில் கரும்பு வெட்டும் இயந்திரம் அறிமுகம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம், எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இதனைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

346—

மல்லிகைப் பூ ஏற்றுமதி மண்டலம்

வினா எண் 5418—திரு. த. அ. மேகநாதன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் மல்லிகைப்பூ ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் மல்லிகைப் பூ ஏற்றுமதி மண்டலம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை. தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கி, கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் கொய்மலருக்கென 198.73 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.24.85 கோடி மதிப்பீட்டில் டிட்கோ நிறுவனமும் தனியார் நிறுவனமும் இணைந்து டான்ப்ளோரா என்ற ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது. காவேரிப்பட்டினம், தற்சமயம் பொதுக் கட்டமைப்பு வசதிகளுடன் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டுள்ள

[2011 ஜனவரி 13

ஒசூரில் இருந்து 66 கி.மீ. தூரத்தில் உள்ளதால், இப்பகுதியில் உள்ள மல்லிகைப் பூ உற்பத்தி செய்யும் விவசாயிகள் ஒசூரில் அமைந்துள்ள ஏற்றுமதி மண்டலம் மூலம் தாங்கள் உற்பத்தி செய்யும் மலர்களை ஏற்றுமதி செய்து பயனடையலாம் என்பதால் காவேரிப்பட்டினம் தொகுதியில் மல்லிகைப் பூவிற்கென ஏற்றுமதி மண்டலம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

347—

பயிற்சி நிலையம்

வினா எண் 5422—திரு. த. அ. மேகநாதன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் விவசாயத்திற்கான பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) காவேரிப்பட்டினம் தோட்டக்கலைப் பண்ணையில் பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

348—

முந்திரி சாகுபடி

வினா எண் 5692—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை மாவட்டத்தில் முந்திரி சாகுபடியை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

சிவகங்கை மாவட்டத்தில் முந்திரி சாகுபடியை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

349—

மூலிகைத் தோட்டம்

வினா எண் 6055—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பொட்டியபுரம் ஊராட்சி, கொண்டையனூர் பகுதியில் மூலிகைத் தோட்டம் அமைக்க அரசு நிலம் ஒதுக்கீடு செய்து கொடுக்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பொட்டியாபுரம் ஊராட்சி, கொண்டையனூர் பகுதியில் மூலிகைப் பண்ணை அமைப்பதற்கான கருத்துரு, அரசின் பரிசீலனையில் இல்லை.

350—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 6514—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

351—

பயிர் மருந்தகம்

வினா எண் 7038—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்டங்களிலும் வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பயிர் மருந்தகம் அமைப்பு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) அனைத்து மாவட்டங்களிலும் வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பயிர் மருந்தகம் அமைப்பு ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

352—

போலி உரங்களை ஒழித்தல்

வினா எண் 7039—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) போலி பூச்சி மருந்துகள் மற்றும் போலி உரங்களை ஒழிக்க நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விவசாயிகள் பயன்படுத்தும் பூச்சி மருந்துகள் மற்றும் உரங்களில் போலியானவை உள்ளனவா என்பதைக் கண்டறிய பூச்சி மருந்துகளிலும், உரங்களிலும், மாதிரிகள் எடுப்பதற்கு வட்ட அளவில் உள்ள தரக் கட்டுப்பாட்டு அலுவலர்களுக்குக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, மாதிரிகள் எடுக்கப்பட்டு உரம், பூச்சி மருந்து ஆய்வகங்களுக்கு அனுப்பி பரிசோதனை செய்யப்படுகிறது.

353—

பேராசிரியர்கள் நியமனம்

வினா எண் **7045—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உழவியல், மண்ணியல், பூச்சியியல், நோயியல், தோட்டக்கலை மற்றும் வேளாண்மை விற்பனையியல் துறைகளுக்குப் பேராசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், உழவியல், மண்ணியல், பூச்சியியல், நோயியல், தோட்டக்கலை மற்றும் வேளாண்மை விற்பனையியல் துறைகளுக்குப் பேராசிரியர் பதவிகள்,

[2011 ஜனவரி 13

நடைமுறையிலுள்ள விதிகளின்படி, இணைப் பேராசிரியர்களின் பணி முன்னேற்றம் (Career Advancement), அந்தந்தத் துறைகளில் அவர்களின் திறமை, மொத்தப் பணிக்காலம் மற்றும் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் பதவி உயர்வு மூலம் நிரப்பப்படுகிறது.

(ஆ) இத்தகைய பதவி உயர்வுகள் ஆண்டுதோறும் முதல் காலாண்டில் (ஜனவரி—மார்ச்) வழங்கப்படுகின்றன.

354—

விவசாயக் கல்லூரி

வினா எண் 7075—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியிலுள்ள பையூர் விவசாய ஆராய்ச்சி மையத்தை விவசாயக் கல்லூரியாக மாற்ற அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியிலுள்ள பையூர் விவசாய ஆராய்ச்சி மையத்தை, விவசாயக் கல்லூரியாக மாற்றும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

355—

வாழை ஆராய்ச்சி மையம்

வினா எண் 9651—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் பகுதியில் வாழை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் பகுதியில் வாழை ஆராய்ச்சி மையம் அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

356—

BPT 5204 பாபட்லா விதை

வினா எண் 9653—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் BPT 5204 என்கிற பாபட்லா விதை நெல் உற்பத்தி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் மூலம் BPT 5204 என்கிற பாபட்லா விதை நெல் உற்பத்தி செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

357—

தரிசு நில மேம்பாடு

வினா எண் 10135—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், பி.எஸ். திம்மசத்திரம் கிராமம், சர்வே எண் 78.86-இல் சுமார் 29 ஏக்கர் நிலத்தில் விவசாயத் தொழிலாளிகள் 24 பேர் விவசாயம் செய்து வந்ததைத் தனியாருக்குக் குறைந்த குத்தகைக்கு விட்டதை அரசு அறியுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், பி.எஸ். திம்மசத்திரம் கிராமம் சர்வே எண் 78 மற்றும் 86-இல் சுமார் 10.60.0 எக்டேர் நிலத்தில் 24 விவசாயத் தொழிலாளிகள் விவசாயம் செய்யவில்லை; மற்றும் குறைந்த குத்தகைக்கு நிலம் விடவில்லை. மேலும் நிலம் கரடு, சிறு கற்களாக உள்ளதால்தான், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

358—

ஒட்டுண்ணி வழங்குதல்

வினா எண் 13752—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலை வட்டம், அமராவதி சர்க்கரை ஆலையின் சாலைப் பகுதியில் ஒருங்கிணைந்த கரும்பு அபிவிருத்தித் திட்டத்தில் ஒட்டுண்ணி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) அமராவதி சர்க்கரை ஆலைப் பகுதியிலும் ஒருங்கிணைந்த கரும்பு அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2011 ஜனவரி 13]

(ஆ) 2006-2007 நடவுப் பருவத்திற்கு 10,000 எக்டேர் பரப்பளவிற்கு தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் மத்திய அரசின் சுபாக்ஸ் (SUBACS) திட்டத்தின் மூலம் ஒட்டுண்ணி வழங்க பிரேரணை ஒன்று மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

359—

பயோ டீசல்

வினா எண் 15154—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பயோ—டீசல் தயாரிக்கும் சாதனத்தை மானிய விலையில் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வரும் 5 ஆண்டுகளில் ஒரு இலட்சம் எக்டேர் பரப்பில் காட்டாமணக்கு சாகுபடி, அரசு மானியத்துடன் மேற்கொள்வதற்குரிய திட்டம் 3-8-2006 அன்று புதிய திட்டமாக அறிவிக்கப்பட்டது. அத்திட்டத்தின் ஒரு இனமாக நாள் ஒன்றுக்கு 1 டன் தயாரிக்கும் பயோ-டீசல் இயந்திரங்கள் 25 சத மானிய விலையில், கருவி ஒன்றுக்கு ரூ.1,889 இலட்சம் மானியமாக, வருடத்திற்கு 6 வீதம் 30 எண்கள், 2008-2009 ஆம் ஆண்டிலிருந்து வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இதில் சுய உதவிக் குழுக்களும் பயன்பெற உள்ளன.

இது மட்டுமின்றி, கூர்கானில் உள்ள தேசிய எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய்ப் பெருக்கு வாரியம் மைய அரசின் திட்டமாக, எண்ணெய்ப் பிழி இயந்திரங்களை வங்கிக் கடன் பெற்று அமைப்பதற்கு, 30 சத மானியம், அதிகபட்சமாக ரூ. 0.45 இலட்சம் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

[2011 ஜனவரி 13

360—

பயோ டீசல்

வினா எண் 15155—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் காட்டாமணக்கு வளர்த்து பயோ—டீசல் தயாரிப்பதை அரசு ஊக்கப்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மகளிர் சுய உதவிக் குழுக்கள் காட்டாமணக்குக் கன்றுகள் உற்பத்தி செய்து விற்பனை மேற்கொள்ள வேளாண்மைத் துறை விரிவாக்கப் பணியாளர்கள் மூலம் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். மேலும், தேசிய வங்கிகள் மூலம் கடனுதவி மற்றும் காட்டாமணக்கு சாகுபடி குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகளும் தேவைப்படும் சமயங்களில் இக்குழுக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஹரியானா மாநிலம் கூர்கானில் உள்ள தேசிய எண்ணெய் வித்துக்கள் மற்றும் தாவர எண்ணெய்ப் பெருக்கு வாரியம், எண்ணெய்ப் பிழி இயந்திரம் அமைக்க, கடன் தொகையாக 30% அதிகபட்சமாக ரூ. 45,000/- மானியம் வழங்குகிறது.

காட்டாமணக்கு பரப்பு விரிவாக்கம் என்பது, தமிழகத்தில் தற்சமயம் ஆரம்ப கட்ட நிலையில் உள்ளது. போதிய பரப்பு விரிவாக்கம் செய்யப்பட்டு விதைகள் மிக அதிக அளவில் கொள்முதல் ஆகும்போது இக்குழுக்கள் மூலம் பயோ—டீசல் தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

361—

கொள்முதல் செய்தல்

வினா எண் 15156—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) சிறு, குறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் காட்டாமணக்கு விதைகளை வேளாண்மைத் துறை மூலம் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) காட்டாமணக்கு விதைகளை வேளாண்மைத் துறை மூலம் கொள்முதல் செய்யும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) தமிழகத்தில் சிறு, குறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் காட்டாமணக்கு விதைகளை அரசின் வேளாண்மைத் துறை மூலம் நியமனம் செய்யப்பட்ட தனியார் நிறுவனங்களான மோகன் புருவரீஸ் மற்றும் டிஸ்டில்லரீஸ் லிமிடெட், சென்னை மற்றும் சிவா டிஸ்டில்லரீஸ் லிமிடெட், கோயம்புத்தூர் மூலம் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேபோன்று இன்னும் பல தனியார் நிறுவனங்கள் ஒப்பந்த அடிப்படையில் காட்டமணக்கு பரப்பு விரிவாக்கம் செய்து, உற்பத்தி ஆகும் விதைகளை உரிய விலையில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து வருகின்றன.

362—

பயோ டீசல்

வினா எண் 15157—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயோ-டீசலின் துணை உற்பத்திப் பொருளான கிளிசராலை மூலிகைப் பொருளாக ஏற்றுமதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பயோ-டீசல் சுத்திகரிப்பின்போது 10 சத அளவிற்கு உப பொருளாக கிளிசரால் பெறப்படுகிறது. இதனை மூலிகைப் பொருளாக ஏற்றுமதி செய்யும் அளவிற்குத் தற்போது உற்பத்தி மேற்கொள்ளப்படவில்லை. மேலும், இதனை மூலிகைப் பொருளாகப் பயன்படுத்துவது தொடர்பாக ஆராய்ச்சிகள் மேற்கொண்டு அதன் முடிவுகளைப் பொறுத்து, இதனை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து உரிய பரிசீலனை மேற்கொள்ளப்படும்.

363—

பயோ டீசல்

வினா எண் 15158—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டாமணக்கு பயிரிடும் விவசாயிகளுக்கு உலக அளவிலான கார்பன் நிதியைப் பெற்றுத் தர மாநில அரசு, மத்திய அரசை வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பயோ-டீசல் குறித்த கொள்கைக் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. தமிழகத்திற்கான பயோ-டீசல் கொள்கை உருவாக்கப்பட்டவுடன் காட்டாமணக்கு பயிரிடும் விவசாயிகளுக்கு உலக அளவிலான கார்பன் நிதியைப் பெற்றுத் தர, மாநில அரசு மத்திய அரசினை அணுகும்.

2011 ஜனவரி 13]

364—

நேரடி கொள்முதல்

வினா எண் 15162—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டாமணக்கு விதைகளைத் தென்னக ரயில்வே துறை, முகவர் மூலம் நேரடியாகக் கொள்முதல் செய்ய மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் தற்சமயம் காட்டாமணக்கு சாகுபடி செய்யும் விவசாயிகளிடம் தனியார் நிறுவனங்கள் ஒப்பந்த அடிப்படையில் விதை கொள்முதல் செய்து வருகின்றன. மேலும், உற்பத்தியாகும் காட்டாமணக்கு விதைகள் வணிக ரீதியாக விற்பனையாகும் அளவிற்குத் தற்போது பெறப்படவில்லை. எனவே, கூடுதலாக விற்பனைக்குக் காட்டாமணக்கு விதைகள் பெறப்படும் நிலையில் தென்னக இரயில்வே முகவர் மூலம் நேரடியாகக் கொள்முதல் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

365—

புதிய ரக விதைகள்

வினா எண் 15163—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி வெளியிடும் புதிய ரக விதைகள் போதிய அளவிற்கு விவசாயிகளுக்குக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்படும் புதிய இரகங்களுக்குத் தரமான வல்லுநர் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வேளாண்மைத் துறைக்கும், தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கும் தேவைக்கேற்ப வழங்கப்படுகின்றன. வேளாண்மைத் துறையும், விதை உற்பத்தியாளர்களும் வல்லுநர் விதையிலிருந்து ஆதார நிலை விதைகள் மற்றும் சான்று நிலை விதைகளை உற்பத்தி செய்து, விதைச் சான்று துறை சான்றளித்த பின்பு, வேளாண்மைத் துறையின் வேளாண் விரிவாக்க மையங்கள்மூலம் விவசாயிகளுக்குப் பயிரிட வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மத்திய அரசின் நிதி உதவியுடன் வேளாண் அறிவியல் நிலையங்கள் மூலமாக விதை கிராமத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்குத் தரமான புதிய இரக விதைகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுவதுடன் விவசாயிகள் தேவைக்கேற்ப விதை உற்பத்தி செய்துகொள்ள போதிய பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

366—

B.T. கத்திக்காய்

வினா எண் 16800—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) பன்னாட்டுக் கம்பெனி அறிமுகப்படுத்தியுள்ள பிடி. கத்திரிக்காய் மரபணு மாற்று விதைக்குத் தடை விதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்படும் மரபணு மாற்றுப் பயிர்கள் அனைத்தும் மத்திய அரசு சுற்றுச்சூழல் வனத் துறை அமைச்சகத்தின்கீழ் செயல்படும் "ஜெனிடிக் இன்ஜினியரிங் அப்ரூவல் கமிட்டி"யின் அங்கீகாரம் பெற்ற பின்பே அறிமுகப்படுத்தப்படுகின்றது. மேற்படி குழுவால் அங்கீகரிக்கப்படும் பயிர்/இரகங்கள் அனைத்திற்கும் உரிய பரிசோதனைகள் மேற்கொண்டு, உயிர்ப் பாதுகாப்பு சோதனை உட்பட (Bio-Safety Measures) விவசாயிகளின் நிலங்களில் பரிசோதனைத் திடல்கள் அமைக்கப்பட்டு, இதில் தேர்ச்சி பெறும் இரகங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றன. எனவே, தற்சமயம் பன்னாட்டுக் கம்பெனி தமிழகத்தில் அறிமுகப்படுத்தவிருக்கும் பிடி. கத்தரி மரபணு மாற்று விதைகளைத் தடை செய்ய தமிழக அரசுக்கு அதிகாரம் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

367—

மலட்டு நெல் விதை உற்பத்தியைத் தடுத்தல்

வினா எண் 16812—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், ஆலாந்துறை அருகில் உள்ள இராமநாதபுரத்தில் மரபணு மாற்றம் செய்து மலட்டு நெல் விதை உற்பத்தி செய்வதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மரபணு மாற்றப்பட்ட நெல் இரகங்களின் விதை உற்பத்தி, கோயம்புத்தூர் மாவட்டம், ஆலாந்துறை அருகில் உள்ள இராமநாதபுரத்தில் மேற்கொள்ளப்படவில்லை.

368—

தரம் உயர்த்துதல்

வினா எண் 17791—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் உள்ள விவசாயப் பண்ணையைத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் அரசு விதைப் பண்ணையைத் தரம் உயர்த்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் பகுதி-2 திட்டத்தின்கீழ் நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்த, இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு, வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல், அனைத்து வேளாண் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, விவசாயிகளுக்கு வழங்க, தரமான விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இப்பண்ணை இலாபத்தில் இயங்கி வருகிறது.

369—

புளி கொள்முதல் நிலையம்

வினா எண் 17920—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

தருமபுரி தொகுதியில் அதிகமாக விளையும் புளிக்குக் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதியில் புளி கொள்முதல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

370—

மானிய விலையில் உரம்

வினா எண் 18520—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

371—

செவ்வழுகல் நோய்

வினா எண் 18521—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு பயிரைத் தாக்கும் செம்மை நோயைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம். அரசு நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) எப்போழுதெல்லாம் செவ்வழுகல் நோய் தாக்குதல் காணப்படுமோ, அப்போது சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலையினரால் அதற்குண்டான தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

372—

உழவர் சந்தை

வினா எண் 18534—திரு. வை காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகுடஞ்சாவடியில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

373—

எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை

வினா எண் 18824—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதியில் சூரியகாந்தி எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை நிறுவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) முகையூர் தொகுதியில் சூரியகாந்தி எண்ணெய் சுத்திகரிப்பு செய்யும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

374—

குளிரூட்டும் கிடங்கு

வினா எண் 18839—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை வட்டத்தில், அரசு விவசாய விற்பனைக் கூடத்தில் பழவகைகளைப் பாதுகாக்க குளிரூட்டும் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை வட்டத்தில், அரசு விவசாய விற்பனைக் கூடத்தில் பழவகைகளைப் பாதுகாக்க குளிரூட்டும் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

375—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 20413—திரு. கோவை தங்கம் : *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் விவசாயிகள் காட்டாமணக்கு பயிரிடுவதற்கு ஆராய்ச்சி மையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில், காட்டாமணக்கு பயிரிடுவதற்கு ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

376—

சொட்டு நீர்ப் பாசன முறை

வினா எண் 20415—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் சொட்டுநீர்ப் பாசன முறையை ஊக்கப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் சொட்டு நீர்ப் பாசன முறையை ஊக்கப்படுத்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. மண்வளம் குன்றிய பகுதிகளில் மண்வளத்தை அதிகரிப்பதற்கு, துல்லிய பண்ணைய முறையில் உரச் சத்தை வீணாக்காமல் ஊட்டச் சத்தாக மாற்றுவதற்கு சொட்டுநீர்ப் பாசனம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோல், மைய அரசுத் திட்டமான சொட்டுநீர்ப் பாசனம் மூலம் உரமிடும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை நீங்கலாக) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

377—

நவீனப்படுத்துதல்

வினா எண் 20424—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அனைத்து உழவர் சந்தைகளையும் நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உழவர் சந்தைகளை நவீனப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

378—

விற்பனை வளாகம்

வினா எண் 20427—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் விளையும் நெல், மஞ்சள், பருத்தி, தேங்காய் போன்ற வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்ய ஒரு விற்பனை வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் விற்பனை வளாகம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

379—

விரிவு படுத்துதல்

வினா எண் 20439—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரிலுள்ள தென்னை வளர்ப்புப் பண்ணையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரிலுள்ள தென்னை வளர்ப்புப் பண்ணையை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

380—

இலவச மண் பரிசோதனை நிலையம்

வினா எண் 20443—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் இலவச மண் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் இலவச மண் பரிசோதனை நிலையம் அமைப்பது சம்பந்தமாக அரசிடம் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

2011 ஜனவரி 13]

381—

கரும்பு ஆராய்ச்சி மையம்

வினா எண் 20445—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கரும்பு ஆராய்ச்சி மையம் ஏறபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் கரும்பு ஆராய்ச்சி மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

382—

விலை நிர்ணயம்

வினா எண் 20446—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகள் உற்பத்தி செய்யும் மிளகாய், வெங்காயம், நிலக்கடலை ஆகியவற்றின் விலையை அரசே நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்கு உரிய நியாயவிலை நிர்ணயம் செய்வதற்கு மாநில அளவில் ஒரு விவசாய மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) எழாது.

383—

வெற்றிலை குளிரூட்டும் நிலையம்

வினா எண் 20905—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்புவனத்தில் வெற்றிலை குளிரூட்டும் நிலையம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) திருப்புவனத்தில் வெற்றிலை குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

384—

விவசாயக் கல்லூரி

வினா எண் 20908—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

(அ மானாமதுரையில் விவசாயக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரையில் விவசாயக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

385—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 20914—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ மானாமதுரையில் ஒரு தானிய சேமிப்புக் கிடங்கு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஏற்கெனவே கிட்டங்கி, ஊரகக் கிட்டங்கி ஆகியவை உள்ளதால் தனியாக தானிய சேமிப்புக் கிடங்கு கட்ட அவசியம் ஏற்படவில்லை.

386—

விதைப் பண்ணை

வினா எண் 20915—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

(அ மானாமதுரையில் ஒரு விதைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ). ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்திலுள்ள மானாமதுரையில் தேவைப்படும் ஆதார விதைகள் விருதுநகர் மாவட்டத்தில் இயங்கிவரும் தேவதானம் அரசு விதைப் பண்ணையிலிருந்து உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையிலுள்ள மானாமதுரையில் தனியாக அரசு விதைப் பண்ணை அமைக்க உத்தேசம் ஏதும் இல்லை.

387—

பழப் பண்ணை

வினா எண் 20954—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரில் பழப் பண்ணை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆழியாறு நகரில் பழப் பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

388—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 22020—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: வேளாண்மைத் துறை அமைச்சர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மேலும், மாண்புமிகு நாகர்கோயில் சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. ராஜன், அவர்களின் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயிலில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்ற வினாவுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைப்பது குறித்து சாத்தியமில்லை என 13-4-2007 அன்று சட்டப் பேரவையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

389—

இழப்பீடு வழங்குதல்

வினா எண் 22024—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்ட வெற்றிலை பயிர் செய்யும் விவசாயிகள் விஷ வண்டுகள் தாக்கி பாதிக்கப்படுவதால் அவ்விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டத்தில் வெற்றிலைக்கு ஊன்று கோலாக கல்யாண முருங்கையைப் பயன்படுத்துவதால் கல்யாண முருங்கையில் உள்ள ஒரு வகை வண்டு விவசாயிகளைத் தாக்குவதால், தாக்கப்பட்ட சிறிது நேரத்தில் உடலில் ஒருவித அரிப்பு ஏற்படுவதாகவும், அதன்பிறகு உடலுக்கு எந்தத் தீங்கும் நேர்வதில்லை எனவும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆராய்ச்சியில் தெரிய வருகிறது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

[2011 ஜனவரி 13

390—

நுண்ணுயிர் உரங்கள்

வினா எண் 22097—திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தென்னைக்கு ஐம்பது சதவீதம் மானிய விலையில் நுண்ணுயிர் உரங்களை விவசாயிகளுக்கு வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தென்னைக்கு 50 சதவீத மானிய விலையில் நுண்ணுயிர் உரங்கள் விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

391—

விளம்பரப்படுத்துதல்

வினா எண் 22448—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளாண்மை பற்றிய புதிய தொழில் நுட்பங்களைத் திரைபடமாகத் தயாரித்து கிராமங்கள்தோறும் விளம்பரப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திரைப்படங்கள் தயாரிக்கும் கருத்துரு ஏதும் தற்பொழுது இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

392—

குளிரூட்டும் கிடங்கு

வினா எண் 22453—திரு. எம் அன்பழகன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதியில், மா, கொய்யா போன்ற பழ வகைகள் அதிகம் விளைவதால் அங்கு குளிரூட்டும் கிடங்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதியில், மா, கொய்யா போன்ற பழ வகைகளுக்குக் குளிரூட்டும் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

393—

அலுவலகக் கட்டடம்

வினா எண் 22456—திரு. எம் அன்பழகன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி, தோட்டக்கலைத் துறைக்கு அலுவலகமும் இடமும் தேர்வு செய்து அதன்மூலம் நாற்றுகள், செடிகள் விற்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

பழனியில் நாற்றுகள், செடிகள் விற்பதற்குத் தோட்டக்கலைத் துறைக்குத் தனியாக அலுவலகம் கட்டுவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

394—

மண் பரிசோதனைக்கூடம்

வினா எண் 23064—திரு. த. தியோடர் ரெஜினால்டு: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பத்மநாபபுரம் தொகுதி, கோழிப்போர்விளையில் மண் பரிசோதனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

பத்மநாபபுரம் தொகுதியில், கோழிப்போர்விளை பகுதிக்கு நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மண் பரிசோதனை நிலையம் மற்றும் ஒரு நடமாடும் மண் பரிசோதனை நிலையம் தற்சமயம் இயங்கி வருகிறது. எனவே, பத்மநாபபுரம் தொகுதியில், கோழிப்போர்விளைவில் ஒரு மண் பரிசோதனை நிலையம் அமைக்க தற்போது அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

395—

நறுமண எண்ணெய் புல் வகைகள்

வினா எண் 23066—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, தரிசு நிலங்களில் பால்மரோசா போன்ற நறுமண எண்ணெய் தயாரிக்கும் புல் வகைகளைப் பயிரிட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்.

செங்கல்பட்டு தொகுதி, தரிசு நிலங்களில் பால்மரோசா போன்ற நறுமண எண்ணெய் தயாரிக்கும் புல்வகைகளைப் பயிரிடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

396—

முந்திரி ஏற்றுமதி வளாகம்

வினா எண் 23480—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் முந்திரி ஏற்றுமதி வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் முந்திரி ஏற்றுமதி வளாகம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

397—

துணை வேளாண்மை விரிவாக்க மையம்

வினா எண் 24029—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம், காருவள்ளி ஊராட்சி, சின்ன திருப்பதியில் புதிதாகத் துணை வேளாண்மை விரிவாக்க மையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

சின்ன திருப்பதியில் புதிய வேளாண்மை விரிவாக்க மையம் தொடங்க தற்போது வாய்ப்புகள் இல்லை.

[2011 ஜனவரி 13

398—

தற்காலிக குளிர்பதனக் கிடங்கு

வினா எண் 24601—திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதியில் தக்காளி குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதியில் தக்காளி குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டமேதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

399—

உழவர் சந்தை

வினா எண் 26092—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் பேருந்து நிலையத்தில் உள்ள தினசரி காய்கறி சந்தையினை உழவர் சந்தையாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, ஓமலூர் பேருந்து நிலையத்தில் உள்ள தினசரி காய்கறி சந்தையினை உழவர் சந்தையாக மாற்றிடும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

400—

மண்வளப் பரிசோதனை நிலையம்

வினா எண் 26537—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில், மண்வளப் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதியில், மண்வளப் பரிசோதனை நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

401—

மண்புழு உரம்

வினா எண் 26538—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் மண்புழு உரம் தயாரிக்க அரசு மானியத்தில் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தற்சமயம், இந்திய அளவில் மண்புழு வளர்க்க, தேசிய வேளாண் மற்றும் ஊரக அபிவிருத்தி வங்கி (நபார்டு) மூலமாக மானியத்துடன்கூடிய கடன் வழங்கும் திட்டம் நடுவண் அரசின் வேளாண்மைத் துறைமூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

[2011 ஜனவரி 13

இத்திட்டத்தில் முதலீட்டாளர் பங்கு 25%, இந்திய அரசு வேளாண்மைத் துறை மானியம் 25% மற்றும் வங்கிக் கடன் 50% ஆகும். மேற்கண்ட 25% மானியத்துடன்கூடிய கடன் வழங்கும் திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் பயன் பெறலாம் தேசிய தோட்டக்கலை இயக்ககம் மூலம் (National Horticultural Mission) மண்புழு உரம் தயாரிக்கும் பிரிவு அமைக்க, 50 சத மானியத்தில் ஒரு யூனிட்டுக்கு ரூ30,000/-க்கு மிகாமல் மானியம் வழங்கப்படுகின்றது.

402—

மண்புழு உரம் வழங்குதல்

வினா எண் 26539—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலமாக விவசாயிகளுக்கு மண்புழு உரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு சுய உதவிக் குழுக்களுக்கு மண்புழு உரம் தயாரிக்கும் தொழில்நுட்பத்தைப் பயிற்சி மூலமாக அளித்து வருகிறது. சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் மண்புழு உரத்தின் தரத்தைப் பரிசோதித்து வேளாண்மைப் பல்கலைக்கழகம் சான்றிதழ் வழங்குகிறது. விவசாயப் பெருமக்கள் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் தரச் சான்றிதழ் பெற்ற மண்புழு உரத்தை, சுய உதவிக் குழுக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். மேலும், வேளாண்மைப் பல்கலைக்கழகம் தற்சமயம் ஆண்டு ஒன்றுக்கு 100 டன் மண்புழு உரம் தயாரித்து விவசாயப் பெருமக்களுக்கு விற்பனை செய்து வருகிறது. அடுத்த வருடம் மண்புழு உரம் தயாரிக்கும் அளவு 500 டன் ஆக அதிகரிக்கப்பட உள்ளது.

2011 ஜனவரி 13]

403—

காட்டாமணக்குக் கன்றுகள்

வினா 26549—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் காட்டாமணக்குக் கன்றுகளை இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதியில் காட்டாமணக்குக் கன்றுகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

404—

பழம் ஏற்றுமதி

வினா எண். 27791—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரியில் அமைய உள்ள மாம்பழக் கூழ் ஏற்றுமதி மையத்தில் கொய்யா, தக்காளி, சப்போட்டா ஆகியவற்றையும் கூழாக்கி ஏற்றுமதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தேனியில் மாம்பழ ஏற்றுமதி மண்டலம் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவரும் நிலையில், கிருஷ்ணகிரியில் தனியாக மாம்பழக் கூழ் ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

405—

பராமரித்தல்

வினா 28053—திரு. எஸ். இராசசேகரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குடி தொகுதி, மருதக்கோன் விடுதிப் பழத் தோட்டத்தைப் பராமரிக்கவும், ஆழ்குழாய்க் கிணறு, முள்வேலி அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆலங்குடி தொகுதி, மருதக்கோன் விடுதிப் பழத்தோட்டம், மருதக்கோன் ஊராட்சியால் பராமரிக்கப்படுகிறது. இப்பண்ணைக்கு முள்வேலி அமைப்பது குறித்தும் மருதக்கோன் ஊராட்சியே தீர்வு செய்ய வேண்டும்.

(ஆ) எழாது.

406—

விரிவுபடுத்துதல்

வினா எண் 28928—திரு. எஸ். இராசசேகரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குடி தொகுதி, வம்பன் பயறு வகை ஆராய்ச்சி மையத்தை விரிவுபடுத்தி வேளாண் பட்டயப் படிப்பைப் புதிதாகத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆலங்குடி தொகுதி, வம்பன் பயிறு வகை ஆராய்ச்சி மையத்தை விரிவுபடுத்தி வேளாண் பட்டயப் படிப்பைப் புதிதாகத் துவக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

407—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 29268—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

408—

உழவர் சந்தை

வினா எண் 29286—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் உழவர் சந்தை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

409—

கசிவுநீர்க் குட்டை

வினா எண் 30137—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டைத் தொகுதி, இராவணபுரம், வெட்டுப்பள்ளத்தின் அருக்கே, கசிவுநீர்க் குட்டை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, இராவணபுரம், வெட்டுப்பள்ளத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் கசிவுநீர்க் குட்டை கட்டும் கருத்துரு, அரசின் பரசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

410—

தோட்டக்கலை ஆராய்ச்சி மையம்

வினா எண் 30438—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் அரசுத் தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரையில் அரசுத் தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

411—

விரிவுபடுத்துதல்

வினா எண் 31714—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை உழவர் சந்தையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை உழவர் சந்தையை விரிவுபடுத்தும் பணி, ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ளது.

[2011 ஜனவரி 13

412—

இயற்கை உரங்கள்

வினா எண் 32802—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் விவசாயிகளுக்கு மானிய விலையில் இயற்கை உரங்களை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தற்சமயம் அனைத்து விவசாயிகளும் இயற்கை உரங்களைப் பயன்படுத்த, பசுந்தாளுர விதைகள் விநியோகம், உயிர் உரங்கள் உற்பத்தி மற்றும் விநியோகம், நீல பச்சைப் பாசி உற்பத்தி மற்றும் விநியோகம், புளூரோட்டஸ் பூஞ்சாளம் கொண்டு பண்ணைக் கழிவுகளை மக்கி உரமாக்குதல் போன்ற இயற்கை உரங்கள் வழங்கும் திட்டங்கள் அரசு மானியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

413—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 32866—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதி, பையூர் ஊராட்சி, பையூரில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

காவேரிப்பட்டினம் தொகுதி, பையூர் ஊராட்சி, பையூரில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

414—

நெல் இருப்பு அறை

வினா எண் 32891—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நெல் இருப்பு அறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

முகையூர் தொகுதி, அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஏற்கெனவே 5 பரிவர்த்தனைக் கூடங்கள் மற்றும் ஊரகக் கிட்டங்கி வசதி உள்ளது. அத்துடன் ரூ. 21 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு ஏலக் கொட்டகை கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

415—

விவசாயப் பயிற்சி மையம்

வினா எண் 33169—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் விவசாயப் பயிற்சி மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் விவசாயப் பயிற்சி மையம் மற்றும் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2011 ஜனவரி 13

416—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 33205—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஸ்பேட்டையில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஸ்பேட்டையில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

417—

உழவர் சந்தை

வினா எண் 33416—திரு. வை. காவேரி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதி, எடக்கரைசாலை, மகுடஞ்சாவடியில் உழவர் சந்தை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, எடக்கரைசாலை, மகுடஞ்சாவடியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

2011 ஜனவரி 13]

418—

விற்பனைக் கூடம்

வினா எண் 33708—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கல்சப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கத்தில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம், போளூரிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. தற்போது போளூரில் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் செயல்பட்டு வருகிறது. போளூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கான வரத்து அவ்விற்பனைக் கூடத்திற்கான அளவைவிட அதிகரிக்கும்போது கலசப்பாக்கத்திலும் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

419—

பகுதிகளைச் சேர்த்தல்

வினா எண் 33834—திரு. ஆர்.எம். பழனிசாமி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மொடக்குறிச்சி தொகுதி, எழுமாத்தூர் சர்க்கரை ஆலையில் சிவகிரி, அரச்சலூர் கிளாம்பாடி பகுதிகளைச் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகிரி மற்றும் கிளாம்பாடி பகுதிகள் தற்போது ஈஐடி பாரி (இந்தியா) சர்க்கரை ஆலை, புகளூர் ஆலையின் விவசாய எல்லையாக உள்ளது. மேலும் அரச்சலூர் பிர்க்காவினை பிற ஆலைக்கு ஒதுக்கீடு செய்யக் கூடாது என சென்னை உயர் நீதிமன்றத்தில் ஈஐடி பாரி (இ) சர்க்கரை ஆலை நிருவாகத்தினரால் தடையுத்தரவு பெறப்பட்டுள்ள நிலையில் மேற்படி பகுதிகளை மொடக்குறிச்சி தொகுதி, எழுமாத்தூர் சர்க்கரை ஆலையுடன் சேர்க்க நடவடிக்கை ஏதுமில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

420—

உழவர் சந்தை

வினா எண் 34066—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், தீவட்டிபட்டியிலும், முத்துநாயக்கன்பட்டியிலும் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம் தீவட்டிபட்டியிலும், முத்துநாயக்கன்பட்டியிலும் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

421—

உழவர் சந்தை

வினா எண் 34310—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

(அ) தாரமங்கலம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) தாரமங்கலம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

422—

காய்கறி குளிர்பதனக் கிடங்கு

வினா எண் 34373—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் காய்கறி குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டாரத்தில் உற்பத்தியாகும் காய்கறிகளில் அப்பகுதியின் தேவை போக மீதமாகும் காய்கறிகளின் அடிப்படையில் அப்பகுதியில் காய்கறிக்கெனக் குளிர்பதனக் கிடங்கு அமைக்க ஆவன செய்யப்படும்.

423—

உழவர் சந்தை

வினா எண் 34633—திரு. ஏ. ராஜன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, தெங்கம்புதூர், புத்தளம், ஈத்தாமொழி ஆகிய பகுதிகளில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

நாகர்கோவில் தொகுதி, தெங்கம்புதூர், புத்தளம், ஈத்தாமொழி ஆகிய பகுதிகளில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

424—

விவசாயக் கருவிகள்

வினா எண் 34751—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் விவசாயக் கருவிகள் உற்பத்தி தொழிற்சாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் விவசாயக் கருவிகள் உற்பத்தி தொழிற்சாலை துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

425—

புளி பதனிடும் நிலையம்

வினா எண் 35224—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் புளி பதனிடும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் புளி பதனிடும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

426—

வாழைக்காய் ஏற்றுமதி நிலையம்

வினா எண் 35225—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை நகரில் வாழைக்காய் ஏற்றுமதி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை நகரில் வாழைக்காய் ஏற்றுமதி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

427—

தானியக் களம்

வினா எண் 35259—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், நாயக்கன அள்ளி ஊராட்சி, பெரிய மல்லிப்பட்டி, சோலைக் கொட்டாய், கே. நடு அள்ளி ஊராட்சி, கொளத்தூரான் கொட்டாய், உங்கரான அள்ளி ஊராட்சி, எட்டி மரத்துப்பட்டி ஆகிய இடங்களில் தானியக் களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், நாயக்கன அள்ளி ஊராட்சி, பெரிய மல்லிப்பட்டி, சோலைக் கொட்டாய் கே. நடு அள்ளி ஊராட்சி, கொளத்தூரான் கொட்டாய், உங்கரான அள்ளி ஊராட்சி, எட்டி மரத்துப்பட்டி ஆகிய இடங்களில் தானியக் களம் அமைக்க சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவர்களிடம் தொடர்பு கொண்டு தகுதியான நிலம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

428—

சிமெண்ட் தளம்

வினா எண் **35381—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், கருவாழக்கரை ஊராட்சியில் இரண்டு சிமெண்ட் களமும், எருவாஞ்சேரி ஊராட்சியில் சிமெண்ட் களமும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எருவாஞ்சேரி கிராமத்தில் சிமெண்ட் களம் 20 X 20 மீட்டர் அளவில் ரூ.2.25 இலட்சம் மதிப்பீட்டில் 2008-2009 ஆம் ஆண்டில் கட்டப்பட உள்ளது. பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், கருவாழக்கரை ஊராட்சியில் இரண்டு சிமெண்ட் களங்கள் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

429—

உழவர் சந்தை

வினா எண் 35509—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு நகர், அங்கலகுறிச்சியில் உழவர் சந்தை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ஆழியாறு நகர், அங்கலகுறிச்சியில் உழவர் சந்தை துவக்கும் திட்டம் ஏதும் இல்லை.

430—

சிறப்புப் பொருளாதார மண்டலம்

வினா எண் 35511—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டத்தில் வேளாண்மை சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தர்மபுரி மாவட்டத்தில் வேளாண்மை சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

11-434—40

[2011 ஜனவரி 13

431—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 35885—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) தாரமங்கலம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

432—

வேளாண்மை பல்கலைக்கழகம்

வினா எண் 35807—திரு. ந. கணபதி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வானூர் தொகுதியில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

வானூர் தொகுதியில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

433—

தரமான வாழைக்கன்றுகள்

வினா எண் 35908—திரு. த. தியோடர் ரெஜினால்டு: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதியில் விவசாயிகளுக்குத் தரமான வாழைக் கன்றுகளை இலவசமாக வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் தோட்டக்கலைத் துறையின்மூலம் விவசாயிகளுக்கு வாழைக் கன்றுகள் இலவசமாக வழங்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை.

434—

விதைப் பண்ணை மையம்

வினா எண் 37847—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரையில் விதைப் பண்ணை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டத்தில் இயங்கி வரும் 'தேவதானம்' அரசு விதைப் பண்ணையில், விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்குத் தேவையான ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, அந்தந்த மாவட்டங்களிலுள்ள

[2011 ஜனவரி 13

வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தனியாக, மானாமதுரையில் விதைப் பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

435—

தென்னை ஆராய்ச்சி மையம்

வினா எண் 38546—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அல்லது திருப்புவனத்தில் தென்னை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அல்லது திருப்புவனத்தில் தென்னை ஆராய்ச்சி மையம் அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

436—

வீரியத்துடன் கூடிய பருத்தி விதைகள்

வினா எண் 38548—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் துறையில் புதிய வீரியத்துடன் கூடிய பருத்தி விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய விலையில் விற்பனை செய்ய அரசு முன்வருமா?

ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வீரியத்துடன் கூடிய பருத்தி விதைகளை உற்பத்தி செய்ய தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அவை அரசு ஒப்புதல் பெற்று வெளியிடப்பட்ட பின், விவசாயிகளுக்கு மானியம் வழங்குவது குறித்து முடிவு செய்யப்படும். மேலும் தற்போது பிடி. பருத்தி ரகங்கள் 50 சதவிகித மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்க மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

437—

சர்க்கரைச் சோளம்

வினா எண் **39989—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் சர்க்கரைச் சோளம் பயிரிட விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடப்பாண்டில் சர்க்கரைச் சோளம் பயிர் செய்யும் திட்டம் எதுவும் வேளாண்மைத் துறையால் செயல்படுத்தப்படவில்லை. எனவே சிவகங்கை மாவட்டத்தில் சர்க்கரைச் சோளம் பயிரிட விவசாயிகளுக்கு மானியம் வழங்குவது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

438—

மூலிகைப் பண்ணை

வினா எண் 40219—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் மூலிகைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் மூலிகைப் பண்ணை அமைப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

439—

முக்கியத்துவம்

வினா எண் 40775—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாரம்பரிய மரபு வழி வேளாண்மை விதைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஆம்.

2011 ஜனவரி 13]

440—

பயிர்த் தொழில்

வினா எண் 40778—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடல்நீரைப் பயன்படுத்திக் கடலோரப் பகுதியில் பயிர்த் தொழில் செய்வதற்கு, கொள்கை வகுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கடல் நீரைப் பயன்படுத்திக் கடலோரப் பகுதியில் பயிர்த் தொழில் செய்வதற்கு, கொள்கை வகுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை. ஏனெனில், கடல் நீரிலுள்ள உப்பின் அளவு லிட்டருக்கு 19.2 கிராம் முதல் 32 கிராம் வரை உள்ளது. பயிர்த் தொழில் செய்ய உகந்த நீரின் உப்பின் அளவு அதிகபட்சமாக 1.92 கிராம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. உப்பின் அளவு லிட்டருக்கு 1.92 கிராமுக்கு அதிகமாகும்போது, அது பயிர் வளர்ச்சியைப் பாதிப்பதோடு நிலத்தின் மண் வளத்தையும் குறைத்து நாளடைவில் அவை உவர் நிலங்களாக மாறிவிடுகின்றன. எனவே, கடல் நீர் விவசாயத்திற்கு ஏற்றது அல்ல.

441—

உழவர் சந்தை

வினா எண் 40868—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், வாழப்பாடியை அடுத்த கொட்டவாடியில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், வாழப்பாடியை அடுத்த கொட்டவாடி கிராமத்தில் உழவர் சந்தை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லாததால், இத்திட்டம் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

442—

நடமாடும் மண்மாதிரி ஆய்வகம்

வினா எண் 40870—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்தில் நடமாடும் மண்மாதிரி ஆய்வகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு மண் பரிசோதனை நிலையம் ஒன்று தற்சமயம் செயல்பட்டு வருகின்றது. மேலும், மண் பரிசோதனை நிலையத்துடன் இணைந்து செயல்படும் விதமாக ஆய்வக வசதியுடன்கூடிய ஒரு நடமாடும் மண் பரிசோதனை ஆய்வக ஊர்தி வாங்குவதற்கு மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டு, ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

443—

நிலப் பண்பாட்டுக் கொள்கை

வினா எண் 40871—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்துக்கான நிலப் பண்பாட்டுக் கொள்கையை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் உள்ள நிலங்களில் பெரும்பாலும் ஐந்து மண் வகைகளான செம்மண், கரிசல் மண், வண்டல் மண், செம்புறை மண் மற்றும் மணற்பாங்கு மண் காணப்படுகின்றது. பெரும்பாலான மாவட்டங்களில் செம்மண் மற்றும் கரிசல் மண் வகையும், ஆற்றுப் படுகை மற்றும் டெல்டா பகுதிகளில் வண்டல் மண் வகையும் கடற்கரைப் பகுதியில் மணற்பாங்கு மண் வகையும் நீலகிரி மற்றும் கொடைக்கானல் மாவட்டங்களில் செம்புறை மண் வகையும் காணப்படுகின்றது. விவசாயத்திற்குக் கிடைக்கும் மழை நீரையும், நிலத்தடி நீரையும் சிறந்த முறையில் பராமரிப்பு செய்து சிக்கன முறையில் பயன்படுத்தி விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நிலங்கள் வெவ்வேறு சாகுபடிக்கு ஏற்ற முறையில் பயன்படுத்தப்பட்டு அதற்கேற்றபடி பயிர்கள் சாகுபடி செய்ய, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட ஆராய்ச்சி மையங்கள் மூலமாக தொழில்நுட்ப உத்திகள் வகுக்கப்பட்டு, விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்படுகின்றது. எனவே நிலப் பண்பாடு சம்பந்தமாகத் தனிக் கொள்கை ஏதும் தேவையில்லை.

444—

மூலிகைப் பண்ணை

வினா எண் 41998—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதி, ஆனையடியிலுள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் மூலிகைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

திருவட்டாறு தொகுதி, ஆனையடியிலுள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் மூலிகைப் பண்ணை அமைப்பதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

445—

விவசாயக் கல்லூரி

வினா எண் 43004—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஸ்பேட்டையில் விவசாயக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஸ்பேட்டையில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

446—

பூச்சி மருந்துகள்

வினா எண் 43010—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் உள்ள வேளாண்மைக் கிடங்குகளில் விதை நெல், உரம், பூச்சி மருந்துகளைச் சரியாக விநியோகிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை–

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு முழுவதும் உள்ள வேளாண்மைக் கிடங்குகளில் விதை நெல், உரம், பூச்சி மருந்துகள் சரியாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2011 ஜனவரி 13]

447—

பாடத் திட்டம்

வினா எண் 48028—திரு. எஸ்.வி.சேகர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளநிலை வேளாண்மைப் பாடத் திட்டத்தில் தமிழ் மொழிப் பாடம் நீக்கப்பட்டுள்ளதால், மீண்டும் அதே பாடத் திட்டத்தில் தமிழ் மொழியினை ஒரு பாடமாக சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இளநிலை வேளாண் பாடத் திட்டத்தில் தமிழ்மொழி ஒரு பாடமாக எப்போதும் இருந்து வருகின்றது. 2007—2008-இல் தயாரிக்கப்பட்ட பாடத்திலும் தமிழ் மொழி ஒரு பாடமாக இடம் பெற்றுள்ளது.

448—

வேளாண்மைப் பயிற்சிப் பள்ளி

வினா எண் 48068—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முகையூர் தொகுதி, முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளி அமைக்க தற்போது அரசிடம் கருத்துரு ஏதும் இல்லை.

[2011 ஜனவரி 13

449—

விற்பனை முனையங்கள்

வினா எண் 48243—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதியில் மலர்கள், தேங்காய் மற்றும் கருப்புகல் ஆகியவற்றை விற்பனை செய்திட, விற்பனை முனையங்களைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதியில் மலர்கள், தேங்காய் மற்றும் கருப்புகல் ஆகியவற்றை விற்பனை செய்திட விற்பனை முனையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

450—

உழவர் சந்தை

வினா எண் 49168—திரு. பெ.கண்ணன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம், மேச்சேரி, பேரூராட்சிகளில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம், மேச்சேரி, பேரூராட்சிகளில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 *ஜனவரி* 13]

451—

புகையிலை பயிரிடுவதைத் தடுத்தல்

வினா எண் 49852—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் புகையிலை பயிரிடுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் புகையிலை ஒரு சில மாவட்டங்களில் மட்டும் குறைந்த அளவே பயிரிடப்படுகின்றது.

ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தில் தற்பொழுது ஒரு சதவீதத்திற்கும் குறைவான பரப்பிலேயே (சுமார் 5000 எக்டேர்) பயிரிடப்படுகிறது. மேலும் புகையிலை தடை செய்யப்பட்ட ஒரு பயிர் அல்ல.

எனவே, புகையிலை பயிரிடுவதைத் தடுக்க எந்த நடவடிக்கையும் இத்துறை மூலம் மேற்கொள்ளப்படவில்லை.

452—

உழவர் சந்தை

வினா எண் 51219—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சீர்காழியில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, சீர்காழியில் புதிய உழவர் சந்தை 15-2-2009 அன்று திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

[2011 ஜனவரி 13

453—

பதப்படுத்தும் நிலையம்

வினா எண் 52709—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, தென்சித்தூர், பெத்த நாயக்கனூர், ரமணமுதலிபுதூர், தென்சங்கம்பாளையம், சோமந்துறை, காளியாபுரம், அர்த்தநாரிபாளையம், கம்பலாப்பட்டி, ஜல்லிபட்டி, கரியஞ்செட்டிபாளையம், பிலிசின்னம்பாளையம், வேட்டைக்காரன்புதூர் ஆகிய ஊராட்சிகளில் காய்கறிகளைப் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதி, தென்சித்தூர், பெத்த நாயக்கனூர், ரமணமுதலிபுதூர், தென்சங்கம்பாளையம், சோமந்துறை, காளியாபுரம், அர்த்தநாரிபாளையம், கம்பலாப்பட்டி, ஜல்லிபட்டி, கரியஞ்செட்டிபாளையம், பிலிசின்னம்பாளையம், வேட்டைக்காரன்புதூர் ஆகிய ஊராட்சிகளில் காய்கறிகளைப் பதப்படுத்தும் நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

454—

பதப்படுத்தும் நிலையம்

வினா எண் 52722—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சியில் காய்கறிகளைப் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சியில் காய்கறிகளைப் பதப்படுத்தும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

455—

பதப்படுத்தும் நிலையம்

வினா எண் 52723—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நகராட்சியில் காய்கறிகளைப் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சியில் காய்கறிகளைப் பதப்படுத்தும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

456—

உழவர் சந்தை

வினா எண் 55683—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சியில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

457—

உழவர் சந்தை

வினா எண் 56328—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகராட்சியில் உழவர் சந்தையைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

458—

விற்பனைக் கூடம்

வினா எண் 56329—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதியில் உள்ள கொங்கணாபுரத்தில் ஏற்கெனவே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 1979-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருவதால், தற்சமயம் எடப்பாடி தொகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

459—

புதிய நெற்களம்

வினா எண் 57323—திரு. பெ.கு. விஜயகுமார்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, மாம்பட்டு கிராமம், கசம் மற்றும் மாம்பட்டு ஊராட்சி, ஜடதாரிகுப்பம், மேற்கு கொல்லை மேடு அருந்ததியர் பகுதி ஆகிய இடங்களில் புதிய நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, மாம்பட்டு கிராமம், கசம் மற்றும் மாம்பட்டு ஊராட்சி, ஜடதாரிகுப்பம், மேற்கு கொல்லை மேடு அருந்ததியர் பகுதிகளில் நெற்களம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் தற்போது இல்லை.

460—

உழவர் சந்தை

வினா எண் 57363—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

(அ) அரூர் தொகுதி, சிங்காரப்பேட்டையில் உழவர் சந்தை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, சிங்காரப்பேட்டையில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

461—

உழவர் சந்தை

வினா எண் 57365—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரையில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, ஊத்தங்கரையில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

462—

தானிய சேமிப்புக் கிடங்கு

வினா எண் 57496—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) எடப்பாடி தொகுதியில் விவசாய தானிய சேமிப்புக் கிடங்கு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் விற்பனைக் குழுவின்கீழ் 19 விற்பனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் கிடங்கு வசதிகளுடன் உள்ளன. இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பொருட்களை இருப்பு வைத்து பொருளீட்டுக் கடனும் வழங்கப்படுகிறது. எனவே, கூடுதலாக எடப்பாடி தொகுதியில் தானிய சேமிப்புக் கிடங்கு ஏற்படுத்தும் உத்தேசம் ஏதும் தற்போது இல்லை.

463—

குளிர்பதனக் கிடங்கு

வினா எண் **57497—திரு. வை. காவேரி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதியில், காய்கறிகளுக்குக் குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

464—

உழவர் சந்தை

வினா எண் 57501—திரு. வை. காவேரி மற்றும் திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

465—

நெற்களம் அமைத்தல்

வினா எண் 57543—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, கல்லூரணி ஊராட்சியில், நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, கல்லூரணி ஊராட்சியில் நெற்களம் அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட ஊராட்சிமன்றத் தலைவர்

2011 ஜனவரி 13]

இடத் தேர்வு செய்து வழங்கிடுமாறு கோரப்பட்டுள்ளது. இடத் தேர்வு செய்தமைக்கும் தீர்மானம் இயற்றியதற்கும் தகவல் எதிர் நோக்கப்படுகிறது. கிடைக்கப் பெற்றதும் மாவட்ட ஆட்சியரின் முன்நுழைவு அனுமதி பெற்று நெற்களம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

466—

புதிய கட்டடம்

வினா எண் 57615—திரு. ஆர். சாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரிலுள்ள மகளிர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மேலூரிலுள்ள மகளிர் காவல் நிலையம் தற்போது வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட தேவையான நிலம் கையகப்படுத்திய பின்னர், சொந்த கட்டடம் இல்லாத 273 காவல் நிலையங்களுக்கு அடுத்த 3 ஆண்டுகளில் படிப் படியாகப் புதிய கட்டடம் கட்டப்பட வேண்டும் என்ற 3-ஆவது காவல் ஆணையப் பரிந்துரையின்படி நிதிநிலைக்கேற்ப வருங்கால காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து, புதிய கட்டடம் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

467—

இடமாற்றம்

வினா எண் 59418—திரு. கு. ஹசன் அலி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதி, பரமக்குடியில் உள்ள மண் பரிசோதனை நிலையத்தை இராமநாதபுரத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் தொகுதி, பரமக்குடியில் உள்ள மண் பரிசோதனை நிலையம் தவிர கூடுதலாக மண் பரிசோதனை நிலையத்துடன் இணைந்து செயல்படும் விதமாக ஆய்வக வசதியுடன் கூடிய ஒரு நடமாடும் ஆய்வுக் கூடம் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் இராமநாதபுரம் தொகுதியிலுள்ள கிராமங்களில் உள்ள கிராம விவசாயிகளுக்கு மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வு முடிவுகளும், உர பரிந்துரைகளும் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இராமநாதபுரம் தொகுதி பரமக்குடியில் உள்ள மண் பரிசோதனை நிலையத்தை இராமநாதபுரத்திற்கு மாற்றும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

468—

உழவர் சந்தை

வினா எண் **61134—திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, திருமருகலில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதி, திருமருகலில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

469—

நெற்களம்

வினா எண் 61146—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) மானாமதுரை தொகுதி, ஆலம்பச்சேரி, மாங்குளம் கிராமங்களில் நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, ஆலம்பச்சேரி, மாங்குளம் கிராமங்களில் வரும் நிதியாண்டில் (2009-2010) முன்னுரிமை அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை பெறப்பட்டு உலர்களம் கட்டப்படும்.

470—

தானியக் கிடங்கு

வினா எண் 61147—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் விவசாய தானியக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் விவசாய தானியக் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

471—

விதைப் பண்ணை

வினா எண் 61744—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், மறவமங்கலத்தில் விதைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், மறவமங்கலத்தில் விதைப் பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

472—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 64338—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூரில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூரில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

473—

விதை உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம்

வினா எண் 64339—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

(அ) மேட்டூர் தொகுதி, மேட்டூரில் விதை உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூரில் உள்ள விதைப் பண்ணையில் நெல் மற்றும் பயறு விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், மேட்டூரில் விதை சுத்திகரிப்பு நிலையமும் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் மேலும் ஒரு விதை உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

474—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 65310—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியில் வேளாண்மைக் கல்லூரியைத் துவக்க வேண்டிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

475—

உழவர் சந்தை

வினா எண் 67281—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை பேரூராட்சியில் உழவர் சந்தை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை பேரூராட்சியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

476—

உழவர் சந்தை

வினா எண் 69316—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூரில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மேல்மலையனூரில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

477—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 69367—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரியைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரியைத் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

478—

வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்

வினா எண் 72639—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரியில் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரியில், கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் துவக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா விழவில்லை.

479—

நடவுச் செடிகள்

வினா எண் 76509—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகள்மூலம் மரக் கன்றுகள் மற்றும் செடிகளைக் குறைந்த விலையில் விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஆம். அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகள்மூலம் மானிய அடிப்படையில் நடவுச் செடிகள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

480—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 77346—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரியைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரியைத் துவக்க அரசிடம் கருத்துரு ஏதுமில்லை.

481—

விற்பனைக் கூடம்

வினா எண் 82299—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மற்றும் கோட்டூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மற்றும் கோட்டூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

482—

குளிர்பதனக் கிடங்கு

வினா எண் 82787—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் தொகுதி, முசரவாக்கம் அரசினர் பழப் பண்ணையில் காய்கறிகள் மற்றும் பழங்களைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதியில் முசரவாக்கம் பகுதியில் அரசுப் பழப் பண்ணை ஏதும் இல்லை. மேலும், இங்கு குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

483—

வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்

வினா எண் 87483—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

484—

உழவர் சந்தை

வினா எண் 88033—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, தொப்பூர் ஊராட்சி, தொப்பூரில் புதியதாக உழவர் சந்தை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, தொப்பூரில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

485—

உழவர் சந்தை

வினா எண் 90736—திரு. ஞா. ஜான் ஜோசப்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

486—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 93571—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டிப் பகுதியில் மரவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சி மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டிப் பகுதியில் மரவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சி மையம் துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

487—

தனிப் பல்கலைக்கழகம்

வினா எண் 94889—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இயற்கை வேளாண்மைக்கென தனிப் பல்கலைக்கழகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இயற்கை வேளாண்மைக்கெனத் தனிப் பல்கலைக்கழகம் துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

488—

விற்பனைக் கூடம்

வினா எண் 95455—திரு. வை. காவேரி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதி, கொளத்தூரில் வேளாண்மை ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொளத்தூரில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 1979 முதல் இயங்கி வருகின்றது.

489—

உழவர் சந்தை

வினா எண் 95460—திரு. வை. காவேரி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதி, சங்ககிரியில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, சங்ககிரியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

490—

உழவர் சந்தை

வினா எண் 95461—திரு. வை. காவேரி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதி, கொளத்தூரில் (மேட்டூர் வட்டம்) உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொளத்தூரில் (மேட்டூர் வட்டம்) உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

491—

வேளாண்மைப் பல்கலைக்கழகம்

வினா எண் 95920—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

492—

விவசாயக் கல்லூரி

வினா எண் 96952—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பாலூர் பண்ணையில் விவசாயக் கல்லூரியைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், பாலூர் பண்ணையில் விவசாயக் கல்லூரியைத் துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

493—

விவசாயக் கல்லூரி

வினா எண் 95953—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கடையூரில் விவசாயக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கடையூரில் விவசாயக் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

494—

விவசாயக் கல்லூரி

வினா எண் 101977—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதியில் விவசாயக் கல்லூரியைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) காஞ்சிபுரம் தொகுதியில் விவசாயக் கல்லூரியைத் துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2011 ஜனவரி 13

495—

பயிற்சி அளித்தல்

வினா எண் 103270—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இயற்கை உரம், பூச்சிக்கொல்லி தயாரிப்பு பற்றி விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் வேளாண்மைத் துறையால் செயல்படுத்தப்படும் மாநிலத் திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு மகளிர் வேளாண்மை வணிகம் மற்றும் விரிவாக்கத் திட்டம் ஆகியவற்றின்கீழ் இயற்கை உரம், பூச்சிக் கொல்லித் தயாரிப்பு பற்றி விவசாயிகளுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

496—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 104585—திரு. ஞா. ஜாண்ஜோசப்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரியைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரியைத் துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

497—

உரக் கட்டுப்பாட்டு ஆய்வகம்

வினா எண் 106102—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றத்தில் உரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் உரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் செயல்பட்டு வருகிறது. இந்த உரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றத்தையும் உள்ளடக்கிச் செயல்பட்டு வருகிறது. எனவே, திருக்கழுக்குன்றத்தில் மற்றுமோர் உரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் அமைக்கும் தேவை எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[2011 ஜனவரி 13

498—

அமர்வு நீதிமன்றம்

வினா எண் 98—திரு. வ. முல்லைவேந்தன்: *மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம் அமர்வு நீதிமன்றம் விரைவில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரியில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் கிருஷ்ணகிரியில் ஏற்கெனவே செயல்பட்டுவந்த இரண்டாவது முதன்மைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை மாற்றி தருமபுரியில் முதன்மைக் குற்றவியல் நீதிமன்றம் (District and Sessions Court and Chief Judicial Magistrate Court at Dharmapuri by shifting the existing Chief Judicial Magistrate Court at No. II Krishnagiri) *அமைத்திட அரசாணை (நிலை) எண் 1099 உள் (நீ.ம.3) துறை, நாள் 24-7-2007-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

499—

விண்ணப்பக் கட்டணம்

வினா எண் 635—திரு. ஆர். ஞானதாஸ்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல் பெறுவதற்கு தமிழக அரசு ரூ.50/- என நிர்ணயம் செய்துள்ள விண்ணப்பக் கட்டணத்தைக் குறைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

விண்ணப்பக் கட்டணம் 20-09-2006 முதல் ரூபாய் ஐம்பதிலிருந்து ரூபாய் பத்தாகக் குறைக்கப்பட்டுள்ளது.

500—

அமர்வு நீதிமன்றம்

வினா எண் 1634—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரியில் அமர்வு நீதிமன்றம் துவக்கப்படாமல் உள்ளதால் அதனை உடனடியாகத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரியில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் கிருஷ்ணகிரியில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த இரண்டாவது முதன்மைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை மாற்றி தருமபுரியில் முதன்மைக் குற்றவியல் நீதிமன்றம் (District and Sessions Court and Chief Judicial Magistrate Court at Dharmapuri by shifting the existing Chief Judicial Magistrate Court at No. II Krishnagiri) *அமைத்திட அரசாணை (நிலை) எண் 1099. உள் (நீ.ம.3) துறை, நாள் 24-7-2007-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

[2011 ஜனவரி 13

பட்டியல்—5

1—

குற்றவியல், நடுவர், முன்சீப் நீதிமன்றங்கள் அமைத்தல்

வினா எண் 2190—திரு. பி. காமராஜ்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மற்றும் உரிமையியல் முன்சீப் நீதிமன்றங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மற்றும் உரிமையியல் முன்சீப் நீதிமன்றங்கள் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2—

குடியிருப்பு

வினா எண் 5592—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்ட குற்றவியல் நடுவர் (II) அவர்களுக்குக் குடியிருப்புக் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

திருப்பூர் வட்ட குற்றவியல் நடுவர் (II) அவர்களுக்குக் குடியிருப்பு கட்டும் செயற்குறிப்பு மைய அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2011 ஜனவரி 13]

3—

நீதிமன்ற வளாகம் கட்டுதல்

வினா எண் 5597—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

திருப்பூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்வது குறித்து, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து திருத்திய செயற்குறிப்பு உயர் நீதிமன்றத் தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட பின்பு, நிதிநிலைமைக்கேற்ப திருப்பூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

4—

புதிய கட்டடம்

வினா எண் 5894—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதியில் இயங்கி வரும் நீதிமன்றத்திற்கு, வரும் நிதியாண்டில் புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

[2011 ஜனவரி 13

5—

உரிமையியல் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம்

வினா எண் 9255—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் மேட்டுப்பாளையம் உரிமையியல் நடுவர் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஒன்றை மைய அரசின் உதவியுடன் கட்டுவதற்கான செயற்குறிப்பு மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்புதல் பெறப்பட்டவுடன், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் உரிமையியல் நடுவர் நீதிமன்றம் கட்ட இவ்வரசினால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

6—

நீதிமன்ற வளாகம் அமைத்தல்

வினா எண் 9283—திருமதி ஜி. லதா: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் பகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்திடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் பகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்ட, ரூபாய் 440 இலட்சம் செலவினத்திற்கு இசைவு அளித்து அரசாணை (நிலை) எண் 251, உள் துறை, நாள் 13-2-2008-இல் அரசு, ஆணை பிறப்பித்துள்ளது.

7—

கட்டடம் கட்டுதல்

வினா எண் 10504—திரு. எஸ்.ஆர். ராஜா: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகரத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகரத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு, சென்னை உயர் நீதிமன்றம் அரசுக்கு அனுப்பும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், அரசின் நிதிநிலைமைக்கேற்ப அந்நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பை அரசு பரிசீலிக்கும்.

8—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

வினா எண் 10562—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் ஆகியவற்றைக் கட்ட, ரூபாய் 997 இலட்சம் செலவினத்திற்கு இசைவு அளித்து அரசாணை (நிலை) எண் 371, உள் துறை, நாள் : 20-3-2008-இல் அரசு, ஆணை பிறப்பித்துள்ளது.

9—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள்

வினா எண் 11242—திரு. கோ. ஐயப்பன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் ஆகியவை கட்ட, ரூபாய் 1,002 இலட்சம் செலவினத்திற்கு இசைவு அளித்து அரசாணை (நிலை) எண் 339ல் உள் துறை, நாள் : 11-3-2008-இல் அரசு, ஆணை பிறப்பித்துள்ளது.

2011 ஜனவரி 13]

10—

உரிமையியல் நீதிமன்றத்திற்குக் கட்டடம்

வினா எண் 13484—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

ஆம்.

11—

சொந்தக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 13863—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

திருக்கழுக்குன்றம் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்குச் சொந்த கட்டடம் கட்டுவதற்காக தேவையான நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் பெறப்பட்டவுடன் கட்டடம் கட்டுவது சம்பந்தமாக பரிசீலிக்கப்படும்.

[2011 ஜனவரி 13

12—

சார்பு நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 13981—திரு. வி.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, திருக்கோவிலூரில் சார்பு நீதிமன்றம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

13—

அரசு சட்டக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 14150—திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதியில் அரசு சட்டக் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

இல்லை.

2011 ஜனவரி 13]

14—

நூலகம் அமைத்தல்

வினா எண் 14241—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் நீதிமன்றத்தின் அருகில் வழக்கறிஞர்களுக்காக நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள நீதிமன்றத்தின் அருகில் வழக்கறிஞர்களுக்காக நூலகம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

15—

வழக்குகளை விரைவில் முடித்தல்

வினா எண் 14860—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்கள், மனநிலை பாதித்தோர் குறித்த வழக்குகளை விரைவில் முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

தமிழகத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்குகள் தாக்கல் செய்யும்போது தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த பெண்கள் மற்றும் மனநிலை பாதித்த நபர்கள் வழக்குகள் என வகைப்படுத்தப்படுவது கிடையாது. எனவே, தமிழகத்திலுள்ள நீதிமன்றங்களில்

[2011 ஜனவரி 13

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த பெண்கள் மற்றும் மனநிலை பாதித்த நபர்கள் தாக்கல் செய்த வழக்குகள் என வகைப்படுத்தாமல் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகள் அனைத்தும் விரைவில் முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

16—

அடிப்படை வசதிகள்

வினா எண் 14909—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள நீதிமன்றத்திற்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அடிப்படை வசதிகளான தண்ணீர், கழிவறை மற்றும் மின்சாரம் ஆகியவற்றிற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

17—

கூடுதல் உதவித் தொகை

வினா எண் 15319—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சட்டக் கல்லூரிகளில் படிக்கும் ஆதி திராவிட, பழங்குடியின மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையைக் கூடுதலாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) சட்டக் கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிட, பழங்குடியின மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை மத்திய அரசின் போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகை திட்டத்தின்கீழ் இவ்வரசின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையால் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை 1-4-2003 முதற்கொண்டு உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், கூடுதலாக உதவித் தொகை வழங்குவது குறித்து மத்திய அரசுதான் முடிவெடுக்க வேண்டும்.

(ஆ) எதுவில்லை.

18—

சார்பு நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 18716—திரு. படில்லிபாபு: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்ட தலைநகரில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

வினா எழவில்லை.

19—

அமர்வு நீதிமன்றம் தொடங்குதல்

வினா எண் 23386—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

(அ) தருமபுரி நகரில் அமர்வு நீதிமன்றம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரியில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் கிருஷ்ணகிரியில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த இரண்டாவது முதன்மைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை மாற்றி தருமபுரியில் முதன்மைக் குற்றவியல் நீதிமன்றம் (District and Sessions Court and Chief Judicial Magistrate Court at Dharmapuri by shifting the existing Chief Judicial Magistrate Court at No.II Krishnagiri) அமைத்திட அ.ஆ. (நி) எண் 1099. உள் (நீ.ம.3) துறை, நாள் 24-7-2007-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

20—

கட்டட வசதி

வினா எண் 23412—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, அரியலூர் நீதிமன்றங்களுக்கு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் தொகுதி, அரியலூர் நீதிமன்றங்களுக்கு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு

2011 ஜனவரி 13]

சென்னை உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில் அதற்கான நிலம் கையிருப்பு மற்றும் அரசின் நிதிநிலைமைக்கேற்ப அரியலூர் நீதிமன்றங்களுக்கு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்ட அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

21—

தமிழில்மொழி பெயர்த்தல்

வினா எண் 23725—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய-மாநில சட்டங்கள் அனைதையும் தமிழில் மொழிபெயர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மத்திய-மாநில சட்டங்கள் அனைத்தையும் தமிழில் மொழி பெயர்ப்பதே அரசின் நோக்கமாகும்.

(ஆ) அவ்வப்போது இயற்றப்படும் தமிழ்நாடு சட்டங்கள் அனைத்தையும் (திருத்தச் சட்டங்கள் உட்பட) அவற்றின் ஆங்கில வடிவுடன் தமிழ் வடிவிலும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டு வருகின்றன. மையச் சட்டங்களைப் பொறுத்தவரை இந்திய அரசின் சட்ட மற்றும் நீதி அமைச்சகத்தின் சட்ட ஆட்சி மொழிப் பிரிவால் அனுப்பப்படுகிற முன்னுரிமைப் பட்டியலின் (Priority List) படியும் தலைமைச் செயலகத்தின் துறைகள் கேட்டுக்கொள்வதன் பேரிலும் அவை சட்டத் துறையின் ஆட்சி மொழிப் பிரிவினால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, இந்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, இந்திய அரசிதழிலும் (Gazette of India) மற்றும் தமிழ்-ஆங்கிலம் இருமொழிப் பதிப்பாக புத்தக வடிவிலும் வெளியிடப்படுகின்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

22—

மாவட்ட நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 25914—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரத்தில் மாவட்ட நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்திற்கான மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றம் செங்கல்பட்டில் இயங்கி வருவதாலும், காஞ்சிபுரத்திலுள்ள வழக்குகள் அனைத்தும் செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் நடத்தப்படுவதாலும், காஞ்சிபுரம் மாவட்ட நீதித்துறையின் தலைமையிடம் செங்கல்பட்டாக இருப்பதாலும், காஞ்சிபுரத்தில் மாவட்ட நீதிமன்றம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

(ஆ) எழவில்லை.

23—

உயர் நீதிமன்றக் கிளை அமைத்தல்

வினா எண் 26245—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உயர் நீதிமன்றக் கிளையை திருச்சிராப்பள்ளியில் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளையை திருச்சிராப்பள்ளியில் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

24—

புதிய குற்றவியல் நீதிமன்றம் நிறுவுதல்

வினா எண் 26246—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு உரிமையியல் நீதிமன்றத்தோடு புதிய குற்றவியல் நீதிமன்றம் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றமாக மாற்றியமைப்பது குறித்த செயற்குறிப்பு உயர் நீதிமன்றத்தின் பரிசிலனையில் உள்ளது. அச்செயற்குறிப்பு உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்டவுடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

25—

தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்

வினா எண் 28417—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் தலைமைக் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

26—

புதிய கட்டடம்

வினா எண் 28481—திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்* கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் சார்பு நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் சார்பு நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் ஒன்றை மைய அரசின் உதவியுடன் கட்டுவதற்கான செயற்குறிப்பு மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்புதல் பெறப்பட்டவுடன், கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் சார்பு நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட இவ்வரசினால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

27—

சார்பு நீதிமன்றம் மற்றும் துணை அமர்வு நீதிமன்றம்

வினா எண் 28551—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்* கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசிபுரம் தொகுதி, இராசிபுரத்தில் சார்பு நீதிமன்றம், துணை அமர்வு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) இராசிபுரத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்க அ.ஆ. (நிலை) எண் 919, உள் (நீ.ம.3) துறை, நாள் 15-6-2007-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இராசிபுரத்தில் துணை அமர்வு நீதிமன்றம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

28—

நீதிமன்றம் இடமாற்றம்

வினா எண் 29227—திருமதி. பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த நீதிமன்றத்தைச் செங்கல்பட்டிலிருந்து காஞ்சிபுரத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இப்பொருள் குறித்த செயற்குறிப்பு உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்படவில்லை. செயற்குறிப்பு பெறப்பட்டவுடன் தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

29—

ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம்

வினா எண் 30020—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் நகரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இப்பொருள் குறித்த செயற்குறிப்பு உயர் நீதிமன்றத் தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்படவில்லை. செயற்குறிப்பு உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்டவுடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

30—

உரிமையியல் நீதிமன்றம் தொடங்குதல்

வினா எண் 30344—திருமதி. மு. சந்திரா: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தொகுதியில் உரிமையியல் நீதிமன்றம் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தொகுதியில் உரிமையில் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற செயற்குறிப்பை, சென்னை உயர்நீதிமன்றம் அரசுக்குப் பரிந்துரைக்கும் பட்சத்தில், இராஜபாளையம் தொகுதியில் உரிமையில் நீதிமன்றம் அமைக்கக் கோரும் செயற்குறிப்பை அரசின் நிதிநிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும்.

2011 ஜனவரி 13]

31—

புதிய கட்டடம்

வினா எண் 30932—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு, சென்னை உயர் நீதிமன்றம் அரசுக்கு அனுப்பப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில் அரசின் நிதி நிலைமைக்கேற்ப, அதற்கான செயற்குறிப்பை அரசு பரிசிலிக்கும்.

32—

நீதிமன்ற வளாகம் அமைத்தல்

கிருஷ்ணராயபுரம் தொகுதி, சிந்தலவாடி பஞ்சாயத்திற்குட்பட்ட நந்தன்கோட்டை பகுதிவாழ் மக்களின் வசதிக்கேற்ப கரூர்-திருச்சிராப்பள்ளி பிரதான சாலையில் பேருந்து நிறுத்தம் அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கிருஷ்ணராயபுரம் தொகுதி, சிந்தலவாடி பஞ்சாயத்திற்குட்பட்ட நந்தன்கோட்டை பகுதிவாழ் மக்களின் வசதிக்கேற்ப, கரூர்-திருச்சிராப்பள்ளி வழித் தடத்தில் இயக்கப்படும் குறுநடைப் பேருந்துகள் சிந்தலவாடி பேருந்து நிறுத்தத்தில் (நந்தன்கோட்டை பிரிவுச் சாலை) நிறுத்தப்பட்டு, பயணிகள் ஏற்றி இறக்கி செல்லப்படுகிறார்கள்.

220—

கூடுதல் பேருந்து வசதி

வினா எண் 1077—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டி மற்றும் பஞ்சப்பட்டியிலிருந்து கரூர் வரை 30 நிமிடங்களுக்கு ஒரு முறை பேருந்து இயக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டி-கரூர் வழித் தடத்தில் தினசரி 54 நடைகளில் சுமார் 30 நிமிட இடைவெளியிலேயும்,

2011 ஜனவரி 13]

பஞ்சப்பட்டி-கரூர் வழித்தடத்தில் தினசரி 25 நடைகளில் சுமார் 45 நிமிட இடைவெளியில் கழகப் புறநகரப் பேருந்துகள், மற்றும் தனியார் பேருந்துகள்மூலமாக நேரிடையாகவும் அவ்வழித் தடங்கள் முழுவதும் பகுதிப் பகுதியாகவும் பேருந்து வசதி பெற்றுள்ளது.

221—

பேருந்து இயக்குதல்

வினா எண் 1080—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம்-கொசூர், கொசூர்-கிருஷ்ணராயபுரம் இரண்டு வழித் தடங்களிலும் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம்-கொசூர் வழித்தடத்தின் மொத்த நீளம் 35.0 கி.மீ. ஆகும். அவ்வழித் தடம் முழுவதும் புறநகர், நகர் மற்றும் தனியார் பேருந்துகள் தினசரி 32 நடைகளில் இயக்கப்படும் பேருந்துகளின் மூலமாக நேரிடையாகவும், பகுதிப் பகுதியாகவும் பேருந்து வசதி பெறப்பட்டுள்ளது.

222—

கூடுதல் பேருந்து

வினா எண் 1082—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, புலியூர், உப்பிடமங்கலம், காணியாளம்பட்டி, சிந்தாமணிப்பட்டி, தரகம்பட்டி, மோளப்பட்டி ஆகிய பகுதிகளுக்குக் கூடுதல் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கிருஷ்ணராயபுரம் தொகுதி, புலியூர், உப்பிடமங்கலம், காணியாளம்பட்டி, சிந்தாமணிப்பட்டி, தரகம்பட்டி, மோளப்பட்டி வழித் தடத்தில் தற்போது நேரடியாகவும் பகுதிப் பகுதியாகவும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) திருச்சி மண்டலம்மூலமாகப் புறநகர்ப் பேருந்துகள் தினசரி 8 நடைகளிலும், தனியார் புறநகர்ப் பேருந்துகள் 6 நடைகளிலும் இயக்கப்படுகின்றன. இவை தவிர, ஒரு மினி பேருந்துமூலம் குஜிலியம்பாறை மாரியம்மன் கோவில்-தரகம்பட்டி வழி மோளப்பட்டி வழித் தடத்தில் தினசரி 12 நடைகள் இயக்க அனுமதி சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட், திருச்சி மண்டலம்மூலமாக கரூர்-மணப்பாறைக்கு 5 பேருந்துகள் மூலம் 18 நடைகளும், தனியார் புறநகர்ப் பேருந்துகள்மூலம் கரூர்-மணப்பாறை கரூர்-கடவூருக்கு மொத்தம் 5 பேருந்துகள் 24 நடைகளுமாக இயக்கப்படுகின்றன. மேலும், கரூர்-உப்பிடமங்கலம் வழித் தடத்தில் 5 நகரப் பேருந்துகள்மூலம் 42 நடைகளும், கரூர்-உப்பிடமங்கலம், காணியாளம்பட்டி வழித் தடத்தில் 6 நகரப் பேருந்துகள்மூலம் 36 நடைகளும் இயக்கம் செய்யப்பட்டு, மேற்கண்ட வழித் தடம் நேரடியாகவும், பகுதிப் பகுதியாகவும் போதுமான பேருந்து வசதி பெறப்பட்டுள்ளது.

223—

பேருந்து இயக்குதல்

வினா எண் 1083—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, மணப்பாறை-பாப்பணம்பட்டி வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கும்பகோணம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திலிருந்து மணப்பாறை-கரூர் (வழி) தரகம்பட்டி, மாமரத்துப்பட்டி,

2011 ஜனவரி 13]

சக்கரைக் கோட்டை, பாப்பனம்பட்டி பிரிவு மற்றும் காணியாளம்பட்டி வழியாக தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டுவந்த புறநகர்ப் பேருந்து 18-9-2006 முதல் சக்கரைக்கோட்டையிலிருந்து பாப்பனம்பட்டி கிராமத்தினைத் தொட்டு இயக்கப்படுகிறது.

224—

பேருந்து இயக்குதல்

வினா எண் 1084—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம்-தரகம்பட்டிக்கு கோவக்குளம், பழைய ஜெயங்கொண்டம், பஞ்சப்பட்டி, உடையார்பட்டி, மைலம்பட்டி வழியாகப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கிருஷ்ணராயபுரம்-தரகம்பட்டி (வழி) கோவகுளம், பழைய ஜெயங்கொண்டம், பஞ்சப்பட்டி, பி.உடையாப்பட்டி, மைலம்பட்டி வழித்தடத்தின் மொத்த நீளம் 40.3 கி.மீ. ஆகும். மேலும், இவ்வழித் தடம் முழுவதும் பகுதி பகுதியாக போதுமான நகர/புற நகர/மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் 56 நடைகளில் தினசரி இயக்கப்பட்டு வருகிறது. அப்பேருந்து வசதிகளே போதுமானதாக கருதப்படுகிறது.

225—

விரைவுப் பேருந்து மீண்டும் இயக்குதல்

வினா எண் 1096—திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் முதல் சென்னை வரை இயக்கப்பட்ட தடம் எண் 188 அரசு விரைவுப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் ஏற்கனவே தடம் எண் 188 இல் சாத்தான்குளத்திலிருந்து சென்னைக்கு நாள்தோறும் ஒரு பேருந்து இயக்கப்பட்டு, போதிய பயணிகள் இன்றி நிறுத்தப்பட்ட பேருந்தை, மீண்டும் இயக்குவது தொடர்பான நடவடிக்கை இக்கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

இருப்பினும் சாத்தான்குளம் வழியாக இயக்கப்படும் இடையன்குடி-சென்னை பேருந்து தடம் எண் 199 சாதா பேருந்து (15 இருக்கைகள்) தடம் எண் 199 வீடியோ கோச் (6 இருக்கைகள்) பேருந்துகளில் சாத்தான்குளத்திற்கு இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு முன் பதிவும் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் மேற்படி ஒதுக்கப்பட்டிருக்கும் இருக்கைகள் முழுவதும் பூர்த்தியாகும் பட்சத்தில், நிறுத்தப்பட்ட தடம் எண் 188 (சாத்தான்குளம்-சென்னை) மீண்டும் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

226—

பேருந்து வசதி

வினா எண் 1242—திரு. வீ. ஏ. டி. கலியவரதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, குயவன்காடு வெட்டி கிராமத்திற்கு விழுப்புரத்திலிருந்து பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

முகையூர் தொகுதி, குயவன்காடு வெட்டி கிராம மக்கள் திருக்கோயிலூர் நகரப் பேருந்துமூலமாக ஆ. கூடலூர் அல்லது ஆயத்தூர் சென்றடைந்தால் அங்கிருந்து விழுப்புரம் செல்ல நகரப் பேருந்து வசதி உள்ளது.

2011 ஜனவரி 13]

227—

கூடுதல் மினிப் பேருந்துகள்

வினா எண் 1284—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இயக்கப்படும் மினிப் பேருந்துகள் எண்ணிக்கையை உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது நடைமுறையிலுள்ள பகுதி திட்டத்தின்கீழ் சென்னையைத் தவிர, அனைத்து மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் 250 சிற்றுந்து அனுமதிச் சீட்டுக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. சில மாவட்டங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 250 அனுமதிச் சீட்டுகள் அனைத்தும் முடியும்தறுவாயில் உள்ளன. போக்குவரத்து வசதி தேவையுள்ள கிராம மக்களுக்கு சிற்றுந்து வசதியைப் பரவலாக்கும் வகையில் மிகக் குறைவான அனுமதிச் சீட்டுகள் வழங்கிய பிற மாவட்டங்களில் பயன்படுத்தப்படாத அனுமதிச் சீட்டுகளைத் தேவையான மாவட்டங்களுக்கு ஒன்றியம் வாரியாக மறு ஒதுக்கீடு செய்ய அரசு முடிவெடுத்துள்ளது.

228—

அரசுப் பேருந்து மீண்டும் இயக்குதல்

வினா எண் 1560—திரு. கே.வீ. இராமநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி, தொகுதி, தளவாய்பேட்டை-ஈரோடு P.S. பூங்கா வரை இயக்கப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டுள்ள அரசுப் பேருந்து மீண்டும் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளவாய்பேட்டை பள்ளி நேரத்திற்கு, பவானி-தளவாய்பேட்டை காலை, மாலை தலா 2 தனிப் பேருந்து நடைகள் 07-06-2006 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

229—

பேருந்து வசதி

வினா எண் 1561—திரு. கே.வி. இராமநாதன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, குறிச்சி கூச்சிக்கல்லூர் வழியாக பவானி—குருவரெட்டியூர் வரை அரசுப் பேருந்து மீண்டும் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) 18-07-2006 முதல் குறிச்சி, கூச்சிக்கல்லூர் வழியாக பவானி-குருவரெட்டியூர் வரை கழக நகரப் பேருந்து 4 தனி நடைகள் இயக்கப்படுகிறது.

(ஆ) எழவில்லை.

230—

பேருந்து மீண்டும் இயக்குதல்

வினா எண் 1946—திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், அரசுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வந்த 4சி என்ற பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் அரசுப் போக்குவரத்துக் கழகத்திலிருந்து வழித் தட எண் 4சி இல் இரு பேருந்துகள் முறையே (1) கோவில்மேடு-ஸ்ரீநிவாச நகர் என தினசரி 16 நடைகளும், (2) கணபதி மாநகர்/ஆவராம்பாளையம் - ஸ்ரீநிவாச நகர் என தினசரி 18 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

231—

சுற்றுப் பேருந்து

வினா எண் 2098—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையம், அரசு மருத்துவமனை, நீதிமன்றம், ஐடிஐ. வேதநாராயணபுரம், இருங்குன்றப்பள்ளி, பழவேலி, பச்சையம்மன் கோயில், கைலாசநாதர் கோயில் தெரு, ஓசூரம்மன் கோயில், காஞ்சிபுரம் ஹைரோடு, பழைய பேருந்து நிலையம் வரை சுற்றுப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு பேருந்து நிலையம், அரசு மருத்துவமனை, நீதிமன்றம், ஐடிஐ. வேதநாராயணபுரம், இருங்குன்றப்பள்ளி, பழவேலி, பச்சையம்மன் கோயில், கைலாசநாதர் கோயில் தெரு, காஞ்சிபுரம் ஹைரோடு, பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம்

[2011 ஜனவரி 13

சுற்றுத் தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) 26-08-2006 முதல் காலையிலும், மாலையிலும், ஒவ்வொரு சுற்று நடை வீதம் இரண்டு சுற்று நடைகள் இயக்கி வருகிறது.

232—

சுற்றுப் பேருந்து

வினா எண் 2099—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு, வல்லம், மேலமையூர், தொழுநோய் ஆராய்ச்சி நிலையம், திருமணி, சட்டக் கல்லூரி, என்.ஜி.ஓ. நகர் கோட்டாட்சியர் அலுவலகம், மருத்துவமனை, செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையம் வரை சுற்றுப் பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கைத் தடத்தில் மேலமையூரிலிருந்து தொழுநோய் ஆராய்ச்சி நிலையம் வரையிலான 13 கி.மீ. மண் சாலையாக உள்ளது. தொழுநோய் ஆராய்ச்சி நிலையத்திற்கு இரயில்வே கேட்டுக்கு அருகில் செல்லும் சாலையில் 'S' போன்ற வளைவு உள்ளது. இதில் பேருந்து திரும்புவது கடினம்; மற்றும், இரயில்வே கேட் அருகில் 'L' போன்று திரும்ப வேண்டும். இந்த இடத்தில் பேருந்து திரும்ப இயலாது. இருப்பினும் சாலை வசதி மேம்படுத்தப்பட்டு, இரயில்வே கேட் அருகில் பேருந்து திரும்புவதற்கான வசதி பெறும் பட்சத்தில் சுற்றுப் பேருந்து இயக்க ஆய்வு செய்யப்படும்.

233—

பேருந்துகளை மீண்டும் இயக்குதல்

வினா எண் 2454—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரத்திலிருந்து திருப்பதிக்கு நேரடியாக இயங்கி வந்த பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருப்பதியிலிருந்து மாமல்லபுரத்திற்கு அதிக பயணிகள் பயணம் செய்யாததால், வருவாயைப் பெருக்கும் பொருட்டு செங்கற்பட்டிலிருந்தும், க்ல்பாக்கத்திலிருந்தும் திருப்பதிக்கு 18 நடைகள் தினசரி இயக்கப்படுகிறது மேலும், மாமல்லபுரம்-திருப்பதி தடத்தில் ஒரு நடை 20-08-2006 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

234—

புதிய கட்டடம்

வினா எண் 2566—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி உடுமலைப் பேட்டையில் இயங்கி வரும் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) உடுமலைப்பேட்டையில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

235—

புதிய பேருந்து

வினா எண் 2730—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

செங்கல்பட்டு-ஒத்திவாக்கம் -மணப்பாக்கம் காலனி-உதயம்பாக்கம் வரை புதிய பேருந்து இயக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை தடத்தில் ஒத்திவாக்கத்திலிருந்து உதயம்பாக்கம் வரையிலான 3.0 கி.மீ. சாலை கனரக வாகனங்கள் இயக்க தகுதியற்றவையாக உள்ளதால், செங்கல்பட்டிலிருந்து ஒத்திவாக்கம், மணப்பாக்கம் காலனி வழியாக உதயம்பாக்கம் வரை புதிய நகரப் பேருந்துகள் இயக்கச் சாத்தியமில்லை. சாலை சீர் செய்யப்பட்டவுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுப் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

236—

மினி பஸ் இயக்குதல்

வினா எண் 2774—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு அண்ணா நகர், அழகேச நகர், அனுமந்த புதுச்சேரி, மேட்டுத் தெரு, நத்தம், கைலாசநாதர் கோயில் தெரு, காஞ்சிபுரம் நெடுஞ்சாலை, பழைய பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளுக்கு மினி பஸ் இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு அண்ணா நகர், அழகேச நகர், அனுமந்த புதுச்சேரி, மேட்டுத் தெரு, நத்தம், கைலாசநாதர் கோயில் தெரு, காஞ்சிபுரம் நெடுஞ்சாலை, பழைய பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளுக்குச் சிற்றுந்து அனுமதிச் சீட்டு கேட்டு காஞ்சிபுரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் விண்ணப்பம் ஏதும் தற்போது நிலுவையில் இல்லை. இவ்வழித் தடத்தில், சிற்றுந்து அனுமதி கேட்டு மனு பெறப்படின் அம்மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2011 ஜனவரி 13]

237—

புதிய வழித்தடம்

வினா எண் 3888—திரு. க. இராஜேந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, உடையன்பாளையத்திலிருந்து சென்னை வழி ஜெயங்கொண்டம் புதிய வழித் தடம் விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட்., விழுப்புரம் மண்டலத்திலிருந்து நேரடியாக அரியலூர்-சென்னை (வழி) உடையார்பாளையம், ஜெயங்கொண்டம் வழியாக சென்னைக்கு 3 பேருந்துகள்மூலம் தினசரி 6 நடைகளும், செந்துரை-சென்னை நேரடியாக (வழி) உடையார்பாளையம், ஜெயங்கொண்டம் வழியாக ஒரு பேருந்துமூலம் தினசரி 2 நடைகளுமாக இயக்கப்பட்டு வருகின்றன. இவை தவிர, ஜெயங்கொண்டம்-சென்னை வழித் தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., திருச்சி மண்டலம் மூலம் 2 பேருந்துகள் 4 நடைகளிலும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட்., விழுப்புரம் மண்டலம் மூலம் 9 பேருந்துகள் 18 நடைகளிலுமாக இயங்கி வருகின்றன. மேலும் உடையார்பாளையம், ஜெயங்கொண்டத்திற்கு ஒவ்வொரு 10 நிமிட கால இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பேருந்துகளை உடையார்பாளையம் பகுதி மக்கள், சென்னை செல்ல பயன்படுத்தி வருகிறார்கள்.

238—

பேருந்து வசதி

வினா எண் 4579—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், தச்சனேந்தல் கிராமத்திற்குப் பள்ளி மாணவர்களின் நலன் கருதி, காலை 8.30 மணியளவிலும் மாலை 5.00 மணியளவிலும் திருப்புவனத்திலிருந்து பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது தச்சனேந்தல் கிராமத்திலிருந்து திருப்புவனத்திற்கு இரண்டு தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. திருப்புவனம் கிளைப் பேருந்துகள் பள்ளி நேரங்களில் வெவ்வேறு கிராமங்களுக்குப் பல்முனை நடத் திட்டத்தின்கீழ் இயக்கப்பட்டு வருகின்றன. புதிய வழித் தடங்கள் இயக்கப்படும்போது கோரிக்கைத் தடத்தில் முன்னுரிமையுடன் பரிசிலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

239—

தானியங்கி சிக்னல்

வினா எண் 5012—திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெரம்பூர்-மாதவரம் நெடுஞ்சாலையில் டான்பாஸ்கோ பள்ளி அருகில் தானியங்கி சிக்னல் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாதவரம் நெடுஞ்சாலை மற்றும் பல்லவன் சாலை சந்திக்கும் இடம் மும்முனை சந்திப்பாக உள்ளதாலும், இவ்விடத்தில் அதிக அளவில் பள்ளிகளும், வாகனப் போக்குவரத்தும் உள்ள காரணத்தாலும், இங்கு தானியங்கி சிக்னல் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2011 ஜனவரி 13]

240—

போக்குவரத்து அலுவலகம்

வினா எண் 5066—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மேட்டூரில் இயங்கி வருவதை மாற்றி ஓமலூர் பகுதியிலேயே அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தற்போது மேட்டூரில் இயங்கி வரும் போக்குவரத்துப் பகுதி அலுவலக எல்லைக்குட்பட்ட போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களின் எண்ணிக்கையை, ஓமலூர் பகுதியில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, அனைத்து இனங்களிலும் மேட்டூரில்தான் அதிக அளவில் உள்ளது. மேலும், இப்பகுதி அலுவலகம் மேட்டூரில் இயங்குவதுதான் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உகந்ததாக உள்ளது. எனவே, மேட்டூரில் இயங்கும் போக்குவரத்துப் பகுதி அலுவலகத்தை ஓமலூருக்கு மாற்றியமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், பொதுமக்கள் பயன்பெறும் வகையில், ஓமலூரில் புதிய போக்குவரத்துப் பகுதி அலுவலகம் தொடங்க உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

241—

பணியாளர் நியமனம்

வினா எண் 5290—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்ட அரசுப் போக்குவரத்துக் கழக பணிமனைகளில் பணியாளர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்ட அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிக் காலியிடங்களை நிரப்புவதற்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து பரிந்துரைக்கும் பட்டியல் கேட்கப்பட்டுள்ளது. பட்டியல் பெற்ற பின்பு இதுசம்மந்தமாக மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

242—

பேருந்துகளை மீண்டும் இயக்குதல்

வினா எண் 5291—திருமதி ரா. லீமா றோஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக அரசின் விரைவுப் பேருந்து போக்குவரத்துக் கழகம், சென்னையிலிருந்து கன்னியாகுமரி மாவட்டம், கோதையாறு கீழ்தங்கலுக்கு இயக்கி வந்த பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோதையாறு-சென்னை பயணிகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) பேருந்து வசதியைப் பயன்படுத்தி, அருகிலுள்ள மார்த்தாண்டம் வந்து அங்கிருந்து இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக வழித் தடம் எண் 284-ஐ (மார்த்தாண்டம்-சென்னை) பயன்படுத்திக் கொள்ள வசதி உள்ளது.

243—

விரைவுப் பேருந்து

வினா எண் 5511—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

ராதாபுரம் தொகுதி, கூடங்குளத்திலிருந்து சமூகரங்காபுரம், தெற்குக் கள்ளிகுளம் வழியாக சென்னைக்கு விரைவுப் பேருந்தும், காவல்கிணறிலிருந்து திருச்செந்தூருக்கு விரைவுப் பேருந்தும் இயக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மதுரை மூலமாக நாகர்கோவிலிலிருந்து காவல்கிணறு வழியாக திருச்செந்தூருக்கு இயக்கப்பட்ட பேருந்து, பயணிகளால் முழுமையாக பயன்படுத்தப்படாத நிலையிலும், அக்கிராம மக்கள் அவ்வழியாக இயக்கப்படும் குறுகிய தூர நகரப் பேருந்துகளைப் பயன்படுத்தியதாலும், பல ஆண்டுகளுக்கு முன்னரே நிறுத்தப்பட்டு விட்டது. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக கூடங்குளத்திலிருந்து சென்னைக்கு சமுகரங்காபுரம், தெற்குக் கள்ளிகுளம் வழியாகப் பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

244—

மீண்டும் பேருந்து இயக்குதல்

வினா எண் 5513—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையில் இருந்து கோயம்புத்தூர், நாகர்கோவில்-சாத்தான்குளம் வழியாகப் பேருந்து வசதி செய்திடவும் மற்றும் திருச்செந்தூர் ஆத்தங்கரை பள்ளிவாசலுக்கு இயக்கப்பட்ட தடம் எண் 59-பி மீண்டும் இயக்கிடவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை மூலமாக திருநெல்வேலி-ஆத்தங்கரை பள்ளிவாசல் (வழி) கொகரக்குளம், மேலப்பாளையம், நாங்குனேரி, ஏர்வாடி, வள்ளியூர் என 4 தடங்கள்

இயக்கப்பட்டு, தடம் எண் 59-பி போதிய பயணிகள் இல்லாமையால் 4 ஆண்டுகளுக்கு முன்னரே நிறுத்தப்பட்டது. திசையன்விளை பொதுமக்கள் திருநெல்வேலி வந்தடைந்து அங்கிருந்து கோயம்புத்தூர் செல்ல பேருந்து வசதி உள்ளது. தற்போது இவ்வழித் தடத்தில் அனைத்துப் பகுதிகளுக்கும் பகுதிப் பகுதியாகப் பேருந்து வசதிகள் உள்ளன.

245—

பேருந்து வசதி

வினா எண் 5516—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, செம்மன்குளம், சுப்பிரமணியபேரி (எ) ஈசட்டி, பாப்பான்குளம், வள்ளியூரிலிருந்து—ஆனைக்குளம் வழியாக, முத்துலாபுரம், ஆனைக்குளம் வழியாக துலுக்கர்பட்டி, கொத்தன்குளம், அரசன்குளம், காடுதுலா ஆகிய கிராமங்களுக்குப் பேருந்து வசதி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

முத்துலாபுரம் கிராமத்திற்கு வள்ளியூரிலிருந்து பட்டர்புரம் வழியாக 2 சுற்றுக்களில் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. துலுக்கர்பட்டி, ஆனைகுளம் கிராமங்களை வள்ளியூருடன் தொடர்புபடுத்தி ஒரு நகரப் பேருந்துமூலம் 16 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் இப்பகுதியில் இரு சிற்றுந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. 19-09-2006 முதல் வள்ளியூர்-கூத்தன்குழி (வழி) அம்மச்சிகோவில், வடக்கு கும்பிளாம்பாடு, பாப்பான்குளம், ஈசட்டி, செம்மன்குளம், ராதாபுரம், உதயத்தூர், சிதம்பராபுரம், அரசர்குளம், கொத்தன்குளம், காடுதுலா, ஆவுடையாள்புரம் என்னும் வழித் தடத்தில் நாளொன்றுக்கு 4 சுற்றுக்கள் வீதம் புறநகர்ப் பேருந்து வசதி உள்ளது.

246—

பேருந்து வசதி

வினா எண் 5523—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

ராதாபுரம் தொகுதி, திசையன்விளையிலிருந்து கொல்லத்திற்கு, கொத்தன்குளம், திசையன்விளை, வள்ளியூர் வழியாக அம்பாசமுத்திரத்திற்குப் பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திசையன்விளையிலிருந்து கொல்லத்திற்குப் பேருந்து இயக்குவது என்பது இரு மாநில வழித் தட ஒப்பந்தத்திற்கு உட்பட்டது. இரு மாநில ஒப்பந்தம் ஏற்படும்போது, இதுகுறித்துப் பரிசிலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கொத்தன்குளம், திசையன்விளை, வள்ளியூர் வழியாக அம்பாசமுத்திரத்திற்குத் தற்போது திசையன்விளை - வள்ளியூர், கொத்தன்குளம் - வள்ளியூர், வள்ளியூர்- அம்பாசமுத்திரம் எனப் பகுதிப் பகுதியாகப் போதுமான அளவில் பேருந்து வசதிகள் உள்ளது. மேலும் கொத்தன்குளத்தை வள்ளியூர் மற்றும் கூடங்குளம் ஆகிய ஊர்களுடன் தொடர்புபடுத்தி 19-09-2006 முதல் 4 சுற்றுகளில் பேருந்து வசதி செய்து தரப்பட்டுள்ளது.

247—

சிற்றுந்து இயக்குதல்

வினா எண் 5566—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவிலிலிருந்து கொண்டத்தூர் வழியாக வைத்தீஸ்வரன் கோவில் வரை சிற்றுந்து இயக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செம்பனார் கோவில் வைத்தீஸ்வரன் கோவில் வழித்தடத்தின் மொத்த நீளம் 7.4 கி.மீ. ஆகும். இதில் செம்பனார்

TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

கோவில் முதல் சேமங்கலம் வெட்டாற்றுப் பாலம் வரை 3.9 கி.மீ. தூரத்திற்குச் சிற்றுந்துகள் இயங்கி வருகின்றன. சேமங்கலம் வெட்டாற்றுப் பாலம் முதல் வைத்தீஸ்வரன் கோவில் வரை 3.5 கி.மீ. தூரத்திற்கு அரசு மற்றும் தனியார் பேருந்து வசதி உள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சிற்றுந்து அனுமதிச் சீட்டுக்களின் எண்ணிக்கை 250 ஆகும். அதில் 119 அனுமதிச் சீட்டுக்கள் மட்டும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வழித் தடத்தில் சிற்றுந்து இயக்க அனுமதி கோரி மனுக்கள் ஏதும் பெறப்படவில்லை. மனுக்கள் பெறப்பட்டால், தற்போதுள்ள திட்டத்தின்கீழ் அவ்வழித் தடத்தில் சிற்றுந்து இயக்க உரிமம் வழங்கப்படும்.

248—

ஓட்டுநர் பயிற்சியாளர் சான்று

வினா எண் 5594—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் விபத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு மோட்டார் வாகன ஓட்டுநர்களுக்கு (எல்.எல்.ஆர்.) எனப்படும் ஓட்டுநர் பயிற்சியாளர் சான்று வழங்க சிறப்புப் பயிற்சி முகாம் நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருப்பூர் நகர் மட்டுமின்றி, அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களில் பழகுநர் உரிமம் பெற மனு செய்வோரின் வசதியை முன்னிட்டு, காலை 9.30 மணி முதல் அறிமுக வகுப்புகள் நடத்தப்பட்டு மோட்டார் வாகன ஆய்வாளர்களால் தேர்ச்சி பெற்றோர்க்கு அன்றைய தினமே பழகுநர் உரிமம் நேரிடையாக வழங்கப்படுகிறது. இந்நடைமுறை ஜூலை 2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மோட்டார் வாகனப் பழகுநர் ஓட்டுநர்களுக்கு (எல்.எல்.ஆர்.) எனப்படும் ஓட்டுநர் பயிற்சியாளர் சான்று வழங்க திருப்பூர் நகரில் சிறப்புப் பயிற்சி முகாம் நடத்தத் தேவையில்லை.

2011 ஜனவரி 13]

249—

விரைவுப் பேருந்து

வினா எண் 5728—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, பூம்புகார் முதல் சிதம்பரம் வரை மற்றும் நாகப்பட்டினம் - செம்பனார் கோவில் வழி சென்னை செல்லும் அரசு விரைவுப் பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) பூம்புகார் முதல் சிதம்பரம் வரையிலான பகுதியை பூம்புகார்-சீர்காழி மற்றும் சீர்காழி - சிதம்பரம் எனப் பகுதிப் பகுதியாகப் பேருந்துகள் கீழ்க்கண்டவாறு கும்பகோணம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படுகிறது:

தடப்பகுதி	தடநீளம் (கி.மீ.)	இயக்கப்படும் நடைகள் விபரம்		
		கழகம்	தனியார்	கூடுதல்
பூம்புகார்—சீர்காழி	24	42	14	56
சீர்காழி—சிதம்பரம்	20	205	120	325
கூடுதல்	44	247	134	381

நாகப்பட்டினத்திலிருந்து - சென்னைக்கு செம்பனார்கோவில் வழியாக தினசரி 4 பேருந்துகள் 8 நடைகள் வீதம் சென்னை-2, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) எழாது.

[2011 ஜனவரி 13

250—

மினி பேருந்து வசதி

வினா எண் 5892—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதியில், ஆத்தூர், சிலோன் காலனி, காமராஜ் நகர், சந்தனகிரி, இந்திராநகர் வழியாக மினி பேருந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஆத்தூர் தொகுதியில் ஆத்தூர், சிலோன் காலனி, காமராஜ் நகர், சந்தனகிரி, இந்திரா நகர் வழியாக மினி பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

251—

பேருந்து வசதி

வினா எண் 6385—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, பிச்சம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து வாலாந்தூர் வழியாக நாட்டாமங்கலம், மதுரை, பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செக்கானூரணி, கண்ணனூர் வழியாக அம்மன் கோயில்பட்டிக்கு திருமங்கலம், செக்கானூரணி, விக்கிரமங்கலம் வழியாக மேலபெருமாள்பட்டி, சோழவந்தான் பேருந்து நிலையத்திலிருந்து முள்ளிப்பள்ளம், காடுபட்டி, விக்கிரமங்கலம், மேலப்பெருமாள்பட்டிக்குப் பேருந்து வசதிகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிட்டுள்ள அனைத்து தடங்களிலும் உள்ள கிராமங்கள் ஏற்கெனவே பல்வேறு தடப் பேருந்துகள் மூலம் போதிய

2011 ஜனவரி 13]

அளவில் பேருந்து வசதிகள் பெற்றுள்ளதால் இத்தடங்களில் மேலும் பேருந்துகள் இயக்குமளவிற்கு நேரடி பயணிகள் இருக்க வாய்ப்பில்லை. எனவே, இக்கோரிக்கையினை நிறைவு செய்யும் தேவை எழாது.

252—

மினி பஸ் வசதி

வினா எண் 6479—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, எண் 4, புல கிராமத்தில் மினி பஸ் வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது நடைமுறையிலுள்ள பகுதித் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் வருவாய் மாவட்டத்திற்கு 250 சிற்றுந்து அனுமதிச் சீட்டுக்கள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இதில் பொள்ளாச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு 23 அனுமதிச் சீட்டுக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அவை அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டன. தற்போது காலியிடம் ஏதும் இல்லை. எனவே, உடுமலைப்பேட்டை தொகுதி எண் 4 புல கிராமத்திற்கு தற்போது சிற்றுந்து இயக்க இயலாது. கோயம்புத்தூர் மாவட்டத்திற்குச் சிற்றுந்து உரிமங்கள் அதிகரிக்கும்போது, இப்பகுதிக்குச் சிற்றுந்து இயக்குவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

253—

விபத்துத் தடுப்பு

வினா எண் 6511—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை - பொள்ளாச்சி என்.எச். சாலையில் ராகல்பாவி பிரிவு வித்யாசாகர் கலைக் கல்லூரி அருகில் விபத்து ஏற்படுவதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை - பொள்ளாச்சி தேசிய நெடுஞ்சாலை எண் 209 ராகல்பாவி பிரிவு, வித்யாசாகர் கலைக் கல்லூரி அருகில் விபத்து ஏற்படுவதைத் தவிர்க்க காவல் துறையானது போக்குவரத்துத் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை ஆகியோருடன் கூட்டாய்வு மேற்கொண்டு விபத்துத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

254—

அரசு விரைவுப் பேருந்து

வினா எண் 7021—திரு. கோ. ஐய்யப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூரிலிருந்து பழனி, மதுரை, காஞ்சிபுரம் மற்றும் வேளாங்கன்னிக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) மூலம் கடலூர் - காஞ்சிபுரம் இடையே விழுப்புரம், திண்டிவனம், வந்தவாசி வழியாக நாளொன்றுக்கு இரண்டு நடைகள் வீதம் 2-9-2006 முதல் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேலும் கடலூர்-காஞ்சிபுரம் இடையே புதுச்சேரி, திண்டிவனம், வந்தவாசி வழியாகவும், கடலூர் - வேளாங்கன்னி இடையே சிதம்பரம், சீர்காழி மற்றும் காரைக்கால் வழியாகவும் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கடலூரிலிருந்து - மதுரை, பழனி செல்லும் பயணிகள் அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகள் தடம் எண் 686, 847ஈ முறையே பாண்டி-திருவனந்தபுரம், பாண்டி-திருச்செந்தூர் வழி கடலூர் மதுரை ஆகிய பேருந்துகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மதுரையிலிருந்து பழனிக்குப் பேருந்து வசதி அதிகமாக உள்ளது.

2011 ஜனவரி 13]

255—

கணினி முறையில் புதுப்பித்தல்

வினா எண் 7269—திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் 1989-ஆம் ஆண்டிற்கு முன் உரிமம் பெற்றவர்கள் 18 வயது நிரம்பாமலேயே உரிமம் பெற்றதாகத் தெரிவித்து உரிமத்தைக் கணினி முறையில் புதுப்பிக்க மறுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் 1989-ஆம் ஆண்டிற்கு முன் உரிமம் பெற்றவர்கள் 18 வயது நிரம்பாமேலேயே உரிமம் பெற்றதாகத் தெரிவித்து உரிமத்தைக் கணினி முறையில் புதுப்பிக்க மறுக்கப்படுவதில்லை.

(ஆ) எழாது

256—

அவசர விபத்து நிவாரண மையம்

வினா எண் 9293—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர்-உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி (வழி) கோவை தேசிய நெடுஞ்சாலை (NH) 209 தேசிய நெடுஞ்சாலையில் பொள்ளாச்சி, வடக்குப் பாளையம் மற்றும் கோலார்பட்டி ஆகிய இடங்களில் அவசர விபத்து நிவாரண மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது தேசிய நெடுஞ்சாலை எண் 209-இல் அந்தியூரில் 14-7-2004 முதல் அவசர விபத்து சிகிச்சை மையம் இயங்கி வருகிறது. இம்மையம் சுமார் 50 கி.மீ. சுற்றளவில் நடைபெறும் சாலை விபத்துக்களில் சிக்கியவர்களுக்கு முதலுதவி மற்றும் சிகிச்சை அளித்து வருகிறது. அவசர சிகிச்சை மையம் கோரியுள்ள பொள்ளாச்சி, வடக்குப்பாளையம் மற்றும் கோலார்பட்டி ஆகிய பகுதிகள் இம்மையத்தின் எல்லை வரம்பிற்குள் அமைந்துள்ளதால், அப்பகுதிகளில் ஏற்படும் சாலை விபத்துக்களில் சிக்கியவர்களுக்கு தக்க முதலுதவி மற்றும் சிகிச்சை உரிய முறையில் அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, அவசர சிகிச்சை மையம் கோரும் பகுதிகள் தற்போது செயல்பட்டுவரும் அவசர விபத்து சிகிச்சை மையத்திற்கு 7 கி.மீ. அருகில் இருப்பதால் புதியதாக அவசர விபத்து சிகிச்சை மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

257—

செக் டேம்

வினா எண் 9870—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி பாலமதி சத்துவாச்சாரி கப் அண்ட் சாசர் பகுதிக்கு மேல் செக் டேம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

பாலமதி சத்துவாச்சாரி கப் அண்ட் சாசர் பகுதிக்கு மேல் செக் டேம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

258—

சிற்றுந்து

வினா எண் 10166—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) சங்ககிரியிலிருந்து மகுடஞ்சாவடி, சந்தைப்பேட்டை வழியாக எளம்பிள்ளை செல்லும் வகையில் சிற்றுந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையிலுள்ள பகுதி திட்டத்தின்கீழ் பேருந்து செல்லும் வழித் தடத்தில் 4 கிலோ மீட்டர் தூரம் வரையிலும் பேருந்து வசதி பெறாத தடத்தில் 16 கிலோ மீட்டர் தூரம்வரை சிற்றுந்து அனுமதிச் சீட்டு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. வழித் தடம் ஆய்வு செய்யப்பட்டதில் இவ்வழித் தடத்தின் மொத்த தூரம் 25 கிலோ மீட்டர் எனவும், இவ்வழித் தடம் முழுவதும் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ளது எனவும் கண்டறியப்பட்டது. எனவே, இவ்வழித் தடத்தில் சிற்றுந்து இயக்க தற்போதுள்ள பகுதி திட்டத்தின்கீழ் அனுமதிச் சீட்டு உரிமம் வழங்க இயலாது.

259—

இருவழிச் சாலை

வினா எண் 10928—திரு. மு. பரஞ்சோதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீரங்கம் செல்லும் திருவானைக்காவல் பிரதான சாலையை இருவழிச் சாலையாக அரசு ஆவன செய்யுமா?.

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இரு வழிப் பாதையாக மாற்ற இயலாது.

சட்டமன்றம் LEGISLATIVE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

260—

சிற்றுந்துகள் இயக்குதல்

வினா எண் 13185—திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதியிலுள்ள பல கிராமங்களுக்குச் செல்ல ஏதுவாக சிற்றுந்துகள் மீண்டும் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) அரசு ஆணையின்படி காஞ்சிபுரம் வருவாய் மாவட்டத்திற்குள் இயக்க 250 சிற்றுந்துகளுக்கு அனுமதிச் சீட்டு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. திருப்போரூர் தொகுதிக்கு உட்பட்ட வழித் தடங்கள் காஞ்சிபுரம் மாவட்ட எல்லைக்குள் இருக்குமேயானால் இவ்வாணையின்படி அனுமதிச் சீட்டு வழங்கப்படும். திருப்போரூர் தொகுதிக்கு உட்பட்ட வழித் தடங்கள் ஏதேனும் சென்னைப் பெருநகர வளர்ச்சிப் பகுதிக்குள் இருக்குமேயானால், அத்தகைய வழித் தடங்களுக்குச் சிற்றுந்து அனுமதிச் சீட்டு வழங்க இயலாது. எனவே, திருப்போரூர் தொகுதியில் சிற்றுந்து இயக்க தேவைப்படும் வழித் தடங்களில் சென்னைப் பெருநகர வளர்ச்சிப் பகுதியின் எல்லை தவிர்த்து, காஞ்சிபுரம் மாவட்ட எல்லைக்குள் அனுமதி வழங்க ஏற்கெனவே அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) தனியார் உரிமையாளர்கள் எவரேனும் சிற்றுந்து அனுமதிச் சீட்டு வேண்டி விண்ணப்பிக்கும் நேர்வில், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரால் தற்போது நடப்பிலுள்ள மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு விண்ணப்பம் பரிசீலனை செய்யப்படும்.

2011 ஜனவரி 13]

261—

சுட்டுக் குறி

வினா எண் 13186—திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி—புலிப்பாக்கம் தேசிய நெடுஞ்சாலையின் வளைவு பகுதியில் ஒரு போக்குவரத்து இயக்குச் சுட்டுக் குறி பொருத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் தொகுதி-புலிப்பாக்கம், தேசிய நெடுஞ்சாலை வளைவுப் பகுதியில் சுட்டுக் குறி பொருத்தப்படுவது குறித்து தேசிய நெடுஞ்சாலைத் துறையினரால் ஆய்வு மேற்கொண்டு காவல் துறையினரைக் கலந்தாலோசித்து அந்த இடத்தில் சுட்டுக் குறி பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

262—

விரைவுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 13699—திரு. ஜா. ஜான் ஜோசப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, கொல்லங்கோட்டிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கொல்லங்கோடு பயணிகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், நாகர்கோவில் மண்டலம் இயக்கும்

பேருந்து வசதியைப் பயன்படுத்தி மார்த்தாண்டம் அல்லது நாகர்கோவில் வந்து அங்கிருந்து இயக்கப்படும் கீழ்க்காணும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி சென்னை சென்றுவர ஏதுவாக உள்ளது:

தடம்	செல்லுமிடம்	மொத்தம் பேருந்துகள்	மொத்தம் நடைகள்
284	மார்த்தாண்டம்-சென்னை (வழி) நாகர்கோவில்	5	5
198	நாகர்கோவில்-சென்னை	9	9

263—

சுட்டுக் குறி

வினா எண் 14575—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் பேருந்து நிலையம் அருகில் போக்குவரத்து இயக்கச் சுட்டுக் குறி (Signal Light) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் பேருந்து நிலையம் அருகில் போக்குவரத்து இயக்கச் சுட்டுக் குறி (Signal Light) விரைவில் அமைக்கப்படும்.

264—

தார்ச்-சாலை

வினா எண் 14652—திரு. கே.வீ. இராமநாதன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) பவானி தொகுதி சலங்கபாளையம் கிராமம் தர்மபுரியில் பவானி கவுந்தப்பாடி சாலையிலிருந்து எஸ்.எம்.ஐ.பி. கசிவு நீர் வாய்க்காலை ஒட்டி ஈரோடு-சக்திரோடுவரை அமைந்துள்ள சாலையைப் புதிய தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பவானி தொகுதி, சலங்கபாளையம் கிராமம் தர்மபுரியில் பவானி-கவுந்தப்பாடி சாலையிலிருந்து எஸ்.எம்.ஐ.பி. கசிவு நீர் வாய்க்கால் ஒட்டியுள்ள சாலையானது வாய்க்காலில் மேற்கொள்ளவேண்டிய ஆய்வுப் பணிகளுக்காகத் துறையின் வாகனங்கள் மட்டுமே செல்லத்தக்க வகையில் அமைக்கப்பட்ட பாதையாகும். இப்பாதையினைத் தார்ச் சாலையாக மாற்றி பொதுப் பயன்பாட்டிற்குப் பயன்படும் வகையில் வழங்க இயலாது.

265—

சிற்றுந்து வசதி

வினா எண் 14669—திரு. கே.வி. இராமநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி அட்டவணைப்புதூர் கிராமம் பூனாச்சியில் இருந்து குருவரெட்டியூருக்கு சிற்றுந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பவானி தொகுதி அட்டவணைப்புதூர் கிராமம் பூனாச்சியில் இருந்து குருவரெட்டியூருக்குச் சிற்றுந்து வசதி செய்து தரும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

266—

இரவுப் பேருந்து

வினா எண் 16766—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் பேருந்து நிலையத்திலிருந்து இரயில் சந்திப்பு, முத்துநாயக்கன்பட்டி வழியாக ஓமலூர் வரை இரவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல நகரப் பேருந்துகள் தடம் எண் 69, 86, 106, S8, S8A ஆகிய 5 நகரப் பேருந்துகள், சேலம்-ஓமலூர் (வழி) இரயில் சந்திப்பு, முத்துநாயக்கன்பட்டி வரையிலும் மற்றும் நகரப் பேருந்துகள் தடம் எண் 46, S8 சேலத்திலிருந்து இரயில் சந்திப்பு, முத்துநாயக்கன்பட்டி வரையிலும் தினசரி மொத்தம் 56 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

267—

பேருந்து நீட்டித்து இயக்குதல்

வினா எண் 16767—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, வெள்ளாளப்பட்டி ஊராட்சி கருப்பூர் வரை இயக்கப்படும் மகளிர் பேருந்து சந்தைப்பேட்டை வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம் மூலமாக நகரப்பேருந்து தடம் எண் எஸ். 9, சேலத்திலிருந்து கருப்பூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி அருகே உள்ள லோக்கோலைன் வரை சென்று அங்கிருந்து காலை 8.30 மணிக்கு புறப்பட்டு ஜங்சன் வழியாக சேலம் வரை மகளிர் பேருந்தாக இயக்கப்படுகின்றது. இப்பேருந்தினை வினாவில் தெரிவித்துள்ள வெள்ளாளப்பட்டி சந்தைப்பேட்டை வரை (3.6 கி.மீ) நீட்டிக்கும்போது காலநேரம் மாறுபட்டு தற்போது பயனடைந்து வரும் கல்லூரி மாணவர்கள் பாதிப்படையக்கூடும்.

268—

நகரப் பேருந்து

வினா எண் 16771—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம் மூங்கில்பாடி ஊராட்சிக்கு பழைய பேருந்து நிலையம் முதல் பரவக்காடு, சேனைகாடு, ஊத்துக்குளி வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல நகரப் பேருந்து தடம் எண் 101 சேலத்திலிருந்து கருப்பூர், கட்டாஞ்சாவடி, மூங்கில்பாடி, தேக்கம்பட்டு வழியாக செங்காடு வரை தினசரி 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தட்டாஞ்சாவடி பிரிவு சாலையில் இருந்து பரவங்காடு, சேனைக்கவுண்டனூர், ஊத்துக்குளி வழியாக செங்கரடு கிராஸ் ரோடு வரை கனரக வாகனங்கள் செல்ல இயலாத நிலையில் சாலை அமைந்திருப்பதால், அப்பகுதி மக்களின் போக்குவரத்து

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

தேவைக்கு தனியார் மினி பேருந்துகள் இரண்டின் மூலம் தினசரி 20 நடைகள் இயக்கப்படுகின்றது. (எனவே கோரப்பட்ட வழித்தடத்தில் தற்போது நகரப் பேருந்து இயக்கத் தேவை எழவில்லை.)

269—

போக்குவரத்துப் பணிமனை

வினா எண் 16775—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூரில் டான்சிக்கு சொந்தமான நிலத்தில் போக்குவரத்து பணிமனை அமைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூரில் டான்சிக்கு சொந்தமான நிலம் போக்குவரத்துக் கழகத்திற்கு கொடுக்கப்படும் பட்சத்தில் பணிமனை அமைப்பது குறித்து பரிசீலித்து முடிவெடுக்கப்படும்.

270—

போக்குவரத்துப் பணிமனை

வினா எண் 16969—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாரில் போக்குவரத்துப் பணிமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள ஆழியாரிலிருந்து 24 கி.மீ. தொலைவில் உள்ள பொள்ளாச்சி மற்றும் 40 கி.மீ.

2011 ஜனவரி 13]

தொலைவில் உள்ள வால்பாறையில் கோயம்புத்தூர் போக்குவரத்துக் கழகம் சார்பில் நான்கு பணிமனைகள் அமைக்கப்பட்டு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, ஆழியாரில் போக்குவரத்து பணிமனை ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

271—

விடுகள் கட்டித் தருதல்

வினா எண் 16975—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் அரசு போக்குவரத்துப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை கிளையில் பணிபுரியும் பெரும்பாலான தொழிலாளர்கள் வீட்டு வசதி ஏற்படுத்தி தர கோரும் பட்சத்தில், கோயம்புத்தூர் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட சேரன் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் மூலம் வீட்டு வசதி ஏற்படுத்தி தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

272—

மருத்துவ வசதி

வினா எண் 16977—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேருந்துகளில் முதலுதவிக்கு தேவையான மருத்துவ வசதியைக் கட்டாயமாகச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முதலுதவிக்குத் தேவையான மருத்துவ வசதியினை கட்டாயமாகச் செய்து தரப்பட வேண்டும் என்ற மோட்டார் வாகன விதிகளுக்கேற்ப, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக அனைத்து பேருந்துகளிலும் மருந்துகள் அடங்கிய முதலுதவிப் பெட்டி பொருத்தப்பட்டு பராமரிக்கும் முறை நடைமுறையில் உள்ளது.

273—

கூடுதல் பேருந்துகள்

வினா எண் 16991—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப்பகுதியில் கூடுதலாக பத்து பேருந்துகள் புதியதாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திலிருந்து வால்பாறை மலைப்பகுதிக்கு ஜனவரி 2007-ஆம் மாதம் முதல் 6 புதிய பேருந்துகள் வழங்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது.

274—

விபத்துத் தடுத்தல்

வினா எண் 17186—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) தமிழ்நாட்டில் வாகன விபத்தைத் தடுக்க அரசிடம் புதிய திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் வாகன விபத்தினைத் தடுக்கவும், சாலைப் பாதுகாப்பினை மேம்படுத்தவும் அரசு சாலைப் பாதுகாப்பு கொள்கையினை வெளியிட்டுள்ளது. மாவட்டந்தோறும் சாலை பாதுகாப்புக் குழுக்கள் மாவட்ட ஆட்சியர் தலைமையிலும், மாநில அளவில் போக்குவரத்துத் துறை அமைச்சர் தலைமையில் மாநில சாலை பாதுகாப்பு குழு கூடி விவாதித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

275—

போக்குவரத்து அலுவலகம்

வினா எண் **17221—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்திலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து ஓமலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் அலுவலகத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்திலுள்ள, ஓமலூரில் புதிய போக்குவரத்து பகுதி அலுவலகம் ஏற்படுத்த, ஏனையவற்றுடன் அரசாணை நிலை எண் 878 உள் (போக்குவரத்து-7) துறை, நாள் 12-6-2007-ல் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

[2011 ஜனவரி 13

276—

இரவுப் பேருந்து

வினா எண் 17797—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரிலிருந்து நங்கவள்ளி வழி சேலத்திற்கு இரவு பத்து மணிக்கு மேல் நகரப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர்-சேலம் (வழி) நங்கவள்ளி தட நீளம் 52 கி.மீ. ஆகும். எனவே, இவ்வழித் தடத்தில் நகரப் பேருந்துகள் இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

277—

பேருந்து நீட்டித்து இயக்குதல்

வினா எண் 17826—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரிலிருந்து சம்பந்தம்பாளையம் வரை இயக்கப்படும் 3இ, 3டி எண்ணுள்ள பேருந்துகளை காங்கேயம்பாளையம் வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருப்பூரிலிருந்து சம்பந்தம்பாளையம் வரை இயக்கப்படும் 3இ, 3டி பேருந்துகளை, காங்கேயம்பாளையம் வரை நீட்டித்து இயக்கிட

2011 ஜனவரி 13]

ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விரைவில் இயக்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

278—

பேருந்து இயக்குதல்

வினா எண் 17827—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அவினாசிபாளையம் வழியாக திருப்பூர்-திருச்செந்தூர் வரை இயக்கப்படும் பேருந்தினை காங்கேயம் வழியாக இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருப்பூரில் இரவு 8-35 மணிக்கும், திருச்செந்தூரில் 7-25 மணிக்கும் புறப்படும் திருப்பூர்-திருச்செந்தூர் வழித்தடப் பேருந்து காங்கேயம் வழியாகவும், திருப்பூரில் காலை 7-50 மணிக்கும், திருச்செந்தூரில் காலை 8-00 மணிக்கும் புறப்படும் திருப்பூர்-திருச்செந்தூர் வழித்தடப் பேருந்து அவினாசிபாளையம் வழியாகவும் இயக்கப்படுகிறது. மேலும் காங்கேயம் வழியாகவும் திருச்செந்தூருக்கு பேருந்து வசதி உள்ளது. அவினாசிபாளையம் வழியாக இயக்கப்படுவதை காங்கேயம் வழியே வழித்தடம் மாற்றி இயக்கப்பட்டால் தற்பொழுது பயன்பெறும் பகுதியினருக்கு பாதிப்பு ஏற்படும்.

279—

பேருந்தை மீண்டும் இயக்குதல்

வினா எண் 17830—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டிலிருந்து வெள்ளோடு அனுமன்பள்ளி, சென்னிபாளி, பாளிக்காடு, மயிலாடி புதுப்பாளையம் சென்குமார்காலனி வழியாக சென்னிமலைக்கு இயக்கி நிறுத்தப்பட்ட 11-பி பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்சமயம் கோரிக்கை வழியே பேருந்து இயக்க சாத்திய கூறுகள் இல்லாத நிலை உள்ளது.

280—

புதிய வழித்தடம்

வினா எண் 17832—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயத்திலிருந்து குன்னத்தூருக்கு புதிதாக வழித்தடம் அமைத்து பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம்-குன்னத்தூர் புதிய வழித்தடம் இயக்க திட்டம் எதுவும் இல்லை.

281—

புதிய வழித்தடங்கள்

வினா எண் 17884—திரு. ஞா. ஜான் ஜோசப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தொகுதியில் பத்து புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

விளவங்கோடு சட்டமன்ற தொகுதியில் சாலை வசதியுள்ள அனைத்து கிராமங்களுக்கும் போதுமான பேருந்து வசதிகள் உள்ளன.

2011 ஜனவரி 13]

இருப்பினும் பேருந்து இயக்கத் தேவையான பத்து புதிய வழித்தடங்கள் எவையெவை என குறிப்பிட்டு தெரிவிக்கப்படும் பட்சத்தில், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

282—

எரிவாயுமூலம் பேருந்து இயக்குதல்

வினா எண் 17886—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் இயக்கப்படும் பேருந்துகளை எரிவாயு மூலம் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அமெரிக்க நாட்டின் எரி சக்தி துறையை சார்ந்த தேசிய எரி சக்தி தொழில் நுட்ப ஆய்வகம் இந்தியாவில் உள்ள ஐக்கிய அமெரிக்காவின் பன்னாட்டு வளர்ச்சிக்கான ஏஜென்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, அமெரிக்காவில் டெக்சாஸில் உள்ள "தீ எமிசன்ஸ் சொல்யூசன்ஸ் இன்கார்பேரேட்டு" என்னும் நிறுவனத்தை நியமித்துள்ளது. அதன்படி இந்தியாவில் டீசல் பேருந்து இயந்திரங்களை திரவ பெட்ரோலிய வாயுவில் இயங்கும் இயந்திரங்களாக மாற்றம் செய்து சாலையில் சோதனை செய்ய இருப்பதற்கான திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

283—

பள்ளிக்கு பேருந்து நிறுத்தம்

வினா எண் 17888—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பேருந்து நிறுத்தம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஓமலூர் அரசு மேல்நிலைப் பள்ளி, காமாண்டப்பட்டி பேருந்து நிறுத்தத்திலிருந்து 0.4 கி.மீ தூரத்தில் உள்ளது. தற்போது ஓமலூரில் நடைபெற்று வரும் இரயில்வே மேம்பால வேலை காரணமாக, மேட்டூர் வழித்தட நகரப் பேருந்துகள் காமாண்டப்பட்டி வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகள் காமாண்டப்பட்டி அருகே நின்று மாணவர்களை ஏற்றியும், இறக்கியும் செல்கின்றன. எனவே, தற்போது ஓமலூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பேருந்து நிறுத்தம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

284—

பேருந்துகளை மீண்டும் இயக்குதல்

வினா எண் 17893—திரு. ல. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி அரசுப் பணிமனையிலிருந்து இயங்கி நிறுத்தப்பட்ட தடம் எண் 16, தடம் எண் 19 ஆகிய பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) மற்றும் *(ஆ)* இராமேஸ்வரத்திலிருந்து இராமநாதபுரத்திற்கும், இராமநாதபுரத்திலிருந்து திருப்புல்லாணிக்கும், உத்திரகோசமங்கைக்கும் பேருந்துகள் பகுதி, பகுதியாக அதிக அளவில் இயக்கப்பட்டு வருகின்றன.

350—

தொழிற்சாலை

வினா எண் 26834—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் நெல்லிக்காய் பதப்படுத்தும் தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மை துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதியில் நெல்லிக்காய் பதப்படுத்தும் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

351—

சிறப்புப் பேருந்துகள்

வினா எண் 27229—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) சூலூர் பகுதியிலிருந்து கோயம்புத்தூர், உக்கடம், காந்திபுரம் பகுதிக்கு காலை, மாலை நேரங்களில் கூட்ட நெரிசலைத் தவிர்க்க சிறப்புப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது சூலூர் பகுதியிலிருந்து கோவை, அரசு போக்குவரத்துக் கழகம் 21 நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 270 நடைகளும், 6 தனியார் நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 100 நடைகளும், சே ைவை உக்கடம், காந்திபுரம் பகுதிகளுக்கு இயக்கப்பட்டு வருன்றன. இதுதவிர ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியில் சூலூர் வழியாக போதிய அளவு புறநகர் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய பயணிகள் அடர்விற்கு இதுவே போதுமானதாகும்.

352—

புதிய விரைவுப் பேருந்து

வினா எண் 27232—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையிலிருந்து சூலூர், பல்லடம், திருப்பூர் வழியாக சென்னைக்கு இரவு நேரத்தில் அரசு விரைவுப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், மூலமாக தடம் எண் 460-ல் கோவை-சென்னை-கோவை என அவினாசி, பெருந்துறை, ஈரோடு, சேலம்

[2011 ஜனவரி 13

வழியாக தினசரி 14 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும் திருப்பூர்-சென்னை-திருப்பூர் என 15-4-2007 முதல் புதிய வழித்தடம் 470-இல் இரண்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றது. இதைத் தவிர கோவை-சென்னை (வழி) சூலூர், பல்லடம், திருப்பூர் புதிய பேருந்து இயக்க நடப்பு நிதியாண்டில் (2007-2008) நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

353—

புதிய பேருந்து வசதி

வினா எண் 27470—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, முசிறியிலிருந்து லாலாபேட்டை, பிள்ளைபாளையம், பழைய ஜெயங்கொண்டம், பஞ்சபட்டி, மைலம்பட்டி வழியாக தரகம்பட்டிக்கு புதிதாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி முசிறி - தரகம்பட்டி (வழி) லாலாபேட்டை, பிள்ளைபாளையம், பழைய ஜெயங்கொண்டம், பஞ்சப்பட்டி, மைலம்பட்டி வழித்தட நீளம் 60.2 கி.மீ. ஆகும். இவ்வழித்தடம் சுற்று வழித்தடம் ஆகும். எனவே இவ்வழித்தடத்தில் நேரடி பயணிகள் பயணம் செய்ய வாய்ப்பு இல்லை. மேலும் கோரிக்கையின் வழித்தடம் முழுவதும் பகுதி பகுதியாக நன்கு பேருந்து வசதி பெற்றுள்ளது.

354—

புதிய பேருந்து வசதி

வினா எண் 27471—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி, கடவூரிலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வழியாக கரூருக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கரூர்-கடவூர் (வழி) மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வழித்தடத்தின் மொத்த நீளம் 65.0 கி.மீ. ஆகும். தற்பொழுது கரூர்-கடவூர் வழித்தடத்தில் இரு தனியார்துறை வழித்தட பேருந்துகள்மூலம் தினசரி 10 நடைகள் இயக்கப்படுகிறது. மேலும், கோரிக்கையின் வழித்தடம் முழுவதும் தற்பொழுது நேரிடையாகவும், பகுதி பகுதியாகவும் போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது.

355—

கூடுதல் பேருந்து

வினா எண் 27472—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, போத்தராவுத்தன்பட்டிக்கு பஞ்சப்பட்டியிலிருந்து கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, போத்தாராவுத்தன்பட்டி கிராமம், பஞ்சப்பட்டியிலிருந்து 4.6 கி.மீ. தொலைவில் கிழக்கே மெயின்சாலையில் அமைந்துள்ளது. இவ்விரண்டு ஊர்களை இணைக்கும் வகையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் திருச்சி மண்டலம் மூலமாக 6 புறநகர்ப் பேருந்துகள் 18 நடைகளிலும், தனியார் புறநகர் பேருந்துகள்

[2011 ஜனவரி 13

3-ன் மூலமாக தினசரி 18 நடைகளிலும், நகரப் பேருந்துகள் 4-ன் மூலமாக தினசரி 18 நடைகளிலுமாக பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேற்கூறியவாறு பஞ்சப்பட்டி-போத்தராவுத்தன்பட்டி வரை உள்ள 4.6 கி.மீ. வழித்தடம் தற்போது போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது.

356—

பேருந்து வழித்தடம் நீட்டித்தல்

வினா எண் 27474—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, வரவணை ஊராட்சி, கரூரிலிருந்து காணியாளம்பட்டி வரை இயக்கப்படும் நகரப் பேருந்தை பாலப்பட்டி வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, வரவணை ஊராட்சி, கரூர் காணியாளம்பட்டி (வழி) வெள்ளியணை, ஜெகதாபி வழித்தடத்தின் நீளம் 30.0 கி.மீ. ஆகும். தட நீட்டல் கோரும் காணியாளம்பட்டி-பாலப்பட்டி வழித்தட நீளம் 2.7 கி.மீ. ஆகும். இதில் பாலப்பட்டி பிரிவிலிருந்து பாலப்பட்டி வரை உள்ள 0.7 கி.மீ. சாலை மண்சாலையாக பேருந்து இயக்க தகுதியற்ற நிலையில் உள்ளதால், இந்நகரப் பேருந்தினை பாலப்பட்டி வரை தட நீட்டல் செய்து இயக்க இயலாத நிலை உள்ளது.

357—

பேருந்து வசதி

வினா எண் 27778—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, துறையூரிலிருந்து செட்டிகுளம், பாடாலூர், ஆதனூர்குன்னம் வழியாக அரியலூர் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி மண்டலம் மூலம் துறையூர்-தஞ்சாவூர் (வழி) பெரம்பலூர், அரியலூர் வழித்தடத்தில் 6 நடைகளும், ஜெயங்கொண்டம்-துறையூர் (வழி) அரியலூர், பெரம்பலூர் வழித்தடத்தில் 4 நடைகளும் இயக்கப்படுகிறது. கோரிக்கையின் வழித்தடம் சுற்று வழித்தடம் என்பதால் நேரடி பயணிகள் பயணம் செய்ய வாய்ப்பில்லை. துறையூர்-பெரம்பலூர் மற்றும் பெரம்பலூர்-அரியலூர் வழித்தடங்களில் ஒவ்வொரு 15 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் இயக்கப்படுகிறது. குன்னம்-அரியலூர் வழித்தடத்தில் ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியில் ஒரு பேருந்து வீதம் இயக்கப்பட்டு கோரிக்கையின் வழித்தடம் பகுதிப் பகுதியாக பேருந்து வசதி பெற்றுள்ளது.

358—

நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 27779—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூரிலிருந்து வரகூர் தொகுதி, மருதையான்கோவில், புதுவேட்டிக்குடி வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூரிலிருந்து வரகூர் தொகுதி, மருதையான்கோவில் புதுவேட்டக்குடி வழித்தடமான அரியலூர் - அகரம்சீகூர் (வழி) மருதையான்கோவில், புதுவேட்டக்குடி வழித்தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார்துறை பேருந்துகள்மூலம் 72 நடைகளாக 20 நிமிடத்திற்கு

ஒரு பேருந்து வீதம் இயக்கப்படுகிறது. மேலும், இப்பகுதிகளில் புதிய வழித்தட நகரப் பேருந்துகள் இயக்கும் போது அரியலூர்-அகரம்சிகூர் வழித்தடத்தில் நகரப் பேருந்துகள் இயக்க முன்னுரிமை அளிக்கப்படும்.

359—

புறநகர் பேருந்து

வினா எண் 27780—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூரிலிருந்து வரகூர் தொகுதி குன்னம், மருதையான்கோவில் வழியாக அகரம்சிகூர் வரை புறநகர்ப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திருச்சி மண்டலத்திலிருந்து பெரம்பலூர்-அகரம்சிகூர் (வழி) இலப்பைப்குடிகாடு வழியாக 20 நடைகளும், பெரம்பலூர்-அகரம்சிகூர் (வழி) வேப்பூர் வயலப்பாடி வழியாக 6 நடைகளுமாக மொத்தம் 26 நடைகள் இயக்கப்பட்டுவருகின்றன. கோரிக்கையின் வழித்தடம் சுற்று வழித்தடம் ஆகும். இந்த வழித்தடத்தில் நேரடி பயணிகளுக்கு பயணக் கட்டணம், பயண நேரம் அதிகரிப்பதால் நேரடி பயணிகள் பயணிக்க வாய்ப்பில்லை. இருப்பினும் பெரம்பலூர்- அரியலூர் வழித்தடத்தில் உள்ள மருதையான்கோவில் வரை ஒவ்வொரு 15 நிமிடத்திற்கும் ஒரு பேருந்து வீதமும், அரியலூரில் இருந்து மருதையான் கோவில், துங்கபுரம் வழியாக அகரம்சிகூர் மற்றும் அகரம் சிகூர் வழியாக திட்டக்குடி, தொழுதூர் ஆகிய ஊர்களுக்கு அரசு மற்றும் தனியார்துறை பேருந்துகள்மூலம் 72 நடைகளும் 20 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் இயக்கப்படுகிறது. எனவே, கோரிக்கையின் வழித்தடம் மேற்கண்டுள்ளவாறு பகுதிப், பகுதியாக தற்போது போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது.

2011 ஜனவரி 13]

360—

புதிய வழித்தடத்தில் பேருந்து

வினா எண் 27782—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வரகூர் தொகுதி, குன்னம், பெருமத்தூர் வழியாக இலப்பைகுடிகாட்டிற்கு அரியலூரிலிருந்து புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி மண்டலம் மற்றும் தனியார்துறை பேருந்துகள்மூலம் அரியலூர்-இலப்பைக்குடிகாடு (வழி) அகரம்சிகூர் வழித்தடத்தில் தினம் 24 நடைகள் இயக்கப்படுகிறது. கோரிக்கையின் வழித்தடம் முழுவதும் கீழ்க்கண்டுள்ளவாறு பகுதிப் பகுதியாக போதுமான அரசுப் பேருந்து வசதி பெற்றுள்ளது.

வ. எண்	வழித்தடம்	தற்போது இயங்கும்	
		பேருந்துகள்	நடைகள்
1	அரியலூர் - தொழுதூர் (வழி) குன்னம், முருக்கன்குடி, பெருமத்தூர்	1	4
2	பெரம்பலூர் - பெருமத்தூர் (வழி) குன்னம்	2	4
3	தொழுதூர் - அரியலூர் (வழி) இலப்பைக்குடிகாடு, வடக்கலூர் குன்னம்.	1	1
4	பெரம்பலூர் - அகரம்சிகூர் (வழி) இலப்பைக்குடிகாடு, பென்னகோணம்	1	6
5	பெரம்பலூர் - கிழுமத்தூர் (வழி) இலப்பைக்குடிகாடு, பென்னகோணம்	1	4

வ. எண்.	வழித்தடம்	தற்போது இயங்கும்	
		பேருந்துகள்	நடைகள்
6	பெரம்பலூர் - வடக்கலூர் (வழி) இலப்பைக்குடிகாடு, பென்னகோணம்	1	2
7	பெரம்பலூர் - கிளியூர் (வழி) பெருமத்தூர்	1	12

361—

புதிய விரைவுப் பேருந்து

வினா எண் 27783—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, குன்னத்திலிருந்து சென்னைக்கு புதிய விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் லிமிடெட், மூலமாக வரகூர் தொகுதி குன்னம் வழியாக சென்னைக்கு தினசரி தடம் எண் 323 எம் (அதி நவீன சொகுசு மிதவைப் பேருந்து) ஒன்றும், தடம் எண் 323டி (அதி நவீன சொகுசு மிதவைப் பேருந்து) இரண்டும் முறையே திருமழப்பாடி-சென்னை மற்றும் திருவையாறு-சென்னை வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் குன்னம்-சென்னை தடத்தில் நேரடி பேருந்து இயக்க சாத்தியமில்லை.

362—

புதிய அரசுப் பேருந்து

வினா எண் 27784—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், குன்னம், மருதையான்கோவில் வழியாக துங்கபுரம் வரை புதியதாக அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், குன்னம்—துங்கபுரம் (வழி) மருதையான்கோவில் வழித்தட நீளம் 23.0 கி.மீ. ஆகும். இந்த வழித்தடம் பகுதிப், பகுதியாக நன்கு பேருந்து வசதி பெற்றுள்ளது. குன்னம்-மருதையான்கோவில் பகுதி 8.0 கி.மீ. தூரம். இவை பெரம்பலூர்-அரியலூர் பிரதான சாலையில் உள்ளது. இவ்வழித்தடத்தில் ஒவ்வொரு 15 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் இயக்கப்படுகிறது. மருதையான்கோவில்-துங்கபுரம் பகுதி 15.0 கி.மீ. தூரம் உள்ளது. இவை அரியலூர்-அகரம்சீகூர், திட்டக்குடி, தொழுதூர் பிரதான சாலையில் உள்ளது. இந்த வழித்தடத்தில் அரசு மற்றும் தனியார் துறை பேருந்துகள்மூலம் 72 நடைகள் இயக்கப்பட்டு, இவ்வழித்தடத்தில் 20 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் இயக்கப்படுகிறது.

363—

பணிமனை

வினா எண் 27785—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரியில் போக்குவரத்து கழகத்தின் மூன்றாவது பணிமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி பணிமனையிலிருந்து 32 கி.மீ. தொலைவில் பாலக்கோடு பணிமனை அமைந்துள்ளது. மேலும்,

[2011 ஜனவரி 13

கிருஷ்ணகிரியிலிருந்து அருகருகே 6 பணிமனைகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், மூலம் அமைக்கப்பட்டுள்ளதாலும், நிதிநெருக்கடியின் காரணமாகவும், கிருஷ்ணகிரியில் மூன்றாவது பணிமனையை அமைத்திட வழிவகை இல்லை.

364—

கூடுதல் பேருந்து வசதி

வினா எண் 27953—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேட்டூரிலிருந்து குஞ்சாண்டியூர், மல்லப்பனூர், விருதாசம்பட்டி, பழக்காரனூர் வழியாக வனவாசிக்கு காலையிலும் மாலையிலும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூரிலிருந்து மல்லப்பனூர், விருதாசம்பட்டி, பழக்காரனூர் வழியாக வனவாசி ஒரு சுற்று வழித்தடமாகும். இதனால் நேரடி பயணிகள் பாதிப்படைவார்கள் இருப்பினும், கோரப்பட்டுள்ள வழித்தடத்தில் நகரப் பேருந்துகள் தடம் எண் 16, 11ஈ மற்றும் 11 மேட்டூர்-குட்டப்பட்டி 4 ரோடு வழியாகவும், நகரப் பேருந்துகள் தடம் எண் 38, 10, 21 குட்டப்பட்டி 4 ரோடு மற்றும் புறநகர் பேருந்து ஒன்று வனவாசி வழியாகவும் பகுதி வாரியாக பேருந்து வசதி உள்ளது.

365—

புதிய பேருந்து இயக்குதல்

வினா எண் 27964—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், நங்கவள்ளியிலிருந்து கணக்குபட்டி, இருசாகவுண்டனூர், குட்டப்பட்டி வழியாக மேச்சேரிக்கும் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், நங்கவள்ளியிலிருந்து மேச்சேரி (வழி) கணக்குப்பட்டி, இருசாகவுண்டனூர் எட்டப்பட்டி வழித்தடத்தில் கணக்குப்பட்டி, பிரிவு சாலையிலிருந்து இருசாக்கவுண்டனூர் வரையிலான 2.0 கி.மீ. சாலையில், 1.0 கி.மீ. சாலை பேருந்து இயக்க தகுதியற்ற நிலையிலும் மற்றும் இருசாக்கவுண்டனூர் முதல் குட்டப்பட்டி பிரிவு வரையிலான் 1.5 கி.மீ. சாலை இரு சக்கர வாகனங்கள் மட்டுமே செல்லக்கூடிய சாலையாகவும் இருப்பதால் மேற்கண்ட வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்கிட வழிவகை இல்லை.

366—

பேருந்து இயக்குதல்

வினா எண் 27955—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், காமிநாயக்கன்பட்டிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், சேலம் மண்டல நகரப் பேருந்து தடம் எண் ஒ8 மூலமாக ஓமலூரிலிருந்து காமிநாயக்கன்பட்டி வரை தினசரி 2 நடைகள் இயக்கப்பட்டு

வருகின்றது. இது தவிர மினிப் பேருந்து ஒன்றின்மூலம் மேச்சேரியிலிருந்து காமிநாயக்கன்பட்டி வழியாக ஆண்டிக்கரை வரை தினசரி 16 நடைகள் இயங்கி வருகின்றது.

367—

புதிய பேருந்துகள்

வினா எண் 28009—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்திலிருந்து பெங்களூரு, கன்னியாகுமரி ஆகிய நகரங்களுக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் -பெங்களூரு தடம் தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், இத்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து, அடுத்து நடக்கும் இரு மாநில ஒப்பந்த பேச்சுவார்த்தையின்போது பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், நடப்பு நிதி ஆண்டில் (2007-2008) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு புதிய பேருந்துகள் பெறப்படும்போது காஞ்சிபுரம்-கன்னியாகுமரி தடத்தில் பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

368—

பேருந்து வசதி

வினா எண் 28041—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லிலிருந்து ராசிபுரம் வழியாக சென்னைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தடம் எண் *426* மற்றும் *423*-ன் மூலம் நாமக்கல்லிலிருந்தும், ராசிபுரத்திலிருந்தும் சென்னைக்கு மொத்தம் *5* பேருந்துகள் *9* நடைகளில் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பேருந்து வசதிகளை நாமக்கல்-சென்னை பயணிகளும் மற்றும் ராசிபுரம்—சென்னை உள்ளிட்ட பயணிகளும் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக உள்ளது.

369—

பேருந்து மீண்டும் இயக்குதல்

வினா எண் **28046—திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியிலிருந்து சென்னைக்கு இயக்கி நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேற்படி பேருந்து போதிய பயன்பாடு இல்லாததால் நிறுத்தப்பட்டு விட்டது. எனினும் தற்சமயம் பயன்பாடு குறித்து ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

370—

வேளாண் பட்டயப் படிப்பு

வினா எண் **28051—திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதியிலுள்ள, வம்பன் ஆராய்ச்சி மையத்தில் வேளாண்மைத் துறை பட்டயப் படிப்பு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆலங்குடி தொகுதியிலுள்ள வம்பன் ஆராய்ச்சி மையத்தில் வேளாண் துறை பட்டயப் படிப்பு துவங்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

371—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

வினா எண் 28416—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்திலுள்ள, ஓமலூரில் புதிய போக்குவரத்து அலுவலகம் ஏற்படுத்த ஏனையவற்றுடன் அரசாணை நிலை எண் 876 உள் (போக்குவரத்து-7) துறை, நாள் 12-06-2007-ல் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

372—

சிற்றுந்து வசதி

வினா எண் 28461—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) காஞ்சிபுரத்திலிருந்து பிள்ளையார்பாளையம் வழியாக புத்தேரி கிராமத்திற்கு சிற்றுந்து மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்திலிருந்து பிள்ளையார்பாளையம் வழியாக புத்தேரி கிராமத்திற்கு ஏற்கெனவே சிற்றுந்து வசதி செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் பேருந்து நிலையம் முதல் வில்லியமேடு வரை (வழி) பிள்ளையார்பாளையம் மற்றும் புத்தேரி என்னும் தடத்தில் 1-4-98 முதல் ஒரு சிற்றுந்து இயக்கப்பட்டு வருகிறது.

373—

பேருந்து வசதி

வினா எண் 28746—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், ஒட்டேரி கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

வண்டலூர் உயிரியல் பூங்கா நிறுத்தத்திற்கு அருகில் அமைந்துள்ள ஒட்டேரி பகுதி வரை கீழ்க்கண்டவாறு மாநகரப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

[2011 ஜனவரி 13

வ எண்.	தடம் எண்.	புறப்படுமிடம்	சேருமிடம்	பேருந்துகளின் எண்ணிக்கை
1.	ஏ18	உயர் நீதிமன்றம்	வண்டலூர் உயிரியல் பூங்கா	11
2.	70ஏ	ஆவடி	வண்டலூர் உயிரியல் பூங்கா	15
3.	பி.பி.66	பூவிருந்தவல்லி	வண்டலூர் உயிரியல் பூங்கா	16
4.	பி18	கொருக்குபேட்டை	வண்டலூர் உயிரியல் பூங்கா	11
5.	170ஏ	மாதவரம் கிராமம்	வண்டலூர் உயிரியல் பூங்கா	6
6.	170டி	கவியரசு கண்ணதாசன் நகர்	வண்டலூர் உயிரியல் பூங்கா	6
			மொத்தம்	65

மேலும், ஓட்டேரி பகுதிவாழ் மக்கள் வண்டலூர் உயிரியல் பூங்கா வழியாக கூடுவாஞ்சேரிக்கு இயக்கப்படும் 65 பேருந்துகளையும், மாமல்லபுரம், திருப்போரூர், வடநெமிலி, மாம்பாக்கம் சாலை சந்திப்பு போன்ற இடங்களுக்கு இயக்கப்படும் 16 பேருந்துகளையும் ஆக மொத்தம் 146 பேருந்துகளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

374—

விரைவுப் பேருந்துகளில் உணவு

வினா எண் 28860—திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) தொலைதூர விரைவுப் பேருந்துகளில் போக்குவரத்துத் துறையே உணவு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட் மூலமாக இயக்கப்படும் தொலைத்தூரப் பேருந்துகளில் போக்குவரத்துத் துறையே உணவு வழங்குவது குறித்து பரிசிலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனினும், தற்போது, திண்டிவனம், தொழுதூர், கொட்டாம்பட்டி ஆகிய இடங்களில் இயங்கி வரும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான உணவு விடுதிகளில் பயணிகளின் தேவைக்கேற்ப, பேருந்துகள் உணவு மற்றும் சிற்றுண்டிக்காக நிறுத்தப்பட்டு வருவது நடைமுறையில் உள்ளது.

375—

சாலையோர விடுதி

வினா எண் 28865—திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம்-சீர்காழி சாலையில் சாலையோர விடுதி (Motel) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சிதம்பரம்-சீர்காழி சாலையில் பேருந்து பயணிகள் பயன்பாடு மிகவும் குறைவாக உள்ளதால் மேற்படி சாலையில் சாலையோர விடுதி (Motel) அமைத்திடும் திட்டம் எதுவும் கும்பகோணம், அரசுப் போக்குவரத்துக் கழகத்திடம் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2011 ஜனவரி 13

376—

புதிய வழித்தடப் பேருந்து

வினா எண் 28919—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, பேராவூரணியிலிருந்து ஆவணம், நெடுவாசல், கறம்பக்குடி, அம்புக்கோவில் வழியாக தஞ்சாவூருக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை தடம் புதிய வழித்தடமாகும். தடத்தின் நீளம் 90.6 கி.மீ. ஆகும். மேலும், கோரிக்கை தடம் சுற்று வழித்தடமாகும். கோரிக்கை தடம் சுற்று வழித்தடமாக உள்ளமையால் பேருந்து இயக்கினாலும் போதிய நேரடிப் பயணிகள் பயன்பாடு இருந்திட வாய்ப்பில்லை.

எனினும், கோரிக்கை தடத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும், பகுதி, பகுதியாக கழகப் பேருந்து வசதி உள்ளது. இதில் பயணிகள் அடர்வு சராசரி 68 சதவீதம் தான் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

377—

பேருந்து வசதி

வினா எண் 28920—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கும்பகோணத்திலிருந்து பேராவூரணி, ஆலங்குடி வழியாக கோயம்புத்தூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை தடம் சுற்று வழியாகவும், புதிய வழித்தடமும் ஆகும். எனினும் கோரிக்கை தடத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் பகுதி, பகுதியாக பேருந்து வசதி போதியளவு உள்ளது.

378—

பேருந்தை நீட்டித்து இயக்குதல்

வினா எண் 29063—திரு. மு. பன்னீர்செல்வம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்திலிருந்து தாண்டவராயன்-சோழன்பேட்டைக்கு இயக்கப்படும் பேருந்தைப் பிச்சாவரம், கொடியம்பாளையம் வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம்-தாண்டவராயன்-சோழன்பேட்டை இடையே பிச்சாவரம் வழியாக இயக்கப்பட்டு வரும் பேருந்தை, கொடியம்பாளையம் கிராமத்தை தொட்டு இயக்கினால் நேரடி பயணிகளின் பயண நேரம் மற்றும் பயணக் கட்டணம் கூடுதலாகும் என்பதால் மேற்படி பேருந்துமூலம் கொடியம்பாளையம் கிராமத்தை தொட்டு இயக்க வாய்ப்புகள் இல்லை.

379—

பேருந்து வசதி

வினா எண் 29116—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரத்திலிருந்து கும்பகோணத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (காஞ்சிபுரம் மண்டலம்) மூலம் தற்பொழுது 4 நடைகள் நேரடியாக காஞ்சிபுரத்திலிருந்து கும்பகோணத்திற்கு பேருந்து இயக்கப்படுகிறது.

380—

மிதவைப் பேருந்து

வினா எண் 29285—திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதி, அய்யம்பேட்டையிலிருந்து சென்னைக்கு அதிநவீன மிதவைப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தடம் எண் 323-ல் தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு அய்யம்பேட்டை வழியாக தினசரி 24 பேருந்துகள் 44 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் 6 அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்து உள்ளிட்டவை இயக்கப்பட்டு வருகின்றன. இந்த வசதியை அய்யம்பேட்டை-சென்னை உள்ளிட்ட பயணிகள் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

381—

நகரப் பேருந்து

வினா எண் 29290—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியிலிருந்து ஒரத்தநாட்டிற்கு முதலிப்பட்டி, கருக்காடிப்பட்டி, வெட்டிக்காடு வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை தடம் புதிய வழித்தடமாகும், தஞ்சாவூர்-வெட்டிக்காடு (வழி) மருங்குளம், ஈச்சங்கோட்டை, செல்லம்பட்டி தடத்தில் 26-வது கி.மீ.-ல் முதலிப்பட்டி கிராமம் செல்லும் சாலை பிரிகிறது. இப்பிரதான சாலையிலிருந்து 0.75 கி.மீ. தூரத்தில் (1 கி.மீ.க்கும் குறைவாக) முதலிப்பட்டி கிராமம் அமைந்துள்ளது. பிரதான சாலையிலிருந்து இக்கிராமத்திற்கு செல்ல குறுகிய பாலம் ஒன்று உள்ளது. இக்குறுகிய பாலத்தில் கழகப் பேருந்துகள் (Standard Buses) செல்ல இயலாது. மேலும், பிரதான சாலையிலிருந்து இக்கிராமம் வரை உள்ள சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் குறுகலாக உள்ளது. கோரிக்கை தடத்தில் முதலிப்பட்டி கிராமம் தவிர மற்ற எஞ்சிய பகுதிகள் அனைத்தும் பேருந்து வசதி பெற்றவை ஆகும்.

382—

வழித்தடம் நீட்டித்தல்

வினா எண் 29528—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிற்றுந்துகளின் வழித்தட நீளத்தை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) சிற்றுந்துகளின் வழித்தட நீளத்தை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

383—

பேருந்து வசதி

வினா எண் 29610—திரு. கோ. அரி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணியிலிருந்து *சென்னைக்கு அதிக அளவில் பேருந்துகளை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

2007-ம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து இதுவரை சென்னையிலிருந்து திருத்தணிக்கு பேருந்துகள் கூடுதலாக 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

384—

பேருந்து வசதி

வினா எண் 29614—திரு. ஆர்.கே. பாரதிமோகன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, ஆடுதுறை—திருப்பனந்தாள் அணைக்கரை வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆடுதுறை-அணைக்கரை (வழி) திருமங்கலக்குடி, முட்டக்குடி, திருப்பனந்தாள், தத்துவாஞ்சேரி தடத்தின் நீளம் 16 கி.மீ. ஆகும். தற்போது தடம் எண். A27 மற்றும் B27 ஆகிய நகர் பேருந்துகள் மூலம் கும்பகோணம் - அணைக்கரை (வழி) திருவிடைமருதூர், ஆடுதுறை, திருப்பனந்தாள் தடத்தில் தினசரி 24 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் தடம் எண் A10A (27C) நகர் பேருந்து மூலம் ஆடுதுறை — அணைக்கரை (வழி) திருப்பனந்தாள் தடத்தில் தினசரி 8 நடைகள் இயக்கி வருகிறது. திருச்சி மண்டலம் நகர் பேருந்து தடம் எண் 9 ஜெயங்கொண்டம் - ஆடுதுறை தடத்தில் நடைகள் இயக்கி வருகிறது. மேற்படி பேருந்துகளின் மக்கள் பயன்பாட்டு அடர்வு 50 சதவிகிதத்திற்கு குறைவாகவே உள்ளது. தற்போது மேற்குறிப்பிட்ட பேருந்துகள்மூலம் இயக்கப்பட்டு வரும் நடைகள் இப்பகுதி மக்களின் பயன்பாடு மற்றும் தேவைக்கு போதுமானதாக உள்ளது.

385—

பேருந்து வசதி

வினா எண் 29615—திரு. ஆர்.கே. பாரதிமோகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, கும்பகோணத்திலிருந்து ஆடுதுறை, சூரியனார் கோவில், கஞ்சனூர் குத்தாலம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை தடம் எண் A2A மற்றும் A2B ஆகிய நகரப் பேருந்துகள்மூலம் 24 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. கதிராமங்கலம் தடத்தில் தடம் எண் A54 மற்றும் A64 ஆகிய நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 20 நடைகள் இயக்கப்பட்டு

[2011 ஜனவரி 13

வருகின்றன. ஆடுதுறை தடத்தில் போதியளவு கழக நகர் மற்றும் புறநகர் பேருந்து வசதி உள்ளது.

386—

பேருந்து வசதி

வினா எண் 29821—திரு. பி. பலராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து மீஞ்சூர் வழியாக அருள்மிகு ஸ்ரீரெங்கநாதப் பெருமாள் திருக்கோயிலுக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அருள்மிகு ஸ்ரீரெங்கநாதப் பெருமாள் திருக்கோயில் மீஞ்சூருக்கும் பொன்னேரிக்கும் இடையில் உள்ள சாலையிலிருந்து வடக்கே உட்பகுதியில் சற்று தொலைவில் உள்ளது. கிராமத்தின் உட்பகுதியில் அமைந்துள்ள ஒவ்வொரு இடத்திலிருந்தும் சென்னை பெருநகருக்கு நேரடி பேருந்துகள் இயக்குவதென்பது சாத்தியமல்ல என்பதால் பிரதான சாலையில் இயக்கப்படும் பேருந்துகளை பயன்படுத்திக்கொள்ளலாம்.

387—

கூடுதல் பேருந்து வசதி

வினா எண் 29822—திரு. பி. பலராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, சின்னம்பேடு அருள்மிகு சிறுவாபுரி பாலசுப்ரமண்யசுவாமி திருக்கோயிலுக்கு சென்னையிலிருந்து கூடுதலாகப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது மாநகரப் போக்குவரத்துக் கழகம், வள்ளலார் நகரிலிருந்து சின்னம்பேடு அருள்மிகு சிறுவாபுரி பாலசுப்ரமண்ய சுவாமி கோயில் வழியாக பெரியபாளையத்திற்கு தடம் எண் 547-ல் 2 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இக்கோயிலின் முக்கிய திருவிழா நாட்களில் பயணிகளின் பயன்பாட்டின் தேவைக்கேற்ப கூடுதல் பயண நடைகள் இயக்கிட ஆவன செய்யப்படும்.

388—

பேருந்து வசதி

வினா எண் 29823—திரு. பி. பலராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீஞ்சூரிலிருந்து கோயம்பேடு புறநகரப் பேருந்து நிலையம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது மாநகரப் போக்குவரத்துக் கழகம், மீஞ்சூரிலிருந்து கோயம்பேடு புறநகர்ப் பேருந்து நிலையத்திற்கு தடம் எண் 121—பி—ல் 2 பேருந்துகள் வீதம் நாளொன்றுக்கு 16 பயண நடைகள் இயக்கி வருகிறது.

389—

பேருந்து வசதி

வினா எண் 29831—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

"சோளிங்கர் அருள்மிகு நரசிம்மன் கோயிலுக்கு சென்னையிலிருந்து காவேரிப்பாக்கம், பாணாவரம் வழியாகவும், திருவள்ளூர், அரக்கோணம் ஆகிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா"?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சோளிங்கரிலிருந்து காவேரிப்பாக்கம் வரை (வழி) பாணாவரம் என இரண்டு நகரப் பேருந்துகள் டி.51ஏ, டி.51பிமூலம் தினசரி 16 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் காவேரிப்பாக்கம் சென்றடைந்தால் சென்னைக்கு ஐந்து நிமிட இடைவெளியில் ஒரு பேருந்து வேலூர்-சென்னை (வழி) காவேரிப்பாக்கம் என இயக்கப்பட்டு வருகின்றது. இப்புதிய வழித்தடத்தினால் மக்கள் பயன்பாடு அற்றதாகவே இருக்கும்.

390—

சொகுசுப் பேருந்து

வினா எண் 30104—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து கிழக்குக் கடற்கரை சாலை மயிலாடுதுறை வழியாக ஆடுதுறைக்கு அதிநவீன சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட் மூலமாக தடம் எண் 306-ல் சென்னையிலிருந்து — ஆடுதுறைக்கு கிழக்கு கடற்கரை சாலை, மயிலாடுதுறை வழியாக தினசரி ஒரு அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்து 2 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன.

2011 ஜனவரி 13]

391—

முன்பதிவு மையம்

வினா எண் 30234—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை புறநகர் பேருந்து நிலையத்தில் இரயில் பயண கணினி முன்பதிவு மையம் அமைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சென்னை புறநகர் பேருந்து நிலையத்தில் இரயில் பயண கணினி முன்பதிவு மையம் அமைக்க தேவையான ஆயத்த வேலைகள் அனைத்தும் நிறைவு பெற்று 8-9-2008 அன்றிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

392—

பணிமனை

வினா எண் 31266—திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடியில் அரசுப் போக்குவரத்துக் கழக பணிமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(அ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட கொடுமுடியில் பணிமனைக்கு 2.00 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. அலுவலகம் மற்றும் பண்டகத்திற்குத் தேவையான கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்காணும் பணிகள்

[2011 ஜனவரி 13

முடிவடைந்தவுடன் பணிமனை திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

393—

பேருந்து வசதி

வினா எண் 31267—திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி ஈரோட்டிலிருந்து கொடுமுடிக்கும் சிவகிரிக்கும், குறிப்பிட்ட இடங்களில் நின்று செல்லும் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஈரோடு-சிவகிரி தடம் எண் 42 குறிப்பிட்ட இடங்களில் நின்று செல்லும் ஒரு புதிய நகரப் பேருந்து, 16-5-2007 முதல் கூடுதலாக இயக்கப்படுகிறது. ஈரோடு-கொடுமுடி வழியாக புறநகர் பேருந்துகள் 384 தனிநடைகளும், நகரப் பேருந்து தடம் எண் 43-2 பேருந்துகள் 16 தனி நடைகளுமாக இயங்குவதால் அவ்வழித்தடத்தில் மேலும் கூடுதலாக பேருந்துகள் இயக்க இயலாத நிலை உள்ளது.

394—

எல்.எஸ்.எஸ். பேருந்து

வினா எண் 31279—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரிலிருந்து காடாம்புலியூர், கொள்ளுகாரன்குட்டை, மருங்கூர் வழியாக முத்தாண்டிக்குப்பத்திற்கு குறிப்பிட்ட இடங்களில் நின்று செல்லும் எல்.எஸ்.எஸ். பேருந்தை இயக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரிலிருந்து காடாம்புலியூர், கொள்ளுகாரன்குட்டை, மருங்கூர் வழியாக முத்தாண்டிக்குப்பத்திற்கு குறிப்பிட்ட இடங்களில் நின்று செல்லும் எல்.எஸ்.எஸ். பேருந்தை இயக்கும் திட்டம் இல்லை.

395—

பேருந்து வசதி

வினா என் **31283—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரிலிருந்து அங்குசெட்டிபாளையம், வீரப்பெருமாநல்லூர் வழியாக திருநாவலூர் வரை, அன்னை தெரசா பொறியியற் கல்லூரி, அன்னை வேளாங்கன்னி பாலிடெக்னிக் ஆகிய குறிப்பிட்ட இடங்களில் நின்று செல்லும் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி-உளுந்தூர்பேட்டை பிரதான சாலையில் அங்குசெட்டிப்பாளையம் அருகில் அன்னை வேளாங்கன்னி பாலிடெக்னிக்கும், திருநாவலூர் அருகில் அன்னை தெரசா பொறியியற் கல்லூரியும் அமைந்துள்ளன. தற்சமயம் இவ்வழித்தடத்தில் 3 நகரப் பேருந்துகள்மூலம் 28 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும் இவ்வழித்தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள், விழுப்புரம் மற்றும் சேலம் ஆகியவை பாலிடெக்னிக் மாணவர்கள், பொது மக்கள் பயனடையும் வகையில் போதிய அளவில் புறநகர் பேருந்துகளை இயக்கி வருகின்றன. இப்பேருந்துகள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட இடங்களில் நின்று செல்கின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

396—

பேருந்து வசதி

வினா எண் 31343—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதி, மேட்டுப்பாளையம் முதல் கோபனாரி வரை புதிதாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தற்போது மேட்டுப்பாளையம்—கோபனாரி வரை புதிதாக ஒரு பேருந்து தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது.

397—

பேருந்து வசதி

வினா எண் 31382—திரு. செ. புஷ்பராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் நேமூரிலிருந்து எசாலம், பெரியதச்சூர் வழியாக சென்னைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* நேமூரிலிருந்து உடனுக்குடன் பேருந்து வசதி விழுப்புரத்திற்கு உள்ளது. அவ்வாறே எசாலம், பெரியதச்சூரிலிருந்து போதுமான அளவிற்கு திண்டிவனத்திற்கு பேருந்து வசதி உள்ளது. நேமூரிலிருந்து விழுப்புரம் வந்தடைந்தாலோ மற்றும் எசாலம், பெரியதச்சூரிலிருந்து திண்டிவனம் வந்தடைந்தாலோ எளிதில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2011 ஜனவரி 13]

சென்னை செல்லலாம். எனவே, நேமூரிலிருந்து எசாலம், பெரியதச்சூர் வழியாக சென்னைக்கு புதிய பேருந்து இயக்குவது உசிதமில்லை என கருதப்படுகிறது.

398—

பேருந்து வசதி

வினா எண் 31707—திரு. என்.ஆர். ரங்கராஜன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து திருப்பூருக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை-திருப்பூர் (வழி) ஒரத்தநாடு தஞ்சாவூர், திருச்சி, கரூர், வெள்ளக்கோயில், காங்கேயம் தடத்தின் நீளம் 281 கி.மீ. ஆகும். 5-5-2007 முதல் கோரிக்கை தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட் பட்டுக்கோட்டை கிளை புறநகர் பேருந்து தடம் எண் 152 (பேருந்து எண் TN.49-N-1697) மூலம் தினசரி இரண்டு நடைகள் கீழ்க்காணும் நேரங்களில் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது.

பட்டுக்கோட்டை		திருப்பூர்	
சேரும் நேரம்	புறப்படும் நேரம்	சேரும் நேரம்	புறப்படும் நேரம்
—	முற்பகல் 11.35	பிற்பகல் 9.30	—
முற்பகல் 6.00	—	—	பிற்பகல் 21.55

மேலும் பட்டுக்கோட்டை – திருப்பூர் வழித்தடத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட் மூலம் தினசரி ஒரு பேருந்து இயக்கப்படுகிறது.

[2011 ஜனவரி 13

399—

நகரப் பேருந்து

வினா எண் 31715—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை நகரில் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை நகருக்குள் இரண்டு நகரப் பேருந்துகள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட்டின் திருவண்ணாமலை மண்டலத்தின்மூலம் 03-08-2007 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

400—

சிற்றுந்து இயக்குதல்

வினா எண் 31935—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, குனியமுத்தூர் நகராட்சி, இடையர்பாளையம் பகுதிக்கு சிறு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேரூர் தொகுதி, குனியமுத்தூர் நகராட்சி, இடையர்பாளையம் பகுதிக்கு சிறு பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

401—

பேருந்து வசதி

வினா எண் 31936—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதியில், காரமேடுக்கும், அல்அமீன் காலனிக்கும் இடையே சிறு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* பேரூர் தொகுதியில் காரமேடுக்கும், அல் அமீன் காலனிக்கும் இடையே சிறு பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

402—

பேருந்து வசதி

வினா எண் 32198—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, நங்கவள்ளியில் இருந்து சோரகை, தாரமங்கலம், பாப்பம்பாடி, வழியாக எளம்பிள்ளை வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக புறநகர் பேருந்து ஒன்று, இராசிபுரத்திலிருந்து ஆட்டையாம்பட்டி, எளம்பிள்ளை, பாப்பம்பாடி, தாரமங்கலம், சோரகை, நங்கவள்ளி வரை தினசரி 4 நடைகள் இயங்கிவருகின்றன. இது தவிர

[2011 ஜனவரி 13

இவ்வழித்தடத்தில் உள்ள பகுதி வாரியான பேருந்து வசதி விவரம் பின்வருமாறு:

வ. எண்.	தடம்	அரசு பேருந்து நடைகள் புறநகர்	நகர்	தனியார் பேருந்து நடைகள் புறநகர்	நகர்	மொத்தம்
1.	நங்கவள்ளி-தாரமங்கலம் (வழி) சோரகை	—	38	28	—	66
2	தாரமங்கலம்-எளம்பிள்ளை (வழி) பாப்பம்பாடி	2	14	16	—	32
3	தாரமங்கலம்-பாப்பம்பாடி	74	48	52	—	174
4	பாப்பம்பாடி-எளம்பிள்ளை	8	68	48	12	136

மேற்கண்ட பேருந்து வசதியே அப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவைக்குப் போதுமானதாக உள்ளது.

403—

பேருந்து வசதி

வினா எண் 32199—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்திலிருந்து ஓமலூர், தருமபுரி வழியாக திருவண்ணாமலை வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம்—திருவண்ணாமலை (வழி) ஓமலூர், தருமபுரி வழித்தடத்தில் கீழ்க்கண்டவாறு பகுதி வாரியான பேருந்து வசதி உள்ளது.

2011 ஜனவரி 13]

வ. எண்.	தடம்	அரசு பேருந்து நடைகள்		தனியார் பேருந்து நடைகள்	
		புறநகர்	நகர்	புறநகர்	நகர்
1.	தாரமங்கலம்-ஓமலூர்	88	70	14	80
2.	ஓமலூர்-தருமபுரி	ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியில் பேருந்து வசதிஉள்ளது.			
3.	தருமபுரி-திருவண்ணாமலை	—	5	—	—

மேலும், தருமபுரி-திருவண்ணாமலை (வழி) புலியூர், ஆனங்கூர் தடப்பேருந்தின் பயணியர் கொள்திறன் 68 சதவீதமே உள்ளதால் இவ்வழித்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும். இருப்பினும் தாரமங்கலத்திலிருந்து சேலம், ஊத்தங்கரை வழியாக கீழ்க்கண்டவாறு பகுதி வாரியான பேருந்து வசதி உள்ளது.

வ. எண்.	தடம்	அரசு பேருந்து நடைகள்		தனியார் பேருந்து நடைகள்	
		நகர்	புறநகர்	நகர்	புறநகர்
1.	தாரமங்கலம்-சேலம் (வழி) ஓமலூர்	52	-	14	42
2.	தாரமங்கலம்-ஓமலூர்	36	70	-	38
3.	ஓமலூர்-சேலம்	ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி உள்ளது.			
4.	தாரமங்கலம்-சேலம் (வழி) ஜங்சன்	130	13	102	98
5.	சேலம்-திருவண்ணாமலை (வழி) ஊத்தங்கரை	-	96	-	-

[2011 ஜனவரி 13

தாரமங்கலத்திலிருந்து திருவண்ணாமலைக்கு சேலம் மற்றும் தருமபுரி ஆகிய இரு வழித்தடங்களில் தடத்தின் நீளம் ஒரே அளவாகும். மேற்படி பேருந்து வசதியே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

404—

புதிய பேருந்து இயக்குதல்

வினா எண் 32200—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, நங்கவள்ளியிலிருந்து ஜலகண்டபுரம், செலவடை, பாப்பம்பாடி, எளம்பிள்ளை வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, நங்கவள்ளி—எளம்பிள்ளை (வழி) ஜலகண்டபுரம், செலவடை, பாப்பம்பாடி வழித்தடத்தில் செலவடையிலிருந்து பணிக்கனூர் வரையிலான 8.0 கி.மீ. சாலை குறுகிய மண் சாலையாக இருப்பதால் அவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கிட வழிவகை இல்லை.

405—

பேருந்து வசதி

வினா எண் 32201—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, சேலம் முதல் இரும்பாலை, தாரமங்கலம், தொளசம்பட்டி 5-வது மைல் மேச்சேரி, பெரும்பாலை, வழியாக ஒகேனக்கல் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தாரமங்கலம் தொகுதி, சேலம் முதல் இரும்பாலை, தாரமங்கலம், தொளசம்பட்டி, 5-வது மைல், மேச்சேரி, பெரும்பாலை வழியாக ஒகேனக்கல் வரை உள்ள வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாகும். எனினும் கடந்த 22-4-2007 முதல் புறநகர் பேருந்து ஒன்று சேலத்திலிருந்து ஓமலூர், 5-வது மைல், மேச்சேரி, பெரும்பாலை வழியாக ஒகேனக்கல் வரை தினசரி 2 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே போதுமானதாகும்.

406—

புதிய பேருந்து

வினா எண் 32202—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி முதல் ஓமலூர் வழியாக சேலம் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலத்திலிருந்து ஓமலூர், மேச்சேரி வழியாக மேட்டூர் வரை அரசு மற்றும் தனியார் துறை மூலமாக புறநகர் பேருந்துகள் 410 நடைகள் இயக்கப்படுகின்றன. இவை அனைத்தும் மேச்சேரியில் நின்று, பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்வதால் மேச்சேரி முதல் ஓமலூர் வழியாக சேலம் வரை புதிய பேருந்து இயக்கிடும் தேவை எழவில்லை.

407—

புதிய பேருந்து இயக்குதல்

வினா எண் 32203—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியிலிருந்து 5-வது மைல், தொளசம்பட்டி, தாரமங்கலம் ஜங்சன் வழியாக சேலம் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியிலிருந்து 5-வது மைல், தொளசம்பட்டி, தாரமங்கலம் ஜங்சன் வழியாக சேலம் வரை புதிய பேருந்து இயக்க கோரிய வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாகும். இவ்வழித்தடத்தில் ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியில் மேட்டூர் வரை பேருந்து வசதி உள்ளது. இப்பேருந்துகள் அனைத்தும் மேச்சேரியில் நின்று பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்கின்றன. இவ்வசதியே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

408—

பேருந்து வசதி

வினா எண் **32204—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியிலிருந்து குட்டப்பட்டி, தொளசம்பட்டி, தாரமங்கலம் ஜங்சன் வழியாக சேலம் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடந்த 10-6-2007 முதல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம் மண்டலம்) புறநகர் பேருந்து ஒன்று சேலத்திலிருந்து ஜங்சன், தாரமங்கலம், தொளசம்பட்டி, குட்டப்பட்டி, மேச்சேரி வழியாக மேட்டூர் வரை தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

2011 ஜனவரி 13]

409—

புதிய பேருந்து

வினா எண் 32206—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்திலிருந்து தொளசம்பட்டி, 5-வது மைல், மேச்சேரி, தொப்பூர் வழியாக பெங்களூர் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்திலிருந்து தொளசம்பட்டி, 5-வது மைல், மேச்சேரி, தொப்பூர் வழியாக பெங்களூர் வரை உள்ள வழித்தடம் இரு மாநில வழித்தடமாகும். இரு மாநிலங்களுக்கிடையே உள்ள ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கிட இயலும். இருப்பினும் தாரமங்கலம் பகுதி மக்கள், சேலம்-பெங்களூர் (வழி) ஓமலூர் மற்றும் தாரமங்கலம்-ஓமலூர் வரை இயங்கும் அரசு மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் புறநகர் மற்றும் நகர் பேருந்துகளை பயன்படுத்தி பெங்களூர் செல்ல ஏதுவாக உள்ளது.

410—

புதிய பேருந்து வசதி

வினா எண் 32206—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்திலிருந்து கொங்கணாபுரம், சங்ககிரி, கொமாரபாளையம், பவானி வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்திலிருந்து கொங்கணாபுரம், சங்ககிரி, கொமாரபாளையம், பவானி வழித்தடத்தில் உள்ள பகுதி வாரியான பேருந்து விவரம் பின்வருமாறு:

தடம்	அரசு பேருந்து நடைகள்		தனியார் பேருந்து நடைகள்	
	புறநகர்	நகர்	புறநகர்	நகர்
(1) தாரமங்கலம்-சங்ககிரி (வழி) கொங்கணாபுரம்	70	-	34	-
(2) சங்ககிரி-பவானி (வழி) கொமாரபாளையம்	58	94	188	16

மேற்கண்ட பேருந்து வசதியே அப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

411—

புதிய பேருந்து

வினா எண் 32207—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்திலிருந்து ஈரோடு, தாராபுரம் வழியாக பழனிக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடந்த 5-5-2007 முதல் சேலம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்மூலம் புறநகர் பேருந்து ஒன்று

2011 ஜனவரி 13]

தாரமங்கலத்திலிருந்து ஈரோடு, தாராபுரம் வழியாக பழனி வரை தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

412—

பேருந்து வசதி

வினா எண் 32210—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்திலிருந்து சின்னப்பம்பட்டி, அக்கரப்பட்டி, செங்காடு, பாச்சாலியூர், கனியாரம்பட்டி, சடையப்பாளையம் வழியாக எடப்பாடிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம்—எடப்பாடி (வழி) சின்னப்பம்பட்டி, அக்கரைப்பட்டி, செங்காடு, பாச்சாலியூர், கனியாம்பட்டி, சடையம்பாளையம் வழித்தடத்தில் கீழ்க்கண்டவாறு பகுதி வாரியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன:

வ. எண்	நகரப் பேருந்து வழித்தட எண்	வழித்தடம்	நடைகள்	பயனடையும் பகுதி
1	2டி., 2பி, 10	எடப்பாடி-தாரமங்கலம்	16	எடப்பாடி-சடையப்பம் பாளையம் பிரிவு
2	15	திருச்செங்கோடு-ராயனம்பட்டி	6	சடையப்பம் பாளையம் பிரிவு-கனியாம்பட்டி

வ. எண்	நகரப்பேருந்து வழித்தட எண்	வழித்தடம்	நடைகள்	பயனடையும் பகுதி
3	கே6, 4	எடப்பாடி-தாரமங்கலம் (வழி) கொங்கணாபுரம், அக்கரப்பட்டி-சின்னப்பம்பட்டி, பாப்பம்பாடி	4	அக்கரப்பட்டி, தாரமங்கலம் (வழி) சின்னப்பம்பட்டி, பாப்பம்பாடி
4	68, 81, 75	சேலம்-பாப்பம்பாடி	20	சின்னப்பம்பட்டி, பாப்பம்பாடி
5	—	பாப்பம்பாடி-தாரமங்கலம்	அரசுப் பேருந்து 70 தனியார் பேருந்து 34 104 (புறநகர்) அரசுப் பேருந்து 50 (நகர்புறம்)	

மற்றும் கனியாம்பட்டி-அக்கரப்பட்டி (வழி) பாச்சாலியூர் மற்றும் செங்காடு வழித்தடத்தில் உள்ள பாச்சாலியூர், கனியாம்பட்டியிலிருந்து 1 கி.மீ. தொலைவிலும், செங்காடு கிராமம் அக்கரப்பட்டியிலிருந்து 1.0 கி.மீ. தொலைவில் உள்ள அனைத்துப் பகுதிகளும் பேருந்து வசதி பெற்றதாக கருதப்படுவதால் அவ்வழித்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதியே அப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும். மேலும், பாச்சாலியூர் கிராமத்திற்கு தாரமங்கலத்திலிருந்து அக்கரப்பட்டி வழியாக மினி பேருந்து வசதி உள்ளது.

413—

பேருந்து வசதி

வினா எண் 32211—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியிலிருந்து குட்டப்பட்டி, தொளசம்பட்டி, தாரமங்கலம், ஓமலூர் வழியாக சேலம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடந்த 10-6-2007 முதல் புறநகர் பேருந்து ஒன்று சேலத்திலிருந்து ஜங்சன், தாரமங்கலம், தொளசம்பட்டி, குட்டப்பட்டி, மேச்சேரி வழியாக மேட்டூர் வரை தினசரி 6 நடைகள் இயங்கி வருகின்றன. மேலும், மேற்கூறிய வழித்தடத்தில் பகுதி வாரியான பேருந்து வசதியும் உள்ளது.

414—

பேருந்து வசதி

வினா எண் 32212—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்திலிருந்து தொளசம்பட்டி, 5-வது மைல், மேச்சேரி வழியாக மேட்டூர் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம்-மேட்டூர் (வழி) தொளசம்பட்டி, 5-வது மைல், மேச்சேரி வழியானது ஒரு சுற்று வழித்தடமாகும். இத்தட நீளம் 40.4 கி.மீ ஆகும். ஆனால் நேர் வழித்தடமான தாரமங்கலம்-மேட்டூர் (வழி) நங்கவள்ளி, குஞ்சாண்டியூர் வழித்தட நீளம் 30.0 கி.மீ. ஆகும். எனவே, கோரப்பட்டுள்ள வழித்தடத்தில் பேருந்து இயக்கிடும்போது தடநீளம் அதிகரிப்பதால் பயண நேரம் மற்றும் பயணக்கட்டணம் அதிகரித்து பயணிகள் பாதிக்கப்படக்கூடும். தாரமங்கலம்-மேட்டூர்

[2011 ஜனவரி 13

நேர் வழித்தடத்தில் 156 நடைகள் அரசு நகர் பேருந்துகளும், 18 நடைகள் புறநகர் பேருந்துகளும், 12 நடைகள் தனியார் நகர் பேருந்துகளும் மற்றும் 112 நடைகள் புறநகர் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் தனியார் புறநகர் பேருந்து ஒன்று சேலத்திலிருந்து தாரமங்கலம், தொளசம்பட்டி, 5-வது மைல், மேச்சேரி வழியாக மேட்டூர் வரை தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. இதைத் தவிர மேற்கூறிய வழித்தடத்தில், 116 நடைகள் அரசு நகர் மற்றும் 326 நடைகள் புறநகர் பேருந்துகளும், 6 நடைகள் தனியார் நகர் மற்றும் 260 நடைகள் புறநகர் பேருந்துகளும் பகுதி வாரியாக இயக்கப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட பேருந்து வசதியே அப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாக உள்ளது.

415—

பேருந்து இயக்குதல்

வினா எண் 32213—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூரிலிருந்து முத்துநாயக்கன்பட்டி, செம்மன் கூடல், கருக்கல்வாடி, கே.ஆர். தோப்பூர், கோட்டை மேடு, கருணாநிதி நகர் வழியாக எளம்பிள்ளை வரை மேச்சேரி-கொப்பம்பட்டி, செங்காட்டூர், கரட்டூர், கோவிலூர், தொளசம்பட்டி, அமரகுந்தி வழி தாரமங்கலம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓமலூர்-எளம்பிள்ளை (வழி) முத்துநாயக்கன்பட்டி, செம்மன் கூடல், கருக்கல்வாடி, கே.ஆர். தோப்பூர், கோட்டை மேடு, கருணாநிதி நகர் தட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வழித்தடத்தில் கே.ஆர். தோப்பூர், பவர் ஆபீஸ் முதல் கோட்டை மேடு வழியாக வெள்ளை பிள்ளையார் கோயில் வரையிலான

2011 ஜனவரி 13]

4.5 கி.மீ. சாலை பேருந்து இயக்க தகுதியற்ற நிலையில் உள்ளது. இருப்பினும், மேற்கூறிய வழித்தடத்தில் அரசுப் பேருந்துகள் 60 நடைகளிலும், தனியார் பேருந்துகள் 54 நடைகளிலுமாக இயங்கி வருகின்றன. மேலும் ஓமலூர்-கே.ஆர். தோப்பூர் வரை (கருக்கல்வாடி ஊரினை தவிர்த்து) மினி பேருந்து இரண்டும், கே.ஆர். தோப்பூர் முதல் எளம்பிள்ளை வரை மூன்று மினி பேருந்துகளும், தாரமங்கலம்-மேச்சேரி (வழி) அமரகுந்தி, தொளசம்பட்டி, கோவிலூர், கரட்டூர், செங்காட்டூர், கொப்பம்பட்டி வழித்தடத்தில் கழக நகரப் பேருந்து தடம் எண் எஸ் 11 தினசரி 3 நடைகளுமாக இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே அப்பகுதி மக்களுக்குப் போதுமானதாகும்.

416—

பேருந்து வசதி

வினா எண் 32215—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேட்டூரிலிருந்து குஞ்சாண்டியூர், விருத்தாசம்பட்டி, ஓலைப்பட்டி, தொளசம்பட்டி வழியாக தாரமங்கலம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் இரண்டு மேட்டூர் மற்றும் மேட்டூர் ஆர்.எஸ்.-ல் இருந்து குஞ்சாண்டியூர், விருத்தாசம்பட்டி, ஓலைப்பட்டி, தொளசம்பட்டி வழியாக தாரமங்கலம் வரை தினசரி 18 நடைகளும், தனியார் புறநகர் பேருந்து ஒன்று தினசரி 6 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இந்நடைகளில் பயணியர் கொள்திறன் 44 சதவிகிதமே உள்ளதால், தற்போதுள்ள பேருந்து வசதியே அப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

[2011 ஜனவரி 13

417—

புதிய வழித்தடங்களில் பேருந்து

வினா எண் 32217—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூரிலிருந்து தாரமங்கலம், இலட்சுமாயூர், அம்மன்கோயில், தொப்பம்பட்டி, மாட்டையாம்பட்டி, கருணாநிதி நகர் வழியாக எளம்பிள்ளை வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தாரமங்கலம் தொகுதி, ஓமலூரிலிருந்து தாரமங்கலம், இலட்சுமாயூர், அம்மன்கோயில், தொப்பம்பட்டி, மாட்டையாம்பட்டி, கருணாநிதி நகர் வழியாக எளம்பிள்ளை வரையிலான தடம் ஒரு புதிய வழித்தடமாகும். இவ்வழித்தடத்தில் உள்ள பகுதி வாரியான பேருந்து விவரம் பின்வருமாறு:

வ. எண்	நகரப் பேருந்து தடம் எண்	வழித்தடம்	நடைகள்
(1)	75	சேலம்-சின்னப்பம்பட்டி (வழி) சித்தர்கோயில், கே.கே. நகர், மாட்டையாம்பட்டி, தொப்பம்பட்டி, பாப்பம்பாடி	10
(2)	65	சேலம்-இ. காட்டூர் (வழி) எளம்பிள்ளை, காடையாம்பட்டி	12
(3)	65ஏ	சேலம்-கே.கே. நகர்	4
(4)	5பி	எடப்பாடி-இ. காட்டூர்	12
(5)	-	சேலம் ஜங்சன்-தாரமங்கலம் (வழி) இலட்சுமாயூர்	130 102 (தனியார்)

2011 ஜனவரி 13]

வ. எண்	நகரப் பேருந்து தடம் எண்	வழித்தடம்	நடைகள்
(6)	—	ஓமலூர்-தாரமங்கலம்	36 அரசுப் பேருந்து 108 அரசு மற்றும் தனியார் (புறநகரப் பேருந்து)

மேலும் அம்மன்கோயில், தொப்பம்பட்டியில் இருந்து 1 கி.மீ. தொலைவிலும், இலட்சுமாயூர் கிராமம், இலட்சுமாயூர் பிரிவு சாலையிலிருந்து 1 கி.மீ. தொலைவிலும் உள்ளது. அரசு வழிக்காட்டுதலின்படி பேருந்து இயக்கப்பகுதியிலிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ள அனைத்துப் பகுதிகளும் பேருந்து வசதி பெற்றதாக கருதப்படுவதால் கோரப்பட்டுள்ள வழித்தடப் பகுதி மக்களுக்கு தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

418—

பேருந்து வசதி

வினா எண் 32218—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, வனவாசியிலிருந்து நங்கவள்ளி, தாரமங்கலம், ஓமலூர் வழியாக சேலம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, வனவாசி—சேலம் (வழி) நங்கவள்ளி, தராமங்கலம், ஓமலூர் வழித்தடம் ஒரு சுற்று

வழித்தடமாகும். எனினும் இவ்வழித்தடத்தில் உள்ள பகுதி வாரியான பேருந்து விவரம் பின்வருமாறு:

வ. எண்	தடம்	அரசுப் பேருந்து நடைகள்		தனியார் பேருந்து நடைகள்	
		புறநகர்	நகர்	புறநகர்	நகர்
1	சேலம்-தாரமங்கலம் (வழி) ஓமலூர்	-	52	42	14
2	சேலம்-ஓமலூர்	ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியில் பேருந்து உள்ளது			
3	ஓமலூர்-வனவாசி (வழி) தாரமங்கலம், நங்கவள்ளி	—	6	—	—
4	ஓமலூர்-தாரமங்கலம்	70	36	38	—
5	தாரமங்கலம்-நங்கவள்ளி	4	38	28	—
6	நங்கவள்ளி-வனவாசி	16	52	136	14

மேலும் சேலத்திலிருந்து ஜங்சன், தாரமங்கலம் வழியாக வனவாசி வரை உள்ள பேருந்து விபரம் பின்வருமாறு:

வ. எண்	தடம்	அரசுப் பேருந்து நடைகள்		தனியார் பேருந்து நடைகள்	
		புறநகர்	நகர்	புறநகர்	நகர்
1	சேலம்-நங்கவள்ளி (வழி) ஜங்சன், தாரமங்கலம்	—	22	28	—
2	சேலம்-வனவாசி (வழி) ஜங்சன், தாரமங்கலம்	—	8	10	—
3	வனவாசி-நங்கவள்ளி	16	52	136	14
4	சேலம்-தாரமங்கலம் (வழி) ஜங்சன்	13	130	98	102
5	தாரமங்கலம்-நங்கவள்ளி	4	38	28	—

2011 ஜனவரி 13]

இவ்வசதியே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

419—

பேருந்து வசதி

வினா எண் 32219—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலத்திலிருந்து தொளசம்பட்டி, 5-வது மைல், மேச்சேரி, தொப்பூர், தருமபுரி வழியாக திருவண்ணாமலை வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலத்திலிருந்து தொளசம்பட்டி, 5-வது மைல், மேச்சேரி, தொப்பூர், தருமபுரி வழியாக திருவண்ணாமலை வரை கீழ்க்கண்டவாறு பகுதி வாரியான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன:

வ. எண்	தடம்	அரசுப் பேருந்து நடைகள்		தனியார் பேருந்து நடைகள்	
		நகர்	புறநகர்	நகர்	புறநகர்
1	தாரமங்கலம்—தொளசம்பட்டி	18	6	—	22
2	தொளசம்பட்டி-5-வது மைல்	—	26	—	—
3	தாரமங்கலம்—5-வது மைல் (வழி) தொளசம்பட்டி	—	—	—	6
4	5-வது மைல்—மேச்சேரி	28	192	—	208
5	மேச்சேரி—தருமபுரி	—	100	—	6
6	தருமபுரி—திருவண்ணாமலை	—	5	—	—

[2011 ஜனவரி 13

மேற்கண்ட தருமபுரி-திருவண்ணாமலை (வழி) புலியூர், ஆனங்கூர் தடப்பேருந்தின் பயணியர் கொள்திறன் 68 சதவிகிதமே உள்ளதால் இவ்வழித்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும். மேலும் தாரமங்கலத்திலிருந்து திருவண்ணாமலைக்கு தருமபுரி மற்றும் சேலம் வழியாக உள்ள தடநீளம் ஒரே அளவாகவே உள்ளது. தாரமங்கலத்தில் இருந்து சேலம், ஊத்தங்கரை வழியாக திருவண்ணாமலைக்கு கீழ்க்கண்டவாறு பகுதி வாரியான பேருந்து வசதி உள்ளது:

வ. எண்	தடம்	அரசுப் பேருந்து நடைகள்		தனியார் பேருந்து நடைகள்	
		நகர்	புறநகர்	நகர்	புறநகர்
1	தாரமங்கலம்-சேலம் (வழி) ஓமலூர்	52	-	14	42
2	தாரமங்கலம்-ஓமலூர்	36	70	-	38
3	ஓமலூர்-சேலம்	ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி உள்ளது			
4	தாரமங்கலம்-சேலம் (வழி) ஜங்சன்	130	13	102	98
5	சேலம்-திருவண்ணாமலை (வழி) ஊத்தங்கரை	-	96	-	-

இவ்வாறான பேருந்து வசதியே இப்பகுதி மக்களுக்குப் போதுமானதாகும்.

420—

புதிய வழித்தடத்தில் பேருந்து

வினா எண் 32220—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, நங்கவள்ளியிலிருந்து கரட்டுப்பட்டி, மல்லியகுட்டை, அமரகுந்தி, தாரமங்கலம், ஜங்சன் வழியாகச் சேலம் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, நங்கவள்ளியிலிருந்து கரட்டுப்பட்டி, மல்லியகுட்டை, அமரகுந்தி, தாரமங்கலம், ஜங்சன் வழியாக சேலம் வரை புதிய வழித்தடத்தில் உள்ள பகுதி வாரியான பேருந்து விவரம் பின்வருமாறு:

வ. எண்	தடம்	அரசுப் பேருந்து நடைகள்		தனியார் பேருந்து நடைகள்	
		நகர்	புறநகர்	நகர்	புறநகர்
1	சேலம்-தாரமங்கலம் (வழி) ஜங்சன்	150	13	102	98
2	தாரமங்கலம்-நங்கவள்ளி (வழி) அமரகுந்தி, மல்லிக்குட்டை, கரட்டுப்பட்டி	-	-	44 (மினி பேருந்து மூலமாக)	-

தாரமங்கலம்-நங்கவள்ளி (வழி) அமரகுந்தி, மல்லியகுட்டை, கரட்டுப்பட்டி வழித்தடப்பகுதிகள் சிறு கிராமப் பகுதிகளாகவே இருப்பதால் மேற்கண்ட பகுதி வாரியான பேருந்து வசதியே போதுமானதாகும்.

421—

பேருந்து வசதி

வினா எண் 32221—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, நங்கவள்ளியிலிருந்து ஜலகண்டாபுரம், சின்னப்பம்பட்டி வழியாக எளம்பிள்ளை வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, நங்கவள்ளியில் இருந்து ஜலகண்டாபுரம், சின்னப்பம்பட்டி மற்றும் எளம்பிள்ளை வழியாக சேலம் வரை, சேலம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக புறநகர் பேருந்து ஒன்றுமூலம் தினசரி 3 நடைகளும் மற்றும் தனியார் பேருந்து ஒன்று மூலமாக தினசரி 2 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இது தவிர இவ்வழித்தடத்தில் உள்ள பகுதி வாரியான பேருந்து விவரம் பின்வருமாறு:

வ. எண்	தடம்	அரசுப் பேருந்து நடைகள்		தனியார் பேருந்து நடைகள்	
		புறநகர்	நகர்	புறநகர்	நகர்
1	நங்கவள்ளி-ஜலகண்டாபுரம்	18	52	132	14
2	ஜலகண்டாபுரம்-பணிக்கனூர்	4	6	18	—
3	பணிக்கனூர்-பாப்பம்பாடி	6	42	—	—
4	பாப்பம்பாடி-எளம்பிள்ளை	—	42	24	12

மேற்கண்ட பேருந்து வசதியே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

422—

பேருந்து வசதி

வினா எண் 32432—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து திருமுக்கூடலூருக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர்-திருமுக்கூடலூர் வழித்தட நீளம் 18.0 கி.மீ. ஆகும். இவ்வழித்தடம் முழுவதும் கும்பகோணம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி மண்டலம் மூலமாக 4 நகரப் பேருந்துகள் தினசரி 60 நடைகளும், தனியார்மூலம் 2 பேருந்துகள் 24 நடைகளும் இயக்கப்பட்டு வருவதால், அவ்வழித்தடம் முழுவதும் போதிய பேருந்து வசதி பெற்றுள்ளது.

423—

புதிய பேருந்து

வினா எண் 32433—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து பெங்களூருக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர்—பெங்களூர் தடம், தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய இரு மாநிலங்கள் சம்மந்தப்பட்டிருப்பதால், இத்தடத்தில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு லிமிடெட் மூலமாக பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடக்கும் இரு மாநில ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின் போது பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

424—

புதிய பேருந்து

வினா எண் 32435—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) கரூரிலிருந்து பாண்டிச்சேரிக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர்-பாண்டிச்சேரி தடம், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி ஆகிய இரு மாநிலங்கள் சம்மந்தப்பட்டிருப்பதால், இத்தடத்தில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு லிமிடெட் மூலமாக பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடக்கும் இரு மாநில ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின் போது பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

425—

புதிய பேருந்து

வினா எண் **32436—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தொகுதி, நெரூர் வடபாகம் கிராமத்திற்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் தொகுதியில் உள்ள கரூர்-நெரூர் வடபாகம் வழித்தட நீளம் 14.0 கி.மீ. ஆகும். இவ்வழித்தடம் முழுவதும் தற்பொழுது கீழ்க்கண்டுள்ளவாறு நன்கு பேருந்து வசதி பெற்றுள்ளது:

2011 ஜனவரி 13]

	தினசரி இயக்கப்படும்	
	பேருந்துகள்	நடைகள்
கழக நகரப் பேருந்து கரூர்-திருமுக்கூடலூர் (வழி) நெரூர்.	3	48
தனியார் பேருந்து கரூர்-திருமுக்கூடலூர் (வழி) நெரூர்	2	24
மொத்தம்	5	72

426—

பேருந்து வசதி

வினா எண் 32495—திரு. ரெ. நெடுஞ்செழியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டையிலிருந்து புதிய வழித் தடத்தில் மட்டங்கால், பெரியக்கோட்டை, பகட்டுவான்பட்டி நடுப்பட்டி, ரெகுநாதபுரம், புதுக்கோட்டை விடுதி, மணமடை வழி, வெட்டிகாடு வழி, ஒரத்தநாடுவரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வக்கோட்டை-ஒரத்தநாடு (வழி) மட்டங்கால், பெரியக்கோட்டை, பகட்டுவான்பட்டி, நடுப்பட்டி, ரெகுநாதபுரம், புதுக்கோட்டை விடுதி, மணமடை, வெட்டிகாடு தடத்தின் நீளம் 43.0 கி.மீ. ஆகும், கோரிக்கை தடம் புதிய வழித்தடமாகும். எனினும் கோரிக்கைத் தடத்தில் பகுதி/பகுதியாக பேருந்து வசதி உள்ளது. இக்கோரிக்கைத் தடத்தில் புதுக்கோட்டை விடுதி முதல் மணமடை வரையுள்ள 4.0 கி.மீ. பகுதி மட்டும் பேருந்து வசதி பெறாத தடப்பகுதியாகும். புதுக்கோட்டை விடுதியிலிருந்து மணமடை செல்லும் பிரிவு சாலையில் உள்ள குறுகிய பாலத்தின் வழியாக

[2011 ஜனவரி 13

பேருந்து இயக்கிட இயலாது. மேலும், புதுக்கோட்டை விடுதியிலிருந்து மணமடை செல்லும் சாலை 1.5.கி.மீ. தூரம் மண் சாலையாக பேருந்து இயக்கிட இயலாத நிலையில் அமைந்துள்ளது.

427—

பேருந்து இயக்குதல்

வினா எண் 32535—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியிலிருந்து எளம்பிள்ளை, தாதாபுரம், கோரணம்பட்டி, தொப்பக்காடு, எட்டிகுட்டைமேடு, ஏகாபுரம் வழியாக எளம்பிள்ளைக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதியிலிருந்து எடப்பாடி, தாதாபுரம், கோரணம்பட்டி, தொப்பக்காடு, எட்டிகுட்டை மேடு, ஏகாபுரம் வழியாக எளம்பிள்ளைக்கு பகுதி வாரியாக இயக்கப்படும் பேருந்து விவரம் பின்வருமாறு:

	தடம்	நகரப்பேருந்து தடம் எண்	நடைகள்	பேருந்து வசதி பெறும் பகுதி
(1)	எடப்பாடி-தாரமங்கலம் (வழி) தாதாபுரம் கோரணம்பட்டி பிரிவு	2டி 2பி	8	எடப்பாடி-கோரணம்பட்டி பிரிவு
(2)	எடப்பாடி-கொங்கணாபுரம் (வழி) தாதாபுரம், கோரணம்பட்டி, மூலப்பாதை	10	8	எடப்பாடி-கோரணம்பட்டி

2011 ஜனவரி 13]

(3) திருச்செங்கோடு-ராயணம்பட்டி (வழி) சங்ககிரி, கொங்கணாபுரம்	15	6	கோரணம்பட்டி-ராயணம்பட்டி
(4) எடப்பாடி-காட்டூர் (வழி) எளம்பிள்ளை	5பி	6	எட்டி குட்டைமேடு -எளம்பிள்ளை
(5) எடப்பாடி-வேம்படி தாளம் (வழி) எளம்பிள்ளை	5ஏ	6	எட்டிகுட்டைமேடு-எளம்பிள்ளை

மேலும், கோரிக்கை வழித்தடத்தில் ராயம்பட்டி-எட்டிக்குட்டைமேடு (வழி) தொப்பக்காடு வரையிலான 4 கி.மீ. சாலை மட்டுமே பேருந்து வசதி பெறாத பகுதியாகும். எந்த ஒரு கிராமமும் அருகாமையில் இல்லை. மேலும், இச்சாலையில் உள்ள தொப்பக்காடு கிராமம் வழியாக இரு மினி பேருந்துகள் வருவதால் இதுவே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

428—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

பேருந்து வசதி

வினா எண் 32557—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரிலிருந்து தாரமங்கலம்-சங்ககிரி, கொமாரபாளையம், பவானி, பெருந்துறை வழி கோயம்புத்தூருக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது ஓமலூரிலிருந்து தாரமங்கலம்-சங்ககிரி, கொமாரபாளையம், பவானி, பெருந்துறை (வழி) கோயம்புத்தூர் தடத்தில் உள்ள பேருந்து விவரம் பின்வருமாறு:

வ. எண்	தடம்	அரசுப் பேருந்து நடைகள் புறநகர்	தனியார் பேருந்து நடைகள் புறநகர்
1	ஓமலூர்-சங்ககிரி (வழி) தாரமங்கலம்	70	34
2	சங்ககிரி-கோயம்புத்தூர் (வழி) கொமாரபாளையம், பவானி, பெருந்துறை	268	—

மேற்கண்ட வசதியே அப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

429—

பேருந்து இயக்குதல்

வினா எண் 32814—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சியிலிருந்து உடுமலை, பழனி, திண்டுக்கல், திருப்பத்தூர், தேவக்கோட்டை வழியாக காரைக்குடிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பொள்ளாச்சியிலிருந்து உடுமலை, பழனி, திண்டுக்கல், திருப்பத்தூர், தேவக்கோட்டை வழியாக காரைக்குடிக்கு அரசு விரைவுப் பேருந்து ஒன்று தினசரி 2 நடைகள் பயணிகள் தேவைக்கேற்ப இயங்கி வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]
430—

புதிய பேருந்து

வினா எண் 32817—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியிலிருந்து உடுமலை, பழனி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் வழியாக திருச்சி வரை புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சியிலிருந்து திருச்சிக்கு உடுமலை, பழனி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் வழியாக திருச்சி, வரை அரசுப் பேருந்து ஒன்று தினசரி 2 நடைகள் இயங்கி வருகின்றன. இதுதவிர, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோவை மற்றும் இதர போக்குவரத்துக் கழக பேருந்துகளின்மூலம் பகுதி வாரியாக பொள்ளாச்சி—திருச்சி வழித்தடத்தில் கீழ்க்கண்டவாறு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன:

பொள்ளாச்சி—பழனி

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோவை	*—66 பேருந்துகள் தினசரி 282 நடைகள்*
இதர அரசுப் போக்குவரத்துக் கழகம்	*—40 பேருந்துகள் தினசரி 90 நடைகள்*
தனியார் பேருந்துகள்	*—16 பேருந்துகள் தினசரி 106 நடைகள்*
மொத்தம்	*122 பேருந்துகள் தினசரி 478 நடைகள்*

அவ்வழித்தடத்தில் பயணிகள் அடர்வு சராசரி 94%

11-434—58a

[2011 ஜனவரி 13

பழனி—திருச்சி

திண்டுக்கல் கோட்ட பேருந்துகள்—15 பேருந்துகள்
தினசரி 30 நடைகள்

திருச்சி கோட்ட பேருந்துகள்—14 பேருந்துகள்
தினசரி 28 நடைகள்

மொத்தம் 29 பேருந்துகள் தினசரி 58 நடைகள்.

431—

புதிய பேருந்து

வினா எண் 32818—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஆழியாரிலிருந்து பழனி வரை கோட்டூர், தேவனூர், புதூர், எரிசனம்பட்டி, தளி, கொமரலிங்கம், கொழுமம், நெய்காரப்பட்டி வழியாகப் பழனி வரை புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதியைச் சார்ந்த ஆழியார், கோட்டூர், தேவனூர், புதூர், எரிசனம்பட்டி, தளி, கொமரலிங்கம், கொழுமம், ஆகியவை சிறிய கிராமங்களாகும். இக்கிராமங்கள் அனைத்திலிருந்தும் அவற்றின் தாலுக்கா தலைநகரமான பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை ஆகிய நகரங்களுக்கு பகுதிவாரியாக போதுமான பேருந்து வசதி உள்ளது. மேலும், இத்தாலுக்கா தலைநகரங்களான பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டையிலிருந்து பழனிக்கு போதுமான பேருந்துகள் இயங்கிவருவதால் இச்சிறிய கிராமங்களிலிருந்து பழனிக்கு நேரடிப் பேருந்து இயக்கிட சாத்தியமில்லை.

2011 ஜனவரி 13]

432—

புதிய பேருந்து இயக்குதல்

வினா எண் 32819—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி உடுமலைப்பேட்டை—திருமூர்த்தி நகரிலிருந்து தாராபுரம், காங்கேயம், சென்னிமலை வழியாக ஈரோடு வரை புதிய பேருந்து இயக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் லிமிடெட், உடுமலைப்பேட்டையிலிருந்து தாராபுரம், காங்கேயம், சென்னிமலை வழியாக ஈரோடு வரை 2 பேருந்துகள் தினசரி 6 நடைகள் கடந்த 21-4-2007 முதல் இயக்கி வருகின்றன. மேலும் உடுமலைப்பேட்டை தொகுதி, திருமூர்த்தி நகர் ஒரு சிறிய கிராமம் ஆகும். இத்திருமூர்த்தி நகரிலிருந்து உடுமலைப்பேட்டைக்கு கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் 8, தினசரி 66 நடைகள் இயங்கி வருகின்றன. எனவே, சிறிய கிராமமான திருமூர்த்தி நகரிலிருந்து ஈரோட்டிற்கு புதிய பேருந்து இயக்கிட சாத்தியக் கூறுகள் இல்லை.

433—

புதிய பேருந்து இயக்குதல்

வினா எண் 32821—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டையிலிருந்து பொள்ளாச்சி கோவை வழியாக ஊட்டிக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது பழனியிலிருந்து ஊட்டிக்கு, உடுமலைப்பேட்டை மற்றும் கோவை வழியாக கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலமாக ஒரு பேருந்து தினசரி 2 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இது தவிர கீழ்கண்டவாறு பகுதி வாரியாக போதுமான அளவு பேருந்துகள் இயக்கி வருவதால், உடுமலைப்பேட்டையிலிருந்து உதகைக்கு தற்போது புதிய பேருந்து இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

பகுதி வாரியான பேருந்துகளின் இயக்க விவரம்:

உடுமலை—கோவை,'கழகம் மற்றும்
தனியார் பேருந்துகள் —92 தினசரி 329 நடைகள்

கோவை—உதகை/கழகப் பேருந்துகள்—39 தினசரி 121 நடைகள்.

434—

பணிமனை அமைத்தல்

வினா எண் 32865—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காவேரிப்பட்டினம் தொகுதி, போச்சம்பள்ளியை தலைமையிடமாகக் கொண்டு போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

போச்சம்பள்ளிக்கு அருகில் உள்ள கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, தருமபுரி ஆகிய நகரங்களில் பணிமனைகள் ஏற்கெனவே அருகருகே அமைக்கப்பட்டுள்ளது. மேலும், போச்சம்பள்ளியை மையமாகக் கொண்டு பேருந்துகள் இயக்கப்படாத காரணத்தினாலும் பணிமனை ஒன்றை தற்சமயம் போச்சம்பள்ளியில் துவக்கிட இயலாத நிலையுள்ளது.

2011 ஜனவரி 13]

435—

விரைவு சொகுசுப் பேருந்து

வினா எண் 32868—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினத்திலிருந்து சென்னைக்கு அரசு விரைவு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சென்னை, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தடம் எண்.427 மேட்டூர்-சென்னைக்கு காவேரிப்பட்டினம் வழியாக தினசரி ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன.

2. காவேரிப்பட்டினம்-சென்னை (வழி) கிருஷ்ணகிரி, வாணியம்பாடி, வேலூர் தடத்தின் நீளம் 274 கி.மீ. ஆகும். இதில் காவேரிப்பட்டினம் வழியாக சென்னைக்கு சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், தருமபுரி மண்டலம் மூலமாக சொகுசுப் பேருந்துகளும், சாதாரண பேருந்துகளும் கீழ்க்கண்ட இடங்களிலிருந்து இயக்கப்பட்டு வருகின்றன:

வ. எண்	தடம்	பேருந்துகளின் எண்ணிக்கை
(1)	தருமபுரி-சென்னை (வழி) காவேரிபட்டினம், கிருஷ்ணகிரி.	2 சொகுசுப் பேருந்து 4 சாதாரண பேருந்து.
(2)	ஒகேனக்கல்-சென்னை (வழி) காவேரிப்பட்டினம், கிருஷ்ணகிரி.	1 சொகுசுப் பேருந்து
(3)	பெண்ணாகரம்-சென்னை (வழி) காவேரிப்பட்டினம், கிருஷ்ணகிரி.	1 சொகுசுப் பேருந்து
(4)	மாரண்டஅள்ளி-சென்னை (வழி) பாலக்கோடு, காவேரிப்பட்டினம், கிருஷ்ணகிரி.	1 சாதாரண பேருந்து
	மொத்தம்	9 பேருந்துகள்

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU சட்டமன்றம் வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இவ்வாறு பல்வேறு இடங்களிலிருந்து இயக்கப்படும் 9 பேருந்துகளும், காவேரிப்பட்டினத்தில் நிறுத்தப்பட்டு பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்கின்றன. மேற்படி பேருந்து வசதிகள் பயணிகள் பயன்படுத்திக் கொள்ள போதுமானதாக உள்ளன.

436—

புதிய போக்குவரத்துக் கோட்டம் அமைத்தல்

வினா எண் 32869—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

"கிருஷ்ணகிரி மாவட்டத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய போக்குவரத்துக் கோட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?"

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலத்தின்மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 6 கிளைகள் உள்ளது. இந்நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய போக்குவரத்துக் கோட்டம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

437—

புதிய பேருந்து

வினா எண் 32870—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலிருந்து திருவண்ணாமலை, செஞ்சி, திண்டிவனம் வழியாக புதுச்சேரிக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருப்பத்தூரிலிருந்து கொட்டகுப்பத்திற்கு (வழி) திருவண்ணாமலை, செஞ்சி, திண்டிவனம், புதுச்சேரி புதிய தடப் பேருந்து 24-06-2007 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

438—

பேருந்து இயக்குதல்

வினா எண் 32886—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் ஒன்றியம், தனிக்கிலாம்பட்டு, கிங்கிலிவாடி கிராமத்திற்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருக்கோவிலூரிலிருந்து தனிக்கிலாம்பட்டு கிராமத்திற்கு புறநகரத் தடம் எண் 326-ன் வாயிலாக 13-4-2007 முதல் தினசரி இரண்டு நடைகள் இயக்கப்படுகிறது. தனிக்கிலாம்பட்டு-கிங்கிலிவாடி வழித்தட நீளம் 0.5 கிலோ மீட்டர் ஆகும். 40 குடும்பங்களே வசிக்கும் கிங்கிலிவாடி கிராமத்திற்கு தனிக்கிலாம்பட்டு கிராமத்திலிருந்து பேருந்து சென்று திரும்புவதற்கு போதுமான அளவிற்கு (சாலை) வசதிகள் இல்லை. மேலும் அரசு நிர்ணயித்துள்ள விதிகளின்படி 10 கிலோ மீட்டருக்கு குறைவான வழித்தடப் பகுதிகள் அனைத்துமே பேருந்து வசதிபெற்ற பகுதிகளாகவே கருதிட வேண்டும் என்பதனால் கிங்கிலிவாடி கிராமம் பேருந்து வசதி பெற்ற பகுதியாகவே கருதப்படுகிறது.

439—

பேருந்து இயக்குதல்

வினா எண் 32888—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கோவிலூரிலிருந்து ஆற்காடு வழியாக சென்னைக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை.—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருக்கோவிலூரிலிருந்து ஆற்காடு வழியாக சென்னைக்கு ஒரு புறநகரப் பேருந்து 13-4-2007 முதல் தினசரி இரண்டு நடைகள் இயக்கப்படுகிறது.

440—

விமான போக்குவரத்து வசதி

வினா எண் 32913—திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னைக்கும் ரங்கூனுக்கும் நேரடியாக விமான போக்குவரத்து வசதி ஏற்படுத்த மத்திய அரசை, தமிழக அரசு வலியுறுத்துமா?

விடை.—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சென்னையிலிருந்து ரங்கூனுக்கு தற்போது நேரடி விமான சேவை இல்லை. மேலும் தற்போது இயங்கும் விமான நிறுவனங்களிடமிருந்தோ அல்லது புதிய விமான நிறுவனங்களிடமிருந்தோ சென்னையிலிருந்து நேரடியாக ரங்கூனுக்கு விமான சேவை ஏற்படுத்துவதற்கான எந்த கோரிக்கையும் பெறப்படவில்லை என்று இந்திய விமான நிலைய ஆணையம் தெரிவித்துள்ளதால் சென்னையிலிருந்து ரங்கூனுக்கு நேரடி விமானம் இயக்க மத்திய அரசை வலியுறுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

441—

புதிய பேருந்து

வினா எண் 33156—திரு. ச. லட்சுமணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) தேனி மாவட்டம், போடிநாயக்கனூரிலிருந்து கஜானாப்பாறை வழியாக கேரளா மாநிலம் மூணாறுக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போடிநாயக்கனூரிலிருந்து கஜானாப்பாறை வழியாக மூணாறு வரை உள்ள வழித்தடத்தை ஆய்வு செய்தபோது, அவ்வழித்தடத்திலுள்ள பைசன்வேலியில் இருந்து குஞ்சுதண்ணி வரையிலான 8.8 கி.மீ சாலை மிகவும் குறுகிய வளைவுகளாகவும், கடுமையான இறக்கமான சாலையாகவும் உள்ளதால் கோரிக்கையில் குறிப்பிட்டவாறு பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. இருப்பினும், தமிழ்நாட்டிலிருந்து கேரளா மாநிலம், கஜானாப்பாறைக்கு பேருந்து வசதி செய்து தரக்கோரி தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருவதன் அடிப்படையில் போடியிலிருந்து கஜானாப்பாறை வரை பேருந்து இயக்க இரு மாநிலங்களிடையே நடைபெறும் ஒப்பந்தத்தின் போது வலியுறுத்தப்படும்.

442—

பேருந்து வசதி

வினா எண் 33203—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) ஓமலூரிலிருந்து சங்ககிரி, பவானி, காங்கேயம், தாராபுரம் வழியாக பழனிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓமலூர்-பழனி (வழி) சங்ககிரி, பவானி, காங்கேயம், தாராபுரம் வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாகும். எனினும் கடந்த 17-5-2007 முதல் சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக

புறநகர் பேருந்து ஒன்று ஓமலூரிலிருந்து தாரமங்கலம், சங்ககிரி, ஈரோடு, காங்கேயம் வழியாக பழனி வரை தினசரி 2 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அப்பகுதி மக்களுக்கு இதுவே போதுமானதாகும்.

443—

கூடுதல் பேருந்து வசதி

வினா எண் 33395—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, குத்தாலம்-கதிராமங்கலம்-கஞ்சனூர் சூரியனார் கோயில், ஆடுதுறை, கும்பகோணம் வரை கூடுதலாகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குத்தாலம்-கும்பகோணம் (வழி) கதிராமங்கலம், கஞ்சனூர், சூரியனார் கோயில், ஆடுதுறை, திருவிடைமருதூர் தடத்தின் நீளம் 32 கி.மீ ஆகும்.

தற்போது கும்பகோணத்திலிருந்து கீழ்க்கண்ட வழித்தடங்களில் இயக்கப்பட்டு வரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகர் பேருந்துகள் மற்றும் மக்கள் பயன்பாடு விவரம் பின்வருமாறு:

தடம் எண்	தட விவரம்	வழி	இயக்கப்படும் நடைகள் விவரம் மக்கள் பயன்பாடு (OR)	இயக்கப்படும் நடைகளில் சராசரி
A2A	கும்பகோணம்-குத்தாலம்	வேப்பத்தூர், திருமங்கலக்குடி, சூரியனார்கோயில், கஞ்சனூர், கதிராமங்கலம்.	14	50%

2011 ஜனவரி 13]

A2B	கும்பகோணம்-குத்தாலம்	வேப்பத்தூர், திருமங்கலக்குடி, சூரியனார்கோயில், கஞ்சனூர், கதிராமங்கலம்	10	46%
	கும்பகோணம்-கதிராமங்கலம்	வேப்பத்தூர், திருமங்கலக்குடி, சூரியனார்கோயில், கஞ்சனூர்	4	
A38	கும்பகோணம்-திருலோகி	வேப்பத்தூர், திருமங்கலக்குடி, சூரியனார்கோயில், துகிலி	8	44%
	கும்பகோணம்-திருலோகி	வேப்பத்தூர், திருமங்கலக்குடி, திருப்பனந்தாள்	4	
	கும்பகோணம்-திருமங்கலக்குடி	வேப்பத்தூர்	2	
A27	கும்பகோணம்-அணைக்கரை	திருவிடைமருதூர், ஆடுதுறை, திருமங்கலக்குடி, திருப்பனந்தாள்	12	57%
B27	கும்பகோணம்-அணைக்கரை	திருவிடைமருதூர், ஆடுதுறை, திருமங்கலக்குடி, திருப்பனந்தாள்	11	47%
	கும்பகோணம்-பரவனூர்	திருவிடைமருதூர், ஆடுதுறை, திருமங்கலக்குடி, திருப்பனந்தாள்	1	
A10A	ஆடுதுறை-அணைக்கரை	திருமங்கலக்குடி திருப்பனந்தாள்	8	35%
	ஆடுதுறை-திருப்பனந்தாள்	திருமங்கலக்குடி	10	
	கும்பகோணம்-செருகடம்பூர்	திருமங்கலக்குடி	4	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

மேலும் தனியார் புறநகர் பேருந்து ஒன்றின்மூலம் மயிலாடுதுறை தஞ்சாவூர் (வழி) குத்தாலம், கதிராமங்கலம், சூரியனார்கோவில், திருமங்கலக்குடி தடத்தில் 4 நடைகளும், மயிலாடுதுறை-கும்பகோணம் இதே வழித்தடத்தில் 6 நடைகளும் இயக்கி வருகின்றன. மேற்குறிப்பிட்ட கழக நகர் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்து ஆகியவைகள்மூலம் தற்போது இயக்கப்பட்டு வரும் நடைகளே இப்பகுதி வாழ் மக்களின் பயன்பாட்டிற்கு போதுமானதாக அமைந்துள்ளது.

~~444~~—

புதிய விரைவுப் பேருந்து

வினா எண் 33397—திரு. அ. ராஜன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

நாகர்கோவிலிருந்து வேளாங்கண்ணிக்குப் புதிய விரைவுப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு லிமிடெட் மூலமாக கீழ்க்காணும் பேருந்துகள் நாகர்கோவில் வழியாக வேளாங்கண்ணிக்கு இயக்கப்பட்டு வருகின்றன.

வ. எண்	தடம் எண்	செல்லுமிடம்	வழி	மொத்த பேருந்துகள்	மொத்த நடைகள்
1	560சி	மார்த்தாண்டம்-வேளாங்கண்ணி	நாகர்கோவில்	2	2
2	560கே	களியக்காவிளை-வேளாங்கண்ணி	நாகர்கோவில்	2	2
3	560	மௌகுமேடு-வேளாங்கண்ணி	நாகர்கோவில்	2	2
4	771	திருவனந்தபுரம்-வேளாங்கண்ணி	நாகர்கோவில்	2	2

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

5	561	கன்னியாகுமரி-வேளாங்கண்ணி	நாகர்கோவில்	2	2
6	777	கொல்லம்-வேளாங்கண்ணி	நாகர்கோவில்	2	2
		மொத்த பேருந்துகள்/நடைகள்		12	12

நாகர்கோவில்-வேளாங்கண்ணி உள்ளிட்ட பயணிகள் மேற்படி பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக உள்ளது. இந்நிலையில் தற்போது நாகர்கோவில்-வேளாங்கண்ணி தடத்தில் நேரடிப் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

445—

புதிய பேருந்து

வினா எண் 33863—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கரூரிலிருந்து புலியூர், உப்பிடமங்கலம், சேங்கல், பஞ்சப்பட்டி, கொசூர், தோகைமலை வழியாகத் திருச்சி வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர்-திருச்சி (வழி) புலியூர், உப்பிடமங்கலம், சேங்கல், பஞ்சப்பட்டி, கொசூர், தோகைமலை வழித்தட நீளம் 97.1 கி.மீ ஆகும். இவ்வழித்தடம் கரூரிலிருந்தது திருச்சி செல்ல சுற்று வழித்தடம் ஆகும். எனவே, இவ்வழித்தடத்தில் நேரடி பயணிகள் பயணம் செய்ய வாய்ப்பில்லை. இருப்பினும் கரூர்-புலியூர் வழித்தடத்தில் ஒவ்வொரு ஐந்து நிமிட இடைவெளியிலும், புலியூர்-உப்பிடமங்கலம்-சேங்கல்-பஞ்சப்பட்டி வழித்தடத்தில் 10 அரசுப் பேருந்துகள் மொத்தம் 38 நடைகளிலும், 2 தனியார் பேருந்துகள் 12 நடைகளிலும், பஞ்சப்பட்டி-கொசூர் வழித்தடத்தில் 4 அரசுப் பேருந்துகள் 10 நடைகளிலும், கொசூர்-தோகைமலை-திருச்சி வழித்தடத்தில் 8 அரசுப் பேருந்துகள் 29 நடைகளிலும், 9 தனியார் பேருந்துகள் 44 நடைகளிலுமாக பகுதி வாரியாக பேருந்து வசதி பெற்றுள்ளது.

[2011 ஜனவரி 13

446—

புதிய பேருந்து இயக்குதல்

வினா எண் 33864—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறிலிருந்து குளித்தலை, பஞ்சப்பட்டி, தரகம்பட்டி, நல்லூரான்பட்டி, குஜிலியம்பாறை, வேடசந்தூர், ஒட்டன்சத்திரம் வழியாகப் பழனி வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என்.நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முசிறி-பழனி (வழி) குளித்தலை, பஞ்சப்பட்டி, தரகம்பட்டி, நல்லூரான்பட்டி, குஜிலியம்பாறை, வேடசந்தூர், ஒட்டன்சத்திரம் வழித்தட நீளம் 142.0 கி.மீ ஆகும். முசிறி-குளித்தலை வழித்தடத்தில் ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகிறது. குளித்தலை-பஞ்சப்பட்டி-தரகம்பட்டி வழித்தடத்தில் தினசரி 9 அரசு பேருந்துகள் 32 நடைகளிலும், 3 தனியார் பேருந்துகள் 18 நடைகளிலும் இயக்கப்படுகிறது. தரகம்பட்டி-நல்லூரான்பட்டி-குஜிலியம்பாறை வழித்தடத்தில் 1 அரசு பேருந்து 6 நடைகளிலும், 1 தனியார் பேருந்து 4 நடைகளிலும், குஜிலியம்பாறை-வேடசந்தூர் வழித்தடத்தில் 1 அரசு பேருந்து 18 நடைகளிலும், 2 தனியார் பேருந்து 24 நடைகளிலும், வேடசந்தூர்-ஒட்டன்சத்திரம் வழித்தடத்தில் 2 அரசு பேருந்துகள் 16 நடைகளிலும் 3 தனியார் பேருந்துகள் 30 நடைகளிலும் இயக்கப்படுகின்றன. ஒட்டன்சத்திரம்-பழனி வழித்தடத்தில் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

எனவே கோரிக்கையின் வழித்தடம் முழுவதும் பகுதி பகுதியாக மேற்கண்டுள்ளவாறு தற்போது போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது.

447—

புதிய பேருந்து

வினா எண் 33865—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) மணப்பாறையிலிருந்து வையம்பட்டி, பாலவிடுதி, தரகம்பட்டி, கானியாளம்பட்டி, ஜெகதாபி, உப்பிடமங்கலம், புலியூர், கரூர் வழியாகத் திருப்பூர் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என்.நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மணப்பாறை-திருப்பூர் (வழி) வையம்பட்டி, பாலவிடுதி, தரகம்பட்டி, கானியாளம்பட்டி, ஜெகதாபி, உப்பிடமங்கலம், புலியூர், கரூர் வழித்தடம் சுற்று வழித்தடம் ஆகும். இவ்வழித்தடத்தில் நேரடி பயணிகள் பயணம் செய்ய வாய்ப்பு இல்லை. இதனால் பேருந்துக்கு வசூல் இருக்காது. இருப்பினும் இவ்வழித்தடம் முழுவதும் கீழ்கண்டவாறு பகுதி பகுதியாக நன்கு பேருந்து வசதி பெற்றுள்ளது:—

	தினசரி இயக்கப்படும் பேருந்துகள்/நடைகள்	
1. மணப்பாறை தரகம்பட்டி (வழி) வையம்பட்டி, பாலவிடுதி. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி மண்டலம்	5	26
தனியார்	4	18
மொத்தம்	9	44
2. தரகம்பட்டி-கரூர் (வழி) உப்பிடமங்கலம். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி மண்டலம்	7	34
தனியார்	6	23
மொத்தம்	13	57

மேலும், கரூர்—கோயம்புத்தூர் வழித்தடத்தில் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியில் ஒரு பேருந்து வீதம் இயக்கம் செய்யப்பட்டு வருகிறது.

448—

புதிய நகரப் பேருந்து

வினா எண் 33871—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து வெள்ளியணை, லந்தகோட்டை, மஞ்சநாயக்கன்பட்டி, காணியாளம்பட்டி, தரகம்பட்டி வழியாக தரகம்பட்டி வரை புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என்.நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர்-தரகம்பட்டி (வழி) வெள்ளியணை, லந்தகோட்டை, மஞ்சநாயக்கன்பட்டி, காணியாளம்பட்டி, வழித்தட நீளம் 41.3 கி.மீ ஆகும். எனவே, இவ்வழித்தட நீளம் அரசாணைப்படி நகரப் பேருந்து இயக்க அதிகப்பட்ச தூரமான (பேருந்து வசதி பெற்ற பகுதியில்) 35.0 கி.மீ.க்கு மேல் உள்ளதால் நகரப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. மேலும் கரூர், வெள்ளியணை வழித்தடத்தில் சராசரியாக ஒவ்வொரு பத்து நிமிட இடைவெளியில், வெள்ளியணை-லந்தக்கோட்டை மஞ்சநாயக்கன்பட்டி-காணியாளம்பட்டி-தரகம்பட்டி வழித்தடத்தில் தினசரி 10 பேருந்துகள் பகுதி வாரியாக 34 நடைகளாக இயக்கப்பட்டு வருகிறது. கரூர்-தரகம்பட்டி வழித்தடம்-முழுவதும் நேரிடையாகவும், பகுதி பகுதியாகவும் இயக்கப்பட்டு தற்போது போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது.

449—

புதிய பேருந்து

வினா எண் 33874—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

அ) பள்ளப்பட்டியிலிருந்து பாளையம், தரகம்பட்டி, கொசூர், தோகைமலை, திருச்சி வழியாக சென்னைக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என்.நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், மூலமாக தடம் எண் 433-ல் பள்ளப்பட்டியிலிருந்து சென்னைக்கு கரூர், குளித்தலை, முசிறி வழியாக தினசரி 2 பேருந்துகள் 4 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பேருந்து வசதிகளை பள்ளப்பட்டியிலிருந்து சென்னை செல்லும் நேரடிப் பயணிகள் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக உள்ளது. இந்நிலையில் பள்ளப்பட்டியிலிருந்து சென்னைக்கு பாளையம், தரகம்பட்டி, கொசூர், தோகமலை, திருச்சி மார்க்கத்தில் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

450—

புதிய பேருந்து

வினா எண் 33875—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறையிலிருந்து தோகமலை, தரகம்பட்டி, ஜெகதாபி, வெள்ளியணை, கோயம்புத்தூர் வழியாக கரூருக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என்.நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மணப்பாறை கோயம்புத்தூர் (வழி) தோகமலை, தரகம்பட்டி, ஜெகதாபி, வெள்ளியணை, கரூர் வழித்தடம் சுற்று வழித்தடம் ஆகும். இவ்வழித்தடத்தில் நேரடி பயணிகள் பயணம் செய்ய வாய்ப்பு இல்லை. இதனால் பேருந்துக்கு வருவாய் இருக்காது.

[2011 ஜனவரி 13

ஆனால் கோரிக்கை வழித்தடத்தில் கும்பகோணம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் லிமிடெட், திருச்சி மண்டலம், சகோதரப் போக்குவரத்து கழகங்கள் தனியார் பேருந்துகள் மூலமாக தினசரி 59 பேருந்துகள் 268 நடைகளாக பகுதி, பகுதியாக இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் கரூர்-கோயம்புத்தூர் வழித்தடத்தில் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியில் ஒரு பேருந்து வீதம் இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. இதுவே அப்பகுதி மக்களுக்கு போதுமானதாகும்.

451—

பேருந்து வசதி

வினா எண் 33881—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து பெங்களூருக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என்.நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர்-பெங்களூர் தடம் தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய இருமாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், இத்தடத்தில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிட்., மூலமாக பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடக்கும் இருமாநில ஒப்பந்த பேச்சுவார்த்தையின் போது பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

452—

நகரப் பேருந்து

வினா எண் 34052—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) பூம்புகாரிலிருந்து நாங்கூர் வழியாக சீர்காழிக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என்.நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி-பூம்புகார் (வழி) வைத்தீஸ்வரன்கோவில், தென்னங்குடி, அன்னங்கோயில், நாங்கூர், மங்கைமடம், திருவெண்காடு, மேலையூர் தடத்தின் நீளம் 32 கி.மீ ஆகும்.

தடம்	தட நீளம்	நடைகள்
சீர்காழி-அளக்குடி	26X	4
சீர்காழி-வடரெங்கம்	20X	2
சீர்காழி-பழையார்	29X	4
சீர்காழி-பூம்புகார் (வழி) நாங்கூர்	32X	4
		=388 Kms.

சீர்காழி-பூம்புகார் (வழி) வைத்தீஸ்வரன்கோவில், தென்னங்குடி, அன்னங்கோவில், நாங்கூர், மங்கைமடம், திருவெண்காடு, மேலையூர் தடத்தில் மேற்குறிப்பிட்ட தடம் எண் A17 நகரப் பேருந்துமூலம் தினசரி 4 நடைகள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.

453—

புதிய பேருந்து

வினா எண் 34064—திரு. என்.ஆர். ரங்கராஜன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டிணத்திலிருந்து சென்னைக்குப் புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என்.நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அதிராம்பட்டிணம்-சென்னை (வழி) பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், கும்பகோணம் தடத்தின் நீளம் 387.80 கி.மீ. ஆகும். கோரிக்கை தடத்தில் தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலம் பேருந்து ஒன்று இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது பட்டுக்கோட்டை-சென்னை (வழி) ஒரத்தநாடு, தஞ்சாவூர், கும்பகோணம் தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் பட்டுக்கோட்டை கிளை தடம் எண் 242C மற்றும் 242D சூப்பர் டீலக்ஸ் பேருந்துகள் மூலம் 4 நடைகளும், தடம் எண் 242L மற்றும் 242M அல்ட்ரா டீலக்ஸ் மூலம் 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் பேராவூரணி-சென்னை (வழி) துறவிக்காடு, பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, தஞ்சாவூர், கும்பகோணம் தடத்தில் தடம் எண் 242G பேருந்துமூலம் 2 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது.

454—

மாநகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 34299—திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, பெரியபாளையம், கொசவன்பேட்டை, திருநிலை, அமிதாநெல்லூர், அக்கரபாக்கம் மற்றும் மஞ்சங்காரணை ஊராட்சிகளுக்கு மாநகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என்.நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கும்மிடிப்பூண்டி தொகுதியில் அடங்கிய பெரியபாளையத்திலிருந்து தற்போது கீழ்கண்ட தடங்களில் சென்னையின் முக்கிய இடங்களுக்கு மாநகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

2011 ஜனவரி 13]

வ. எண்	தடம் எண்	பேருந்து எண்ணிக்கை	புறப்படுமிடம்	சேருமிடம்
1.	532	2	வள்ளலார் நகர் (வழி) புதுவாயல், கொசவன்பேட்டை	பெரியபாளையம்
2.	547	2	வள்ளலார் நகர் (வழி) சிறுவாபுரி, கொசவன்பேட்டை	பெரியபாளையம்
3.	514	2	சென்னை புறநகர் பேருந்து நிலையம் (வழி) மஞ்சங்காரணை	பெரியபாளையம்
4.	562	2.	அம்பத்தூர் தொழிற்பேட்டை (வழி) மஞ்சங்காரணை	பெரியபாளையம்
5.	592	4	வள்ளலார் நகர் (வழி) மஞ்சங்காரணை	பெரியபாளையம்

மேலும் முதல்கட்டமாக மாவட்ட பகுதிகளில் அமைந்துள்ள முக்கிய பிரதான சாலைகளில் உள்ள இடங்கள் வழியாக மாநகரப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

455—

பேருந்து வசதி

வினா எண் **34384—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து மானாமதுரை, தெ.புதுக்கோட்டை, எமனேஸ்வரம், நயினார்கோயில், பொட்டகவயல் வழியாக இராமநாதபுரம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து மானாமதுரைக்கும் மானாமதுரையிலிருந்து மேலநெட்டூர், தெ.புதுக்கோட்டை வழியாக இளையான்குடி வரைக்கும், இளையான்குடியிலிருந்து பரமக்குடி வரைக்கும், பரமக்குடியிலிருந்து எமனேஸ்வரம், பொட்டகவயல் வழியாக இராமநாதபுரம் வரைக்கும் பகுதி பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

456—

பேருந்து இயக்குதல்

வினா எண் 34385—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து, மேலநெட்டூர், தெ.புதுக்கோட்டை, எமனேஸ்வரம், பொட்டகவயல் வழியாக இராமநாதபுரம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து, மேலநெட்டூர் வழியாகவும், தெ.புதுக்கோட்டை வழியாகவும் இளையான்குடி வரைக்கும், இளையான்குடியிலிருந்து பரமக்குடி வரைக்கும், பரமக்குடியிலிருந்து எமனேஸ்வரம், பொட்டகவயல் வழியாக இராமநாதபுரம் வரைக்கும் பகுதி பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

457--

பேருந்து வழித்தடம் நீட்டித்தல்

வினா எண் 34386—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) மானாமதுரையிலிருந்து, மேலநெட்டூர், தெ.புதுக்கோட்டை, எமனேஸ்வரம் வழியாக நயினார்கோயில் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து மேலநெட்டூர் வழியாகவும், தெ.புதுக்கோட்டை வழியாகவும் அரசு பேருந்துமூலம் 34 நடைகள் இயக்கப்படுகின்றன. இளையான்குடியிலிருந்து எமனேஸ்வரம் வழியாக பரமக்குடிக்கும், பரமக்குடியிலிருந்து எமனேஸ்வரம் வழியாக நயினார்கோவிலுக்கும் அதிக அளவில் அரசுப் பேருந்துகளும், தனியார் பேருந்துகள்மூலம் 12 நடைகளுமாக பகுதி, பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

458–

பேருந்து வசதி

வினா எண் 34388—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரையிலிருந்து பரமக்குடி, முதுகுளத்தூர் வழியாக, கடலாடி வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மானாமதுரையிலிருந்து பரமக்குடி, முதுகுளத்தூர் வழியாக நாள் ஒன்றுக்கு நேரடியாக 6 நடைகள், கடலாடிக்கு பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், மானாமதுரையிலிருந்து பரமக்குடிக்கு 117 நடைகளும், பரமக்குடியிலிருந்து முதுகுளத்தூர் வழியாக கடலாடிக்கு 26 நடைகளும் நாள் ஒன்றுக்கு இயக்கப்படுகின்றன. முதுகுளத்தூரிலிருந்து கடலாடிக்கு நகர் பேருந்துகள்மூலம் 31 நடைகளும், புறநகர் பேருந்துகள்மூலம் 35 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 9 நடைகளும் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன.

[2011 ஜனவரி 13

459—

நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 34389—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து மிளகனூர், கட்டனூர், அழகாபுரி, எ.முக்குளம் *(வழி)* புல்வாய்க்கரை வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை-புல்வாய்க்கரை வழித்தடத்தில் இளவனி முதல் சேந்தநதி வரை சாலை மிகவும் மோசமான நிலையிலும், தரைப்பாலம் சேதமடைந்த நிலையிலும் உள்ளதால் பேருந்து இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

460—

பேருந்து வசதி

வினா எண் 34390—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து பார்த்திபனூர், நரிக்குடி வழியாக அருப்புக்கோட்டைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரையிலிருந்து பார்த்திபனூர், நரிக்குடி வழியாக அருப்புக்கோட்டைக்கு நேரிடையாக 5 நடைகள் பேருந்து இயக்கப்படுகின்றன. மானாமதுரையிலிருந்து அருப்புக்கோட்டைக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

தனியார் பேருந்துகளும் உள்ளன. இவையே போதுமானதாகும். மேலும், மானாமதுரையிலிருந்து கமுதிக்கும், கமுதியிலிருந்து அருப்புக்கோட்டைக்கும் பகுதி, பகுதியாக அதிக அளவில் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன.

461—

புறநகர் பேருந்து

வினா எண் 34393—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலிருந்து, மானாமதுரை, மேலநெட்டூர் வழியாக இளையான்குடிக்கு புறநகர் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மதுரையிலிருந்து மானாமதுரைக்கு அரசு பேருந்துமூலம் நாள் ஒன்றுக்கு 155 நடைகளும், மானாமதுரையிலிருந்து மேலநெட்டூருக்கு நகர் பேருந்துமூலம் 22 நடைகளும், மேலநெட்டூர், இளையான்குடிக்கு நகர் பேருந்துமூலம் 12 நடைகளும், பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், மதுரையிலிருந்து இளையான்குடிக்கு தனியார் பேருந்துமூலம் 4 நடைகளும், அரசு பேருந்துமூலம் 4 நடைகளும் நேரடியாக இயக்கப்பட்டு வருகின்றன.

462—

பேருந்து வசதி

வினா எண் 34395—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட கடற்கரைப் பகுதிகளில் சுற்றுலாத் தலங்களை இணைத்துப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் அமைந்துள்ள கடற்கரை சுற்றுலாத்தலங்களாகிய இராமேஸ்வரம், தேவிப்பட்டிணம், ஏர்வாடி தர்கா, சேதுக்கரை, உத்திரகோசமங்கை ஆகிய இடங்களுக்கு கீழ்க்கண்டவாறு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) வரையறுக்கப்பட்டதில் காரைக்குடி மண்டலப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

காரைக்குடி-இராமேஸ்வரம்	24 நடைகள்
மதுரை-இராமேஸ்வரம்	90 நடைகள்
சிவகங்கை-இராமேஸ்வரம்	15 நடைகள்
திருப்பத்தூர்-இராமேஸ்வரம்	12 நடைகள்
இராமநாதபுரம்-இராமேஸ்வரம்	258 நடைகள்
காரைக்குடி-தேவிப்பட்டிணம்	42 நடைகள்
காரைக்குடி-ஏர்வாடி	18 நடைகள்
இராமநாதபுரம்-ஏர்வாடி	83 நடைகள்
மதுரை-ஏர்வாடி	48 நடைகள்
இராமநாதபுரம்-சேதுக்கரை	25 நடைகள்
இராமநாதபுரம்-உத்திரகோசமங்கை	52 நடைகள்

463—

காான்கிரீட் தளம் அமைத்தல்

வினா எண் 34641—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனைக்கு கான்கிரீட் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பணிமனையில் பராமரிப்புக் கூடத்தில் போதுமான கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டு அதன்மூலம் அங்குள்ள பேருந்துகள் பராமரிக்கப்படுகின்றன.

464—

நகரப் பேருந்து

வினா எண் 34644—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், இராஜகம்பீரத்திலிருந்து மானாமதுரை வழியாக சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் வரை நகரப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராஜகம்பீரத்திலிருந்து மானாமதுரைக்கும், மானாமதுரையிலிருந்து சிவகங்கைக்கும், சிவகங்கையிலிருந்து சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கும் பகுதி பகுதியாக மிக அதிக அளவில் பேருந்து வசதி உள்ளது.

465—

பேருந்து வசதி

வினா எண் 34658—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம், வைகுந்தம் வழியாக மல்லசமுத்திரம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடியிலிருந்து கொங்கணாபுரம், வைகுந்தம் வழியாக மல்லசமுத்திரம் வரை உள்ள பகுதிவாரியான புறநகர் மற்றும் நகரப் பேருந்து வசதி பின்வருமாறு:—

வ. எண்	வழித்தடம்	அரசு பேருந்து		தனியார் பேருந்து	
		புறநகர்	நகர்	புறநகர்	நகர்
1	எடப்பாடி-காளிப்பட்டி (வழி) கொங்கணாபுரம், வைகுந்தம்.	—	6	—	—
2	எடப்பாடி-கொங்கணாபுரம்	92	112	142	—
3	கொங்கணாபுரம்-வைகுந்தம்	—	6	—	—
4	வைகுந்தம்-காளிப்பட்டி	—	18	2	—
5	கொங்கணாபுரம்-காளிப்பட்டி.	—	4	—	—
6	காளிப்பட்டி-மல்லசமுத்திரம்	—	100	12	40

மேற்கண்ட பேருந்து வசதியே அப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவைக்குப் போதுமானதாகும்.

466—

பேருந்து வசதி

வினா எண் 34732—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையிலிருந்து கலசப்பாக்கம், வில்வாரணி, சிறுவள்ளூர் வழியாக மேல்சோழங்குப்பம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை-மேல்சோழங்குப்பம் (வழி) கலசப்பாக்கம், வில்வாரணி, சிறுவள்ளூர் தடத்தின் தூரம் 42 கி.மீ. ஆகும். திருவண்ணாமலை-மேல்சோழங்குங்குப்பம் (வழி) காஞ்சி என

2011 ஜனவரி 13]

2 அரசு பேருந்துகள் 18 நடைகளும், 3 தனியார் பேருந்துகள் 14 நடைகளும் இயக்கப்படுகின்றன. திருவண்ணாமலை-மேல்சோழங்குப்பம் (வழி) கலசப்பாக்கம் 2 தனியார் பேருந்துகள் 12 நடைகளும், திருவண்ணாமலை-வில்வாரணி (வழி) கலசப்பாக்கம் 2 நகரப் பேருந்துகள் 20 நடைகளும் இயக்கப்படுகின்றன. தற்போது இயக்கப்படும் நகரப் பேருந்துகளின் பயணிகள் அடர்வு 42% மாவட்ட பேருந்துகளின் பயணிகள் அடர்வு 79.24%-ஆக உள்ளதால் கோரிக்கை தடத்தில் புதிய பேருந்து இயக்க வாய்ப்பில்லை.

467—

சிற்றுந்து வசதி

வினா எண் 35166—திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் உட்புறச் சாலைகளுக்கு சிற்றுந்துகளை இயக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது நடைமுறையில் உள்ள திட்டத்தின்படி சென்னை பெருநகரத்தின் எந்தவொரு பகுதியும் கிராமப்புறம் என்ற விளக்கத்தின்கீழ் வராது. எனவே சென்னை மாநகரில் உட்புறச் சாலைகளுக்கு சிற்றுந்துவிட சாத்தியம் இல்லை.

468—

புதிய பேருந்து

வினா எண் 35263—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தொப்பூரிலிருந்து பொம்மிடி, அரூர், திருப்பத்தூர் வழியாகச் சென்னைக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலம் மூலமாக, தொப்பூர் அருகிலுள்ள பொம்மிடி, அரூர் மற்றும் திருப்பத்தூரிலிருந்தும் நேரடியாக சென்னைக்கு பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, தொப்பூர் பயணிகள் நகரப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி பொம்மிடி வந்து அங்கிருந்து இயக்கப்படும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிட்., தருமபுரி மண்டலப் பேருந்தை பயன்படுத்தி சென்னை சென்றுவர ஏதுவாக உள்ளது. இந்நிலையில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட் மூலமாக தொப்பூரிலிருந்து—சென்னைக்கு, பொம்மிடி, அரூர், திருப்பத்தூர் வழியாக புதிய பேருந்து இயக்க சாத்தியமில்லை.

469—

புதிய பேருந்து

வினா என் **35264**—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியிலிருந்து ஏற்காட்டிற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தருமபுரி-ஏற்காடு (வழி) சேலம் தடத்தின் நீளம் 103 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் தருமபுரி முதல் சேலம் வரையும் மற்றும் சேலம் முதல் ஏற்காடு வரையும் பகுதிவாரியாக பேருந்து வசதி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலம்மூலம் செய்யப்பட்டுள்ளது. இதில் கோடைக்கால நாட்களில் மட்டும்தான் ஏற்காடு செல்லும் பயணிகளின் அடர்வு அதிகமாக காணப்படுகிறது. மற்ற நாட்களில் ஏற்காடு செல்லும் பயணிகளின் அடர்வு குறைந்து காணப்படுவதால், தருமபுரியிலிருந்து ஏற்காடு வழித்தடத்தில் புறநகர் பேருந்து ஒன்றை தற்சமயம் இயக்கிட இயலாத நிலையுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

470—

"வோல்வா" பேருந்து

வினா எண் 35265—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியிலிருந்து சென்னைக்கு "வோல்வா" பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (த.நா) லிமிடெட், சென்னை மூலம் தடம் எண் 427 மேட்டூரிலிருந்து சென்னைக்கு தருமபுரி வழியாக தினசரி ஒரு இரவு நேர அதிநவீன மிதவைப் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட் மூலமாக தருமபுரியிலிருந்து-சென்னைக்கு "வோல்வா" பேருந்து இயக்க திட்டம் ஏதும் இல்லை.

471—

புதிய பேருந்து

வினா எண் 35266—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம் பொம்மிடியிலிருந்து கோயம்புத்தூருக்குப் புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பொம்மிடி-கோயம்புத்தூர் (வழி) தருமபுரி, மேட்டூர் வழித்தடத்தின் நீளம் 257 கி.மீ. ஆகும். இதில், ஏற்கெனவே, சென்னையிலிருந்து பொம்மிடி வழியாக கோயம்புத்தூருக்கு

[2011 ஜனவரி 13

விரைவு இரயில் ஒன்று பொம்மிடியைச் சார்ந்த பொதுமக்கள் பயன் பெறும் வகையில் இயக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் பொம்மிடியிலிருந்து கோயம்புத்தூர் செல்லும் நேரடி பயணிகள் யாரும் அதிக பயணக் கட்டணம் கொடுத்து பேருந்துகளில் விரும்பி பயணம் செய்ய மாட்டார்கள் என்பதால் தனியாக பேருந்து ஒன்றை தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலம்மூலம் தற்சமயம் இயக்கிட இயலாத நிலையுள்ளது.

472—

பேருந்து வசதி

வினா எண் 35351—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம், தியாகராயநகர், மயிலாப்பூரிலிருந்து செங்கற்பட்டு நகருக்கு சென்னை மாநகரப் பேருந்தினை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சென்னையின் முக்கியப் பகுதியான மந்தைவெளியிலிருந்து அடையாறு, கிண்டி, கூடுவாஞ்சேரி, மறைமலை நகர் வழியாக தடம் எண் 577-ல் 4 பேருந்துகளும், தி.நகரிலிருந்து செங்கற்பட்டுக்கு தாம்பரம், மறைமலை நகர் வழியாக தடம் எண் 500-ல் 6 பேருந்துகளும் 3-1-2008 முதல் இயக்கப்படுகின்றன. மேலும், தடம் எண் M500 (தாம்பரம்-செங்கற்பட்டு)-ல் 4 பேருந்துகள் தாம்பரத்திலிருந்து செங்கற்பட்டிற்கு 10-1-2008 முதல் இயக்கப்படுகின்றன.

473—

பேருந்து வசதி

வினா எண் 35352—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

காஞ்சிபுரத்திலிருந்து அனைத்து மாவட்ட தலைநகரங்களுக்கும் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரத்திலிருந்து தற்பொழுது வேலூர், விழுப்புரம், கிருஷ்ணகிரி, தஞ்சாவூர், திருச்சி, கடலூர், சேலம் ஆகிய மாவட்ட தலைநகரங்களுக்கு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தற்போது கீழ்க்காணும் அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகள் காஞ்சிபுரம் வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி தடப் பேருந்துகளில் காஞ்சிபுரத்தில் இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு முன்பதிவும் செய்யப்பட்டு வருகின்றன.

வ. எண்	தடம்	செல்லுமிடம்	வழி	மொத்த பேருந்துகள்	மொத்த நடைகள்
1.	995	திருப்பதி-நாகர்கோவில்	காஞ்சிபுரம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி	2	2
2.	831கே	சென்னை-பெங்களூரு	காஞ்சிபுரம், ஓசூர்	1	1
3.	834	கல்பாக்கம்-பெங்களூரு	காஞ்சிபுரம், ஓசூர்	2	2
		மொத்த பேருந்துகள்/நடைகள்		5	5

மேலும், பயணிகள் தேவைக்கு ஏற்ப காஞ்சிபுரத்திலிருந்து பிற மாவட்ட தலைநகருக்கு பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

474—

பேருந்து இயக்குதல்

வினா எண் 35487—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) காங்கேயத்திலிருந்து காங்கேயம் படியீர், தொட்டிபாளையம், மானூர் தாட்கோ, சிட்கோ, காசிபாளையம் வழியாக திருப்பூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயத்திலிருந்து படியூர், தொட்டிபாளையம் வழியாக ஊத்துக்குளி வரை தடம் எண் 20/16 மற்றும் சி6 ஆகிய இரு பேருந்துகள்மூலம் மூன்று தனிநடைகள் பேருந்துவசதி உள்ளது. தொட்டிபாளையம், மானூர் முதலிபாளையம், சிட்கோ, தாட்கோ, காசிபாளையம் வழியாக தடம் எண்கள் 47,47/16 மற்றும் 20/16 ஆகிய நகரப் பேருந்துகள்மூலம் திருப்பூர் வரை 23 தனிநடைகள் பேருந்து வசதி உள்ளன. இவ்வாறாக கோரிக்கை வழித்தடம் முழுமைக்கும் பகுதிவாரியாக பேருந்து வசதி உள்ளன.

475—

பேருந்து வசதி

வினா எண் 35832—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி-பண்ருட்டியிலிருந்து முத்துகிருஷ்ணாபுரம், பெத்தான்குப்பம் குறிஞ்சிப்பாடி வழியாக அன்னதானம்பேட்டைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டியிலிருந்து முத்துகிருஷ்ணாபுரம், பெத்தான்குப்பம், குறிஞ்சிப்பாடி வழியாக அன்னதானம்பேட்டை வரை நேரடி பேருந்து வசதி கோரும் வழித்தடங்களில் அடங்கியுள்ள அனைத்து கிராமங்களும் பண்ருட்டி மற்றும்

2011 ஜனவரி 13]

குறிஞ்சிப்பாடியிலிருந்து பகுதி வாரியாக பயணியர் புழக்கத்திற்கு ஏற்றவாறு நகரப் பேருந்து வசதிகள் அளிக்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:—

தடம் எண்	தடம்	பேருந்து எண்ணிக்கை	நடைகள்
டி 16ஏ	பண்ருட்டி-கடலூர் (வழி)-முத்துகிருஷ்ணாபுரம் பாலூர்	1	14
டி 16பி	பண்ருட்டி-கடலூர் (வழி)-முத்துகிருஷ்ணாபுரம் பாலூர்	1	14
டி 17ஏ	பண்ருட்டி-பெத்தான்குப்பம் வழி ஆண்டிக்குப்பம், சி.என். பாளையம், வானமாதேவி.	1	2
டி 17டி	பண்ருட்டி-பெத்தான்குப்பம் (வழி)-முத்துகிருஷ்ணாபுரம் பாலூர், சி.என். பாளையம் வானமாதேவி.	1	2
டி 20எ	பண்ருட்டி-குறிஞ்சிப்பாடி (வழி)-காடாம்புலியூர் வேகாக்கொல்லை சந்திப்புச்சாலை அன்னதானம்பேட்டை.	1	12
டி 20பி	பண்ருட்டி-குறிஞ்சிப்பாடி (வழி)—காடாம்புலியூர் ஏ.புதூர் அன்னதானம்பேட்டை.	1	10
டி 23	பண்ருட்டி-குறிஞ்சிப்பாடி (வழி)-சாத்திப்பட்டு, கீழ்மாம்பட்டு அன்னதானம்பேட்டை.	1	6

476—

விரைவுப் பேருந்து வசதி

வினா எண் 35872—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினத்திலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் தடம் எண் 427-ன்மூலம் மேட்டூரிலிருந்து சென்னைக்கு காவேரிப்பட்டினம் வழியாக தினசரி ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. மேலும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலம்மூலமாக தருமபுரியிலிருந்து சென்னைக்கு காவேரிப்பட்டினம் வழியாக தினசரி 2 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பேருந்து வசதிகளை காவேரிப்பட்டினம்-சென்னை உள்ளிட்ட பயணிகள் பயன்படுத்திக்கொள்ள போதுமானதாக உள்ளது.

477—

பேருந்து வசதி

வினா எண் 35889—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரிலிருந்து தீவட்டிப்பட்டி, பொம்மிடி, அரூர், ஊத்தங்கரை வழியாக சென்னைக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஓமலூரிலிருந்து தீவட்டிப்பட்டி, பொம்மிடி, அரூர், ஊத்தங்கரை வழியாக சென்னை வரையிலான வழித்தட நீளம் 371 கி.மீ. ஆகும். ஆனால் ஓமலூரிலிருந்து சேலம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் வழியாக சென்னை வரையிலான வழித்தட நீளம் 352 கி.மீ. ஆகும். எனவே, கோரிக்கை வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாதலால் இயக்க நேரம் மற்றும் பயணக்கட்டணம் அதிகரித்து பயணிகள் பாதிக்கப்படக்கூடும். மேலும் ஓமலூரிலிருந்து ஒவ்வொரு

2011 ஜனவரி 13]

ஐந்து நிமிட இடைவெளியில் சேலத்திற்கு பேருந்து வசதி உள்ளது. சேலத்திலிருந்து அரசு பேருந்துகள் மூலமாக விழுப்புரம் வழியாக சென்னைக்கு தினசரி 54 நடைகளும், வேலூர் வழியாக 6 நடைகளும் இயக்கப்படுகின்றன. மற்றும் சென்னையிலிருந்து சேலத்திற்கு அரசு பேருந்துகள் மூலமாக விழுப்புரம் மற்றும் வேலூர் வழித்தடத்தில் தினசரி 60 நடைகள் இயக்கப்படுகின்றன. இது தவிர அரசு விரைவுப் பேருந்துமூலமாக ஒவ்வொரு அரை மணிநேர இடைவெளியில் சென்னைக்கு பேருந்து வசதி உள்ளது. இதுவே போதுமானதாகும்.

478—

பேருந்து வசதி

வினா எண் 35890—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரிலிருந்து சித்தூர் வழியாக திருப்பதிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஓமலூரிலிருந்து சித்தூர் வழியாக திருப்பதிக்கு பேருந்து இயக்க கோரும் வழித்தடம் ஒரு புற மாநில வழித்தடமாகும். இவ்வழித்தடத்தில் இரு மாநிலங்களுக்கு இடையே உள்ள ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே பேருந்து இயக்கிட இயலும். இருப்பினும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம், மூலமாக தற்போது சேலத்திலிருந்து ஓமலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, சித்தூர் வழியாக திருப்பதிக்கு தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

479—

பேருந்து இயக்குதல்

வினா எண் 35891—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

ஓமலூரிலிருந்து தாரமங்கலம், சங்ககிரி, ஈரோடு வழியாக பழனிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஓமலூரிலிருந்து தாரமங்கலம், சங்ககிரி, ஈரோடு, காங்கேயம், தாராபுரம் வழியாக பழனி வரை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று 17-05-2007 முதல் தினசரி 2 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

480—

பேருந்து வசதி

வினா எண் 35892—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரிலிருந்து தாரமங்கலம், கொங்கணாபுரம், சங்ககிரி வழியாக பவானிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது ஓமலூரிலிருந்து தாரமங்கலம், கொங்கணாபுரம், சங்ககிரி வழியாக பவானி வரை உள்ள வழித்தடத்தில் இயக்கப்பட்டு வரும் பகுதி வாரியான பேருந்து விவரம் பின்வருமாறு:—

வ. எண்	வழித்தடம்	அரசு பேருந்து		தனியார் பேருந்து	
		புறநகர்	நகர்	புறநகர்	நகர்
1	ஓமலூர்-சங்ககிரி (வழி) தாரமங்கலம், கொங்கணாபுரம்.	70	–	34	–
2	சங்ககிரி-பவானி (வழி) கொமாரபாளையம்	58	94	188	16

2011 ஜனவரி 13]

மேற்கண்ட பேருந்து வசதியே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

481—

பேருந்து வசதி

வினா எண் 35893—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரிலிருந்து முத்துநாயக்கன்பட்டி, கே.ஆர். தோப்பூர் கருக்கல் வாடி வழியாக எளம்பிள்ளைக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஓமலூர்-எளம்பிள்ளை (வழி) முத்துநாயக்கன்பட்டி, கருக்கல்வாடி., கே.ஆர். தோப்பூர் வழித்தடத்தில் கே.ஆர். தோப்பூர் பவர் ஆபிஸ் முதல் கோட்டை மேடு வழியாக வெள்ளைபிள்ளையார் கோவில் வரையிலான 4.5 கி.மீ. சாலை பேருந்து இயக்க தகுதியற்ற நிலையில் உள்ளதால் கோரிக்கை வழித்தடத்தில் பேருந்து இயக்கிட வழி வகையில்லை. இருப்பினும் இவ்வழித்தடத்தில் உள்ள பகுதிகளுக்கு அரசு நகர் பேருந்துகள் 60 நடைகளிலும், தனியார் நகர் பேருந்துகள் 34 நடைகளிலுமாக இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஓமலூர்-கே.ஆர். தோப்பூர் வரை (கருக்கல்வாடி ஊரினை தவிர்த்து) மினி பேருந்து இரண்டும் கே.ஆர். தோப்பூர் முதல் எளம்பிள்ளை வரை 3 மினி பேருந்துகளும் இயங்கி வருகின்றன. இதுவே இப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவைக்குப் போதுமானதாகும்.

482—

பேருந்து இயக்குதல்

வினா எண் 35894—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரிலிருந்து தாராபுரம், செம்மாண்டடப்பட்டி, சின்ன திருப்பதி,

[2011 ஜனவரி 13

அன்பு நிலையம், மரக்கோட்டை வழியாக மேச்சேரிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம் நகரப் பேருந்து ஒன்று மூலம் ஓமலூரில் இருந்து தாராபுரம், செம்மாண்டப்பட்டி, சின்ன திருப்பதி, அன்பு நிலையம், ஓண்டி வீரனூர், மரக்கோட்டை வழியாக மேச்சேரிக்கு தினசரி 2 நடைகள் 23-5-2007 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

483—

புதிய வழித்தடப் பேருந்து

வினா எண் 35918—திரு. என். ஆர். ரங்கராஜன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து திருநெல்வேலிக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டையிலிருந்து திருநெல்வேலி செல்லும் பயணிகள் கும்பகோணம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்தைப் பயன்படுத்தி தஞ்சாவூர் வந்து அதன் வழியாக திருநெல்வேலிக்கும், திருநெல்வேலி வழியாக பிற இடங்களுக்கும் இயக்கப்படும் கீழ்க்காணும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக தடப் பேருந்து வசதிகளை பயன்படுத்திக் கொள்ளப் போதுமானதாக உள்ளது.

2011 ஜனவரி 13]

வ. எண்	தடம் எண்	செல்லுமிடம்	வழி	மொத்த பேருந்துகள்	நடைகள்
1	529	வேளாங்கன்னி-திருநெல்வேலி	தஞ்சாவூர்	2	2
2	560	வேளாங்கன்னி-மௌகுமேடு	தஞ்சாவூர் திருநெல்வேலி	2	2
3	560கே	வேளாங்கன்னி-களியக்காவிளை	தஞ்சாவூர் திருநெல்வேலி	2	2
4	560சி	வேளாங்கன்னி-மார்த்தாண்டம்	தஞ்சாவூர் திருநெல்வேலி	2	2
5	561	வேளாங்கன்னி-கன்னியாகுமரி	தஞ்சாவூர் திருநெல்வேலி	2	2
6	771	வேளாங்கன்னி-திருவனந்தபுரம்	தஞ்சாவூர் திருநெல்வேலி	2	2
7	777	வேளாங்கன்னி-கொல்லம்	தஞ்சாவூர் திருநெல்வேலி	2	2
		மொத்த பேருந்துகள்/நடைகள்		14	14

484—

முன்பதிவு அலுவலகம்

வினா எண் 36574—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு நகரில் நீண்ட தூரப் பேருந்துகளுக்கான முன்பதிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலமாக செங்கற்பட்டு நகரிலிருந்து பிற இடங்களுக்கு பிரத்தியேகமாக பேருந்து எதுவும் இயக்கப்படாத நிலையில் செங்கற்பட்டில் முன்பதிவு

[2011 ஜனவரி 13

அலுவலகம் அமைக்க சாத்தியமில்லை. செங்கற்பட்டு அருகாமையிலுள்ள தாம்பரத்தில் இக்கழக முன்பதிவு மையம் செயல்பட்டு வருகின்றன. இந்த வசதியானது செங்கற்பட்டு உள்ளிட்ட பகுதிகளில் பயணிகள் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக உள்ளது.

485—

புதிய பேருந்து

வினா எண் 36582—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்பாக்கத்திலிருந்து திருப்பதிக்கு நவீன வசதிகளுடன் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கல்பாக்கத்திலிருந்து-திருப்பதிக்கு பேருந்து இயக்குவது குறித்து தமிழ்நாடு-ஆந்திரா மாநிலங்கள், 3-வது துணை ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டவுடன் மேற்படி தடத்தில் நவீன வசதிகளுடன் புதிய பேருந்து இயக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

486—

புதிய பேருந்து இயக்குதல்

வினா எண் 37313—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்பாக்கத்திலிருந்து ஆந்திர மாநிலம் நெல்லூருக்கும் திருக்கழுக்குன்றம், செங்கற்பட்டு வழியாக கோயம்புத்தூருக்கும் புதிய பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், மூலமாக கல்பாக்கம்-நெல்லூர் தடம் தமிழ்நாடு-ஆந்திரா ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், இத்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடக்கும் தமிழ்நாடு-ஆந்திரா ஆகிய இருமாநில ஒப்பந்த பேச்சுவார்த்தையின் போதுதான் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க இயலும். மேலும், கல்பாக்கம்-கோயம்புத்தூருக்கு திருக்கழுக்குன்றம், செங்கற்பட்டு வழியாக புதிய பேருந்து இயக்குவது குறித்து அடுத்து வரும் நிதியாண்டில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குப் புதிய பேருந்துகள் பெறப்படும் போது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

487—

பேருந்து வசதி

வினா எண் 37320—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டிலிருந்து தி.நகர் வரை மாநகரப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தி. நகரிலிருந்து செங்கற்பட்டுக்கு தாம்பரம் மறைமலைநகர் வழியாக தடம் எண் 500-ல் 6 பேருந்துகள் 3-1-2008 முதல் இயக்கப்படுகின்றன.

488—

தானியங்கிக் கதவுகள்

வினா எண் 37324—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

கிராமங்களில் இயங்கும் நகரப் பேருந்துகளில் தானியங்கி கதவுகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய மாநகரங்களிலும், சென்னைக்கு அருகிலுள்ள திருவள்ளூர், மகாபலிபுரம், திருப்போரூர், ஸ்ரீபெரும்புதூர், சுங்குவார் சத்திரம், பெரியபாளையம், கும்மிடிப்பூண்டி மற்றும் தஞ்சாவூர் புதுக்கோட்டை போன்ற முக்கிய நகரங்களிலும் தானியங்கி கதவுகள் பொருத்தப்பட்ட தாழ்தள சொகுசு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. கிராமங்களில் இயக்கப்படும் நகரப் பேருந்துகளில் தானியங்கி கதவுகள் பொருத்தப்பட்ட வாகனங்கள் தற்போது இயக்கப்படவில்லை. பயன்பாட்டின் அடிப்படையில் பின்னர் முடிவெடுக்கப்படும்.

489—

வட்டார அலுவலகம்

வினா எண் 37675—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு நகரில் போக்குவரத்துத் துறை வட்டார அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு பகுதி அலுவலகத்தினை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக உயர்த்துவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

2011 ஜனவரி 13]

490—

பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 38028—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையிலிருந்து கலசப்பாக்கம் வழியாக மேல்சோழங்குப்பத்திற்கும், ஆரணியிலிருந்து ஆதமங்கலம் வழியாக செங்கத்திற்கும் பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை-மேல்சோழங்குப்பம் (வழி) கலசப்பாக்கம், தடத்தில் பேருந்து இயக்க ஆய்வு செய்ததில் தற்போது திருவண்ணாமலை-வில்வாரணி (வழி) கலசப்பாக்கம் என இரண்டு நகரப் பேருந்துகள் தினசரி 20 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலை-மேல்சோழங்குப்பம் (வழி) கலசப்பாக்கம் 2 தனியார் பேருந்துகள் மூலம் 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலை-மேல்சோழங்குப்பம் (வழி) காஞ்சி, தென்மாதிமங்கலம் என 2 அரசுப் பேருந்துகள் மூலம் 18 நடைகளும், 4 தனியார் பேருந்துகள்மூலம் 18 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தில் நகரத்தடங்களின் பயணிகளின் அடர்வு 48%, மாவட்டப் பேருந்துகளின் பயணிகளின் அடர்வு 84%-ம் உள்ளது. திருவண்ணாமலை-மேல்சோழங்குப்பம் (வழி) கலசப்பாக்கம் என புதிய வழித்தடம் இயக்கும் அளவிற்கு பயணிகள் நெரிசல் இல்லை. ஆரணி-செங்கம் (வழி) போளூர், ஆதமங்கலம் வழியாக பேருந்து இயக்க ஆய்வு செய்ததில், போளூர்-செங்கம் (வழி) கடலாடி 51 கி.மீ. ஆகும். போளூர்-செங்கம் (வழி) ஆதமங்கலம் 60 கி.மீ. ஆகும். கோரியுள்ள வழித்தடம் சுற்றுவழித்தடமாகும். பயண தூரம் மற்றும் பயணக் கட்டணம் அதிகமாக வருவதால் நேரடிப் பயணிகள் விரும்பி பயணம் செய்யமாட்டார்கள். மேல்சோழங்குப்பம், ஆதமங்கலம் பகுதி மக்கள் அடுத்துள்ள வட்ட நகரமான போளூருக்குச் செல்ல 4 அரசுப் பேருந்துகள்மூலம் 24 நடைகளும், 4 தனியார் பேருந்துகள்மூலம் 32 நடைகளும் இயக்கப்படுகின்றன. ஏற்கெனவே இயக்கப்படும் அரசு பேருந்துகளின் பயணிகள் அடர்வு 42% தான் உள்ளது.

[2011 ஜனவரி 13

491—

நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 38029—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கலசப்பாக்கம் தொகுதி, எலத்தூர் கிராமத்திற்கு திருவண்ணாமலை அல்லது போளூரிலிருந்து நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள எலத்தூர் கிராமம் போளூர்-செங்கம் சாலையில் இடது புறத்தில் உள்ளது. போளூரிலிருந்து செங்கத்திற்கு 7 அரசு பேருந்துகள்மூலம் 26 நடைகளும், 8 தனியார் பேருந்துகள்மூலம் 44 நடைகளும் மற்றும் போளூர்-கடலாடி ஒரு நகரப் பேருந்துமூலம் 6 நடைகளும், திருவண்ணாமலை-மேல்சோழங்குப்பம் 2 தனியார் பேருந்துகள்மூலம் 12 நடைகள் எலத்தூர் கூட்டுச்சாலை வழியாக திருவண்ணாமலை, போளூருக்குப் போதிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

492—

புதிய பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 38311—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரையிலிருந்து மதுரை, இராமேஸ்வரம், விருதுநகர், திருச்சி ஆகிய இடங்களுக்குப் புதிய பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரையிலிருந்து மானாமதுரை வழியாக இராமேஸ்வரம், இராமேஸ்வரம்-திருச்சி மற்றும் பரமக்குடி-திருச்சி ஆகிய வழித்தடங்களில் பயணிகளின் வசதிக்கேற்ப புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

493—

பேருந்து வசதி

வினா எண் **33432—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் திசையன்விளையிலிருந்து கொல்லத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடந்த 26-10-2007 அன்று திருவனந்தபுரத்தில் தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இருமாநில போக்குவரத்துத் துறை அமைச்சர்களுக்கிடையே நடைபெற்ற கூட்டத்தில் 5-வது துணை ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி தமிழக போக்குவரத்துக் கழகங்கள் 39 பேருந்துகளை கொண்டு கேரள மாநிலத்தில் 5,031 கி.மீ. தூரம் புதிய தடங்களில் இயக்க முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு மட்டும் 20 பேருந்துகளைக் கொண்டு மொத்தம் 4 வழித்தடங்களில் மட்டும் பேருந்து இயக்க அனுமதி பெறப்பட்டுள்ளது. ஏனைய 19 பேருந்துகளைக் கொண்டு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட். மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட் மூலமாகவும் பேருந்து இயக்குவதற்கான அனுமதி

[2011 ஜனவரி 13

அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு திசையன்விளை-கொல்லம் தடத்தில் பேருந்து இயக்குவதற்கான அனுமதி பெறப்படவில்லை. இருப்பினும் திசையன்விளை-கொல்லம் தடத்திற்கு அடுத்துவரும் தமிழ்நாடு-கேரளா ஆகிய இருமாநில ஒப்பந்தத்தில் சேர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

494—

பேருந்து வசதி

வினா எண் 38433—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், குட்டத்திலிருந்து சென்னைக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், குட்டம் பயணிகள், நகரப் பேருந்துமூலம் அருகாமையிலுள்ள இடையன்குடி வந்து, அங்கிருந்து இயக்கப்படும் கீழ்க்கண்ட அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து வசதியை தற்போது பயன்படுத்தி, சென்னை சென்று வர போதுமானதாக உள்ளது.

வ. எண்	தடம் எண்	செல்லுமிடம்	மொத்த பேருந்துகள்	நடைகள்
1.	199 மித சொகுசு	இடையன்குடி-சென்னை	2	2
2.	199 அதிநவீன சொகுசு மிதவை பேருந்து	இடையன்குடி-சென்னை	2	2
	மொத்த பேருந்துகள்/நடைகள்		4	4

2011 ஜனவரி 13]

495—

சொகுசுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 38434—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம்மூலம் கன்னியாகுமரியிலிருந்து வேலூருக்கு இயக்கப்படும் பேருந்தைச் சொகுசுப் பேருந்தாக இயக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட் மூலமாக தடம் எண் 283-ல் கன்னியாகுமரியிலிருந்து வேலூருக்கு இரண்டு வீடியோ கோச் உடன் கூடிய சொகுசுப் பேருந்துகள் தினசரி இரண்டு நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன.

496—

பேருந்து வசதி

வினா எண் 38435—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் திருநெல்வேலியிலிருந்து திருப்பதிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட், மூலமாக கீழ்க்கண்டவாறு திருநெல்வேலி வழியாக திருப்பதிக்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

[2011 ஜனவரி 13

தடம் எண்	செல்லுமிடம்	வழி	மொத்தம் பேருந்துகள்	நடைகள்
983 யூடி	பாபநாசம்-திருப்பதி	திருநெல்வேலி	*2*	*2*
995 யூடி	நாகர்கோயில்-திருப்பதி	திருநெல்வேலி	*2*	*2*

மேற்படி பேருந்து வசதிகளை திருநெல்வேலி—திருப்பதி உள்ளிட்ட பயணிகள் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக உள்ளது. கோரிக்கையில் உள்ள வழித்தடம் அண்டை மாநில வழித்தடமாகியதால் அடுத்து ஏற்படும் ஒப்பந்தத்தில் இணைத்த பிறகுதான் நேரடி பேருந்து இயக்க இயலும்.

497—

பேருந்து வசதி

வினா எண் 38436—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திசையன்விளையிலிருந்து கோயம்புத்தூருக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட், மூலமாக தடம் எண்.*665*-ல் திசையன்விளையிலிருந்து கோயம்புத்தூருக்கு தினசரி *2* சாதா பேருந்துகள் *2* நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த வசதியை திசையன்விளை-கோயம்புத்தூர் பயணிகள் பயன்படுத்திக் கொள்ள போதுமானதாக உள்ளது.

2011 ஜனவரி 13]

498—

சிற்றுந்து வசதி

வினா எண் **38509—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை வட்டத்தில் நகர எல்லைகளை இணைக்கும் வகையில் கூடுதலாக சிற்றுந்து இயக்க அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டத்தில் நகர எல்லைகளை இணைக்கும் வகையில் தற்சமயம் 2 சிற்றுந்துகள் இயக்கப்படுகின்றன. இவ்வட்டத்தில் கூடுதல் சிற்றுந்துகள் இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

499—

பேருந்து வசதி

வினா எண் **40041—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையிலிருந்து இராமேஸ்வரத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரையிலிருந்து மானாமதுரை வழியாக இராமேஸ்வரத்திற்கு நாள் ஒன்றுக்கு அரசுப் பேருந்துகள்மூலம் 82 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது கூடுதலாக அரசுப் பேருந்துகள்மூலம் 28 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே, போதுமானதாக கருதப்படுகிறது.

500—

விரைவுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 40043—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை பார்த்திபனூர், நரிக்குடி, அருப்புக்கோட்டை தூத்துக்குடி வழி திருச்செந்தூருக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரையிலிருந்து பரமக்குடி, இராமநாதபுரம், இராமேஸ்வரம் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் மானாமதுரை, பார்த்திபனூர் வழியாகவே இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பார்த்திபனூரிலிருந்து அரசு மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் இயக்கப்படும் 21 நடைகளை பயன்படுத்தி அருப்புக்கோட்டை வந்தால் அங்கிருந்து திருச்செந்தூர் செல்ல போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. மானாமதுரையிலிருந்து பார்த்திபனூர், அருப்புக்கோட்டை, தூத்துக்குடி, திருச்செந்தூர் வழித்தடத்தில் பகுதி பகுதியாக பேருந்து வசதிகள் உள்ளன. மேற்படி வழித்தடம் ஒரு சுற்று வழித்தடம் என்பதால் நேரடி பயணிகளின் ஆதரவு இருக்க வாய்ப்புகள் இல்லை.

2011 ஜனவரி 13]

பட்டியல்—6

1—

போக்குவரத்து நெரிசல்

வினா எண் 40910—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலம் மாநகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. சாலையோரங்களில் அமைந்துள்ள ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டுள்ளன. சென்டர் மீடியன் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மூன்று ரோடு மற்றும் இரும்பாலை சந்திப்பு ஆகிய இடங்களில் புதிய போக்கு வரத்து சிக்னல் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், சேலம் மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மேம்பாலம் அமைக்கப்பட உள்ளது.

2—

பணிமனை

வினா எண் 41326—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, ஓமலூர் அரசு பணிமனையை, ஆத்தூர்—காமலாபுரம் என்.எச்.7 சாலையிலுள்ள பெருமாள் கோயில் நிலத்தில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) சார்பில், ஆத்தூர்—காமலாபுரம் **NH-7** *சாலையில் ச.எண் 14/3-ல் உள்ள 3.50 ஏக்கர் பெருமாள் கோயில் நிலத்தில் பேருந்து பணிமனை அமைக்க 1997-ல் இடம் தேர்வு செய்து, விண்ணப்பிக்கப்பட்டது. மேற்படி நிலத்திற்கு அரசு மற்றும் அரசால் நியமிக்கப்பட்ட குழுவினரால் தெரிவிக்கப்பட்ட நில மதிப்பை விட இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட நில மதிப்பு மிகவும் அதிகம் என்பதால், சேலம், அரசுப் போக்குவரத்துக் கழக நிர்வாகக் குழு தீர்மானத்திற்கிணங்க மேற்படி நிலம் குறித்த நடவடிக்கைகள் 2002-ல் கைவிடப்பட்டது. எனவே, தற்போது மேற்படி கோயில் நிலத்தில் பணிமனை அமைக்க வழிவகையில்லை.*

3—

விரைவுப் பேருந்து

வினா எண் 41548—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினத்திலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் தடம் எண் 427 மேட்டூரிலிருந்து சென்னைக்கு காவேரிப்பட்டினம் வழியாக தினசரி ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. மேற்படி பேருந்து வசதி காவேரிப்பட்டினம்—சென்னை உள்ளிட்ட பயணிகள் பயன்படுத்திக்கொள்ள போதுமானதாக உள்ளது.

2011 ஜனவரி 13]

4—

பேருந்து வசதி

வினா எண் 41825—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, அவலூர்பேட்டையிலிருந்து கலத்தம்பட்டு வழியாக சென்னைக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அவலூர்பேட்டையிலிருந்து மேல்மலையனூர் வரை விழுப்புரம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், நகரத் தடம் எண் டி6 மூலம் 8 நடைகளும், மேல்மலையனூரிலிருந்து கலத்தம்பட்டு, ஆலம்பூண்டி வழியாக செஞ்சிக்கு அரசு நகரத் தடம் டி14 மூலம் 4 நடைகளும் பேருந்து வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், செஞ்சி முதல் சென்னை வரை அதிக அளவில் அரசு புறநகர் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அவலூர்பேட்டையிலிருந்து கலத்தம்பட்டு வழியாக சென்னைக்கு பகுதிவாரியாக பேருந்து வசதிகள் உள்ளன.

5—

பேருந்து வசதி

வினா எண் 42000—திரு. அ. ராஜன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவிலிலிருந்து வேளாங்கண்ணிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நாகர்கோவில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து நாகர்கோவில் வழியாக வேளாங்கண்ணிக்கு அரசு விரைவுப்

போக்குவரத்துக் கழக பேருந்துகள்மூலம் கீழ்கண்டவாறு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

1. நாகர்கோவில்—வேளாங்கண்ணி

2. கன்னியாகுமரி—வேளாங்கண்ணி (வழி) நாகர்கோவில்

3. மார்த்தாண்டம்—வேளாங்கண்ணி (வழி) நாகர்கோவில்

4. திருவனந்தபுரம்—வேளாங்கண்ணி (வழி) களியக்காவிளை, நாகர்கோவில்

5. கொல்லம்—வேளாங்கண்ணி (வழி) திருவனந்தபுரம், களியக்காவிளை, நாகர்கோவில்

நாகர்கோவில் மற்றும் நாகர்கோவில் வழியாக வேளாங்கண்ணிக்கு தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

6—

பேருந்து வசதி

வினா எண் 42280—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி—அரூரிலிருந்து கொளகம்பட்டி, வடகரை, தென்கரைகோட்டை வழியாக பாப்பிரெட்டிப்பட்டி வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரூர்-பாப்பிரெட்டிப்பட்டி (வழி) கொளகம்பட்டி, வடகரை, தென்கரைகோட்டை வழித்தடத்தின் நீளம் *28.0* கி.மீ. ஆகும். இத்தடத்தில் அரூர் முதல் தென்கரைகோட்டை வரை மற்றும் தென்கரைகோட்டை முதல் பாப்பிரெட்டிப்பட்டி வரை, பகுதிவாரியாக பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இயக்கப்படும் பேருந்துகளில் பயணிகளின் அடர்வு குறைந்து காணப்படுவதாலும் மற்றும் அரூரிலிருந்து பாப்பிரெட்டிப்பட்டிக்கு நேர்வழியில் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளதால், மேற்கூறிய சுற்று வழித்தடத்தில் பேருந்து ஒன்றை தற்சமயம் இயக்கிட இயலாத நிலையுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

7—

பேருந்து வசதி

வினா எண் 43505—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழியிலிருந்து நாகப்பட்டினத்திற்கு பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சீர்காழி-நாகப்பட்டினம் (வழி) சட்டநாதபுரம், அண்ணன்கோவில், கருவிழந்தநாதபுரம், ஆக்கூர்ரோடு, திருக்கடையூர், தரங்கம்பாடி, பொறையார், வரிச்சிக்குடி, காரைக்கால், திருமலைராயன்பட்டினம் மற்றும் நாகூர் தடத்தின் நீளம் 68.50 கி.மீ. ஆகும். கோரிக்கை தடம் புதிய வழித்தடமாகும். எனினும் பாண்டிச்சேரி, கடலூர் மற்றும் சிதம்பரம் ஆகிய பகுதிகளிலிருந்து சீர்காழி மற்றும் காரைக்கால் வழியாக கிழ்க்கண்டவாறு பேருந்து வசதி உள்ளது:

தடம்	கும்பகோணம் த.நா.அ.போ. கழகம்	இதர போக்குவரத்து கழகம்	தனியார்	கூடுதல் நடைகள்
சிதம்பரம்-காரைக்கால்/ நாகப்பட்டினம் (வழி) சீர்காழி, பொறையார்	62	9	9	80
நாகப்பட்டினம்/ காரைக்கால்-சிதம்பரம் (வழி) பொறையார், சீர்காழி	62	9	9	80
கூடுதல்	124	18	18	160

மேலும், பேருந்து இயக்கம் தொடர்பாக பாண்டிச்சேரி/காரைக்கால் மற்றும் தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு கோரிக்கை தடத்தில் பேருந்து இயக்கிட கருத்தில் கொள்ளப்படும்.

[2011 ஜனவரி 13

8—

சொகுசுப் பேருந்துகள்

வினா எண் 43738—திரு. மா. அன்பழகன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, பழனியிலிருந்து பாண்டிச்சேரி, திருவனந்தபுரம், எர்ணாகுளம் மற்றும் திருப்பதி ஆகிய நகரங்களுக்கு சொகுசுப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பழனியிலிருந்து-பாண்டிச்சேரி, திருவனந்தபுரம், எர்ணாகுளம் மற்றும் திருப்பதி ஆகிய தடங்கள் யாவும் முறையே தமிழ்நாடு-பாண்டிச்சேரி, தமிழ்நாடு-கேரளா, தமிழ்நாடு-ஆந்திரா ஆகிய மூன்று மாநிலங்கள் சம்மந்தப்பட்டிருப்பதால், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட் மூலமாக பழனியிலிருந்து - பாண்டிச்சேரி, திருவனந்தபுரம், எர்ணாகுளம் மற்றும் திருப்பதி ஆகிய தடங்களில் பேருந்து இயக்குவது குறித்து அந்தந்த இரு மாநில ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின் போது தான் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க இயலும்.

9—

பணிமனை

வினா எண் 44055—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை SIPCOT *போக்குவரத்துக் கழகப் பணிமனையை விரிவுபடுத்த அரசு முன் வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சிப்காட் போக்குவரத்துக் கழகப் பணிமனையில் அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. எனவே, தற்போது விரிவுபடுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

10—

சாலை கண்காணிப்பு கேமரா

வினா எண் **45236—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போக்குவரத்து விதி மீறலைத் தடுக்க முக்கிய நகரங்களில் சாலை கண்காணிப்பு கேமரா பொருத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சென்னை மாநகரத்தில் முக்கியப் போக்குவரத்து சாலைகளில் போக்குவரத்து விதி மீறலைத் தடுப்பதற்கு சாலைகளில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்த காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே சுமார் ரூ. 1.00 கோடி செலவு செய்யப்பட்டு கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. மேலும், தற்போது தமிழக அரசு சென்னை மாநகரில் முக்கிய சந்திப்புகளில் போக்குவரத்து மீறலைக் கண்காணிக்க, கண்காணிப்பு கேமராக்களை பொருத்த தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. சென்னை மாநகரில் பொருத்தப்படும் கண்காணிப்பு கேமராக்களினால் கிடைக்கும் வரவேற்பைப் பொறுத்து, மற்ற முக்கிய மாநகரங்களுக்கும் சாலைகளில் கண்காணிப்பு கேமராக்களைப் பொருத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2011 ஜனவரி 13

11—

விரைவுப் பேருந்து

வினா எண் 46120—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு நகரில், தமிழ்நாடு அரசு விரைவுப் பேருந்து நேரக் காப்பாளர் அலுவலகம் மற்றும் முன்பதிவு மையத்தை மீண்டும் துவக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு லிமிடெட் மூலமாக, செங்கல்பட்டில் நேரக் காப்பாளர் அலுவலகம் மற்றும் முன்பதிவு மையம் செயல்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது.

12—

பேருந்து வசதி

வினா எண் 47059—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர் மலை தொகுதி, பிலிக்கல்பாளையம் ஊராட்சி, சின்னமருதூர், பெரியமருதூர், சேளூர் ஆகிய கிராமங்களுக்குப் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிலிக்கல்பாளையம் ஊராட்சி, சின்னமருதூர், பெரியமருதூர், சேளூர் ஆகிய கிராமங்களுக்கு 4 நடைகள் பேருந்து இயக்கிட சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2011 ஜனவரி 13]

13—

பேருந்து வசதி

வினா எண் 47081—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலிருந்து சென்னைக்கும், திருச்சி மாவட்டத்திற்கும் பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப்பகுதி என்பதால் குறுகிய வீல் பேஸ் கொண்ட பேருந்துகள் மட்டுமே இயக்க இயலும். அரசு விரைவுப் பேருந்துகள் அனைத்தும் 222 வீல் பேஸ் கொண்ட பேருந்துகளாக இருப்பதால், சென்னை மற்றும் திருச்சியிலிருந்து வால்பாறைக்குப் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

14—

பேருந்து வசதி

வினா எண் 47639—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர்-பாலாறு-கோபிநத்தம் வழியாக ஒகேனக்கல் சுற்றுலாத்தலத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாலாறு முதல் கோபிநத்தம் வழியாக ஒகேனக்கல் சுற்றுலாத்தலம் வரையுள்ள பகுதி புறமாநில பகுதியாகும். இரு

[2011 ஜனவரி 13

மாநிலங்களுக்கிடையே ஏற்படும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் மட்டுமே புறமாநில பகுதிக்குள் பேருந்துகள் இயக்க இயலும். எனவே, அடுத்ததாக தமிழ்நாடு—கர்நாடக மாநிலங்களுக்கிடையே ஏற்படும் ஒப்பந்தத்தின்போது இக்கோரிக்கை குறித்து பரிசீலனை செய்யப்படும்.

15—

பேருந்து வசதி

வினா எண் 47675—செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லிலிருந்து-வேலூர் செல்ல சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக தடம் எண் 981 திருச்செந்தூரிலிருந்து-திருப்பதிக்கு திண்டுக்கல், வேலூர் வழியாக தினசரி 2 அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி தடப் பேருந்தில் திண்டுக்கல்லுக்கு 10 இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, முன்பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இந்த வசதி திண்டுக்கல்-வேலூர் பயணிகள் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது.

16—

பேருந்து வசதி

வினா எண் 47684—திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசிபுரத்திலிருந்து பெங்களூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்மூலம் இயக்கப்படும் வழித்தடமானது ஒரு இருமாநில வழித்தடமாகும்.

2011 ஜனவரி 13]

எனவே, இரு மாநிலங்களுக்கும் இடையே உள்ள ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே பேருந்து இயக்கிட இயலும். எனினும் சேலம்-பெங்களூர் வழித்தடத்தில் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியிலும் மற்றும் சேலம் புறநகர்/நகரப் பேருந்து நிலையங்களிலிருந்து இராசிபுரத்திற்கு ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியிலும் பேருந்து வசதி உள்ளது. இப்பேருந்து வசதியே போதுமானதாகும்.

17—

சொகுசுப் பேருந்து வசதி

வினா எண் **47696—திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனியிலிருந்து திருப்பதிக்கு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பழனி-திருப்பதி தடத்தில் ஏற்கெனவே அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக பேருந்து இயக்கப்பட்டு, அத்தடப் பேருந்திற்கு போதிய நேரடிப் பயணிகள் இன்றி வருவாய் இழப்பு ஏற்பட்டதன் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. மேலும், இரு முனையிலும் பேருந்து பராமரிக்க போதிய வசதி மற்றும் பணிமனை இல்லாத காரணத்தாலும் தற்போது மேற்படி தடத்தில் விரைவுப் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

18—

பேருந்து வசதி

வினா எண் **47698—திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனியிலிருந்து கேரளா மாநிலம் மூணாறுக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பழனி-மூணாறு தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட் மூலமாக தற்போது பேருந்துகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

இயக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் மேற்படி தடத்தில் அரசு விரைவுப் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

19—

பேருந்து வசதி

வினா எண் 47737—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டையிலிருந்து பெங்களூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை—பெங்களூர் பயணிகள் நகரப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி பொள்ளாச்சி வந்து, அங்கிருந்து அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் இயக்கப்படும் பொள்ளாச்சி—பெங்களூர் தடப் பேருந்து வசதியை முன்பதிவு வசதியுடன் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு லிமிடெட் மூலமாக உடுமலைப்பேட்டையிலிருந்து பெங்களூருக்கு பேருந்து இயக்க பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

20—

பேருந்து வசதி

வினா எண் 47755—திரு. செ. சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறையிலிருந்து—சென்னைக்கு புதிய வழித்தடத்தில் குளிர்சாதன வசதியுடன் கூடிய பேருந்து இயக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மணப்பாறை—சென்னை பயணிகள், மணப்பாறை வழியாக கம்பம்—சென்னை தடத்தில் அரசு விரைவுப் போக்குவத்துக் கழகம்மூலம் இயக்கப்படும் குளிர்சாதன வசதியுடன் கூடிய அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் வசதியை பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது. மேலும் மணப்பாறை பயணிகள் நகரப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி அருகிலுள்ள திருச்சி வந்து அங்கிருந்து முன்பதிவு வசதியுடன் இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் குளிர்சாதன வசதியுடன் கூடிய பேருந்துகளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

21—

பேருந்து வசதி

வினா எண் 47923—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து பார்த்திபனூர், அருப்புக்கோட்டை, தூத்துக்குடி, திருச்செந்தூர் வழியாக கன்னியாகுமரிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரையிலிருந்து பரமக்குடி, இராமநாதபுரம், இராமேஸ்வரம் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் மானாமதுரை, பார்த்திபனூர் வழியாகவே இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பார்த்திபனூரிலிருந்து அரசு மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் இயக்கப்படும் 21 நடைகளை பயன்படுத்தி அருப்புக்கோட்டை வழியாக தூத்துக்குடி வந்து அங்கிருந்து திருச்செந்தூர் வழியாகவும் திருநெல்வேலி வழியாகவும் கன்னியாகுமரி செல்ல போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. மானாமதுரையிலிருந்து கன்னியாகுமரி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

வரை (மானாமதுரை—பார்த்திபனூர்—அருப்புக்கோட்டை—தூத்துக்குடி—திருச்செந்தூர்/திருநெல்வேலி கன்னியாகுமரி) வழித்தடத்தில் பகுதிபகுதியாக போதுமான பேருந்து வசதிகள் உள்ளதாலும், மேற்படி வழித்தடம் ஒரு சுற்று வழித்தடம் என்பதால் நேரடிப் பயணிகளின் ஆதரவு இருக்க வாய்ப்புகள் இல்லை. எனவே, குறிப்பிட்ட வழித்தடத்தில் பேருந்து இயக்க தேவை தற்போது எழவில்லை.

22—

பேருந்து வசதி

வினா எண் 48036—திருமதி மு. சந்திரா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசபாளையம் தொகுதி, இராசபாளையம்—திருப்பதி வரை புதிய சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலம் தடம் எண். *990*-ல் செங்கோட்டையிலிருந்து—திருப்பதிக்கு, இராசபாளையம் வழியாக தினசரி *2* அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் 2 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பேருந்து வசதிகளை இராசபாளையம்—திருப்பதி பயணிகள் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது. மேற்படி தடப் பேருந்திற்கு இராசபாளையத்தில் முன்பதிவு வசதியும் உள்ளது. எனவே, இராசபாளையத்திலிருந்து திருப்பதிக்கு நேரிடையாகப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் இல்லை.

23—

பேருந்து வசதி

வினா எண் 48153—திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

இராசிபுரம் தொகுதி, இராசிபுரத்திலிருந்து நாமக்கல்லுக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இராசிபுரம்—நாமக்கல் (வழி) புதன்சந்தை வழித்தடத்தில் 16 நகரப் பேருந்துகள் 182 நடைகளும், 3 தனியார் பேருந்துகள் 48 நடைகளும் இயங்கி வருகின்றன. இவ்வழித்தடத்தில் 15 நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 168 நடைகள் சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்மூலம் இயக்கப்பட்டு வந்தது. சட்டமன்ற உறுப்பினர், இராசிபுரம் அவர்களின் வேண்டுகோளின்படி ஒரு நகரப் பேருந்துமூலம் தினசரி 14 நடைகள் கூடுதலாக பிப்ரவரி 2008 முதல் இயக்கப்படுகின்றன.

24—

புதிய பணிமனை

வினா எண் **46226—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, போச்சம்பள்ளியை மையமாக கொண்டு புதிய பணிமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போச்சம்பள்ளியிலிருந்து 30 கி.மீ. தொலைவில் ஊத்தங்கரையிலும், 31 கி.மீ. தொலைவில் கிருஷ்ணகிரி நகரிலும், 33 கி.மீ. தொலைவில் கிருஷ்ணகிரி புறநகரிலும், 34 கி.மீ. தொலைவில் தருமபுரி நகரிலும், 36 கி.மீ. தொலைவில் தருமபுரி புறநகரிலும் பணிமனைகள் அருகருகே இயங்கிவருகின்றன. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட்டை சேர்ந்த 16 நகர் பேருந்துகளும் மற்றும் 42 புறநகர் பேருந்துகளும்

[2011 ஜனவரி 13

போச்சம்பள்ளி வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. தற்சமயம் போச்சம்பள்ளியை மையமாகக் கொண்டு பேருந்துகள் எதுவும் இயக்கப்படாத காரணத்தினாலும், போச்சம்பள்ளியைச் சுற்றி அருகருகே தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட் பணிமனைகள் அமைந்துள்ளதால், இப்போக்குவத்துக் கழகத்தின்மூலம் பணிமனை ஒன்றை தற்சமயம் போச்சம்பள்ளியில் துவக்கிட இயலாத நிலையுள்ளது.

25—

பேருந்து வசதி

வினா எண் 48383—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர் மலைத் தொகுதி, வேலூரிலிருந்து நாமக்கல், இராசிபுரம், ஆத்தூர், கள்ளக்குறிச்சி வழியாக பாண்டிச்சேரிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

வேலூர்—பாண்டிச்சேரி தடம் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், இத்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடக்கும் இரு மாநில ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின் போது பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

26—

பேருந்து வசதி

வினா எண் 48384—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலைத் தொகுதி, மோகனூரிலிருந்து வேலூர், கரூர் வழியாக பழனிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மோகனூர்-வேலூர்-கரூர் வழித்தடம் சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக இயக்கப்பகுதி மட்டுமல்லாது, கும்பகோணம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திருச்சி மண்டலம்) மற்றும் மதுரை, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திண்டுக்கல் மண்டலம்) ஆகியோரது இயக்க எல்லைப் பகுதிகளும் அடங்கும், சகோதர போக்குவரத்துக் கழக இயக்கப் பகுதியில் அமைந்துள்ள வழித்தடத்தில் புதிதாக பேருந்து இயக்க வேண்டுமெனில் சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர்கள் இசைவு பெற்றால்தான் பேருந்து இயக்க இயலும். எனவே, இதன்தொடர்பாக சம்பந்தப்பட்ட மேலாண் இயக்குநர்கள் இசைவு வேண்டி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

27—

பேருந்து வசதி

வினா எண் 49019—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி, குளத்தூரிலிருந்து வேடநத்தம், துரைச்சாமிபுரம், சக்கம்மாள்புரம், மேலமருதூர், எம். குமாரபுரம், மேல அரசரடி வழியாக தூத்துக்குடி வரை காலையும், மாலையும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

குளத்தூர்-தூத்துக்குடி (வழி) வேடநத்தம், துரைச்சாமிபுரம், சக்கம்மாள்புரம், மேலமருதூர், எம்.குமாரபுரம், அரசரடி விலக்கு வழித்தடத்தில் தற்போது கீழ்க்கண்ட நேரங்களில் 10 சுற்றுக்கள் ஒரு நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

[2011 ஜனவரி 13

தடம் எண் எம்.53	
குளத்தூரிலிருந்து தூத்துக்குடிக்குச் செல்லும் நேரம்	தூத்துக்குடியிலிருந்து குளத்தூருக்குச் செல்லும் நேரம்
05-30, 08-25, 10-55, 17-15 மற்றும் 20-00	*06-55, 09-35, 15-55, 18-45, மற்றும் 21-35*

28—

பேருந்து வசதி

வினா எண் 49142—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து அருப்புக்கோட்டை விருதுநகர் வழியாக குற்றாலத்திற்குப் புதிய பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை-அருப்புக்கோட்டை தடத்தில் தினசரி 4 நடைகள் அரசு புறநகர் பேருந்துகளும், 12 நடைகள் தனியார் நிறுவன பேருந்துகளும், அருப்புக்கோட்டை—குற்றாலம் தடத்தில் தினசரி 4 நடைகள் அரசு புறநகர்ப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மானாமதுரை-குற்றாலம் (வழி அருப்புக்கோட்டை) தட தூரம் 224.6 கி.மீ. மானாமதுரை—குற்றாலம் (வழி மதுரை) தட தூரம் 227.3 கி.மீ. என்று சற்றேறக்குறைய ஒரே அளவில் உள்ளது. மானாமதுரை—அருப்புக்கோட்டை—குற்றாலம் தடமானது ஒரு கிராமப்புற வழித்தடமாகவும், ஒரு வழிச்சாலையாகவும் (Single Road) உள்ளதால் பயண நேரம் கூடுதலாகவும் பயணிகளுக்கு அசௌகரியமாகவும் இருக்க வாய்ப்புகள் உள்ளது. எனவே வினாவில் குறிப்பிட்டபடி மானாமதுரை—குற்றாலம் (வழி) அருப்புக்கோட்டை, விருதுநகர் என பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2011 ஜனவரி 13]

29—

பேருந்து வசதி

வினா எண் 49196—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது.?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து திருப்பத்தூர் வழியாக திருப்பூருக்கு தினசரி இரு சொகுசுப் பேருந்துகள்மூலம் திருப்பத்தூர் பயணிகளின் சொகுசுப் பேருந்து தேவையை நிறைவு செய்யும் விதமாக இயக்கப்பட்டு வருகிறது.

30—

பணிமனை

வினா எண் 51099—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூரில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தால் தற்சமயம் 3 நகர மற்றும் 9 புறநகர்ப் பேருந்துகள் மட்டுமே மேல்மலையனூர் வழியே இயக்கப்படுகின்றன. மேல்மலையனூர் கிராமத்திலிருந்து 21 கி.மீ. தொலைவில்

[2011 ஜனவரி 13

அமைந்துள்ள செஞ்சியில் பணிமனை இயங்கி வருவதாலும், அங்கிருந்து பேருந்துகளை இயக்குவதாலும் மேல்மலையனூரில் பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் இல்லை.

31—

பேருந்து வசதி

வினா எண் 51198—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்தில் குளிர்சாதன நகரப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மூலமாக குளிர்சாதன புறநகர்/நகரப் பேருந்துகள் இதுவரை இயக்கப்படவில்லை. சேலத்தில் இருந்து குளிர்சாதன நகரப் பேருந்துகள் இயக்குவது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

32—

பேருந்து வசதி

வினா எண் 51681—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டியிலிருந்து கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் சேலம் போன்ற பெருநகரங்களுக்குப் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டியிலிருந்து கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் சேலம் போன்ற பெருநகரங்களுக்குப் பேருந்துகள் நேரடியாக இயக்கம் செய்யப்பட்டால் நேரடிப்பயணிகளின் அடர்வு மிகவும் குறைவாக இருக்கும். இதனால் வருவாய் இருக்காது. ஏனெனில் தரகம்பட்டியிலிருந்து கரூர் வரை சுமார் 47 கிலோ மீட்டர் கிராமபுற வழித்தடச் சாலை ஆகும்.

மேலும், தரகம்பட்டியிலிருந்து கரூர் வரை கும்பகோணம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திலிருந்து 7 புறநகர் பேருந்துகளின்மூலம் தினசரி 34 நடைகளும் மற்றும் தனியார் துறை பேருந்துகளின்மூலம் தினசரி 28 நடைகளும் ஆகமொத்தம் 62 நடைகள் தினசரி இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் கரூர்-கோயம்புத்தூர் மற்றும் கரூர்-திருப்பூர் வழித்தடத்தில் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியில் ஒரு பேருந்து வீதம் இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. அதேபோல் கரூர்-ஈரோடு மற்றும் கரூர்-சேலம் வழித்தடத்தில் ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியில் ஒரு பேருந்து வீதம் இயக்கம் செய்யப்பட்டு வருகிறது.

எனவே, இவ்வழித்தடம் முழுவதும் மேற்கண்டுள்ளவாறு பகுதி பகுதியாக போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது.

33—

பேருந்து வசதி

வினா எண் 51742—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, மயிலாடுதுறையிலிருந்து ஆக்கூர் வழியாக திருவெண்காடு மற்றும் நாங்கூர் போன்ற புகழ் பெற்ற கோயில் ஸ்தலங்களுக்குச் செல்ல புதியதாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை-திருவெண்காடு (வழி) மன்னம்பந்தல், விளாநகர், செம்பனார்கோவில், காளஹஸ்தினாபுரம், ஆக்கூர், ஆக்கூர் முக்கூட்டு, தலைச்சங்காடு, கருவிழுந்தநாதபுரம், மேலையூர், மணிகிராமம் தடத்தின் நீளம் 37.0 கி.மீ. ஆகும். திருவெண்காடு-நாங்கூர் (வழி) மங்கைமடம், சித்தமன்காத்திருப்பு தடத்தின் நீளம் 6.0 கி.மீ. ஆகும்.

கோரிக்கை தடங்கள் புதிய வழித்தடங்கள் ஆகும். மேலும் சுற்று வழித்தடங்களும் ஆகும். எனினும் கோரிக்கை தடங்களின் அனைத்துப் பகுதிகளுக்கும் பகுதிபகுதியாக கீழ்க்கண்டவாறு பேருந்து வசதி உள்ளது:

தடம் எண்	தடம்	தடநீளம் நடைகள்	நடைகள்
மயிலாடுதுறை நகர் பேருந்து A4A	மயிலாடுதுறை-மங்கைமடம் (வழி) செம்பனார்கோவில், புஞ்சை கருவிழந்தநாதபுரம் மேலையூர், திருவெண்காடு	30 கி.மீ.	6
A2B	மயிலாடுதுறை-பூம்புகார் (வழி) செம்பனார்கோவில், ஆக்கூர், முக்கூட்டு, கருவிழந்தநாதபுரம், மேலையூர்.	32 கி.மீ.	10
சீர்காழி நகரப் பேருந்து A5, A5B, A5C	சீர்காழி-பூம்புகார் (வழி) திருவாலி, மங்கைமடம், திருவெண்காடு, மேலையூர்	24 கி.மீ.	44
A17	சீர்காழி-மேலையூர் (வழி) வைத்தீஸ்வரன் கோயில், தென்னலங்குடி, அன்னங்கோவில், நாங்கூர், மங்கைமடம், திருவெண்காடு	28 கி.மீ.	2

2011 ஜனவரி 13]

34—

ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி

வினா எண் 51750—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பொறையாரில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி துவக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட்டின் தலைமையகமான கும்பகோணத்தில், தற்போது ஓட்டுநர் பயிற்சி மையம் இயங்கி வருவதால் பொறையாரில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி துவங்கிட தற்சமயம் செயற்குறிப்பு எதுவுமில்லை.

35—

அலுவலகம்

வினா எண் 52263—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் பகுதி அலுவலகம் துவக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

36—

பேருந்து வசதி

வினா எண் 52626—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, நண்டுகுழி, நெய்வேலி இடையே பேருந்து வசதி ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, நண்டுகுழி-நெய்வேலி நகரம் வழித்தடத்தின் நீளம் 8.0 கிலோ மீட்டராகும். இதில் 7-வது பிளாக் சோதனைச் சாவடி முதல் செடுதான்குப்பம் வரை 0.50 கிலோ மீட்டர் தூரம் வரை சாலையே இல்லை. பேருந்து இயக்க ஏற்ற வகையில் சாலை அமைத்த பின்னரே மீண்டும் தடம் ஆய்வு செய்யப்பட்டு பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

37—

சொகுசுப் பேருந்து வசதி

வினா எண் 56586—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை-மதுரை கோவை வழியாக ஊட்டிக்கு ஒரு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட் மூலமாக மானாமதுரையிலிருந்து-

2011 ஜனவரி 13]

ஊட்டிக்கு, மதுரை, கோவை வழியாக பேருந்து இயக்க தற்போது திட்டம் ஏதும் இல்லை. மானாமதுரை—ஊட்டி ஆகிய இரு இடங்களிலும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு சொந்தமான பணிமனை மற்றும் பராமரிப்பு வசதி ஏதும் இல்லை. இந்நிலையில் மேற்படி தடத்தில் அரசு விரைவுப் பேருந்து தற்பொழுது இயக்க சாத்தியமில்லை.

38—

பேருந்து வசதி

வினா எண் **57307—திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கீரமங்கலத்திலிருந்து சென்னைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கீரமங்கலம் கிராமம், அறந்தாங்கியிலிருந்து 18.1 கி.மீட்டர் தூரத்தில் உள்ளது. கீரமங்கலத்திலிருந்து அறந்தாங்கிக்கு போக்குவரத்துக் கழக மற்றும் தனியார் பேருந்துகள் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியில் இயக்கப்படுகிறது. அறந்தாங்கியிலிருந்து நேரடியாக சென்னைக்கு 4 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்து வசதியே இவ்வழித்தடத்திற்கு போதுமானதாக கருதப்படுகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் தற்போது கோரிக்கை தடத்தில் பேருந்துகள் இயக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

39—

கூடுதல் பேருந்து வசதி

வினா எண் **57309—திரு. கோ. அரி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூரிலிருந்து திருவாலங்காடு வழியாக அரக்கோணம்வரை கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருவள்ளூர்-அரக்கோணம் (வழி) திருவாலங்காடு தடத்தின் நீளம் 35.0 கி.மீ. ஆகும். இத்தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் மண்டலம் தற்பொழுது புறநகர்ப் பேருந்துகளின்மூலம் 40 நடைகளையும், நகரப்பேருந்துகள்மூலம் 2 நடைகளையும் இயக்குகிறது. இத்தடத்தில் நாராயணபுரம் கூட்டுச் சாலையிலிருந்து அரக்கோணம் வரையிலான 25.0 கி.மீ. சாலை மிகவும் சேதமடைந்து உள்ளதால், தற்பொழுது இயக்கப்படும் பேருந்துகள் அடிக்கடி வழித்தடப் பழுது ஏற்பட்டு நடை இழப்புடனும் காலதாமதமாகவும் இயக்கப்படுகிறது. சாலை சரி செய்யப்பட்டதும், ஆய்வு செய்யப்பட்டு தேவையின் அடிப்படையில் கூடுதல் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

40—

பேருந்து வசதி

வினா எண் 57428—திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, காரவள்ளியிலிருந்து ஈரோட்டிற்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேந்தமங்கலம் தொகுதி, காரவள்ளி, கொல்லிமலை அடிவாரத்தில் அமைந்துள்ள பகுதியாகும். இங்கு மலைவாழ் இன மக்கள் மட்டுமே பெரும்பான்மையாக உள்ளனர். இந்த மலைவாழ் மக்கள் ஈரோட்டிற்கு நேரடியாக செல்லும் அவசியமேதும் இல்லை. எனவே, காரவள்ளியிலிருந்து ஈரோட்டிற்கு நேரடி பேருந்து தேவை இல்லை. எனினும், மாவட்ட தலைநகரான நாமக்கல்லில் இருந்து காரவள்ளி வழியாக கொல்லிமலைக்கு, சேலம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்மூலம் குறுஞ்சட்ட பேருந்துகள் 8-ன்மூலம் தினசரி 28 நடைகளும், நாமக்கல்-காரவள்ளி தடத்தில் நகரப் பேருந்து ஒன்றின்மூலம் தினசரி 14 நடைகளும் இயக்கப்படுகின்றன.

2011 ஜனவரி 13]

மேலும், மாவட்ட தலைநகரமான நாமக்கல்லிலிருந்து ஈரோட்டிற்கு அரசு மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் 5 நிமிடத்திற்கொரு பேருந்து வசதி உள்ளது. மேற்படி பேருந்து வசதியே சேந்தமங்கலம் தொகுதி காரவள்ளி (கொல்லிமலை அடிவாரம்) பகுதி மக்களுக்கு போதுமானதாகும்.

41—

பேருந்து வசதி

வினா எண் 57443—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணத்திலிருந்து பூம்புகார் வரை மீனவர் மற்றும் மீன் வியாபாரிகள் நலன் கருதி, புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கும்பகோணம்-பூம்புகார் (வழி) ஆடுதுறை, குத்தாலம், மயிலாடுதுறை, கஞ்சாநகரம், கிழையூர், கருவிழந்தநாதபுரம் மற்றும் மேலையூர் தடத்தின் நீளம் 62.0 கிமீ. ஆகும்.

கோரிக்கை தடம் புதிய வழித்தடமாகும். தற்போது மயிலாடுதுறை புறநகர் பேருந்து தடம் எண் 112மூலம் திருச்சி-பூம்புகார் (வழி) தஞ்சாவூர்.

கும்பகோணம்-மயிலாடுதுறை தடத்தில் தினசரி இரு நடைகள் நேரடியாக இயக்கப்பட்டுவருகிறது. கும்பகோணம்-மயிலாடுதுறை-கும்பகோணம் தடத்தில் கீழ்க்கண்டவாறு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

தடம்	கும்பகோணம் போக்கு வரத்துக் கழகம்.	இதர போக்கு வரத்துக் கழகம்.	தனியார்	கூடுதல்
கும்பகோணம்-மயிலாடுதுறை	183	22	67	272
மயிலாடுதுறை-கும்பகோணம்	191	26	88	305
கூடுதல் நடைகள்	374	48	155	577

[2011 ஜனவரி 13

மயிலாடுதுறை-பூம்புகார்-மயிலாடுதுறை தடத்தில் தடம் எண் 408, A21, A21A, A21C, A2B மற்றும் A34 ஆகியவைகள் தினசரி 64 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

கோரிக்கை தடம் புதிய வழித்தடமாக உள்ளமையாலும், கோரிக்கை தடத்தில் மேற்குறிப்பிட்டவாறு பகுதிபகுதியாக பேருந்து வசதி உள்ளமையாலும், கோரிக்கைபடி, நேரடிப் புதிய வழித்தடப் பேருந்து வசதி அளித்தாலும் போதிய மக்கள் பயன்பாடு அமைந்திட வாய்ப்பில்லை.

42—

பேருந்து வசதி

வினா எண் 57453—திரு. ந. சுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம், மாங்குடி—கீரனூர் வழி, அன்னவாசல்வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வினாவில் கோரியுள்ள வழித்தடத்தில் கீரனூரிலிருந்து இலுப்பூர் வரை மாங்குடி வழியாக புதுக்கோட்டை மண்டல நகரப் பேருந்து 6 நடைகள் இயக்கப்படுகிறது. இலுப்பூரிலிருந்து அன்னவாசலுக்கு ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி உள்ளது. இவ்வழித்தடத்தில் தற்போது இயக்கப்பட்டு வரும் நடைகளே போதுமானதாக கருதப்படுகிறது.

43—

பேருந்து வசதி

வினா எண் 57454—திரு. ந. சுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, புதுக்கோட்டை—தர்கா, பூங்குடி, காவேரி நகர் வழியாக புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வினாவில் கோரப்பட்டுள்ள வழித்தடத்தில் புதுக்கோட்டையிலிருந்து தர்காவரை ஒவ்வொரு 20 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி உள்ளது. மேலும், புதுக்கோட்டையிலிருந்து காவேரி நகருக்கு பூங்குடி வழியாக புதுக்கோட்டை மண்டல நகர் பேருந்து ஒன்று 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. கோரிக்கை வழித்தடத்தில் இடையில் அண்டக்குளம் விலக்கிலிருந்து பூங்குடி வரை பஸ் வசதி இல்லாத கிராமம் ஏதுமில்லை. எனவே, மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் கோரிக்கை தடத்தில் புதிய பேருந்துகள் இயக்க தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

44—

பேருந்து வசதி

வினா எண் 57494—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி-தருமபுரி-திருப்பதி வழித்தடத்தில் எடப்பாடி வரை பேருந்து நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

எடப்பாடி-தருமபுரி-திருப்பதி வழித்தடத்தின் நீளம் 250 கிலோ மீட்டருக்கு மிகையாக வருவதால், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மட்டுமே இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கிட இயலும். எனினும் தற்போது சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், தருமபுரி மண்டலம் மூலமாக கீழ்க்கண்ட இடங்களிலிருந்து திருப்பதிக்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

1. சேலம்-திருப்பதி 3 பேருந்துகள் (மற்றும் அரசு விரைவுப் போக்குவத்துக் கழகம் மூலமாக 6 பேருந்துகள்)

2. தருமபுரி-திருப்பதி 1 பேருந்து

3. கிருஷ்ணகிரி-திருப்பதி 1 பேருந்து

எடப்பாடி-சேலம் வழித்தடத்தில் ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி உள்ளதால் மேற்கண்ட பகுதிவாரியான பேருந்து வசதியே இப்பகுதி மக்களுக்கு போதுமானதாகும்.

45—

கூடுதல் பேருந்து வசதி

வினா எண் 57498—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, ஈரோட்டிலிருந்து சங்ககிரி கொங்கணாபுரம் வழியாக ஓமலூருக்கு கூடுதலாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, ஈரோட்டிலிருந்து சங்ககிரி கொங்கணாபுரம் வழியாக ஓமலூருக்கு இயக்கப்படும் பேருந்துகள் பின்வருமாறு:

	அரசுப் பேருந்து நடைகள்	தனியார் பேருந்து நடைகள்
ஈரோடு-ஓமலூர்	60	36

இதுதவிர, ஓமலூரிலிருந்து கொங்கணாபுரம், சங்ககிரி, ஈரோடு வழியாக பழனி வரை தினசரி 2 நடைகள் இயக்கப்படுகிறது. மேலும், ஓமலூர்-தாரமங்கலம், தாரமங்கலம்-சங்ககிரி, சங்ககிரி-ஈரோடு என பகுதி வாரியாக நகரப் பேருந்து வசதி உள்ளதால் தற்போதுள்ள பேருந்து வசதியே இப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவைக்குப் போதுமானதாகும்.

2011 ஜனவரி 13]

46—

கூடுதல் பேருந்து வசதி

வினா எண் 57499—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி-சிதம்பரம் வரை கூடுதலாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக எடப்பாடியிலிருந்து சேலம் வழியாக சிதம்பரத்திற்கு தினசரி 6 பேருந்துகள்மூலம் 12 நடைகள் இயக்கப்படுகின்றது. இதுதவிர, இவ்வழித்தடத்தில் கீழ்க்கண்டவாறு பகுதிவாரியான பேருந்து வசதி உள்ளது.

	அரசு பேருந்து நடைகள்	தனியார் பேருந்து நடைகள்
1 எடப்பாடி-சேலம்	78	86
2 சேலம்-சிதம்பரம்	48	—

இவ்வாறான பேருந்து வசதியே இப்பகுதி மக்களின் தேவைக்குப் போதுமானதாகும்.

47—

பேருந்து வசதி

வினா எண் 57503—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி-திருச்செங்கோடு-மதுரை வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை —

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக எடப்பாடி-திருச்செங்கோடு-மதுரை வழித்தடத்தில் பகுதி வாரியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:-

		அரசுப் பேருந்து நடைகள்.	தனியார் பேருந்து நடைகள்.
1	எடப்பாடி-திருச்செங்கோடு	124	16
2	திருச்செங்கோடு-நாமக்கல்	226	184
3	நாமக்கல்-மதுரை ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியிலும் பேருந்து வசதி உள்ளது.		

மேற்கண்ட பகுதி வாரியான பேருந்து வசதியே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

48—

பேருந்து வசதி

வினா எண் 57504—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி-பவானி-பொள்ளாச்சி வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

எடப்பாடி-பவானி, பவானி-ஈரோடு, ஈரோடு-திருப்பூர், திருப்பூர்-பொள்ளாச்சி என வழித்தடம் முழுமையும் பகுதி வாரியாக போதிய அளவு பேருந்து வசதி உள்ளது.

2011 ஜனவரி 13]

49—

பேருந்து வசதி

வினா எண் 57505—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி-தருமபுரி-வேலூர் வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மூலமாக எடப்பாடியிலிருந்து தருமபுரி வரை 4 நடைகளும், எடப்பாடி-மேச்சேரி வரை 2 நடைகள் என புறநகர் பேருந்து ஒன்று இயங்கி வருகின்றன. தருமபுரியிலிருந்து திருப்பத்தூர் (வேலூர் வழியாக 19 பேருந்துகள்) மூலமாக 40 நடைகள் இயங்கி வருகிறது. மேலும் எடப்பாடி-சேலம், சேலம்-வேலூர் வழித்தடத்தில் ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியிலும் பேருந்து வசதி உள்ளது. எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

50—

பேருந்து வசதி

வினா எண் 57506—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி-பென்னாகரம்-ஒசூர் வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடியிலிருந்து ஜலகண்டாபுரம், நங்கவள்ளி வழியாக மேச்சேரி வரை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மூலமாக புறநகர் பேருந்துகள் 2 மூலம் தினசரி 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.. இது தவிர மேற்படி தடத்தில் பகுதி வாரியாக போதுமான அளவு நகரப் பேருந்து வசதி உள்ளது. மேலும், மேச்சேரியிலிருந்து ஒசூர் வரை கீழ்க்கண்டவாறு பகுதிவாரியான பேருந்து வசதி உள்ளது.

		அரசுப் பேருந்து நடைகள்	தனியார் பேருந்து நடைகள்
1.	மேச்சேரி-பென்னாகரம்	44	20
2	பென்னாகரம்-பாலக்கோடு	44	32
3	பாலக்கோடு-ஒசூர்	182	112

மேற்கண்ட பேருந்து வசதியே இப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவைக்குப் போதுமானதாகும்.

51—

பணிமனை

வினா எண் 57510—திரு. வை. காவேரி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கபிலர்மலை அல்லது ஜேடர்பாளையத்தில் அரசுப் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) சார்பில், கபிலர்மலைக்கும், ஜேடர்பாளையத்திற்கும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

நாமக்கல் மற்றும் திருச்செங்கோடு பணிமனைமூலம் 11 பேருந்துகள் மட்டும் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளுக்கான பராமரிப்பு பணிகள் அந்தந்த பணிமனைகளிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, தற்போது கபிலர்மலை அல்லது ஜேடர்பாளையத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) சார்பில் பணிமனை துவங்கும் திட்டம் ஏதும் இல்லை.

52—

பேருந்து வசதி

வினா எண் 57539—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையிலிருந்து தளி கும்மளாபுரம் வழியாக பெங்களூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேன்கனிக்கோட்டை—பெங்களூர் (வழி) தளி, கும்மளாபுரம் வழித்தடத்தின் நீளம் 72.0 கிலோ மீட்டராகும். இத்தடத்தில் புறநகர்ப் பேருந்து ஒன்றை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம்மூலம் இயக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

53—

விரைவுப் பேருந்து வசதி

வினா எண் 57541—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையிலிருந்து பார்த்திபனூர், அருப்புக்கோட்டை, விருதுநகர் வழியாக தென்காசிக்கு ஒரு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கையிலிருந்து மானாமதுரை, பார்த்திபனூர், அருப்புக்கோட்டை, வழியாக விருதுநகர் வரை அரசுப் பேருந்துமூலம் நாள் ஒன்றுக்கு 6 நடைகளும், பார்த்திபனூர், அருப்புக்கோட்டை, விருதுநகர், தென்காசி வழியாக செங்கோட்டைக்கும், விருதுநகரிலிருந்து தென்காசிக்கும் என பகுதி பகுதியாக அரசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், வினாவில் கோரியுள்ள வழித்தடம் புதிய வழித்தடமாக இருப்பதால் புதிய வழித்தடங்கள் இயக்கும்பட்சத்தில் தேவையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

54—

அலுவலகம்

வினா எண் 57544—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் மற்றும் மேட்டூரில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் மற்றும் மேட்டூரில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் (பகுதி அலுவலகங்கள்) முறையே 22-8-1986 மற்றும் 1-10-1984 ஆகிய தேதிகளில் துவங்கப்பட்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

55—

அலுவலகம்

வினா எண் 57606—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோளிங்கர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இராணிப்பேட்டை பகுதியில் தற்போது இயங்கிவரும் பகுதி அலுவலகம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. 2008-09 ஆம் நிதியாண்டில் இராணிப்பேட்டை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் செயல்படும்.

56—

அலுவலகம்

வினா எண் 57984—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூரில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரியலூரில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் 2008-09 ஆம் நிதியாண்டில் துவங்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

57—

அலுவலகம்

வினா எண் 58003—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருப்பரங்குன்றம் தொகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

58—

பேருந்து வசதி

வினா எண் 60443—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம்—பூம்புகாருக்கு ஆடுதுறை, கஞ்சனூர், குத்தாலம், மயிலாடுதுறை வழியாக பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் இயக்க எல்லைக்கு உட்பட்ட கும்பகோணம்-பூம்புகார் (வழி) ஆடுதுறை, கஞ்சனூர், குத்தாலம், மயிலாடுதுறை, மணக்குடி, கீழையூர், கிடாரங்கொண்டான், கருவிழந்தநாதபுரம் மற்றும் மேலையூர் வழித்தடத்தின் நீளம் 69.20 கி.மீ. ஆகும். கும்பகோணம்-பூம்புகார் (வழி) ஆடுதுறை,

2011 ஜனவரி 13]

குத்தாலம், மயிலாடுதுறை, கீழையூர், கிடாரங்கொண்டான், கருவி மற்றும் மேலையூர் தட நீளம் 62.0 கி.மீ. ஆகும். கோரிக்கை வழித்தடம் புதிய மற்றும் சுற்று வழித்தடமாகும். கோரிக்கை தடத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் பகுதிபகுதியாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக மற்றும் தனியார் பேருந்து வசதி போதிய அளவு உள்ளது. எனவே கோரிக்கை தடத்தில் தற்சமயம் பேருந்துகள் இயக்கிட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

59—

பேருந்து வசதி

வினா எண் 61117—திரு. ம. இராஜ்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பலூரிலிருந்து திருப்பதிக்கு புதிய விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர்—திருப்பதி வழித்தடம் தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய இரு மாநிலங்கள் சம்மந்தப்பட்டிருப்பதால், இத்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடக்கும் இரு மாநில ஒப்பந்த பேச்சு வார்த்தையின்போது பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்நிலையில் மேற்படி தடத்தில் தற்போது பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் இல்லை.

60—

விரைவுப் பேருந்து

வினா எண் 61118—திரு. ம. இராஜ்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பலூர் தொகுதி, வேப்பந்தட்டை ஒன்றியம், பூலாம்பாடியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக பூலாம்பாடியிலிருந்து-சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க தற்போது திட்டம் ஏதும் இல்லை. பூலாம்பாடி பயணிகள் அருகாமையிலுள்ள பெரம்பலூர் வந்து, அங்கிருந்தும் அதன் வழியாகவும் சென்னைக்கு இயக்கப்படும் இக்கழகப் பேருந்து வசதியை பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக உள்ளது. இந்நிலையில் தற்போது பூலாம்பாடி-சென்னை தடத்தில் பிரத்தியேகமாக பேருந்து இயக்க வாய்ப்பில்லை.

61—

பேருந்து வசதி

வினா எண் 61139—திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல்லிலிருந்து சேந்தமங்கலம் வழியாக தம்மம்பட்டி வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை தடம் சேலம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக இயக்க எல்லைக்கு உட்பட்ட புதிய வழித்தடம் ஆகும். சேலம் மாவட்ட கிழக்கு எல்லைப் பகுதியில் அமைந்துள்ள தம்மம்பட்டிக்கு, இராசிபுரம் மற்றும் சேலத்தில் இருந்துதான் அதிக பயணிகள் பயணம் செய்து வருகின்றனர் என்பது ஆய்வின்மூலம் தெரியவருகிறது. எனினும், கோரிக்கையில் உள்ள வழித்தடத்தில் பின்வருமாறு பகுதி வாரியாக பேருந்து வசதி உள்ளது.

2011 ஜனவரி 13]

	தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம்.		தனியார்		பயனடையும் பகுதி
	பேருந்து கள்	நடை கள்	பேருந்து கள்	நடை கள்	
(1) நாமக்கல்-கள்ளக்குறிச்சி (வழி) சேந்தமங்கலம். பேளுக்குறிச்சி, நாமகிரிப்பேட்டை, மெட்டாலா, ஆத்தூர்	2	8	—	—	நாமக்கல்-சேந்தமங்கலம்
(2) இராசிபுரம்-தம்மம்பட்டி (வழி) சேந்தமங்கலம் பிரிவு, நாமகிரிப்பேட்டை, மெட்டாலா	6	36	8	50	இராசிபுரம்-சேந்தமங்கலம்
(3) நாமக்கல்-தம்மம்பட்டி (வழி) சேந்தமங்கலம்	—	—	1	6	சேந்தமங்கலம்

மேற்கண்ட பேருந்துகள் வசதியே கோரிக்கையில் உள்ள வழித்தடப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவையினை நிறைவு செய்யும் வகையில் உள்ளது.

62—

பேருந்து வசதி

வினா எண் 61183—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து பார்த்திபனூர், கமுதி, தூத்துக்குடி, திருச்செந்தூர் வழியாக கன்னியாகுமரிக்கு விரைவுப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக மானாமதுரையிலிருந்து கன்னியாகுமரிக்கு கமுதி, தூத்துக்குடி, திருச்செந்தூர் வழியாக பேருந்து இயக்க தற்போது திட்டம் ஏதும் இல்லை. சென்னை, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க பரிசிலிக்கப்படும்போது, மேற்படி தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து தட ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

63—

தமிழில் பயணச் சீட்டு

வினா எண் 61246—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பேருந்துகளில் தமிழில் பயணச்சீட்டு அச்சிட்டு வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் பேருந்துகளில் தமிழில் பயணச்சீட்டு அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

64—

விரைவுப் பேருந்து

வினா எண் 61303—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினத்திலிருந்து சென்னைக்கு இரவு நேரத்தில் விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சென்னை, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட் மூலமாக காவேரிப்பட்டினத்திலிருந்து சென்னைக்கு இரவு நேரத்தில் பிரத்தியேகமாக பேருந்து இயக்க திட்டம் ஏதும் இல்லை. தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தடம் எண் 427-ல் மேட்டூரிலிருந்து சென்னைக்கு காவேரிப்பட்டினம் வழியாக இரவு நேரத்தில் ஒரு அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. இத்தடப் பேருந்தை காவேரிப்பட்டினம்-சென்னை பயணிகள் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக உள்ளது. இந்நிலையில் காவேரிப்பட்டினம்-சென்னை தடத்தில் பிரத்தியேகமாக இரவு நேரப் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

65—

பேருந்து வசதி

வினா எண் 61747—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில் கூடுதல் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகரில் நிதி ஆண்டு 2007-08 தொடக்கத்தில் 638 நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. பின் பொதுமக்களின் தேவையின் அடிப்படையில் 2007-08 நிதியாண்டில் 57 நகரப் பேருந்துகளும் 2008-09-ம் நிதியாண்டில் 41 நகரப் பேருந்துகளும் கூடுதலாக இயக்கப்பட்டுள்ளன. அதன்படி தற்போது 736 நகரப் பேருந்துகள் மதுரை மாநகரில் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் அவ்வப்போது ஏற்படும் தேவையினைக் கருத்தில்

[2011 ஜனவரி 13

கொண்டு அதாவது, விழாக்காலம், முகூர்த்த நாட்கள் போன்ற நாட்களில் உபரி பேருந்துகள் மூலம் கூடுதல் நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

66—

சிறப்புப் பேருந்து

வினா எண் 62115—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சென்னை, மகாபலிபுரம், பாண்டிச்சேரிக்கு புதிய சுற்றுலா சிறப்புப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக மகாபலிபுரம், பாண்டிச்சேரிக்கு புதிய சுற்றுலா சிறப்புப் பேருந்து இயக்க திட்டம் ஏதும் இல்லை. தற்போது தமிழ்நாடு அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலமாக சுற்றுலாத் தலங்களுக்கு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. ஆகவே, சென்னை, மகாபலிபுரம், பாண்டிச்சேரி உள்ளிட்ட இடங்களுக்கு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலமாகவே புதிய சுற்றுலா சிறப்புப் பேருந்து இயக்கப்பட வேண்டும். இந்நிலையில் நீண்ட தூர பயணிகளின் வசதி மற்றும் நிறுத்த இடங்களைக் கருத்தில் கொண்டு பேருந்துகளை இயக்கி வரும் சென்னை, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் சுற்றுலா சிறப்புப் பேருந்து இயக்க தற்போது திட்டமேதும் இல்லை.

67—

பேருந்து வசதி

வினா எண் 62116—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) சென்னை மாநகரில் உள்ள முக்கிய சுற்றுலாப் பகுதிகளை கண்டுகளிக்க தனி மாநகர போக்குவரத்துக் கழக சிறப்பு சுற்றுலாப் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகர் மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் உள்ள முக்கிய மற்றும் சுற்றுலா இடங்களுக்கு நகரின் பல பகுதிகளிலிருந்தும் போதுமான எண்ணிக்கையில் மாநகர போக்குவரத்துக் கழகம் பேருந்துகளை இயக்குகிறது. எனவே, தனியாக சிறப்பு சுற்றுலாப் பேருந்துகளை இயக்க அவசியமில்லை.

68—

சொகுசுப் பேருந்து

வினா எண் **62706**—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி வழியாக திருவண்ணாமலைக்கு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி, கமுதி, முதுகுளத்தூர் ஊர்களிலிருந்து மானாமதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை வழியாக திருச்சி வரை அதிக அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. திருச்சியிலிருந்து திருவண்ணாமலைக்கு அதிக அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு விகிதம் குறைவாக இருப்பதால் இதுவே போதுமானதாகும்.

[2011 ஜனவரி 13

69—

பேருந்து வசதி

வினா எண் 62710—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளி வழியாக பாண்டிச்சேரிக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், சென்னை மூலமாக மானாமதுரையிலிருந்து பாண்டிச்சேரிக்கு திருச்சி வழியாக பேருந்து இயக்க திட்டம் ஏதும் இல்லை. புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க பரிசீலிக்கப்படும்போது, மேற்படி தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து தட ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

70—

குளிர்சாதனப் பேருந்து வசதி

வினா எண் 62711—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து மதுரை, திண்டுக்கல் வழியாக பெங்களூருக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், சென்னை மூலமாக மானாமதுரையிலிருந்து பெங்களூருக்கு மதுரை,

2011 ஜனவரி 13]

திண்டுக்கல் வழியாக தற்போது குளிர்சாதன பேருந்து இயக்க திட்டம் ஏதும் இல்லை. புதிய வழித்தடத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்க பரிசீலிக்கப்படும்போது மேற்படி தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து தட ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

71—

பேருந்து வசதி

வினா எண் 63089—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து அருப்புக்கோட்டை, விருதுநகர் வழியாக குற்றாலத்திற்கு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை-அருப்புக்கோட்டை தடத்தில் தினசரி 4 நடைகள் அரசு புறநகர்ப் பேருந்துகளும் 12 நடைகள் தனியார் நிறுவனப் பேருந்துகளும் அருப்புக்கோட்டை குற்றாலம் தடத்தில் தினசரி 4 நடைகள் அரசு புறநகர்ப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், மானாமதுரை-குற்றாலம் (வழி-அருப்புக்கோட்டை) தட தூரம் 224.6 கி.மீ. மானாமதுரை-குற்றாலம் (வழி-மதுரை) தட தூரம் 227.3 கி.மீ. என்று சற்றேறக்குறைய ஒரே அளவில் உள்ளது. மானாமதுரை-மதுரை-குற்றாலம் வழித்தடம் அதிகளவு பேருந்து வசதிகள் கொண்ட ஒரு தேசிய நெடுஞ்சாலை வழித்தடமாகும். மானாமதுரை-அருப்புக்கோட்டை-குற்றாலம் தடமானது ஒரு கிராமப்புற வழித்தடமாகவும், ஒரு வழிச்சாலை (single road)யாகவும் உள்ளதால் பயண நேரம் கூடுதலாகவும் பயணிகளுக்கு அசௌகரியமாகவும் இருக்க வாய்ப்புகள் உள்ளது. எனவே, வினாவில் குறிப்பிட்டபடி மானாமதுரை—குற்றாலம்—வழி அருப்புக்கோட்டை, விருதுநகர் என சொகுசுப் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் இல்லை.

[2011 ஜனவரி 13

72—

மாட்டுத்தாவணி பேருந்து நிலையம்

வினா எண் 64325—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் மாவட்ட ஊர்களுக்குச் செல்லும் அரசுப் பேருந்துகள் மதுரை, மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 07-09-2007 முதல் தென் மாவட்ட ஊர்களுக்குச் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு செல்கிறது.

73—

குளிர்சாதனப் பேருந்து வசதி

வினா எண் 64607—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து மகாபலிபுரத்திற்கு தினந்தோறும் குளிர்சாதன சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து மாமல்லபுரத்திற்கு 2 குளிர்சாதன சொகுசுப் பேருந்துகளும், தி. நகரிலிருந்து மாமல்லபுரத்திற்கு 2 குளிர்சாதன சொகுசுப் பேருந்துகளும் தினசரி இயக்கி வருகிறது.

2011 ஜனவரி 13]

74—

பேருந்து வசதி

வினா எண் 64732—திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிப்பட்டியிலிருந்து தேனி வழியாக சென்னைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட் மூலமாக ஆண்டிப்பட்டியிலிருந்து சென்னைக்கு தேனி வழியாக பேருந்து இயக்க திட்டம் ஏதும் இல்லை. மேலும், தேனி-சென்னை தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல் மண்டலம் மூலம் தினசரி 8 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

75—

பேருந்து வசதி

வினா எண் 65230—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, பிஎன். பட்டி பேரூராட்சிக்குட்பட்ட துறையூர் பகுதிக்கு பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மேட்டூர் தொகுதி, பிஎன். பட்டி பேரூராட்சிக்குட்பட்ட துறையூர் பகுதிக்கு (புதுக்காடு ஓடை) சேலம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் தடம் எண் 25 மற்றும் 35 மூலம் தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

[2011 ஜனவரி 13

76—

நேரடி சொகுசுப் பேருந்து வசதி

வினா எண் 66465—திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடுமுடியிலிருந்து சென்னைக்கு நேரடி சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சென்னை, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக கொடுமுடியிலிருந்து சென்னைக்கு நேரடி சொகுசுப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் இல்லை. தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் மூலமாக கொடுமுடி-சென்னை தடத்தில் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி தடத்தில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக பேருந்து இயக்க சாத்தியமில்லை.

77—

பேருந்து வசதி

வினா எண் 66479—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேருந்து நிலையத்திலிருந்து ஓமலூர், தருமபுரி வழியாக புதிய வழித்தடத்தில் பெங்களூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் - பெங்களூர் வழித்தடம் ஒரு புறமாநில வழித்தடமாகும். இவ்வழித்தடத்தில் இரு மாநிலங்களுக்கு இடையே உள்ள ஒப்பந்த அடிப்படையிலேயே பேருந்து இயக்கிட இயலும். எனினும் தற்போது சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், அரசு பேருந்து மூலமாக சேலம்—பெங்களூர் (வழி) ஓமலூர், தருமபுரி வழித்தடத்தில் தினசரி 242 நடைகள் இயக்கப்படுகின்றது. தாரமங்கலத்திலிருந்து ஓமலூர் வரையிலான தூரம் 10.3 கி.மீட்டரே ஆகும். எனவே மேற்கண்ட சேலம்—பெங்களூர் வழித்தடப் பேருந்து வசதியே தாரமங்கலம் பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவையை பூர்த்தி செய்யப் போதுமானதாகும்.

78—

பேருந்து வசதி

வினா எண் **67088—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையிலிருந்து திருவனந்தபுரத்திற்கு அல்ட்ரா டீலக்ஸ் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் லிமிடெட், சென்னை மூலமாக மானாமதுரையிலிருந்து திருவனந்தபுரத்திற்கு அல்ட்ரா டீலக்ஸ் பேருந்து இயக்க திட்டம் ஏதும் இல்லை. புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க பரிசீலிக்கப்படும்போது, மேற்படி தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து தட ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

79—

பேருந்து வசதி

வினா எண் 67287—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூரிலிருந்து திருவண்ணாமலை வழியாக திண்டிவனத்திற்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூரிலிருந்து திருவண்ணாமலை, திண்டிவனம் வழியாக புதுச்சேரிக்கு 2 பேருந்துகள் மூலம் தினசரி 6 நடைகள் நேரடியாக இயக்கப்பட்டு வருகின்றது.

80—

கட்டுப்படுத்துதல்

வினா எண் 70508—திரு. ப. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பெருகி வரும் வாகனங்களின் புகையால் மாசு ஏற்பட்டுள்ளதை கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழக அரசு வாகனங்களில் புகையால் மாசுபடுவதைக் கட்டுப்படுத்த, 254 புகை சோதனை மையங்கள் அமைக்கப்பட்டு அம்மையங்களில் புகை சான்று வழங்கப்படுகிறது. மேற்கண்ட புகை சான்று இல்லாமல் இயங்கும் வாகனங்கள் கண்டறியப்பட்டு

2011 ஜனவரி 13]

(தணிக்கையின் போது) இணக்கக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கு மேல் புகை வெளியிடும் வாகனங்கள் கண்டறியப்பட்டு அவைகளுக்கு தற்காலிக தகுதிச்சான்று தடை செய்யப்படுகிறது. சென்னை மாநகரில் பெட்ரோலில் இயங்கும் அனைத்து ஆட்டோ ரிக்ஷாக்களையும் 31-07-2007-க்குள் திரவ எரிவாயுவில் (LPG) இயங்கும் வாகனங்களாக அரசு, அரசாணை எண் 510, உள் (போக்குவரத்து-3) துறை, நாள் 13-04-2007-ல் ஆணையிட்டுள்ளது. மேற்கண்ட ஆணையின்படி மொத்தம் உள்ள 33,731 ஆட்டோக்களில் 13,531 ஆட்டோக்கள் திரவ எரிவாயுவிற்கு (LPG) மாற்றப்பட்டுள்ளன. இதனிடையே ஆட்டோ ஓட்டுநர் நலச்சங்கம் மேற்கண்ட அரசாணையை எதிர்த்து, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தடை ஆணை பெற்றுள்ளனர். இருப்பினும் மேற்கண்ட அரசாணையில் திரவ எரிவாயுவிற்கு மாற்றுவதற்கான ஒரு வாகனம் ஒன்றுக்கு ரூ. 2,000/- வழங்கியதை தற்போது அரசு ரூ. 3,000/- ஆக மானியத்தை உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் டீசலில் இயங்கும் ஆட்டோக்களை பதிவு செய்வதைத் தடை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. தற்போது திரவ வாயுவில் இயங்கும் ஆட்டோக்களுக்கு மட்டும் அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது. மாசு ஏற்படாத வகையில் பேட்டரியில் இயங்கும் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு 50 சதவீதம் சாலை வரிவிலக்கு அளிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

81—

சொகுசுப் பேருந்து

வினா எண் 76350—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையிலிருந்து திருவனந்தபுரம் வரை சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை பயணிகள் அருகாமையிலுள்ள மதுரை *(மானாமதுரை-மதுரை 51 கி.மீ.)* வந்து அதன் வழியாக இயக்கப்படும் *16* அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளைப் பயன்படுத்தி திருவனந்தபுரம் சென்றுவர ஏதுவாக உள்ளது. இந்நிலையில் மானாமதுரை - திருவனந்தபுரம் தடத்தில் நேரடிப் பேருந்து இயக்க தற்போது திட்டம் ஏதும் இல்லை.

82—

முன்பதிவு

வினா எண் 81600—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் முன் பதிவை மூன்று நாட்களில் இருந்து ஏழு நாட்களாக நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தமட்டில் *30* நாட்களுக்கு முன்பாக முன்பதிவு செய்யும் முறை நடைமுறையில் உள்ளது. இதே நடைமுறையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கும் *30* நாட்களுக்கு முன்பாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது.

83—

சொகுசுப் பேருந்து

வினா எண் 81913—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

சேலம் முதல் திருப்பதி வரை கூடுதல் சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக சேலம்-திருப்பதிக்கும், சேலம் வழியாக திருப்பதிக்கும் கீழ்க்கண்டவாறு அதி நவீன சொகுசு மிதவை பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது.

வ. எண்	தடம் எண்	செல்லுமிடம்	வழி	மொத்த பேருந்துகள்	நடைகள்
1.	849	சேலம்-திருப்பதி	சித்தூர்	6	12
2.	835டி	திருப்பூர்-திருப்பதி	சேலம்	2	2
3.	962	கோயம்புத்தூர்-திருப்பதி	சேலம்	4	4
4.	981	தூத்துக்குடி-திருப்பதி	சேலம்	2	2
		மொத்த பேருந்துகள்/நடைகள்		14	20

மேற்படி பேருந்து வசதிகளை சேலம்-திருப்பதி பயணிகள் பயன்படுத்திக்கொள்ள போதுமானதாக உள்ளது.

84—

பேருந்து வசதி

வினா எண் **81921**—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து திருவண்ணாமலை வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது சேலம்-திருவண்ணாமலை (வழி) அரூர், ஊத்தங்கரை வழித்தடத்தில் அரசுப் பேருந்துகள் 6 மூலமாக தினசரி 24 நடைகள்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இயக்கப்படுகிறது. இதுதவிர சேலம்-காஞ்சிபுரம், சேலம்-வந்தவாசி, திருப்பூர்-திருவண்ணாமலை, கோவை-திருவண்ணாமலை மற்றும் ஈரோடு-திருவண்ணாமலை ஆகிய வழித்தடங்களில் இயக்கப்படும் பேருந்துகளையும் சேர்த்து சேலம்-திருவண்ணாமலை வழித்தடத்தில் தினசரி 88 நடைகள் இயக்கப்படுகிறது. எனவே, மேற்கண்ட வழித்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

85—

பேருந்து வசதி

வினா எண் 82822—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து அரூர், ஊத்தங்கரை வழியாக சென்னைக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலத்திலிருந்து அரூர், ஊத்தங்கரை வழியாக சென்னை வழித்தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மற்றும் விழுப்புரம் பேருந்துகள் 15 மூலம் தினசரி 30 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. இவ்வழித்தடத்தில் மேலும் 5 பேருந்துகள் இயக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

86—

பேருந்து வசதி

வினா எண் 83264—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் முதல் பெங்களூர் மார்க்கம் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் ஓமலூர் பேருந்து நிலையம் உள்ளே வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஓமலூர் பேருந்து நிலையமானது "டி" பிரிவு தகுதி பெற்று சிறிய பரப்பளவு கொண்ட ஒரு சிறிய பேருந்து நிலையமாகும். தற்போது ஓமலூர் பேருந்து நிலையத்தினை மையமாகக் கொண்டு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல ஓமலூர் கிளையில் இருந்து தினசரி 17 புறநகர்ப் பேருந்துகளும், 39 நகரப் பேருந்துகளும் இயங்கி வருகின்றன. மற்றும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மற்ற கிளைகளில் இருந்து 66 புறநகர்ப் பேருந்துகள், 5 நகரப் பேருந்துகளும் ஓமலூர் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்கின்றன. இது தவிர, தனியார்ப் பேருந்துகள், மினி பேருந்துகள், மினி லாரிகள் மற்றும் கடை வைத்திருப்போரும் பேருந்து நிலையத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். எனவே, தற்போது இயக்கப்பட்டு வரும் மேற்படி பேருந்துகளுக்கே பேருந்து நிலையத்தில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்ல போதுமான இட வசதி இல்லை. எனவே, சேலத்திலிருந்து ஓமலூர் வழியாக ஓசூர் மற்றும் பெங்களூர் செல்லும் தொலைதூரப் பேருந்துகள் ஓமலூர் பேருந்து நிலைய நுழைவாயில் அருகே நின்று பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்கின்றன.

87—

பணிமனை

வினா எண் 90750—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி, ஓசூர் பகுதியில் மூன்றாவதாக ஒரு பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நிதிநிலைமையின் காரணமாக கிருஷ்ணகிரி மற்றும் ஓசூரில்

3வது பணிமனை தற்சமயம் புதியதாக துவக்கிட இயலாத நிலையுள்ளது.

ஏற்கெனவே, கிருஷ்ணகிரி மற்றும் ஓசூரில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக தலா 2 பணிமனைகள் இயங்கி வருகிறது. இந்தப் பணிமனைகளில் உள்ள பேருந்துகளின் விபரம் பின்வருமாறு:

வ. எண்	கிளை விபரம்	பேருந்துகளின் எண்ணிக்கை		
		தட பேருந்துகள்	மாற்று பேருந்துகள்	மொத்தம்
1.	கிருஷ்ணகிரி புறநகர்	78	9	87
2.	கிருஷ்ணகிரி நகர்	76	5	81
3.	ஓசூர் புறநகர்	66	7	73
4.	ஓசூர் நகர்	64	5	69

எனவே, கிருஷ்ணகிரி மற்றும் ஓசூரில் 3-வது பணிமனை ஒன்றை துவக்கிட இயலாத நிலையுள்ளது.

88—

பேருந்து வசதி

வினா எண் 92119—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், பணகுடியிலிருந்து சென்னைக்கு பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பணகுடி பயணிகள் நகரப் பேருந்துகள்மூலம் அருகாமையிலுள்ள வள்ளியூர் வந்து வள்ளியூரிலிருந்தும் அதன் வழியாகவும்

2011 ஜனவரி 13]

இயக்கப்படும் அரசு விரைவுப் பேருந்துகள் வசதியைப் பயன்படுத்தி சென்னை செல்ல ஏதுவாக உள்ளது.

தற்போது கீழ்க்காணும் தடப் பேருந்துகள் வள்ளியூரிலிருந்தும் அதன் வழியாகவும் சென்னைக்கு இயக்கப்பட்டு வருகின்றன.

வ. எண்	தடம் எண்	செல்லுமிடம்	வழி	மொத்த நடைகள்/	பேருந்துகள்
1	*295*	வள்ளியூர்-சென்னை	நாங்குநேரி	*2*	*2*
2	*198*	நாகர்கோவில்-சென்னை	வள்ளியூர்	*20*	*20*
3	*282*	கன்னியாகுமரி-சென்னை	வள்ளியூர்	*12*	*12*
4	*284*	மார்த்தாண்டம்-சென்னை	வள்ளியூர்	*8*	*8*
5	*794*	திருவனந்தபுரம்-சென்னை	வள்ளியூர்	*20*	*20*
				62	*62*

பணகுடியிலிருந்து சென்னை செல்லும் பயணிகள் அருகாமையிலுள்ள வள்ளியூர் வந்து மேற்படி பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது.

89—

முன்பதிவு

வினா எண் 93173—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் பேருந்துகளில் இணையத்தின்மூலம் பயணச்சீட்டை முன்பதிவு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசுப் பேருந்துகளுக்கு இணையத்ன்மூலம் பயணச்சீட்டை முன்பதிவு செய்ய பல்லவன் போக்குவரத்து அறிவுரை

பணிக்குழுவின் மூலமாக துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

90—

தேசிய சட்டக் கல்லூரி

வினா எண் 121636—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் தேசிய சட்டக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னையில் தேசிய சட்டக் கல்லூரி தொடங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

91—

பேருந்து வசதி

வினா எண் 100676—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் போக்குவரத்து மண்டலம், வந்தவாசி-சென்னை (வழி) வழூர் வழியாக இயங்கி வந்த தடம் எண். 140D-யை மீண்டும் அதன் 4 நடைகளுடன் அத்தடத்திலேயே இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், திருவண்ணாமலை மண்டலத்தின்மூலம் தற்போது புறநகர் தடம் எண். 140D வந்தவாசி-சென்னை (வழி) வழூர் தினசரி 2 நடைகளும், நகரத் தடம் எண். W6A வந்தவாசி-உத்திரமேரூர் (வழி) வழூர் தினசரி 2 நடைகளும், வந்தவாசி-இரும்பேடு (வழி) வழூர் தினசரி 2 நடைகளும் என மொத்தம் 2 பேருந்துகள் மூலம் 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் 2 தனியார் சிற்றுந்துகள் மூலம் வந்தவாசி-வழூர் என தினசரி 24 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தில் போதிய போக்குவரத்து வசதி உள்ளதால் தடம் எண். 140D-யில் கூடுதல் நடைகள் இயக்கும் திட்டம் இல்லை.

92—

பேருந்து வசதி

வினா எண் 100677—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் போக்குவரத்து மண்டலம், வந்தவாசி-உத்திரமேரூர் (வழி) வழூர் வழியாக இயங்கி வந்த W6 நகரப் பேருந்தை மீண்டும் அத்தடத்திலேயே இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், திருவண்ணாமலை மண்டலத்தின்மூலம் தற்போது நகரத் தடம் எண். W6/A வந்தவாசி-உத்திரமேரூர் (வழி)

[2011 ஜனவரி 13

வழூர் தினசரி 2 நடைகளும், வந்தவாசி-இரும்பேடு (வழி) வழூர் தினசரி 2 நடைகளும், தடம் எண். 140D வந்தவாசி-சென்னை (வழி) வழூர் 2 நடைகள் என 2 பேருந்துகள் மூலம் மொத்தம் 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், 2 தனியார் சிற்றுந்துகள் வந்தவாசி-வழூர் என தினசரி 24 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இத்தடத்தில் போதிய போக்குவரத்து வசதி உள்ளதால் தடம் எண். W6/A-யில் கூடுதல் நடைகள் இயக்கும் திட்டம் இல்லை.

93—

தொலைக்காட்சி வசதி

வினா எண் 104076—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பேருந்து தொலைக்காட்சியில் செயற்கைக்கோள் மூலமாக நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசாணை 139, போக்குவரத்து (பி2) துறை, நாள் 19-09-2008-ன்படி போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் “பூம்” (BOOM) திட்டத்தில் தொலைக்காட்சி சாதனங்கள் பொருத்திக் பயணிகளுக்கு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தை மெஸர்ஸ், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு முகவராக செயல்பட்டு நடத்தி வருகின்றது. செயற்கைக்கோள் மூலம் நிகழ்ச்சிகள் பேருந்துகளில் ஒளிபரப்பு செய்வது ஒரு புதிய தொழில்நுட்பமாகும். அதற்கு மூன்றாம் தலைமுறை அலைவரிசை போன்று கட்டமைப்பு வசதிகள் தேவை என்பதால் அரசுப் பேருந்துகளில் செயற்கைக் கோள் மூலம் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்யும் திட்டம் தற்போது எதுவும் இல்லை.

2011 ஜனவரி 13]

94—

பணிமனை

வினா எண் 104177—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூரில் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொளத்தூரிலிருந்து சுமார் 13 கி.மீ. தொலைவில் உள்ள மேட்டூரில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) பணிமனை இயங்கிவருகின்றது. மேலும், மேட்டூர் பணிமனையிலிருந்து கொளத்தூருக்குத் தேவையான பேருந்துகள் இயக்கப்பட்டு, இப்பேருந்துகளுக்கான பராமரிப்புப் பணிகள் அந்தப் பணிமனையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே, கொளத்தூரில் அரசுப் போக்குவத்துக் கழகம் (சேலம்) சார்பில் பணிமனை அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

95—

கோட்டம்

வினா எண் 107520—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் அல்லது சங்ககிரியை தலைமையிடமாகக் கொண்டு சேலம் போக்குவரத்துக் கழகக் கோட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

போக்குவரத்துக் கழகத்தின் கோட்டமானது மாவட்ட தலைமையிடத்தில்தான் அமைக்கப்படுகிறது. ஆனால் மேட்டூரோ

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அல்லது சங்ககிரியோ ஒரு மாவட்டத்தின் தலைமையிடமாக இல்லை. எனவே, மேட்டூர் அல்லது சங்ககிரியைத் தலைமையிடமாகக் கொண்டு சேலம் போக்குவரத்துக் கழகக் கோட்டம் அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

96—

கட்டட வசதி

வினா எண் 4—திரு. துரை சந்திரசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சை மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனைக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் மூலமாக ரூ.0.55 கோடி செலவில் புதிய வெளிநோயாளி பிரிவுக் கட்டடம், மருத்துவக் கழிவுகளை சேமிக்கும் மற்றும் அகற்றும் அறை மற்றும் பராமரிப்புப் பணிகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

97—

சுகாதார நிலையம்

வினா எண் 56—திரு. ஆர். சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, திருவாதவூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், மேலூர் ஊராட்சி ஒன்றியத்தில் கீழவளவு தெற்குதெரு, திருவாதவூர் ஆகிய கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களும், வெள்ளலூர் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. மேலூர் ஊராட்சி ஒன்றியத்தில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் இல்லை. எனவே, இனி வருங்காலங்களில் மேலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள திருவாதவூர் ஆரம்ப சுகாதார நிலையம் தகுதியிருப்பின் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

98—

விரிவுபடுத்துதல்

வினா எண் 204—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரும் உள் நோயாளிகளின் எண்ணிக்கை அனுமதிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவாக இருப்பதால், அம்மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

[2011 ஜனவரி 13

99—

தரம் உயர்த்துதல்

வினா எண் 219—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, ரொட்டிக்கடை ஆரம்ப சுகாதார துணை நிலையத்தை தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், ரொட்டிக்கடை கிராமத்தில் செயல்படும் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றி அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

100—

தரம் உயர்த்துதல்

வினா எண் 221—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி ஆரம்ப சுகாதார துணை நிலையத்தை தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மத்திய அரசின் இலக்கின்படி, இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ

மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும். ஆனால், அங்கலக்குறிச்சி கிராமத்திற்கும் கோட்டூர் அரசு மருத்துவமனைக்கும் இடைப்பட்ட தூரம் 2 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் அங்கலக்குறிச்சி கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

101—

பெண் மருத்துவர் நியமனம்

வினா எண் 287—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் ஊராட்சி, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பெண் மருத்துவர் ஒருவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு **திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட இரண்டு மருத்துவர் பணியிடங்களில் ஒரு பெண் மருத்துவர் மற்றும் ஒரு ஆண் மருத்துவர் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

102—

படுக்கை வசதி

வினா எண் 593—திரு. கோ. அரி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, திருத்தணி அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் நோயாளிகளும் மற்ற நோயாளிகளும் தங்கி சிகச்சை பெறுவதற்குப் போதுமான படுக்கை வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் நோயாளிகளும் மற்ற நோயாளிகளும் தங்கி சிகிச்சை பெறுவதற்குப் போதுமான அளவு கட்டில்கள், மெத்தைகள், தலையணைகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகத்தின் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

103—

ஜெனரேட்டர் வசதி

வினா எண் 595—திரு. கோ. அரி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, திருத்தணி நகராட்சியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையில் பணியாளரை நியமித்து மின்தடை ஏற்படாதவாறு ஜெனரேட்டரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அரசு மருத்துவமனையில் உள்ள மின்னாக்கி வசதியினை மின்வெட்டு நேரங்களில் மட்டும் மருத்துவமனை பணியாளர்களைக் கொண்டு இயக்கப்பட்டு வருவதால், மின்னாக்கி வசதியினை இயக்குவதற்குத் தனியாக பணியிடங்கள் ஒப்பளிக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

104—

சுற்றுச் சுவர்

வினா எண் 603—திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

தேனி தொகுதி, ஓடைப்பட்டி சிறப்பு ஊராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தற்போது ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு ஏதுமில்லை. எனவே, தேனி தொகுதி, ஓடைப்பட்டி சிறப்பு ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 2008-09ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி பெற்று சுற்றுச்சுவர் கட்டி முடிக்குமாறு தேனி துணை இயக்குநர், (சுகாதாரப் பணிகள்), அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

105—

சுற்றுச் சுவர்

வினா எண் 606—திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதி, கோவிந்த நகரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தேனி மாவட்டம், தேனி தொகுதி, கோவிந்த நகரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி பெற்று சுற்றுச் சுவர் கட்ட துணை இயக்குநர், (சுகாதாரப் பணிகள்), அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

106—

மருத்துவமனை

வினா எண் 624—திரு. க. சுந்தர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

உத்திரமேரூர் தாலுகா தலைமை மருத்துவமனை, வாலாஜா ஆரம்ப சுகாதார நிலையம், இரண்டும் 24 மணி நேர மருத்துவமனையாகச் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத்தில் 24 மணி நேர கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இவ்வாரம்ப சுகாதார நிலையத்திற்கும், உத்திரமேரூர் தாலுகா அரசு மருத்துவமனைக்கும் அருகில் காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை சகல வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், வாலாஜா கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தையும், உத்திரமேரூர் மருத்துவமனையையும் 24 மணி நேரமும் செயல்படும் மருத்துவமனையாகத் தரம் உயர்த்த நிருவாக ரீதியாக சாத்தியக் கூறுகள் இல்லை.

107—

சிறப்பு மருத்துவர்

வினா எண் 628— திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் எலும்பு முறிவு பிரிவு சிறப்பு மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் எலும்பு முறிவு சிறப்பு மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

2011 ஜனவரி 13]

108—

சுகாதார நிலையம்

வினா எண் 712—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை அருகே உள்ள எலையமுத்தூர் ஊராட்சி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. எனவே, எலையமுத்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

109—

மருத்துவர் நியமனம்

வினா எண் 713—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை அரசு மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை மருத்துவர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில், காது, மூக்கு, தொண்டை பயின்ற மருத்துவர் இருவர் பணியில் உள்ளனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

110—

தரம் உயர்த்துதல்

வினா எண் 722—திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் தொகுதி, நாமகிரிப்பேட்டையிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டத்தில் நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் நாமகிரிப்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட 24 மணி நேர அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. மேலும், இவ்வட்டாரத்தில் மங்களாபுரம் மற்றும் முள்ளுக்குறிச்சி ஆகிய இடங்களில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், நாமகரிப்பேட்டைக்கு மிக அருகில் ராசிபுரம் தாலுகா அரசு மருத்துவமனையும், சேந்தமங்கலம் அரசு மருத்துவமனையும் சகல மருத்துவ வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், நாமகிரிப் பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாக தற்போது தரம் உயர்த்த நிருவாக ரீதியாக சாத்தியக் கூறுகள் இல்லை.

111—

மருத்துவமனைகளை ஒன்றிணைத்தல்

வினா எண் 739—திருமதி மு. சந்திரா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் நகரில் மகப்பேறு மருத்துவமனை, அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறை காரணமாக நோயாளிகள் பாதிக்கப்படுவதால் இரண்டையும் ஒன்றாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இராஜபாளையம் அரசு மருத்துவமனை, மகப்பேறு மருத்துவமனை எனத் தனித்தனியாக மருத்துவர்கள் ஒப்பளிப்பு வழங்கப்படவில்லை. இராஜபாளையம் அரசு மருத்துவமனையில் படுக்கைகளின் அளவுகோல்படி போதிய மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, இரண்டையும் ஒன்றாக இயக்குவதற்கான அவசியம் தற்போது எழவில்லை.

112—

கட்டட வசதி

வினா எண் 753—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை அரசு தலைமை மருத்துவமனையில் புதிதாக விரிவுப்படுத்தப்பட்ட மகப்பேறு மருத்துவக் கட்டடம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை படுக்கைகள் மற்றும் மதிப்பீடு விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், ராஷ்ட்ரிய சம்விகாஸ் யோஜனா திட்டத்தின்கீழ், புதியதாக மகப்பேறு பிரிவு விஸ்தரிப்பு கட்டடம் மைய அரசின் நிதி உதவியுடன் கட்டப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.

113—

கூடுதல் வசதி

வினா எண் 816—திரு. ல. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி அரசு பொது மருத்துவமனைக்கு கூடுதல் கழிப்பிட வசதி, தண்ணீர் வசதி மற்றும் பிரசவத்திற்காக வருபவர்களுக்கான படுக்கை வசதிகளை அதிகப்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனை கட்டடம், சிறப்பு பராமரிப்புப் பணிகளுக்கான நிதியிலிருந்து ரூ.6,30,000/- கழிப்பிட வசதி, தண்ணீர் வசதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், ஆண் மற்றும் பெண் சிகிச்சை பிரிவுகள், நோயாளர்கள் உடன் வருவோர் தங்கும் வசதி ஆகிய பிரிவுகளுக்கு, கட்டட பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.9,16,000/-மும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளவும், வெளி நோயாளிகள் பிரிவு, மகப்பேறு பிரிவு, மின் ஆக்கி அறை மற்றும் மின் தூக்கி, இரு சக்கர வாகன அறை ஆகிய பணிகள் நிறைவேற்றப்படுவதற்காக ரூ.189.65 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

114—

கூடுதல் வசதி

வினா எண் 817—திரு. ல. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி அரசு பொது மருத்துவமனையில் எக்ஸ்ரே கருவி, ஸ்கேன் கருவி மற்றும் கூடுதல் ஆம்புலன்ஸ் வசதி ஆகியன செய்து தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் எக்ஸ்ரே, ஸ்கேன் மற்றும் ஆம்புலன்ஸ் வசதிகள் உள்ளன. இவ்வசதிகளைப்

2011 ஜனவரி 13]

பயன்படுத்தி இம்மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள ஆம்புலன்ஸ் வசதியே இம்மருத்துவமனைக்குப் போதுமானதாகக் கருதப்படுவதால், கூடுதலாக கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வழங்குவது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) எனவே, இவ்வினா எழ வாய்ப்பில்லை.

115—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 826—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஒன்றியம் கடகத்தூர், அதகபாடி மிட்டாநூல அள்ளி ஆகிய இடங்களில் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவண செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, இரண்டு சுகாதார மையங்களுக்கு இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், கடகத்தூர், அதகபாடி மற்றும் மிட்டாநூல அள்ளி கிராமங்களுக்கு 8 கிலோமீட்டருக்குள் ஆரம்ப சுகாதார நிலையம் / அரசு மருத்துவமனை செயல்படுவதால், இக்கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

116—

சீரமைத்தல்

வினா எண் 835—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

பட்டுக்கோட்டை தொகுதி, தாமரன்கோட்டை ஊராட்சியில், பழுதடைந்த ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்களைச் சீரமைக்கும் பணியினை அரசு மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதி, தாமரன்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையம் கட்டட பழுதுபார்ப்புப் பணிகளுக்காக ரூ.2.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதில் பொதுப்பணித் துறை மூலம் ரூ.2,61,791/- செலவிடப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

117—

சுற்றுச் சுவர்

வினா எண் 349—திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம், மாவட்டம் வேதாரண்யம் அரசு பொது மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வேதாரண்யம் அரசு பொது மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

118—

பெண் மருத்துவர் நியமனம்

வினா எண் 850—திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அரசு பொது மருத்துவமனையில் போதுமான பெண் மருத்துவர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணிநியமனம் செய்யப்படுவார்கள்?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட உதவி மருத்துவர் பணியிடம் 3. அதில் ஒரு பெண் மருத்துவர் பணிபுரிந்து வருகிறார்.

119—

மருத்துவர் நியமனம்

வினா எண் 852—திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அரசு பொது மருத்துவமனையில் போதுமான டாக்டர்களை நியமனம் செய்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அரசு பொது மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட உதவி மருத்துவர்கள் பணியிடம் மொத்தம் 3. தற்போது மூன்று மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். காலியிடம் ஏதுமில்லை.

120—

மருத்துவர்கள் வசதி

வினா எண் 865—திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

விருதுநகர் மாவட்டம், சிவகாசி நகரில் உள்ள அரசு மருத்துவமனையில் அதிகரித்து வருகின்ற புற நோயாளிகளின் நலனை முன்னிட்டு மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையை உயர்த்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

121—

கட்டடம்

வினா எண் 879—திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசி அரசு மருத்துவமனையில் குளிர் சாதன வசதி கொண்ட தீக்காயப் பிரிவுக் கட்டடம் விரைவில் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

2005-06 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் 12 படுக்கைகள் கொண்ட தீக்காய சிகிச்சைப்பிரிவுக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

122—

வெள்ளத் தடுப்புச் சுவர்

வினா எண் 1009—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) செங்கல்பட்டு தொகுதி, குன்னவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை சுகாதார மாவட்டத்தில், காட்டாங்குளத்தூர் ஒன்றியத்தில், குன்னவாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. குன்னவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சற்று தொலைவில் உள்ள மலையில் மழைக்காலங்களில் நீர் மேலிருந்து கீழ் நோக்கி வரும்போது ஓடுவதற்கு ஏதுவாக வாய்க்கால் வெட்டப்பட்டுள்ளது. மழை நீரினால் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்பதால் வெள்ளத் தடுப்புச்சுவர் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை. மேலும், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அருகில் ஆறு எதுவும் இல்லை. எனினும், அரசாணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி2) துறை, நாள் 17-05-2007 இல் வெளியிடப்பட்ட ஆணையின்படி, நடப்பு நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி பெற்று சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்குமாறு சைதாப்பேட்டை துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

123—

மருத்துவக் கல்லூரியில் கூடுதல் இடங்கள்

வினா எண் 1011—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் கூடுதலாக 50 மாணவர்களை மருத்துவப் படிப்பிற்கு சேர்க்க அரசு அறிவித்த திட்டத்தை விரைவில் அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் தற்போதிருக்கும் மருத்துவ மாணவர்களின் எண்ணிக்கையை 50-ல் இருந்து 150 ஆக உயர்த்த ஏற்கெனவே மத்திய அரசுக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு அது இந்திய மருத்துவக் கழகத்தால் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வில் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகளைக் களைய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

124—

பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 1012—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் காலியாக உள்ள செவிலியர் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் காலியாக இருந்த அனைத்து செவிலியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு விட்டன.

125—

தரம் உயர்த்துதல்

வினா எண் 1015—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டத் தலைமை மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் அரசு மருத்துவமனை ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 6 படுக்கைகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டது. தற்போது, இம்மருத்துவமனையில் சிகிச்சை பெறும் உள்நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், முக்கிய சிறப்பு பிரிவுகள் எதுவும் இல்லாததாலும், இம்மருத்துவமனையை 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்போது நிருவாக ரீதியாக சாத்தியக் கூறுகள் இல்லை.

126—

தரம் உயர்த்துதல்

வினா எண் 1034—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பார்ா—

(அ) திருவண்ணாமலை தொகுதி, வேட்டவலம் அரசு ஆரம்ப சுகாதார நிலயத்தை 35 படுக்கை வசதியுடைய மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை தொகுதியிலுள்ள வேட்டவலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 15 கி.மீ. தொலைவில் சகல வசதிகள் கொண்ட திருவண்ணாமலை மாவட்ட மருத்துவமனை செயல்படுவதால், இவ்வாரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்போது நிருவாக ரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை.

[2011 ஜனவரி 13

127—

தரம் உயர்த்துதல்

வினா எண் 1036—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை தொகுதி கீழ்பெண்ணாத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில், கீழ்பெண்ணாத்தூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இதனை தேசிய ஊரக நல்வாழ்வு வளர்ச்சி திட்ட நிதி உதவியின்கீழ் தரம் உயர்த்த அரசு ஆணை எண் 142, மக்கள் நல்வாழ்வுத் துறை, நாள் 30-04-2007-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

128—

டயாலிசிஸ் வசதி

வினா எண் 1039—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவண்ணாமலை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சிறுநீரக மருத்துவப் பிரிவை ஏற்படுத்தி அங்கு டயாலிசிஸ் கருவியை நிறுவிட அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சிறுநீரக மருத்துவப்பிரிவு போன்ற உயர் சிறப்பு மருத்துவப் பிரிவுகள் (Super Speciality Department) அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மட்டுமே அமைக்கப்படுவதால், திருவண்ணாமலை அரசு தலைமை மருத்துவமனையில் சிறுநீரக மருத்துவப் பிரிவை நிறுவும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

129—

மருத்துவர் வசதி

வினா எண் 1610—செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனை 377 படுக்கை வசதியுடன் செயல்படுகிறது. இம்மருத்துவமனையில் ஒரு மருத்துவமனை கண்காணிப்பாளர் ஒரு உள்ளிருப்பு மருத்துவ அலுவலர், பத்து முதுநிலை குடிமை மருத்துவர்கள் (சிறப்பு மருத்துவர்கள்) மற்றும் 27 உதவி மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். திண்டுக்கல் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் படுக்கைகளின் அளவுகோல் அடிப்படையில் (Norms and Bed Strength) போதிய மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

130—

தலைமை மருத்துவமனை

வினா எண் 1613—திருமதி ரா. லீமா றோஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குமரி மாவட்டம், தக்கலை அரசு மருத்துவமனை, மாவட்ட தலைமை மருத்துவமனையாக மாற்றப்பட்டுள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஆம். கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையிலுள்ள பத்மநாபபுரம் அரசு மருத்துவமனை, அம்மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக அரசாணை (நிலை) எண் 202, மக்கள் நல்வாழ்வு எப் (I) துறை, நாள் 16-6-2004-ன்படி தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

131—

தரம் உயர்த்துதல்

வினா எண் 1613—திருமதி ரா. லீமா ரோஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குலசேகரம் அரசு மருத்துவமனை, தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

குலசேகரம் அரசு மருத்துவமனை ஒரு வட்டம் சாரா மருத்துவமனையாகும். தாலுகா மருத்துவமனைக்குரிய அனைத்து வசதிகளும் இருந்தாலும் இம்மருத்துவமனைக்கு அருகில் குழித்துறை, பூதப்பாண்டி அரசு மருத்துவமனைகளும்,

2011 ஜனவரி 13]

பத்மநாபபுரம் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையும் சகல வசதிகளுடன் செயல்பட்டு வருவதால் இம்மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

132—

தரம் உயர்த்துதல்

வினா எண் 1961—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்திற்குட்பட்ட திசையன்விளை, பணகுடி, வடக்கன்குளம், கூடங்குளம் ஊர்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசின் கொள்கைப்படி படிப்படியாக ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் தகுதி வாய்ந்த ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திசையன்விளை முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் 30-04-2007-ம் நாளிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் அரசு ஆணை (நிலை) எண் 142-ன்படி 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கூடங்குளம் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்த இயலாது. வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணகுடி, வடக்கன்குளம் ஆகிய கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களும் சங்கராபுரம் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு

[2011 ஜனவரி 13

வருகின்றன. இனி வருங்காலங்களில் வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தகுதி வாய்ந்த ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

133—

பணி நியமனம்

வினா எண் 1968—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதிக்குட்பட்ட சென்னிமலை வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் **X-RAY TECHNICIAN** பணி நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையத்தில் **X-RAY TECHNICIAN** பணி இடம் உருவாக்கப்படுவதில்லை. எனவே, சென்னிமலை ஆரம்ப சுகாதார நிலையத்தில் இப்பணியிடம் உருவாக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

134—

பழுது நீக்குதல்

வினா எண் 1969—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதிக்குட்பட்ட சென்னிமலை வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் **"Ultra Sound Machine"** பழுது நீக்கித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதிக்குட்பட்ட சென்னிமலை வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் "Ultra Sound Machine" *பழுது நீக்கித்தர நடப்பு நிதியாண்டில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், சென்னிமலை ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள* "Ultra Sound Machine" *பழுதடைந்து இருப்பதை கருத்தில் கொண்டு "மொடக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள" இரண்டு ஸ்கேன் இயந்திரத்தில், ஒன்றினை சென்னிமலை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வழங்கப்பட்டு, அது தற்போது நன்முறையில் செயல்பட்டு வருகிறது.*

135—

தரம் உயர்த்துதல்

வினா எண் **1972**—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதிக்குட்பட்ட சென்னிமலை வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பெருந்துறை தாலுகா, சென்னிமலை வட்டாரத்தில் சென்னிமலை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. பெருந்துறை தாலுகா அரசு மருத்துவமனை, காங்கேயம் தாலுகா மருத்துவமனை, பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் சென்னிமலை பேரூராட்சியில் நான்கு துணை சுகாதார நிலையங்கள் ஆகியவை குறுகிய தூரங்களுக்கு இடையில் போதிய மருத்துவ வசதிகளுடன் செயல்பட்டு வருவதால் சென்னிமலை

ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த அவசியம் தற்போது எழவில்லை.

136—

சுகாதார நிலையம்

வினா எண் 2016—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருநகரியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், திருநகரி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

137—

மருத்துவ வசதி

வினா எண் 2018—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே கதிர் பகுதி கட்டடம் கட்டி கருவிகள் வாங்கிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி அரசு மருத்துவமனையில் 300 எம்.ஏ ஊடுகதிர் பிரிவு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு மருத்துவத் துறை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஊடுகதிர் மற்றும் ஸ்கேன் கருவிகள் உள்ளன.

2011 ஜனவரி 13]

138—

கட்டடம்

வினா எண் 2023—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சி, பழையாறு மீனவர் கிராமத்திற்கு துணை சுகாதார நிலையக் கட்டடம் ஒன்று கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது. இது நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை சார்ந்தது. பழையாறு மீனவர் கிராமம், புதுப்பட்டினம் ஊராட்சியின் ஒரு சிற்றூர் ஆகும். இத் துணை சுகாதார நிலையம் வாடகை கட்டடத்தில் செயல்படுகிறது. மேற்படி துணை சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்டத் தேவையான நிலம் கிடைத்தவுடன் கட்டடம் கட்டத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

139—

சுகாதார நிலையம்

வினா எண் 2032—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் சிறப்பு ஊராட்சி, பொங்காளியூரில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், பொங்காளியூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

140—

மருத்துவமனை வசதி

வினா எண் 2172—திரு. அ. ராஜன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் அரசு மருத்துவமனையை மீண்டும் திறந்து செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாகர்கோவில் அரசு மருத்துவமனையை மீண்டும் திறந்து செயல்பட வைப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

141—

செவிலியர்கள் நியமனம்

வினா எண் 2197—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் மேலும் செவிலியர்கள் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 48 செவிலியர் பணியிடங்களில் 46 செவிலியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். காலிப்பணியிடங்கள் அடுத்த கலந்தாய்வின்மூலம் நிரப்பப்படும். 8 படுக்கைகளுக்கு 1 செவிலியர் என்ற விகிதாச்சாரத்தில் மூன்று செவிலியர் பணியிடங்கள் குறைவாக உள்ளது. தேவைப்படின் இக்கருத்துரு பரிசீலிக்கப்படும்.

142—

தொலைபேசி வசதி

வினா எண் 2198—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் உள் இணைப்பு தொலைபேசி வசதி செய்து தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 2 இணைப்புகளுடன் கூடிய உள் இணைப்பு தொலைபேசி செயல்பட்டு வருகிறது. மேலும் உள்ளிருப்பு தொலைபேசி வசதி தேவைப்படின் இணை இயக்குநர் நலப்பணிகள், காஞ்சிபுரம் அவர்களிடமிருந்து கருத்துரு பெற்று உள் இணைப்பு தொலைபேசி வசதி நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2011 ஜனவரி 13

143—

தரம் உயர்த்துதல்

வினா எண் 2208—திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, நாசரேத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு அரசு மருத்துவமனையாக மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டாரம், நாசரேத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இதன் அருகில் திருவைகுண்டம் மற்றும் சாத்தான்குளம் தாலூகா அரசு மருத்துவமனைகள் சகல வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இவ்வாரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்போது நிருவாகரீதியாக சாத்தியக் கூறுகள் இல்லை.

144—

முழு நேர மருத்துவர்கள்

வினா எண் 2209—திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு அரசு மருத்துவமனையாக ஆகியுள்ளதால், முழு நேர மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களை உடனே நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஆரம்ப சுகாதார நிலையம் அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படவில்லை. ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. அதற்கு ஒப்பளிக்கப்பட்ட நான்கு மருத்துவர்கள் பணியிடங்களில் இரண்டு ஆண் மருத்துவர்களும் இரண்டு பெண் மருத்துவர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இதரப் பணியாளர்கள் மாற்றுப் பணியில் பணிபுரிந்து வருகின்றனர்.

145—

மருத்துவப் பணி

வினா எண் 2210—திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, பெரியதாழை மீனவர் கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு அருகில் உள்ள படுக்கபத்து ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவரை வாரத்தில் மூன்று நாட்கள் மாலை நேரத்தில் பெரியதாழை சென்று மருத்துவப் பணி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, பெரியதாழை மீனவர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிடம் ஒப்பளிப்பு இல்லை. அங்கு கிராம சுகாதார செவிலியரால் மாலை 3 மணி முதல் 5 மணி வரை பெரிய தாழையிலேயே சிறு நோய் கிளினிக் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் பெரியதாழை கிராமத்தில் ஒவ்வொரு வாரமும் நோய்த் தடுப்புப் பணிக்காக மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது.

[2011 ஜனவரி 13

146—

மருத்துவர் நியமனம்

வினா எண் 2211—திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் புறநோயாளிகளும் உள் நோயாளிகளும் வந்து செல்வதால் மேலும் போதுமான மருத்துவர்களை உடனே நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் மூன்று மருத்துவர்கள் முறையே இரண்டு மகப்பேறு மருத்துவர் மற்றும் ஒரு பல் மருத்துவர் பணிபுரிந்து வருகின்றனர். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு 254 வெளிநோயாளிகளும் 22 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இங்கு சிகிச்சை பெறும் நோயாளிகள் எண்ணிக்கைக்கு இங்கு பணிபுரியும் மருத்துவர் எண்ணிக்கை போதுமானதாகவே உள்ளது.

147—

தரம் உயர்த்துதல்

வினா எண் 2275—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை கொண்ட அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை வட்டம், மதுக்கூர் வட்டாரத்தில் பட்டுக்கோட்டை மற்றும் மன்னார்குடி தாலுகா மருத்துவமனைகள் சகல வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், அதே தொகுதியிலுள்ள மதுக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கான முகாந்திரம் எழவில்லை.

148—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 2278—திரு. எம். பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, வள்ளுவக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மருத்துவர் உட்பட போதிய மருத்துவர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, வள்ளுவக்குடி கிராமத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அங்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர்கள் பணியிடங்கள் இரண்டாகும். அங்கு முழு அளவில் மருத்துவர்கள் பணியில் உள்ளனர்.

149—

அரசு மருத்துவமனை

வினா எண் 2394—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

முகையூர் தொகுதி, கண்டாச்சிபுரம் கிராமத்தில் 25 படுக்கை வசதி கொண்ட அரசு மருத்துவமனை ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், முகையூர் வட்டத்திற்கு அருகில், திருக்கோவிலூர் அரசு மருத்துவமனை சகல வசதிகளுடன் செயல்படுவதால், கண்டாச்சிபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்போது நிருவாக ரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை.

150—

சுகாதார நிலையம்

வினா எண் 2397—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, மாரங்கியூர், பையூர், சேத்தூர், கொங்கராயனூர் ஆகிய கிராம மக்களின் நலன் கருதி 24 மணி நேரமும் இயங்கக் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதியைச் சார்ந்த மாரங்கியூர், பையூர், சேத்தூர், கொங்கராயனூர் ஆகிய கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

2011 ஜனவரி 13]

151—

மருத்துவமனை வசதி

வினா எண் 2413—திரு. வீ.ஏ.டி. கலியவரதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, மேல்காரணை கிராமத்தில் அரசு மருத்துவமனை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், முகையூர் வட்டாரத்தில் திருக்கோயிலூர் வட்ட மருத்துவமனை சகல மருத்துவ வசதிகளுடன் இயங்கி வருவதால், மேல்காரணை கிராமத்தில் அரசு மருத்துவமனை துவக்க தற்போது நிருவாக ரீதியாக முகாந்திரம் ஏதும் இல்லை.

152—

மேம்படுத்துதல்

வினா எண் 2492—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதியில் உள்ள வள்ளிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தினை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதியில் திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் வள்ளிபுரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் நெரும்பூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், சட்ராஸ் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியனவும் செயல்படுகின்றன. இனி வருங்காலங்களில் திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தகுதி வாய்ந்த ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

153—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 2499—திரு. பா. வேல்துரை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதியிலுள்ள கிராமங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் சரிவர செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேரன்மகாதேவி தொகுதியில் உள்ள ஏழு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு அவைகள் நன்கு செயல்படுகின்றன.

154—

கட்டட வசதி

வினா எண் 2503—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, அரியலூர் ஒன்றியம், சிலுப்பனூர் கிராமத்திலுள்ள கிளை மருந்தகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் தொகுதி, அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிலுப்பனூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. சிலுப்பனூர் துணை சுகாதார நிலையத்திற்கு சொந்த கட்டடம் கட்ட நபார்டு வங்கியிடம் கடனுதவி கோரப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் சிலுப்பனூர் கிராமத்தில் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

155—

கிளை மருந்தகம்

வினா எண் 2506—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் ஒன்றியம், கல்லக்குடி கிராமத்திற்கு கிளை மருந்தகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் நிதி உதவி மற்றும் வழிகாட்டுதலின்படி ஊரக பகுதியில் 5,000 மக்கள் தொகைக்கும் மலைப் பகுதிகளில் 3000 மக்கள் தொகைக்கும் ஒரு துணை சுகாதார மையம் அமைக்கப்படுகிறது. அரியலூர் ஒன்றியம், கல்லக்குடி கிராமத்தில் 1000-க்கும் குறைவான மக்கள் தொகை உள்ளதால், இக்கிராமத்தில் துணை சுகாதார மையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

156—

சுகாதார நிலையம்

வினா எண் 2514—திரு. கே.வீ. இராமநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்குப்பட்ட ஒட்டப்பாளையம் ஊராட்சியில் செம்புளிச்சாம்பாளையத்தில் மேட்டுத் தெருவில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம் பவானி தொகுதி, அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம் செம்புளிச்சாம்பாளையம் மேட்டுத் தெருவில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

157—

மருத்துவ சிகிச்சை

வினா எண் 2520—திரு. கே.வீ. இராமநாதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பவானி அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு போதிய மருத்துவ சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், பவானி அரசு மருத்துவமனை 78 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக பல்வேறு சிறப்பு பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனைக்கு வரும் பல்வேறு நோயாளிகள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு போதுமான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

2011 ஜனவரி 13]

158—

விஜிலென்ஸ் குழு

வினா எண் 2527—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் டாக்டர்கள், ஊழியர்களை கண்காணிக்க 'விஜிலென்ஸ் குழு' அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளில் அளிக்கப்படும் மருத்துவ சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும் மருத்துவ நிருவாக முறையைக் கண்காணிப்பதற்கும் அனைத்து அரசு மருத்துவமனைகளில் மக்கள் குறை கேட்கும் திட்டம் (Grievances Redressal System) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கென பிரத்யேகமான கட்டுப்பாட்டறை ஒன்று நான்கு இலக்க இலவச தொலைபேசி எண் (1056) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (Toll Free Number) கட்டுப்பாட்டறை 24 மணி நேரமும் 7 நாட்களும் செயல்படும். மேற்படி தொலைபேசியினை தொடர்பு கொள்பவரின் குறைகள் தானாக பதிவு செய்யப்படும். அதற்கென பிரத்யேக கருவிகள் நிறுவப்படும். குறைகள் உடனுக்குடன் கணினியில் பதிவு செய்யப்பட்டு உரிய அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு செல்லபடும். குறிப்பிட்ட கால இடைவெளியில் உயர் அதிகாரிகளால் திடீரென ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மேற்படித் திட்டம் சிறப்பாக செயல்படுகிறதா என்பதையும் குறிப்பிட்ட நபர்களின் மீது தெரிவிக்கப்படும் புகார்களைத் தீர விசாரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2011 ஜனவரி 13

159—

பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 2536—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள மருத்துவர் மற்றும் செவிலியர் பணியிடங்கள் உடனடியாக நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட உதவி மருத்துவர் பணியிடம் ஒன்று. தற்போது மகப்பேறு மருத்துவர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார். காலிபணியிடம் ஏதுமில்லை. ஒப்பளிக்கப்பட்ட செவிலியர் பணியிடம் இரண்டும் நிரப்பப்பட்டுள்ளது. காலிபணியிடமில்லை.

160—

சுகாதார நிலையம்

வினா எண் 2542—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கொங்கரைப்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கொங்கரைப்பட்டி கிராமத்தில் துணை சுகாதார

2011 ஜனவரி 13]

நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, இந்த கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

161—

சுகாதார நிலையம்

வினா எண் 2689—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, குமரலிங்கம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, மடக்குளம் ஊராட்சி ஒன்றியம், குமரலிங்கம் கிராமத்தில் ஏற்கனவே 30 படுக்கைகள் வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதால், இக்கிராமத்தில் மீண்டும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றுவிக்க இயலாது.

162—

சுகாதார நிலையம்

வினா எண் 2690—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, ஜல்லிபட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஜல்லிபட்டி கிராமத்தில் ஏற்கெனவே 14 படுக்கைகள்

[2011 ஜனவரி 13

கொண்ட அரசு மருத்துவமனை செயல்படுவதால், இக்கிராமத்தில் மீண்டும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றுவிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

163—

சுகாதார நிலையம்

வினா எண் 2691—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, போடிபட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், போடிபட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

164—

சுகாதார நிலையம்

வினா எண் 2702—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, ரெட்டியார்பாளையத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தில், ரெட்டியார்பாளையம் என்ற கிராமம் இல்லை. ஆனால், இடையார்பாளையம் என்ற கிராமம் உள்ளது.

2011 ஜனவரி 13]

இக்கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

165—

சுகாதார நிலையம்

வினா எண் 2703—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, குளத்துப் பாளையத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், குளத்துப்பாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

166—

சுகாதார நிலையம்

வினா எண் 2740—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, போத்தனூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்து தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், போத்தனூர் கிராமத்தில், ஏற்கெனவே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதால் இக்கிராமத்தில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மேலும் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றுவிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

167—

மருத்துவர் நியமனம்

வினா எண் 2742—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் துணை சுகாதார நிலையத்திற்கு கூடுதலாக மருத்துவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பேரூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிடம் அனுமதிக்கப்படுவதில்லை.

168—

பணி நியமனம்

வினா எண் 2743—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, சுண்டக்காமுத்தூர் துணை சுகாதார நிலையத்திற்கு கூடுதலாக மருத்துவர் மற்றும் செவிலியரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பேரூர் தொகுதி, சுண்டக்காமுத்தூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் அதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட 3 மருத்துவர்களுடனும் 3 செவிலியர்களுடனும் செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப

2011 ஜனவரி 13]

சுகாதார நிலையத்திற்கு கூடுதாலக மருத்துவர் மற்றும் செவிலியர் நியமனம் செய்யும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

169—

கட்டட வசதி

வினா எண் 2744—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, சுண்டக்காமுத்தூர் துணை சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட சுண்டக்காமுத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் செயல்படும் சுண்டக்காமுத்தூர் துணை சுகாதார நிலையத்திற்கு நபார்டு வங்கி கடனுதவியுடன் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நபார்டு வங்கிக்கு பரிந்துரைக்கப்பட்டு, வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் நிதி பெற்று கட்டடம் கட்ட தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

170—

கூடுதல் மருத்துவர்

வினா எண் 2745—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, அரிசிபாளையம் துணை சுகாதார நிலையத்திற்கு கூடுதலாக் மருத்துவர் மற்றும் செவிலியரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பேரூர் தொகுதி, அரிசிபாளையம் துணை சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட கிராம சுகாதார செவிலியர் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது. விதிமுறைகளின்படி துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிடம் ஒப்பளிக்கப்படுவது இல்லை. மேலும் பேறுகால மற்றும் குழந்தை நலத்திட்டத்தின் கீழ் நடமாடும் மருத்துவக் குழுவின்மூலம் மாதம் இருமுறை இந்த துணை சுகாதார பகுதிகளுக்கு மருத்துவ சேவை அளிக்கப்படுகிறது.

171—

கட்டட வசதி

வினா எண் 2746—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, அரிசிபாளையம் துணை சுகாதார நிலையத்திற்கு சொந்த கட்டடம் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் துணைச் சுகாதார நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட நபார்டு வங்கியிடம் நிதி உதவி கோரப்பட்டுள்ளது. இக்கருத்துருவில் பேரூர் தொகுதி, அரிசிபாளையம் துணை சுகாதார நிலையமும் இடம் பெற்றுள்ளது. நபார்டு வங்கியிடமிருந்து நிதியுதவி பெறப்பட்ட உடனேயே பேரூர் தொகுதி, அரிசிப்பாளையம் துணை சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

172—

சுகாதார நிலையம்

வினா எண் 2747—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, குறிச்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், குறிச்சி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

173—

சுகாதார நிலையம்

வினா எண் 2748—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, சுந்தராபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அதிக படுக்கையுடன் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியம், சுந்தராபுரம் கிராமத்தில் அதிக படுக்கையுடன் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

174—

சுகாதார நிலையம்

வினா எண் 2749—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, கோணவாய்க்கான்பாளையத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், கோணவாய்க்கான்பாளையம் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

175—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 2751—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, பி.கே. புதூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், பி.கே. புதூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

176—

தரம் உயர்த்துதல்

வினா எண் 2770—திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தில், திருப்போரூர் ஆரம்ப சுகாதார நிலையம், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் மூன்று செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டு, 24 மணி நேர பிரசவ சேவை வழங்கப்பட்டு வருகிறது. இதனை 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த தற்போது திட்டம் ஏதும் இல்லை.

177—

விழிப்புணர்வு

வினா எண் 2872—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புகையிலை பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

புகையிலை பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

1. விளம்பரம் செய்தல்

2. மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்

3. நலக்கல்வி அளித்தல் மற்றும்

4. சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல்/அபராதத் தொகை விதித்தல்.

பள்ளி நலத்திட்டத்தின்கீழ் பள்ளி நலக்குழுவினர்மூலம் ஒவ்வொரு வியாழக்கிழமையும், பள்ளி மாணவர்களுக்கு புகையிலையினால் ஏற்படும் தீங்குகள் பற்றி நலக்கல்வி அளிக்கப்படுகிறது. நலக்கல்வி அளித்தும், சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்தும், புகையிலை பழக்கத்தை ஒழிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தற்போது, இந்திய அரசும் பொது இடங்களில் புகைத்தல் மற்றும் புகையிலைப் பொருட்களை பயன்படுத்துதல் ஆகியவற்றை தடுக்க 1-5-2004 முதல் சட்டம் கொண்டு வந்துள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

178—

சுகாதார நிலையம்

வினா எண் 2896—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், சோமந்துறை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்பது ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. எனவே இந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சோமந்துறை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

179—

சுகாதார நிலையம்

வினா எண் 2897—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், தென்சித்தூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார துணை நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், தென்சித்தூர் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே இதே கிராமத்தில் மேலும் ஒரு துணை சுகாதார நிலையம் ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

180—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 2909—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் அனைத்து நோய்களுக்கும் மருத்துவம் செய்யத்தக்க வகையில் போதிய மருத்துவர்களை நியமிக்கவும், உபகரணங்கள் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் அனைத்து நோய்களுக்கும் மருத்துவம் செய்யத்தக்க வகையில் போதிய மருத்துவர்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

181—

சுகாதார நிலையம்

வினா எண் 2956—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, மலையாண்டிபட்டினம் கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மலையாண்டிப்பட்டினம்

2011 ஜனவரி 13]

கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

182—

செவிலியர்கள் நியமித்தல்

வினா எண் 2969—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கூடுதலாக ஆண் செவிலியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கூடுதலாக ஆண் செவிலியர்களை நியமிக்கக் கோரும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

183—

கூடுதல் பணியாளர்கள்

வினா எண் 2970—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை சுத்தமாகவும் சுகாதார முறையில் தூய்மையாகவும் வைத்துக் கொள்ள கூடுதலாக துப்புரவு பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை சுத்தமாகவும் சுகாதார முறையில் தூய்மையாகவும் வைத்துக் கொள்ள கடந்த ஆறுமாதங்களுக்குள் 64 துப்பரவுப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் காலியாக உள்ள துப்பரவுப் பணியாளர் பணியிடங்களை படிப்படியாக நிரப்பவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

184—

சிறப்பு மருத்துவர்கள் பணியமர்த்துதல்

வினா எண் 2978—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனைத்து பிரிவுகளிலும் சிறப்பு மருத்துவ நிபுணர்களை பணியமர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறப்பு பிரிவுகளில் சிறப்பு மருத்துவ நிபுணர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

185—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 3456—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) வால்பாறை தொகுதியில், அர்த்தநாரிபாளையம், கரியஞ்செட்டிபாளையம், ஜல்லிபட்டி, தென்சங்கம்பாளையம், சோமந்துறை, ரமணமுதலிபுதூர் மற்றும் காளியாபுரம் ஆகிய ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் அர்த்தநாரிபாளையம், கரியஞ்செட்டிபாளையம், ஜல்லிபட்டி, தென்சங்கம்பாளையம், சோமந்துறை, ரமணமுதலிபுதூர் மற்றும் காளியாபுரம் ஆகிய ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

186—

தரம் உயர்த்துதல்

வினா எண் 3465—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலுகாவில் ஆனைமலை வட்டாரத்தில் பொள்ளாச்சி வட்ட மருத்துவமனையும், வேட்டைக்காரன் புதூர் வட்டம் சாரா

[2011 ஜனவரி 13

மருத்துவமனையும் சகல வசதிகளுடன் செயல்படுவதால் அதே தொகுதியிலுள்ள பெத்தநாயக்கனூர் ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றுவதற்கு நிருவாகரீதியாக தற்போது சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

187—

சிறப்பு மருத்துவர்கள்

வினா எண் 3549—திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி, கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள், சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மன்னார்குடி அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்களில் 13 சிறப்பு மருத்துவர்களும் மேலும் தமிழ்நாடு சுகாதார திட்டத்தின்மூலம் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்களில் இரண்டு சிறப்பு மருத்துவர்களும் ஆக மொத்தம் 15 சிறப்பு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்களில் மூன்று சிறப்பு மருத்துவர்களும் தமிழ்நாடு சுகாதார திட்டத்தின்மூலம் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடத்தில் ஒரு மருத்துவரும் பணிபுரிந்து வருகின்றனர்.

188—

தரம் உயர்த்துதல்

வினா எண் 4420—திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) விழுப்புரம் மாவட்டம், சின்ன சேலம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதியுடைய மருத்துவமனையாக தரம் உயர்த்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில் சின்னசேலம் வட்டாரத்தில், சின்னசேலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. அவ்வட்டாரத்தில் கச்சிராப்பாளையம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் நைனார்பாளையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையும் சகல வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், சின்னசேலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை நேரடியாக அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்போது நிருவாக ரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

189—

கூடுதல் பணியிடங்கள்

வினா எண் 4429—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதி, பொதட்டூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கூடுதலாக பணியிடங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பள்ளிப்பட்டு தொகுதி பொதட்டூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு வரும் வெளிநோயாளிகள், உள்நோயாளிகளின் அடிப்படையில் தற்போதுள்ள பணியாளர்களே போதுமான அளவில் உள்ளதால் கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்த தற்போது அவசியம் எழவில்லை.

190—

தரம் உயர்த்துதல்

வினா எண் 4430—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதி, அந்திமஞ்சேரிப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டத்தில், பள்ளிப்பட்டு தாலுகா மருத்துவமனை சகல வசதிகள் மற்றும் சிறப்புப் பிரிவுகளுடன் இயங்கி வருவதால், அந்திமஞ்சேரிப்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை நேரடியாக அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தத் தற்போது நிருவாகரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை.

191—

உதவி செய்தல்

வினா எண் 4468—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசு பல்வேறு நல/நிதி உதவிகள் செய்து வருகிறது.

192—

தரம் உயர்த்துதல்

வினா எண் 4489—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ஆழியார் நகர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ஆரம்ப சுகாதார உதவி நிலையங்களை தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வால்பாறை தொகுதி, ஆழியார் நகர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையங்களை தரம் உயர்த்தும் திட்டம் தற்போது இல்லை.

193—

கட்டட வசதி

வினா எண் 4504—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி மற்றும் பெத்தநாயக்கனூர் ஊராட்சிகளில் புதுப்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்களை திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஒன்றியம், வால்பாறை தொகுதி ஆழியார்நகர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட அங்கலக்குறிச்சி மற்றும் பெத்தநாயக்கனூர் துணை சுகாதார நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டு துணை சுகாதார நிலைய கட்டிடத்தில் 19-05-2006 முதல் இயங்கி வருகின்றன.

194—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 4535—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, டாப்சிலிப் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவு படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, டாப்சிலிப் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுப்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

195—

சித்த மருத்துவம்

வினா எண் 4537—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில், டாப்சிலிப் பகுதியில் சித்த மருத்துவப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை அரசினர் தாலுக்கா அல்லாத மருத்துவமனையில் (NON-TALUK HOSPITAL) ஒரு சித்த மருத்துவப் பிரிவு இயங்கி வருவதால் வால்பாறை தொகுதி டாப்சிலிப் பகுதியில் தனியாக சித்த மருத்துவப் பிரிவு ஏற்படுத்த சாத்தியக் கூறுகள் இல்லை.

196—

பணியமர்த்துதல்

வினா எண் 4767—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, வைத்திஸ்வரன்கோயில் அரசு மருத்துவமனையில் போதிய மருத்துவர்களை பணியமர்த்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாகை மாவட்டம், வைத்தீஸ்வரன்கோயில் அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ள உதவி மருத்துவர் பணியிட எண்ணிக்கை மூன்று. இந்த மூன்று உதவி மருத்துவர் பணியிடங்களும், இரு டி.சி.எச்., மற்றும் ஒரு டி.எல்.ஒ. பயின்ற மருத்துவர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளன. இம்மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் உள்நோயாளிகள் மற்றும் வெளிநோயாளிகளின் எண்ணிக்கையை கருத்திற்கொண்டு, இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட மூன்று மருத்துவர்கள் பணியிடங்கள் போதுமானதாகும்.

197—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 4768—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

சீர்காழி தொகுதி, நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு போதுமான மருத்துவர்கள் நியமிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் எண்ணிக்கை இரண்டு ஆகும். அங்கு முழு அளவில் மருத்துவ அலுவலர்கள் பணியில் உள்ளனர். இங்கு கூடுதலாக மருத்துவர்கள் நியமிக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

198—

அவசர சிகிச்சைப் பிரிவு

வினா எண் 4769—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி பகுதியில் விபத்துக்குள்ளானவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க சீர்காழி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சீர்காழி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு (24 Hours Casualty Services) 24 மணிநேரமும் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

199—

மருத்துவர் நியமனம்

வினா எண் 4770—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

சீர்காழி தொகுதி, சீர்காழி அரசு மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சீர்காழி அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட ஆறு பணியிடங்களில் ஆறு சிறப்பு மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். வேறு காலிப் பணியிடம் இல்லை. காலிப்பணியிடம் ஏற்படும் தருணத்தில் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை மருத்துவரை உரிய நேரத்தில் நிரப்பிட ஆவன செய்யப்படும்.

200—

சுகாதார நிலையம்

வினா எண் 4782—திரு. ந. கணபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, பரிக்கல்பட்டு கிராம ஆரம்ப சுகாதார நிலையம் தொடர்ந்து செயல்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், கிளியனூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்த பரிக்கல்பட்டு துணை சுகாதார நிலையத்திற்கு 2006-2007 நிதியாண்டில் ரூ.2,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பழுதுபார்ப்பு பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு அக்கட்டிடத்தில் கிராம சுகாதார செவிலியர் தங்கி பணிபுரிந்து வருகிறார். மேலும் அது தொடர்ந்து நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.

[2011 ஜனவரி 13

201—

தரம் உயர்த்துதல்

வினா எண் 4810—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் அரசு சமூக நல மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக மாற்றம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் வட்டாரத்திலுள்ள, திருப்புவனம் அரசு சமூக நல மருத்துவமனைக்கு அருகில், மதுரை இராஜாஜி மருத்துவமனையும், சிவகங்கை மாவட்டத் தலைமை மருத்துவமனையும் சிறப்பு மருத்துவ பிரிவுகளுடன் இயங்கி வருகின்றன. எனவே, மேற்கூறிய சமூக நல மருத்துவ நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்போது நிருவாக ரீதியாக சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

202—

பழுது பார்த்தல்

வினா எண் 4996—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை அரசு மருத்துவமனையில் ஸ்கேன் கருவியை பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை அரசு மருத்துவமனையில் பழுதடைந்த நிலையிலிருந்த ஸ்கேன் கருவி தமிழ்நாடு மருத்துவ

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

சேவைக் கழகத்தின்மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் பழுது நிவர்த்தி செய்யப்பட்டு தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

203—

மருத்துவ வசதி

வினா எண் 5019—திரு. க. இராஜேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி, ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களில் அறுவை சிகிச்சை, எக்ஸ்ரே பிரிவு, ஸ்கேன் பிரிவு ஆகியவைகள் இயக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் தொகுதியில் டி. பலூர் மற்றும் மீன்சுருட்டி ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மேம்படுத்தப்பட்டுள்ளன. டி. பலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நுண்கதிர் கருவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீன்சுருட்டி ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக 25-2-2004 முதல் செயல்பட்டு வருகின்றது. டி. பலூர் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக 2-3-2006 முதல் செயல்பட்டு வருகிறது. அறுவை சிகிச்சை வசதி, ஸ்கேன் வசதிகள் மற்றும் நவீன ஆய்வுக் கருவி செமி ஆட்டோ அனலைசர் ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

204—

விரிவுபடுத்துதல்

வினா எண் 5031—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், திருப்புவனத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. தற்போது, திருப்புவனம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

205—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 5032—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, காஞ்சிரங்குளம், மேலராங்கியம், சின்னக்கண்ணனூர் ஆகிய கிராமங்களில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, காஞ்சிரங்குளம், மேலராங்கியம், சின்னக்கண்ணனூர் ஆகிய கிராமங்களில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

2011 ஜனவரி 13]

206—

டயாலிசிஸ் இயந்திரம்

வினா எண் 5047—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கற்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டயாலிசிஸ் இயந்திரம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறுநீரகப் பிரிவு தனியாக இயங்கி வருகிறது. டயாலிசிஸ் கருவி ஒன்று இம் மருத்துவமனையில் உள்ளது. அதற்கு ஒரு உதவி மருத்துவர் நியமிக்கப்பட்டுள்ளார். டயாலிசிஸ் கருவி சம்பந்தமான பயிற்சி செவிலியர்கள் மற்றும் நுட்புனர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி முடிவுற்றதும், மிக விரைவில் இப்பிரிவு செயல்படத் துவங்கும்.

207—

உபகரணங்கள்

வினா எண் 5568—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூம்புகார் தொகுதி, பொறையார் அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்கத்திற்கு தேவைப்படும் கருவிகள் வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை —

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) பூம்புகார் தொகுதிக்குட்பட்ட பொறையார் அரசு மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கு தேவையான அறுவை அரங்கு உபகரணங்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. சிறிய மற்றும் பெரிய அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள தற்போது உள்ள உபகரணங்களே போதுமானதாகும். எனவே, மேற்கொண்டு அறுவை உபகரணங்கள் பொறையாறு அரசு மருத்துவமனைக்கு வழங்குவதற்கு அரசிடம் எந்த கருத்துருவும் தற்போது பரிசிலனையில் இல்லை. இருப்பினும், அம்மருத்துவமனைக்கு அறுவை அரங்கு உபகரணங்கள் மேலும் தேவைபடும் பட்சத்தில் தேவையை கருத்தில்கொண்டு உபகரணங்கள் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யும்.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

208—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் **5605—திரு.** அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டம், கணவாய்புதூர் ஊராட்சி, பூமரத்தூர் கிராம ஆரம்ப சுகாதார நிலையத்தை மீண்டும் திறக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கணவாய்புதூர் ஊராட்சி, பூமரத்தூர் கிராம துணை சுகாதார நிலையக் கட்டடம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. தற்போது

2011 ஜனவரி 13]

பூமரத்தூர் துணை சுகாதார நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது. பழுதடைந்த கட்டடத்திற்கு புதிய கட்டடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி பெற்று புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்படி சேலம் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

209—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 5609—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், கூனான்டியூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,11,007. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 3 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால் கூணான்டியூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை.

210—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 5624—திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

கிருஷ்ணராயபுரம் தொகுதி, தே. சீத்தப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் வழிகாட்டுதலின் படி, இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும். தே. சீத்தப்பட்டி கிராமத்திற்கும் குளியம்பாறை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், தே. சீத்தப்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

211—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 5631—திரு. வை. காவேரி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, இருப்பாளி கிராமம், இராமக்கவுண்டனூரில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும். ஆனால், இராமக்கவுண்டனூர் கிராமத்திற்கும் செட்டிமாங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 4 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், இராமக்கவுண்டனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

212—

தாய்-சேய் நல விடுதி

வினா எண் 5632—திரு. வை. காவேரி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கோரணம்பட்டி தேவனூரை மையமாக வைத்து தாய்-சேய் நல விடுதி ஒன்று அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கோரணம்பட்டி தேவனூரை மையமாக வைத்து தாய்-சேய் நல விடுதி அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

213—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 5633—திரு. வை. காவேரி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 2 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில், பூலாம்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

[2011 ஜனவரி 13

214—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 5849—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினம் ஒன்றியம், பண்ணந்தூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், பண்ணந்தூர் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால் இக்கிராமத்தில் மேலும் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

215—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 5853—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் சிறப்பு சிற்றூராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் பாரூர் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. அரசின் கொள்கைப்படி ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமே தரம் உயர்த்த இயலும். எனவே, தற்போது காவேரிப்பட்டினம் சமுதாய நலக் கூடத்தை (CHC) மேம்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

216—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 5878—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, வசந்தபுரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், வசந்தபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

217—

ஓமியோபதி மருத்தகங்கள் திறத்தல்

வினா எண் 5985—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

(அ) ஓமியோபதி மருத்துவமனைகள் தமிழ்நாட்டில் எத்தனை உள்ளன?

(ஆ) வட்ட மருத்துவமனைகளில் ஓமியோபதி மருந்தகங்கள் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஓமியோபதி பிரிவு உள்ளதா?

(ஈ) ஓமியோபதி மருத்துவப் பிரிவுக்கு என தனியாக ஒரு இணை இயக்குநர் நியமிக்கப்படுவாரா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த ஓமியோபதி மருத்துவமனை இயங்கி வருகின்றது. தமிழ்நாட்டில், சென்னை நீங்கலாக, 27 அரசு தலைமையிட மருத்துவமனைகளிலும், 7 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும், 3 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மற்றும் சென்னை மாவட்டத்தில் 5 ஓமியோபதி மருந்தகங்களும் இயங்கி வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் மேலும் தூத்துக்குடி மாவட்டம், நெய்க்காரப்பேட்டை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஓமியோபதி மருத்துவப் பிரிவுகள் அரசால் துவக்கப்பட்டன.

(ஆ) வட்ட மருத்துவமனைகளில் ஓமியோபதி மருந்தகங்கள் திறக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில், தூத்தூர், மேல்புரம் ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஓமியோபதி பிரிவுகள் உள்ளன.

(ஈ) ஓமியோபதி மருத்துவப் பிரிவிற்கு என தனியாக ஒரு இணை இயக்குநரை நியமிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]
218—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 6058—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், ஜாலிக்கொட்டாய் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்த பட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், ஜாலிக்கொட்டாய் கிராமத்திற்கும் கே.என். புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் ஜாலிக்கொட்டாய் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

219—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 6059—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, சின்ன திருப்பதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்த பட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், சின்ன திருப்பதி கிராமத்திற்கும், ஒண்டிவிரனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 4 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், சின்ன திருப்பதி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

220—

மருத்துவமனையை மேம்படுத்துதல்

வினா எண் 6060—திரு. *அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனையை இந்த நிதியாண்டிலேயே மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனையை மேம்படுத்த, மத்திய அரசு நிதியுதவியுடன் ரூ. 150 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக 15 படுக்கை வசதி கொண்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இரண்டு அவசரகால ஊர்தி வழங்கப்பட்டுவிட்டது. மேலும், ரூ. 12 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதியுடன் கூடிய பிணவறை அமைக்கவும் அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு சுகாதார சேவைத்திட்டத்தின்கீழ் வெளிநோயாளிப் பிரிவு(ம) கட்டட பராமரிப்பு பணிகளும் நடைபெற்று வருகின்றன.

2011 ஜனவரி 13]

221—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 6061—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், தும்பிப்பாடி ஊராட்சி, ரெட்டியூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்த பட்சம் 8 கிலோ மீட்டருக்கு மேல் இடைவெளி இருத்தல் வேண்டும். ஆனால், ரெட்டியூர் கிராமத்திற்கும் சுரக்கப்பிள்ளையூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 4 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், ரெட்டியூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை.

222—

பணி நியமனம்

வினா எண் 6484—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உடுமலைப்பேட்டை தொகுதி, ஜல்லிபட்டி அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள மகப்பேறு உதவியாளர் பணியிடம் நிரப்பப்பட அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, ஜல்லிபட்டி அரசு மருத்துவமனையில் காலியாக இருந்த மகப்பேறு உதவியாளர் பணியிடம் நிரப்பப்பட்டுவிட்டது.

223—

24 மணி நேர வசதி

வினா எண் 6491—திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிராமங்களில் உள்ள ஆரம்ப சுகாதார மையங்கள் 24 மணி நேரமும் இயங்கிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ் நாட்டில் உள்ள 1,417 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இதுவரை 780 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேர சேவையின்கீழ் செயல்பட்டு வருகிறது. 2007-2008 ஆம் நிதியாண்டில் மேலும் 220 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேர பிரசவ நிலையங்களாக மாற்றப்படும். 2008-2009 ஆம் ஆண்டு மீதமுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேர பிரசவ நிலையங்களாக மாற்றப்படும்.

224—

தரம் உயர்த்துதல்

வினா எண் 7258 மற்றும் 5983—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் அரசு மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்தில் உள்ள வாலாஜா அரசு மருத்துவமனை, அரசாணை (நிலை) எண் 225, மக்கள் நல்வாழ்வுத் (எப்1) துறை, நாள் 12-7-2004-ன்படி வேலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக ஏற்கெனவே தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, திருப்பத்தூர் அரசு மருத்துவமனையை வேலூர் மாவட்டத் தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை.

225—

மருத்துவமனை வசதி

வினா எண் 7263—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜோலார்பேட்டை நகராட்சியில் போதிய மருத்துவமனை வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜோலார்பேட்டைக்கு அருகில் திருப்பத்தூர் தாலுகா மருத்துவமனையும் வாணியம்பாடி தாலுகா மருத்துவமனையும்

[2011 ஜனவரி 13

சகல மருத்துவ வசதிகளுடன் செயல்பட்டு வருவதால் ஜோலார்பேட்டையில் புதிய மருத்துவமனை அமைப்பதற்கான முகாந்திரம் தற்போது எழவில்லை.

226—

பழுது பார்த்தல்

வினா எண் 7981—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், கண்டாச்சிபுரம் மருத்துவமனை கட்டடத்தை பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி சுகாதார பகுதி மாவட்டம் சார்ந்த முகையூர் தொகுதிக்குட்பட்ட கண்டாச்சிபுரம் ஆரம்ப சுகாதார நிலைய கட்டட பழுது பார்ப்பு பணிகளுக்காக 2006-2007 நிதியாண்டில் ரூ. 7,50,000/- நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, பழுதுபார்ப்பு பணிகளை விரைவில் செய்து முடிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

227—

பொது மருத்துவமனை

வினா எண் 7982—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், அரகண்டநல்லூரில் உள்ள தொழுநோய் மருத்துவமனையை அரசு பொது மருத்துவமனையாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், அரகண்டநல்லூரில் உள்ள தொழுநோய் மருத்துவமனைக்கு மிக அருகில் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனை சகல வசதிகளுடன் இயங்கி வருவதால் மேற்படி தொழுநோய் மருத்துவமனையை தரம் உயர்த்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

228—

பணி நியமனம்

வினா எண் 7984—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், மணலூர் பேட்டையில் அரசு மருத்துவமனை அமைத்து மருத்துவர் பணியிடம் நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், மணலூர் பேட்டையில் தற்பொழுது அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. அதனை அரசு மருத்துவமனையாக மாற்றுவதற்கான முகாந்திரம் தற்போது ஏதும் இல்லை. மருத்துவமனை தரம் உயர்த்தப்படாத பட்சத்தில் மருத்துவர் பணியிடம் நிரப்புவது குறித்த நிலை எழவில்லை.

229—

தரம் உயர்த்துதல்

வினா எண் 8254—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) கலசப்பாக்கம் தொகுதி, மங்கலம் நார்தாம்பூண்டி, கலசபபாக்கம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் வட்டாரம் கலசப்பாக்கம் மற்றும் போளூர் தொகுதிகளில் தாலுகா அரசு மருத்துவமனைகளும், திருவண்ணாமலை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையும், சகல வசதிகளுடன் செயல்படுவதால், அத்தொகுதியிலுள்ள மங்கலம், நார்த்தாம்பூண்டி மற்றும் கலசப்பாக்கம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்போது நிருவாக ரீதியாக தகுந்த முகாந்திரம் எழவில்லை.

230—

சுகாதார நிலையம்

வினா எண் 8283—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, ரங்கூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில், சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 3 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. மேலும், இரண்டு

2011 ஜனவரி 13]

303—

தரம் உயர்த்துதல்

வினா எண் 14739—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, கொழப்பலூர் ஆரம்ப சுகாதார மையத்தை மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், பெரணமல்லூர் வட்டாரத்தில் வந்தவாசி வட்ட அரசு மருத்துவமனை 54 படுக்கை வசதிகளுடனும் பல்வேறு சிறப்புப் பிரிவுகளுடனும் இயங்கி வருவதால் பெரணமல்லூர் தொகுதி கொழப்பலூர் ஆரம்ப சுகாதார மையத்தை மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

304—

சுகாதார நிலையம்

வினா எண் 14740—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, அன்மருதை மேலத்தாங்கல் மற்றும் மன்சுராபாத் ஆகிய கிராமங்களில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, அன்மருதை மேலத்தாங்கல் மற்றும் மன்சுராபாத் ஆகிய கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

305—

மருத்துவக் குழு

வினா எண் 14760—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில், பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிக்கு நடமாடும் மருத்துவக் குழுவினை அனுப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் சுகாதார மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை வட்டாரத்தில் உள்ள எரிசினாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அரசு ஆணை (நிலை) எண் 83, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, EAPII/2 நாள் 12-03-2007ன்படி 2006-07ஆம் ஆண்டில் ஆம்புலன்ஸ் வழங்கப்பட்டு மருத்துவ ஊர்தியுடன், மருத்துவக் குழு அமைக்கப்பட்டு நடமாடும் மருத்துவ மையம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

306—

சுகாதார நிலையம்

வினா எண் 14964—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரைகுளம் ஊராட்சி, ஆவரைகுளம் தாய்சேய் நல விடுதியை ஆரம்பச் சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருந்தல் வேண்டும். ஆனால், திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரைகுளம் ஊராட்சி, ஆவரைக்குளம் கிராமத்திற்கும் வடக்கன்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 8 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் ஆவரைக்குளம் தாய்சேய் நல விடுதியை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

2011 ஜனவரி 13]

307—

சுகாதார நிலையம்

வினா எண் 16542—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஒவ்வொரு ஊராட்சியிலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில், வால்பாறை, ஆனைமலை ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் 6 ஆரம்ப சுகாதார நிலையங்களும், வால்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்படுகின்றன. மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. இந்த ஒன்றியங்களில் உள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப, தற்போதுள்ள 9 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானது. எனவே, வால்பாறை தொகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை.

308—

சுகாதார நிலையம்

வினா எண் 16543—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கரியஞ்செட்டிபாளையம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், சுரியஞ்செட்டிபாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் துவங்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

309—

மருத்துவ ஊர்தி

வினா எண் 16556—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி - வால்பாறை மலை பகுதிக்கு நடமாடும் மருத்துவ ஊர்தி வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி-வால்பாறை அரசு மருத்துவமனையில் தற்பொழுது 3 வாகனங்கள் இயங்கி வருகின்றன. ஒரு வாகனம், குடும்ப நலப்பிரிவுக்காகவும், மற்றொன்று பாராளுமன்ற உறுப்பினர் கொடையாக அளித்த நோயாளர் அவசர ஊர்தியாகவும் பிறிதொரு வாகனம் அமரர் ஊர்தியாகவும் இயங்கி வருகிறது. மேலும், தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் கீழ் நடமாடும் மருத்துவ ஊர்தி வழங்கப்பட்டு மலைப் பிரதேசங்களுக்கு மருத்துவ வசதி வழங்கும் சேவை தனியார் அமைப்புகள் (AIM FOR SEVA) மூலம் சிறந்த முறையில் மலைவாழ் மக்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

2011 ஜனவரி 13]

310—

உயிர்காக்கும் மருந்து

வினா எண் 16578—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை கோட்டூர், வேட்டைக்காரன் புதூர் ஆகிய அரசு மருத்துவமனைகளுக்கு போதிய உயிர் காக்கும் மருந்துகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள, வால்பாறை, கோட்டூர் மற்றும் வேட்டைக்காரன்புதூர் ஆகிய அரசு மருத்துவமனைகளுக்கு போதுமான அளவிற்கு உயிர் காக்கும் மருந்துகள் உள்ளிட்ட மருத்துவப்பொருட்கள் தமிழ்நாடு மருத்துவப்பணிகள் கழகம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

311—

சுகாதார நிலையம்

வினா எண் 17209—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், திம்மலை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், திம்மலை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

312—

சுற்றுச்சுவர்

வினா எண் 17216—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் பாகல்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி பெற்று சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை எடுக்குமாறு சேலம் மாவட்ட துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

313—

படுக்கை வசதி

வினா எண் 17217—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறுக்கென பத்து படுக்கைகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில், பாகல்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது 2 படுக்கை வசதிகள் உள்ளன. இரண்டு மருத்துவ அலுவலர்கள் பணிபுரிகின்றனர். வெளிப்புற நோயாளிகள், உள்நோயாளிகளின் வசதிகேற்ப தற்போது போதிய வசதிகள் உள்ளதால் பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறுக்கென தனியாக 10 படுக்கைகள் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை.

314—

கட்டட வசதி

வினா எண் 17241—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள சித்த மருத்துவமனை கட்டடத்திற்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள சித்த மருத்துவப் பிரிவு ஏற்கெனவே சொந்த கட்டடத்தில் இயங்கி வருகின்றது. எனவே இப்பிரிவிற்கு கூடுதல் கட்டடம் கட்டித்தர தற்போது அவசியம் இல்லை. இருப்பினும், நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி பெற்று கூடுதல் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட சித்த மருத்துவப் அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். நிதி ஒதுக்கப்பட்டவுடன் மேற்படி சித்த மருத்துவப் பிரிவிற்கு கூடுதல் கட்டடம் கட்ட தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[2011 ஜனவரி 13

315—

சுகாதார நிலையம்

வினா எண் 17576—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, சின்னப்பிள்ளையூர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், சின்னபிள்ளையூர் கிராமத்திற்கும் வெள்ளாளபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 2 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், சின்னப்பிள்ளையூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

316—

சுகாதார நிலையம்

வினா எண் 17579—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, செலவடையில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, செலவடையில் ஒரு துணை சுகாதார மையம் இயங்கி வருகிறது. எனவே, அந்த இடத்தில் பிறிதொரு துணை சுகாதார மையம் அமைக்க வேண்டிய அவசியமில்லை.

317—

செப்பனிடுதல்

வினா எண் 17580—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, செம்மண்கூடல் ஊராட்சி, எல்லமூரிலுள்ள சுகாதார நிலையத்தைச் செப்பனிட்டுச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பாகல்பட்டி, கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட எல்லமூர் துணை சுகாதார நிலையக் கட்டடம் பழுதடைந்துள்ளதால் தற்போது வாடகையில்லா கட்டடத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த துணை சுகாதார நிலைய கட்டடத்தை பழுதுபார்க்க ரூ. 3,20,000/- கட்டடப் பராமரிப்பு குழு மதிப்பீடு செய்துள்ளது. வரும் நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து எல்லமூர் துணை சுகாதார நிலையக் கட்டடத்தை பழுதுபார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

318—

சுகாதார நிலையம்

வினா எண் 17589—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், சாத்தப்பாடி பகுதிக்கு ஆரம்ப சுகாதார நிலைய மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், சாத்தப்பாடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் ஏதுவும் இல்லை.

319—

மருத்துவ வசதி

வினா எண் 17590—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓலைப்பட்டி ஊராட்சி பகுதிக்கு மருத்துவ வசதி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதியிலுள்ள ஓலைப்பட்டி ஊராட்சிப் பகுதியைச்

2011 ஜனவரி 13]

சுற்றி சகல மருத்துவ வசதிகளுடன் தாரமங்கலம் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் கே.ஆர். தொப்பூர், சேடப்பட்டி ஆகிய இடங்களில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதால், ஓலைப்பட்டி கிராமத்தில் மேலும் புதிய மருத்துவமனை ஏற்படுத்த நிருவாக ரீதியாக முகாந்திரம் எழவில்லை.

320—

சுகாதார நிலையம்

வினா எண் 17624—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோனூர் கிராமம், பூரல்கோட்டை பகுதியில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோனூர் கிராமம், பூரல்கோட்டை பகுதியில் துணை சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

321—

கட்டட வசதி

வினா எண் 17625—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம் கோனூர் கிராமம், மோட்டூர் சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மோட்டூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் இல்லை. சின்னகோனூர் துணை சுகாதார நிலையத்தின்மூலம் மோட்டூர் கிராம மக்கள் பயன் பெறுகின்றனர். இந்த துணை சுகாதார நிலையம் சொந்த கட்டடத்தில் இயங்குகிறது. சின்னகோனூர் துணை சுகாதார நிலைய கட்டடம் கிராம சுகாதார செவிலியர் தங்கி பணிபுரியக்கூடிய வகையில் நல்ல நிலையில் உள்ளது.

322—

சிகிச்சை அரங்கம்

வினா எண் 18675—திரு. வை. காவேரி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி வட்ட மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்கம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி வட்ட மருத்துவமனையில் குளிர் சாதன வசதியுடன் கூடிய அறுவை அரங்கம் ஒன்று நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே, அறுவை அரங்கம் செயல்பட்டு வருவதால் இவ்வினா எழவில்லை.

323—

நல விடுதி

வினா எண் 18676—திரு. வை. காவேரி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

(அ) எடப்பாடி ஒன்றியம், இருப்பாளி ஊராட்சி, கலாப்பட்டியில் தாய்சேய் நல விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஒன்றியத்திலுள்ள இருப்பாளி ஊராட்சியில் உள்ள கலாப்பட்டியை உள்ளடக்கி இருப்பாளி துணை சுகாதார மையம் இயங்குகிறது. இச்சுகாதார மையத்தின் மூலமாக தாய் சேய் நலம், குடும்ப நலம், தடுப்பூசிப் பணிகள் மற்றும் இதர மருத்துவ சேவைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பாளி ஊராட்சியில் உள்ள கலாப்பட்டியில் துணை சுகாதார மையம் இயங்குவதால் புதியதாக தாய்சேய் நல விடுதி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

324—

நல விடுதி

வினா எண் 18677—திரு. வை. காவேரி : *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் தைலம்பட்டியில் தாய் சேய் நல விடுதி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சியை சார்ந்த ஏகாபுரத்தில் உள்ள தைலம்பட்டி கிராமம், ஏகாபுரம் துணை சுகாதார நிலையத்திற்கு உட்பட்டது. தைலம்பட்டி கிராமத்திலிருந்து 1 கி.மீ. தூரத்தில் ஏகாபுரம் துணை

[2011 ஜனவரி 13

சுகாதார நிலையம் உள்ளது. எனவே, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் உள்ள தைலம்பட்டி கிராமத்தில் தாய் சேய் நல விடுதி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

325—

சுகாதார நிலையம்

வினா எண் 18678—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேல்மலையனூர் தொகுதி, தொரப்பாடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், தொரப்பாடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

326—

24 மணி நேர வசதி

வினா எண் 18679—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேல்மலையனூர் தொகுதி, அனந்தபுரம் பேரூரில் மருத்துவமனையைப் புதுப்பித்து 24 மணி நேரமும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் வட்டாரத்தில் பல கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும், ஆரம்ப சுகாதார நிலையங்களும், 24 மணி நேரமும் செயல்பட்டு வருவதாலும் மற்றும் செஞ்சி தாலுகா

2011 ஜனவரி 13]

மருத்துவமனை 70 படுக்கை வசதிகளுடன் பல்வேறு சிறப்பு பிரிவுகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருவதாலும், மேல்மலைனூர் தொகுதி, அனந்தபுரம், பேரூரில் உள்ள மருத்துவமனையைப் புதுப்பித்து 24 மணி நேரமும், இயங்கச் செய்ய நிருவாக ரீதியாக தற்போது அவசியம் எழவில்லை.

327—

சுகாதார நிலையம்

வினா எண் 18702—திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, வாய்மேடு பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதி, வாய்மேடு பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

328—

மருத்துவப் பிரிவுகள் அமைத்தல்

வினா எண் 18746—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதய இயல், சிறுநீரக இயல், சர்க்கரை நோயியல், இரைப்பை நோயியல் மற்றும் அவசர மருத்துவ சிகிச்சைப் பிரிவு போன்ற பிரிவுகளை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவனையில் சர்க்கரை நோய்க்கான சிறப்பு வெளி நோயாளிகள் சிகிச்சைப் பிரிவு வாரந்தோறும் புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் இயங்கி வருகிறது. அவசர மருத்துவ சிகிச்சைப் பிரிவு இம்மருத்துவமனையில் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. இதய இயல் பிரிவு, சிறு நீரக இயல் பிரிவு, இரைப்பை நோயியல் பிரிவு போன்ற பிரிவுகள் நிதி நிலைமையின் அடிப்படையில் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

329—

சி.டி. ஸ்கேன் வசதி

வினா எண் 18749—திரு. ஞா. ஜான் ஜோசப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ குழித்துறை வட்ட மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) தற்போது அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு மட்டுமே சி.டி. ஸ்கேன் வசதி செய்து தரப்பட்டு வருகிறது. இன்னும் தாலுகா மற்றும் தாலுகா அல்லாத அரசு மருத்துவமனைகளுக்கு சி.டி. ஸ்கேன் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படவில்லை. எனவே, இக்கருவியை குழித்துறை அரசு மருத்துவமனைக்கு வழங்குவது குறித்து தற்போது செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

330—

சுகாதார நிலையம்

வினா எண் 18771—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, மானியதஅள்ளி ஊராட்சி, ஜருகு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், ஜருகு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

331—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 18805—திருமதி பெ. கமலம்பாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, கம்பராஜபுரம், கூரம், இளையான் வேலூர் ஆகிய கிராமங்களில் ஆரம்ப துணைச் சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதியில் உள்ள கம்பராஜபுரம், கூரம், இளையான் வேலூர் ஆகிய கிராமங்களில் ஏற்கெனவே துணை சுகாதார மையங்கள் இயங்கி வருகின்றன.

[2011 ஜனவரி 13

எனவே, அதே இடங்களில் பிறிதொரு துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

332—

மருத்துவர் நியமனம்

வினா எண் 18828—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்குப் போதிய மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 16 மருத்துவர் பணியிடங்களில் 16 மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். இம்மருத்துவமனைக்கு தேவையான அனைத்து பிரிவுகளிலும் தலா ஒரு மருத்துவர் பணிபுரிகிறார். மேலும் தமிழ்நாடு சுகாதார திட்டத்தின்கீழ் கூடுதலாக ஒரு மருத்துவர் பணியிடம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதிய மருத்துவர்கள் பணிபுரிகின்றனர்.

333—

சுகாதார நிலையம்

வினா எண் 18830—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, இராமரெட்டிப்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு அருகில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், இராமரெட்டிப்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

334—

கட்டட வசதி

வினா எண் 20132—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை ஒன்றியம் எரிசனம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தி புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் சுகாதார மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் எரிசனம்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. வருங்காலங்களில் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

335—

சுகாதார நிலையம்

வினா எண் 20690—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், விருதம்சம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், விருதம்சம்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

336—

சுகாதார நிலையம்

வினா எண் 21756—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பவானி தொகுதி, பூனாட்சி கிராமம், செம்படாபாளையம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், செம்படாபாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

337—

மானிட்டர் நெகுலிசர் கருவி

வினா எண் 21789—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், மேட்டூர் அரசு தலைமை மருத்துவமனையில் இருதய நோய்ப் பிரிவிற்கான மானிட்டர் நெகுலிசர் கருவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் டேம் அரசு தலைமை மருத்துவமனையில் இருதய நோய் பிரிவிற்கு மானிட்டர் நெகுலிசர் கருவி இதுவரை வழங்கப்படவில்லை. மேலும் இக்கருவிகள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இன்னும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு வழங்கி விரிவுப்படுத்தப்படவில்லை. இம்மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு இக்கருவிகள் மூலம் சிகிச்சையளிக்க வேண்டிய அவசியம் ஏற்படும் நிலையில் அவர்களை சேலம் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு அங்கு அவர்களுக்கு பூரண சிகிச்சையளிக்கப்படுகிறது.

338—

சுகாதார நிலையம்

வினா எண் 2181—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, முத்துநாயக்கன்பட்டியில் ஆரம்ப துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் முத்துநாயக்கன்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. முத்துநாயக்கன்பட்டி கிராமத்திலிருந்து 4 கி.மீ. தூரத்தில் பாகல்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், ஓமலூர் அரசு மருத்துவமனையும் உள்ளது. எனவே, முத்துநாயக்கன்பட்டி கிராமத்தில் மேலும் ஒரு துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[2011 ஜனவரி 13

339—

தரம் உயர்த்துதல்

வினா எண் 21840—திரு. ந. சுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, இராப்பூசல் தாய் சேய் நல மருந்தகத்தை மீண்டும் செயல்படுத்தி ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், குளத்தூர் தொகுதி, இராப்பூசல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

340—

சுகாதார துணை மையம்

வினா எண் 21855—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார துணை மையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, காரைமேடு கிராமத்தில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. எனவே, இங்கு புதியதாக துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

2011 ஜனவரி 13]

341—

மருத்துவ வசதி

வினா எண் 22649—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் அரசு மருத்துவமனையில் எலும்பு முறிவு சிகிச்சை, இருதய சிகிச்சை பிரிவுகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் திருப்புவனம் (சமுதாய நல மையம்) ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. எலும்பு முறிவு சிகிச்சை, இருதய சிகிச்சைப் பிரிவு வசதிகள் அரசு மருத்துவமனைகளில் மட்டுமே உள்ளன. எனவே, ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்படும் திருப்புவனம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் எலும்பு முறிவு சிகிச்சை, இருதய சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

342—

தரம் உயர்த்துதல்

வினா எண் 22788—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், கட்டனூர் கிராம துணை சுகாதார மையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் கட்டனூர் கிராமத்தில் ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்படுவதால் அதே கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

343—

தரம் உயர்த்துதல்

வினா எண் 22789—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, தஞ்சாக்கூர் கிராம துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், முத்தனேந்தல் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட தஞ்சாக்கூரில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருவதால் தஞ்சாக்கூர் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

344—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 22811—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

(அ) மானாமதுரையில் சித்த மருத்துவக் கல்லூரி தொடக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

345—

அவசர சிகிச்சைப் பிரிவு

வினா எண் 22814—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற வருகிற நோயாளர்களின் எண்ணிக்கை, விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்காக வரும் நோயாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைப் பரிசீலனை செய்து பார்க்கையில், அம்மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் அவசியம் தற்போது எழவில்லை.

346—

நவீனமயமாக்குதல்

வினா எண் 22830—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

(அ) இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடங்கள் கட்டி நவீனமயமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் மூலம் ரூ. 2.51 கோடி செலவில், கீழ்க்கண்ட புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

1. 50 படுக்கைகள் கொண்ட மகப்பேறு மற்றும் தீக்காய சிகிச்சைப் பிரிவு கட்டடம்.
2. நிர்வாகக் கட்டடம்.
3. இரு சக்கர வாகன அறை
4. 10 ஆம்புலன்ஸ் ஊர்திகள் நிறுத்துமிடம்.
5. கட்டணக் கழிவறை.
6. மேல்நிலைத் தொட்டி போர்வெல் வசதி.
7. மருத்துவக் கழிவுகள் சேமிக்கும் அறை.
8. நோயாளிகளுக்கு ஆலோசனை வழங்கும் அறை.

மேலும் ரூ.20 இலட்சம் செலவில் உபகரணங்களும் வழங்கப்பட்டு இம்மருத்துவமனை நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

347—

கட்டட வசதி

வினா எண் 22834—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்தின் மிக அருகில் அனைத்து வசதிகளும் கொண்ட பரமக்குடி வட்ட மருத்துவமனை அமைந்துள்ளதாலும், முதன்மை ஆரம்ப சுகாதார நிலையங்களை முதற்கண் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றிடும் நிலைப்பாடு அரசுக்கு உள்ளதாலும், இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை நேரடியாக மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவோ, புதிய கட்டடம் கட்டவோ நிருவாக ரீதியாக சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

348—

சுகாதார நிலையம்

வினா எண் 23354—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, பாப்பம்பாடி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பாப்பம்பாடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

349—

சுகாதார நிலையம்

வினா எண் 23355—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, அரியாம்பட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், அரியாம்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

350—

சுகாதார நிலையம்

வினா எண் 23391—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, அரங்கனூர் ஊராட்சியில், செம்மனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், செம்மனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

2011 ஜனவரி 13]

351—

சுகாதார நிலையம்

வினா எண் 23393—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, கோணகால்பாடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கோணகால்பாடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

352—

தரம் உயர்த்துதல்

வினா எண் 25068—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, பொதியகொழப்பலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, பொதியகொழப்பலூர் ஆரம்ப சுகாதார நிலையம் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் ஆகும். இதற்கு மிக அருகில் அனைத்து வசதிகளும் கொண்ட வந்தவாசி அரசு மருத்துவமனை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

அமைந்துள்ளதாலும், முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரமுயர்த்திடும் நிலைப்பாடு உள்ளதாலும், இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை நேரடியாக அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த நிருவாக ரீதியாக அவசியம் எழவில்லை.

353—

பழுது பார்த்தல்

வினா எண் 25088—திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம், தும்மலப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை பழுதுபார்க்கவும், செவிலியர்கள் அங்கேயே தங்கி மருத்துவம் செய்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த எஸ். தும்மலப்பட்டி, ஆரம்ப சுகாதார நிலையம் 2000 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இதன் பழுதுபார்ப்புப் பணிகள் 2005-2006-ல் மேற்கொள்ளப்பட்டது. தற்போது எந்த பழுதுபார்ப்புப் பணிகளும் இல்லை. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ள 3 செவிலியர்கள் சுழற்சி முறையில் 24 மணிநேரமும் பணிபுரிகிறார்கள்.

354—

முழுநேர மருத்துவமனை

வினா எண் 25130—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

பூம்புகார் தொகுதி, திருவெண்காடு அரசினர் மருத்துவமனையை முழுநேர அரசு மருத்துவமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதி, சீர்காழி வட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த ஏற்கெனவே அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இங்கு கட்டடப் பணிகள் முடிந்து செயல்படத் தொடங்கும்போது, முழு நேரமும் செயல்படும்.

355—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 25764—திரு. ரா. வரதராஜன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதியில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதியில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

356—

சித்த மருத்துவக் கல்லூரி

வினா எண் 25812—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

பழனி தொகுதி, பழனியிலிருந்து மாற்றப்பட்ட சித்த மருத்துவக் கல்லூரியை மீண்டும் பழனியில் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பழனியில் உள்ள சித்த மருத்துவக் கல்லூரியில் போதிய வசதிகள் இல்லாத காரணத்தினால் சென்னைக்கு மாற்றப்பட்டது. எனவே, சென்னையில் செயல்படும் அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியை மீண்டும் பழனியில் நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

357—

தரம் உயர்த்துதல்

வினா எண் 25813— திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பாப்பம்பட்டி, நரிக்கல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி சுகாதார மாவட்டம், பழனி ஊராட்சி ஒன்றியத்தில் பாப்பம்பட்டி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்டதாக தரம் உயர்த்த ஏற்கெனவே ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கீரனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தவும் அரசாணைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நரிக்கல்பட்டி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

358—

செவிலியர் கல்லூரி

வினா எண் 25815—திரு. எம். அன்பழகன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, பழனியில் பல் மருத்துவம், செவிலியர் கல்லூரிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பழனி தொகுதி, பழனியில் பல் மருத்துவம் மற்றும் செவிலியர் கல்லூரிகள் தொடங்குவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

359—

கட்டட வசதி

வினா எண் 25818—திரு. எம். அன்பழகன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, மிடாபாடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி சுகாதார மாவட்டம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மிடாபாடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. 1200 சதுர அடி பரப்பளவில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் 10 அறைகள் கொண்டதாக செயல்பட்டு வருகிறது. பிரசவ பின் சிகிச்சை அறை, உள்நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற அறை ஆகிய

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வசதிகள் இனி வருங்காலங்களில் செய்து தர தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

360—

சுகாதார நிலையம்

வினா எண் 25825—திரு. வை. காவேரி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பகுட்டை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், தப்பக்குட்டை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

361—

சுகாதார நிலையம்

வினா எண் 25839—திரு. வீ.ஏ.டி. கலிவரதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், பையூர் கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியம், பையூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

2011 ஜனவரி 13]

362—

கட்டட வசதி

வினா எண் 25849—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, சின்னசமுத்திரம் ஊராட்சி, பிச்சனூர் கிராம அரசு மருத்துவமனைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, சின்ன சமுத்திரம் ஊராட்சி, பிச்சனூர் கிராம அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு நிலமாற்றம் செய்ய தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நில மாற்றம் செய்யப்பட்டவுடன் கட்டடம் கட்டித் தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

363—

சுகாதார நிலையம்

வினா எண் 25860—திரு. வை. காவேரி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், சமுத்திரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

364—

சுகாதார நிலையம்

வினா எண் 25870—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, கோடு அள்ளி ஊராட்சி, கருங்கலூர் கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், கோடு அள்ளி ஊராட்சி, கருங்கலூர் கிராமத்தின் மக்கள் தொகை 610, மத்திய அரசு வகுத்துள்ள வழிமுறைகளின்படி இந்தக் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

365—

சுகாதார துணை நிலையம்

வினா எண் 25880—திரு. எம். பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார துணை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம் புதுப்பட்டினம் கிராமத்தில் ஏற்கெனவே துணை

2011 ஜனவரி 13]

சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கு ஏற்ப 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் மேலும் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

366—

மருத்துவ வசதி

வினா எண் 25899—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கட்டுமானப் பணியில் சிமெண்ட், சுண்ணாம்பு பயன்படுத்துவதால் காசநோய், ஆஸ்துமா நோயால் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு சிறப்பு மருத்துவ வசதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கட்டுமானப் பணியில் ஈடுபடும் நபர்களுக்கு சிமெண்ட், சுண்ணாம்பு பயன்படுத்துவதால் காசநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. இந்தப் பொருட்கள் பயன்படுத்தும்போது ஒவ்வாமை ஆஸ்துமா ஏற்பட வாய்ப்பு உள்ளது. நம்முடைய மாநிலத்தில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளிலும் காசநோயைக் கண்டறிய சிறப்பு ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இலவசமாக பரிசோதனை செய்து காசநோய் இருக்கிறதா என்று கண்டறிந்து, அவ்வாறு காசநோய் இருந்தால், அவர்களுக்கு காசநோய் மருந்துகளை நேரடி பார்வையில் ஆறு மாதங்கள் வரை வழங்கப்படுகிறது. இதனால் காசநோய் குணமடைகிறது.

367—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 25900—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

(அ) தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டம், வத்தல் மலை பால்சிலம்பு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி ஊராட்சி ஒன்றியம், வத்தல் மலை மற்றும் பால்சிலம்பு கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

368—

சுகாதார நிலையம்

வினா எண் 25918—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, தாமல் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் வட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், தாமல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

369—

பல் மருத்துவமனை

வினா எண் 26157—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) தாரமங்கலம் தொகுதி தாரமங்கலம் பகுதியில் பல் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதியில் பல் மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

370—

தரம் உயர்த்துதல்

வினா எண் 26158—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி ஊராட்சி மகப்பேறு மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், அமரகுந்தி கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் (மகப்பேறு மருத்துவமனை) இயங்கி வருகிறது. இதனை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

371—

செவிலியர் கல்லூரி

வினா எண் 26159—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியத்தில் செவிலியர் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியத்தில் செவிலியர் கல்லூரி அமைக்கும் தேவை எழவில்லை.

372—

தரம் உயர்த்துதல்

வினா எண் 26161—திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், ராமபட்டினம், புரவிபாளையம் ஆரம்ப சுகாதார மையங்களை 30 படுக்கை வசதியுடன் சுகாதார மையங்களாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ராமப்பட்டினம், புரவிபாளையம் ஆகிய ஆரம்ப சுகாதார மையங்களை 30 படுக்கை வசதியுடன் சுகாதார மையங்களாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

373—

தரம் உயர்த்துதல்

வினா எண் 26162—திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

கிணத்துக்கடவு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிணத்துக்கடவு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

374—

நோயாளர் ஊர்தி

வினா எண் 26165—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொதட்டூர்பேட்டை, பள்ளிப்பட்டு மருத்துவமனைகளுக்கு நவீன நோயாளர் ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு சுகாதார திட்டத்தின்கீழ் திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டை மற்றும் பள்ளிப்பட்டு மருத்துமனைகளுக்கு பொதட்டூர்பேட்டை அருகில் உள்ள பள்ளிப்பட்டு வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் 24 மணி நேரமும் அவசரத் தேவைக்கு இயங்கும் நிலையில் அவசர ஊர்தி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

375—

மகப்பேறு பிரிவு

வினா எண் 26166—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

பொதட்டூர்பேட்டை மருத்துவமனையில் மகப்பேறு பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பொதட்டூர்பேட்டை மருத்துவமனையில் ஏற்கெனவே மகப்பேறு பிரிவு இயங்கி வருகிறது.

376—

சுகாதார நிலையம்

வினா எண் 26167—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பள்ளிப்பட்டு தொகுதி, புச்சிரெட்டிபள்ளி கிராமத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஊராட்சி ஒன்றியம், புச்சிரெட்டிபள்ளி கிராமத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

377—

24 மணி நேர வசதி

வினா எண் 28258—திரு மா. சந்திரகாசி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வரகூர் தொகுதி, சிருமத்தூர் ஊராட்சி, முருக்கன்குடி ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேரமும் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், வரகூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், முருக்கன்குடி ஆரம்ப சுகாதார நிலையம் 24-2-2006 முதல் 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது.

378—

ஆரம்ப சுகாதார மையம்

வினா எண் 28260—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், கீழப்பெரம்பலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியம், கீழப்பெரம்பலூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

379—

சுகாதார நிலையம்

வினா எண் 28273—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, தொட்டபூவத்தியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், தொட்டபூவத்தி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

380—

சுகாதார நிலையம்

வினா எண் 28274—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, குருபரப்பள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம், குருபரப்பள்ளி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

381—

தரம் உயர்த்துதல்

வினா எண் 28275—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, ஆலப்பட்டி எம்.சி.பள்ளி, நாச்சிக்குப்பம், இராயக்கோட்டை ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நிறைவேற்றப்படுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய ஊரக நல்வாழ்வு பணித் திட்ட நிதி உதவியுடன் கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தில் ஆலப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. எம்.சி.பள்ளி, நாச்சிக்குப்பம், இராயக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

382—

தரம் உயர்த்துதல்

வினா எண் 28284—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி சுகாதார மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் கீரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இவ்வூராட்சியில் உள்ள வடக்காடு ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த ஆணை வெளியிடப்பட்டு, பொதுப் பணித் துறை கட்டடம் கட்ட நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கீரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[2011 ஜனவரி 13

383—

சி.டி. ஸ்கேன் வசதி

வினா எண் 28285—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி அரசு மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் சி.டி.ஸ்கேன் நிறுவப்பட்டுள்ளது. ஆலங்குடி அரசு வட்ட மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் அமைப்பது குறித்து தற்சமயம் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

384—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 28289—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் மருத்துவக் கல்லூரி துவக்கும் திட்டம் அரசின் 'பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* புதுக்கோட்டையில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

2011 ஜனவரி 13]

385—

சுகாதார நிலையம்

வினா எண் 28350—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாயனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம், மாயனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

386—

கட்டட வசதி

வினா எண் 28360—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், பெரியக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்த பச்சேரி துணை சுகாதார நிலையத்திற்கு (ஆரம்ப சுகாதார நிலையம் அல்ல) கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இடம் மாற்றம் செய்ய கோரப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நிதியிலிருந்து நிதி

[2011 ஜனவரி 13

ஒதுக்கீடு செய்யக் கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதும் பச்சேரி துணை சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

387—

மருத்துவமனை வசதி

வினா எண் 28365—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, மறமடக்கி ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஆலங்குடி, மறமடக்கி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெறும் மகப்பேறு மற்றும் சராசரி உள் நோயாளிகளின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பரிசீலனை செய்ததில், மறமடக்கி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட வேண்டிய அவசியம் எழவில்லை.

388—

தரம் உயர்த்துதல்

வினா எண் 28398—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் அரசு மருத்துவமனை தாய்சேய் நலப் பிரிவை தரம் உயர்த்தி நவீனப்படுத்த அரசு முன்வருமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனையில் உள்ள தாய் சேய் நலப் பிரிவானது முன்பேறுகால பரிசோதனை (Antenatal Checkup) மற்றும் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் ஆகிய வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. மேலும் அனைத்துப் பணியாளர்களும் 24 மணி நேரமும் தயார் நிலையில் உள்ளனர். எனவே, அப்பிரிவை மேற்கொண்டு நவீனப்படுத்தும் அவசியம் தற்போது எழவில்லை.

389—

நோயாளர் ஊர்தி

வினா எண் 28404—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசிபுரம் தொகுதி, வெண்ணந்தூர் அரசு மருத்துவமனைக்கு நோயாளர் ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், வெண்ணாந்தூர் அரசு மருத்துவமனைக்கு வாகனம் ஏதும் அளிக்கப்படவில்லை. தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஆம்புலன்ஸ் வாகனங்கள் படிப்படியாக அளிக்கப்பட்டு வருகிறது. அச்சமயம், வெண்ணாந்தூர் அரசு மருத்துவமனைக்கும் நோயாளர் ஊர்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

390—

சுகாதார நிலையம்

வினா எண் 28410—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

ஓமலூர் தொகுதி, புளியம்பட்டி ஊராட்சியில், துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

புளியம்பட்டி கிராமத்தின் மக்கள் தொகை மிகக் குறைவாக இருப்பதால் அரசு விதிமுறைப்படி இங்கு துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

391—

சுகாதார நிலையம்

வினா எண் 28449—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, நெடுவாசல் கீழ்பாதி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், நெடுவாசல் கீழ்பாதி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

392—

கட்டட வசதி

வினா எண் 28456—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், திருப்புக்குழி ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவிற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், திருப்புக்குழி ஆரம்ப சுகாதார நிலையத்தில் செயல்படும் சித்த மருத்துவப் பிரிவிற்கு தேசிய ஊரக நல மையத்திடம் இருந்து நிதியுதவி கிடைக்கப்பெற்றபின் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

393—

சுகாதார நிலையம்

வினா எண் 28463—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கிளார் கிராமத்தில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கிளார் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அதே கிராமத்தில் மேலும் ஒரு துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

394—

இரத்த (ம) கண் வங்கி

வினா எண் 28467—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் இரத்த வங்கி, கண்வங்கி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் 20—5—1997 முதல் இரத்த வங்கி அரசு உரிமம் பெற்று செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் போதிய இட வசதியின்மை காரணமாகவும், தேவையான உபகரணங்கள் மற்றும் மருத்துவர் பற்றாக்குறைபாட்டினாலும் கண் வங்கி நிறுவப்படவில்லை, எனினும் கண் வங்கி நிறுவிட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

395—

மின் ஆக்கி

வினா எண் 28501—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் அரசு மருத்துவமனைக்கு மின் ஆக்கி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) பல்லடம் அரசு மருத்துவமனையில் 3 மின் ஆக்கிகள் 6 கேவி, 2 கேவி மற்றும் 1 கேவி திறனுடன் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) ஏற்கெனவே தேவைக்கேற்ற திறனுடன் மின் ஆக்கிகள் செயல்பட்டு வருவதால் கூடுதலாக மின் ஆக்கிகள் நிறுவத் தேவையில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

396—

சுகாதார நிலையம்

வினா எண் 28510—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், மணப்பாக்கம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், மணப்பாக்கம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

397—

முழு நேர மையம்

வினா எண் 28553—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஆரம்ப சுகாதார மையத்தை முழுநேர மையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையம் 31-07-2008 முதல் முழுநேர ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.

[2011 ஜனவரி 13

398—

சுகாதார நிலையம்

வினா எண் 28554—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கண்ணூர்ப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஒன்றியம், கண்ணூர்ப்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

399—

நோயாளர் ஊர்தி

வினா எண் 28555—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் தொகுதி, வெண்ணந்தூர் அரசு மருத்துவமனைக்கு நோயாளர் ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் அரசு மருத்துவமனைக்கு நோயாளர் ஊர்தி ஏதும் அரசால் அளிக்கப்படவில்லை. வரும் நிதியாண்டுகளில் அரசின் நிதிநிலைக்கேற்ப அவசியம் ஏற்படின் நோயாளர் ஊர்தி வழங்கப்படும்.

2011 ஜனவரி 13]

400—

முழுநேர மையம்

வினா எண் 28553—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஆரம்ப சுகாதார மையத்தை முழுநேர மையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையம் 31-7-2008 முதல் முழுநேர ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.

401—

நோயாளர் ஊர்தி

வினா எண் 28556—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நோயாளர் ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் கட்டுப்பாட்டில் உள்ள ஓமலூர் சட்டமன்றத் தொகுதியில் சேந்தமங்கலம் என்ற ஆரம்ப சுகாதார நிலையமோ அல்லது அரசு மருத்துவமனையோ செயல்படவில்லை. ஆனால் நாமக்கல் மாவட்டத்தில் சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் கொல்லிமலை, சேந்தமங்கலம், நாமகிரிபேட்டை புதுச்சந்திரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. அங்குள்ள சேந்தமங்கலத்தில் வட்டாரமில்லாத அரசு மருத்துவமனை இயங்கி வருகின்றது. அங்கு ஒரு வாகனம் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

402—

அதிநவீன மருத்துவமனை

வினா எண் 28817—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—.

சேலம் அரசு மருத்துவமனையை அதிநவீன மருத்துவமனை ஆக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம், அரசு மோகன்குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை புதுடில்லி அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்திற்கு இணையாக மைய அரசு நிதி உதவியுடன் ரூ.120/- கோடியில் தரம் உயர்த்துவதற்கான கருத்துரு, மைய அரசுடன் கலந்தாலோசிக்கப்பட்டு பரிசிலனையில் உள்ளது.

403—

நல விடுதி

வினா எண் 28845—திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, சாத்தான்குளம் ஒன்றியம், நடுவக்குறிச்சி தாய்சேய் நல விடுதியை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, சாத்தான்குளம் ஒன்றியம், நடுவக்குறிச்சியில் துணைச் சுகாதார நிலையம் ஏற்கெனவே இயங்கி வருகிறது.

2011 ஜனவரி 13]

404—

மருத்துவர் நியமனம்

வினா எண் 28846—திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, கருங்குளத்தில் உள்ள கிளை மருத்துவமனைக்கு மருத்துவர்களை நியமித்து மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சாத்தான்குளம் தொகுதி, கருங்குளத்தில் துணைச் சுகாதார நிலையம் உள்ளது. விதிகளின்படி துணைச் சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ அலுவலர் பணி நியமனம் இல்லை. கிராம சுகாதார செவிலியர் பணியில் உள்ளார்.

405—

நோயைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 29206—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் சின்னம்மை நோயைக் கட்டுப்படுத்தவும், பிற பகுதிக்கு பரவாமல் தடுக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சென்னையில் சின்னம்மை நோயைக் கட்டுப்படுத்தவும், பிற பகுதிகளுக்கு பரவாமல் தடுக்கவும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சின்னம்மை நோய்க் கிருமியை அழிக்க பயன்படும் Acyclovir மருந்து மற்றும் தேவையான இதர மருந்துகள் சென்னை மாநகராட்சி தொற்றுநோய் மருத்துவமனை மருந்தகங்கள்

[2011 ஜனவரி 13

மற்றும் மாநிலம் முழுவதும் உள்ள நல்வாழ்வு மையங்களில் போதிய இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அரசு, சென்னை மாநகராட்சி மற்றும் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமும் பொதுச் சுகாதாரம், மருத்துவத் துறை, மருத்துவக் கல்வித் துறை, பள்ளிக் கல்வி மற்றும் உள்ளாட்சித் துறைகள் மூலமும் மேற்கொண்ட ஒருங்கிணைந்த விரைவு நடவடிக்கையினால் இந்நோயின் தாக்கம் குறைக்கப்பட்டு முழுவதும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

406—

துணைச் சுகாதார நிலையம்

வினா எண் 29210—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, பெரியகோட்டை காமராஜ் நகரில் துணைச் சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, பெரியகோட்டை ஊராட்சிக்குட்பட்ட காமராஜ் நகரில் துணைச் சுகாதார நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

407—

சுகாதார நிலையம்

வினா எண் 29233—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, சீர்காழி வட்டம், பாகசாலை துணைச் சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியம், பாகசாலை துணைச் சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றியமைக்கும் திட்டம் இல்லை.

408—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 29240—திரு. எம். பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டினம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

409—

சுகாதார நிலையம்

வினா எண் 29511—திரு. ஆர். சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, சருகுவலையப்பட்டி, மேலவளவு கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், மேலூர் ஊராட்சி ஒன்றியம், சருகுவலையப்பட்டி, மேலவளவு கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

410—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 29563—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

411—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 29576—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருப்பூரில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

412—

சுகாதார நிலையம்

வினா எண் 29977—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், மேலநெட்டூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், மேலநெட்டூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

413—

சுகாதார நிலையம்

வினா எண் 29978—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சிப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், மானாமதுரை பேரூராட்சிப் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

414—

அறுவை சிகிச்சை அரங்கம்

வினா எண் 30030—திரு. அருள் அன்பரசு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சை அரங்கம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சை அரங்கம் கட்ட இனி வருங்காலங்களில் நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

415—

தரம் உயர்த்துதல்

வினா எண் 30400—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகை ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களை முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமாகவோ அல்லது மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகவோ தேவையின் அடிப்படையில் தரமுயர்த்திடும் நிலைப்பாடு அரசுக்கு உள்ளதால், தற்போது மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகை ஆரம்ப சுகாதார நிலையத்தை நேரடியாக அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்திட நிருவாக ரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை.

416—

சுகாதார நிலையம்

வினா எண் 30402—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், வீரபாண்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியம், வீரபாண்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

417—

சுகாதார நிலையம்

வினா எண் 30867—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், கவுண்டச்சிபாளையம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், கவுண்டச்சிபாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

418—

தரம் உயர்த்துதல்

வினா எண் 30932—திரு. பா. வேல்துரை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், மருதம்புத்தூர் சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதியுடன் மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், மருதம்புத்தூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதியுடன்கூடிய மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

419—

தரம் உயர்த்துதல்

வினா எண் 30998—திரு. ஆர். எம். பழனிசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரி ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சை பெறுவதற்காக வருகிற உள்நோயாளர்கள் மற்றும் வெளிநோயாளர்களின் எண்ணிக்கையையும், அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தின் செயல்பாடுகளையும் பரிசீலித்துப் பார்க்கையில் அதனை நேரடியாகப் பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு நிருவாக ரீதியான சாத்தியக்கூறுகள் தற்போது எழவில்லை.

420—

கட்டட வசதி

வினா எண் 31663—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவமனைக்கான கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மொரப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவமனைக்குத் தேசிய ஊரக நல மையத்திடம் இருந்து நிதியுதவி கிடைக்கப்பெற்றபின் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2011 ஜனவரி 13

421—

சுகாதார நிலையம்

வினா எண் 31664—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, ஆர். கோபிநாதம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ஊராட்சி ஒன்றியம், ஆர்.கோபிநாதம்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

422—

உபகரணங்கள் வழங்குதல்

வினா எண் 31688—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்திவேலூர் மருத்துவமனை அறுவை அரங்கத்தில் அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த பரமத்தி வேலூர் அரசு மருத்துவமனை 32 படுக்கை வசதிகளுடன்கூடிய ஒரு தாலுகா மருத்துவமனையாகும். இங்குள்ள அறுவை அரங்கிற்குத் தேவையான அறுவை சிகிச்சை உபகரணங்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டு நல்லமுறையில் பல அறுவை சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

423—

சுகாதார நிலையம்

வினா எண் 31835—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, பொன்பதிர்கூடம் ஊராட்சியில் துணைச் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, பொன்பதிர்கூடம் ஊராட்சியில் ஏற்கெனவே ஒரு துணைச் சுகாதார நிலையம் உள்ளதால், அதே ஊராட்சியில் மேலும் ஒரு துணைச் சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

424—

துணைச் சுகாதார நிலையம்

வினா எண் 31836—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், வாயலூர், எடையூரில் ஆரம்ப துணைச் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், வாயலூர், எடையூரில் ஆரம்ப துணைச் சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

425—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 31867—திரு. ரெ. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், பகட்டுவான்பட்டி கோமாபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பகட்டுவான்பட்டி கோமாபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்சமயம் இல்லை.

426—

ஆட்டோ அனலைசர் கருவி

வினா எண் 31915—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் செமி ஆட்டோ அனலைசர் கருவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டத்தைச் சார்ந்த உசிலம்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை 135 படுக்கை வசதிகள் கொண்டதாகும். அனைத்து அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள

2011 ஜனவரி 13]

மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலன் பிரிவுகளை மேலும் திறம்பட செயல்படுத்துவதற்காக மாநில சுகாதார கழத்தின்மூலம் (State Health Mission) உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.20 லட்சம் வழங்கப்படுகிறது. இதில் ஒவ்வொரு மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும் ஒரு செமி ஆட்டோ அனலைசர் கருவி வழங்கப்பட உள்ளது.

427—

செவிலியர் கல்லூரி

வினா எண் 31921—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டியில் செவிலியர் கல்லூரி அமைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் அரசு செவிலியர் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

428—

தரம் உயர்த்துதல்

வினா எண் 31932—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பஞ்சப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் பஞ்சப்பட்டி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. பஞ்சப்பட்டி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த ஏற்கெனவே ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறை மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது.

429—

சுகாதார நிலையம்

வினா எண் 31933—திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், மாயனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம், மாயனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

430—

சுகாதார மையம்

வினா எண் 31937—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, 16-வது வார்டு பியூன்காலனி, 2-வது வார்டு என்.டி. இட்டேரியில் சுகாதார மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, 16-வது வார்டு பியூன்காலனி, 2-வது வார்டு என்.டி. இட்டேரி ஆகிய கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

431—

குடியிருப்பு வசதி

வினா எண் 31945—திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி அரசு பொது மருத்துவமனைக்குப் புதிய கட்டடம், மருத்துவர் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவு மற்றும் வெளி நோயாளிகள் பிரிவு, கழிவுகள் அகற்றும் அறை மற்றும் பராமரிப்பு வேலைக்கான கட்டட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மருத்துவர் குடியிருப்பு ஏற்கெனவே அங்கு உள்ளது.

432—

துணைச் சுகாதார நிலையம்

வினா எண் 31975—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மேலநெட்டூரில் துணைச் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மேலநெட்டூரில் ஏற்கெனவே ஒரு துணைச் சுகாதார நிலையம் இயங்கி வருவதால் மேலும் ஒரு துணைச் சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

433—

தரம் உயர்த்துதல்

வினா எண் 31977—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, தஞ்சாக்கூர் கிராமத் துணைச் சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, தஞ்சாக்கூர் கிராம துணைச் சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

434—

கட்டட வசதி

வினா எண் 31978—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பச்சேரி கிராம துணைச் சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், பச்சேரி கிராம துணைச் சுகாதார நிலையம், பெரியகோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. பச்சேரி துணைச் சுகாதார நிலையம் தற்போது ஊர் பொது நாடக மேடையில் செயல்படுகிறது. துணைச் சுகாதார நிலையம் கட்ட, நிலம் தேர்வு செய்யப்பட்டு சிவகங்கை மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநரால் நிலமாற்றம் குறித்தும், கட்டடம் கட்டவும், மாவட்ட ஆட்சியரிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. நிலமாற்றம் செய்யப்பட்டு, நிதி கிடைக்கப்பெற்றவுடன் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

435—

மருத்துவர் நியமனம்

வினா எண் 32657—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கொமரலிங்கம் அரசு மருத்துவமனையில் மகப்பேறு அறுவைச் சிகிச்சை, குழந்தைகள் நலம் ஆகிய மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை கொமரலிங்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மூன்று மருத்துவர்கள் பணியில் உள்ளனர். கூடிய விரைவில் மகப்பேறு மருத்துவரும், மயக்க மருந்து மருத்துவரும் நியமிக்கப்படுவர்.

[2011 ஜனவரி 13

436—

மருத்துவமனை வசதி

வினா எண் 32674—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, மனம்தவிழ்ந்தபுத்தூர் கிராமத்தில் மகப்பேறு மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, மனம்தவிழ்ந்தபுத்தூர் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு துணைச் சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. எனவே மேலும் ஒரு துணைச் சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

437—

சுகாதார நிலையம்

வினா எண் 32706—திரு. வை. காவேரி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், அ.புதூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், அ. புதூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

438—

சுகாதார நிலையம்

வினா எண் 32723—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, வனவாசியில் ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், வனவாசி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

439—

மருத்துவ வசதி

வினா எண் 33077—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமத்திவேலூர் மருத்துவமனையில் எலும்பு முறிவுகளைக் கண்டறிய நவீன ஊடுகதிர் பெரிய படக் கருவி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த பரமத்திவேலூர் மருத்துவமனை 32 படுக்கை வசதிகளுடன் கூடிய ஒரு தாலுகா மருத்துவமனையாகும். இம்மருத்துவமனைக்கு ஏற்கெனவே ஓர் ஊடுகதிர் கருவி நாமக்கல் அரசு தலைமை மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றது. எலும்பு

[2011 ஜனவரி 13

முறிவுகளைக் கண்டறியக் கூடிய நவீன ஊடுகதிர் பெரிய படக்கருவி வழங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

440—

சுகாதார நிலையம்

வினா எண் 33150—திரு. ச. லட்சுமணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடிநாயக்கனூர் தொகுதி, பூதிப்புரம், பி.மீனாட்சிபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், பூதிப்புரம், பி.மீனாட்சிபுரம் ஆகிய கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

441—

ஆயுர்வேதக் கல்லூரி

வினா எண் 33307—திரு. அ. ராஜன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, கோட்டாறு பகுதியில் ஆயுர்வேதக் கல்லூரி துவங்கும் பணி எந்நிலையில் உள்ளது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், கோட்டாறு பகுதியில் உள்ள அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனை 21-5-2007 முதல் இயங்கி வருகின்றது. மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, மைய இந்திய மருத்துவக் குழுவின் (Central Council of Indian Medicine) ஆய்வுக்காகத் தயார் நிலையில் உள்ளது. மைய அரசின் அனுமதி கிடைக்கப்பெற்றதும் கல்லூரி துவங்கப்படும்.

442—

மருத்துவமனை வசதி

வினா எண் 33349—திரு. கை. காவேரி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஒன்றியம், இருப்பாளி கலர்ப்பட்டியில் மகப்பேறு மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியத்தைச் சேர்ந்த இருப்பாளியில் உள்ள கலர்பட்டி கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் இருப்பாளி துணைச் சுகாதார நிலையமும், செட்டிமாங்குறிச்சி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், 6 கிலோ மீட்டர் தூரத்தில் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையும் இயங்கி வருவதால் அரசு விதிமுறைகளின்படி கலர்ப்பட்டியில் தனியாக ஒரு மகப்பேறு மருத்துவமனை தற்போது துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2011 ஜனவரி 13

443—

சுகாதார நிலையம்

வினா எண் 33816—திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, வாண்டையார் இருப்பு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கடலூர் மாவட்டம், குமராட்சி ஊராட்சி ஒன்றியம், வாண்டையார் இருப்பு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

444—

மருத்துவ வசதி

வினா எண் 33983—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்ட மருத்துவமனையில் பல், கண் மருத்துவப் பிரிவுகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தேன்கனிக்கோட்டை . அரசு வட்ட மருத்துவமனையில் பல் சிகிச்சைப் பிரிவுகள் தற்போது நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன. மேலும்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

அம்மருத்துவமனையில் கண் நோய் சிகிச்சைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கையை கணக்கில்கொண்டு ஆராயும்போது அம்மருத்துவமனையில் தனியாக கண் சிகிச்சைப் பிரிவு துவங்க தற்போது அவசியம் எழவில்லை.

445—

துணைச் சுகாதார நிலையம்

வினா எண் 33984—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, மாகாண்டப்பள்ளி, தொட்டமஞ்சி, கஸ்தூரிமலை ஆகிய இடங்களில் துணைச் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியில் உள்ள அஞ்செட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் 9 துணைச் சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இதில் தொட்டமஞ்சி துணைச் சுகாதார நிலையமும் அடங்கும். மாகாண்டப்பள்ளி மற்றும் கஸ்தூரிமலை கிராமத்தின் மக்கள் தொகை மிக மிகக் குறைவாக இருப்பதால் இந்தக் கிராமங்களில் துணைச் சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

446—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 33991—திரு. எஸ். மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொங்கலூர் தொகுதி, கொடுவாய் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கொடுவாய் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்சமயம் இல்லை.

447—

செவிலியர் பயிற்சிக் கல்லூரி

வினா எண் 34163—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி துவங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

448—

மருத்துவ வசதி

வினா எண் 34769—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையில் சிறுநீரகம், இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு 38 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. மேலும், சிறுநீரக நோயாளிகளுக்குக்கென்று தனிப் பிரிவும் இம்மருத்துவமனையில் செயல்பட்டு வருகிறது.

449—

தரம் உயர்த்துதல்

வினா எண் 34778—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் வட்டம், மேட்டுத் திருக்காம்புலியூர் துணைச் சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம், மேட்டுத் திருக்காம்புலியூர் துணைச் சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தும் திட்டம் இல்லை.

450—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 34779—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஒன்றியம், ஏமூர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், ஏமூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

451—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 35148—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

452—

தொழுநோய் மருத்துவமனை

வினா எண் 35184—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, எலத்தூர் ஊராட்சியிலுள்ள தொழுநோய் மருத்துவமனையை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தொழுநோயாளிகள் எண்ணிக்கை 10,000 மக்கள் தொகைக்கு 1 என்ற அளவில் குறைந்து, தொழுநோய் ஒழிக்கப்பட்டுள்ளது. எனவே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட எலத்தூர் ஊராட்சியிலுள்ள தொழுநோய் மருத்துவமனையை மீண்டும் திறக்க அவசியம் எழவில்லை.

453—

சுகாதார நிலையம்

வினா எண் 36245—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, கம்பாலப்பட்டி, பிலிசின்னம்பாளையம் ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால், அந்த ஒன்றியத்தைச் சார்ந்த கம்பாலப்பட்டி மற்றும் பிலிசின்னம்பாளையம் கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

454—

அல்ட்ரா சோனிக் கருவி

வினா எண் 36288—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிறுநீரகக் கற்களை குணமாக்கும் மீயொளி அலைக் கருவிகளை (அல்ட்ரா சோனிக்) வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிறுநீரகக் கற்களை குணமாக்கும் மீயொளி அலைக் கருவிகளை (அல்ட்ரா சோனிக்) வழங்க பரிசீலிக்கப்படும்.

455—

விரிவுபடுத்துதல்

வினா எண் 37192—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, சதுரங்கப்பட்டினம் அரசு வட்ட தலைமை மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், சைதாப்பேட்டை சுகாதார மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் சதுரங்கப்பட்டினம் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றன. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் மேம்படுத்தப்படவில்லை. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்த அரசு கொள்கை அளவில் முடிவெடுத்து படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இனி வருங்காலங்களில் திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தகுதிவாய்ந்த ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

456—

சுகாதார நிலையம்

வினா எண் 37268—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி ஒன்றியம், உங்கரான அள்ளி ஊராட்சி, எட்டிமரத்துப்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி ஒன்றியம், உங்கரான அள்ளி ஊராட்சி, எட்டிமரத்துப்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் தற்சமயம் இல்லை.

457—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 37308—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடியில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடியில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

[2011 ஜனவரி 13

458—

தரம் உயர்த்துதல்

வினா எண் 37887—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உ்யர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் தாரமங்கலம் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. அரசின் கொள்கைப்படி ஓர் ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தாரமங்கலம் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த இனி வருங்காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.

459—

தரம் உயர்த்துதல்

வினா எண் 37888—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி பேரூராட்சி, ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் மேச்சேரி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆணை (நிலை) எண் 142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள்: 30-4-2007-ன்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

460—

பல் சிகிச்சைப் பிரிவு

வினா எண் 37981—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் அரசு மருத்துவமனையில் பல் சிகிச்சைப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கடும்பாடி மற்றும் பாண்டூர் கிராமங்களில் கால்நடை மருத்துவ நிலையங்கள் துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

40—

சிறு தொழில்கள்

வினா எண் 2491—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் சிறு தொழில்கள் தொடங்க புதிய திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதியில் அரசு சார்பில் சிறு தொழில்கள் தொடங்க புதிய திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை. ஆனால், சிறு தொழில்கள் துவக்க சிறு தொழில் முனைவோர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

முன்வந்தால் அரசு அனைத்து உதவிகளையும் அவர்களுக்குச் செய்து தரும்.

41—

நார் தயாரிக்கும் தொழிற்சாலை

வினா எண் 2555—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி, உடுமலை பகுதிகளில் தேங்காய் மட்டையில் இருந்து நார் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பல்வேறு காரணங்களால் நலிவடைவதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

பொள்ளாச்சி, உடுமலை பகுதிகளில் தேங்காய் மட்டையிலிருந்து நார் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பல்வேறு காரணங்களால் நலிவடைவதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

42—

கால்நடை மருத்துவ நிலையம்

வினா எண் 2849—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, வெங்கப்பாக்கம் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவ நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், வெங்கப்பாக்கம் கிராமத்தில் புதிதாகக் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2011 ஜனவரி 13

43—

ஊக்குவித்தல்

வினா எண் 2943—திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறு தொழில்களை ஊக்குவிக்க சிறப்புத் திட்டம் அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஏற்கெனவே பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் அண்ணா மறுமலர்ச்சி புதிய திட்டம் ஆகிய இரண்டு திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

44—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 3127—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் நகரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் நகரில் கால்நடை எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும் அருகிலுள்ள கால்நடை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதாலும் புதிதாகக் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த வாய்ப்பு இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

45—

மருத்துவ ஊர்தி

வினா எண் 3389—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை, கால்நடைத் துறைக்கு நடமாடும் மருத்துவ ஊர்தி புதிதாக வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை நடமாடும் கால்நடை மருந்தகத்திற்கு *2006-2007*ஆம் ஆண்டு பகுதி திட்டத்தின்கீழ் புதிய ஊர்தி வாங்கப்பட்டு தற்போது நல்லமுறையில் இயங்கி வருகிறது.

46—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 4397—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், புக்கம்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், புக்கம்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[2011 ஜனவரி 13

47—

கால்நடை மருத்துவர் நியமனம்

வினா எண் 4399—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, பல்பாக்கி கால்நடை மருத்துவமனைக்கு கால்நடை மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தாரமங்கலம் தொகுதி, பல்பாக்கி கிராமத்தில் கால்நடை நிலையங்கள் எதுவும் ஏற்படுத்தப்படாத நிலையில் கால்நடை மருத்துவரை நியமிக்க வாய்ப்பில்லை.

48—

கடன் உதவி

வினா எண் 4520—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்து விட்டு வேலையில்லா இளைஞர்களுக்கு சிறு தொழில் துவங்க ஊரக கடன்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்கள் சிறு தொழில் செய்ய ஊரக கடனுதவிகள் பாரத பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2011 ஜனவரி 13]

49—

தொழிற்சாலை

வினா எண் 4773—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில், பாமாலின் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதியில், பாமாலின் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

50—

கால்நடை இறைச்சிகள்

வினா எண் 4845—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை பொள்ளாச்சி பகுதியிலிருந்து கேரளா மாநிலத்திற்குக் கால்நடைகளை இறைச்சிக்காக (மாமிசம்) லாரிகளில் கொண்டு செல்லப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை பொள்ளாச்சி பகுதியிலிருந்து விவசாயிகளுக்குப் பயன்படாத வயதான கழிவு செய்யப்பட்ட கால்நடைகள் மட்டுமே கேரள மாநிலத்திற்கு லாரிகள்மூலம் கொண்டு செல்லப்படுகிறது.

(ஆ) கேள்வி எழாது.

51—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 4966—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி பாப்பம்பாடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி பாப்பம்பாடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

52—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 4980—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதி, நெடுங்கல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நெடுங்கல் கிராமத்தில் கால்நடை

2011 ஜனவரி 13]

எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், அருகிலுள்ள கால்நடை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதாலும் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

53—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 4981—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதி, தளிப்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

காவேரிப்பட்டினம் தொகுதி, தளிப்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

54—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 5167—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, கம்பம்பட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கம்பம்பட்டியில் உள்ள கால்நடைகளுக்கு அருகில் உள்ள

காலநடை மருத்துவ நிலையங்கள்மூலமாக அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதாலும், கால்நடை மருத்துவ நிலையம் செயல்படாத நிலையில் நேரடியாக மருத்துவமனை துவக்க வாய்ப்பு இல்லை.

55—

பழுது பார்த்தல்

வினா எண் 5194—திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு ஊரகத் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

12-வது வட்டம், திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள மாநகராட்சி மருத்துவமனையைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ரூ.8,25,331/- செலவில் மருத்துவமனை பழுது பார்க்கப்பட்டு 20-11-2006 அன்று பணி முடிவுபெற்று தற்போது செயல்பட்டு வருகிறது.

56—

தரம் உயர்த்துதல்

வினா எண் 6323—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் உள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் உள்ள கால்நடை மருந்தகம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு, 10-9-1997 முதல் கால்நடை மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

57—

தொழிற்சாலைகள்

வினா எண் 6436—திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாங்குநேரி தொகுதியில் வாழை மரத்தின் காய் கனிகள்மூலம் திட, திரவ உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் துவங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

நாங்குநேரி தொகுதியில் வாழை மரத்தின் காய் கனிகள்மூலம் திட, திரவ உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை. அத்தகைய தொழிற்சாலை அமைக்க தனியார் முன்வரும்பட்சத்தில், தேவையான ஆலோசனைகளை மாவட்டத் தொழில் மையம் அளிக்கும்.

58—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 6752—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் திருவெம்பலாபுரம் கிராமத்திற்குப் பகுதி நேர கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், திருவெம்பலாபுரம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் தற்போது தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

59—

கால்நடை பார்வை நிலையம்

வினா எண் 6753—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் திருவம்பலாபுரத்தில் கால்நடை பார்வை நிலையம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருநெல்வேலி மாவட்டத்தினை சார்ந்த திருவம்பலாபுரம் கிராமத்தில் 16-12-2006 முதல் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதால், புதியதாக அங்கு பார்வை கால்நடைக் கிளை நிலையம் துவக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2011 ஜனவரி 13]

60—

தரம் உயர்த்துதல்

வினா எண் 6754—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், சமூகரெங்கபுரத்தில் பகுதி நேரக் கால்நடை மருத்துவப் பார்வை மையம் செயல்படுவதை முழுநேரக் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

61—

தரம் உயர்த்துதல்

வினா எண் 6757—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் ஆவரைகுளத்தில் இயங்கி வரும் பகுதி நேர கால்நடைப் பார்வை நிலையத்தைத் தரம் உயர்த்தி முழுநேர மருந்தகமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பகுதிநேர கால்நடை பார்வை நிலையத்தினை தரம் உயர்த்தி முழுநேர மருந்தகமாக மாற்ற செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை. மேலும் திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் வட்டம் ஆவரைகுளம் கிராமத்தில் பார்வைக் கிளை நிலையம் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் பகுதிநேரக் கிளை நிலையம் எதுவும் செயல்படவில்லை.

(ஆ) கேள்வி எழாது.

62—

கால்நடைப் பார்வை மையம்

வினா எண் 6758—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பழவூரில் இயங்கி வந்த கால்நடைப் பார்வை மையம் மீண்டும் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

63—

கால்நடை மருந்தகம்

வினா எண் 6902—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

மேட்டுப்பாளையம் தொகுதி, மங்கலங்கரை, புதூரில் கால்நடை மருந்தகம் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மேட்டுப்பாளையம் தொகுதி, மங்கலங்கரை புதூரில் புதியதாக கால்நடை மருந்தகம் துவக்க தற்போது அரசு தரப்பில் செயற்குறிப்பு இல்லை.

64—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 6984—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, சேத்பட் ஊராட்சி ஒன்றியம், செம்மிமங்கலம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேத்பட் ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று கால்நடை மருந்தகங்களும், ஐந்து கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும் செம்மிமங்கலம் கிராமத்திற்கு அருகாமையில் முடையூர் கால்நடை மருந்தகம் 5.கி.மீ. தொலைவிலும், கொம்மனந்தல், பாடகம் ஆகிய கால்நடை கிளை நிலையங்கள் 5 கி.மீ. தொலைவிலும் செயல்பட்டு வருவதாலும், கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும் மேற்படி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

[2011 ஜனவரி 13

65—

விரிவாக்கம்

வினா எண் 7606—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, அரசூர் அரசு கோழிப் பண்ணையை விரிவாக்கம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) அரசு ஆணை எண் 86, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் (டாப்கோ) துறை, நாள் 19-4-1999-ன்படி, டாப்கோ நிறுவனம் மூடப்பட்டு, பல்லடம் தொகுதியில் உள்ள அரசூர் கோழிப்பண்ணை, கால்நடை பராமரிப்புத் துறை வசம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது கோழிப்பண்ணையை விரிவாக்கம் செய்ய திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

66—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 8076—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, வீராணம்பாளையத்திற்குப் புதியதாகக் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வீராணம்பாளையத்தில் புதியதாகக் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

67—

கால்நடை ஆராய்ச்சி மையம்

வினா எண் 8610—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரையில் கால்நடை ஆராய்ச்சி மையம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மானாமதுரையில் கால்நடை ஆராய்ச்சி மையம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

68—

துணை கால்நடை மருந்தகம்

வினா எண் 8629—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, சாலையூர், தின்னப்பட்டி கிராமத்தில் துணைக் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, சாலையூர், தின்னப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

69—

கால்நடை துணை மருந்தகம்

வினா எண் 853—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, உடுக்கம்பாளையம் கிராமத்தில் கால்நடை துணை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, உடுக்கம்பாளையம் கிராமத்தில் ஏற்கெனவே கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

70—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 8723—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) திருவண்ணாமலை மாவட்டம், எலத்தூர் கிராமத்தில் புதிய பகுதிநேர கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பகுதிநேர கால்நடை மருத்துவமனையைத் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

71—

தரம் உயர்த்துதல்

வினா எண் 8724—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தைச் சீர்செய்து, மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்போது வாய்ப்பில்லை. நபார்டு XIV திட்டத்தில் கலசப்பாக்கம் கால்நடை மருந்தகத்தைச் சீர்செய்வது குறித்து பரிசீலிக்கப்படுகிறது.

72—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 8724—திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம் பகுதியில் அரசு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கரூர் மாவட்டம், தோகைமலை ஒன்றியத்தைச் சார்ந்த தோகைமலை ஒன்றியப் பகுதியில், புதியதாகக் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

73—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 8821—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோயில் ஒன்றியம், கஞ்சா நகரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியம், கஞ்சா நகரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

2011 ஜனவரி 13]

74—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 8895—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, எல்லப்பாளையம் புதூரில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஈரோடு மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த எல்லப்பாளையம் புதூரில் பீலிக்காம்பட்டி கால்நடை கிளை நிலையம் மற்றும் கொடுவாய் கால்நடை மருந்தகம் (திருப்பூர் கோட்டம் / கோவை மாவட்டம்) ஆகியவற்றின்மூலம் மேற்கொள்ளப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதால், புதிதாகக் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

75—

சிறிய தொழிற்சாலைகள்

வினா எண் 9238—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் சிறிய தொழிற்சாலைகள் தொடங்க அரசு முன்வருமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கலசபாக்கம் தொகுதியில் சிறிய தொழிற்சாலைகளைத் துவக்கும் பிரேரணை அரசிடம் இல்லை.

76—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 9916—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, மஞ்சமேடு கிராமத்திற்கு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, மஞ்சமேடு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

77—

பட்டுக்கூடுகள் விற்பனை மையம்

வினா எண் 11360—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டையில் பட்டுக் கூடுகள் விற்பனை மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) உடுமலைப்பேட்டையில் பட்டு நூற்பாளர்கள் போதுமான அளவு இல்லாத காரணத்தால், பட்டுக் கூடுகள் விற்பனை மையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இந்த வினா எழவில்லை.

78—

பட்டு விற்பனை மையம்

வினா எண் 11525—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் பட்டு விற்பனை மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) கோவை மாவட்ட விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பட்டுக் கூடுகள் விற்பனை செய்ய அரசு பட்டுக் கூடு அங்காடி பட்டு நூல் உற்பத்திக்கான பட்டுக் கூடுகள் பரிவர்த்தனைக்கு ஒன்றும், விதை உற்பத்திக்கான பட்டுக் கூடுகள் பரிவர்த்தனைக்கு ஒன்றும் ஆக இரண்டு அங்காடிகள் அரசால் கோவையில் செயல்படுத்தப்படுகின்றன.

(ஆ) வினா எழாது.

79—

கால்நடைக் கிளை மருந்தகம்

வினா எண் 11552—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

மொரப்பூர் தொகுதி, ஆர். கோபிநாதம்பட்டியில் கால்நடை கிளை மருந்தகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம் மொரப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஆர். கோபிநாதம்பட்டி கிராமத்தில் புதிதாகக் கால்நடைக் கிளை நிலையம் ஏற்படுத்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

80—

சிறுதொழில் தொடங்குதல்

வினா எண் 12343—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் பாலில் இருந்து உருவாக்கப்படும் பால்கோவா, சாக்லேட், கேக் போன்ற உற்பத்தி செய்யும் சிறுதொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் அரசு சார்பில் பாலில் இருந்து பால்கோவா, சாக்லேட், கேக் போன்ற பொருள்கள் தயாரிக்கும் சிறு தொழில் தொடங்கும் கருத்துரு அரசிடம் இல்லை.

81—

கைவினைப் பொருட்கள் விற்பனை மையம்

வினா எண் 12458—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

மாமல்லபுரத்தில் கைவினைப்பொருட்கள் விற்பனை மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

கைவினைஞர்களின் உற்பத்திப் பொருட்களை நேரடியாக வாடிக்கையாளருக்கு விற்பனை செய்ய வகை செய்யும் முறையில் நகர்ப்புற நிரந்தரக் கண்காட்சித் திடல் ஒன்று மாமல்லபுரத்தில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான துவக்கப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. கற்சிற்பங்களை உற்பத்தி செய்யும் பூம்புகார் கற்சிற்ப உற்பத்தி நிலையம் ஒன்றும் மாமல்லபுரத்தில் செயல்பட்டு வருகின்றது.

82—

தக்காளிக்கூழ்

வினா எண் 14540—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதியில் தக்காளி அதிக அளவு விளைவதால், தக்காளிக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

தளி சட்டமன்றத் தொகுதியில் தக்காளிக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலையைத் துவக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

83—

தொழிற்பேட்டை

வினா எண் 14542—திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(அ) நெல்லிக்குப்பம் நகரம், அண்ணா கிராமம் ஒன்றியத்தில் சிட்கோமூலம் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெல்லிக்குப்பம் நகரம், அண்ணா கிராமம் ஒன்றியத்தில் சிட்கோமூலம் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசிலனையில் இல்லை.

84—

பட்டுக்கூடு விற்பனை மையம்

வினா எண் 13518—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் பட்டுக் கூடு விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை பகுதியில் பட்டுக் கூடு விற்பனை மையம் அமைப்பதற்குத் தேவையான மல்பரி தோட்டங்கள் தற்போது இல்லை. எனவே, தற்போது வால்பாறை பகுதியில் பட்டுக் கூடு விற்பனை மையம் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழாது.

85—

எசன்ஸ் தொழிற்சாலை

வினா எண் 15723—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) வால்பாறை தொகுதி, சோலையாறு அணைக்கருகில் வெனிலாக்காய்மூலம் எசன்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி, சோலையாறு அணைக்கருகில் வெனிலாக்காய்மூலம் எசன்ஸ் தயாரிக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

86—

கால்நடை மருந்தகம்

வினா எண் 16004—திரு. வெ. கண்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓலைப்பட்டி ஊராட்சி, வாலதாசம்பட்டியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வாலதாசம்பட்டி கிராமத்தில் புதியதாகக் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

87—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 16005—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கருகல்வாடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த கருகல்வாடி கிராமத்தில் புதியதாகக் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

88—

இலவச மருத்துவ முகாம்

வினா எண் 16136—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் இலவச மருத்துவ முகாம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வால்பாறை அப்பர் டிவிஷன் எஸ்டேட் பகுதியில் 25-5-2008 அன்று கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம் நடத்தப்பட்டது.

89—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 16164—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை கீழ்ப்பகுதி, ஆழியாரில் கால்நடை மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை கீழ்ப்பகுதி ஆழியாரில் கால்நடை மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

90—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 16745—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

91—

தொழிற்சாலை

வினா எண் 17060—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கோட்டூர் பகுதியில் சிட்கோமூலம் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் கோட்டூர் பகுதியில் சிட்கோமூலம் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

92—

நுண் உயிர் உரம்

வினா எண் 17079—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) வால்பாறை தொகுதி, அங்கலகுறிச்சியில் நெல் உமியில் இருந்து நுண் உயிர் உரம் தயார் செய்யும் சிறு தொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): வால்பாறை தொகுதி, அங்கலகுறிச்சியில் நெல் உமியில் இருந்து நுண்ணுயிர் உரம் தயார் செய்யும் தொழில் தொடங்க அரசுக்கு உத்தேசம் ஏதும் இல்லை. தனியார் இத்தகைய தொழில் அலகு அமைக்க முன்வந்தால் அதற்கான ஆலோசனைகளை மாவட்டத் தொழில் மையம் வழங்கும்.

93—

சாஸ் தொழிற்சாலை

வினா எண் 17106—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர், தருமபுரி மாவட்டங்களில் புளி மதிப்பூட்டப்பட்ட சாஸ், இனிப்பு சாஸ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) திருவாரூர், தருமபுரி மாவட்டங்களில் புளி மதிப்பூட்டப்பட்ட சாஸ், இனிப்பு சாஸ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழாது.

[2011 ஜனவரி 13

94—

கால்நடை துணை மருத்துவமனை

வினா எண் 17465—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம் ஊராட்சியில் கால்நடை துணை மருத்துவமனையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, பொள்ளாச்சி வட்டத்தினை சார்ந்த பிலிசின்னம்பாளையம் கிராமம் சமத்தூர் கால்நடை மருந்தகத்திற்கு 2 கி.மீ. தொலைவில் உள்ளதால் பிலிசின்னம்பாளையம் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

95—

ஆய்வுக் கூடம்

வினா எண் 17480—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கால்நடைகளின் நீலநாக்கு நோயைக் கண்டறிய ஆய்வுக் கூடம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் கால்நடைகளின் நீலநாக்கு நோயைக் கண்டறிய ஆய்வுக் கூடம் ஏற்படுத்த அரசுத் தரப்பில் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

96—

ஜவ்வரிசி தொழிற்சாலை

வினா எண் 18080—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அங்கலகுறிச்சி ஊராட்சியில் ஜவ்வரிசி தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி, அங்கலகுறிச்சி ஊராட்சியில் ஜவ்வரிசி தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

97—

உணவுப் பொருள் தொழிற்சாலை

வினா எண் 18081—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் நகரில் மரவள்ளி கிழங்குமூலம் உணவுப்பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் நகரில் மரவள்ளி கிழங்குமூலம் உணவுப்பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

98—

மேம்படுத்துதல்

வினா எண் 18456—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுத் தொழிலை மேம்படுத்த சிறப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தமிழகத்தில் வெண்பட்டுப்புழு வளர்ப்பு (பைவோல்டைன்) தொழிலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. அரசு வித்தகங்களின்மூலமாக அதிகமான அளவில் விவசாயிகள் பயனடையும் வகையில் அதிகமாக முட்டை உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. பட்டு நூற்புக்காக 50 புதிய காட்டேஜ் பேசின்கள் அமைப்பதற்காக 2006-2007- இல் அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது. கிரியா ஊக்கித் திட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டங்கள், பகுதி-2 திட்டங்கள் முதலான திட்டங்களின் மூலமாகத் தொடர்ந்து கூடுதலாக விவசாயிகளுக்கு மானியம் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2011 ஜனவரி 13]

99—

கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 18619—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சியில் கயிறு திரிக்கும் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சியில் கயிறு திரிக்கும் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஏதும் இல்லை.

100—

தொழிற்பேட்டை

வினா எண் 18781—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் தொழிலாளர் குடியிருப்புடன் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தொழிலாளர் குடியிருப்புடன் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் தற்போது இல்லை. தொழிலாளர் குடியிருப்புடன் கட்டப்பட்ட தொழிற்பேட்டைகளில் 10% தொழிலாளர்களே

குடியிருப்பதாலும், வெளியில் உள்ளவர்கள் தங்குவதாலும் கண்டியன் கோவில் பகுதியிலும் தொழிலாளர் குடியிருப்பு திட்டத்தின் ஒரு கூறாக இல்லை.

101—

உதவி கால்நடை மருத்துவமனை

வினா எண் 19206—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சாவடிபாளையத்திலுள்ள உதவி கால்நடை மருத்துவமனையை மீண்டும் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) இல்லை

(ஆ) கேள்வி எழாது.

102—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 19469—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி வடரெங்கம் கிராமத்தில் கால்நடை மருத்துவக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, வடரெங்கம் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

103—

கால்நடை துணை மருந்தகம்

வினா எண் 19489—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரியில் கால்நடை துணை மருந்தகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எட்ப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரியில் கால்நடை துணை மருந்தகம் அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

104—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 19490—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வெள்ளையம்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வெள்ளையம்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை துவக்க வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

105—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 19491—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம், அ. புதூர், நடுவனேரி என்.காட்டூர் ஆகிய ஊர்களில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம், அ. புதூர், நடுவனேரி, என். காட்டூர் ஆகிய ஊர்களில் கால்நடை மருத்துவமனை துவங்க தற்போது வாய்ப்பில்லை. மேலும் ஏகாபுரம், அ. புதூர் கிராமத்தில் ஏற்கெனவே கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

106—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 19540—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) பவானி தொகுதி, பூனாட்சி கிராமம், செம்படாபாளையத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பவானி தொகுதி, பூனாட்சி கிராமம், செம்படாபாளையத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

107—

பட்டு நெசவு சிட்கோ

வினா எண் 20615—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில், 'பட்டு நெசவு சிட்கோ' அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்தில் 'பட்டு நெசவு சிட்கோ' அமைத்துக் கொடுக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

108—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 20649—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், செலவடை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் கோட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் ஆளுகைக்குட்பட்ட செலவடை கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை துவக்க அரசுத் தரப்பில் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

109—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 20850—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, இராமரெட்டிப்பட்டி ஊராட்சி, புள்ளகாளிப்பட்டி மாரியம்மன் கோவில் அருகே கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தாரமங்கலம் தொகுதி, இராமரெட்டிப்பட்டி ஊராட்சி, புள்ளகாளிப்பட்டி மாரியம்மன் கோவில் அருகே கால்நடை மருந்தகம் அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

2011 ஜனவரி 13]

110—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 20746—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

முகையூர் தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

111—

மருத்துவ முகாம்

வினா எண் 20822—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் தொண்டு நிறுவனங்கள்மூலம் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ முகாம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தொண்டு நிறுவனங்கள் நடத்தும் இலவச கால்நடை மருத்துவ முகாம்கள் குறித்து துறை அலுவலர்களுக்குத் தெரிவிக்கப் படுமானால் கால்நடை பராமரிப்புத் துறை அம்முகாம்களில் பங்கேற்று முழு ஒத்துழைப்பு அளிக்கும்.

112—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 21057—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

113—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 22137—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, பானாபுரம் ஊராட்சி பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, பானாபுரம் ஊராட்சி பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

114—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 22490—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

115—

கட்டட வசதி

வினா எண் 22919—திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் கால்நடை மருத்துவமனைக்குப் புதிதாகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் கால்நடை மருந்தகம் அரசு சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருவதால், இதற்கு புதிய கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

116—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 22933—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, கொண்டகர அள்ளி ஊராட்சி, மணலூர் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, கொண்டகர அள்ளி ஊராட்சி, மணலூர் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

117—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 22935—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, பழைய தருமபுரியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, பழைய தருமபுரியில் புதிய கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

2011 ஜனவரி 13]

118—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 22955—திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதி, தேவராயபுரம் கிராமம், நல்ல கவுண்டன் பாளையத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தேவராயபுரம் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு கிணத்துக்கடவு கால்நடை மருந்தகம் மற்றும் கோயில்பாளையம் கால்நடைக் கிளை நிலையத்தின்மூலம் தற்போது சிகிச்சைப் பணிகள் அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி நிலையங்கள்மூலம் அளிக்கப்பட்டுவரும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாக கருதப்படுகிறது. மேலும், தேவராயபுரம் கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், அரசு விதிமுறைகளின்படி கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

119—

தரம் உயர்த்துதல்

வினா எண் 23003—திரு. என். நன்மாறன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, அனுப்பானடி, கீரைத்துறை கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு தொகுதியைச் சார்ந்த தெற்கு வாசல் (கீரைத்துறை) கால்நடைக் கிளை நிலையத்தை தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையமாக மாற்ற, தேர்வு செய்யப்பட்டு, அரசாணை எண் 20, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள் 26-2-2009 ஆணையின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

120—

கால்நடை மருந்துவமனை

வினா எண் 23019—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதி, அருவிக்கரை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருவட்டாறு தொகுதி, அருவிக்கரை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்க வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

121—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 23020—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

(அ) திருவட்டாறு தொகுதி, திற்பரப்பு பேரூராட்சியில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த திற்பரப்பு பேரூராட்சியில் புதியதாகக் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

122—

ஜாம் தொழிற்சாலை

வினா எண் 23373—திரு. மா. ராஜசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2005-2006 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்திற்கு "2053-01-053-AJ" நில வருவாய் தலைப்பின்கீழ் கட்டட பணிகளுக்கு ரூ.53 இலட்சம் மின் பணிகளுக்கு ரூ.9.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று 2006-2007 ஆம் ஆண்டிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், ஏற்கெனவே அரசு கட்டடத்தில் இயங்கி வரும் கட்டடங்களுக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசின் நிதிநிலைக்கேற்ப வருங்காலத்தில் உரிய நேரத்தில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2011 ஜனவரி 13

380—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 54—திரு. ஆர். சாமி: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியில் வீடுகட்ட நிலமில்லாத ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

381—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 59—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, ஏரிப்பாளையம் பகுதியில் புறம்போக்கு பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, ஏரிப்பாளையம் பகுதியில் க.ச.1348 நத்தம் புறம்போக்காகும். இதன் அருகில் கோயில் இருப்பதால், கோயில் விழாக் காலங்களில் இடையூறு ஏற்படும் எனக் கருதி, பொதுமக்கள், இங்கு குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க ஆட்சேபணை தெரிவித்துள்ளனர். எனவே, மாற்று இடம் தேர்வு செய்து ஆக்கிரமிப்பாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

382—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 60—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, நெடுஞ்செழியன் காலனி பகுதியில் மரத்தின்கீழ் வீடுகட்டி குடியிருக்கும் நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) ஆம். (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கணக்கம்பாளையம் கிராமம், க.ச. 200 வண்டிப்பாதை புறம்போக்கில், புளிய மரங்களுக்குகீழ் சுமார் 6 நபர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் விவசாயக் கூலிகள். இவர்களுக்கு இப்பகுதியினை நத்தமாக மாற்றி வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

383—

பத்திரம்

வினா எண் 169—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை அண்ணா குடியிருப்பு பகுதியில் தவணைத் தொகை முழுவதும் கட்டி முடித்தவர்களுக்கு பத்திரங்களைத் திருப்பித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை அண்ணா குடியிருப்பு பகுதியில் உள்ள மொத்தம் 224 வீடுகளில் தவணைத் தொகை முழுவதும் செலுத்திய 78 பேர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கப்பட்டுவிட்டது. மீதி உள்ளவர்கள் அவர்க்ள் செலுத்த வேண்டிய முழுத் தொகையை செலுத்தியதும் விற்பனைப் பத்திரம் வழங்கப்படும்.

384—

கட்டட வசதி

வினா எண் 206—திரு. ஆர். சாமி: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூரில் இயங்கி வரும் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் மற்றும் வருவாய் ஆய்வாளர் அலுவலகக் கட்டடங்கள் பழுதடைந்துள்ளதால் அவற்றிற்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

மேலூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், மதுரை மாவட்டத்தில் இன்னும் கட்டித்தரப்பட வேண்டிய 74 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடங்களில் ஒன்றாகும். 2003-2004 ஆம் நிதியாண்டிற்கு பிறகு ஊரக வளர்ச்சி முகமைக்கு நிதி ஒதுக்கீடு வரப்பெறாததால் கட்டடம் கட்டும் பணி நடைபெறவில்லை. இனிவரும் காலங்களில் நிதி ஒதுக்கீடு பெற்று உரிய நேரத்தில் மேலூர் கிராம நிர்வாக அலுவலளிர் அலுவலகக் கட்டடம் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படும். வருவாய் ஆய்வாளர் குடியிருப்பை பழுது பார்ப்பதற்கு 2006-2007 ஆம் நிதியாண்டில வருவாய் குடியிருப்புகளுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் நிதியில் மேற்கூரை மற்றும் சுற்றுச் சுவர் சரி செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

2011 ஜனவரி 13]

385—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 294—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஓய்வு பெறும்போது இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) பட்டா வழங்க இயலாது.

(ஆ) இவ்வினா எழாது.

386—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 377—திரு. சி. கோவிந்தசாமி: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பூர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதியில் புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களில் தகுதியுள்ளோருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

திருப்பூர் மற்றும் சுற்றுப்புறங்களில் 2005-2006 ஆம் ஆண்டில் வீட்டுமனைப் பட்டா வழங்கும் சிறப்புத் திட்டத்தின்கீழ் 581 நபர்களுக்கு இலவசமாக வீட்டுமனைப் பட்டா

[2011 ஜனவரி 13

வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஊரகப் பகுதியில் நத்தம் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்களுக்கு நடப்பு ஆண்டு 341 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. திருப்பூர் நகராட்சிப் பகுதியில் நொய்யலாறு, ஓடை, மந்தை போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் நபர்களுக்கு அரசு விதிமுறைகளின்படி, இங்கு பட்டா வழங்க இயலாத சூழ்நிலை உள்ளது. இவர்களுக்கு மாற்று இடம் தேர்வு செய்து பட்டா வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், வண்டிப்பாதை போன்ற இதர ஆட்சேபணையற்ற புறம்போக்குகளில் வீடு கட்டி குடியிருந்து வரும் நபர்களுக்கு நிலமாற்றம் செய்து பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

387—

தவணை முறை

வினா எண் 423—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகில் மலையாண்டி பட்டினத்தில் விற்கப்படாமல் உள்ள வீட்டுவசதி வாரியத்தின் குடியிருப்புகளை குறைந்த விலையில் நீண்ட கால தவணை முறையில் விற்பனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) உடுமலைப்பேட்டை அருகே மலையாண்டி பட்டினத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் எந்தக் குடியிருப்பு திட்டமும் குறைந்த விலையில் நீண்ட கால தவணைமுறையில் செயல்படுத்தப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

388—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 599—திரு. கோ. அரி: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், மணவாள நகர் பகுதியில் எம்.ஜி.ஆர். நகர் மற்றும் அண்ணாநகர் பகுதிகளில் வசிக்கும் 2000 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம் மணவாள நகர், எம்.ஜி.ஆர். நகர் மற்றும் அண்ணாநகர் பகுதியில் வசிக்கும் இடம் புல எண் 387 வெங்கத்தூர் ஏரி என்பதாகும். மேலும் இப்பகுதி சென்னை புறநகர் எல்லைக்கு உட்பட்டு (Belt Area) அமைந்துள்ளதால் இதில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு தடையாணை உள்ளது என்பதாலும், ஏரி புறம்போக்கு (நீர் நிலை புறம்போக்கு) என்பதாலும், மேற்படி பகுதியில் வீட்டுமனைப் பட்டா கோரும் நபர்களுக்கு பட்டா வழங்க சாத்தியமில்லை.

389—

நிதி உதவி

வினா எண் 618—திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவித் திட்டத்தின்கீழ் தமிழகத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஆசிய வளர்ச்சி வங்கி கீழ்க்கண்ட திட்டங்களுக்காக ரூ.629.64 கோடி நிதியுதவி/கடன் அளித்துள்ளது.

- *பாதிக்கப்பட்ட ஏழைக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரங்களை ஏற்படுத்தித் தர ரூ.218.96 கோடியும்;*
- *பாலங்கள் அமைப்பதற்கு ரூ.39.86 கோடியும்;*
- *நாகப்பட்டினம், கடலூர் துறைமுகங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களில் 12 மீன்பிடி துறைமுகங்களைக் கட்டுவதற்கு ரூ.77.53 கோடியும்;*
- *குடிநீர் மற்றும் வடிகால் வசதிகளுக்கு ரூ.100 கோடியும்;*
- *நகராட்சி பகுதிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளை பழுது பார்ப்பதற்கு ரூ.35 கோடியும்;*
- *கிராமப் பகுதிகளில் அடிப்படை வசதிகளுக்கு ரூ.143.45 கோடியும்;*
- *ஆய்வுகள், ஆராய்ச்சிகள் மற்றும் அலுவலகம் சார்ந்த செலவுகளுக்காக ரூ.14.06 கோடியும்;*

ஆக மொத்தம் ரூ.629.64 கோடி கடன்/நிதியுதவி அளித்துள்ளது.

390—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 626—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை நகராட்சி, கோமதி நகர் பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கணக்கம்பாளையம் கிராமம், க.ச.201/எ நிலமானது வண்டிப்பாதையாகும். இந்த இடத்தில் 12 நபர்கள் ஓட்டு வீடுகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். எனவே இந்நிலத்தினை நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து இங்கு குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

391—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 627—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை நகராட்சி, முனீர் நகர் பகுதியில் விடுபட்ட, மனைகளுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கணக்கம்பாளையம் கிராமம், க.ச.126, 127 இல் உள்ள நிலங்கள் வண்டிப்பாதை புறம்போக்காகும். இந்த இடத்தில் 10 நபர்கள் ஓட்டு வீடுகள் கட்டி 20 வருடங்களாக குடியிருந்து வருகின்றனர். எனவே இந்நிலத்தினை நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து

[2011 ஜனவரி 13

இங்கு குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

392—

சாதிச் சான்றிதழ்

வினா எண் 719—திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை, மலைவாழ் மக்களுக்கு தடையின்றி சாதிச் சான்றிதழ் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் தடையின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

393—

வெள்ள நிவாரண உதவி

வினா எண் 748—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை தொகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரண உதவித் தொகை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

சிவகங்கை தொகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டுவிட்டது.

2011 ஜனவரி 13]

394—

நல வாரியம்

வினா எண் 750—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்கெனவே செயல்பட்டு வந்த விவசாய தொழிலாளர்களுக்கான நல வாரியம் மீண்டும் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தினை மீண்டும் புதுப்பித்து செயல்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ஒப்புதல் பெற்றவுடன் நடைமுறைப்படுத்தப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

395—

தாலுகா மாற்றம்

வினா எண் 751—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதியில் காளையார் கோவில் தாலுகாவாக மாற்றம் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

396—

ஊழல் முறைகேடுகள்

வினா எண் 843—திரு. எஸ்.கே. வேதரத்தினம்: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமி நிவாரணப் பணிகளில் பெருமளவில் ஊழல் முறைகேடுகள் நடந்துள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமி நிவாரணப் பணிகளில் முறைகேடுகள் நடந்ததாக தெரிய வந்து சம்பந்தப்பட்ட வட்டாட்சியர், துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வர், கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட 20 அலுவலர்கள் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17(பி)-ன்கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ளது. கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்புத் துறையினரின் விசாரணைக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. தவறு செய்தவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள்.

2011 ஜனவரி 13]

397—

சான்றிதழ்கள்

வினா எண் 868—திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாதி, பிறப்பு, இறப்பு, வாரிசு சான்றிதழ்களைப் பெறுவதற்கு நடைமுறைகள் எளிதாக்கப்பட்டு காலதாமதத்தை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

சான்றிதழ்கள் கோரி பெறப்படும் மனுக்களின்மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு உடனடியாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

398—

இயற்கை பேரழிவு

வினா எண் 869—திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இயற்கை பேரழிவுகளை சமாளிக்க மாநில மற்றும் மாவட்ட அளவில் பேரழிவு நிர்வாக அமைப்புகள் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

ஆம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

399—

தொழிலாளர் நலவாரியம்

வினா எண் 889—திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் வாரியத்தின் செயல்பாடு எப்போது தொடங்கும்?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தினை மீண்டும் புதுப்பித்து செயல்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ஒப்புதல் பெற்றவுடன் நடைமுறைப்படுத்தப்படும்.

400—

வெள்ள நிவாரணம்

வினா எண் 1017—திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நன்னிலம் தொகுதியில் அண்மையில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வெள்ள நிவாரணம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

நன்னிலம் தொகுதியில் அண்மையில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டு விட்டது.

401—

திருத்தியமைத்தல்

வினா எண் 1041—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம நிர்வாக அமைப்பு முறையை திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பணியாளர் மற்றும் செலவு சீராய்வு ஆணையத்தின் (SERC) பரிந்துரையில், கிராம நிர்வாக அமைப்பிலுள்ள குறைபாடுகளை களைந்து செலவினங்களை குறைக்கும் பொருட்டு, கிராம நிர்வாக அமைப்பில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் குறித்து பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

402—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 1048—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

சீர்காழி தொகுதி, தருமபுரம் ஆதினத்திற்கு சொந்தமான நிலத்தில் குடியிருப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

தருமபுரம் ஆதினத்திற்குச் சொந்தமான நிலத்தின் குத்தகை உரிமைதாரர் குடியிருப்புக்கு அனுமதி தரப்படுவதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு தொடுத்துள்ளார். எனவே, இவ்வழக்கின் முடிவு தெரிந்த பின்னரே அரசு இதில் நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

403—

விவசாய தொழிலாளர்களின் நலன்

வினா எண் 1554—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம் கலைக்கப்பட்டுவிட்டதால் பாதிக்கப்பட்டுள்ள விவசாய தொழிலாளர்களின் நலனைப் பேணிக் காக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தினை மீண்டும் ஏற்படுத்தி விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் நலனுக்கென பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தப்படுவதற்கான தனிச் சட்டம் இயற்றப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

404—

சாதிச் சான்றிதழ்

வினா எண் 1982—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் வாழும் பழங்குடியினத்தைச் சார்ந்த குழுவன் இன மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டத்தில் குழுவன் என சாதிச் சான்று வழங்கக் கோரி யாரும் மனு செய்யவில்லை.

405—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2168—திரு. பெ.சு. விஜயகுமார் : மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் ஏழைகள் வீடு கட்டி வாழ்ந்து வரும் வீட்டு மனைகளுக்கு (குளத்து புறம்போக்கு, பஞ்சாயத்து புறம்போக்கு, ஏரி புறம்போக்கு) பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

[2011 ஜனவரி 13

406—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2180—செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திண்டுக்கல் நகரில் உள்ள 50 ஆண்டுகளுக்கு மேலான குடியிருப்பு வீடுகளுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்ட தலைநகரிலிருந்து 16 கி.மீ. சுற்றளவிற்குள் வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு தடையாணை அமலில் உள்ளதால், திண்டுக்கல் நகரில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

407—

நிலப் பட்டா

வினா எண் 2693—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பேரூர் தொகுதி, சிரபாளையம் ஊராட்சியில் வாழும் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோருக்கு நிலப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

பேரூர் தொகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

408—

நிலப் பட்டா

வினா எண் 2694—திரு. சு.ப. வேலுமணி : *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பேரூர் தொகுதி, அரிசிபாளையம் ஊராட்சியில் வாழும் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோருக்கு நிலப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

பேரூர் தொகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

409—

நிலப் பட்டா

வினா எண் 2695—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பேரூர் தொகுதி, நாச்சிபாளையம் ஊராட்சியில் வசிக்கும் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோருக்கு நிலப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

பேரூர் தொகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

410—

நிலப் பட்டா

வினா எண் 2696—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, மயிலேரிபாளையம் ஊராட்சியில் வாழும் பிற்பட்டோர் மிகவும் பிற்பட்டோருக்கு நிலப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

பேரூர் தொகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை.

411—

நிலப் பட்டா

வினா எண் 2697—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, வழுக்குப்பாறை ஊராட்சியில் வசிக்கும் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோருக்கு நிலப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

பேரூர் தொகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

412—

நிலப் பட்டா

வினா எண் 2698—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பேரூர் தொகுதி, மாலுமச்சம்பட்டி ஊராட்சியில் வசிக்கும் மிகவும் பிற்பட்டோருக்கும் நிலப்பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

பேரூர் தொகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

413—

நிலப் பட்டா

வினா எண் 2699—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, பாலத்துறை ஊராட்சியில் வசிக்கும் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு நிலப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (தெற்கு) வட்டம், பாலத்துறை கிராமம் க.ச.77/4பி2பி புலத்தில் 3.05 ஏக்கர் பேச்சுவார்த்தைமூலம் நில எடுப்பு செய்து, 120 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா

வழங்கப்பட்டுள்ளது. இது தவிர தற்போது பாலத்துறை கிராமத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா கேட்டு விண்ணப்பங்கள் நிலுவையில் இல்லை.

414—

நிலப் பட்டா

வினா எண் 2761—திரு. க.ப. வேலுமணி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதியில் வாழும் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோருக்கு நிலப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

பேரூர் தொகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

415—

நிலப் பட்டா

வினா எண் 2762—திரு. க.ப. வேலுமணி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, பாலத்துறை ஊராட்சியில் வசிக்கும் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோருக்கு நிலப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

பேரூர் தொகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

416—

நிலப் பட்டா

வினா எண் 2763—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பேரூர் தொகுதி, பிச்சனூர் ஊராட்சியில் வசிக்கும் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோருக்கு நிலப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

பேரூர் தொகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

417—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2890—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் கம்பாலப்பட்டி ஊராட்சி, பாரிமடையூர் கிராமத்திற்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கம்பாலப்பட்டி கிராமம், பாரிமடையூரில் க.ச. 390 நெடுஞ்சாலை புறம்போக்கு நிலத்தில் 1. திருமதி காளியம்மாள், 2. திரு. தங்கவேலு ஆகியோரும், க.ச. 400 நெடுஞ்சாலை புறம்போக்கு நிலத்தில் திரு. ராமராஜ்

மற்றும் திரு. மலையாளசாமி ஆகியோரும் குடியிருந்து வருகின்றனர். மேற்கண்ட 4 நபர்களும் குடியிருக்கும் இடம் நெடுஞ்சாலைப் புறம்போக்காக இருப்பதால், அரசு விதிமுறைகளின்படி இவ்விடத்தில் பட்டா வழங்க இயலாது.

418—

சான்று வழங்குதல்

வினா எண் 2936—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, வல்லம் ஊராட்சி இருளர் மக்களுக்குப் பழங்குடியினர் சான்று வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

இருளர் மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள்மீது உரிய விசாரணை செய்து தகுதியுடையவர்களுக்குப் பழங்குடியினர் சான்று வழங்கப்படும்.

419—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2938—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு வட்டம், இருங்குன்றம் பள்ளியில் உள்ள மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

இல்லை.

2011 ஜனவரி 13]

420—

வீட்டுமனைப்பட்டா

வினா எண் 2941—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டத்தில் உள்ள பட்டரைக்கழனி, வேட்டக்காரநத்தம் பகுதியில் வாழும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

திருக்கழுக்குன்றம் வட்டம், நெரும்பூர், மதுரா பட்டரைக்கழனி மற்றும் வேட்டைக்காரநத்தம் ஆகிய பகுதிகளில் குடியிருக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

421—

புதிய மாவட்டம்

வினா எண் 2955—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

இல்லை.

422—

பட்டா

வினா எண் 2958—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, முருக்குத்திப்பள்ளம் பகுதியில் வசிக்கும் மக்களில் பட்டா கிடைக்காதவர்களுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

423—

பட்டா

வினா எண் 2959—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, பெரியார் நகர் பகுதியில் விடுபட்ட பட்டாக்களை வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

424—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2960—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

உடுமலைப்பேட்டை தொகுதி, யு.எஸ்.எஸ். காலனி மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை கிராமம் மற்றும் நகரம், க.ச.64/2 என்பது 7.78 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலம் 'ஆதி திராவிடர் நத்தம்' என வகைப்பாடு செய்யப்பட்டு, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

425—

பட்டா

வினா எண் 2964—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, பாரதியார் காலனி, தாராபுரம் ரோடு பகுதியில் வசிக்கும் 25 நபர்களுக்குப் பட்டா வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம் மற்றும் நகரம் தாராபுரம் ரோட்டில், க.ச.114/சி2ஏ வண்டிப்பாதை புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்துள்ள 22 நபர்கள் அனைவரும் வசதியானவர்கள் என்பதால், இந்நபர்கள் நிலக் கிரையம் செலுத்தும் பட்சத்தில், வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

426—

பட்டா

வினா எண் 2967—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, சுகுணாபுரம் கிழக்கு, காந்திநகர் பகுதியில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

இப்பகுதி வீடுகட்ட தகுதியற்ற காட்டுப்பகுதியாக உள்ளதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

427—

நிலப் பட்டா

வினா எண் 2982—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி குறிச்சிகுளம் ஏரி மக்களுக்கு நிரந்தர நிலப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

கோவை மாவட்டம், கோவை தெற்கு வட்டம், குறிச்சி கிராமம், புல எண் 131/1 எனும் குளமாகும். நீர்நிலைகள் ஆக்கிரமிப்புகளை ஊக்குவிக்கக் கூடாது என அரசு உத்தரவிட்டுள்ளதால் அந்த நிலங்களுக்கு நிலப் பட்டா வழங்க இயலாது.

2011 ஜனவரி 13]

428—

மாற்று இடம்

வினா எண் 3329—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை அதிக அளவு இடவசதியுடன் வேறிடத்திற்கு மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

இல்லை.

429—

சமகூலி

வினா எண் 3550—திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயத் தொழிலாளர்களில் பெண்களுக்குக் குறைந்த கூலி வழங்கப்படுவதை நிறுத்தி சமகூலி வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

8-7-2005 ஆம் நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் *(ஜே.2)* துறை, அரசு ஆணை *(2டி)* எண் *24*-இல் விவசாயத்

[2011 ஜனவரி 13

தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலி திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஆண் விவசாயத் தொழிலாளர்களைக் காட்டிலும் பெண் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு கூலி 67 காசுகள் அதிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

430—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 3738—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி கிராமம், டாக்டர் அம்பேத்கர் நகரில் குடியிருக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி கிராமத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கர் நகரில் வசித்து வரும் மக்களுக்கு ஓமலூர் தனி வட்டாட்சியர் (ஆ.தி.ந.) அவார்டு எண் 1/99-2000 நாள் 20-10-1999 உத்தரவின்படி 110 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதில் 15 நபர்கள் வீடுகட்டி வசித்துவருகிறார்கள்.

431—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 3742—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

(அ) ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், காங்கியானூரில் அங்கம்மா நகரில் குடியிருக்கும் 15 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-இல் வெளியிடப்பட்டுள்ளது.

432—

பட்டா

வினா எண் 3743—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, பாமன்கரடு பகுதியில் வீடுகட்டிக் குடியிருக்கும் மக்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-இல் வெளியிடப்பட்டுள்ளது.

433—

சாதிச் சான்று

வினா எண் 3751—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், முள்ளிசெட்டிப்பட்டி கிராமத்தில் ரெட்டி (கஞ்சம்) வகுப்பினருக்குச் சாதிச் சான்று வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம் முள்ளிசெட்டிப்பட்டி கிராமத்தில் ரெட்டி (கஞ்சம்) சாதிச் சான்று வழங்கக் கோரி 17 மனுக்கள் வரப்பெற்றன. மனுதார்களை ரெட்டி (கஞ்சம்) வகுப்பினைச் சார்ந்தவர்கள் என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. மேற்குறித்த 17 மனுதாரர்கள் முற்பட்ட வகுப்பினைச் சேர்ந்த ரெட்டியார் சாதியைச் சேர்ந்தவர்கள் என விசாரணையில் தெரிய வந்ததால் ரெட்டி (கஞ்சம்) என சாதிச் சான்று வழங்கக் கோரிய 17 மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன.

2011 ஜனவரி 13]

434—

பட்டா

வினா எண் 4778—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை நகராட்சி ஆனைவிழுந்தான்குளத்தெரு, பூமியாகுளம் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட ஆனைவிழுந்தான்குளம் நகர புல எண் 138பி/9-ல் அமைந்துள்ளது. இப்புலம் கிராமக் கணக்கின்படி ஆனைவிழுந்தான்குளம் என்ற அரசு நீர்நிலைப் புறம்போக்கில் உள்ளது. நீர்நிலைப் புறம்போக்குகள் ஆட்சேபகரமான புறம்போக்கு என்பதால் பூமியாகுளம் பகுதிகளில் வசிக்கும் ஆக்ரமதாரர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

435—

பட்டா

வினா எண் 4779—திரு. என். ரெங்கராஜன்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகராட்சி, நாடியம்மன் கோவில் சாலையில் மேல்புறம் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு

மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

436—

பணி நிரந்தரம்

வினா எண் 4787—திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயானங்களில் வேலை செய்யும் வெட்டியார்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு அரசு ஊழியர்களாக்கப்படுவார்களா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

மயானங்களில் பணிபுரியும் வெட்டியார்கள் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் பணிபுரியவில்லை.

437—

பட்டா

வினா எண் 4797—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், காவேரிபூம்பட்டினம் ஊராட்சி, தீப்பாய்ந்தாள் அம்மன் தெருவில் வசிப்பவர்களுக்கு மனைப்பிரிவுப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

438—

கட்டட வசதி

வினா எண் 4802—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

தரங்கம்பாடி வட்ட அலுவலகம் புதிதாகக் கட்டப்பட வேண்டும் என்பதால் வரும் ஆண்டுகளில் பகுதி-II திட்டத்தில் சேர்க்கப்பட்டு அரசு நிதிநிலைக்கேற்ப எடுத்துக்கொள்ளப்பட்டு உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2011 ஜனவரி 13

439—

பட்டா

வினா எண் 5048—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுங்குன்றம் வட்டம், சோகண்டி கிராமத்தில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 854, வருவாய் துறை, நாள் 30-12-2006-இல் அரசு புறம்போக்கு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் வீட்டுமனைப் பட்டா வழங்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

440—

ஆக்கிரமிப்பு

வினா எண் 5050—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் நகரத்திற்குட்பட்ட மயானத்தில் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் கிராமம் புல எண் 244/3 விஸ்தீர்ணம் 2.16.0 எக்டேர் மயானப் புறம்போக்கு நிலமாகும். இந்த மயானப் புறம்போக்கு நிலம் அனைத்து சமூகத்தினரின் மயானமாகப் பயன்பாட்டில் உள்ளது. தற்போது நிலையான ஆக்கிரமிப்புகள் ஏதும் இந்த மயானப் புறம்போக்கில் இல்லை.

441—

தனிமாவட்டம்

வினா எண் 5058—திரு. விஜயகாந்த்: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து விருத்தாசலத்தை தலைமையிடமாகக் கொண்டு தனிமாவட்டமாகத் தொடங்க செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

442—

நிவாரணம்

வினா எண் 5068—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், பூம்புகார் மீனவர் பகுதியைச் சார்ந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட விசைப்படகு மீனவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், பூம்புகார் மீனவர் பகுதியைச் சார்ந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட விசைப்படகு மீனவர்களின் பகுதி சேதமடைந்த 39 விசைப்படகுகளுக்கும், முழுமையாக சேதமடைந்த 3 விசைப்படகுகளுக்கும் அரசாணைப்படி சுனாமி நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது.

443—

நிவாரணம்

வினா எண் 5070—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், சுனாமியின்போது பாதிக்கப்பட்டு அரசால் அங்கீகரிக்கப்பட்ட இறால் பண்ணைகளுக்கு உரிய நிவாரணம் வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியின்போது பாதிக்கப்பட்டு உரிமம் பெற்ற 60 இறால் பண்ணைகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ. 51,25,388 வழங்கப்பட்டுள்ளது.

2011 ஜனவரி 13]

444—

வீட்டு வசதி

வினா எண் 5563—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் மாவட்டம் வேப்பஞ்சேரி, கீழத்தெருவில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு நிரந்தர வீடு கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தரங்கம்பாடி வட்டம், பிள்ளைபெருமாநல்லூர் கிராமம், வேப்பஞ்சேரி உட்கிராமம், கீழத்தெரு என்பது (HTL) கடல் அலைப்பகுதியிலிருந்து 1000 மீட்டருக்கு அப்பால் அமைந்த கிராமமாகும். மேற்கண்ட கிராமத்தில் சுனாமி நீர் உட்புகுந்து குடியிருப்புகளுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாததாலும், சுனாமி நீர் மேற்கண்ட குடியிருப்புகளுக்குச் செல்லாததாலும், மேலும் கடல் உச்ச மட்டத்திலிருந்து 1000 மீட்டருக்குமேல் அதிகப்படியான தூரத்தில் இருப்பதாலும் நிரந்தர வீடு வழங்க வாய்ப்பில்லை.

445—

வீட்டு வசதி

வினா எண் 5564—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் மாவட்டம், காலமநல்லூர் ஊராட்சி, குமாரக்குடியில் வசிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு நிரந்தர வீடு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தரங்கம்பாடி வட்டம், காலமநல்லூர் வருவாய் கிராமம், குமாரக்குடி உட்கிராமம் என்பது (HTL) கடல் அலைப்பகுதியிலிருந்து 1500 மீட்டருக்கு அப்பால் அமைந்த கிராமமாகும். மேற்கண்ட கிராமத்தில் சுனாமி நீர் உட்புகுந்து குடியிருப்புகளுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாததாலும், சுனாமி நீர் மேற்கண்ட குடியிருப்புகளுக்குச் செல்லாததாலும், மேலும், கடல் உச்ச மட்டத்திலிருந்து 1500 மீட்டருக்கு மேல் அதிகப்படியான தூரத்தில் இருப்பதாலும் நிரந்தர வீடு வழங்க வாய்ப்பில்லை.

446—

இனச் சான்றிதழ்

வினா எண் 5599—திரு. சி. கோவிந்தசாமி: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் பழங்குடி இன மக்களுக்கு இனச் சான்றிதழ் உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

சான்றிதழ்கள் பெறப்படும் மனுக்களின்மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு உடனடியாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

447—

ஆக்கிரமிப்பு

வினா எண் 5607—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

(அ) சேலம் மாவட்டம், ஆரியக்கவுண்டம்பட்டி ஊராட்சி, சித்தர்கோவில் முதல் இரும்பாலைகேட் வரை தார்சாலையின் இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போழுது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், ஆரியக்கவுண்டம்பட்டி ஊராட்சி, சித்தர்கோவில் முதல் இரும்பாலைகேட் வரை செல்லும் தென்வடல் சாலையில் ஆரியக்கவுண்டம்பட்டி கிராமத்தில் மொத்தம் 25 ஆக்கிரமிப்புகள் உழவடை செய்தும், வீடுகட்டியும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. அவற்றை அகற்ற உடன் நடவடிக்கை எடுக்க சேலம் வட்டாட்சியர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

(ஆ) எழவில்லை.

448—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 5635—திரு. வை. காவேரி: *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

எடப்பாடி தொகுதி, காட்டுவளவு தாவாந்தெருவில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

எடப்பாடி வட்டம், ஆவணி பேரூர், மேல்முகம் கிராமம் மற்றும் எடப்பாடி கிராமத்திற்குட்பட்ட தாவாந்தெரு காட்டுவளவு பகுதி எடப்பாடி நகராட்சி எல்லைக்குள் வருவதால் இப்பகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு விதிகளில் இடமில்லை.

[2011 ஜனவரி 13

449—

தனி வட்டம்

வினா எண் 5863—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தை கிருஷ்ணகிரியிலிருந்து பிரித்து தனி வட்டமாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) இயலாது.

(ஆ) வினா எழாது.

450—

ஆக்கிரமிப்பு

வினா எண் 6056—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், வட்டக்காடு பகுதியில் நீர்பிடிப்பு ஏரிகளில் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, தாத்தையங்கர்பட்டி கிராமம், வட்டக்காடு பகுதி புல எண் 15/1, 15/2, 40 ஆகியவை நீர்நிலை புறம்போக்கு நிலங்களாகும். இவற்றில் புல எண் 40-ல்

2011 ஜனவரி 13]

உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன. புல எண் 15/1, 15/2 ஆகியவைகளில் ஆக்கிரமிப்பை அகற்றக்கூடாது என்று திரு. ரமேஷ் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு முடிந்த பிறகு நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

451—

பட்டா

வினா எண் 6067—திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, எஸ்எஸ். குளம் ஒன்றியம், இடிகரை மற்றும் வெள்ளலூர் பேரூராட்சிகளில் உள்ள அனைத்து கிராமங்களிலும் வசிக்கும் மக்களுக்கு இலவசப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

(ஆ) வினா எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றம் வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

452—

பட்டா

வினா எண் 6472—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, அணமந்தப்பட்டினம் கிராமத்தில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை நாள் 30-12-2006-இல் அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

453—

பட்டா

வினா எண் 6498—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, கணக்கம்பாளையம் ஊராட்சி, ஜெ.ஜெ. நகர் பகுதியில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

454—

புதிய வீடுகள்

வினா எண் 7268—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2011 ஜனவரி 13]

செங்கல்பட்டு தொகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு புதிய வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவக் குப்பங்களுக்கு தனியார் தொண்டு நிறுவனங்கள்மூலம் தளம் போடப்பட்ட வீடுகளாகக் கட்டப்பட்டு வருகிறது.

455—

நிவாரணம்

வினா எண் 7271—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, நாதாள்படுகை, திட்டப்படுகை, சந்தப்படுகை ஆகிய பகுதிகளில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சேதமடைந்த வாழை மற்றும் பிற பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, நாதாள்படுகை, திட்டப்படுகை, சந்தப்படுகை ஆகிய பகுதிகளில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சேதமடைந்த வாழை மற்றும் பிற பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட்டுவிட்டது.

456—

பட்டா

வினா எண் 8281—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

காங்கேயம் தொகுதி, முத்துராண்டிபாளையம், பனியம்பள்ளி பஞ்சாயத்தில் குடியிருக்கும் நபர்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி, குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

457—

பட்டா

வினா எண் 9285—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, கல்லாபுரம் கிராமத்தில் 35 வீடுகளுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

இது வனத் துறை நிலமாதலால் இங்கு பட்டா வழங்க இயலாது.

2011 ஜனவரி 13]

458—

பழங்குடியினர் சான்றிதழ்

வினா எண் 9637—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

நாகப்பட்டினம் மாவட்டத்தில் காட்டுநாயக்கர் இனத்திற்கு பழங்குடியினர் சான்றிதழ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டத்திலுள்ள சுற்றுலாத் தலமான கல்லணை-தோகூர் கிராமங்களை குளோபல் கிராமமாக அறிவிக்க எவ்விதத் திட்டமும் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

30—

திருக்கோயில் பணி

வினா எண் 442—திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதி, வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயிலுக்கு சுற்றுலாத் துறைமூலம் பணிகள் நடைபெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

தேனி தொகுதி, வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயிலுக்கு சுற்றுலாத் துறைமூலம் பணிகள் மேற்கொள்வது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து பரிசீலிக்கப்படும்.

31—

சுற்றுலா மையம்

வினா எண் 651—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை அருகில் உள்ள லகூன் அலையாத்தியை சுற்றுலா மையமாக்க அரசு முன்வருமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

தற்பொழுது சுற்றுலாத் துறையின்மூலம் எந்தவொரு பகுதியையும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அறிவிப்பதில்லை. ஆனால் அங்கு சுற்றுலாத் தலத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, அப்பகுதியின் முக்கியத்துவம், ஆகியவற்றை கருத்தில் கொண்டு உணவகம், சாலை வசதி, தங்கும் வசதி, போக்குவரத்து, நிலச்சீரமைப்பு, வாகன நிறுத்துமிடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, கழிப்பிட வசதி, போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்த சுற்றுலாத் துறையின் மூலம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு கோடியக்கரை முத்துப்பேட்டை மற்றும் பிச்சாவரம் முதலிய பகுதிகளில் சுற்றுச் சூழல் மேம்பாட்டிற்காக 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.368.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டத்தில் முத்துப்பேட்டை மேம்பாட்டிற்கு மட்டும் ரூ.51.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

32—

வசதிகள்

வினா எண் 929—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், திற்பரப்பு அருவி பகுதியில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு அனைத்து வசதிகளையும் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

திற்பரப்பு நீர்வீழ்ச்சியின் பகுதியில் உள்ள பயணியர் ஓய்வு விடுதியை மேம்படுத்தவும், வாகன நிறுமித்துமிடம் அமைக்கவும் ரூ.20.00 இலட்சம் 2005-2006 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

33—

சுற்றுலாத் தலம்

வினா எண் 1089—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்தில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவிலை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் உள்ள எந்தவொரு பகுதியையும் சுற்றுலாத் தலமாக இத்துறையின்மூலம் அறிவிப்பதில்லை. ஆனால் அங்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த நிதி வழங்கப்படுகிறது. 2005-2006—ம் நிதியாண்டில் தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.20.15 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

34—

சுற்றுலாத் தலம்

வினா எண் 1718—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானலை சர்வதேச அளவில் சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொடைக்கானலை மிக சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்ற அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

2011 ஜனவரி 13]

35—

தங்கும் அறைகள் மற்றும் சிற்றுண்டி விடுதி

வினா எண் 1793—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் ஒரு படகு இல்லம் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு தங்கும் அறைகள் மற்றும் சிற்றுண்டி விடுதி ஒன்றையும் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் படகு குழாம் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு தங்கும் அறைகள் மற்றும் சிற்றுண்டி விடுதி கட்டும் திட்டம் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் தற்போது இல்லை. எனினும் இத்திட்டங்கள் நிறைவேற்ற தனியார் முன்வருவார்களேயானால் அவர்களை சுற்றுலாத் துறை ஊக்குவிக்கும்.

36—

சுற்றுலா மைய அபிவிருத்தி

வினா எண் 1936—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல், பழனி, அமராவதி அணை, திருமூர்த்தி அணை, ஆழியார் அணை வழியாக வால்பாறை ஆகிய பகுதிகளை தமிழக அரசின் சுற்றுலா மையங்களாக அபிவிருத்தி செய்யும் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்தவொரு பகுதியையும் சுற்றுலா மையமாக அறிவிப்பதில்லை. எனினும் சுற்றுலாப் பகுதிகளுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் நன்மையைக் கருதி அங்கு அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை ஏற்படுத்தி வருகிறது. அதன் அடிப்படையில் ஒருங்கிணைந்த சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொடைக்கானலுக்கு மைய அரசால் ரூ.470.19 இலட்சம் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. மேலும் கொடைக்கானலில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அறுபடை வீடுகள் சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழனியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த ரூ.123.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது. அமராவதி அணை, திருமூர்த்தி அணை, ஆழியார், வால்பாறை அணை ஆகிய இடங்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

37—

மேம்படுத்துதல்

வினா எண் 2140—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திற்கு சுற்றுலா மையங்களை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களை மைய மற்றும் மாநில அரசு நிதியுதவியின்மூலம் மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி, மாமல்லபுரம், வேலூர் ஆகிய இடங்களை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இடத்திற்கு ரூ.5.00 கோடி வரை செலவிடப்படும்.

2011 ஜனவரி 13]

மேலும் சுற்றுலாப் பகுதியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.8.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தை செயல்படுத்த மாவட்ட ஆட்சியர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள சுற்றுலாப் பகுதிகளை மேம்படுத்த உரிய கருத்துருக்களை அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். இத்திட்டத்தின்படி மொத்த மதிப்பீட்டில் சரிபாதியை சுற்றுலாத் துறை ஏற்றுக் கொள்ளும். எஞ்சிய தொகை மாவட்ட நிர்வாகம் ஏற்கவேண்டும்.

38—

மோசடி

வினா எண் 5063—திரு. என். நன்மாறன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியம் பகுதியில் விவசாயிகள் நிலங்களை மோசடியாக சிலர் விற்பனை செய்ததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியம் பகுதியில் உள்ள விவசாய நிலங்கள், நில உரிமையாளர்கள் அல்லாத போலி நபர்களால் கிரயம் செய்து கொடுக்கப்பட்டுள்ள விபரம் அரசின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

(ஆ) இம்மோசடி தொடர்பாக இராமநாதபுரம் மாவட்ட குற்றப்பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, சம்மந்தப்பட்ட முகவர்கள் கைது செய்யப்பட்டு வழக்கு நீதிமன்றத்தின் நடவடிக்கையில் உள்ளது. போலி ஆவணப் பதிவில் சம்பந்தப்பட்ட மற்றும் கண்காணிக்கத் தவறிய துறை அலுவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

39—

சுற்றுலா மையம்

வினா எண் 6451—திருமதி டி. யசோதா: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீபெரும்புதூரிலுள்ள ராஜீவ் காந்தி நினைவாலயத்தை சுற்றுலா மையமாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

ஸ்ரீபெரும்புதூரிலுள்ள ராஜீவ் காந்தி நினைவாலயத்தை சுற்றுலா மையமாக்க சுற்றுலாத் துறையிடம் எவ்வித செயற்குறிப்பும் தற்போது இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலா மையம் என அறிவிப்பதில்லை. எனினும், சுற்றுலாப் பகுதிகளுக்கு வரும் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, அங்கு அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை ஏற்படுத்தி வருகிறது. 2006-2007-ம் ஆண்டில் சென்னை-காஞ்சிபுரம்-மாமல்லபுரம் சுற்றுலா வழித்தட (Tourist Circuit) மேம்பாட்டிற்கு நிதி உதவி தர மைய அரசு முன்வந்துள்ளது. எனவே, இந்த வழித் தடத்தில் இடம் பெறும் அனைத்து சுற்றுலாப் பகுதிகளின் மேம்பாட்டிற்கு உரிய கருத்துருக்கள் அனுப்பும்படி திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். இதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் மேம்பாடும் இடம் பெறும்.

40—

தார்ச் சாலை

வினா எண் 9803—திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதியில் உள்ள அய்யர்மலை அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் கிரிவலப் பாதையை சுற்றுலாத் துறை நிதியின்மூலம் தார் சாலையாக மாற்றித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2003-2004-ம் நிதியாண்டில் சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் திட்டத்தின்கீழ் கரூர் மாவட்டம் அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயிலில் பொதுக் கழிப்பிடம் கட்டுதல், வெண்ணெய் மலை அருள்மிகு பாலசுப்பிரமணிய சாமி கோயிலில் பொதுக் கழிப்பிடம், திருமுக்கூடலூர் அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயிலில் பொதுக் கழிப்பிடம் கட்ட மொத்த திட்ட மதிப்பீடான ரூ.9.00 இலட்சத்தில் ரூ.2.25 இலட்சம் சுற்றுலாத் துறையின் பங்காக வழங்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் அவர்களால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

2004-2005-ம் நிதியாண்டில் சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் திட்டத்தின்கீழ் கரூர் மாவட்டம் அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயிலில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள மொத்த திட்ட மதிப்பீடான ரூ.32.40 இலட்சத்தில், சுற்றுலாத் துறையின் பங்காக ரூ.16.20 இலட்சம் வழங்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் அவர்களால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

		ரூ. இலட்சத்தில்
1.	அய்யர்மலை இரத்தினகிரீஸ்வரர் கோயில் முன்புறம் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல்	2.56
2.	அய்யர்மலை இரத்தினகிரீஸ்வரர் கோயிலிலிருந்து வடக்கு பகுதி (தாளியாம்பட்டி செல்லும் தார் சாலை வரை) சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல்	7.59
3.	அய்யர்மலை இரத்தினகிரீஸ்வரர் கோயிலிலிருந்து தெற்கு பகுதி தார் சாலை அமைத்தல்	5.05
4.	அய்ய்ர்மலை இரத்தினகிரீஸ்வரர் கோயிலிலிருந்து தெற்கு பகுதி செல்லும் மலையடிவார பாதையில் தரைமட்ட பாலம் அமைத்தல்	1.00

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

5.	அய்யர்மலை ரெத்தினகிரீஸ்வரர் கோயில் 384 மீ. முதல் 884 மீ. வரை தார்ச் சாலை அமைத்தல்	16.20
	மொத்தம்	32.40

2006—2007 நிதியாண்டில் கரூர் மாவட்டத்தில் உள்ள முக்கியமான சுற்றுலாப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த இத்துறையின் மூலம் கருத்துரு கோரப்பட்டுள்ளது. எனவே, கரூர் மாவட்டம் குளித்தலை தொகுதியிலுள்ள அய்யர்மலை அருள்மிகு ரெத்தினகிரீஸ்வரர் கிரிவலப் பாதையை சுற்றுலாத் துறை நிதியின் மூலம் தார்ச் சாலை இத்துறையின் நிதி ஆதாரத்தைப் பொறுத்து பரிசீலிக்கப்படும்.

41—

அலுவலகம் இடக்குதல்

வினா எண் 11187—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதிக்குட்பட்ட பூம்புகார் மேளையூர் பகுதியில் இயங்கி வந்த சார்பதிவாளர் அலுவலகத்தை அதே இடத்தில் இயக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் சார்பதிவாளர் அலுவலகத்தை மீண்டும் இயக்கிட சாத்தியக்கூறு இல்லாததால் அதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

42—

பதிவு செய்தல்

வினா எண் 17069—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆவண எழுத்தராக உரிமம் பெற்றவர்கள் 10 ஆண்டுக்கு ஒரு முறை மறு பதிவு செய்ய அரசு அனுமதி அளிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

ஆவண எழுத்தர் உரிம விதி எண் 12-க்கு 10-9-98-ல் திருத்தம் கொண்டுவரப்பட்டு அதன்படி ஐந்தாண்டுக்கு ஒருமுறை உரிமத்தைப் புதுப்பித்துக் கொள்ளலாம் என அரசு அனுமதி அளித்துள்ளது. இந்நிலையில் உரிமம் புதுப்பித்தல் காலத்தினை மேலும் நீட்டிப்பதால் அரசுக்கு வரும் வருவாயில் இழப்பு ஏற்படும். மேலும், உரிய காலத்தில் புதுப்பிக்காமல் பல ஆவண எழுத்தர்கள் ஆவணம் எழுதி வருவதைக் கண்காணிப்பதற்கான வாய்ப்பும் இல்லாமல் போய்விடும். எனவே, ஆவண எழுத்தராக உரிமம் பெற்றவர் 10 ஆண்டிற்கு ஒருமுறை மறு பதிவு செய்ய அனுமதி அளிக்க இயலாது.

43—

ஓட்டல் தமிழ்நாடு

வினா எண் 20374—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரிலுள்ள ஓட்டல் தமிழ்நாடு செயல்படாமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு தனியாருக்கு குத்தகை விடப்பட்டு 16-12-2007 முதல் தனியாரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

44—

கம்பிவட சிருந்து வசதி

வினா எண் 22076—திருமதி ஏ. லீமா ரோஸ்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவட்டாறு தொகுதி, கோதையார் கீழ்தாங்கலிருந்து கோதையார் மேல்தாங்கலுக்கு கம்பிவட சிருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவட்டாறு தொகுதி, கோதையார் கீழ் தாங்கலிருந்து கோதையார் மேல்தாங்கலுக்கு கம்பிவட சிருந்து வசதி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

45—

சுற்றுலாத்தலமாக்குதல்

வினா எண் 23531 —திரு. ரா. வரதராஜன்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருதுநகரிலுள்ள காமராஜர் நினைவிடத்தை சுற்றுலாத் தலமாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத்தலமாக அறிவிப்பதில்லை.

46—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 24150—திருமதி எஸ். தேன்மொழி: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நிலக்கோட்டை தொகுதி, பிள்ளையார் நத்தம் ஊராட்சி வைகை ஆற்றிலுள்ள பேரணையை சுற்றுலாத்தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. தலத்திற்கு வருகை தரும் பயணிகளை கருத்திற்கொண்டு தேவையான அடிப்படை வசதிகளை மட்டுமே சுற்றுலாத் துறைமூலம் செய்து வருகிறது.

நிலக்கோட்டை தொகுதி, பிள்ளையார் நத்தம் ஊராட்சி வைகை ஆற்றிலுள்ள பேரணையை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

47—

பூங்கா அமைத்தல்

வினா எண் 24163—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் நவீன விளையாட்டு சாதனங்களுடன் பொழுது போக்கு பூங்கா அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2008-2009 ஆம் ஆண்டில் பூம்புகார் சுற்றுலாப் பகுதியை மிகப்பெரிய அளவில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரித்து அனுப்பும்படி மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

48—

கட்டடம் திறத்தல்

வினா எண் 24616—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையில் யாத்ரி நிவாஸ் கட்டடத்தை திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையில் யாத்ரி நிவாஸ் கட்டடம் 14-4-2007 அன்று சுற்றுலாப் பயணிகளின் உபயோகத்திற்காக முறைப்படி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

49—

விலையைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 25020—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வீட்டுமனை விலை அதிகமாக உயர்ந்துள்ளதைக் கட்டுப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

வழிகாட்டி மதிப்பு பதிவேடு, ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்வதற்கு ஏதுவாகத் தயாரிக்கப்பட்ட ஒன்றாகும். வீட்டுமனையின் விலை, வாங்குபவர் விற்பவர்கள் பேரத்தில் அமைகிறது. எனவே, மனைகள் வாங்குபவர்களும் விற்பவர்களும் நிர்ணயிக்கும் விலையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசுக்கு இல்லை.

50—

கட்டட வசதி

வினா எண் 26330—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பத்திரப்பதிவுத் துறை அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

51—

பூங்கா அமைத்தல்

வினா எண் 26530—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

ஓமலூர் தொகுதி சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் வேலூர் கோட்டை மாரியம்மன் கோயில் அருகில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை கருத்தில்கொண்டு, இத்தலத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை செய்து வருகிறது.

ஓமலூர் கோட்டை மாரியம்மன் கோயில் அருகில் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

52—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 26811—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருமலை அருள்மிகு மலைக்கொழுந்தீஸ்வரர் கோயிலை சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருமலை அருள்மிகு மலைக்கொழுந்தீஸ்வரர் கோயிலை சுற்றுலாத் தலமாக்கிடும் செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

53—

சுற்றுலாத் தலத்தை புதுப்பித்தல்

வினா எண் 27777—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியம், சாத்தனூரிலுள்ள கல்மரத்தூண் சுற்றுலாத் தலத்தை புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வரகூர் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியம் சாத்தனூரிலுள்ள கல்மரத்தூண் தலத்தை மேம்பாடு செய்யும் திட்டப் பிரேரணை எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

54—

நவீனப்படுத்துதல்

வினா எண் 28036—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிச்சாவரத்தை சுற்றுலாத் தலமாக நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

பிச்சாவரம் சுரபுன்னைக் காடுகளுடன் கூடிய சிறந்த சுற்றுலாத் தலம். சுற்றுலாப் பயணிகள் கணிசமான வகையில் வருகை தருகின்றனர். இங்கு உல்லாசப் படகு சவாரி வசதி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வருகிறது. உணவகமும் இரண்டு தங்கும் அறைகளும் உள்ளன.

[2011 ஜனவரி 13

55—

சார்பதிவாளர் அலுவலகம்

வினா எண் 28532—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் முழுநேர சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

கொல்லிமலையில் முழுநேர சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க சாத்தியக்கூறு இல்லாததால், அதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

56—

படகு வசதி

வினா எண் 28367—திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் ஏரியில் படகு விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) கடலூர் மாவட்டம், வீராணம் ஏரியில் படகு விடுவது சம்பந்தமாக, எந்தவித செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

57—

சிறப்புப் பேருந்து

வினா எண் 28868—திரு. து. ரவிக்குமார்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காட்டுமன்னார் கோவில் தொகுதி, வீரநாராயணப் பெருமாள் கோயிலுக்கும் சிதம்பரம் நடராசர் கோயிலுக்கும் இடையே சுற்றுலாத் துறையின்மூலம் சிறப்புப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

காட்டுமன்னார் கோவில் தொகுதி, வீரநாராயணப் பெருமாள் கோயிலுக்கும் சிதம்பரம் நடராசர் கோயிலுக்கும் இடையே சுற்றுலாத் துறையின்மூலம் சிறப்புப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

58—

கட்டட வசதி

வினா எண் 30369—திரு. கோ. அரி: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், மணவாளநகர், பேரம்பாக்கம் பத்திரப்பதிவு அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என் சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், மணவாளநகர் மற்றும் பேரம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்டும் கருத்துரு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

59—

கட்டட வசதி

வினா எண் 31660—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, கடத்தூர், பாபிரெட்டிப்பட்டி பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என் சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

மொரப்பூர் தொகுதி, கடத்தூர், பாபிரெட்டிப்பட்டி சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

60—

கட்டட வசதி

வினா எண் 31695—திரு. அ. ராஜன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

விடை—

நாகர்கோவில் சார்பதிவாளர் அலுவலகம் என்பது தனியாக ஏதுமில்லை. அங்கு மாவட்டப் பதிவாளர் அலுவலகம்தான் இயங்கி வருகிறது. அவ்வலுவலகம் பொதுப் பணித் துறை வளாகத்தில் உள்ள அரசு கட்டடத்தில் இயங்கி வருவதால் தற்போது இந்தக் கேள்வி எழவில்லை.

2011 ஜனவரி 13]

61—

சுற்றுலாத்தலம்

வினா எண் 32892—திரு. வை. காவேரி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், பூலாம்பட்டியை சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. தலத்திற்கு வருகை தரும் பயணிகளை கருத்திற்கொண்டு தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறைமூலம் செய்து வருகிறது.

62—

உணவகம் விடுதி

வினா எண் 32907— திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோயில், வீரநாராயணப் பெருமாள் கோயிலின் அருகே சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் உணவகம் விடுதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

காட்டுமன்னார்கோயில், வீரநாராயணப் பெருமாள் கோயிலின் அருகே சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் உணவகம் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

63—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 33173—திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரி நாராயணன்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அச்சரபாக்கம் தொகுதி, வேடந்தாங்கலில் பறவைகள் சரணாலயத்தை உலகத் தரம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. தலத்திற்கு வருகை தரும் பயணிகளை கருத்திற்கொண்டு தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறைமூலம் செய்து வருகிறது.

64—

கட்டட வசதி

வினா எண் 33989— திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேன்கனிக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகம் இயங்கும் அரசு கட்டடத்திற்கு ரூ. 9.00 இலட்சம் செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 3-10-2007 முதல் மீண்டும் அக்கட்டடத்தில் மேற்படி சார்பதிவாளர் அலுவலகம் இயங்கி வருகிறது.

2011 ஜனவரி 13]

65—

கட்டட வசதி

வினா எண் 34124— திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்குக் விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

66—

கட்டட வசதி

வினா எண் 34160— திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி திருப்புவனம் பேரூராட்சி சார்பதிவாளர் அலுவலகம் 1-1-1897 முதல் அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி அரசு கட்டடம் தற்போது பராமரிப்புப்

பணிகள் மேற்கொள்ளப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது. எனவே, அவ்வலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

67—

சுற்றுலா மையமாக்குதல்

வினா எண் 34300— திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, ஊத்துக்கோட்டை வட்டம், பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில் பகுதியை சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை மூலம் செவ்வனே செய்து வருகிறது.

கும்மிடிப்பூண்டி தொகுதி, ஊத்துக்கோட்டை வட்டம் பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில் பகுதி குறித்த திட்டப் பிரேரணை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

68—

சுற்றுலா மையமாக்குதல்

வினா எண் 34974— திரு. செ. சின்னசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருங்காபுரி தொகுதி, நடுப்பட்டி இரயில்வே தொங்கு பாலத்தை சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலா இடங்கள் அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவம் மற்றும் அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அங்குத் தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகள் செய்து தருகிறது.

பருங்காபுரி தொகுதி, நடுப்பட்டி இரயில்வே தொங்கு பாலம் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரும் கருத்துரு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

69—

நவீனப்படுத்துதல்

வினா எண் 35045— திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதி, சிம்ஸ் பூங்காவை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குன்னூர் தொகுதி, சிம்ஸ் பூங்காவை நவீனப்படுத்துதல் குறித்து கருத்துரு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

70—

சாலை வசதி

வினா எண் 35046—திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதி, பக்காசூரன் மலைக்கு சாலை வசதி-டவர் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குன்னூர் தொகுதி, பக்காசூரன் மலைக்கு சாலை வசதி-டவர் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

71—

சீரமைப்பு

வினா எண் 35921—திரு. எ. ராஜன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவிலில் ஔவை சண்முகம் சாலையிலுள்ள செம்மான் குளத்தைச் சீரமைத்து படகுத்தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

நாகர்கோவிலில் ஔவை சண்முகம் சாலையில் உள்ள செம்மான் குளத்தில் படகு விடுவது சம்பந்தமாக எந்தவித செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

72—

சுற்றுலா மையமாக்குதல்

வினா எண் 36503—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறையை சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றுய பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை மூலம் செவ்வனே செய்து வருகிறது.

73—

அழகுபடுத்தல்

வினா எண் 36550—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, மாமல்லபுரம் கடற்கரையை அழகுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மாமல்லபுரம் மேம்பாட்டிற்காக இரண்டு கட்டங்களாக ரூபாய் 932.00 இலட்சம் (முதற்கட்ட பணிகளுக்கு ரூ.500 இலட்சம்,

இரண்டாம் கட்ட பணிகளுக்கு ரூ. 432.00 இலட்சம்) மைய அரசு வழங்கியுள்ளது.

முதற்கட்ட பணிகள் முடிக்கப்பட்டு, இரண்டாம் கட்ட பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

(ஆ) எழவில்லை.

74—

கட்டட வசதி

வினா எண் 37135—திரு. அ. ராஜன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில், வடசேரியில் பத்திரப்பதிவுத் துறை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

நாகர்கோவிலில் கன்னியாகுமரி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கென்று கட்டப்போகும் ஒருங்கிணைந்த வளாகக் கட்டடத்தில் வடசேரி சார்பதிவாளர் அலுவலகமும் இணைத்து இயங்கும் வகையில் கட்டடம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

75—

கட்டட வசதி

வினா எண் 37141—திரு. ந. கணபதி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, வானூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

வானூர் தொகுதி, வானூர் சார்பதிவாளர் அலுவலகம் ஏற்கெனவே அரசு கட்டடத்தில் இயங்கி வருவதால் புதிய கட்டடம் கட்டும் நிலை எழவில்லை.

76—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 37327—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு, திம்மராயன் கோட்டையை சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. தலத்திற்கு வருகை தரும் பயணிகளை கருத்திற்கொண்டு தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை மூலம் செய்து வருகிறது.

செங்கல்பட்டு திம்மராயன் கோட்டையை மேம்பாடு செய்வது குறித்த திட்டப் பிரேரணை எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

ஒலி, ஒளி காட்சி

வினா எண் 37604—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, மாமல்லபுரத்தில் ஒலி-ஒளிக் காட்சி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, மாமல்லபுரத்தில் ஒலி-ஒளிக் காட்சி ஏற்படுத்துதல் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

78—

பூங்கா அமைத்தல்

வினா எண் 37744—திரு லை. காவேரி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் செல்லியம்மன் கோயில் பகுதியில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. தலத்திற்கு வருகை தரும் பயணிகளை கருத்திற்கொண்டு, தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை மூலம் செய்து வருகிறது.

மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் செல்லியம்மன் கோயில் பகுதியில் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

79—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 40772—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு நகரை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. தலத்திற்கு வருகை தரும் பயணிகளை கருத்திற்கொண்டு தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை மூலம் செய்து வருகிறது.

திருச்செங்கோடு மேம்பாடு குறித்த பிரேரணை தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

80—

படகு போக்குவரத்து

வினா எண் 41925—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து மாமல்லபுரத்திற்குக் கடல் வழியாக படகு போக்குவரத்து துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து மாமல்லபுரத்திற்கு, கடல் வழியாக படகு போக்குவரத்து துவங்க சாத்தியக் கூறு இல்லை.

81—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 42298—திரு. வை. காவேரி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில் சுற்றுலாத்தலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சுற்றுலாத் துறை, எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை கருத்தில் கொண்டு, அத்தலத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை செய்து வருகிறது. எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியை மேம்படுத்தும் திட்டப் பிரேரணை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

82—

அலுவலகம் அமைத்தல்

வினா எண் 42572—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டியில் சார்பதிவாளர் அலுவலகம் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சேலம் (மேற்கு), ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டியில் புதியதாக சார்பதிவாளர் அலுவலகம் திறக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

83—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 43559—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, வல்லம் குடவரைக் கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. தலத்திற்கு வருகை தரும் பயணிகளை கருத்திற்கொண்டு தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை மூலம் செய்து வருகிறது.

செங்கல்பட்டு தொகுதி, வல்லம் குடவரை கோயில் மேம்பாடு செய்வது குறித்த திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

84—

பேருந்து வசதி

வினா எண் 49889—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் சுற்றுலா அலுவலரை நியமித்து வேலூரில் இருந்து மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கு சுற்றுலாத் துறை மூலம் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

வேலூரில் புதிய சுற்றுலா அலுவலகம் அக்டோபர் 2008 முதல் வேலூர் கோட்டையில் செயல்பட்டு வருகிறது. வேலூரிலிருந்து மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கு போதிய அரசு பேருந்துகள், தமிழக அரசு போக்குவரத்து கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் தினந்தோறும், சென்னையிலிருந்து ஸ்ரீபுரம்—பொற்கோயில், இரத்தினகிரி, வேலூர் கோட்டை ஆகிய இடங்களை உள்ளடக்கிய சுற்றுலா பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2011 ஜனவரி 13

85—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 51200—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் வசிஷ்ட நதியின் வடகரையில் அமைந்துள்ள செட்டிமுதலி கோட்டையை சுற்றுலாத் தலமாக அறிவிக்க ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலா இடங்கள் / அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவம் மற்றும் அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டம் ஆத்தூர் வசிஷ்ட நதியின் வடகரையில் அமைந்துள்ள செட்டிமுதலி கோட்டையில் அடிப்படை வசதிகள் செய்தல் குறித்து கருத்துரு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

86—

சுற்றுலா மாளிகை அமைத்தல்

வினா எண் 51736—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, அனந்தமங்கலம் ஆஞ்சநேயர் கோயில் அருகில் சுற்றுலா மாளிகை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தங்கும் விடுதிகள் உணவகங்கள் கட்டும் கொள்கையை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கைவிட்டு விட்டதால் பூம்புகார் தொகுதி, அனந்தமங்கலம் ஆஞ்சநேயர் கோயில் அருகில் சுற்றுலா மாளிகை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

கட்டட வசதி

வினா எண் 52418—திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு கட்டடம் கட்டுவதற்கு துறைவசம் காலியிடமில்லை. காலியிடத்தை முதற்கண் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தகுதியான அரசு நிலமோ அல்லது தனியாரிடமிருந்து தானமாகவோ காலியிடம் பெற்றபின் அரசு நிதிநிலைக்கேற்ப நிதி ஒதுக்கீடு பெற்று அரசு கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

88—

அழகுபடுத்துதல்

வினா எண் 52445—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரம் கடற்கரையை அழகுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாமல்லபுரம் கடற்கரை கோயில் பகுதி மேம்பாட்டிற்காக பல பணிகள் மேற்கொள்ளப்பட்டு அப்பணிகள் முடிக்கப்பட்டன.

மாமல்லபுரம் கடற்கரையை அழகுபடுத்துவதற்கான கருத்துரு ஏதும் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

89—

சுற்றுலா மையமாக்குதல்

வினா எண் 54204—திருமதி ஜி. லதா: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, குடியாத்தம் வட்டம், மோர்தனா அணைக்கட்டு இடத்தை சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத்தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், அப்பகுதிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகளை இத்துறை செய்து தருகிறது. வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம் மோர்தனா அணைக்கட்டுப் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

90—

சுற்றுலா மையமாக்குதல்

வினா எண் 55412—திருமதி ஈ. லீமா ரோஸ்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதி, காளிகேசத்தை சுற்றுலா மையமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலா துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலா மையமாக அறிவிப்பதில்லை, இருப்பினும் ஒரு சுற்றுலாப் பகுதியின் முக்கியத்துவம் மற்றும் அவ்விடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டம், காளிகேசம் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரும் கருத்துரு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

91—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 57508—திரு. வை. காவேரி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி மலைப் பகுதியை சுற்றுலாத் தலமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலா இடங்கள் / அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவம் மற்றும் அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. சேலம் மாவட்டம், சங்ககிரி மலைப் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்தல் குறித்து கருத்துரு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

92—

படகுப் போக்குவரத்து

வினா எண் 57514—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மேற்கு தொகுதி, மதுரை வண்டியூர் கண்மாயை சுற்றுலாத் துறையின் மூலம் நவீனப்படுத்தி அழகுப்படுத்தவும், அக்கண்மாயில் படகுப் போக்குவரத்து தொடங்கவும் அரசு ஆவன செய்யுமா?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

மதுரை வண்டியூர் கண்மாயை சுற்றுலாத் துறை மூலம் நவீனப்படுத்தி அழகுபடுத்தும், செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

93—

பத்திரப் பதிவு அலுவலகம்

வினா எண் 57607—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் பேரூராட்சியில் விரிவுபடுத்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோளிங்கர் பேரூராட்சியில், ஏற்கெனவே சோளிங்கர் சார்பதிவாளர் அலுவலகம் உள்ளதால், இவ்வலுவலக ஆட்சி எல்லைக்குள் மேலும் ஒரு விரிவுபடுத்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகம் திறக்க சாத்தியக்கூறு ஏதுமில்லை.

94—

பேருந்து வசதி

வினா எண் 57639—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, திருப்பரங்குன்றத்திலிருந்து அறுபடை வீடுகளுக்கும் சுற்றுலாத் துறை மூலம் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

திருப்பரங்குன்றத்திலிருந்து அறுபடை வீடுகளுக்கும் சுற்றுலாத் துறை மூலம் பேருந்துகள் இயக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

95—

சிம்ஸ் பூங்காவில் வசதி செய்தல்

வினா எண் 59407—திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் பக்காசூரன் மலைப் பகுதியில் காட்சிமுனை ஏற்படுத்திடவும், சிம்ஸ் பூங்காவில் கார் நிறுத்தம் ஏற்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் பக்காசூரன் மலைப் பகுதியில் காட்சிமுனை ஏற்படுத்தவும், சிம்ஸ் பூங்காவில் கார் நிறுத்தம் ஏற்படுத்தவும் கருத்துரு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

96—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 61119—திரு. ம. இராஜ்குமார்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, இலாடபுரம் கிராமத்தில் உள்ள மயிலூற்று அருவியை சுற்றுலாத் தலமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்த ஒரு பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அப்பகுதிக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அங்கு தேவையான அடிப்படை வசதிகளை இத்துறை செய்து வருகிறது. பெரம்பலூர் தொகுதி, இலாடபுரம் கிராமத்தில் உள்ள மயிலூற்று அருவி பகுதியினை மேம்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

97—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 62123—திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வலங்கைமான் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியம், திருக்கருக்காவூர் முல்லைவனநாதர் திருக்கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் செய்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள முல்லைவனநாதர் திருக்கோயிலின் அருகில் அடிப்படை வசதிகள் செய்ய சுற்றுலாத் துறை அரசு ஆணை எண் 49, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, நாள் 30-3-2007-ல் ரூ.23.50 இலட்சம் நிதி உதவி ஒப்பளிப்பு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

98—

சுற்றுலாப் பகுதியாக மாற்றுதல்

வினா எண் 62829—திரு. வை. காவேரி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி மலைக்கோட்டையை சுற்றுலாப் பகுதியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை சுற்றுலாத் தலங்களின் முக்கியத்தும் மற்றும் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அங்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கிறது. சங்ககிரி மலைக்கோட்டை பகுதியில் அடிப்படை வசதிகள் செய்துதரும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

99—

அலுவலகம் அமைத்தல்

வினா எண் 63577—திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தற்போது கொல்லிமலையில் முகாம் அலுவலகம் மூலம் மாதம் சராசரியாக 60 ஆவணங்கள் பதிவாகின்றன. தற்பொழுது முகாம்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

அலுவலகம் மூலம் பொதுமக்களுக்கு எவ்விதப் பிரச்சனையும் இன்றி பதிவுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வருங்காலத்தில் பதிவு செய்யும் ஆவணங்களின் எண்ணிக்கை அதிகமாகும் பொழுது ஒரு சார்பதிவாளர் அலுவலகம் ஒன்றினை நிரந்தரமாக தொடங்கவும் அதன் மூலம் அங்குள்ள மலைவாழ் மக்கள் பயனடையும் வாய்ப்புள்ளது. எனவே, கொல்லிமலையில் தற்பொழுது சார்பதிவாளர் அலுவலகம் திறக்கத் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

100—

சட்டமியற்றும் திட்டம்

வினா எண் 63776—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லங்க சான்றில் (இ.சி.) அதிகாரமளிப்பு பற்றிய தகவல்களை இடம் பெற தமிழக அரசு உரிய சட்டம் இயற்றும் திட்டம் (தமிழக) அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசின் பரிசிலனையில் உள்ளது.

101—

தகவல் அளிக்கும் திட்டம்

வினா எண் 63778—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு சொத்து குறித்து வழக்கு ஏதும் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் போது, அது குறித்த விவரம் பதிவாளர் அலுவலகத்திற்கு தகவல் அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) பதில் அளிக்கும் நிலை எழவில்லை.

102—

சலுகை வழங்குதல்

வினா எண் 63779—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுவை மாநிலத்தில் உள்ளது போன்று பெண்கள் சொத்துக்களை வாங்கி பதிவு செய்யும்போது 50% சலுகை வழங்குவது போல் தமிழகத்தில் சலுகை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* பெண்கள் சொத்துக்களை வாங்கி பதிவு செய்யும்போது 50% முத்திரைத் தீர்வை சலுகை வழங்குவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

103—

சுற்றுலா மையமாக்குதல்

வினா எண் 64306—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், பெருமாபட்டு ஊராட்சி, ஏலகிரிமலை அடிவாரம், ஜலகாம்பாறை முருகன் கோயிலை சுற்றுலா மையமாக்க அரசு ஆவன செய்யுமா?

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் செய்து வருகிறது.

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், பெருமாபட்டு ஊராட்சி, ஏலகிரிமலை அடிவாரம் ஜலகாம்பாறை முருகன் கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

104—

சுற்றுலா மாளிகை அமைத்தல்

வினா எண் 64755—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, அங்காளபரமேஸ்வரி கோயில் அருகில் சுற்றுலா மாளிகை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதி, அங்காளபரமேஸ்வரி கோயில் அருகில் சுற்றுலா மாளிகை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

105—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 66471—திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், கொடிவேரி அணையை சிறப்பு சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், ஒரு இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகள் மட்டும் செய்து வருகிறது. கொடிவேரி அணைப் பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள 2006-2007-ஆம் நிதியாண்டில் ரூ.25.00 இலட்சமும், 2008-2009-ஆம் நிதியாண்டில் ரூ.16.35 இலட்சமும் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

106—

கட்டட வசதி

வினா எண் 69477—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியிலுள்ள, அவலூர்பேட்டை முருகன் கோயில் மற்றும் மேல்மலையனூர் அங்காளபரமேஸ்வரி கோயில் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு அனைத்து வசதிகளுடன் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தற்பொழுது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உணவகம் மற்றும் தங்கும் விடுதிகள் கட்டும் கொள்கையை கைவிட்டுள்ளது. எனினும் தனியார் தொழில் முனைவோர் தங்கும் விடுதிகள், உணவகம் கட்டுவதற்கு முன் வருவார்களானால் அவர்களை இத்துறை ஊக்குவிக்கும்.

2011 ஜனவரி 13]

107—

பத்திரப் பதிவு கட்டணங்களைக் குறைத்தல்

வினா எண் 70426—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பத்திரப்பதிவு கட்டணங்களை குறைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் பத்திரப்பதிவு கட்டணங்களைக் குறைப்பது தொடர்பாக கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

108—

விற்பனை மையம்

வினா எண் 70432—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் போலி முத்திரைத் தாள்களை ஒழிக்க அரசு அந்தந்த சார்பதிவாளர் அலுவலகங்களில் முத்திரைத்தாள் விற்பனை மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் முத்திரைத் தாள் விற்பனை மையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

109—

அலுவலகம் அமைத்தல்

வினா எண் 80255—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் புதியதாக சுற்றுலா அலுவலகம் திறக்கப்பட்டு கடந்த மார்ச் 2009 முதல் இயங்கி வருகிறது. எனவே, காரைக்குடியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலகம் அமைக்கும் தேவை எழவில்லை.

110—

ரோப் கார் வசதி

வினா எண் 80291—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அழியார் முதல் அக்காமலை புல்மலை வரை ரோப்கார் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி அழியார் முதல் அக்காமலை புல்மலை வரை ரோப்கார் அமைத்தல் குறித்து கருத்துரு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

111—

கட்டட வசதி

வினா எண் 81591—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி அருகேயுள்ள பிரான்மலையில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு உணவுவிடுதியுடன் கூடிய தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி அருகேயுள்ள பிரான்மலையில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு உணவுவிடுதியுடன் கூடிய தங்கும் விடுதி கட்டுதல் பற்றிய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

112—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 82716—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, மிட்டாரெட்டி அள்ளி கோம்பேரி மலைப் பகுதியை சுற்றுலாத் தலமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகிறது.

தருமபுரி தொகுதி, மிட்டாரெட்டி அள்ளி, கோம்பேரி மலைப் பகுதியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

113—

சுற்றுலாத் தலம் மற்றும் பூங்கா அமைத்தல்

வினா எண் 83548—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, தொப்பூர் ஊராட்சி, தொப்பூர் வனப் பகுதியில் சுற்றுலாத் தலம் மற்றும் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, தொப்பூர் ஊராட்சி, தொப்பூர் வனப் பகுதியில் சுற்றுலாத் தலம் மற்றும் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

114—

சுற்றுலாத் தலம் அமைத்தல்

வினா எண் 86385—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், சித்தேரி மலைப் பகுதியில் சுற்றுலாத் தலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது.

தருமபுரி மாவட்டம், சித்தேரி மலைப் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

115—

நீர்ச் சறுக்குப் பூங்கா அமைத்தல்

வினா எண் 90803—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஏற்காடு பகுதியில் நீர்ச் சறுக்குப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஏற்காடு பகுதியில் நீர்ச் சறுக்குப் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

116—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 91958—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், அனுமந்தீர்த்தம், ஆஞ்சனேயர் கோயிலைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், அனுமந்தீர்த்தம், ஆஞ்சனேயர் கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

117—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 91960—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கொண்டம்பட்டி ஊராட்சி, பாம்பாறு அணைப் பகுதியை சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகிறது.

2001-2002 ஆம் நிதியாண்டில் கிருஷ்ணகிரி மாவட்டம், பாம்பாறு அணைப் பகுதியிலுள்ள பூங்கா மேம்பாட்டிற்காக ரூ. 20.00 இலட்சம் மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியருக்கு வழங்கி, பணிகள் முடிவடைந்துள்ளன.

118—

பத்திரப் பதிவு அலுவலகம் அமைத்தல்

வினா எண் 93256—திரு. ஓ. சுப்பிரமணியம்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பவானிசாகர் தொகுதி, புன்செய் புளியம்பட்டி நகராட்சியில் பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

புன்செய் புளியம்பட்டி நகராட்சியில் ஏற்கெனவே ஒரு பதிவு அலுவலகம் இயங்கி வருவதால் மீண்டும் ஒரு அலுவலகம் அமைக்க தேவை எழவில்லை.

119—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 93548—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

சேலம் மாவட்டம், கெங்கவல்லி பகுதி, பச்சமலையைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகிறது.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி பகுதி, பச்சமலைப் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

120—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 95469—திரு. வை. காவேரி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, பாலமலைப் (மேட்டூர் தாலுக்கா) பகுதியை சுற்றுலாத் தலமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால் ஒரு இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அங்கு தேவையான அடிப்படை வசதிகளை மட்டும் செய்து தருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

எடப்பாடி தொகுதி, பாலமலைப் (மேட்டூர் தாலுக்கா) பகுதியை மேம்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

121—

சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்

வினா எண் 95470—திரு. வை. காவேரி: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி, ஆடையூர், மதுரகாளியம்மன் கோயில் பகுதியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, தேவையான அடிப்படை வசதிகள் மட்டுமே செய்து தருகிறது.

எடப்பாடி, ஆடையூர், மதுரகாளியம்மன் கோயில் பகுதியை மேம்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

122—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 96967—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி ஒன்றியம், ஆதிரெங்கம் ஸ்ரீரெங்கநாதர் திருக்கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது.

திருத்துறைப்பூண்டி ஒன்றியம், ஆதிரெங்கம் ஸ்ரீரெங்கநாதர் திருக்கோயில் பகுதியை மேம்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

123—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 96989—திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூரிலுள்ள பக்காசூரன் மலைக் காட்சி முனையினை சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகிறது.

குன்னூரிலுள்ள பக்காசூரன் மலைக் காட்சி முனை பகுதியில் அடிப்படை வசதிகள் செய்யும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

124—

பூங்கா அமைத்தல்

வினா எண் 97025—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி டேனிஸ் கோட்டை பகுதியில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி டேனிஸ் கோட்டை பகுதியில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின் மூலம் ரூ.373.08 இலட்சம் நாகை மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது.

125—

படகு போக்குவரத்து வசதி

வினா எண் 97026—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் கடலில் படகு போக்குவரத்து துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் கடல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பகுதியில் அதிக அளவில் காற்று வீசி வருவதால் படகு போக்குவரத்து செயல்படுத்த வணிக ரீதியில் வாய்ப்பில்லை. எனவே, நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் கடலில் படகு போக்குவரத்து துவக்குவது தொடர்பான திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

126—

சுற்றுலா மையமாக்குதல்

வினா எண் 97114—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதி, திருநெந்திக்கரை நந்தீஸ்வரர் கோவிலைச் சுற்றுலா மையமாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகள் செய்து தருகிறது.

திருவட்டாறு தொகுதி, திருநெந்திக்கரை நந்தீஸ்வரர் கோவில் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

127—

சுற்றுலா மையமாக்குதல்

வினா எண் 97115—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) திருவட்டாறு தொகுதி, சிதறால் ஜெயின் மலைக் கோவிலைச் சுற்றுலா மையமாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகிறது.

2005-2006 ஆம் நிதியாண்டில் கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியில் அமைந்துள்ள சிதறால் மலைக் கோவிலைச் சுற்றியுள்ள பகுதியை மேம்படுத்த ரூ. 30.00 இலட்சம் வழங்கப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.

128—

விடுதி மற்றும் உணவகம் வசதி

வினா எண் 97847—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலத்தில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை மூலமாக தங்கும் விடுதி மற்றும் உணவகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்களை கட்டும் திட்டத்தை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கைவிட்டு விட்டது. தனியார் கட்டுவதற்கு முன்வந்தால், அதனைச் சுற்றுலாத் துறை ஊக்குவிக்கிறது.

129—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 98380—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார் வளைகுடா அருகில் உள்ள ஆணைப்பார், வாலிமுனைத் தீவுகளைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகிறது.

மன்னார் வளைகுடா அருகில் உள்ள ஆணைப்பார், வாலிமுனைத் தீவு பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்துதரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

130—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 101126—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்காடு தொகுதி, மலையடி-ஸ்ரீமகாதேவர் ஆலயப் பகுதியை சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது.

விளவங்கோடு தொகுதி, மலையடி—ஸ்ரீமகாதேவர் ஆலயப் பகுதிக்கு அடிப்படை வசதிகள் செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

131—

கட்டட வசதி

வினா எண் 101418—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தனியார் கட்டடத்தில் இயங்கும் தாரமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தமாக இடம் கிடைத்த பின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும், முன்னுரிமைப்படியும் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2011 ஜனவரி 13

132—

சுற்றுலா அலுவலகம் அமைத்தல்

வினா எண் 101951—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் சுற்றுலா அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்திற்கான சுற்றுலா அலுவலகம் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான மாமல்லபுரத்தில் இயங்கி வருகிறது. எனவே, அவ்வலுவலகம் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கான ஒட்டுமொத்த சுற்றுலாப் பணிகளைக் கவனித்து வருகிறது. யுனஸ்கோ அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட புராதானச் சின்னம் அமைந்துள்ள இடமென்னும் அடிப்படையில் அது மாமல்லபுரத்தில் இயங்கி வருகிறது. எனவே, காஞ்சிபுரத்தில் மேலும் ஒரு சுற்றுலா அலுவலகம் அமைக்கும் தேவை ஏற்படவில்லை.

133—

கட்டட வசதி

வினா எண் 102019—திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, அவினாசி லிங்கேஸ்வரர் திருக்கோயிலுக்கு சுற்றுலா விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் சுற்றுலா விடுதி கட்டும் திட்டத்தைக் கைவிட்டுவிட்டதால் அவினாசி தொகுதி, அவினாசி லிங்கேஸ்வரர் திருக்கோவில் பகுதியில் சுற்றுலா விடுதி கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

134—

சுற்றுலாத் தலம்

வினா எண் 102020—திருமதி ஆர். பிரேமா: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அவினாசி தொகுதி, புளிப்பார் ஊராட்சி, கரடிக்கோயில் கருப்பணசாமி திருக்கோயிலைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது.

அவினாசி தொகுதி, புளிப்பார் ஊராட்சி, கரடிக்கோயில் கருப்பணசாமி திருக்கோயில் பகுதியை மேம்படுத்துதல் குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

135—

விடுதி மற்றும் உணவகம் அமைத்தல்

வினா எண் 106889—திருமதி ஜி. லதா: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் சுற்றுலாத் துறை மூலம் தங்கும் விடுதியுடன்கூடிய உணவு விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்கள் கட்டும் கொள்கையை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கைவிட்டு விட்டதால், வேலூர் மாவட்டத்தில் சுற்றுலாத் துறை மூலம் தங்கும் விடுதியுடன்கூடிய உணவு விடுதி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. தனியார், விடுதி கட்ட முன்வந்தால் அதனை சுற்றுலாத் துறை ஊக்குவிக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

136—

சுற்றுலா கிராமம் அமைத்தல்

வினா எண் 108973—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரத்தில் சுற்றுலா கிராமம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாமல்லபுரத்திற்கு அருகில் திருக்கழுக்குன்றம் தாலுக்காவிலுள்ள மணமை என்ற கிராமத்தில் "கையளவு தமிழகம்" என்ற மாபெரும் திட்டத்தை செயற்படுத்த அரசாணை எண் 214, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் (சு1) துறை, நாள்: 3-12-2008-ன் மூலம் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 17.68.0 ஹெக்டேர் நிலப்பரப்பு வருவாய்த் துறையினரால் 17-04-2009-ல் சுற்றுலாத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது திட்டத்திற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

137—

நினைவில்லமாக்குதல்

வினா எண் 401—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுதந்திரப் போரில் பங்கு பெற்ற உடுமலை நாராயணக்கவியைப் பெருமைப்படுத்தும் வகையில் அவர் வாழ்ந்த வீட்டை நினைவில்லமாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

138—

நினைவு மண்டபம்

வினா எண் 654—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மறைந்த மக்கள் தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார் அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

139—

திருவுருவச் சிலை அமைத்தல்

வினா எண் 765—திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மறைந்த மக்கள் தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார் அவர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

140—

எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்

வினா எண் 938—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் மீண்டும் செயல்பட அரசு நடவடிக்கை மேற்கொள்ள முன்வருமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் மூடப்பட்ட பிறகு அதிலிருந்த பெரும்பகுதி நிலம், உள் துறை (டி.ஜி.பி. அலுவலகம் கட்ட ஏதுவாக), இந்திய தொழில்நுட்ப நிறுவனம், எஸ்.இ.டி.எஸ். நிறுவனம் ஆகியவற்றிற்கு ஒதுக்கப்பட்டது. நீண்டகாலமாக பயன்படுத்தப்படாமல் இருந்த காரணத்தால், அந்த திரைப்பட நகரில் உள்ள தொழில்நுட்ப வசதிகள் பயன்படுத்த இயலாத அளவிற்கு தற்சமயம் பாழடைந்து காணப்படுகிறது. மேலும் திரைப்பட உலகத்தில் தொழில்நுட்ப வசதிகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பதன் காரணமாக பாடல் காட்சிகளுக்கு வெளி நாட்டிற்குச் சென்று படப்பிடிப்பு நடத்துகிற அளவிற்கு முதலீடு அதிகரித்துள்ளது. எனவே திரைப்பட நகரில் உள்ள வசதிகளைப் புதுப்பித்தால் அவற்றில் படப்பிடிப்பு நடத்துவதற்கு திரைப்படத் துறையினர் பெருமளவில் முன்வருவார்களா என்பது சந்தேகமே. மேலும் திரைப்பட நகரைப் புதுப்பிக்க 40 கோடி ரூபாய் தேவைப்படும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் என்பதை “எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்” என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, அதிலுள்ள வசதிகள் விரிவாக்கம் செய்யப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளார்கள். இங்கு அமைந்துள்ள படப்பிடிப்பு தளம் மற்றும் தொழில்நுட்ப வசதிகள் உயர்த்தப்பட்டு அவற்றை திரைத் துறை பயன்படுத்துமளவு மேம்பாடு செய்வது குறித்து கருத்துரு துறையின் பரிசீலனையில் உள்ளது.

141—

மணி மண்டபம்

வினா எண் 1104—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், காங்கேய நல்லூரில் கிருபானந்த வாரியாருக்கு மணி மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

142—

முறைப்படுத்துதல்

வினா எண் 1349—திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் சென்னை போன்ற நகரங்களில் முறையான அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

சென்னைப் பெருநகர் பகுதியில் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டடங்களை வரன்முறைப்படுத்துவதற்கு 1999, 2000, 2001 மற்றும் 2002 ஆண்டுகளில் கட்டட வரன்முறைத் திட்டம் கொண்டு வரப்பட்டது. 1999 ஆம் ஆண்டு திட்டத்தைத் தவிர மற்ற ஆண்டுகளின் திட்டத்தை உயர் நீதிமன்றம் இரத்துச் செய்து, 28-02-1999க்கு முன்பு கட்டப்பட்ட கட்டடங்களை வரன்முறைப்படுத்துவதற்கு ஒரு கண்காணிப்புக் குழுவினை அமைத்துள்ளது. திட்ட விதிமீறல்களுக்கு எதிராக நடவடிக்கைகளை ஓராண்டு காலத்திற்கு ஒத்தி வைப்பதற்கான தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2007 பிறப்பித்தபின் தமிழ்நாடு சட்டம் 39/2007 (தனிவகை முறைகள்) இயற்றப்பட்டது. இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

143—

வரலாற்றுத் திரைப்படம்

வினா எண் 3237—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞரின் வரலாற்றைத் திரைப்படமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

144—

நினைவு மண்டபம்

வினா எண் 3424—திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலக்கியப் பேராசான் ஜீவானந்தம் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் சென்னையில் நினைவு மண்டபம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) இலக்கியப் பேராசான் ஜீவானந்தம் அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயிலில், அரசால் மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் திரு. ஜீவானந்தம் அவர்களுக்கு சென்னையில் நினைவு மண்டபம் அமைக்கப்படுதல் தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

145—

வரலாற்றுத் திரைப்படக் காட்சி

வினா எண் 5270—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட தேசிய தலைவர்களின் வரலாற்றை அடிக்கடி செய்தியாக திரைப்படக் காட்சிகளில் காட்டுவதற்கு அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

146—

வரலாற்றுக் காட்சிகள்

வினா எண் 5273—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் வரலாற்றை செய்தியாக மாணவ/மாணவிகளுக்கு 6 மாதத்திற்கு ஒரு முறை காட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

147—

நடவடிக்கை

வினா எண் 9165—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரி, பள்ளிகளின் சுவர்களில் ஆபாசச் சுவரொட்டிகள் ஒட்டப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி செய்தித் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு பொது இடங்கள் (சேதப்படுத்துதல்) சட்டம் 1959-ன்படி பொது இடங்களில் ஆபாசச் சுவரொட்டிகள் ஒட்டப்படுவதைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

148—

கலையரங்கம் அமைத்தல்

வினா எண் 13702—திரு. ஆர். சிவானந்தம்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆரணி தொகுதி, ஆரணி நகரில் சிறுவர், சிறுமியர் கலையரங்கம் ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி செய்தித் துறை அமைச்சர்:

கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

149—

நவினப்படுத்துதல்

வினா எண் 16192—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக அரசின் அனைத்து அச்சகங்களையும் நவீனப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) அரசு அச்சகங்களை நவீனப்படுத்துவது ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) வினா எழவில்லை.

150—

அரசின் சாதனைகளைத் திரையிடுதல்

வினா எண் 16286—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திரையரங்குகளில் மீண்டும் செய்தித் துறைமூலம் அரசின் சாதனைகளைத் திரையிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ). திரைப்படப் பிரிவின்மூலம் விளம்பரப் படங்கள் வீடியோவில் தயாரிக்கப்பட்டுள்ளது. அப்படங்களை வீடியோவிலிருந்து 35 மி.மீ. பிலிமில் மாற்றம் செய்யப்பட்டு வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது 2008-2009 ஆம் நிதியாண்டு ஆரம்பம் என்பதால் படங்கள் தயாரிப்புப் பணி விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பணி முடிவுற்றதும் உடன் திரையரங்குகளில் திரையிட நடவடிக்கை எடுக்கப்படும்.

151—

நடிப்புக் கல்லூரி

வினா எண் 16288—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் திரைப்படத் துறை சார்பில் நடிப்புக் கல்லூரி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

152—

அரசின் வெளியீடுகள்

வினா எண் 16289—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசின் வெளியீடுகள் மற்றும் அரசாணைகள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) அனைத்துக் கிராமங்களிலும் அரசின் வெளியீடுகள் மற்றும் அரசாணைகள் அஞ்சல்மூலம் கிடைக்க ஏற்கெனவே ஏற்பாடு அரசால் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

153—

நினைவு மண்டபம்

வினா எண் 18835—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் சிப்பாய் புரட்சி நினைவு மண்டபத்தை வேலூர் நகரில் அமைத்து நகரின் நான்கு பக்கமும் தோரண வாயில்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் வேலூர் சட்டமன்ற உறுப்பினர், திரு. சி. ஞானசேகரன், அவர்களுடன் 6-2-2008-ம் தேதியன்று நடத்தப்பட்ட கருத்தாய்வுக் கூட்டத்தில் "வேலூர் நகரம், பழைய பேருந்து நிலையத்தில் பல ஆண்டுகளாக இயங்காமல் உள்ள சங்கீத சபா கட்டடத்தினை ஆர்ஜிதம் செய்து சிப்பாய் புரட்சி நினைவு மண்டபம் அமைக்க இயலுமா என்பதனை ஆராய்ந்து செயல்படுத்த முடிவு எடுக்கப்பட்டு நினைவு மண்டபம் கட்டுவது தொடர்பாக தேசிய அளவிலான, அனுபவம் வாய்ந்த கட்டட கலை வல்லுநர்களிடமிருந்து ஆலோசனைகள் பெற மாநில அரசு மூலமாக தேசிய அளவில்/உலக அளவில் கட்டடப் பொறியாளர்கள், கட்டட கலை வல்லுநர்களின் கருத்து மற்றும் மாதிரி அமைப்பு ஆகியவற்றினை வரவேற்க விளம்பரம் செய்து அதன் பின்னர் நினைவு மண்டபம் அமைக்கலாமென முடிவு செய்யப்பட்டது. மேலும் அக்கூட்டத்தில் இந்த நினைவு மண்டபம் நீண்ட காலம் நீடித்து நிற்கும் பொருட்டும் தலைசிறந்த நினைவுச் சின்னமாக விளங்கும் வகையிலும் வேலூர் மாநகரத்தின் ஒரு முக்கிய வரலாற்று நினைவுச் சின்னமாக உருவாக்கிட தகுந்த முயற்சிகள் மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

154—

மணி மண்டபம்

வினா எண் 24293—திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, திருமயத்தில் தீரர் சத்தியமூர்த்தி அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

155—

மணி மண்டபம்

வினா எண் 25673—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திரு. ஜி.கே. மூப்பனாருக்கு சென்னையில் மணி மண்டபம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

156—

குறும்படங்கள்

வினா எண் 25798—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

டாக்டர் கலைஞரின் படைப்புகளை விளக்கும் குறும்படங்கள் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

டாக்டர் கலைஞரின் படைப்புகளை விளக்கும் குறும்படங்கள் தயாரிக்கும் செயற்குறிப்பு தற்சமயம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

157—

விழா

வினா எண் 25802—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழாவினை அரசு சார்பில் கொண்டாடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான 15-9-2008 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் அவர் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்படும்.

158—

கட்டட வசதி

வினா எண் 29456—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்ட பத்திரிகை, தொலைக்காட்சி செய்தியாளர்களுக்கு அரசு சார்பில் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்ட பத்திரிகை, தொலைக்காட்சி செய்தியாளர்களுக்கு அரசு சார்பில் கட்டடம் கட்ட கருத்துரு அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை.

159—

அரசு கிளை அச்சகம்

வினா எண் 30615—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) மானாமதுரையில் அரசு கிளை அச்சகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) இது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

160—

ஒலி, ஒளிக் காட்சி

வினா எண் 33527—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவு மண்டபத்தில் ஒலி ஒளிக் காட்சி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபத்தில் தற்சமயம் ஒலி, ஒளிக் காட்சியமைக்க போதுமான இடவசதி இல்லாததால் மணிமண்டபத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

161—

நினைவில்லம்

வினா எண் 34942—திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை ஏழு கிணறு பகுதியில் வள்ளலாருக்கு நினைவில்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

162—

மணி மண்டபம்

வினா எண் 40047—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கையில் கவிஞர் மீரா அவர்களுக்கு மணி மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

163—

திரைப்படம்

வினா எண் 40282—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசு நலத் திட்டங்களை கல்லூரிகளில் மாணவ மாணவிகளுக்கு திரைப்படம் மூலம் திரையிட்டுக் காட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு நலத் திட்டங்களை கல்லூரிகளில் மாணவ மாணவிகளுக்கு திரைப்படம்மூலம் திரையிட்டு காட்டும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

164—

நினைவுச் சின்னம்

வினா எண் 42799—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்ககிரி கோட்டையில் தீரன் சின்னமலை அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், அரச்சலூர் கிராமம், ஓடா நிலை என்ற இடத்தில் ரூ.30.00 இலட்சம் செலவில் தீரன் சின்னமலை அவர்களுக்கு சிலையுடன் கூடிய மணி மண்டபம் அரசால் அமைக்கப்பட்டுள்ள நிலையில், சேலம் மாவட்டம், சங்ககிரி கோட்டையில் தீரன் சின்னமலை அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

165—

குறும்படம்

வினா எண் 42948—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடக்கெல்லை தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழார் வாழ்க்கை வரலாற்றைக் குறும்படமாகத் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

வடக்கெல்லை தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழார் வாழ்க்கை வரலாற்றைக் குறும்படமாகத் தயாரிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

166—

மணி மண்டபம்

வினா எண் 42949—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமுருக கிருபானந்த வாரியாருக்கு சென்னையில் மணி மண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

கருத்துரு அரசின் பரிசிலனையில் இல்லை.

167—

சிலை அமைத்தல்

வினா எண் 50475—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர்-பேரூர் பேருந்து நிலையத்தில் சமூக நீதிக் காவலர் தந்தை பெரியார் சிலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

கருத்துரு அரசின் பரிசிலனையில் இல்லை.

168—

நினைவு மண்டபம்

வினா எண் 51132—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

விளாத்திகுளம் இசை சக்கரவர்த்தி நல்லப்ப சுவாமி அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

169—

சிலை அமைத்தல்

வினா எண் 51133—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு சென்னையில் சிலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு சென்னையில் சிலை அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

170—

மணி மண்டபம்

வினா எண் 58237—திரு. வே. மாரிமுத்து: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் தமிழ்த் தென்றல் மறைமலையடிகளார் அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

[2011 ஜனவரி 13

171—

மணி மண்டபம்

வினா எண் 59037—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் திருமங்கையாழ்வார் அவர்களுக்கு அவர் பிறந்த இடத்தில் மணி மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

172—

நினைவிடக் கோட்டம்

வினா எண் 63150—திரு. வை. காவேரி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்ககிரி மலைக் கோட்டையில் தீரன் சின்னமலை அவர்களுக்கு நினைவிடக் கோட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், அரச்சலூர் கிராமம், ஓடாநிலை என்ற இடத்தில் ரூ.30.00 இலட்சம் செலவில் தீரன் சின்னமலை அவர்களுக்கு சிலையுடன்கூடிய மணி மண்டபம் அரசால் அமைக்கப்பட்டுள்ள நிலையில், சங்ககிரி மலைக் கோட்டையில் தீரன் சின்னமலை அவர்களுக்கு நினைவிடக் கோட்டம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

173—

மணி மண்டபம்

வினா எண் 70295—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், குறவலூரில் வைணவப் பெரியார் திருமங்கையாழ்வார் அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

ஏற்கெனவே அரசு சார்பில் ஏராளமான நினைவகங்கள் நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் நிலையில் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், குறவலூரில் வைணவப் பெரியார் திருமங்கையாழ்வார் அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

174—

உருவச் சிலை அமைத்தல்

வினா எண் 97009—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் உருவச் சிலையை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

ஏற்கெனவே அரசு சார்பில் ஏராளமான நினைவகங்கள் நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் நிலையில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் உருவச் சிலை அமைத்திடல் தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

175—

நினைவு இல்லம்

வினா எண் 102913—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமரர் கக்கன் அவர்களுக்கு நினைவு இல்லம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஏற்கெனவே மதுரை மாவட்டம், தும்பைப்பட்டியில் தியாக சீலர் கக்கன் அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதாலும் 10-10-2009 அன்று மதுரையில் அவரது நினைவாக நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ள நிலையிலும் அமரர் கக்கன் அவர்களுக்கு நினைவு இல்லம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

176—

மணி மண்டபம்

வினா எண் 105074—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியில் பிறந்த மதுரகவி பாஸ்கரதாஸ் அவர்களுக்கு நாகலாபுரத்தில் மணி மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஏற்கெனவே அரசு சார்பில் ஏராளமான

2011 ஜனவரி 13]

நினைவகங்கள் நிறுவப்பட்டு அவற்றை பராமரிப்பதில் சிரமங்கள் நிலவி வரும் நிலையில், விளாத்திகுளம் தொகுதியில் பிறந்த மதுரகவி பாஸ்கரதாஸ் அவர்களுக்கு நாகலாபுரத்தில் மணி மண்டபம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

177—

மணி மண்டபம்

வினா எண் 105075—திரு. போ. சின்னப்பன்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஓமந்தூரில் தமிழகத்தின் முதல் முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு மணி மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே அரசு சார்பில் ஏராளமான நினைவகங்கள் நிறுவப்பட்டு அவற்றை பராமரிப்பதில் சிரமங்கள் நிலவி வரும் நிலையில், ஓமந்தூரில் தமிழகத்தின் முதல் முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

178—

புதிய குடும்ப அட்டைகள்

வினா எண் 101—திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடந்த ஆட்சிக் காலத்தில் புதிய குடும்ப அட்டைகள் முழுமையாக வழங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிய குடும்ப அட்டைகள் வழங்குவது குறித்து தகுந்த ஆணைகள் அ.ஆ. (நிலை) எண் 130, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (எப்2) துறை, நாள்: 8-8-2006-ல் வெளியிடப்பட்டுள்ளன.

179—

விலை உயர்த்துதல்

வினா எண் 448—திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் கடந்த சில தினங்களாக அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை விவரம் குறித்து அரசு தினசரி விலை விவரம் சேகரித்து கண்காணித்து வருகிறது.

(ஆ) தமிழகத்தின் அத்தியாவசியப் பொருட்களின் விலை நிலவரம் குறித்து வாரந்தோறும் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெறும் விலை கண்காணிப்புக் குழு ஆய்வு செய்து வருகிறது. மேலும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, முதன்மை ஆணையர் அவர்கள் மொத்த வியாபாரிகளை அழைத்துப் பேசி, அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றி வெளி அங்காடியில் விநியோகம் நடைபெறவும், அத்தியாவசியப் பொருட்களை பதுக்கல் செய்வது,

2011 ஜனவரி 13]

கடத்துவது போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோரின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2006-2007 வரவு செலவுத் திட்டத்தில் அனைத்து பருப்பு வகைகளுக்கும் மற்றும் சமையல் எண்ணெய் மீதான 4 விழுக்காடு விற்பனை வரி முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. தமிழகத்திற்கு கோதுமை ஒதுக்கீட்டினை உயர்த்துமாறு மத்திய அரசை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. பருப்பு ஏற்றுமதி தடை செய்யப்பட்டு, இறக்குமதியை அதிகரித்திட மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

180—

புதிய குடும்ப அட்டைகள்

வினா எண் 565—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டை இல்லாதவர்களுக்கு உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

புதிய குடும்ப அட்டைகள் வழங்குவது குறித்து தகுந்த ஆணைகள் அ.ஆ., (நிலை) எண் 130, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்: 8-8-2006-ல் வெளியிடப்பட்டுள்ளன.

181—

திட்டம்

வினா எண் 641—திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசி மற்றும் சர்க்கரை போன்ற பொருட்களை பிளாஸ்டிக் அல்லது துணிப் பைகளில் சரியான எடையில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசி மற்றும் சர்க்கரை போன்ற பொருட்களை பிளாஸ்டிக் அல்லது துணிப் பைகளில் வழங்கும் திட்டம் எதுவும் இல்லை.

182—

விநியோகம் செய்தல்

வினா எண் 3451—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதியில் நல்ல தரம் வாய்ந்த அரிசியை நியாய விலைக் கடைகளில் விநியோகம் செய்யவும் அரிசியின் அளவை சரியாக விநியோகம் செய்யவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக மக்களின் முக்கிய உணவு அரிசி ஆகும். அதனால் தமிழக அரசு, நியாய விலைக் கடைகளின் மூலம் தரமான அரிசியினை நியாயமான விலையில் சரியான அளவில் பொது மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றது. வால்பாறை பகுதியில் நியாய விலைக்கடைகளில் தரமான அரிசிதான் வழங்கப்படுகிறது.

2. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து பொது விநியோகத் திட்ட அரிசி, நுகர்வு உதவியாளர் முன்னிலையில், தரமான அரிசியா என்று பரிசோதித்து நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்படுகிறது. இதனையும் மீறி நியாய விலைக் கடைகளில் தரமற்ற அரிசி இருப்பது தெரியவந்தால்,

2011 ஜனவரி 13]

அவை உடனுக்குடன் மாற்றப்பட்டு, தரமான அரிசி வழங்கப்படுகிறது. அனைத்து நியாய விலைக் கடைகளிலும் தரமான அரிசி வழங்குவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சரியான அளவு அரிசி வழங்குவதற்கு மின்னணு எடை இயந்திரங்கள் நியாய விலைக் கடைகளுக்குப் படிப்படியாக வழங்கப்படும்.

183—

ஆலோசனைக் குழு

வினா எண் 7273—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசி கடத்தலைத் தடுக்க சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரிசி கடத்தலைத் தடுக்க சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு அமைப்பது குறித்த திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

184—

அரிசி கடத்துதல்

வினா எண் 7275—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலிருந்து கேரளா மாநிலத்திற்கு அரிசி கடத்திச் செல்வதைத் தடுக்க தணிக்கைச் சாவடி பலப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் காவல் துறையின் தணிக்கைச் சாவடி எதுவும் தற்போது செயல்படவில்லை. எனினும் பொள்ளாச்சி குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை அலகில் ஒரு சார்பு ஆய்வாளர் மற்றும் 2 காவலர்கள். முடிஷ் காவல் நிலையத்தின் ஒரு சார்பு ஆய்வாளர், 2 காவலர்கள் மற்றும் உணவுத் துறையின் வட்ட வழங்கல் அலுவலர்கள் தலைமையில் பணியாளர்களும், வால்பாறையிலிருந்து கேரளா செல்லும் பாதையான சோலையார், மளுக்குபாறை பாதைகளில் அரிசி கடத்தலைத் தடுக்க தீவிர கண்காணிப்புப் பணிகள் செய்து வருகிறார்கள்.

185—

நுகர்வோர் விழிப்புணர்வு முகாம்

வினா எண் 16249—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு உணவு துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் நுகர்வோர் விழிப்புணர்வு முகாம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் நுகர்வோர் விழிப்புணர்வு முகாம் மற்றும் திட்டங்கள் நடத்திட அரசு நிதியுதவி அளித்து ஆவன செய்து வருகின்றது.

186—

மண்ணெண்ணெயின் அளவை அதிகப்படுத்துதல்

வினா எண் 17770—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

(அ) தமிழ்நாட்டிலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெயின் அளவை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசு இம்மாநிலத்திற்கு 59,852 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயின் மாத ஒதுக்கீடாக வழங்குகிறது. ஆனால் இந்த ஒதுக்கீடு 2004 ஆம் ஆண்டிற்கு முன்பு வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளின் (Regular cardholders) தேவைக்கு மட்டுமே போதுமானதாக உள்ளதால் இவர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெயின் அளவை அதிகப்படுத்த நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. 2004 ஆம் ஆண்டிற்கு பிறகு வழங்கப்பட்ட 43.86 இலட்சம் விடுபட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு (Left out family cards) மண்ணெண்ணெய் வழங்க இயலாத நிலை இருந்தது. ஆனால், தற்போது இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கும் திட்டத்தினால் ஏற்படும் சேமிப்பைக் கொண்டு ஒரு சிலிண்டர் எரிவாயு இணைப்பு பெற்றுள்ள மற்றும் சிலிண்டர் இணைப்பே இல்லாத விடுபட்ட குடும்ப அட்டைதாரர்கள் (Left out family cards) அனைவருக்கும் ஜனவரி 2008 பொங்கல் தினம் முதல் மாதந்தோறும் தலா ஒரு லிட்டரும், மார்ச் 2008 முதல் மாதந்தோறும் தலா இரண்டு லிட்டரும் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. பின்னர் 2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் தொடர்ந்து தலா மூன்று லிட்டர் மண்ணெண்ணெய் வீதம், அதிகரித்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும் குடும்ப அட்டைகளில் எரிவாயு விவரங்களை முத்திரையிடுவதன் மூலம் மண்ணெண்ணெய் அதிக அளவில் சேமிப்பு ஏற்படும்பட்சத்தில் நடைமுறையில் உள்ள புதுப்பிக்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு (Regular cardholders) வழங்கப்படும் மண்ணெண்ணெய் விநியோக அளவுபோல் விடுபட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு (Left out family cardholders) மண்ணெண்ணெய் அளவை அதிகரிப்பது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

[2011 ஜனவரி 13

187—

நெல் கொள்முதல் மையம்

வினா எண் 17773—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் நெல் கொள்முதல் மையங்கள் கூடுதலாக ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டத்தில் தற்சமயம் தாலுகா கிடங்குகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்கி வருகிறது. இதுவரை நெல் வரத்து ஏதுமில்லாததால், சேலம் மாவட்டத்தில் நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. மேலும் விவசாயிகளிடம் இருந்து கோரிக்கை ஏதும் பெறப்பட்டால், மாவட்ட ஆட்சியாளரின் பரிந்துரையின்படி, தேவைப்படும் இடங்களில் எல்லாம் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

188—

நெல் கொள்முதல் நிலையம்

வினா எண் 20444—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் நெல் கொள்முதல் நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் 16,61 ஹெக்டேர் நிலப்பகுதியில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. வால்பாறை தொகுதியில் நெல் கொள்முதல் நிலையம் ஏற்படுத்த விவசாயிகளிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டால் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படும். விவசாயிகள் தேவைக்கு நெல்லை விற்பனை செய்ய அருகில் உள்ள பொள்ளாச்சி கிடங்கு வளாகத்தில் நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்யலாம்.

(ஆ) கேள்வி எழவில்லை.

189—

நெல் கொள்முதல் நிலையம்

வினா எண் 20907—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கட்டிக்குளத்தில் நெல் கொள்முதல் நிலையம் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் உள்ள கட்டிக்குளம் பகுதியை சுற்றியுள்ள இடங்களில் 747 ஹெக்டேர் நிலப்பகுதியில் நெல் பயிரிடப்பட்டு, 1,800 மெ.டன் நெல் அறுவடை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது கட்டிக்குளத்திற்கு 3 கி.மீ. தொலைவில் உள்ள மிளகனூர் என்ற இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்கி வருகிறது. விவசாயிகள் நலன் கருதி, நெல் வரத்து அதிகமாக இருப்பின் நடப்பு கரீப் கொள்முதல் பருவ காலத்தில் கட்டிக்குளம் பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரையின் பேரில் நேரடி நெல் கொள்முசல் நிலையம் திறக்க ஆவன செய்யப்படும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2011 ஜனவரி 13

190—

நெல் கொள்முதல் நிலையம்

வினா எண் 23525—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியம், அரசூர் ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) சீர்காழி தாலுக்காவில் உள்ள அரசூர் என்ற கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்கி வந்தது. இக்கொள்முதல் நிலையத்தில் 01-10-2006 முதல் 15-04-2007 வரை 8.81 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. 15-04-2007 முதல் நெல் வரத்து இல்லாததால் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின்படி 30-04-2007 பிற்பகலுடன் மூடப்பட்டு விட்டது.

(ஆ) கேள்வி எழவில்லை.

191—

நெல் கொள்முதல் நிலையம்

வினா எண் 24118—திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, மாளிகைமேடு ஊராட்சியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, மாளிகைமேடு ஊராட்சியில் உள்ள விவசாயிகளிடமிருந்து கரீப் கொள்முதல் பருவம் 2006-2007 மற்றும் நடப்பு பருவம் 2007-2008-ல் இதுவரை கோரிக்கை ஏதும் பெறப்படாததாலும், மாவட்ட ஆட்சியரிடம் இருந்து இப்பொருள் குறித்து பரிசீலனை ஏதும் பெறப்படாததாலும், இதுவரை மாளிகைமேடு ஊராட்சியில் நேரடி நெல்கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை. இனிவரும் காலங்களில் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டால் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

192—

நெல் கொள்முதல் நிலையம்

வினா எண் 32503—திரு. ரெ. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை, கல்லாக்கோட்டை, கோமாபுரம், நாயக்கர்பட்டி, வேலாடிப்பட்டி ஆகிய இடங்களில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) நடப்பு கொள்முதல் பருவம் 2007-2008 ஆம் ஆண்டில், கந்தர்வக்கோட்டை, கல்லாக்கோட்டை கோமாபுரம், நாயக்கர்பட்டி, வேலாடிப்பட்டி ஆகிய இடங்களில் சாகுபடி பகுதி, அறுவடை ஆகியனவற்றைப் பொறுத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பது சம்பந்தமாக விவசாயிகளிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டால், மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2011 ஜனவரி 13

193—

மரக்கன்றுகள் நடுதல்

வினா எண் 33532—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முத்துப்பேட்டைப் பகுதிகளில் அலையாத்திக் காடுகளில் மரக்கன்றுகளை நட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

முத்துப்பேட்டைப் பகுதியில் 1997—98 முதல் அலையாத்திக் காடுகள் ஏற்படுத்தும் பணி பல்வேறு திட்டங்கள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அலையாத்திக் காடுகள், ஆற்று நீரும், கடல் நீரும் கலக்கும் பகுதிகளில் காணப்படும் சதுப்பு நிலப்பகுதிகளில் மட்டுமே வளரும் தன்மை கொண்டது. ஆதலால் புதிதாக ஏற்படுத்துவது குறித்து நதி முகத்துவாரங்களின் தன்மை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஆய்வின் முடிவுகள், மண்வளம் இவற்றின் அடிப்படையில் மட்டுமே பிரேரணைகள் தயார் செய்தல் இயலும். ஆதலால் தற்போது புதிய இடங்களில் அலையாத்திக் காடுகள் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

194—

தணிக்கைச் சாவடி

வினா எண் 52862—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலிருந்து கேரள மாநிலத்திற்கு அரிசி கடத்திச் செல்வதை தடுக்க, தணிக்கை சாவடி பலப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மைய அரசின் கொள்கைப்படி மாநிலங்களிடையே அத்தியாவசியப் பண்டங்களின் இயக்கத்தினை மாநில அரசுகள் தடை செய்ய இயலாது என்பதால், மாநில எல்லையோரங்களில், சோதனை சாவடிகள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. இருப்பினும், அண்டை மாநிலமான கேராளவிற்கு அரிசி கடத்துவதைத் தடுப்பதற்கு போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

195—

வீடுகள்

வினா எண் 170—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உடுமலை மாரியம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடத்தை அரசு கையகப்படுத்தி உடுமலை பகுதி குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

தற்போதைக்கு இல்லை.

196—

சீரமைத்தல்

வினா எண் 1676—திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னையிலுள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

ஆம்.

197—

குடியிருப்புகள் ஒதுக்கீடு

வினா எண் 20604—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்று துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் சேண்பாக்கம் பேரூராட்சி, திநகர் நகர் பகுதியில் குடிசை மாற்று வாரியம் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

அரசு இது குறித்துப் பரிசீலனை செய்து முடிவெடுக்கும்.

198—

வீடுகள்

வினா எண் 20851—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

தற்போதைக்கு இல்லை.

2011 ஜனவரி 13]

199—

வீடுகள்

வினா எண் 23032—செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

தற்போதைக்கு இல்லை.

200—

வீடுகள் வழங்குதல்

வினா எண் 29464—திருமதி பதர்சயீத்: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவல்லிக்கேணி தொகுதி, கஸ்தூரிபாய் மருத்துவமனை நடைபாதைவாசிகளுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2011 ஜனவரி 13

201—

விடுதிகள்

வினா எண் 574—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, சோலைக்கொட்டாய் பாளையம்புதூர், கடத்தூர், அதகபாடி ஆகிய ஊர்களில் பிற்பட்டோர் மாணவர் விடுதிகள் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, சோலைக்கொட்டாய் என்னுமிடத்தில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி 2007—08 ஆம் ஆண்டு துவங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, பாளையம்புதூரில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதியும், கடத்தூரில் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதியும் இயங்கி வருகின்றன. எனவே, இவ்விடங்களில் மேலும் விடுதிகள் துவங்கும் அவசியம் எழாது. அதகபாடியில் புதிய விடுதி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

202—

மாணவர் விடுதி

வினா எண் 577—திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதி, ஆயக்காரன்புலம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதி, ஆயக்காரன்புலத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி ஏற்கனவே செயல்பட்டு வருகிறது.

203—

மாணவர் விடுதி

வினா எண் 768—திரு. எம். பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயில் பகுதியில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியை துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயில் பகுதியில் ஏற்கெனவே இயங்கி வரும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் குறைவாகவே மாணவர் சேர்க்கை உள்ள நிலையில் மேலும் புதிதாக பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்கும் அவசியம் எழாது.

204—

மாணவர் விடுதி

வினா எண் 941—திரு. கோ. எதிரொலி மணியன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு ஒன்றியம், வடபாதிமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி ஒன்று தொடங்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு ஒன்றியம், வடபாதிமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

205—

விரிவுபடுத்தும் திட்டம்

வினா எண் 1018—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இடஒதுக்கீடு நடைமுறையை தனியார் நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசியலமைப்பு சட்டத்தின் உறுப்பு 16(4)இன் கீழ் அரசுப் பணிகளுக்கான நியமனங்களில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. தனியார் துறைகளில் இடஒதுக்கீட்டினை விரிவுபடுத்துவதற்கு அரசியலமைப்பு சட்டத்தில் வழிவகை செய்யப்படவில்லை. அரசியலமைப்பு சட்டத்தின் உறுப்பு 16(4)-க்கு தக்க திருத்தம் கொண்டு வருவதன் மூலமே தனியார் துறைகளில் இடஒதுக்கீடு முறையினை செயல்படுத்த முடியும். எனவே தனியார் துறையிலும் இடஒதுக்கீட்டினை அமல்படுத்த ஏதுவாக அரசியலமைப்பு சட்டம் உறுப்பு 16(4)க்கு தக்க திருத்தங்கள் கொண்டு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

வருமாறு மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அரசியலமைப்பு சட்டத்தின் உறுப்பு 16(4)க்கு உரிய திருத்தங்கள் செய்யப்பட்ட பிறகு தான் தனியார் நிறுவனங்களில் இடஒதுக்கீடு முறையினை விரிவுபடுத்த இயலும்.

206—

தங்கும் விடுதிகள்

வினா எண் 1287—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் மற்றும் மாமல்லபுரம் ஆகிய ஊர்களில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் தங்கும் விடுதிகள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் மற்றும் மாமல்லபுரம் ஆகிய ஊர்களில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் தங்கும் விடுதிகள் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

207—

இலவச சலவைப் பெட்டி

வினா எண் 1944—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச சலவைப்பெட்டி வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஆண்டுதோறும் வரப்பெற்ற மனுக்களின் முதுநிலை மற்றும் தகுதியின் அடிப்படையில் இலவச சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறே உடுமலைப்பேட்டை தொகுதியிலுள்ள மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மக்களுக்கு இலவச சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகிறது. 2006 ஆம் ஆண்டில் உடுமலைப்பேட்டை தொகுதியில் 22 நபர்களுக்கு சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

208—

மாணவிகள் இல்லம்

வினா எண் 2732—திரு. கே. ஆறுமுகம்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவிகள் இல்லம் அமைக்க அரசு முன்வருமா—

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவிகள் இல்லம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

209—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2981—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

பேரூர் தொகுதி, ஒத்தக்கால் மண்டபத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு நிலப்பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, ஒத்தக்கால் மண்டபத்தில், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இனத்தைச் சார்ந்த பொதுமக்களிடமிருந்து நிலப் பட்டா வழங்கக் கோரி விண்ணப்பம் ஏதும் வரப்பெறாததால் வீட்டுமனைப்பட்டா வழங்கும் கருத்துரு அரசின் ஆய்வில் இல்லை. மேலும் இத்துறையால் நிலப்பட்டா வழங்கப்படுவதில்லை.

210—

நிலப் பட்டா

வினா எண் 2983—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, பூசாரிபாளையத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு நிலப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

பேரூர் தொகுதி பூசாரிபாளையத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இனத்தைச் சார்ந்தவர்களிடமிருந்து நிலப் பட்டா வழங்கக் கோரி விண்ணப்பம் ஏதும் வரப்பெறாததால், இந்த செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

[2011 ஜனவரி 13

211—

மாணவர் விடுதி

வினா எண் 3270—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூரிலுள்ள மாணவர் விடுதியை விரிவுபடுத்தவும், போதுமான அடிப்படை வசதிகள் செய்து தரவும் புதியதாக மாணவர் விடுதி ஒன்றை கட்டவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

212—

அடிப்படை வசதிகள்

வினா எண் 3275—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாநகரிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியை விரிவுபடுத்தவும், விடுதிக்குப் போதுமான அடிப்படை வசதிகள் செய்து தரவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகரிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியை விரிவுபடுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

2011 ஜனவரி 13]

213—

அகதிகள் முகாம்

வினா எண் 4193—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் உள்ள இலங்கை தமிழர் அகதிகள் முகாமை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம் மூங்கில் ஊரணியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமை விரிவுபடுத்தும் எண்ணம் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

214—

மாணவியர் விடுதி

வினா எண் 4577—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் அரசு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவிகள் தங்கிப் படிக்க அரசு மாணவியர் விடுதி ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் அரசு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவிகள் தங்கிப் படிக்க மாணவியர் விடுதி அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

215—

மாணவியர் விடுதி

வினா எண் 5101—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார் கோயில் ஒன்றியம், செம்பனார்கோவில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி மீண்டும் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார் கோயில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி எந்த சூழ்நிலையிலும் மூடப்படாமல் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

216—

விடுதிகள்

வினா எண் 9144—திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளித்தலையில் அரசு பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், குளித்தலையில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, பிப்ரவரி 2006-ல் துவங்கப்பட்டுள்ளது. இருப்பினும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவருக்கான விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

217—

குழந்தைகள் கல்வி

வினா எண் 16270—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு *பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நரிக்குறவர்கள் இனத்தவரின் குழந்தைகள் கல்வி பயில சிறப்பு கவனம் செலுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நரிக்குறவர் இனத்தவர் அனைவரும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். மிகப் பிற்படுத்தப்பட்டோர் இனத்தவர்களுக்குரிய சலுகைகள் யாவும் மேற்படி நரிக்குறவர் இனத்தவருக்கும் பொருந்தும். எனவே, இதனை தனியாக செயல்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

218—

விடுகள்

வினா எண் 16271—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு *பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 ஜனவரி 13

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் நரிக்குறவர் இனத்தவருக்கு வீடு கட்டி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் நரிக்குறவர் இனத்தவருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் ஏதுமில்லை.

219—

வீட்டு மனைப் பட்டா

வினா எண் 17782—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோனூர் மேற்கு கிராமம், காமராஜர் நகர், கோனூர் கிராமம், சின்ன கோனூர் பகுதிகளில் வசிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை

(ஆ) வினா எழாது.

220—

மாணவர் விடுதி

வினா எண் 18331—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

மேல்மலையனூர் தொகுதி, சத்தியமங்கலத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதி, சத்தியமங்கலத்தில் புதிய விடுதி துவங்குவதற்கான நிபந்தனைகள் பூர்த்தியாகததால் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

221—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 18465—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கைத்தறி ஜமுக்காள தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் கைத்தறி ஜமுக்காள தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

222—

புதிய விடுதி

வினா எண் 18548—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) காஞ்சிபுரத்தில் பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு பிறபடுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் புதிய விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்தில் பள்ளி மாணவ/ மாணவியர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் புதிய விடுதிகள் துவக்கும் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

223—

மாணவியர் விடுதி

வினா எண் 24574—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அரசுக் கல்லூரி மாணவியர்களுக்கு விடுதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டையில் அரசுக் கல்லூரி மாணவியர்களுக்கு விடுதி துவங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

224—

புதிய விடுதிகள்

வினா எண் 26377—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரில் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியர்களுக்கு புதிய விடுதிகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

ஓமலூரில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர்களுக்கு புதிதாக விடுதிகள் கட்டும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

225—

மாணவர், மாணவியர் விடுதி

வினா எண் 27438—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, ஆலப்பட்டி, மகாராஜக்கடை, குருபரப்பள்ளி, வேப்பனப்பள்ளி ஆகிய பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ/ மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி தொகுதி, ஆலப்பட்டி, மகாராஜக்கடை, குருபரப்பள்ளி, வேப்பனப்பள்ளி ஆகிய பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ/ மாணவியர் விடுதி கட்டும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

226—

மாணவியர் விடுதி

வினா எண் 30047—திருமதி மு. சந்திரா: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) இராசபாளையம் தொகுதி, கிழவிகுளத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராசபாளையம் தொகுதி, கிழவிகுளத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி கட்டும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

227—

இலவச விடுதி

வினா எண் 30732—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலமலை தொகுதி, மோகனூரிலும், வேலூரிலும் கல்லூரி மாணவியர்களுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இலவச விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கபிலமலை தொகுதி, மோகனூரிலும், வேலூரிலும் கல்லூரி மாணவியர்களுக்கு மிகப் பிற்படுத்தப்பட்டோர் இலவச விடுதி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

228—

மாணவியர் விடுதி

வினா எண் 30733—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

(அ) மோகனூர், கபிலமலை, பரமத்தி ஒன்றியங்களில் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மோகனூர், கபிலமலை, பரமத்தி ஒன்றியங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர் விடுதி அமைக்கும் கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

229—

மாணவர் விடுதி

வினா எண் 31716—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆணாய் பிறந்தான் கிராமத்தில், மிகவும் பிற்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆணாய் பிறந்தான் கிராமத்தில், மிகவும் பிற்பட்டோர் நல மாணவர் விடுதி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

230—

புதிய கட்டடம்

வினா எண் 32533—திரு. வை. காவேரி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) எடப்பாடி மகளிர் பிற்பட்டோர் நல விடுதிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி புதிதாக துவங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு 3-10-2007 முதல் செயல்பட்டு வருகிறது. எனினும் எடப்பாடியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி ஏதும் செயல்படாத நிலையில் அங்கே விடுதி கட்டடம் கட்டும் வினா எழாது.

231—

கணிப் பயிற்சி மையம்

வினா எண் 32908—திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இஸ்லாமிய பெண்களின் கல்வி நிலையை மேம்படுத்த லால்பேட்டையில் கணினி பயிற்சி மையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

இஸ்லாமியப் பெண்களின் கல்வி நிலையை மேம்படுத்த லால்பேட்டையில் கணினி பயிற்சி மையம் ஏற்படுத்துவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

232—

கட்டடம்

வினா எண் 33709—திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலையில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளித்தலையில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஏதும் இல்லை. எனவே, அதற்குக் கட்டடம் கட்டும் வினா எழாது.

233—

மாணவர் விடுதி

வினா எண் 38022—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி துவங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

[2011 ஜனவரி 13

234—

மாணவர் விடுதி

வினா எண் 38023—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காவேரிப்பட்டினம் தொகுதி, பாரூர் ஊராட்சி, பாரூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

காவேரிப்பட்டினம் தொகுதி, பாரூர் ஊராட்சி, பாரூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி கட்டும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

235—

பொறியியல் கல்லூரி

வினா எண் 38762—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

236—

மாணவியர் விடுதி

வினா எண் 38874— திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு *பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, வேதியரேந்தலில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்கவும், இளையான்குடியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும் அதே தொகுதிக்குட்பட்ட வேதியரேந்தலில் பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப் பட்டோருக்கான மாணவர் விடுதி அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

237—

மாணவிகள் விடுதி

வினா எண் 39570—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு *பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவிகள் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சிவகங்கை மாவட்டம், இளையான்குடி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக்கு அரசுக் கட்டடம் கட்டப்பட்டு 1-11-2007 முதல் விடுதி அக்கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

238—

கடன்தொகை உயர்த்துதல்

வினா எண் 47186—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிறுபான்மையினர் சுயதொழில் தொடங்கிட தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதி கழகம் வழங்கும் கடன் தொகையை ரூ.50,000/- ஆக உயர்த்தி வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதி கழகத்தின் முகவராக செயல்பட்டு வருகிறது. தேசிய கழகம் அளிக்கும் குறைந்த வட்டி கடனைபெற்று சிறுபான்மையினருக்கு சுய தொழில் தொடங்கிட ரூ. 1,00,000/- வரை 6 சதவீத வட்டியில் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வழங்குகிறது. எனவே, சுயதொழில் தொடங்கிட வழங்கப்படும் கடன் தொகையை ரூ.50,000/- வரை உயர்த்துவதற்கான வினா எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

239—

மாணவர் விடுதி

வினா எண் 48591—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, சாப்பரம் அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் அரசம்பட்டி ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, சாப்பரம் மற்றும் அரசம்பட்டி ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

240—

தரம் உயர்த்துதல்

வினா எண் 48596—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், கே. விலாங்குளம் அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, கோவிலாங்குளம் அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளியில் மிகக் குறைந்தளவே மாணவ, மாணவியர்கள்

[2011 ஜனவரி 13

உள்ளதால் இப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த சாத்தியக்கூறு இல்லை.

241—

தரம் உயர்த்துதல்

வினா எண் 48597—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், வே. கள்ளப்பட்டி அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, வே. கள்ளப்பட்டி அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளியில் மிகக் குறைந்தளவே மாணவ, மாணவியர்கள் உள்ளதால் இப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த சாத்தியக்கூறு இல்லை.

242—

தரம் உயர்த்துதல்

வினா எண் 48611—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், பூச்சிப்பட்டி அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, பூச்சிப்பட்டி அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

243—

நூற்பாலை அமைத்தல்

வினா எண் 48351—திரு. வை. காவேரி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் ஒரு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் நூற்பு ஆலை அமைக்கும் பிரேரணை எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

244—

மாணவர் விடுதி

வினா எண் 57317—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, நத்தமேடு அரசு உயர்நிலைப்பள்ளியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியினை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

மொரப்பூர் தொகுதி, நத்தமேடு பகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி துவங்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

245—

மாணவியர் விடுதி

வினா எண் 57318—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, அதிகாரப்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதியினை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

மொரப்பூர் தொகுதி, அதிகாரப்பட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி துவங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

246—

கைத்தறி நெசவுப் பூங்கா

வினா எண் 57860—திரு. லை. காவேரி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கைத்தறி நெசவுப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டத்தில் கைத்தறி நெசவுப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

247—

பல்முனை நூற்பு இயந்திரக்கூடம்

வினா எண் 58260—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் பல்முனை நூற்பு இயந்திரக்கூடம் மற்றும் விசைத்தறி வணிக வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் பல்முனை நூற்பு இயந்திரக் கூடம் மற்றும் விசைத்தறி வணிக வளாகம் அமைப்பது குறித்தான செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

248—

பட்டு ஏற்றுமதி மையம்

வினா எண் 58999—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் பட்டு ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்தில் பட்டு ஏற்றுமதி மையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 ஜனவரி 13

249—

மாணவிகள் விடுதி

வினா எண் 61122—திரு. சி. துரைராஜ்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேடப்பட்டி தொகுதி, தாடையம்பட்டி கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் மாணவிகள் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

சேடப்பட்டி தொகுதி, தாடையம்பட்டியில் கள்ளர் சீரமைப்பு மாணவியர் விடுதி துவக்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

250—

தொலைக்காட்சி பெட்டி

வினா எண் 61145—திரு. வ. முல்லைவேந்தன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

+1, +2 மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு தொலைக்காட்சி பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

+1, +2 மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு தொலைக்காட்சி பெட்டி வழங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

251—

மாணவியர் விடுதி

வினா எண் 61739—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் கல்லூரி மாணவிகள் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

252—

ஜவுளிப் பூங்கா

வினா எண் 61498—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்தை மையமாகக் கொண்டு ஜவுளி பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

சேலத்தை மையமாகக் கொண்டு ஜவுளிப் பூங்கா அமைக்க தொழில் முனைவோர்கள் முன்வரும் பட்சத்தில் அங்கு ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

253—

மாணவிகள் விடுதி

வினா எண் 61739—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் கல்லூரி மாணவிகள் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

254—

தங்கும் விடுதி

வினா எண் 62126—திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வலங்கைமான் தொகுதி, அரித்தாவரமங்களம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் தங்கும் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

வலங்கைமான் தொகுதி, அரித்தாவரமங்களத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

255—

மாணவ, மாணவியர் விடுதி

வினா எண் 62689—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, கனிகார அள்ளி உயர்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் மற்றும் மாணவியர் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, கனிகார அள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் மற்றும் மாணவியர் விடுதி துவங்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

256—

மாணவ, மாணவியர் விடுதி

வினா எண் 62693—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, வெங்கட்டம்பட்டி மேல்நிலைப்பள்ளியில் புதியதாக மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ மற்றும் மாணவியர் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, வெங்கட்டம்பட்டியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதி துவங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

257—

மாணவியர் விடுதி

வினா எண் 62695—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, அதகப்பாடி உயர்நிலைப் பள்ளியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, அதகப்பாடியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி துவக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

258—

மாணவ, மாணவியர் விடுதி

வினா எண் 62697—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

(அ) தருமபுரி தொகுதி, தாதநாயக்கன்பட்டி உயர்நிலைப் பள்ளியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் மற்றும் மாணவியர் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, தாதநாயக்கன்பட்டியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதி துவங்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

259—

அதிகப்படுத்துதல்

வினா எண் 69381—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, அரசு மேல்நிலைப்பள்ளி மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அரசு மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி வாடகைக் கட்டடத்தில் இயங்கப் பெறுவதால் தற்போது இவ்விடுதியில் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்குச் சாத்தியக்கூறு இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[2011 ஜனவரி 13

260—

கூட்டுறவு நூற்பாலை

வினா எண் 75473—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் அரசு கூட்டுறவு நூற்பாலை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரியில் அரசு கூட்டுறவு நூற்பாலை துவக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

261—

ஜவுளிப் பூங்கா

வினா எண் 81498—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்தை மையமாகக் கொண்டு ஜவுளி பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

சேலத்தை மையமாகக் கொண்டு ஜவுளிப் பூங்கா அமைக்க தொழில் முனைவோர்கள் முன்வரும் பட்சத்தில் அங்கு ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யும்.

2011 ஜனவரி 13]

262—

மாணவர்கள் விடுதி

வினா எண் 90765—திரு. வை. காவேரி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி பகுதியில், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி மற்றும் அதனை சுற்றி 8 கி.மீ. சுற்றளவுக்குள் மாணவர்களுக்கென 1 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி மற்றும் 3 மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் ஏற்கெனவே செயல்பட்டு வரும் நிலையில், மேலும் புதிய விடுதிகள் துவங்குவதற்கான தேவை எழவில்லை.

263—

ஆலை திறத்தல்

வினா எண் 121—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் மூடிக்கிடக்கும் ஆலைகளை திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மூடப்பட்ட ஆலைகளை மீண்டும் திறந்து இயக்கக்கூடிய சாத்தியக்கூறுகளை ஆராய மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராகக் கொண்டு முத்தரப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

[2011 ஜனவரி 13

264—

உதவித் தொகை

வினா எண் 123—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) அரசாணை (நிலை) எண் 72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 25-08-2006-ல் வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டம் அறிமுகப்படுத்தி ஆணையிடப்பட்டு தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் படித்து வேலை வேண்டி தங்கள் பெயரினை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து உயிர்ப்பதிவேட்டில் ஐந்தாண்டுகளுக்கு மேல் காத்திருக்கும் வேலையற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகையாக பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு பிரதி மாதம் 150/- ரூபாயும், +2 மேல்நிலைப் பள்ளிப் படிப்பை நிறைவு செய்தவர்களுக்கு மாதம் 200/- ரூபாயும், பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு (பொறியியல், மருத்துவம், விவசாயம் மற்றும் கால்நடை மருத்துவம் போன்ற தொழிற்கல்விகள் நீங்கலாக) மாதம் 300/- ரூபாயும் உதவித் தொகையாக மூன்றாண்டுகளுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வுதவித்தொகை பயனாளிகளுக்கு ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் அவர்கள் வங்கிகளில் தொடங்குகின்ற சேமிப்பு கணக்கில் வங்கி வரைவோலையாக பற்று வைக்கப்படுகிறது.

2011 ஜனவரி 13]

265—

தொழிற் பயிற்சி நிலையம்

வினா எண் 140—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை பகுதியில் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

266—

போனஸ் வழங்குதல்

வினா எண் 289—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 20 சதவிகிதம் போனஸ் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொழில் நிறுவனங்களில் அந்தந்த கணக்காண்டில் மற்றும் கிடைக்கும் லாபம், நஷ்ட அடிப்படையில் குறைந்தபட்சம் 8.33% முதல் அதிக பட்சமாக 20% வரை போனஸ், போனஸ் பட்டுவாடா சட்டப்படி வழங்கப்படும்.

[2011 ஜனவரி 13

267—

இரத்து செய்தல்

வினா எண் 290—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் கிலோ ஒன்றுக்கு 10 பைசா பிடித்தம் செய்வதாக நிர்வாகம் அறிவித்துள்ளதை இரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிளாண்டர்ஸ் அசோசியேஷன் ஆப் தமிழ்நாடு-ல் உறுப்பினர்களாக உள்ள தோட்ட நிறுவன நிர்வாகங்களுக்கும், தொழிற்சங்கங்களுக்குமிடையே 5—12—2005 அன்று ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டின்படி அடிப்படை குறைந்தபட்ச தேயிலைப் பறிப்பு (ஙிணீஃமீ ஷீஞூமீ ஜீஞூமீ) ஊதியத்திலை பிடித்தம் செய்வது பொறுத்த அளவில் அடிப்படை குறைந்த பட்ச தேயிலைப் பறிப்பு சராசரி மாத மகசூலை பொறுத்து 15 கிலோ முதல் 33 கிலோ வரை இருக்கும் எனவும் இந்த அடிப்படையில் அடிப்படை குறைந்தபட்ச தேயிலைப் பறிப்பிற்கு குறைவாக தேயிலைப் பறித்தால் 1 கிலோவுக்கு 10 பைசா பிடித்தம் செய்வது என ஒப்புக் கொள்ளப்பட்டது. இதனை ஆட்சேபித்து தொழிற்சங்கம் தொழிற்தாவா ஏதும் எழுப்பவில்லை என்பதால் இப்பிரச்சினையில் அரசு நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை.

268—

நிரந்தர தகுதி

வினா எண் 291—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் 20 ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் தற்காலிகத் தொழிலாளர்களை நிர்வாகம் நிரந்தரம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு தொழிலாளி 24 மாத காலத்தில் 480 நாட்களுக்கு மேல் தொழில் நிறுவனத்தில் பணிபுரிந்தால் தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுதி அளிக்கும்), சட்டம், 1981-ன் கீழ் நிரந்தரம் செய்யலாம்.

269—

வேலைப் பளு

வினா எண் 295—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்வாகம் வேலைப் பளுவை உயர்த்த உள்ளதை தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் பிளாண்டர்ஸ் அசோசியேஷனில் உறுப்பினர்களாக உள்ள தோட்ட நிர்வாகங்களுக்கும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களில் பெரும்பான்மை தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட 17 தொழிற் சங்கங்களுக்குமிடையே 23-9-2005 அன்று ஏற்பட்டுள்ள ஒப்பந்தப்படி தின ஊதியம் ரூ. 77 எனவும், 1-7-2005 முதல் அகவிலைப்படி நாள் ஒன்றுக்கு 15 பைசா வீதம் உயர்த்திக் கொடுக்கப்படும் எனவும், 1-10-2005 முதல் நாள் ஒன்றுக்கு 30 பைசா வீதம் ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் உயர்த்தி அளிக்கப்படும் என்றும், இவ்வொப்பந்தம் 31-12-2007 வரை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

அமலில் இருக்கும் எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இவ்வொப்பந்தம் ஊதியத்துடன் இணைக்கப்பட்ட வேலைப்பளு தொடர்பாக ஏற்பட்டுள்ளது என்பதாலும் இதை இரத்து செய்யக் கோரியோ அல்லது வேலைப் பளுவை மாற்றியமைக்கக் கோரியோ தொழிற்சங்கங்கள் எந்த விதமான தாவாவும் எழுப்பவில்லை என்பதால், இப்பிரச்சினையில் அரசு தலையிட வாய்ப்பில்லை.

270—

கூலி உயர்த்துதல்

வினா எண் 296—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்வாகம் கொடுத்து வரும் கூலியை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் தோட்டத் தொழிலாளர்கள் தின ஊதியமான 76.85- 31-12-2001 வரை பெற்று வந்தனர். தேயிலை தோட்ட தொழில் வீழ்ச்சி கண்டுள்ளதாகத் தெரிவித்து இத்தின ஊதியத்தினை ரூ. 76.85-ஐ ரூ. 60/- ஆகக் குறைத்து வழங்கிட தேயிலை தோட்ட நிறுவனங்கள் தொழிற் தகராறு சட்டப்பிரிவு 9ஏ-ன்கீழ் அறிவிப்பு வழங்கின. இத்தாவா தொடர்பாக சுமூக முடிவு ஏற்படாத நிலையில் தாவா, அரசாணை எண் 799, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 19-09-2002-ல் நடுவர் தீர்ப்பிற்கு விட உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது சிறப்பு தொழிற் தீர்ப்பாயத்தின் முன்பு நிலுவையில் உள்ளது.

2011 ஜனவரி 13]

271—

கட்டடம்

வினா எண் 384—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் தொழிலாளர்களுக்கென நவீன இ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைப்பதற்கான நில ஆர்ஜிதம் உள்ளிட்ட ஆரம்ப கட்டடப் பணிகளை விரைவில் முடிக்கும் திட்டத்திற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

திருப்பூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கட்டுவதற்கான நிலத்தை கையகப்படுத்தும் பொருட்டு இந்து அறநிலையத் துறை ஆட்சியாளரின் ஒப்புதல் அளிக்குமாறு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் கோரியுள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மருத்துவமனைக்குரிய கட்டடத்தினை கட்டித்தரும். கட்டடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் திருப்பூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை துவக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

272—

விடுதி உருவாக்குதல்

வினா எண் 586—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் பெண் தொழிலாளர்கள் தங்குவதற்கென அரசு சார்பில் தங்கும் விடுதிகள் உருவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

273—

வாரியம்

வினா எண் 623—திரு. க. சுந்தர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001-ல் ஏற்படுத்தப்பட்ட அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான வாரியங்களின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

2000 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட ஒன்பது நல வாரியங்கள் 21-7-2004-ல் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டன. தற்சமயம் அந்த ஒன்பது நல வாரியங்கள் தனித்தனியே 1-9-2006 முதல் அமைக்கப்பட்டுள்ளன.

274—

வேலைவாய்ப்பு

வினா எண் 708—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் 40 ஆலைகள் மூடப்பட்டுள்ளதால் வேலையின்றி தவிக்கும் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது இவ்வாலைகள் சம்பந்தமாக வழக்கு ஏதும் நிலுவையில் இல்லை. வங்கி நிதிக்கடன் சம்பந்தமான பிரச்சனைகள் மற்றும் பங்குதாரர்களிடையே ஏற்பட்ட பிரச்சனைகள் காரணமாக மூடப்பட்டுள்ளது என்பதால், இவ்வாலைகள் மீண்டும் இயக்கி பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் அதே ஆலையில் வேலை கிடைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

275—

வேலைவாய்ப்பு அலுவலகம்

வினா எண் 729—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் மாவட்ட வேலைவாய்ப்பு கிளை அலுவலகத்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

ஓசூரில் மீண்டும் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் (கிளை வேலைவாய்ப்பு அலுவலகம்) ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

276—

தரம் உயர்த்துதல்

வினா எண் 756—திரு. ல. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி நகரில் தீப்பெட்டித் தொழில், பஞ்சாலைத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் நலனுக்காக அங்குள்ள இ.எஸ்.ஐ. மருந்தகத்தை படுக்கை வசதிகளுடன் கூடிய இ.எஸ்.ஐ. மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி நகரில் தீப்பெட்டித் தொழில், பஞ்சாலைத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் நலனுக்காக அங்குள்ள இ.எஸ்.ஐ. மருந்தகத்தை படுக்கை வசதிகளுடன் கூடிய இ.எஸ்.ஐ. மருத்துவமனையாக தரம் உயர்த்தும் கருத்துரு தற்சமயம் அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

277—

விழிப்புணர்வு பயிற்சி

வினா எண் 876—திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீப்பெட்டி, பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துக்களை தவிர்க்க தொழிலாளர்களுக்கு விபத்துத் தடுப்பு விழிப்புணர்வு, பாதுகாப்புப் பயிற்சிகள் மற்றும் முதலுதவி பயிற்சிகள் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகள் அதிகமாகவுள்ள சிவகாசி மற்றும் விருதுநகர் பகுதிகளில் பாதுகாப்பு விழிப்புணர்வை அதிகப்படுத்தும் வகையிலும் விபத்துக்களைத் தடுக்கும் வகையிலும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி வகுப்புகள் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் நடத்தப்பட்டு வருகின்றன. அச்சமயத்தில் பாதுகாப்பு பற்றிய சட்ட விதிகள் அடங்கிய கையேடுகள் அச்சிட்டு பங்கேற்பவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2011 ஜனவரி 13]

278—

பாதுகாப்பு

வினா எண் 877—திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு பணிசெய்யும் இடங்களில் Provident Fund, Employee's State Insurance போன்ற பலன்கள் கிடைக்கவும் தொழிலாளர்கள் அனைவரின் பெயர்களும் பணி செய்கின்ற தொழிற்சாலைகளில் பதிவு செய்யப்படவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

அமைப்புச் சாரா தொழிலாளர்கள் பணிபுரியும் இடங்களில் Provident Fund, Employees' State Insurance போன்ற பலன்கள் கிடைப்பது, அவர்களின் பெயர்களை பணி செய்கின்ற தொழிற்சாலைகளில் பதிவு செய்தல் போன்ற பணிகள் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டத்தின்கீழ் வருவதில்லை. எனவே, இப்பணிகளை தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் கவனிப்பது இல்லை.

279—

மருத்துவ உதவி

வினா எண் 1057—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் என்.இ.பி.சி. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மருத்துவ உதவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

வால்பாறையில் என்.இ.பி.சி. லிமிடெட் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டப்படி நிர்வாகமே மருத்துவ வசதி அளித்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

280—

பயிலகம்

வினா எண் 1489—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் தொழில்நுட்பப் பயிலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

இல்லை.

281—

நல வாரியம்

வினா எண் 1987—திரு. என். நன்மாறன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சணல் பை தைக்கும் தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

சணல் பை தயாரிக்கும் தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

282—

பதிவு மூப்பு

வினா எண் 1988—திரு. என். நன்மாறன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்குள் விடுபட்டு போனவர்களுக்கு மீண்டும் பதிவு மூப்பு கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

283—

பணிக்கொடை

வினா எண் 3560—திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூர் தொகுதியில் 20 ஆண்டுகளுக்கு முன் மூடப்பட்ட ராதாகிருஷ்ணா நூற்பு ஆலையில் பணிபுரிந்த நிரந்தரத் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

ராதாகிருஷ்ணா நூற்பு ஆலை தற்போது சென்னை, சட்டமுறையான கலைப்பு அதிகாரியின் பொறுப்பில் உள்ளதால் பணிக்கொடை வழங்குவது குறித்து அரசின் நடவடிக்கை ஏதும் இல்லை.

284—

பணி நிரந்தரம்

வினா எண் 3561—திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் உள்ள அனைத்து பஞ்சாலைகளிலும் கேம்ப் கூலி என்ற பெயரில் உள்ள பெண் தொழிலாளர்களை நிரந்தர தொழிலாளர்களாக்கி அனைத்து சலுகைகளும் வழங்க அரசு முன்வருமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தொழிற்சாலைகளில் கேம்ப் கூலி என்ற பெயரில் பெண் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி வேலை வாங்குவது குறித்து தொழிற்சாலைகளில் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் தொழிலாளர் துணை ஆணையர், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டது. இதற்கிடையில் தொழிற் சங்கத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை விசாரித்து, சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர், தொழிலாளர் துணை ஆணையர், தமிழ்நாடு சட்டப்பணிகள் ஆணையத்தின் பிரதிநிதி ஒருவரும் மற்றும் அரசு சாராத அமைப்பைச் சேர்ந்த பெண் பிரதிநிதி ஒருவரையும் கொண்ட மாவட்ட கண்காணிப்புக் குழு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு இப்பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்கிறது.

285—

அலுவலகக் கிளை

வினா எண் 5314—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் அரசு வேலைவாய்ப்பு அலுவலகக் கிளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

வால்பாறையில் வேலைவாய்ப்பு அலுவலகக் கிளை ஒன்றை ஏற்படுத்த செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

286—

பயிற்சி நிலையம்

வினா எண் 5315—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் தொழிற் கல்வி பயிற்சி நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

287—

பதிவு செய்தல்

வினா எண் 6062—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு மாவட்டத்திலிருந்து வேறு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மாணவர்கள் பதிவு செய்ய அனுமதிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தற்போதுள்ள விதிமுறைகளின்படி ஒரு மாவட்டத்தில் வசிப்பவர் வேறு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்ய இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

288—

தொழிற் பயிற்சி நிலையம்

வினா எண் 8354—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் தொழிற் பயிற்சி நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

இல்லை.

289—

கல்லூரி அமைத்தல்

வினா எண் 8812—திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் தொழிற் பயிற்சி கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

290—

தொழிற் பயிற்சி நிலையம்

வினா எண் 10833—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) வால்பாறையில் அரசு தொழிற் பயிற்சி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) அதில் ஆப்செட் இயந்திரம் இயக்கவும், தொழிற் கல்வி மற்றும் டிஜிட்டல் புகைப்படத் தொழிற் கல்வி துவக்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

291—

பயிற்சி நிலையம்

வினா எண் 10875—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் மற்றும் வால்பாறையில் தொழிற் கல்வி பயிற்சி நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

292—

தொழிற் பயிற்சி

வினா எண் 11235—திரு. கோ. ஐயப்பன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

கடலூரில் அரசு மகளிர் தொழிற் பயிற்சி நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

இல்லை.

293—

உதவித் தொகை

வினா எண் 13758—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் நல வாரிய உதவிக்கான மனுக்களைத் துரிதமாக நடவடிக்கையெடுத்து உதவித் தொகைகளைப் பயனாளிகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

குமரி மாவட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் உதவித் தொகைக்கான மனுக்கள் மீது துரித நடவடிக்கையெடுத்து உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

294—

மருத்துவமனை

வினா எண் 13763—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரி தொழிலாளிகளுக்காக தக்கலை, கருங்கல், திங்கள் நகர் ஆகிய மையங்களில் இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் கன்னியாகுமரி மாவட்டம், கருங்கலில் 16-11-2006 முதல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. தற்சமயம் தமிழ்நாட்டில் காப்பீட்டு மருத்துவ முறை தொடங்க அரசு தீவிரமாக பரிசீலித்து வருகின்றது. காப்பீட்டு மருத்துவ முறை (IMP) *அமல்படுத்தப்பட்டவுடன் தக்கலையில் காப்பீட்டு மருத்துவ முறை தொடங்கப்படும். 3,000 காப்பீட்டாளர்களுக்கு மேல் வசிக்கும் இடங்களில் மட்டுமே தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் தொடங்கப்படும் என்ற அளவீட்டின் அடிப்படையில் மண்டல தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம், திங்கள் நகரை அளவிட்ட பின்* (Survey). *அங்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தினைச் செயல்படுத்த அரசால் நடவடிக்கை எடுக்கப்படும்.*

295—

மருத்துவமனை

வினா எண் **13764—திரு. ஞா. ஜாண் ஜோசப்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் பலதரப்பு அறுவை சிகிச்சை வசதி உட்படவுள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனை துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா. மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை/மருந்தகம் தொடங்க அளவை செய்வது தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் ஆகும். 1 இலட்சம் காப்பீட்டாளர்களுக்கு மேல் வசிக்கும் இடங்களில் மட்டுமே தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் தொடங்கப்படுகின்றன. நாகர்கோவில் பகுதியில் தற்சமயம் 20,000-க்கும் குறைவான காப்பீட்டாளர்களே வசிக்கின்றனர்.

தற்சமயம் அரசும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமும் ஒரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை திருநெல்வேலியில் தொடங்க தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. எனவே, ஒரு புதிய மருத்துவமனையை நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்க சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

296—

தொழிற் பயிற்சி

வினா எண் 13781—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில், மாலை நேர தொழிற் பயிற்சி வகுப்புகள் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

இல்லை.

297—

நவீனப்படுத்துதல்

வினா எண் 13782—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் பராமரிக்கப்படும் மாமல்லபுரம் நேரு ஓய்வு இல்லத்தை நவீனப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

மாமல்லபுரம், ஜவஹர்லால் நேரு ஓய்வு இல்லம் பழுது பார்த்து நவீனப்படுத்தும் பணி பொதுப் பணித் துறையினரால் ரூ. 13.60 இலட்சம் செலவில் 3-3-2006 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

298—

தொழிற் பயிற்சி நிலையம்

வினா எண் 14626—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளிதொகுதி, கெலமங்கலத்தில், தொழிற் பயிற்சி நிலையம் (I.T.I.) துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

299—

உதவித் தொகை

வினா எண் 14873—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளில் பணி புரிந்து வேலை இழந்தவர்களின் குடும்பத்தினருக்கு உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம் உள்ளிட்ட தமிழ்நாட்டில் 31-03-1990-க்குப் பிறகும் 30-4-1998-க்கு முன்னரும் மூடப்பட்ட/ இயங்காமல் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு 1-05-1999 முதல், மாதம் ரூ. 250/-உதவித் தொகை வழங்கும் திட்டம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

300—

பால் பேக்

வினா எண் 15034—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் சில நிர்வாகம் தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு பால் பேக் முறையினைக் கொண்டு வந்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நிர்வாகங்களுக்கும், தொழிற்சங்கங்களுக்குமிடையே ஏற்பட்ட இரு தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த பால் பேக் நடைமுறை அமலில் உள்ளது. இது குறித்து தொழிற்தாவா எதுவும் நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இடையே இல்லை. மேலும், தொழிற்தாவா ஏதும் எழுப்பவில்லை. எனவே, இப்பிரச்சினையில் அரசு நடவடிக்கை எழவில்லை.

301—

நடமாடும் மருத்துவமனை

வினா எண் 17164—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு நடமாடும் மருத்துவமனை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை —

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தோட்டத் தொழிலாளர் சட்ட விதிகளின்படி மருத்துவமனைகள்/மருந்தகங்கள் தோட்ட நிறுவனங்களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் நிலையில், வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நடமாடும் மருத்துவமனை அமைத்துத் தர சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை. மேலும், நடமாடும் மருத்துவமனை அமைப்பது குறித்து தோட்டத் தொழிலாளர் சட்ட விதிகளில் வழிவகை ஏதும் இல்லை.

302—

ஒளி பரப்புதல்

வினா எண் 15034—அ—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைத் தொழிலாளர்களை பணியமர்த்துபவர் மீது அரசு நடவடிக்கை எடுப்பதை செய்திகள் மூலம் ஒளிபரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் முறையினை ஒழிப்பதற்கு மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட அளவிலான குழுக்கள் மூலமாகவும், குழந்தைத் தொழிலாளர் தடுப்புக் குழு மூலமாகவும், குழந்தைத் தொழிலாளர் சட்டத்தின்கீழ் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் விவரங்கள் அவ்வப்போது செய்தி ஊடகங்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலமாக தெரிவிக்கப்பட்டு, அதன் விவரங்கள் உள்ளூர் செய்தித்தாள்களில் வெளியிடப்படுவதுடன் உள்ளூர் தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

303—

நல வாரியம்

வினா எண் 17632—திரு. ஜி. கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நெசவாளர்கள் நல வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவுத் தொழிலாளர் நல வாரியம் 1-9-2006 முதல் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

304—

மையம்

வினா எண் 17636—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் அணைப்பகுதியில் தொழிலாளர் குறை தீர்க்கும் மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

2011 ஜனவரி 13]

305—

பயிற்சி நிலையம்

வினா எண் 17990—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் மகளிருக்கான தொழிற் பயிற்சி நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

306—

தரம் உயர்த்துதல்

வினா எண் 20470—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொழிற் பயிற்சி நிலையத்தை தொழில் நுட்பக் கல்லூரியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

307—

அலுவலகம் செயல்படுத்துதல்

வினா எண் 21783—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வேலைவாய்ப்பு அலுவலகத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மேட்டூரில் மீண்டும் வேலைவாய்ப்பு அலுவலகத்தை செயல்படுத்துவதற்கான குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) எழவில்லை.

308—

நல வாரியம்

வினா எண் 22615—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சமையல் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு சமையல் தொழிலாளர் நல வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டிலுள்ள சமையல் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு தனி நலவாரியம் அமைப்பது குறித்து முன்மொழிவு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

2011 ஜனவரி 13]

309—

தொழிற்சாலை திறத்தல்

வினா எண் 22636—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் மூடப்பட்ட ஜிப் தயாரிக்கும் தொழிற்சாலையை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரையில் உள்ள ஜிப் தயாரிக்கும் தொழிற்சாலை கதவடைப்பு செய்யப்பட்டது தொடர்பாக நிர்வாகத்திற்கும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையே 17-09-2007 அன்று மதுரை தொழிலாளர் இணை ஆணையர் முன்னிலையில் தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12(3)ன்கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து 20-09-2007 முதல் கதவடைப்பு விலக்கிக் கொள்ளப்பட்டு தொழிலாளர்கள் பணிக்கு திரும்பி உள்ளனர்.

(ஆ) ஆலை 20-09-2007 முதல் இயங்கி வருகிறது.

310—

ஊதிய நிர்ணயம்

வினா எண் 23408—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்ட முந்திரி தொழிற்சாலைகளின் பெண் கூலித் தொழிலாளர்களுக்கு உயர்ந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) எந்த ஒரு தொழிலுக்கும் அரசால் உயர்ந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்படுவதில்லை.

(ஆ) எழாது.

311—

நீதிமன்றம்

வினா எண் 25059—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கு தனி தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாருர் ஆகிய மாவட்டங்களுக்கு தனி தொழிலாளர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

312—

தொழிற் பயிற்சி

வினா எண் 26714—திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

(அ) நன்னிலத்தில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

313—

குடியிருப்பு

வினா எண் 25928—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் தொழிலாளர் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

திருப்பூரில் தொழிலாளர் குடியிருப்பு கட்டுவது குறித்து செயற்குறிப்பு எதுவும் தொழிலாளர் துறையின் பரிசீலனையில் இல்லை.

314—

மருத்துவமனை

வினா எண் 26276—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனை நிறுவ அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டின் எந்தவொரு பகுதியிலும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை/மருந்தகம் தொடங்க அளவை (Survey) செய்து தக்க பரிந்துரைகள் செய்வது தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமாகும். 50,000 காப்பீட்டாளர்களுக்கு மேல் வசிக்கும் பகுதிகளில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையும் 3,000 காப்பீட்டாளர்களுக்கு மேல் வசிக்கும் பகுதிகளில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகமும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் தொடங்கப்படுகிறது. ஓமலூரில் காப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 3,000-க்கும் குறைவாக உள்ளதால் ஓமலூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தற்சமயம் துவக்க இயலாது.

315—

கல்லூரி திறத்தல்

வினா எண் 26319—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதியில் தொழிற் பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

316—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 28266—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) வரகூர் தொகுதி, வேப்பூரில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

317—

மருத்துவமனை

வினா எண் 28560—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் நகரில் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம்/மருத்துவமனை தொடங்க அளவை செய்வது தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமாகும். 50,000 காப்பீட்டாளர்களுக்கு மேல் வசிக்கும் இடங்களில் மட்டும் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்கப்படும். நாமக்கல்லில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் 10-10-2005 முதல் இயங்கி வருகிறது. நாமக்கல், இராசிபுரம் மற்றும் திருச்செங்கோடு முதலிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் 10,000-க்கும் குறைவான காப்பீட்டாளர்களே பதிவு செய்துள்ளனர். எனவே, நாமக்கல்லில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்க இயலாது.

318—

சொந்தக் கட்டடம்

வினா எண் 29053—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

319—

காச நோய் மருத்துவமனை

வினா எண் 29574—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனை, காசநோய் மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் திருப்பூரில் 50 படுக்கை வசதிக் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்குவதற்கு புதுடெல்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் ஒப்புதல் கேட்கப்பட்டுள்ளது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் இது குறித்து அரசாணை வெளியிடப்படும். மேலும், புதுடெல்லி தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் மருத்துமனைக்குத் தேவையான கட்டடம் கட்டியவுடன் மருத்துவமனை செயல்படத் துவங்கும். அம்மருத்துவமனையில் பல சிறப்பு சிகிச்சை வசதிகளுடன் நெஞ்சக நோய்க்கும் சிகிச்சை அளிக்கப்படும். எனினும், நெஞ்சக நோய்க்கென (காச நோய்) தனியாக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துமனை தொடங்க இயலாது.

2011 ஜனவரி 13]

320—

தரம் உயர்த்துதல்

வினா எண் 30341—திருமதி மு. சந்திரா: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் தொகுதி, இராஜபாளையம் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

இராஜபாளையத்தில் தற்போது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் இயங்கி வருகிறது. அம்மருந்தகத்தில் 19,352 காப்பீட்டாளர்கள் பதிவு செய்துள்ளனர். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் வரையறைகளின்படி 50,000 காப்பீட்டாளர்களுக்கு மேல் வசிக்கும் பகுதிகளில்தான் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்கப்படும். எனினும், இராஜபாளையம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தை மேம்படுத்தும் வகையில் அம்மருந்தகத்தின் நோய் அறியும் மையம் துவங்கப்படவுள்ளது.

321—

சொந்தக் கட்டடம்

வினா எண் 31696—திரு. அ. ராஜன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தற்போது இல்லை.

322—

அனுமதி அட்டை வழங்குதல்

வினா எண் 31706—திரு. என். நன்மாறன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் முறைசாரா தொழிலாளர்களுக்குப் பேருந்துகளில் சலுகைக் கட்டண அடிப்படையில் அனுமதி அட்டை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

சென்னையிலுள்ள பதிவு பெற்ற உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு பேருந்துகளில் சலுகைக் கட்டண அடிப்படையில் அனுமதி அட்டை வழங்குவது குறித்தான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

323—

TRUTH ALONE TRIUMPHS

கட்டடம்

வினா எண் 33103—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

இல்லை.

2011 ஜனவரி 13]
324—

மருத்துவமனை

வினா எண் 33851—திரு. அ. ராஜன்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகர்கோவில் தொகுதி, கோட்டார் மருத்துவமனையில் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக மருத்துவமனை/மருந்தகம் தொடங்குவது குறித்து அளவை (Survey) செய்து தக்க பரிந்துரைகள் வழங்குவது தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமாகும். 50,000-க்கும் மேற்பட்ட காப்பீட்டாளர்கள் வசிக்கும் பகுதிகளில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையும், 3000-கும் மேற்பட்ட காப்பீட்டாளர்கள் வசிக்கும் பகுதிகளில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகமும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் தொடங்கப்படும். தற்போது, திருநெல்வேலியில் 50 படுக்கை வசதி கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை துவங்குவதற்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, தற்சமயம் நாகர்கோவில் பகுதியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்க இயலாது.

325—

புதிய கட்டடம்

வினா எண் 33852—திரு. அ. ராஜன்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகர்கோவில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

நாகர்கோவில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது தொடர்பாக அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசிலனையில் இல்லை.

326—

தொழிற் பயிற்சி

வினா எண் 34551—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதியில் தொழிற் பயிற்சி நிறுவனம் (ஐ.டி.ஐ.) துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

இல்லை.

327—

தொழிற் பயிற்சி

வினா எண் 39327—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் ஒரு தொழிற் பயிற்சி நிறுவனம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

328—

அலுவலகம்

வினா எண் 39328—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் கிளை வேலைவாய்ப்பு பதிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரையில் கிளை வேலைவாய்ப்பு பதிவு அலுவலகம் அமைக்க அரசிடம் ஏதும் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) எழவில்லை.

329—

பதிவு செய்தல்

வினா எண் 44837—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட அரசு இசைப் பள்ளியில் படித்தோரின் சான்றிதழ்களை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்ய அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

மாவட்ட அரசு இசைப் பள்ளியில் படித்தோரின் சான்றிதழ்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்படுகிறது.

330—

உரத் தொழிற்சாலை திறத்தல்

வினா எண் 45194—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மூடிக்கிடக்கும் உரத் தொழிற்சாலைகளை திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தூத்துக்குடியில் உள்ள சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிட், மற்றும் தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் அண்ட் பெர்டிலைசர்ஸ் லிட்., என்ற நிறுவனத்தில் யூரியா மற்றும் டிஏபி ஆகிய யூனிட்கள் ஸ்பிக் நிறுவனத்திலிருந்து மூலப்பொருட்களான கார்பன்டை ஆக்ஸைடு பெறமுடியாததால் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால், பணியாளர்கள் அனைவரும் பணிபுரிந்து விடுகின்றனர் இது தொடர்பாக தொழிலாளர் பிரச்சினை ஏதும் இல்லை. மேலும், மூலப்பொருள்களான கார்பன்டை ஆக்ஸைடு உற்பத்தி செய்ய தனியாக ஒரு உள் கூட்டமைப்பு ஆலையை உருவாக்க ஆயத்தம் செய்யப்பட்டு வருவதாகவும், கூடிய விரைவில் மூலப்பொருட்களான கார்பன்டை ஆக்ஸைடு ஆலையை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது. தொழிலாளர் பிரச்சினை ஏதும் இல்லாததால், இதுதொடர்பாக திருநெல்வேலி தொழிலாளர் உதவி ஆணையர் முன்னிலையில் பேச்சுவார்த்தை ஏதும் நிலுவையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

331—

மருத்துவமனை திறத்தல்

வினா எண் 48876—திரு. பி. பலராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் பகுதியில் இ.எஸ்.ஐ. மருத்துவமனையை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூரில் 2 மருத்துவர் வகை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகமும், மணலியில் 3 மருத்துவர் வகை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகமும் தற்போது இயங்கி வருகின்றன.

332—

தொழிற்பயிற்சிக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 49657—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதியில் அரசு தொழிற்பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

333—

தொழிற் பயிற்சி நிலையம்

வினா எண் 52414—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, காணியாளம்பட்டியில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதியில் அமைந்துள்ள கரூர் மாவட்டத்தில், கரூரில் ஒரு மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் மூன்று தொழிற்பிரிவுகளில் 96 இருக்கைகளுடன் இயங்கி வருகிறது. மேலும் 8 தனியார் தொழிற் பயிற்சி மையங்களும் 393 இருக்கைகளுடன் இயங்கி வரும் நிலையில், கிருஷ்ணராயபுரம் தொகுதி, காணியாளம்பட்டியில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

334—

ஓட்டுநர் பயிற்சி

வினா எண் 57538—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு தொழிற் பயிற்சி பள்ளிகளில் சர்வதேச தரத்தில் ஓட்டுநர் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

335—

துணை வேலைவாய்ப்பு அலுவலகம்

வினா எண் 57609—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, சோளிங்கரில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) சோளிங்கர் தொகுதி, சோளிங்கரில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் ஏதுமில்லை.

(ஆ) அரசின் பரிசீலனையில் இல்லாத நிலையில், இவ்வினாவிற்கு பதில் அளிக்க வேண்டிய தேவை எழவில்லை.

336—

மருத்துவ வசதி

வினா எண் 59232—திருமதி ஜி. லதா: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு ESI திட்டத்தில் இணைத்து மருத்துவ வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களை இ.எஸ்.ஐ. திட்டத்தில் இணைத்து மருத்துவ வசதி செய்து தரும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் ஏதுமில்லை.

337—

புதிய வேலைவாய்ப்பு அலுவலகம்

வினா எண் 63550—திரு. து. அமரமூர்த்தி: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரியலூர் மாவட்டத்தில் புதிய வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

அரியலூர் மாவட்டத்தில் புதிய வேலைவாய்ப்பு அலுவலகம் 02-11-2009 முதல் செயல்படத் தொடங்கியது.

338—

தொடுதிரைக் கணினி

வினா எண் 70478—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் அனைத்து வேலைவாய்ப்பு பதிவுகளை பற்றி புள்ளி விவரம் உடனுக்குடன் தெரிந்துகொள்ள தொடுதிரைக் கணினி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தொடுதிரைக் கணினி அமைப்பது தொடர்பான திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 ஜனவரி 13]

339—

விபத்துகளைத் தடுத்தல்

வினா எண் 70486—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள பட்டாசுத் தொழிற்சாலைகளில் அடிக்கடி ஏற்படும் விபத்துகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலைகளில் அடிக்கடி ஏற்படும் விபத்துகளைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

340—

புதிய கட்டடம்

வினா எண் 73472—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்ட பேருந்து நிலையத்திற்கு அருகில் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பாக அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

341—

கிளை வேலைவாய்ப்பு அலுவலகம்

வினா எண் 7353—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள தமிழ்நாடு அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் கிளைகளை அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எல்லா மாவட்டங்களிலும் வெளிநாட்டிற்குச் செல்வதற்கு போதிய வரவேற்பு இல்லாத காரணத்தால், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் கிளைகளை தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இதுவரை எழவில்லை. இருப்பினும், அயல்நாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான விவரங்களை அனைத்து மாவட்ட மக்களும் தெரிந்துகொள்வதற்கு ஏதுவாக அவ்வப்பொழுது தினசரிகளின் மூலமாக விளம்பரங்கள் மற்றும் பத்திரிகைச் செய்திக் குறிப்புகள், வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் வாயிலாக உரிய செய்திகள் எல்லோரையும் சென்றடையும் வண்ணம் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

342—

மகளிர் தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 73804—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் மகளிர் தொழிற் பயிற்சி நிலையம் துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

343—

புதிய உபகரணங்கள்

வினா எண் 83699—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் பழமையான பயிற்சி உபகரணங்களுக்குப் பதிலாக புதிய உபகரணங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

செங்கற்பட்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பாடதிட்டத்தின்படி புதிய கருவிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பயிற்சிக்கு பயன்படுத்தப்படுகிறது. தேவைக்கேற்ப அவ்வப்போது புதிய கருவிகள்/இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. பழைய கருவிகள் கழிவு செய்யப்படுகின்றன.

344—

எடைப் படிகள்

வினா எண் 86533—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முத்திரையிடப்படாத எடைப்படிகளை பயன்படுத்துவதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

ஆம்.

345—

அரசு விடுதி

வினா எண் 87836—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் பணிபுரியும் மகளிருக்கு அரசு விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) திருப்பூரில் பணிபுரியும் மகளிருக்கு அரசு விடுதிகள் கட்டும் திட்டம் எதுவும் தொழிலாளர் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

346—

பேருந்து பயண இலவச அட்டை

வினா எண் 93468—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு பேருந்து பயண இலவச அட்டை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

347—

தொழிற் பயிற்சி நிலையம்

வினா எண் 102835—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் தொழிற் பயிற்சி நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதியில் 4 தனியார் தொழிற் பயிற்சி மையங்கள் 476 இருக்கைகளுடன் இயங்கி வருகிறது. இம்மாவட்டத்தின் தற்போதைய தேவையினை பூர்த்தி செய்ய இத்தனியார் தொழிற் பயிற்சி மையங்களே போதுமானதாக உள்ளது. எனினும், தேவை ஏற்படும்பொழுது திருப்பத்தூர் தொகுதியில் புதிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் துவங்க பரிசீலனை செய்யப்படும்.

348—

வேலைவாய்ப்புப் பதிவு அலுவலகம்

வினா எண் 102839—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் வேலைவாய்ப்புப் பதிவு அலுவலகம் துவக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதியில் வேலைவாய்ப்புப் பதிவு அலுவலகம் தொடங்குவதற்கான திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

349—

மண்டபப்பணி

வினா எண் 74—திரு. என். நன்மாறன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை வண்டியூர் மாரியம்மன் திருக்கோயிலில் அங்கப்பிரதட்சண மண்டபப்பணியை விரைவில் முடித்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் உபகோயிலான, மதுரை வண்டியூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் பக்தர்கள் அங்கப்பிரதட்சணம் செய்வதற்கான அங்கபிரதட்சண மண்டபம் கட்டும் பணிக்கு ரூ.22.50 இலட்சத்தில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மேற்படி பணிக்கான கான்கிரீட் தூண்கள் அமைக்கப்பட்டு வருகிறது. மேற்படி பணியில் 40 விழுக்காடு முடிவுற்றுள்ளது. எஞ்சிய பணிகள் இன்னும் நான்கு மாத காலத்திற்குள் முடிக்கப்படும்.

350—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 142—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) உடுமலைப் பேட்டை தொகுதி, உடுமலை நகராட்சி 14-வது வார்டில் கன்னிகா பரமேஸ்வரி கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் நீண்ட நாட்களாக குடியிருக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை நகராட்சி 14-வது வார்டில் உள்ள அருள்மிகு கன்னிகா பரமேஸ்வரி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் சுமார் 17.50 சென்ட் பரப்பளவு உள்ள காலி மனையில் 17 குடியிருப்புதாரர்கள் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இந்து சமய அறநிலைய சட்டப்படி திருக்கோயில் நிலங்களை இலவசமாக பட்டா செய்து தருவதற்கு வழிவகையில்லை. திருக்கோயில் நலனுக்கு புறம்பாக திருக்கோயில் நிலங்களை எவருக்கும் வழங்குவது சட்டப்படி தவறு ஆகும். எனவே, மேற்படி நிலங்களில் ஆக்கிரமித்துள்ளவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

351—

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திருமண மண்டபம்

வினா எண் 166—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், கொமரலிங்கம் கிராமத்திலுள்ள பழனி அருள்மிகு தண்டாயுதபாணி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான இடத்தில் திருமண மண்டபம் அமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், கொமரலிங்கம் கிராமத்தில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்குச் சொந்தமான 2925 சதுர அடி இடம் உள்ளது. அவ்விடம் திருமண மண்டபம் கட்டுவதற்கு போதுமானதாக இல்லை. எனவே பழனிக்கு நடைபயணம் செல்லும் சேவார்த்திகள் பயன்படுத்தும் வகையிலும், இவ்விடத்தை சுற்றியுள்ள கிராம மக்கள் பயன்பெறும் வகையிலும் சமுதாயக் கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

352—

குடமுழுக்கு விழா

வினா எண் 338—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், குடவாசல் நகரில் தேவாரப் பாடல் பெற்ற அருள்மிகு கோணேஸ்வரசுவாமி திருக்கோயில் திருப்பணி தொடங்கி குடமுழுக்கு விழா நடத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், குடவாசல் நகரில் தேவாரப் பாடல் பெற்ற அருள்மிகு கோணேஸ்வரசுவாமி திருக்கோயிலில் கடந்த 27-6-1985-ல் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. மீண்டும் திருப்பணி செய்வதற்கென கடந்த 2001-ஆம் ஆண்டில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாததால், 2003-ஆம் ஆண்டில் வெளிப்பிரகார மதில்சுவரினை மட்டும் ரூ.2.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இதர திருப்பணிகளை செய்து முடிப்பதற்கு ஏதுவாக திருப்பணிக் குழு அமைக்கவும், மதிப்பீடுகள் தயார் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2011 ஜனவரி 13]

353—

திருமண மண்டபம்

வினா எண் 339—திரு. குத்தாலம் க. அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், மேக்கிரிமங்கலத்தில் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை மூலம் கட்டப்பட்ட அண்ணா திருமண மண்டபம் பழுதடைந்து உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பழுதுநீக்கி புதிதாக கட்டித்தரப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், மேக்கிரி மங்கலம் கிராமத்தில் கட்டப்பட்ட அண்ணா திருமண மண்டபத்தின் சுவர்களில் விரிசல் ஏற்பட்டு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை பொறியாளர் கருத்துப்படி இத்திருமண மண்டபத்தினை புதுப்பிக்க இயலாது என்றாலும் குத்தாலம் பேரூராட்சியால் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபம் மக்களின் பயன்பாட்டிற்கு இருந்து வருவதால் திருக்கோயில் சார்பில் புதிதாக திருமண மண்டபம் கட்டவேண்டிய அவசியம் தற்போது இல்லை.

354—

திருத்தேர் திருப்பணி

வினா எண் 677—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கல்பட்டு தொகுதியிலுள்ள மாமல்லபுரம் அருள்மிகு தலசயனப் பெருமாள் திருக்கோயில் திருத்தேர் திருப்பணி தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு என அரசு அறிவிக்குமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) செங்கல்பட்டு தொகுதியிலுள்ள மாமல்லபுரம், அருள்மிகு தலசயனப் பெருமாள் திருக்கோயில் திருத்தேர் முற்றிலும் பழுதடைந்து விட்டது. எனவே உபயதாரர்கள் மூலம் ரூ.7.50 லட்சம் மதிப்பீட்டில் அதனை சீர் செய்திட அனுமதி வழங்கப்பட்டு பணி தொடங்கி நடைபெற்று வருகிறது.

355—

தடுப்புச் சுவர்

வினா எண் 1423—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பின்புறம் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், வால்பாறை நகர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் தென்புறம் உள்ள பள்ளத்தாக்கு பகுதியில் சுவர் எழுப்பிட ஏற்படும் செலவில் திருக்கோயில் நிதியிலிருந்து ஒதுக்கப்படும் நிதிக்கு மேல் செலவாகும் தொகையை உபயமாக அளிக்க முக்கிய ஊர் பிரமுகர்கள் முன்வந்துள்ளதால் தடுப்புச் சுவர் கட்ட தேவையான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

356—

ஆகமக் கல்லூரி

வினா எண் 1470—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அறநிலையத் துறை மூலம் ஆகமக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் அனைத்து சாதியினரையும் அர்ச்சகர்களாக நியமிக்கலாம் என்று ஆணைகள் வெளியிடப்பட்டு, இது தொடர்பாக ஆலோசனை வழங்க உயர்நிலைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரை பெற்ற பின் எங்கெங்கு ஆகம பள்ளிகள் அல்லது கல்லூரிகள் அமைக்கலாம் என்பது குறித்து தக்க தருணத்தில் அரசு முடிவினை மேற்கொள்ளும்.

357—

தரை வாடகை

வினா எண் 1520—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் வரசித்தி விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான கொசப்பேட்டை கல்லாம்பட்டரைப் பகுதியில் வீடு கட்டி வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு தரை வாடகையை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், வேலூர் நகர், வேலப்பாடியில் உள்ள அருள்மிகு வரசித்தி விநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான மனைகளுக்கு அரசாணை

[2011 ஜனவரி 13

வழிகாட்டுதலின் அடிப்படையில் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நியாய வாடகையை குறைத்தால் திருக்கோயிலின் நலன் பாதிக்கப்படும். பெரும்பான்மையான திருக்கோயில்களின் முக்கிய வருமானம் அதன் மனைகளிருந்து பெறப்படும் வாடகை ஆகும். எனவே, நிர்ணயம் செய்யப்பட்ட நியாய வாடகையை குறைக்க சாத்தியக்கூறு இல்லை.

358—

தூர் வாருதல்

வினா எண் 2282—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள திருக்கோயில் குளங்களை தூர்வாரி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள திருக்கோயில்களில் 31 திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 137 குளங்கள் உள்ளன. இவற்றில் 33 குளங்கள் தூர்வாரப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. இதர 104 குளங்கள் தூர்வாரி செப்பனிடப்பட வேண்டியுள்ளது. இக்குளங்களில் தற்போது நீர் நிரம்பி உள்ளது. எனவே, மேற்கண்ட குளங்களை தற்போது தூர்வாரி சீரமைக்க இயலாத நிலை உள்ளது.

359—

தங்கத் தேர்

வினா எண் 3214—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு தங்கத் தேர் செய்திட அரசு முன்வருமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கோவை மாவட்டம், வால்பாறை வட்டம், வால்பாறை நகர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் உபயோகத்தில் உள்ள ஆபரணங்கள் தவிர உபரியாக தங்கம் ஏதும் இல்லை. நிதி நிலையும் போதுமானதாக இல்லை. எனவே, இத்திருக்கோயில் சார்பாக தங்கத் தேர் செய்திட திட்டம் ஏதுமில்லை.

360—

நிதி ஒதுக்கீடு

வினா எண் 3646—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குபட்டி அஞ்சல், குண்டுக் காட்டனூர் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு சஞ்சீவராய பெருமாள் கோயில் திருப்பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், குண்டுக்காட்டனூர் அருள்மிகு சஞ்சீவராய பெருமாள் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். தற்போதைய நிர்வாகியும், ஊர் பொதுமக்களும் இத்திருக்கோயிலை அறநிலைய ஆட்சித் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். எனவே, இத்திருக்கோயில் திருப்பணிக்கு அரசு நிதி எதுவும் வழங்கிட இயலாத நிலையுள்ளது.

[2011 ஜனவரி 13

361—

இழுவை இரயில்

வினா எண் 3692—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரிசஸ்வரர் திருக்கோயிலுக்கு இழுவை இரயில் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு இழுவை இரயில் அமைக்கும் உத்தேசம் தற்சமயம் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

362—

பணி நியமனம்

வினா எண் 4162—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறையில் காலியாகவுள்ள பணியிடங்களை பூர்த்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர்

2011 ஜனவரி 13]

தேர்வாணையம்மூலம், பதவி உயர்வின்மூலம், கருணை அடிப்படை நியமனம்மூலம், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் ஆகிய வழிமுறைகள்மூலம் நிரப்புவது குறித்து இந்து சமய அறநிலையத் துறை ஆணையரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

363—

குடமுழுக்கு

வினா எண் 4864—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், திருவெண்காட்டில் அருள்மிகு சுவேதாரண்யேசுவரர் சுவாமி கோயில் திருப்பணிகளை முடித்து, குடமுழுக்கு நடத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், திருவெண்காடு, அருள்மிகு சுவேதாரண்யேசுவரர் திருக்கோயில் திருப்பணிகள் செய்ய திட்டமிடப்பட்டு ரூ.15.04 இலட்சத்திற்கு 24 உபய பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 9 பணிகளை ரூ.15.14 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நிதியுதவி பெற்று செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனைத்து திருப்பணிகளையும் முடித்து 2008-ஆம் ஆண்டு குடமுழுக்கு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

364—

குடமுழுக்கு

வினா எண் 4865—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் நகரில் உள்ள சம்பாபதி அம்மன் கோயிலுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பூம்புகார் சாயாவனம் அருள்மிகு சம்பாபதி அம்மன் திருக்கோயிலை நிர்மாணிக்க வேண்டி சாத்திர முறைப்படி வரைபடமும் மதிப்பீடும் தயாரித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் மதிப்பீடு அங்கீகாரம் பெற்று திருப்பணி துவங்கப்படவுள்ளது.

365—

குடமுழுக்கு

வினா எண் 4866—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் அருள்மிகு சாயாவனேஸ்வரர் ஆலய திருப்பணிகளை முடித்து குடமுழுக்கு நடத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சாயாவனம் அருள்மிகு சாயாவனேஸ்வரர் சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேக திருப்பணிக்கு ரூ.10.70 இலட்சத்திற்கான மதிப்பீடுகள், இந்து சமய அறநிலையத் துறை ஆணையரால் அங்கீகரிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகிறது.

2011 ஜனவரி 13]

366—

மீன் வளர்த்தல்

வினா எண் 4895—திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாப்பூர் குளத்தில் விஷத்தன்மையுள்ள மீன்களை அகற்றிவிட்டு வேறு வகை மீன்கள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்குளத்தில் உள்ள விஷத்தன்மையுள்ள மீன்களை அவற்றின் அபாயத் தன்மையை கருத்தில் கொண்டு வேறு நீர்நிலைகளுக்கு மாற்ற முடியாது. குளத்தில் உள்ள நீரின் அளவிற்கு ஏற்ப அவ்வப்போது மீன்வளத் துறையின் பரிந்துரையின்படி குறிப்பிட்ட அளவு மீன்களை மட்டும் பிடித்து கூட்டுறவு சங்க மீனவர்கள்மூலம் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் சமீபத்தில் பெய்த கனமழையின் காரணமாக திருக்குளத்தில் நீர் மட்டம் சுமார் 9 அடி அளவிற்கு உயர்ந்து உள்ளது. இந்நீர்மட்டம் மேலும் குறையாமல் இருக்கும்பட்சத்தில் வேறு வகை புதிய மீன்களை வளர்ப்பதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

367—

தங்கும் இடம்

வினா எண் 4976—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பென்னேஸ்வரமடம் வரும் பக்தர்களுக்காக சிமெண்ட் கூரையுடன் தங்குமிடம் அமைத்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) சாத்தியக்கூறு இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

368—

புதுப்பித்தல்

வினா எண் 4977—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டிணம் தொகுதி, தளிப்பட்டி கிராமத்திலுள்ள பச்சியம்மன் கோயிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம் காவேரிப்பட்டிணம் தொகுதி தளிப்பட்டி கிராமத்திலுள்ள அருள்மிகு பச்சியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத இத்தகைய திருக்கோயில்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

369—

குட முழுக்கு

வினா எண் 5175—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர் மலை தொகுதி, வாழவந்தி-வள்ளிபுரம் சாலையில் உள்ள சீதையம்மன் கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்கு நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், செங்கம்பள்ளி கிராமம், அருள்மிகு சிதையம்மன் திருக்கோயில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத, பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் அமையப் பெற்றுள்ள திருக்கோயிலாகும். பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களுக்கு நிதியுதவி செய்திட வழிவகையில்லை.

370—

புதுப்பித்தல்

வினா எண் 5876—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகருக்கு குடிநீர் ஆதாரமாக உள்ள பெரிய குளத்தை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகர, பழைய பேருந்து நிலையம் பின்புறம் உள்ள பெரியகுளம், நகர வணிகவைசிய சமூகத்தினரால் பயன்படுத்தப்பட்டு வரும் குளமாகும். இந்த குளம் தனிப்பட்ட சமுதாயத்தினரின் பராமரிப்பில் உள்ளதாலும், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாததாலும் இக்குளத்தினை இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் புதுப்பித்திட இயலாது.

[2011 ஜனவரி 13

371—

கிரிவலப் பாதை அமைத்தல்

வினா எண் 6302—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, பருவதமலைக்கு கிரிவலப் பாதை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செய்து தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், தென்மகாதேவமங்கலம் கிராமத்தில் உள்ள அருள்மிகு பர்வதவர்த்தினி சமேத மல்லிகார்ஜுனசுவாமி திருக்கோயில் அமைந்துள்ள பருவதமலையை சுற்றி கிரிவலப் பாதை அமைப்பது அரசின் பரிசீலனையில் இல்லை.

372—

கிரிவலப் பாதை

வினா எண் 6312—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அண்ணாமலை உடனாகிய உண்ணாமலையம்மன் திருக்கோயிலுக்குத் தனியாக கிரிவலப் பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் நகர், அருள்மிகு அண்ணாமலை உடனாகிய உண்ணாமலையம்மன் திருக்கோயிலுக்குத் தனியாக கிரிவலப் பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

373—

புதுப்பித்தல்

வினா எண் 7179—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, செம்மேட்டில் உள்ள ஈஸ்வரன் கோயிலைப் புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், செம்மேடு கிராமம், அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயிலில் ரூ.15.10 இலட்சத்திற்கு திருப்பணி வேலைகள் முடிவுற்று 11-02-2008 அன்று குடமுழுக்கு நடைபெற்றுவிட்டது.

374—

உதவித் தொகை வழங்குதல்

வினா எண் 7530—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் கோயில்களில் பணியாற்றும் துப்புறவுப் பணியாளர்கள், மேளக்காரர்கள் ஆகியோர்களுக்கு நிறுத்தப்பட்ட உதவித் தொகையை மீண்டும் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை நிறுத்தப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

375—

குட முழுக்கு

வினா எண் 7899—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், முடிகண்டநல்லூர் ஊராட்சியில் உள்ள ஸ்ரீமாரியம்மன் கோயில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியம், முடிகண்ட நல்லூர் ஊராட்சியில் உள்ள அருள்மிகு ஸ்ரீமாரியம்மன் கோயில் திருப்பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இத்திருப்பணிகளுக்கான நிதி ஆதாரத்தை உபயதாரர்கள், பொது மக்கள் நன்கொடை மற்றும் அரசு நிதியுதவிகளின் மூலம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2011 ஜனவரி 13]

376—

நிதி ஒதுக்கீடு

வினா எண் 7900—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், செம்பனார்கோவில் ஒன்றியம், திருக்களாச்சேரி ஊராட்சி, ஆலம்பாடி கிராமத்தில் உள்ள காளியம்மன் கோயில் திருப்பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், திருக்களாச்சேரி அஞ்சல், ஆலம்பாடி கிராமத்தில் உள்ள அருள்மிகு பொன்னியம்மன் (எ) காளியம்மன் திருக்கோயில் திருப்பணிக்கான உத்தேசத் தொகை ரூ.2,00,000/-ல், ஒரு இலட்சத்தை ஊர் பொதுமக்கள் வசூலித்தளிக்கும் நிலையில் எஞ்சிய தொகையை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைமூலம் நிதியுதவியாகச் செய்து திருப்பணியை செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

377—

நிதி ஒதுக்கீடு

வினா எண் 7901—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, காளகஸ்திநாதபுரம் ஊராட்சியில் ஸ்ரீகைலாசநாதர் ஆலயத்திற்கு தமிழக முதல்வரின் திருப்பணி திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, காளகஸ்திநாதபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள ஸ்ரீகைலாசநாதர் ஆலயம் கிராம மக்களால் திருப்பணி செய்யப்பட்டு 8-7-2001-ல் குடமுழுக்கு நடத்தப்பட்டது. தற்போது நல்ல நிலையில் உள்ளதால் திருப்பணி செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

378—

விரிவுபடுத்துதல்

வினா எண் 8607—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மானாமதுரை தொகுதி, மடப்புரம் ஸ்ரீ காளியம்மன் கோயிலை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

செயற்குறிப்பு இல்லை.

379—

தங்கும் விடுதிகள்

வினா எண் 8805—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை திருக்கோயிலுக்குப் புதியதாக தங்கும் விடுதிகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு போதிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ள நிலையில், தற்போது புதியதாக தங்கும் விடுதிகள் கட்டுவது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.

380—

நிதியுதவி

வினா எண் 17367—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் நிதி வசதியில்லாத கிராமக் கோயில்களுக்கு ஒரு கால பூஜை செய்ய நிதி உதவி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்தில் வால்பாறை தொகுதியில் மட்டும் 8 திருக்கோயில்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றன. எனவே, வால்பாறை தொர்குதியில் நிதிவசதியில்லாமல், ஒரு கால பூஜை கூட நடத்த இயலாத, இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையில் உள்ள கிராமக் கோயில்கள் இருப்பது கவனத்திற்குக் கொண்டு வந்து, பொதுமக்கள் நன்கொடையாக ரூ. 2,500/- வழங்கினால் ஒரு கால பூஜை நிதியுதவித் திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்படும்.

[2011 ஜனவரி 13

381—

குடமுழுக்கு

வினா எண் 17402—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு 8-5-1998-ல் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. எனவே, இத்திருக்கோயிலுக்குத் தற்போது குடமுழுக்கு செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

382—

இலவச மின்சாரம்

வினா எண் 17505—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆதி திராவிடர் குடியிருப்புகளில் உள்ள கோயில்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் குடியிருப்புகளில் உள்ள திருக்கோயில்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

2011 ஜனவரி 13]

383—

இலவச தங்கும் விடுதி

வினா எண் 18556—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் பக்தர்கள், பயணிகள் தங்குவதற்கு இலவச தங்கும் விடுதிகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் நகரில் உள்ள கோயில்கள் இடவசதி இருப்பினும், நிதி வசதி இன்மையால் தங்கும் விடுதி கட்ட சாத்தியக்கூறு இல்லை.

384—

புதுப்பித்தல்

வினா எண் 20986—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி, அருள்மிகு புஷ்பவன ஈஸ்வரர் ஆலயத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி, அருள்மிகு புஷ்பவன ஈஸ்வரர் திருக்கோயில், சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்திற்குட்பட்ட இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் திருப்பணி செய்யப்பட்டு 27-6-2002-ல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று நல்ல நிலையில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

385—

தூர் வாருதல்

வினா எண் 22146—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சியிலுள்ள கைலாசநாதர் கோயிலின் தெப்பக் குளத்தினை தூர் வாரி சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதாகும். இத்திருக்கோயிலுக்குப் பின்னால் இரண்டு குளங்கள் உள்ளன. இவ்விரண்டு திருக்குளங்கள் மற்றும் சுற்றியுள்ள இடங்கள் அரசு புறம்போக்கு மற்றும் தெப்பக்குளம் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இத்திருக்குளங்களில் தெப்பத் திருவிழா நடத்துவதற்கு ஏதுவாக திருக்குளச் சுவர்கள் வெள்ளையடிக்கப்பட்டு, சுற்றுப்புற மரம், செடி, கொடிகள் அப்புறப்படுத்தப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டுள்ளது. இத்திருக்குளங்கள் வருவாய்த் துறையின் வசம் உள்ளதால் இந்து சமய அறநிலையத் துறையால் தற்போது தூர் வாரி செப்பனிட இயலாத நிலை உள்ளது. இக்குளங்கள் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் ஒப்படைக்கப்பட்டால், தூர் வாரி சுத்தம் செய்யப்படுமென சேலம் மாவட்ட ஆட்சியருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

386—

தணிக்கை அலுவலகம்

வினா எண் 22495—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறை தணிக்கை அலுவலகம் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறை தணிக்கை அலுவலகம் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

387—

கோயில் தேரினை சீரமைத்தல்

வினா எண் 22886—திரு. எஸ்.எஸ். குருசாமி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அந்தியூர், அருள்மிகு பத்ரகாளியம்மன் கோயில் தேரினை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், அந்தியூர், அருள்மிகு செல்லீஸ்வரர் வகையறா திருக்கோயிலில் ஒன்றாகிய அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயிலின் மரத்தேரினை சீரமைத்து தேரோட்டம் நடத்தப்பட்டது.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

388—

கம்பி வட ஊர்தி

வினா எண் 22911—திரு. எம். அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, பழனி-கொடைக்கானல் கம்பி வட ஊர்தி திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பழனி—கொடைக்கானல் இடையே வான்வழி கம்பிவட ஊர்தி அமைக்கும் திட்டம் செயலாக்கம் தொடர்பாக, தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மூலமாக சென்னை மகேந்திரா நிறுவனத்தினரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

389—

பொறியியல் கல்லூரி

வினா எண் 22912—திரு. எம். அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மூலம் பழனியில் பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மூலம் பொறியியல் கல்லூரி அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

390—

வாகன நிறுத்தம்

வினா எண் 22915—திரு. எம். அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பழனி தொகுதி, அருள்மிகு பழனியாண்டவர் கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக வாகன நிறுத்தம் தனியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு கனரக ஊர்திகளிலும், இலகு ரக ஊர்திகளிலும் வரும் பக்தர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு பழனி, கிரிவீதியில் போதிய இடவசதி இல்லாத நிலை உள்ளது. போதிய இடவசதி இல்லாததால் திருக்கோயில் மூலம் புதிய பேருந்து நிறுத்தம் அமைக்க கிழக்கு கிரிவீதியில் புதியதாக 14 ஏக்கர் நிலம் கையகப்படுத்துவதற்கு ஆவன செய்து, அதில் முதல் கட்டமாக 8 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மண் நிரப்பப்பட்டு பக்தர்களின் வாகனங்கள் நிறுத்துவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்குப் பகுதியில் இழுவை இரயில் நிலையத்திற்கு எதிரே கோசாலா சிறு குடில்கள் வளாகத்தில் 2 ஏக்கர் பரப்பளவில் பக்தர்கள் சுற்றுலா வரும் பேருந்துகள் நிறுத்துவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. பக்தர்கள் வரும் பேருந்துகள் மற்றும் சிற்றுந்துகள் நிறுத்துவதற்கு இன்னும் நிறுத்தங்கள் அமைக்க வேண்டி கட்டட கலைஞர்களிடம் வரைபடம் பெற்று கட்டுமானங்கள் நடைபெறவுள்ளது.

391—

குடமுழுக்கு

வினா எண் 22964—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு, திருப்பணிகள் செய்யப்பட்டு 19-8-1994 அன்று குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் கடந்துவிட்டபடியால் மீண்டும் திருப்பணிகள் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலுக்கு அறங்காவலர் குழு நியமனம் செய்யப்பட்டவுடன் திருப்பணிக் குழு அமைத்து திருப்பணிகள் செய்து குடமுழுக்கு விழா நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

392—

ஊதியம் வழங்குதல்

வினா எண் 23028—செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறநிலையத் துறையின் கீழுள்ள கோயில்களின் பூசாரிகளுக்கு அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

அறநிலையத் துறையின் ஆளுகையின் கீழுள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பூசாரிகளுக்கு அந்தந்த திருக்கோயிலின் வருமானத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்பட்டு வருவதால், அரசு ஊழியர்களுக்கு இணையாக சம்பளம் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

393—

சிமெண்ட் தளம்

வினா எண் 23601—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மடப்புரம் கோயில் தளங்களை சிமெண்ட் தளங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மடப்புரம் அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோயில் மேற்கூரையின்றி திறந்தவெளி ஆல்யமாக அமைந்து இருக்கிறது. எனவே, இத்திருக்கோயில் தளங்களை சிமெண்ட் தளமாக அமைத்தால் வெயில் காலங்களில் வெப்பமாக இருக்கும் என்பதால் கல்தளம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, இத்திருக்கோயில் தளங்களை சிமெண்ட் தரைத்தளங்களாக அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

394—

மண்டபம் கட்டுதல்

வினா எண் 23602—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், கண்டுப்பட்டி காளியம்மன் கோயிலுக்கு புதியதாக மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், கண்டுப்பட்டி காளியம்மன் திருக்கோயிலில் ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரே நேரத்தில் 500 பேர் தங்கும் அளவிற்கு திறந்தவெளி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர, ஒரே நேரத்தில் 50 பேர் அமர்ந்து உணவு அருந்தும் மண்டபம் ஒன்று தனியாக உள்ளது. எனவே, இத்திருக்கோயிலில் பக்தர்களின் பயன்பாட்டிற்காக ஏற்கெனவே இரண்டு மண்டபங்கள் உள்ளதால் தற்போது மேலும் புதிதாக மண்டபம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

395—

தூர் வாருதல்

வினா எண் 23605—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை திருப்பரங்குன்றம் முருகன் கோயிலின் தெப்பக் குளத்தை தூர் வாருவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் தெப்பக்குளத்தை தூர் வாரும் பணி முடிக்கப்பட்டு தற்போது திருக்குளம் நல்ல நிலையில் உள்ளது.

396—

வர்ணம் பூசுதல்

வினா எண் 23609—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சியம்மன் கோயில் நான்கு கோபுரங்களுக்கும் வர்ணம் பூசி புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில் திருப்பணி வேலைகள் துவங்கப்பட்டு திருக்கோயிலின் முக்கிய

2011 ஜனவரி 13]

கோபுரங்களான கிழக்கு, மேற்கு, தெற்கு மற்றும் வடக்கு ஆகிய நான்கு 9 நிலை இராஜகோபுரங்கள் சுமார் ரூ.106.5 இலட்சங்களில் திருப்பணி செய்ய மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, இத்திருக்கோயிலின் இதர கோபுரங்கள் மற்றும் விமானங்களுக்கு திருப்பணி வேலைகள் செய்ய சுமார் ரூ.107.7 இலட்சங்களில் மதிப்பீட்டில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

397—

புதுப்பித்தல்

வினா எண் 23613—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை திருப்பரங்குன்றம் முருகன் கோயிலைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் சுமார் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர்களை கொண்டு திருப்பணி வேலைகள் செய்து, கடந்த 11-6-2000 தேதியன்று குடமுழுக்கு செய்து முடிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போதைக்கு இத்திருக்கோயிலைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

398—

புதுப்பித்தல்

வினா எண் 23614—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் ராமர்பாதம் கோயில், அருள்மிகு இராமநாத சுவாமி கோயில்களை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) அருள்மிகு இராமர்பாதம் என்று அழைக்கப்படும் "கெந்தமாதன பர்வதம்" நான்கு தனி நபர்களின் பராமரிப்பில் இருந்ததை ஆட்சேபித்து, மதுரை துணை ஆணையர் நீதிமன்றம் மற்றும் ஆணையர் நீதிமன்றம் ஆகியவற்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, இறுதியாக இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் மேற்படி கோயில் பொதுக் கோயில் எனவும், இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமானது எனவும், கோயிலை பராமரிக்கும் நான்கு நபர்களும் பரம்பரை டிரஸ்டிகள் இல்லை எனவும் அவர்களுக்கு பூஜை, மிராசு உரிமைகள் இல்லை எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட நான்கு நபர்களும் இத்தீர்ப்பினை எதிர்த்து, மதுரை உயர்நீதிமன்றத்தில் தடை ஆணை பெற்று மேல்முறையீடு செய்துள்ளனர். தடை ஆணையை நீக்குவதற்கும், மேல்முறையீட்டை எதிர்கொள்ளவும், திருக்கோயில் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வழக்கு முடிந்து திருக்கோயிலுக்கு சாதகமாகத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் புதுப்பிக்கும் பணிகள் துவங்கப்பட்டு குடமுழுக்கு விழா நடத்தப்படும்.

(ஆ) இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் தேவையான திருப்பணிகள் மேற்கொண்டு கடந்த 5-2-2001-ல் குடமுழுக்கு விழா சிறப்பாக நடத்தப்பட்டு முடிக்கப்பட்டது. மீண்டும் 12 ஆண்டுகள் கடந்த பின்னரே, 2013-ல் குடமுழுக்கு விழா நடத்தப்பட வேண்டுமென்பதால் அது சமயம் தேவையான திருப்பணிகளை மேற்கொண்டு புதுப்பிக்கப்படும்.

2011 ஜனவரி 13]

399—

நிழற்கூடம்

வினா எண் 23707—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, முத்தம்பட்டி ஆஞ்சநேயர் திருக்கோயிலில் நிழற்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, முத்தம்பட்டி ஆஞ்சநேயர் திருக்கோயில் அருகே 300 மீட்டர் தூரத்தில், இரயில்வே துறையின் மூலம் பக்தர்கள் இளைப்பாறும் நிழற்கூடம் ஏற்கனவே, கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. எனவே, மற்றொரு நிழற்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

400—

சமுதாயக் கூடம்

வினா எண் 23709—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, மணியம்பாடி கோயில் வளாகத்தில் சமுதாயக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

மொரப்பூர் தொகுதி, மணியம்பாடி திருக்கோயிலுக்கு அருகாமையில் பஞ்சாயத்து மூலம் தனியார் பட்டா நிலத்தில் சமுதாயக் கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. திருக்கோயில்

விசேஷ காலங்களில் தேவைப்படும்போது, இந்த சமுதாயக் கூடம் இலவசமாக பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் புதியதாக சமுதாயக் கூடம் கட்டுவதற்கு போதிய நிதி வசதி இல்லாததால் திருக்கோயில் வளாகத்தில் புதியதாக சமுதாயக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

401—

திருவாக அலுவலரை நியமித்தல்

வினா எண் 23953—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூம்புகார் தொகுதி, அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயிலுக்கு நிர்வாக அலுவலரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், கீழ்ப்பெரும்பள்ளம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோவில், திருநகரி, அருள்மிகு ரெங்கநாதப் பெருமாள் திருக்கோயிலின் தொகுப்பில் இயங்கி வருவதால், இத்திருக்கோயிலுக்கென தனியாக செயல் அலுவலர் நியமனம் அவசியமில்லை.

402—

புனரமைத்தல்

வினா எண் 24193—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, மாமல்லபுரம் அருள்மிகு ஸ்தலசயனப் பெருமாள் திருக்கோயிலை புனரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு சட்டமன்ற தொகுதி, மாமல்லபுரம் அருள்மிகு ஸ்தலசயனப் பெருமாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில், செயல் அலுவலரின் நிர்வாகத்தின் கீழ் உள்ள திருக்கோயிலாகும். இத்திருகோயிலின் ஆண்டு வருமானம் ரூ.2.56 இலட்சம் ஆகும். இத்திருக்கோயிலுக்கு ரூ.8.33 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு, கடந்த 13-5-1998 அன்று குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது. ஆகம விதிகளின்படி குடமுழுக்கு விழா நடைபெற்று இன்றும் 12 ஆண்டுகள் முடிவடையாத நிலையில் தற்போது திருக்கோயிலை புனரமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

403—

சீரமைத்தல்

வினா எண் 24998—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமேஸ்வரம் அருகில், தங்கச்சி மடத்தில் கடலுக்குள் உள்ள வில்லூன்றி தீர்த்தம் பாலம், சிவன் கோயிலை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?—

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம் அருகில், தங்கச்சி மடத்தில் கடலுக்குள் உள்ள வில்லூன்றி தீர்த்தம் பாலம் மற்றும் சிவன்கோயில் ஆகியவை அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில் சொத்துப்பதிவேடு மற்றும் ஆதாரப்பதிவேட்டில் இடம் பெறவில்லை. எனவே, இத்தீர்த்தம் மற்றும் கோயிலை இந்து சமய அறநிலையத்துறை மூலம் சீரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழாது.

[2011 ஜனவரி 13

404—

இடிதாங்கி அமைத்தல்

வினா எண் 25185—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, அருள்மிகு கைலாயநாதர் ஆலயத்திற்கு இடிதாங்கி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, அருள்மிகு கைலாயநாதர் திருக்கோயிலின் இராஜகோபுரம் 105 அடி உயரத்தில் 5 நிலையும், 7 செம்புக் கலசமும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி இராஜகோபுர மராமத்துப் பணிகள் ரூ.1,00,000/- மதிப்பில் செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. மராமத்துப் பணிகள் செய்து முடிந்தவுடன் இடிதாங்கி பொருத்த விலைப்புள்ளிகள் பெற்று, இடிதாங்கியை பொருத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

405—

குடமுழுக்கு

வினா எண் 25800—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதி, கரிம்பேடு கிராமம், அருள்மிகு ஈஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதி, கரிம்பேடு கிராமத்தில் உள்ள அருள்மிகு நாதாதீஸ்வரர் திருக்கோயிலின் பெரும்பாலான திருப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நிலுவையிலுள்ள திருப்பணிகளை விரைந்து முடிந்தது குடமுழுக்கு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2011 ஜனவரி 13]

406—

புதுப்பித்தல்

வினா எண் 26642—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர், அருள்மிகு ஈஸ்வரன் கோயில் வளாகத்தை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

ஓமலூர் அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலில் போதிய நிதிவசதி இல்லததால் நிதிவசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதியுதவி பெற்று, நிதிவசதியற்ற திருக்கோயில்களில் திருப்பணி செய்திடும் திட்டத்தின் கீழ், சேலம் வட்டம், ஜாகீர் அம்மாபாளையம், அருள்மிகு வெண்ணங்கொடி முனியப்பன் திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.2.55 இலட்சம் நிதியுதவி பெற்று அத்தியாவசியமான பணிகளான 9 வகையான திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

407—

சீரமைத்தல்

வினா எண் 26645—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் நகராட்சி அலுவலகம் அருகிலுள்ள அருள்மிகு மாரியம்மன் கோயில் தெப்பக் குளத்தை சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

ராசிபுரம் நகராட்சிக்கு அருகிலுள்ள குளம் ராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான இடத்திலுள்ளது. நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமாக திருக்குளம் ஏதுமில்லை. எனவே, சீரமைப்பு செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

408—

புதுப்பித்தல்

வினா எண் 27392—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மலை கொழுந்தீஸ்வரர் கோயிலை புதுப்பிக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், அருள்மிகு மலைக் கொழுந்தீஸ்வரர் திருக்கோயிலின் மராமத்துப் பணி மேற்கொள்ளப்பட்டு, கடந்த 13-7-2006 அன்று குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது. எனவே, மேற்படி திருக்கோயில் தற்போது திருப்பணி செய்து புதுப்பிக்க வேண்டிய அவசியம் எழாது.

409—

புதுப்பித்தல்

வினா எண் 27395—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மதுரை—இராமேஸ்வரம் சாலையிலுள்ள ஒத்தக்கடை கோட்டை சிவன் கோயிலை புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இராமேஸ்வரம் சாலையிலுள்ள ஒத்தக்கடை சிவன் கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இத்திருக்கோயிலின் திருப்பணிக்கு நிதி உதவி வழங்க இந்து சமய அறநிலையத் துறை விதிகளில் வழிவகையில்லை.

2011 ஜனவரி 13]

410—

நிதி உதவி வழங்குதல்

வினா எண் 28098—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கொத்தக்கோட்டை, அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத் திருப்பணிக்கு நிதி உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, கொத்தக்கோட்டை, அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகைக்கு கொண்டு வரப்படாத, பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறிய திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயில் திருப்பணி வேலைகள் அனைத்தும் உபயதாரர்கள் மூலம் முடிவடைந்து 13-4-2007 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. எனவே, மேற்படி திருக்கோயிலுக்கு தற்போதைய நிலையில் அரசு நிதியுதவி ஏதும் வழங்கத் தேவையில்லை.

411—

நிதி உதவி வழங்குதல்

வினா எண் 28099—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, வல்லத்திராக்கோட்டை ஊராட்சி, அருள்மிகு விஸ்காணி அம்மன் திருக்கோயிலை அறநிலையத் துறையில் சேர்த்து திருப்பணிக்கு நிதி உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, வல்லத்திராக்கோட்டை ஊராட்சி, அருள்மிகு விஸ்காணி அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் மிகவும் நல்ல நிலையில் உள்ளது. தற்போது திருப்பணி செய்ய வேண்டிய அவசியம் ஏதுமில்லை. இத்திருக்கோயில் முன் மண்டபம் கட்டி, 2010-ல் குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். எனவே, தற்போது திருப்பணிக்கு உடனடி நடவடிக்கை ஏதும் அவசியமில்லை.

412—

தூர் வாருதல்

வினா எண் 28760—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு நகராட்சி, பெரிய நத்தம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் குளத்தினைத் தூர் வாரி சுற்றுச்சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இக்கோயிலின் திருக்குளத்தை தூர்வாரி படிகளைச் செப்பனிட்டு சுற்றுச்சுவர் கட்ட சுமார் ரூ.20.00 இலட்சம் தேவைப்படுகிறது. இத்திருக்கோயிலுக்கு போதிய நிதி ஆதாரம் இல்லை. எனவே, பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினைப் பெற்றோ அல்லது மாவட்ட ஆட்சியரின் நிதியினைப் பெற்றோ இக்கோயில் திருக்குளத்தினை தூர்வாரி செப்பனிட்டு சுற்றுச்சுவர் கட்டிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2011 ஜனவரி 13]

413—

ஓய்வூதியம்

வினா எண் 29698—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அனைத்து கோயில்களிலும் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகதத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மத்திய அரசின் திட்டமான பணியாளர் சேம நலநிதித் திட்டம் (E.P.F. Scheme) மூலம் இ.பி.எப். துறை வாயிலாக ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் சேர தகுதியில்லாத பணியாளர்களுக்கு இந்து சமய அறநிலையத்துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம் மூலம் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

414—

ஊதியம் (ம) இதர சலுகைகள்

வினா எண் 29714—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் திருக்கோயில் பணியாளர்களுக்கு அரசு பணியாளர்களுக்கு சமமான ஊதியம் மற்றும் இதர சலுகைகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

மாநில அரசு ஊழியர்களுக்கு மைய அரசு ஊழியர்களுக்கு இணையாக ஊதியம் வழங்க குழு அமைக்கப்பட்டது போல்,

[2011 ஜனவரி 13

திருக்கோயில் பணியாளர்களின் ஊதிய விகிதங்கள் மாற்றி அமைக்க, நான்கு உறுப்பினர் கொண்ட ஊதிய சீரமைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரைகள் பரிசீலக்கப்பட்டு அரசால் புதிய ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டு 1-7-97 முதல் செயல்படுத்த உத்திரவிடப்பட்டது. மேலும், விடுபட்ட பதவிகளுக்கும் அரசால் ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டும், அரசு ஊழியர்களைப்போல் திருக்கோயில் பணியாளர்களுக்கு 50 சதவிகிதம் அகவிலைப்படி அடிப்படை ஊதியத்துடன் இணைக்கப்பட்டும் வழங்கப்பட்டு வருகிறது.

415—

மராமத்து செய்தல்

வினா எண் 29928—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், எழுவணி ஸ்ரீ அருள்மிகு சிவசெண்பக மூர்த்தி ஐயனார் கோயிலை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், எழுவணி ஸ்ரீ அருள்மிகு சிவசெண்பக மூர்த்தி ஐயனார் திருக்கோயிலில் பக்தர்களின் வசதிக்காக இரண்டு மண்டபங்கள், திருக்கோயிலின் முன் மண்டபம் ஆகியவை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், இத்திருக்கோயிலுக்கு உபயதாரர்கள் மூலம் 3 நிலை இராஜகோபுரம் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதர திருப்பணி வேலைகளுக்கு மதிப்பீடுகள் தயாரித்து, துறை அங்கீகாரம் பெற்று, பணிகள் செய்து குடமுழுக்கு விழா நடத்திட திருக்கோயில் நிர்வாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2011 ஜனவரி 13]

416—

புதுப்பித்தல்

வினா எண் 30202—திரு. கோ. அரி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், செஞ்சி ஊராட்சியிலுள்ள அருள்மிகு ஜனமே ஜெயஈஸ்வரர் கோயில், லட்சுமி நாராயணபெருமாள் கோயில்களை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், செஞ்சி வட்டம், பானம்பாக்கம் கிராமத்தில் உள்ள அருள்மிகு ஜனமே ஜெயஈஸ்வரர் மற்றும் லட்சுமி நாராயண பெருமாள் திருக்கோயில்கள் இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் உதவி ஆணையர் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களாகும். இவற்றில் அருள்மிகு ஜனமே ஜெயஈஸ்வரர் திருக்கோயில் அரசின் ஒரு கால பூஜை நிதியுதவி திட்டத்தின் கீழ் இயங்கி வரும் திருக்கோயிலாகும். மேற்படி இரண்டு திருக்கோயில்களுக்கும் வருமானம் ஏதும் வரப்பெறவில்லை.

2. அருள்மிகு ஜனமே ஜெயஈஸ்வரர் திருக்கோயில் மிகவும் பழமையான திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயிலை புதுப்பிக்க சுமார் ரூபாய் 25 இலட்சம் நிதியுதவி தேவைப்படுகிறது. பொதுமக்களிடமிருந்து திருப்பணி செய்வதற்கு நிதியுதவி திரட்ட ஏதுவான சூழ்நிலை இல்லாத காரணத்தினால் திருப்பணி செய்ய இயலவில்லை.

3. அருள்மிகு லட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயிலும் மிகவும் பழமையான திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலை புதுப்பிக்க ரூபாய் நான்கு இலட்சம் நிதியுதவி தேவைப்படுகிறது. மேற்படி திருக்கோயிலில் வருமானம் ஏதும் இல்லாததாலும் பொதுமக்களிடமிருந்து நிதியுதவி பெற இயலாத சூழ்நிலை உள்ளதாலும் மேற்படி திருப்பணி செய்ய இயலவில்லை.

[2011 ஜனவரி 13

417—

இராஜகோபுரம் கட்டுதல்

வினா எண் 30303—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டுப்பாளையம் தொகுதி, தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்திர காளியம்மன் திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதி, தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்திர காளியம்மன் திருக்கோயிலுக்கு கடந்த 3-3-2002-ல் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. மேற்படி திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் கட்டும் திட்டம் ஏதும் தற்போதைக்கு இல்லை.

418—

நிலம் மீட்பு

வினா எண் 30536—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொள்ளாச்சி வட்டம், அருள்மிகு கரிவரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கு சொந்தமான நிலத்தினை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் மற்றும் பொள்ளாச்சி நகரம், அருள்மிகு கரிவரதராஜப் பெருமாள்

2011 ஜனவரி 13]

திருக்கோயிலுக்குச் சொந்தமான 19.58 ஏக்கர் நிலத்தில், அரசுத் துறையினர் செய்துள்ள நில எடுப்பு நிலங்கள் 2.51 ஏக்கர் போக மீதம் உள்ள 17.07 ஏக்கர் நிலம் தனிப்பட்ட நபர்களால் 100 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள், கூடிய விரைவில் அகற்றப்பட்டு, மேற்படி நிலங்கள் திருக்கோயில் வசம் சுவாதீனம் விரைவில் பெறப்படும்.

(ஆ) திருக்கோயில் நிலங்கள் குறித்து சில வழக்குகள் நிலுவையில் உள்ளது. சில இனங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட வேண்டி உள்ளது. கால நிர்ணயம் செய்து கொள்ள இயலவில்லை என்றாலும்கூட, விரைவில் மீட்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

419—

குடிநீர் வசதி

வினா எண் 30537—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் வட்டம், தம்புரெட்டிபாளையம் கிராமம், அருள்மிகு ஸ்ரீ தங்கம்மன் திருக்கோயிலுக்கு காவிரி குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் வட்டம், தம்புரெட்டிபாளையம், அருள்மிகு ஸ்ரீ தங்கம்மன் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கும், சுவாமி பூஜைகளுக்கும் நல்ல தண்ணீர் கிடைக்காத நிலையுள்ளதால், லாரி மூலம் குடி தண்ணீர் விலைக்கு வாங்கப்பட்டு வருகிறது. பள்ளக்காட்டுப் புதூர் கிராமம் வரை ஆதாவது மேற்படி திருக்கோயிலிலிருந்து 2 பர்லாங்கு தூரம் வரை வந்து கொண்டிருக்கும் காவிரி குடிநீர் திட்டத்தின் நல்ல தண்ணீரை குழாய் அமைத்து அதன் மூலம் மேற்படி திருக்கோயில் வரை கொண்டு வந்து குடிநீர் வசதி செய்துத் தருமாறு ஈரோடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகத்திடம் கேட்கப்பட்டு உள்ளது. திருக்கோயில் மூலமாக இத்திட்டத்தினை செயல்படுத்திட திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 13

420—

மின் விளக்குகள்

வினா எண் 30538—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் வட்டம், சிவன்மலை, அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் கிரிவலப் பாதையில் மின் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் வட்டம், சிவன்மலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் கிரிவலப்பாதையில் மின் விளக்குகள் அமைப்பதற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து காங்கேயம் வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலமாக 24 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு, தற்போது மின்விளக்குகள் நன்கு இயங்கி வருகின்றன. இதற்கான பராமரிப்பு மற்றும் மின்கட்டணம் செலுத்துதல் போன்றவை சிவன்மலை பஞ்சாயத்து மூலம் செய்யப்பட்டு வருகிறது.

421—

புதிய தேர் செய்தல்

வினா எண் 30582—திரு. பா. வேல்துரை: மாண்புமிகு இந்த சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் அவர்கள் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன் மகாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சியிலுள்ள முருகன் கோயிலுக்கு புதிய தேர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக் குறிச்சியிலுள்ள அருள்மிகு முருகன் கோயிலுக்கு புதிய தேர் செய்வதற்காக ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு, இந்து சமய அறநிலையத் துறை மூலம் ரூபாய் 3 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டது. எஞ்சிய ரூபாய் 9 இலட்சம் தொகையினை பொதுமக்கள் நன்கொடை மூலம் பெற்று பணிகள் தொடங்கிட திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

422—

கம்பிவட ஊர்தி

வினா எண் 31012—திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, அரச்சலூர், நாகமலை முருகன் கோயிலுக்குக் கம்பிவட ஊர்தி வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

மொடக்குறிச்சி தொகுதி, அரச்சலூர், நாகமலை முருகன் திருக்கோயில் வனத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள வனப் பகுதியில் சுமார் 750 அடி மலையின் மீது அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு மாதத்தில் கிருத்திகை நாள் அன்று மட்டுமே அதிக பட்சமாக 50 முதல் 100 சேவார்த்திகள் சுவாமி தரிசனத்திற்கு வருகின்றனர். இவர்கள் சுவாமி தரிசனம் செய்வதற்கு மலை மீது செல்ல படிகள் உள்ளன. இத்திருக்கோயிலுக்கு போதிய நிதி வசதி இல்லாததாலும் கம்பிவட ஊர்தி அமைக்கும் அளவிற்கு சேவார்த்திகள் எண்ணிக்கை அதிகமாக இல்லாத காரணத்தாலும் கம்பிவட ஊர்தி அமைக்கும் அவசியம் எழவில்லை.

423—

மராமத்துப் பணி

வினா எண் 31063—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அவர்கள் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், ஏரிக்குப்பம், பார்வதி அகர ஏகாம்பர ஈஸ்வரர் கோயிலில் மராமத்து பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், ஏரிக்குப்பம் பார்வதி அகர ஏகாம்பர ஈஸ்வர திருக்கோயில் திருப்பணிக்கு சுமார் ரூ. 10 இலட்சம் தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 26 உறுப்பினர்களைக் கொண்ட திருப்பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் பங்களிப்பு கிடைக்கப்பெற்றதும் இந்து சமய அறநிலையத் துறை சார்பாக மதிப்பீட்டு தொகையில் 25 சதவிகிதத் தொகைக்கு மிகாது திருப்பணிக்கு வழங்க பரிசிலிக்கப்படும்.

424—

மராமத்துப் பணி

வினா எண் 31064—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு அவர்கள் விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கட்டிப்பூண்டு ஊராட்சி காளியம்மன் கோயிலில் மராமத்து பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கட்டிப்பூண்டு ஊராட்சி, காளியம்மன் கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, அத்திருக்கோயிலுக்கு மராமத்து பணிகளுக்கு நிதியுதவி வழங்கிட இயலாது.

425—

மின்குழல் விளக்குகள்

வினா எண் 31107—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, திருவதிகை வீரட்டானேஸ்வரர் ஆலய கிரிவலப்பாதையில் புதிய மின் குழல் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேற்படி திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாததால் திருக்கோயிலில் இருந்து கிரிவலப் பாதையில் மின் விளக்குகள் போட பண்ருட்டி நகராட்சிமூலம் 3 சோடியம் 12 மின் குழல் விளக்குகளும் மேற்படி திருக்கோயில் கிரிவலப் பாதையில் அமைக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது.

426—

சுற்றுச்சுவர்

வினா எண் 31108—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) பண்ருட்டி நகரில் தட்டாஞ்சாவடி காளியம்மன் கோயிலுக்குச் சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அருள்மிகு காளியம்மன் திருக்கோயில் இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் ஆளுகையின் கீழ் இல்லாததால் நிதியுதவி வழங்கி சுற்றுச் சுவர் அமைக்க இயலாது.

427—

தங்கும் விடுதி

வினா எண் 31170—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, குமரலிங்கம் கிராமத்தில் பழனி திருக்கோயில் இடத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதியில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக குமரலிங்கம் கிராமத்தில் உள்ள இடத்தில் முதலில் திருமண மண்டபம் கட்ட உத்தேசிக்கப்பட்டு அதற்கேற்ற இடவசதி இல்லாத காரணத்தால் திருமண மண்டபம் கட்டும் திட்டம் கைவிடப்பட்டு சமுதாயக் கூடம் கட்ட மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. சமுதாயக் கூடத்தினையே தங்கும் விடுதியாக பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புள்ளதால், தனியாக தங்கும் விடுதி கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

428—

படியடுக்கு மேடை

வினா எண் 31468—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில் சுற்றுப் பிரகாரங்கள் ஒட்டிய பகுதிகளில் படியடுக்கு மேடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலின் பிரகாரங்களில் படியடுக்கும் மேடை அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

429—

சீரமைத்தல்

வினா எண் 31571—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரம், கைலாசநாதர் திருக்கோயில் குளத்தை சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு நகரம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் 60 அடி நீளம், 60 அடி அகலம் கொண்ட பெரிய திருக்குளம் உள்ளது. இத்திருக்குளத்தின் படிகள் அனைத்தும் சிதிலம் அடைந்து திருக்குளம் தூர்வாரப்பட வேண்டிய நிலையில் உள்ளது. திருக்குளத்தை சுற்றிலும் சுற்றுச்சுவர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஏதும் இல்லை. இப்பணிகளை மேற்கொள்ள சுமார் ரூ.20.00 இலட்சம் தேவைப்படுமென்பதால் இத்திருக்கோயிலில் போதிய ஆதாரம் இல்லாததால் இத்திருக்குளத்தினை தூர் வாரி சீரமைக்க சட்ட மன்ற உறுப்பினர் நிதி அல்லது காஞ்சிபுரம் மாவட்டம் ஆட்சியர் நிதியினை பெறுவதற்கு இத்துறை வேலூர் இணை ஆணையர்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

430—

சீரமைத்தல்

வினா எண் 31774—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பொழிச்சலூர் ஊராட்சி, அகஸ்தீஸ்வரர் திருக்கோயில் குளத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, பொழிச்சலூர், அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு கிழக்கு வாயில் எதிரில் உள்ள குளம் திருக்கோயிலுக்கு சொந்தமான குளம் அல்ல. அரசு புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ள அந்த குளத்தை சீரமைக்க இந்து சமய அறநிலையத் துறை மூலம் நடவடிக்கை எடுக்க இயலாது.

431—

மின்சாரம் வழங்குதல்

வினா எண் 32748—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் உள்ள கோவில்களுக்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக திருக்கோயில்களில் ரூ. 1000-க்கு கீழ் வருமானம் உள்ள திருக்கோயில்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ரூ.1000/-க்கு மேல் வருமானம் உள்ள திருக்கோயில்களுக்கு 60 யூனிட் வரை யூனிட் ஒன்றுக்கு ரூ.1.50 வீதமும் 60 யூனிட்டுக்கு மேல் யூனிட் ஒன்றுக்கு ரூ.3.00வீதமும் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இது தவிர கிராமங்களில் உள்ள திருக்கோயில்களுக்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்கிட திட்டம் ஏதுமில்லை.

432—

செப்பனிடுதல்

வினா எண் 33009—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, செம்பேடு கிராமம், அருள்மிகு காசி விஸ்வநாதர் கோயிலைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், செம்பேடு கிராமம் அருள்மிகு காசி விஸ்வநாதசுவாமி திருக்கோயில் சட்டப்பிரிவு 46(1)ன்கீழ் பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலாகும். திருக்கோயிலில் சுவாமி சன்னதி புதியதாக கட்டும் பணிக்கு ரூ.8.30 இலட்சத்திற்கும், மதில்சுவர் கட்டும் பணிக்கு ரூ.5.25 இலட்சத்திற்கும், மடப்பள்ளி புதியதாகக் கட்டும் பணிக்கு ரூ.1.55 இலட்சத்திற்கும் ஆக கூடுதலாக ரூ.15.10 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் வழங்கப்பட்டு பணி நடைபெறவுள்ளது. உபயதாரர்கள்மூலம் திருப்பணி வேலைகள் ரூ.9.94 இலட்சத்திற்கு 75% பணிகள் முடிந்துள்ளது, விரைவில் இதர பணிகள் நிறைவுற்று குடமுழுக்கு நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

433—

புதுப்பித்தல்

வினா எண் 33038—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அவர்கள் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் அருள்மிகு ஈஸ்வரன் கோயிலை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் மற்றும் நகர் அருள்மிகு காசி விஸ்வநாதர் (ஈஸ்வரன் கோயில்) திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.2.55 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்பட்டு வருகிறது. தற்போது சுமார் 50 சதவீதம் வேலைகள் முடிவுற்றுள்ளது. பணிகளை விரைந்து முடித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

434—

ராஜகோபுரம்

வினா எண் 33601—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அருள்மிகு அழகர் கோயில் ராஜகோபுரம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி மானாமதுரை அழகர் கோயிலில் மூன்று நிலை இராஜகோபுரம் ஏற்கெனவே உள்ளது. எனவே, ராஜகோபுரம் கட்ட வேண்டிய கேள்வி எழாது.

2011 ஜனவரி 13]

435—

குடமுழுக்கு

வினா எண் 33602—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பேரூராட்சி, ஆதனூர்சாலை பூக்கொல்லை அருகிலுள்ள அருள்மிகு முனியாண்டி கோயிலை புதுப்பித்து குடமுழுக்கு செய்ய அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பேரூராட்சி, ஆதனூர்சாலை, பூக்கொல்லை அருகிலுள்ள அருள்மிகு முனியாண்டி கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாததால் இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் திருப்பணிகள் செய்திட வழிவகை இல்லை.

436—

குடமுழுக்கு

வினா எண் 33603—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை அருள்மிகு பிடாரியம்மன் கோயிலைப் புதுப்பித்துக் குடமுழுக்கு நடத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக்

[2011 ஜனவரி 13

கட்டுப்பாட்டில் உள்ள, சிவகங்கை சமஸ்தான நிர்வாகத்திற்குட்பட்ட பரம்பரை அறங்காவலரால் நிர்வகிக்கப்பட்டு வரும் கோயிலாகும். இத்திருக்கோயிலில் ஒரு கால பூஜை மட்டுமே நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ள ரூ.2,00,000/- செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திருக்கோயிலுக்கு போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் பொதுமக்கள் பங்களிப்பு கிடைக்கப்பெறின் திருப்பணிக்கான தொகையில் சிறிதளவு இந்து சமய அறநிலையத் துறை நிதி உதவி வழங்கி திருப்பணிகள் மேற்கொள்ள இயலும்.

437—

குடிநீர் வசதி

வினா எண் 34246—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மானத்தாள் அருள்மிகு வேட்ராயப் பெருமாள் கோவிலுக்கு குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, அருள்மிகு வேட்ராயப் பெருமாள் திருக்கோயில் 900 அடி மலை உயரத்தில் உள்ளது. 900 அடி மலை உயரத்தில் குழாய் மூலம் குடிநீர் எடுத்துச் சென்று குடிநீர் வசதி செய்து தர அத்திருக்கோயிலுக்கு நிதி ஆதாரம் இல்லை. மலையிலுள்ள நீர் ஊற்று தற்போது குடிநீராக பயன்படுத்தப்படுகிறது.

438—

தங்கும் விடுதி

வினா எண் 34283—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) கலசபாக்கம் தொகுதி, ஏலத்தூர்-மோட்டூர் நட்சத்திர கோயில் அருள்மிகு சிவ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு தங்கும் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், ஏலத்தூர் மோட்டூர் அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித் துறை நிதி மற்றும் கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் நிதிமூலம் ரூ.4,00,000/- செலவில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

439—

புதுப்பித்தல்

வினா எண் 34486—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் 16 கால் மண்டப சிற்பங்களை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் உள்ள 16 கால் மண்டபத்திலுள்ள சிற்பங்கள் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

440—

தேர் நிறுத்தும் கூடம்

வினா எண் 34492—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு தேர் நிறுத்தும் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலின் திருத்தேர் பாதுகாப்பாக வைப்பதற்காக கொட்டகை அமைக்கும் பணிக்காக ரூபாய் 8.30 இலட்சம் மதிப்பீட்டிற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

441—

குடமுழுக்கு

வினா எண் 34808—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதி, எலத்தூர் அருள்மிகு கரைகண்டீஸ்வரர் ஆலயத்திற்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், எலத்தூர் அருள்மிகு கரைகண்டீஸ்வரர் திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் கடந்த 2000ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்டு

2011 ஜனவரி 13]

குடமுழுக்கு விழாவும் நடத்தப்பட்டு, தற்போது திருக்கோயில் நல்ல நிலையில் உள்ளதால் தற்போதைக்கு குடமுழுக்கு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

442—

கட்டுப்பாட்டில் கொண்டு வருதல்

வினா எண் 35118—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மல்லிக்குட்டை ஊராட்சி, அருள்மிகு சென்றாயப் பெருமாள் கோவிலை இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், மல்லிக்குட்டை ஊராட்சியில் உள்ள அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயில் ஏற்கெனவே இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும்.

443—

செப்பனிடுதல்

வினா எண் 35654—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி அருள்மிகு படைவீட்டம்மன் கோயில் தேரைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம் மற்றும் நகர், அருள்மிகு படைவீட்டம்மன் திருக்கோயில் இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின்கீழ் உள்ள பட்டியலை சேராத திருக்கோயிலாகும். திரு. ஜலந்தர் என்பவர் தற்போது நிர்வாகம் பார்த்து வருகிறார். இவரால் பரம்பரை வாரிசு உரிமை வழங்க வேண்டி விழுப்புரம் இணை ஆணையர் முன்பாக மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது. திருக்கோயிலுக்கு ஒரு சிறிய தேர் உள்ளது. அது மிகவும் பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதால், கடந்த இரண்டு ஆண்டுகளாக தேரோட்டம் நடைபெறவில்லை. மேற்படி தேரினை புதுப்பிப்பதற்கு ஊர் முக்கிய பிரமுகர்கள் ஒன்று கூடி முடிவு செய்துள்ளனர். மேற்படி திருத்தேர் திருப்பணிக்காக அரசு நிதியுதவி பெறும் நிலை எழவில்லை.

444—

குடமுழுக்கு

வினா எண் 35760—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் இளமேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் அருள்மிகு இளமேஸ்வரர் திருக்கோயிலுக்கு 19-8-1994-ல் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. குடமுழுக்கு நடைபெற்று 12 வருடங்கள்

2011 ஜனவரி 13]

கடந்துவிட்டபடியால் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்திட திட்டமிடப்பட்டு, திருப்பணியினை பொதுமக்கள் பங்கேற்புடன் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

445—

கலையரங்கம்

வினா எண் 36020—திரு. அ. ராஜன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில், நாகராஜா கோயிலின் உட்புறம் கலையரங்கம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

அருள்மிகு நாகராஜா திருக்கோயில் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களில் ஒன்றாகும். இத்திருக்கோயிலின் வளாகத்தில் ஒரு பெரிய திருமண மண்டபம் உள்ளது. திருக்கோயிலின் திருவிழாவின் போது நடைபெறும் அனைத்து கலைநிகழ்ச்சிகளும் திருமண மண்டபத்தில் நடைபெறுகின்றன. திருமண மண்டபம் கலையரங்கமாகவும் பயன்படுத்தப்பட்டு வருவதால் தனியாகக் கலையரங்கம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

446—

தங்க ரதம்

வினா எண் 36149—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேத கிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு தங்க ரதம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலுக்குத் தங்கத்தேர் செய்யும் அளவிற்குப் போதுமான நிதிநிலைமை இல்லாததால் தங்கத்தேர் செய்யும் திட்டம் ஏதும் இல்லை.

447—

தங்கும் விடுதி

வினா எண் 36697—திரு. ஷவ. காவேரி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கஞ்சமலை சித்தேஸ்வரர் ஆலயத்திற்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் மற்றும் வட்டம் கஞ்சமலை கிராமம், அருள்மிகு சித்தேஸ்வரசுவாமி வகையறா திருக்கோயிலுக்கு பெரும்பாலும் சேலம் பகுதி மற்றும் கஞ்சமலை பகுதியில் வசிப்பவர்கள் மட்டுமே சுவாமி தரிசனம் செய்ய வருகை புரிகின்றனர். சுவாமி தரிசனம் செய்துவிட்டு உடனே திரும்பி விடுகின்றனர். வெளியூரிலிருந்து சேவார்த்திகள் எவரேனும் வந்தாலும், சுவாமி தரிசனம் செய்துவிட்டு மாநகராட்சியாகிய சேலம் நகரில் தங்குவதையே விரும்பி சேலம் சென்று விடுகின்றனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

திருக்கோயிலுக்கு வருகை தரும் சேவார்த்திகள் யாரும் தங்குவதில்லை. எனவே, இத்திருக்கோயிலில் தங்கும் விடுதி கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

448—

குடமுழுக்கு

வினா எண் 36704—திரு. வி.எஸ். கலியவரதன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, முகையூர் ஒன்றியம், ஜம்பை கிராமம், அருள்மிகு ஜம்புலிங்கேஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், ஜம்பை கிராமத்தில் உள்ள அருள்மிகு ஜம்புலிங்கேஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். மேற்படி கோயிலின் திருப்பணி வேலைகளுக்கு ரூ. 19.45 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திருக்கோயிலை பழுது பார்த்து புதுப்பிக்கப்படும்.

449—

புதிய தேர் செய்தல்

வினா எண் 37773—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி வட்டம், தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவிலுக்கு புதிய தேர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் தற்போது சட்டத்தேர் மட்டுமே உள்ளது. திருக்கோயில் நிருவாகத்தால் புதிய தேர் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

450—

குடமுழுக்கு

வினா எண் 38323—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம், பார்த்திபனூர் அருள்மிகு சிவன் கோயிலை புதுப்பித்து, குடமுழுக்கு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம், பார்த்திபனூர் அருள்மிகு சிவன் கோயிலுக்கு திருப்பணி செய்திட திட்டமிடப்பட்டு மதிப்பீடு பரிசீலனையில் உள்ளது. மதிப்பீடு இறுதி செய்து பொதுமக்கள் பங்கேற்புடன் திருப்பணி செய்திட நடவடிக்கையில் உள்ளது.

451—

சீரமைத்தல்

வினா எண் 38496—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 ஜனவரி 13]

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் அருள்மிகு நாறும்பூநாதர் திருக்கோயில் தெப்பக் குளத்தை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் அருள்மிகு நாறும்பூநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான தெப்பக் குளம் சுற்றுச்சுவர் பழுதடைந்து, தூர்வாரப்பட வேண்டிய நிலையில் உள்ளது. இப்பணியினைச் செய்திட திருக்கோயிலில் போதிய நிதிவசதி இல்லை. தெப்பக் குளம் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைக்கு தேவைப்படும் நீர்நிலை ஆதாரமாக பயன்பட்டு வருவதைக் கருத்தில் கொண்டு, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் செப்பனிட்டுத்தர மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

452—

சீரமைத்தல்

வினா எண் 40554—திருமதி பெ. கமலாம்பாள் : மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, வளத்தோட்டம் ஊராட்சி, அருள்மிகு கைலாசநாதர் கோயிலை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் வட்டம் வளத்தோட்டம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் பட்டியலில் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு வருமானம் ஏதும் இல்லாத நிலையில் கோயிலை சீரமைக்க மதிப்பீடு தயார் செய்து பொது மக்கள் பங்களிப்புடன் திருப்பணி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2011 ஜனவரி 13

453—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 40610—திரு. அ. தமிழரசு : மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு மலையைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருச்செங்கோடு மலையைச்சுற்றி உள்ள ஆக்கிரமிப்புகளை உரிய விதி முறைகளைப் பின்பற்றி, அகற்றிட அரசு ஆவன செய்யும்.

454—

சீரமைத்தல்

வினா எண் 41483—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை அருகிலுள்ள திருவெற்றியூரில் அருள்மிகு பாகம்பிரியாள் வன்மீக நாதர் கோவிலை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டம், திருவெற்றியூர் அருள்மிகு வன்மீக நாதர்சுவாமி சமேத பாகம்பிரியாள் திருக்கோயிலை சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

2011 ஜனவரி 13]

(ஆ) இத்திருக்கோயிலின் குடமுழுக்கு செய்யப்பட்டு 11 ஆண்டுகள் கடந்த நிலையில் தற்போது மீண்டும் திருப்பணி மராமத்து பணிகள் துவங்க உத்தேசிக்கப்பட்டு உரிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. மதிப்பீடுகளின் மீது ஆய்வு செய்து இத்திருக்கோயிலை சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

455—

குடமுழுக்கு

வினா எண் 43501—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலைத் தொகுதி, வெங்கரை அக்ரஹாரம் ஈஸ்வரன் கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், வெங்கரை கிராமத்தில் உள்ள அருள்மிகு நீலகண்டேஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு 1954 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. திருக்கோயிலில் தேவையான திருப்பணி வேலைகளை உபயதாரர்கள் மூலம் செய்வதற்கு திருக்கோயில் நிர்வாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து குடமுழுக்கு விழா நடத்தப்படும்.

456—

மாசு தடுத்தல்

வினா எண் 44221—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 13

(அ) இராமநாதபுரம் மாவட்டம், தேவிப்பட்டினம் நவபாஷாணக் கடற்கரை மாசடைந்து வருவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், தேவிப்பட்டினம், நவபாஷாணக் கடற்கரை இயற்கையிலேயே களிமண் பகுதியாக இருப்பதால் கடலில் இயற்கையாகவே உற்பத்தியாகும் முறி என்ற கடல்தாவரம் கடல்நீர் பெருகும் போதும் நீர் வற்றும் போதும் கடற்கரையில் தேங்கி விடுகிறது. அதை அவ்வப்போதே உழவாரபணிகள்மூலம் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இயற்கை சார்ந்த கழிவுகள் கடல்நீரால் வெளியேற்றப்பட்டு வருவதால் கடற்கரையில் மாசு அடைந்து விடுகிறது. இது தொடர் நிகழ்வாக இருக்கிறது. இதனை அவ்வப்போது திருக்கோயில் நிர்வாகம்மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

457—

சீர்செய்தல்

வினா எண் 45894—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலைத் தொகுதி, வேலூர் காசி விஸ்வநாதர் ஆலயத்தில் கருவறையிலும், அர்த்தமண்டபத்திலும், மகாமண்டபத்திலும் கூரையில் உள்ள உடைந்து போன கற்களைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலின் திருப்பணிகள் ஐந்து கட்டமாக செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. முதல் மூன்று கட்டப்பணிகள்

2011 ஜனவரி 13]

முடிவுற்றவுடன் நான்காம் கட்டமாக கருவறையிலும், அர்த்த மண்டபத்திலும் மகா மண்டபத்திலும் கூறையில் உடைந்து போன கற்களைச் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

458—

நிதியுதவி அளித்தல்

வினா எண் 45925—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, காங்கேயம் குண்டடம் சுருக்க பாளையம், ஆண்டிபுதூர் ஆதிதிராவிடர் காலனியிலுள்ள மாகாளி அம்மன் ஆலயத்தைப் புதுப்பிக்க அரசு அறநிலையத் துறை மூலமாக நிதியுதவி அளிக்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, காங்கேயம் குண்டடம், குருக்கபாளையம், ஆண்டிபுதூர் ஆதி திராவிட காலனியிலுள்ள அருள்மிகு மாகாளியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் வராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு திருப்பணி விரைந்து முடித்திட ரூ.25,000/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

459—

கம்பி வட ஊர்தி

வினா எண் 49552—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், ரெட்டிக்குளம் அருள்மிகு பாலதண்டாயுதபாணி மலைக் கோயிலுக்குச் செல்ல கம்பி வட ஊர்தி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், செட்டிக்குளம் அருள்மிகு பாலதண்டாயுதபாணி மலைக் கோவிலுக்குச் செல்ல கம்பி வட ஊர்தி அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

460—

குடமுழுக்கு

வினா எண் 52638—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சேமக்கோட்டையில் உள்ள திருமூல ஈஸ்வரன் கோவில் கோபுரத்தை சீர் செய்து குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், சேமக்கோட்டை, அருள்மிகு திருமூலநாதர் மற்றும் சென்ன கேசவப்பெருமாள் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் பழுதடைந்துள்ளது. இத்திருக்கோயிலில் கோபுரங்கள் ஏதும் இல்லை. பொதுமக்கள் மூலம் குறிப்பிட்ட சில பணிகள் உபயப்பணிகளாக நடைபெற்று வருகின்றன. இத்திருக்கோயிலை முழுமையாக திருப்பணி செய்ய சுமார் ரூ.10.00 இலட்சம் தேவைப்படும். இத்திருப்பணியை மேற்கொள்ள திருக்கோயிலுக்குப் போதிய நிதிவசதி இல்லை. பொதுமக்கள் மற்றும் உபயதாரர்கள் பங்களிப்பு கிடைக்கப்பெற்றால் துறையின் நிதியுதவி மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 25 சதவிகிதத்திற்கு மிகாது வழங்கி பணிகள் மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 13]

461—

குடமுழுக்கு

வினா எண் 54313—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்க்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, நட்சத்திரக் கோயிலுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், எலத்தூர் மோட்டூர், அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் (நட்சத்திரக் கோயில்) சன்னதிகள் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் இந்து சமய அறநிலையத் துறை நிதியுதவிமூலம் திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் இராஜகோபுரம் புதுப்பித்தலும், கொடி மரம் புதுப்பித்தல் பணியும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிகள் செய்திட உத்தேசமாக ரூ.5.00 இலட்சம் செலவாகும். இப்பணிகளைச் செய்திட திருக்கோயிலில் போதிய நிதி வசதியில்லை. திருப்பணியினைச் செய்திட பொது மக்கள் ஆர்வத்துடன் வந்து தங்களது பங்களிப்பை அளிக்கும் நிலையில், மதிப்பீட்டுத் தொகை 25 சதவிகிதத்திற்கு மிகாது, இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நிதியுதவி அளித்து பணிகள் செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

462—

திருமண மண்டபம்

வினா எண் 57226—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மேற்கு தொகுதி, செல்லூர் அருள்மிகு திருவாப்புடையார் கோயிலின் வளாகத்தில் திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

மதுரை நகர், செல்லூர், அருள்மிகு திருவாய்ப்புடையார் திருக்கோயில், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் உபகோயில்களில் ஒன்றாகும். இத்திருக்கோயிலின் வளாகத்தில் உள்ள காலியிடத்தில் சட்டமன்றப் பேரவை அரசு அறிவிப்பின்படி சிலைகள் பாதுகாப்பு மையத்திற்கான கட்டடம் கட்டப்பட்டுள்ளது. எனவே, இத்திருக்கோயில் வளாகத்தில் புதியதாக திருமண மண்டபம் கட்டும் அளவுக்கு காலியிடம் ஏதும் இல்லை என்பதால் திருக்கோயிலின் வளாகத்தில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

463—

மயில்கள் சரணாலயம்

வினா எண் 57946—திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளத்தூர் தொகுதி, விராலிமலை முருகன் கோயிலில் மயில்கள் சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், விராலிமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் போதிய தண்ணீர் வசதி மற்றும் நிதி வசதி இல்லாததால் தற்போது திருக்கோயில் சார்பில் மயில்கள் சரணாலயம் அமைக்க இயலாத நிலை உள்ளது.

2011 ஜனவரி 13]

464—

சுத்தப்படுத்துதல்

வினா எண் 58153—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருக்கோஷ்டியூர் சௌம்ய நாராயண பெருமாள் கோயில் தெப்பக்குளத்தை சுத்தப்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், திருக்கோஷ்டியூர் அருள்மிகு ஸ்ரீ சௌம்ய நாராயண பெருமாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான முன்புறம் உள்ள திருப்பாற்கடல் குளம் தூர்வாரப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. அதோடு, டி. வைரவன்பட்டி கிராமத்தில் உள்ள குளத்தில் இருந்து மாசு அகற்றப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

465—

குடமுழுக்கு

வினா எண் 62289—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, பழமைவாய்ந்த கஞ்சனூர் காசி விஸ்வநாதர் சுயம்பிரகாசர் சுவாமி கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், கஞ்சனூர் அருள்மிகு சுயம்பிரகாசர்சுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் பழுதடைந்துள்ளது. இத்திருக்கோயில் திருப்பணிக்கு உத்தேசமாக ரூ.7.00 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணியினைச் செய்திட திருக்கோயிலில் போதிய நிதிவசதி இல்லை. மொத்த மதிப்பீட்டுத் தொகையினையும் துறை நிதியுதவியாக வழங்கிட வழி வகையில்லை. திருப்பணிகளில் பொதுமக்கள் ஆர்வம் செலுத்தி நன்கொடை அளிக்க முன்வரும் நிலையில், துறை சார்பில் மதிப்பீட்டுத் தொகையில் 25% மிகாது நிதியுதவி அளித்து பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

466—

சீரமைத்தல்

வினா எண் 62436 திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனமரத்துப்பட்டி தொகுதி, அயோத்தியாப் பட்டிணத்தில் உள்ள ராமர் கோவில் கோபுரம் மற்றும் சிற்பங்களைச் சீரமைத்து, குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டிணம் அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் இராஜகோபுரம் மராமத்து செய்து புனரமைப்பு செய்திட ரூ.8.30 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் புதியதாக கொடிமரம் நிறுவும் பணியை ரூ.3.20 இலட்சம்

2011 ஜனவரி 13]

மதிப்பீட்டில் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட திருப்பணிகள் நிறைவு பெற்றபின் திருக்குடமுழுக்கு 2009-ஆம் வருட இறுதியில் நடைபெறவுள்ளது.

467—

குடமுழுக்கு

வினா எண் 62924—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, கண்டாச்சிபுரம் கிராமத்திலுள்ள அங்காளம்மன் கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், முகையூர் கண்டாச்சிபுரம் கிராமம் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை, ஆளுகையின்கீழ் அல்லாத ஒரு பொதுக் கோயிலாகும். எனவே, துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத இந்தத் திருக்கோயிலுக்கு நிதியுதவி அளித்து கும்பாபிஷேகம் நடத்திட அரசு ஆவன செய்ய இயலாது.

468—

குடமுழுக்கு

வினா எண் 62925—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, வேளாகுளம் ஸ்ரீ பாலசுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், முகையூர் ஒன்றியம், வேளாகுளம் கிராமம், அருள்மிகு பாலசுந்தரேஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயிலின் நிர்வாகம் மனம்பூண்டி திரு. எஸ். கோவிந்தராஜன் மற்றும் திரு. என். ரகோத்தமன் ஆகியோர்களால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் பெரும்பாலான திருப்பணி வேலைகள் உபயதாரர்கமூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள முன் மண்டபம் மற்றும் மதில்சுவர் பணிகள் உபயதாரர்கள்மூலம் செய்து குடமுழுக்கு நடத்திட திருக்கோயில் நிர்வாகிகளால் திட்டமிடப்பட்டுள்ளது.

469—

குடமுழுக்கு

வினா எண் 62926—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, கோட்டமருதூர் கிராமத்திலுள்ள மாரியம்மன் கோயிலைச் சீர்படுத்தி, குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், முகையூர் தொகுதி, கோட்டமருதூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின், ஆளுகையின்கீழ் அல்லாத சிறிய திருக்கோயிலாகும். எனவே, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு நிதியுதவியளித்து குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்ய இயலாது.

2011 ஜனவரி 13]

470—

குடமுழுக்கு

வினா எண் 62929—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு செய்ய அரசு முன்வருமா?

விடை.—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், கபிலர்மலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டிலுள்ள செயல் அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வரும் திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் திருப்பணிகள் உபயதாரர்கள்மூலம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. இத்திருக்கோயிலின் குடமுழுக்கு 8-3-2009-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

471—

குடமுழுக்கு

வினா எண் 65187—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஈஸ்வரன் கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை.—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் மற்றும் நகர் அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பட்டியலில் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலைப் புனரமைக்கும் பணிக்கு திருவெண்ணங்கொடி

முனியப்பன் திருக்கோயில் உபரி நிதியிலிருந்து ரூ.2.00 இலட்சம் மற்றும் பொதுமக்கள் நன்கொடை/உபயம் ரூ.55,000/- ஆகக் கூடுதல் ரூ.2.55 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு 50 சதவீதப் பணிகள் முடிவுற்றுள்ளது. தரைத்தளம் சீரமைத்தல், சுற்றுச்சுவர் சிமெண்ட் பூச்சு வேலைகள், விமானங்களுக்கு வர்ணம் அடித்தல் ஆகிய வேலைகள் உபயதாரர்கள்மூலம் முடித்து விரைவில் குடமுழுக்கு நடத்தப்படும்.

472—

குடமுழுக்கு

வினா எண் 65138—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயில் குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பாகல்பட்டி அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் திருப்பணிகள் உபயதாரர்கள் மூலம் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயிலின் கர்ப்பக்கிரகம், விமானம், மகாமண்டபம், அர்த்த மண்டபம், சொர்க்க வாசல் ஆகியவை புதுப்பிக்கப்பட்டும், முன்நுழைவு மண்டபம் மற்றும் ஆஞ்சநேயர் சன்னதி புதியதாக கட்டுதல் ஆகிய பணிகள் முடிவுற்று திருக்குடமுழுக்கு செய்வதற்கும் தயார் நிலையில் உள்ளது. விரைவில் இத்திருக்கோயிலின் கும்பாபிஷேகம் நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

473—

அர்ச்சகர் பயிற்சி நிலையம்

வினா எண் 66284—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 13]

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் அர்ச்சகர் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் அர்ச்சகர்களுக்கான பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

474—

பராமரித்தல்

வினா எண் 67793-திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், அழகர் கோயிலுக்குக் காணிக்கையாக அளிக்கப்படும் பசுக்களைச் சரியாகப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், அழகர் கோயிலுக்குக் காணிக்கையாக அளிக்கப்படும் பசுக்கள் சரியாகப் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

475—

கருணை இல்லம்

வினா எண் 75880—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி கோட்டை கோயிலில் கருணை இல்லம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 ஜனவரி 13

விடை—

மாண்புமிகு . திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தருமபுரி கோட்டை கோயிலில் கருணை இல்லம் துவக்க போதுமான நிதி வசதி இல்லாததால் கருணை இல்லம் துவக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

476—

புதுப்பித்தல்

வினா எண் 87252—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் நெத்திமேடு, மலைக்காடு உச்சியிலுள்ள கரிய பெருமாள் திருக்கோயிலைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம் மற்றும் நகர், நெத்திமேடு, அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான மலைக்காடு உச்சியிலுள்ள கரிய பெருமாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயிலில் உபயதாரர்கள்மூலம் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 14-9-2005 அன்று திருக்குடமுழுக்கு நடைபெற்றது. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு நடத்த வேண்டும் என்று உள்ளதால் மேற்படி திருக்கோயிலைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

477—

புதுப்பித்தல்

வினா எண் 87253—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் கோட்டை மாரியம்மன் கோயிலைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

2011 ஜனவரி 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையில் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் உபயதாரரால் ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில் கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம் ஆகியவை புதுப்பிக்கப்பட்டு 3-1-2001 அன்று திருக்குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. தற்போது, இத்திருக்கோயிலில் சிறு சிறு மராமத்துப் பணிகள் மட்டுமே செய்யப்பட வேண்டியுள்ளதால், திருப்பணிக்குழு அமைத்து மேற்படி மராமத்து பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

478—

குடமுழுக்கு

வினா எண் 67254—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டணம் ராமர் திருக்கோயிலைப் பழுதுபார்த்து, குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மற்றும் வட்டம், அயோத்தியாப்பட்டணம் அருள்மிகு ராமர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் ரூ.7.60 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுப்பிரகாரம் சிமெண்ட் தளம் அமைத்தல், விமான மண்டபத் தளம் அமைத்தல், மதில் சுவர் வர்ணம் அடித்தல் மற்றும் மண்டப மேல்தளம் ஓடு பதித்தல் ஆகிய பணிகள் முடிவுற்றுள்ளது. மேலும், இத்திருக்கோயிலின் இராஜகோபுரம் மராமத்து செய்து புனரமைப்பு செய்திட ரூ.8.30 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்படி, பணிகள் விரைந்து முடித்து குடமுழுக்கு செய்யப்படவுள்ளது.

[2011 ஜனவரி 13

479—

புனரமைத்தல்

வினா எண் 102593—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, வைப்பார் சிவன் கோயிலைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், வைப்பார் அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில் சட்டப்பிரிவு 46-ன்கீழ் உள்ள பட்டியலைச் சேராத இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு உபயதாரர்கள்மூலம் ரூ.3 இலட்சத்திற்கு திருப்பணிகள் செய்யப்பட்டு 10-6-2005 அன்று குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது.

480—

கலைக் கல்லூரி

வினா எண் 102943—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா——

திருப்பரங்குன்றம் தொகுதி, திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயில்மூலம் கலைக்கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை——

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பாக ஏற்கெனவே மகளிர் மேல்நிலைப்பள்ளி

2011 ஜனவரி 13]

0.75 சென்ட் இடத்தில் அமைக்கப்பட்டு, மேலும் சுமார் 4 ஏக்கர் நிலம் தேவைப்படும் நிலையில், இடம் பற்றாக்குறை காரணமாக பணியாளர் குடியிருப்புக்கு அருகில் ரூ.47 இலட்சம் மதிப்பீட்டில் நான்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டு வரப்படுகிறது. இத்திருக்கோயில்மூலம் கலைக்கல்லூரி தொடங்கப்படும் அளவிற்கு நிதி வசதியோ, போதுமான இடவசதியோ இல்லாததால் கலைக்கல்லூரி தொடங்க இயலாத நிலை உள்ளது.

481—

ஆசிரியர் பணியிடம்

வினா எண் 314—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆசிரியர் தேர்வு வாரியம்/மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம்மூலம் காலிப்பணியிடங்களை நிரப்பப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

482—

ஆசிரியர் பணியிடம்

வினா எண் 319-திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் சோலையார் அணை அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 ஜனவரி 13

விடை—

